நவராத்திரி நாயகி

ரா. கணபதி



நவராத்திரி நாயகி

ரா. கணபதி

திவ்ய வித்யா டிரஸ்ட்
106/1, ஹபிபுல்லா சாலை, தி.நகர், சென்னை—600 017.

திவ்ய வித்யா முதற் பதிப்பு

விலை : ரூ. 45.00

அச்சிட்டோர் :
ஸ்ரீ சக்ரா பிரிண்டர்ஸ்,
31/1-சி, சுந்தரம் தெரு,
புரசைவாக்கம், சென்னை -

92/3

நமஸ்காரம்

"நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை நமோ நம:" என்று எந்த தேவியை தேவர்கள் திரும்பத் திரும்ப வணங்கினரோ அவளுக்கும், அவளுடைய மாற்றுருவங்களேயான உங்கள் எல்லோருக்கும் முக்காலும் நமஸ்காரம்!

சதைப் பற்று வாய்ந்த பழம் என்பதுபோல் இது கதைப் பற்று வாய்ந்த புனித தேவி சரிதம். பக்தி ரீதியில் பார்த்தாலும், இலக்கிய ரீதியில் பார்த்தாலும் சுவை செறிந்த கதைப் பழம் இது. இந்நூலை வாசிக்கும் அன்பர்களில் 'சாதாரண மனிதர்கள்' என்றே தங்களை அறிந்து கொண்டிருக்கும் பாக்கியசாலிகளுக்கு இந்த பக்தி இலக்கியக் கதையே போதும். அக்கதையின் வழி அவள் உட்புகுந்து உள்ளே விளைவிக்கக்கூடிய பேரானந்தத்திற்கு அதிகமாக ஒன்றில்லை.

எனினும் 'கதை' என்பதிலிருந்து பிரிந்து 'தத்துவ விளக்கம்' என்று ஒன்றும் நூலில் நிறையவே விரவிப் படர்ந்திருக்கிறது. கதையம்சமாகவும், கலையம்சமாகவும் இருப்பவற்றினுள் இருக்கும் தத்வ விசேஷங்களை இங்கு காண்கிறோம்.

அது தவிர இதை எழுதிய இருபதாண்டுகளுக்கு முன் ஸாதனா மார்க்கங்கள் குறித்தே நிரம்ப எழுதுமாறும் ஒரு பெரிய உள்ளுந்துதல் பெற்றிருந்தேன். அதில் ஒரு சிறு பகுதி நூலுக்குள்ளேயே இடம் பெற விட்டு, பெருப்பகுதியை 'முகவுரை என்கிற முக்கிய உரை' ஆக்கினேன்.

'சாதாரண' வாசகர்களான பாக்கியசாலிகள் இவை பற்றிக் கவலைப்படவே தேவையில்லை. தத்துவ விளக்கங்களையும், வாதப் பாயின்டுகளையும் புரிந்துகொள்வதற்காக அவர்கள் பாடுபட வேண்டியதுமில்லை. புரியாத-அல்லது பிடிக்காத- இப்பகுதிகளை அவர்கள் தள்ளிக் கொண்டே போய்விடலாம். கதைப் பகுதியிலேயே அச் சாதாரணிகள் அமிழ்ந்தால் போதும். அவள் அசாதாரண அநுபவமும்கூட அருளிவிடுவாள். ஆம், அந்த மனோபாவக்காரர்கள் தத்வமும், வாதமும் அறியாததால் எந்த நஷ்டமுமில்லை!

அறிவதற்காக மண்டையை உடைத்துக்கொள்வதாலேயே நஷ்டம் ஏற்படலாம்!

மாறாக, இம் மாதிரியாக மூளை வேலைகளில் ஈடுபாடு கொண்ட மனப்பான்மையினரும் (மனப்பான்மை என்பதில் அறிவுப்பான்மையையும் அடக்கியே சொல்கிறேன்) இருக்கின்றனர். இன்றைய உலகில் நிறையவே இருக்கின்றனர். அவர்களுக்கும் என்னால் முடிந்தமட்டில் விருந்துபசாரம் செய்யத்தான் தத்துவ விளக்கம், வாதம் முதலியவற்றையும் கட்டுப்படுத்தாமல் அவை பெருகிய அளவிலேயே கொடுத்திருக்கிறேன்.

ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாள் ஒரு முறை அற்புதமாகச் சொன்னார். 'மனத்தால், புத்தியால், மேதையால், வித்வத்தால் பரமாத்மாவைப் பிடிக்க முடியாது என்று வேத மேற்கோள் காட்டிக்கொண்டே, அத்தனை ஸித்தாந்தவாதிகளும் செய்திருப்பதெல்லாம் தாங்கள் இவற்றாலேயே அதைப் பிடித்துவிட்டதாகக் காட்டுவதுதானே?' என்று அவரைக் கேட்டேன். அப்போது சொன்னார்: உடம்பால் செய்த வினையைத் தீர்க்க உடம்பைப் பிழிந்தே கர்மம் செய்யவேண்டும். அதேபோல மனஸால் செய்தது தீர மனஸைப் பிழிந்து பக்தி பண்ண வேண்டும். மூளையால் சேர்த்த மூட்டை தீர, ஞானம் என்று *சொல்லிக்கொண்டு** மூளையைப் பிழிய வேண்டும். மூன்றாவதாகச் சொன்னதைச் செய்யப் பெரிய ஸஹாயந்தான் அத்தனை ஃபிலாஸஃபியும் — என்று.

மூளைப்பெருமை அதிகமாகிவரும் இந்நாளில், இறுதியில் அதன் கனம் சற்றேனும் குறைய உதவியாகவே முதலில் இச் சாப்பாடு போடும் பகுதியும் இருக்கவேண்டியதுதான் எனக் கருதியே அப்படியும் யதேஷ்டமாகத் தந்திருக்கிறேன்.

வாஸ்தவத்திலும் அச் சாப்பாட்டை வெகுவாக ரஸித்து, ருசித்து என்னிடம் கூறியவர் பலர் உண்டு. அதில் மேல் விவரங்களும் சந்தேக விளக்கங்களும் கேட்டோரும் உண்டு.

இதில் ஓர் ஆச்சர்யமும் கண்டேன்.

---

* உண்மையில் ஞானம் உள்ளநுபவத்திலேயே விளைவதாக இருக்க, அதை மூளையறிவால் விளக்கவே தத்வ சாஸ்திரங்கள் முயல்வதைத்தான் ரத்தின கர்ப்பமாகவும், ஹாஸ்யக் குத்தல் இதமாகத் தொனிக்கவும் 'சொல்லிக்கொண்டு' என்றார்!

92/3

'பெண்கள் முக்யமாக உணர்ச்சி வசப்பட்டவர்கள். பக்தியிலேயே அவர்களுக்கு அதிகம் ஈர்ப்பு இருக்கும். ஆண்களே தத்வ-ஸித்தாந்த வாதங்களில் சிறப்பான ஈடுபாடு கொண்டிருப்பார்கள்' என்றே எண்ணியிருந்தேன். ஆயின் நான் கண்டதோ, பெண்களேதான் இந்நூலிலுள்ள இத்தகைய மூளை விஷயங்களில் விசேஷ அபிருசி காட்டிப் பாராட்டியதையும், சந்தேக விளக்கம் கேட்டதையும்! பின்னாண்டுகளில் என்னுடைய சொந்த மனப்பான்மை, அல்லது உட்பான்மை வேறுவிதமாக மாறியிருந்ததால் மூளை சமாசாரங்களைக் கணிசமாகக் குறைத்துப் புதிய பதிப்பை பக்தி-இலக்கியப் படைப்பாகவே முற்றிலும் ஆக்கலாமோ என்றும் சில சமயங்களில் தோன்றும். உடனேயே அறிவாளிப் பெண்மணிகளின் கூட்டத்தையும் எண்ணுவேன். 'நவராத்திரி நாயகியே பெண்களை ஏமாற்றலாமா? அவர்களுடைய மூளைப் பிழிச்சலுக்கு அவள் செய்யும் ஸஹாயத்தை நாம் கெடுக்கவேண்டாம். நூல் முதலில் வந்த வடிவத்திலேயே இருக்கட்டும்' என்று விட்டுவிடுவேன்.

அவ்வாறேதான் இந்த நாலாம் பதிப்பும் வெளியாகிறது.

* * *

"பின்னாண்டுகளின் சொந்த உட்பான்மை மாறிய"தாகச் சொன்ன பின் முன்னாண்டுகள் சமாசாரம் சொல்ல வேண்டாமா?

சுமார் நாற்பதாண்டு முன்னர். காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவாள் என்ற அவளது ஞான-காருண்ய மூர்த்தத்தின் மூலம் அவள் அஞ்ஞான பிண்டமான அடியேனுக்கும் அத்வைதமே பரம ஸத்தியம் என்பதை ஒவ்வொரு சமயங்களில், ஒவ்வொரு சிறிய காலகட்டத்துக்கு மூளையளவில் புரிந்துகொள்வதற்கு மேம்பட்டதொரு நிலையில் புரிவிக்க ஆரம்பித்தாள். என் ஸாதனை என்று இதில் ஏதுமின்றி முற்றிலும் அவள்/அவர் கிருபையாலேயே நடந்ததால் இதை நான் என் பெருமிதப் பிரகடனமாக வெளியிட லவலேசமும் இடமில்லை. பெருமையெல்லாம் காரணமறியா அக் காருண்யத்திற்கே! நாற்பதாண்டு பின்னர் இன்றும் — ஸாதனை என்று என்னவோ பண்ணிப் பண்ணிப் பார்த்தும் — 'ஒவ்வொரு

சமயங்களில், ஒவ்வொரு கால கட்டத்துக்கு' என்பது 'சாச்வதமாக' என்னும்படிப் பழுக்காமல், ஏதோ கால்வாசி அரைவாசி பழுத்தாற்போன்ற நிலையிலேயே நிற்பதிலிருந்து, 'நம் ஸாதனை என்பது தானாகவே எதுவும் ஸாதித்துத் தரமுடியாது. அதைச் செய்வது க்ருபா சக்தி ஒன்றேதான்' என்பதில் திடவுறுதி பெற்றிருக்கிறேன்.

பல்லாண்டுகளுக்கு முன்பு அவ் வநுபவம் பெறத் தொடங்கிய பிற்பாடு அத்வைத சாஸ்திர நூல்களைப் படிக்குமாறு நேரிட்டது.

அவற்றில் உத்தமமான விஷயங்கள் ஏராளமாக இருந்து நெஞ்சைக் களிப்பித்தது; அறிவைத் தெளிவித்தது என்றாலும் ஒரு விஷயம் இடறிற்று – அக் களிப்பையும், தெளிவையுங்கூட எற்றித் தள்ளுமளவுக்குப் பெரிதாகவே இடறிற்று!

அந் நூல்களை ஆக்கிய பெரியோர் – அநுபவ விஷயமேயான அத்வைதத்தை, ஆழ்ந்தே,அநுபவித்திருக்கக்கூடிய மிகப் பெரியோரில் பலருங்கூட – அதை அறிவால் எந்த அளவுக்குப் புரிந்து கொண்டதாக நினைக்கலாமோ அந்த நிலையிலும் அற்புதமாகப் புரிந்து கொண்டு மற்ற அறிவுகளுக்கும் அற்புதமாகப் புரிவிக்கும் போது ஒரு பேருண்மையைப் புரிந்துகொள்ளாமலும், புரிவிக்காமலும் இருக்கக் கண்டடேன். மாயையின் கல்பிதமென்றே உலகத்தை தள்ளி அவர்கள் முடித்துவிடுவதைக் கண்டபோது, 'ப்ரம்ம சக்தி என்ற பேருண்மையைக் காணத் தவறிவிட்டார்களே!' என்று வேதனையாக இருந்தது. அதொன்றைத் தவறவிட்டதால் அச் சக்தியின் ஸங்கல்பம், அழகும் ஒழுங்குமான அச் சங்கற்பத்தினாலேயே விளைந்த உலக ஸ்ருஷ்டி, ஸ்ருஷ்டியில் அச சக்தி நிகழ்த்தும் லீலா அத்புதங்கள், அந்த அத்புதங்களில் சிகரங்களான க்ருபா அத்புதங்கள், அவற்றிலும் தனித்து ஓங்கி நிற்பதாக இச் சிருஷ்டியிலிருந்தே ஸாதகனை (ஏன், ஸாதனையே செய்யாத ஒரு ஜீவனையுங்கூட) அது விடுவித்து அத்வைதாநுபூதி அருளும் பரம க்ருபா அத்புதம் ஆகிய அனைத்தையும் அவர்கள் காணத் தவறிவிட்டதையும் கண்டேன். இது தான் நான் சொன்ன அந்தப் பெரிய இடறலாயிற்று! ஆஹா, அநுபூதி பெற்றவர்களுமே பெற்றுக் கொடுத்தவளைக் காணத்

தவறிவிட்டார்களே, ஏனையோருக்கும் காட்டித் தரத் தவறிவிட்டார்களே என்று நெஞ்சை மிகவும் இடறிற்று. அவர்கள் ப்ரம்ம சக்தியை மாயை, அவித்யை (அஞ்ஞானம்) என்றே முடிப்பதாகவும், போதாக்குறைக்கு இந்த இரண்டுக்குமிடையிலேயே மாறுபாடுகள் கண்டு வாத சதுரம் புரிவதாகவும் கண்டபோது பெரிய ஏமாற்றமே உண்டாயிற்று.

ஏமாற்றம் உண்டானால் அது கையோடு கோபத்தையும் அழைத்து வரத்தானே செய்யும்? அப்போது இளவயசும் வேறா? நன்றாகவே வந்தது கோபம்! அது உள்ளே ஊறி ஊறி மேலும் பல்லாண்டுகள் நிலைப்பட்டே நின்றது.

அக் கோபத்தில் எழுந்த வாதங்கள்தான் பக்கம் பக்கமாக விரிந்து இந் நூலின் 'முகவுரை என்கிற முக்கிய உரை'யாக உருப்பெற்றது.

ஞானியருங்கூட மோஹத்திற்கு ஆளாகின்றனர் என்று நம் நூலுக்கு மூலமான 'தேவீ மாஹாத்மிய'த்தில் உள்ளது. அதில் 'மோஹம்' என்றிருப்பதை, பொதுவாக நினைப்பதுபோல் உலகியல் மயக்கு என்றும், புலன்களின் மயக்கு என்றும் பொருள் செய்துகொள்ளாமல், தாங்கள் பெற்ற ஞானத்தின் கொடையாளியையே அறியாத மயக்கு என்றே பொருள் செய்துகொண்டு வரிந்து தள்ளினேன்.

அப்புறந்தான், மீண்டும் அப் பரம க்ருபா சக்தியாலேயேதான் (அதற்கு எத்தனை கோடி நன்றி நமஸ்காரந்தான் செய்யக்கூடாது?) கோபம் தணிந்து தெளிவு பிறந்தது.

அவர்கள் அறியவில்லை, புரிந்துகொள்ளவில்லை என்றால் **அவள்** அறிவிக்கவில்லை, புரிவிக்கவில்லை! அவ்வளவுதானே? அத்வைத ஞானமாம் பேரறிவே அவள்தான் அளிக்கிறாளெனில் ஏனைய எல்லா விஷயங்களை அறிய வைப்பதும் அவள்தானே? அவளேதான் இவர்கள் விஷயத்தில் இந்த அறிவைத் தரவில்லை. அல்லது அவர்களுக்குத் தந்துங்கூட இருக்கலாம்! தந்தும் அவர்கள் பிறருக்கு அறிவிக்க, புரிவிக்க விடவில்லை.

எனவே முழுப் பொறுப்பாளி அவள்தான். அவள் ஆட்டுவித்தபடிதான் அந்த ஞானப் பெரியாரும் ஆடினர் எனத் தெளிந்தேன்.

'ஏன் இப்படிச் செய்கிறாள்?' என்றால் அவள் விஷயத்தில் ஏனுக்கு இடமேயில்லை! ஏனென்று கேட்காமல் எளிமை மயமாகக் கிடக்க வேண்டிய இடம் அது! ப்ரம்ம மஹா சக்தியின் சித்தத்தை எவரே அறியலாகும்! அறிந்தாலும் புரிந்து கொள்ளலாகும்? அதன் குணாகுணத்தை எவரே கணிக்கலாகும்? ஒன்று வேண்டுமாயின் சொல்லலாமோ என்னவோ? பற்பல விதங்களில் ஒளிந்து விளையாடுவதிலேயே மகிழும் அவள், தான் புரியும் சிகர கிருபையையுங்கூட, அதற்குப் பாத்திரமாகிறவருங்கூட, தன் கொடையாகக் காணாதவாறு ஒளித்து மகிழ்கிறாள் போலும்!

"அவர்கள்", "அவர்கள்" என்று எவரையோ குற்றம் சாட்டுவானேன்? ஸ்ரீ மஹா பெரியவாளைக் காணு முன்பே எனக்குங்கூட அந்த அநுபவம் வாய்த்திருக்கவில்லையா என்ன? எத்தனையோ காலமாக அது இருக்கத்தான் செய்தது. ஆனால், 'ஒவ்வொரு சிறிய காலகட்டத்துக்கு' என்றுகூடச் சொல்வதற்கில்லாமல் ஒரு க்ஷணம், அல்லது ஒரு சில க்ஷணங்களுக்கே வாய்த்துக் கொண்டிருந்தது. எப்படியாயினும் அவ்வநுபவம் புதிதல்ல. பலப் பல முறை வாய்த்த ஒன்றுதான். ஆயினும் பெரியவாளைக் காணும்வரையில் அது க்ருபையின் கொடை என்றே அறியாதவனாகத்தான் நானே இருந்திருக்கிறேன்! அந்த முன்னாண்டுகளில் நாஸ்திகம் போலவே தோன்றக் கூடிய ஏதோ ஒரு நிலையில் தான் இருந்துகொண்டிருந்தேன். அவ்வாறிருந்துகொண்டே அந்த உயர்வான உயிருணர்வை மின்வெட்டு நேரங்கள் பெறுவதாகவும், ஆனால் மின்வெட்டின் அதீத சக்தியம்சம் அதில் லவலேசமும் இல்லாததால், அதையும் இயற்கையாக எவருக்கும் ஏற்படும் நூறாயிரம் உணர்வுகளில் ஒன்றாகவே நினைத்து, அந்த உயர்விலிருந்து ஏனைய உணர்வுகளின் தாழ்மட்டங்களுக்கு இந்த உயர்வு-தாழ்வு வித்தியாசமே அறியாதவனாக ஊ(ஞ்)சலாடுவதுமாகத்தான்

இருந்திருக்கிறேன்! பெரியவாள் சந்திப்புக்குப் பிறகுதான் அவ்வநுபவம் வலுத்ததோடு, அது கிருபையின் கொடையே என்ற அறிவும் வாய்த்தது. என் கதை இந்த லக்ஷணத்திலிருக்க, தாழ்மட்டங்களுக்கு வராமல் உயர்விலேயே இருந்தவர்கள் அவ்வுயர்வை அளித்த கொடையாளியை அறியவில்லை, அறிவிக்கவில்லை என்று குற்றம் சொல்வானேன்?

அவர்கள் மீது இந்நூலின் மூல நூலும் குற்றம் சொல்லவேயில்லை. 'தேவீ மாஹாத்மியம்' எனப்படும் அம் மூல நூலில் **ஞானிகளையும் அம்பாள் பலவந்தமாக மோஹத்துக்கு ஆட்படுத்துவதுண்டு** என்று அம்பாளையே முழுப் பொறுப்பாளியாக்கித்தான் ஒரு சுலோகத்தில் சொல்லியிருக்கிறது. விந்தையிலும் விந்தை என்னவெனில், ஞானத்தை அவளது அருட்கொடையாக அறியாத ஞானியர்மீது எனக்கு எழுந்த கோபத்தில் நான் பெரிய வாதப் பின்னல் பின்னியதெல்லாமும் இச் சுலோக மேற்கோளை மைய இருசாக வைத்துத்தான்! ஞானியரையே மயக்கத்திற்கு ஆட்படுத்துபவள், "உன்னை மாத்திரம் விட்டுவைப்பேனா?" என்று காட்டியிருக்கிறாள்!

அவளேதான் மயக்குறச் செய்பவள் என்பதையும் அந்த 'முக்கிய உரை'யில் நான் சொல்லாமலில்லை. ஆயினும் அதை ஏதோ கொஞ்சந்தான் தொட்டிருக்கிறேன். ஆலாபனை, நிரவல், ஸ்வரம் எல்லாம் மயக்குக்கு ஆட்பட்டவர்களின் மீதான குற்றப் பத்திரிகைக்குத்தான்!

அதே சமயத்தில் எனக்கு அத்வைத ஞான மார்க்கத்தினரிடம் தனியானதோர் அன்பும் மதிப்பு மரியாதையும் எப்போதுமே உண்டுதான். ஜீவாத்மாவின் பரம லக்ஷ்யம் அவர்கள் கூறும் அத்வைத ஸாக்ஷாத்காரந்தான் என்பதில் எனக்குள்ள அசைக்க முடியாத உறுதியே காரணம். இதன் விளைவாக அத்வைதத்தை ஆக்ஷேபிக்கும் பக்தி மார்க்கக்காரர்கள், அதன் முழுவீச்சும் செல்லாத – அல்லது, சென்றிருந்தாலும் சொல்லாத – யோக மார்க்கக்காரர்கள் ஆகியோரிடமும் குறை கண்டிருக்கிறேன். குறை கண்டால் கோபம் வராமற் போகுமா? அதுவும் அன்று நான் இன்றைவிடவும் அபக்குவ நிலையிலிருந்தபோது நன்றாகவே வந்தது! 'நமக்குப் பிடித்தமான

அத்வைதிகளின் மீது நாமே குற்றப்பத்திரிகை படிக்க நேர்ந்திருக்கும் இப்போது அந்த இதர மார்க்கத்தினரை மட்டும் விட்டு வைப்பது நியாயமில்லை' என்ற 'நியாய'த்தில் அவர்களையெல்லாமும் அந்த முக்கிய உரையில் கூண்டிலேற்றிப் பார்த்தேன்!

இதிலெல்லாம் என்னோடு சந்தோஷப்பட்டவர்கள் அநேகர் இருந்தனர் என்று நூல் வெளியானபின் தெரியவந்தது. இன்றைக்கும் அப்படி நிறையவே இருப்பார்கள். அதோடு, சாந்தமாகச் சொல்லாமல் சற்றுச் சண்டை சேர்த்துச் சொன்னாலே அதிகம் ருசியுடன் படிப்பவர்களும், அதனால் ஸாரத்தைச் சிறிதேனும் உள்ளே இறக்கிக்கொள்பவர்களும்தான் பொதுவாக மக்களில் அதிகம். எதிலும் முடிவான கருத்து எனில் மஹா பெரியவாள் மொழிதான் நினைவு வருகிறது! "அவனவனும் தன் 'ஐடியாலஜி'யைச் சொல்லிக்கொள்கிறதைவிடப் பிறத்தியானைக் கண்டனம் பண்ணுகிறதால்தான் 'பாலிடிக்ஸு'க்கு ஜனங்களிடம் இத்தனை வசீகரம் இருக்கிறது. 'பாலிடிக்ஸ்' என்ன? எங்கள் 'ஃபிலாஸஃபி'யில்கூட அப்படித்தான்!" என்று வெள்ளையாகக் கூறி வெள்ளையாகச் சிரித்தார்!

ஆகையால் அடியேன் இருபதாண்டு முன் இத்திசையில் செய்த கைங்கரியம் அப்படியே இன்றும் தொடருவதற்கு விட்டிருக்கிறேன்.

* * *

உபாஸகர்களைத் தவிரக் காரிய லோகத்தில் மிகப் பெருவாரியாக உள்ள அனைவருக்கும் உண்மை ஆனந்தத்தைக் காட்டாத கொடும் மாயமே பராசக்தி புரிகிறதா என்று முகவுரையில் (ப9) ஒரு கேள்வி. பிற்பாடு அதற்கு ஆம் என்ற ரீதியிலேயே பதில் கொடுத்திருக்கிறேன். அப்படிப் பளிச்சென்று சொல்ல மனசு வராததால் ஒருவிதமாகத் தெரிவித்திருக்கிறேன். அதற்குப் பலவாறு நியாயமும் சொல்லியிருக்கிறேன், அல்லது சொல்ல முயன்றிருக்கிறேன். முடிவாக, பெரிய நியாயமாக – 'சமாதான'மாக, 'சமாதானப்படுத்து'வதாக என்றும் சொல்லலாம் – இந்த அனைவரையுங்கூட அச் சக்தி சிருஷ்டி முடிவில் தன்னிலேயே ஈர்த்து ஒடுக்கிக்கொண்டு, இதேபோல நீண்ட காலம் பேரானந்தத்தில்

வைத்திருக்கப் போகிறதென்றும், அந்த ஈர்ப்பின் இனிமை பன்மடங்காகத் தெரியவே தற்போதைய விலக்கலின் கொடுமை என்றும் கண்டுள்ளேன்.

ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாள் இக் கருத்துக்களை ஆமோதித்து அருளியதை வாசகருக்குத் தெரிவிக்கவேண்டும். மேலும், அவர் கூறியதன் ஸாராம்சத்தையும் அவசியம் தெரிவிக்கவேண்டும். இதுவும் அவர் முன்னரே கூறி நான் கேட்டிருந்த ஒன்றுதான். அதன் எதிரொலியும் முகவுரையில் தொனிக்கிறதென்றே நினைக்கிறேன். என்றாலும் மூல ஒலியின் ஸாரத்தை ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கவேண்டியது கடமை எனக் கருதுகிறேன்:

நமக்குத் தெரிந்த இந்த உலகிலுள்ள ஜீவராசிகளாகிய நம் 'கோணாமாணா'வை மட்டும் அளவுகோலாக வைத்து அந்த அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன் இப்படிப்பட்டவன் என்று நிர்ணயித்துவிடக்கூடாது. நமக்குத் தெரியும் இவ்வுலகிலேயே ஜட வஸ்துக்களாக உள்ள அனைத்தும், அணுவிலிருந்து நக்ஷத்ர மண்டலங்கள் வரையில் சகலமும், 'மிச்சம் மீதி இல்லாமல் ஒவ்வொன்றும்' காரணம்-விளைவு என்ற ஒழுங்குப்பாட்டின்படியேதான் நடக்கின்றன. அவ்வாறிருக்க, ஜீவராசிகளின் சித்தத்தில் ஒழுங்கற்ற கோணாமாணா இருப்பதை வைத்தே மூலத்தை கணிக்கலாமா?

இக் காரண-காரிய விளைவுகளை ஆராய்ந்து சட்டங்களாகக் கொடுத்துள்ள ஸயன்டிஸ்ட்கள் நம்முடையதைத் தவிர ஏனைய கிரக, நக்ஷத்ராதிகளில் ஜீவராசிகள் இல்லை என்கிறார்கள். அவர்களுடைய டெஸ்ட் ட்யூப்களில் அடங்கும்படியாக, நம்மைப் போல் காற்றை சுவாஸித்துக் கொண்டும், ஆஹாராதிகளை சாப்பிட்டுக் கொண்டும், நமக்குள்ள ஐம்புலன்களாலும் ஸயன்ஸ் கருவிகளாலும் கிரஹிக்கப்படக் கூடியவர்களான ஜீவராசிகள் பூலோகம் தவிர மற்ற இடங்களில் இருக்கமுடியாது என்பதால் அவர்கள் அங்கெல்லாம் ஜீவ சமூகமே வாழ்வதற்கில்லை என்கிறார்கள். ஆனால் அந்த அடிப்படை சரியல்ல. மேலே சொன்ன அனைத்து அவயவம், கருவி முதலிய உபகரணங்களுக்கு அப்பாற்பட்டதாகவும், இவற்றால்

ஒருக்காலும் கிரஹிக்க முடியாததாகவும் கூட ஈச்வர சங்கற்பத்தில் எத்தனையோ விதமான ஜீவ சிருஷ்டிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவை வாழ நம்முடைய டெலஸ்கோப், லென்ஸ் முதலியவற்றால் கிரஹிக்கமுடியாத லோகங்களும் உள்ளன. நம்முலகில் ஜடப்பிரபஞ்சத்தில் மட்டுமே தர்ம ஒழுங்கு, ஜீவப் பிரபஞ்சத்தில் கோணாமாணா என்றிருப்பது போலில்லாமல் அவற்றில் ஜீவப் பிரபஞ்சமும் தார்மிக ஒழுங்கிலேயே நடக்கும் படைப்புக்களும் உண்டு. நம்மைவிடவும் கோணாமாணாவான ராக்ஷஸ லோக, அஸுர லோகாதிகள் இருக்கிறாற்போலவே ரொம்ப ரொம்ப உயர்வான தேவாதி லோகங்கள் ஏராளமாக உண்டு. மொத்தக் கோணாமாணா அவ்வளவுமே அகிலாண்ட - பிரம்மாண்ட ஒழுங்குப்பாட்டில் ஒரு சின்னஞ்சிறு அம்சம்தான்.

இது ஒரு புறமிருக்க, ஸ்ருஷ்டிமூலமான அவனிலிருந்து பிரிந்து நம்முடைய கோணத்தில் பார்க்கும்போதுதான் இந்தக் கோணாமாணா கொடுமையாகத் தெரிவது. தனியாக ருசித்தால் கடுகு கடுப்பு மட்டும்தான்; மாங்கொட்டை துவர்ப்பு மாத்திரந்தான்; மிளகாய் உறைப்பு மட்டுமே. அப்படித்தான் நம்மை மட்டும் தனித்துப் பார்க்கும்போது கோணாமாணா அருசி. ஆனால் தன்னுடைய வினோதக் களியாட்டத்திற்காகவே அநேக உலகுகளை ஸ்ருஷ்டித்து அதன் ஜீவர்களை விதம் விதமாக ஆடவிட்டிருக்கிற அவனுடைய கோணத்திலிருந்து பார்த்தாலோ? அப்போது ஒன்றின் சுவையை மற்றது தூக்கிக் காட்டுவதற்காகவே வித வித அஹாரவகைகள் பரிமாறப்படும் பெரிய விருந்தில் இடம் பெறும் ஆவக்காய் ஊறுகாயிலுள்ள கடுகும், மாங்கொட்டையும், மிளகாயுமாகத்தான் 'இத்தனை கோணாமாணா' என்று நாம் சொல்வதும் சிறுத்துப்போய், சுவையைக் கூட்டும்!

இந்தக் கோணாமாணாவே வாழ்க்கை என்று ஸந்தோஷப்படுவது ரொம்பத் தாழ்மட்டத்தில். அதிலிருந்து உயரவழி சொல்பவர்கள் 'சீ! இதுவும் ஒரு வாழ்க்கையா?' என்று காட்டுகிறார்கள். ரொம்பவும் உயர்ந்து அவனோடேயே சேர்ந்து நிற்கும் போதோ இதுவும் அந்த மஹா வாழ்க்கையில் குட்டியூண்டு அம்சந்தான்! அவசியமான அம்சந்தான்!

"கஷ்டம், துககம், அசிங்கம், அஞ்ஞானம் என்று இத்தனை நாம் பார்த்து 'சீ' என்று தள்ளுவதும் அங்கே சட்டிச் சர்க்கரைப் பொங்கலுக்கு மாற்றாக நப்புக் கொட்டிக் கொண்டு ருசி பார்க்கிற துளி, துண்டு ஊறுகாய்தான்!" என முடித்தார் முனிபுங்கவர்.

* * *

முன்பு எழுதிய முன்னுரையில் ஒரு விஷயம் சற்று வெளிப்படச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேவீ வேதம் என்றே உச்சி மேற்கொள்ளக்கூடிய 'தேவீ மாஹாத்மிய'த்திலுள்ள விஷயங்களை அநேகமாக ஏதுமே விடாமல் கொடுத்திருக்கிறேன். 'தேவீ பாகவத'த்திலிருந்தும் பல பகுதிகள் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

இப்புத்தகத்தில் "மூல நூல்களில் இல்லாத விரிவுகளும் செய்திருக்கிறேன்'' என்று முன்பு எழுதிய முகவுரையில் கூறியுள்ளேன். நிறையவே அவ்வாறு செய்துள்ளேன் என்று தெரிவிக்க வேண்டியது கடமை. மூல நூல்களில் எனக்குக் கேள்வி எழுந்த இடங்களிலெல்லாம் என்ன விடை கண்டு திருப்திடைந்தேனோ அவை முழுதையும் வாசகருக்கு ஆக்கியுள்ளேன். மூளைப் பிழிச்சலால் விடை கண்டது, அதற்கு மேம்பட்ட ஒன்றால் விடை பெற்றது இரண்டையுந்தான்! இவ்வாறே, அவற்றில் வெற்றிடம் தட்டிய இடங்களை எப்படி இட்டு நிரப்பிக் கொண்டேனோ, அவற்றில் சில எப்படி நிரப்பப்பட்டனவோ அவற்றை யெல்லாமும் சேர்த்திருக்கிறேன்.

* * *

இருபதாண்டு முன் *1976*-ல் முதற்பதிப்பும் பிறகு இரு பதிப்புக்களும் 'வானதி'யின் மூலம் பெற்ற "நவராத்திரி நாயகி" இந் நாலாம் பதிப்பில் திவ்ய வித்யா அறக்கட்டளையின் பதிப்பாக வெளிவருகிறாள்.

"ஸாயி துர்க்கா" என்று பாடப்படும் ஸ்வாமி ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபாவின் அநுக்ரஹத்தோடு, என் நூல்களைக் குறைந்த விலையில் பிரசுரிக்கவே நிறுவப்பட்டது திவ்ய வித்யா அறக்கட்டளை.

நமது இந் நூலை மிகவும் குறைந்த விலையில் வெளியிடும் அந்த அறக்கட்டளையினருக்கு,

அவர்களது அவாவை நிறைவேற்றிக் கொடுத்த நன்கொடையாளர்களுக்கு,

குறிப்பாக, அவர்களில் திருவடிக்கே அடிமை பூண்ட சரணதாஸிக்கு,

மனமார் ஈடுபாட்டுடன் அச்சிட்டுக் கொடுத்த 'ஸ்ரீ சக்ரா' சகோதரர்களுக்கு,

தெய்வக் களை சொட்ட அம்பாளை மேலட்டையிலும் உள்ளே முகப்பிலும் ஓவியமாக அளித்துள்ள 'வினு'வுக்கு,

நூலைப் பயன் செய்துகொள்ளும் வாசகர்களுக்கு —

என் நன்றியை அவளுக்கு நமஸ்காரப் பிரார்த்தனையாக்குகிறேன்.

ஞானிகளையும் மோஹத்தில் ஆழ்த்துபவள் என்று அவளைச் சொன்ன தேவீ மான்மியமே அவளை ஞான-மோக்ஷ தாயகியாகவும் நிறையக் கூறியுள்ளது. அதையும் உள்ளே ஆங்காங்கே காண்பீர்கள். ஆதியில் இக் கதை கேட்ட இருவரில் ஒருவனான ஸமாதி என்பவன் அந்த ஞான மோக்ஷம் பெற்றதையே நூலின் முடிவாகவும் காண்கிறோம். அந்தப் பேரானந்தப் பேரருளின் திவலைத் தெறிப்புக்களாலேனும் வாசகர்களை அவள் இன்புறுத்துவாளாக!

சென்னை - *600 081*
11-9-96 ("அதிக வரம்" தருபவள் என்று அவளையே போற்றிய பாரதியார் நினைவுநாள்)

ரா. கணபதி

சித்திர விளக்கம்

மேலட்டை : தமிழகச் சிவாலயங்களில் காணப்பெறும் ஸ்ரீதுர்க்கா தேவி. மஹிஷத் தலை மீது சங்க சக்கரங்களுடன் நாற்கரத்தினாளாகப் பொலியும் இவள் விஷ்ணு துர்க்கை எனப்படுவாள்.

முகப்புப்படம் : மஹாகாளி - மஹாலக்ஷ்மி - மஹாஸரஸ்வதி எனும் நவராத்திரி நாயகியர் மூவரில் நடுநாயகமாக ஏற்றம் கொண்ட ஸ்ரீமஹிஷாஸுரமர்த்தினி. பதினெண் கரங்களுடன் திகழ்பவள். (அவற்றிலுள்ள ஆயுத விவரங்களுக்குப் பக்கம் *216* பார்க்கவும்.) மஹிஷ வதம் முடித்தபின் பக்தருக்கு இதம் சொரியும் வரதாயகியாக நிற்கும் கோலம் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டவே வாஹனமாகிய சிம்மம், அதன் முகம் அம்பாளின் இடப்புறத்தில் அமைய நிற்கிறது.

பொருளடக்கம்

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால்

முன்னூறு கல்களுக்கப்பாலிருந்து

எம் முன்னோரைத் தேடி வந்து

இன்றளவும்

இனிமையினும் இனியளாய்

இன்னுயிராய்

எம் குடி தாங்கி வரும்

காருண்ய பூரணி

லாவண்ய சாலினி

ஸ்ரீ சூலினி துர்க்காம்பா பரமேசுவரியின்

பொற்கமல சிற்பதத்தில்

அர்ப்பணம், சமர்ப்பணம்.



முகவுரை என்கிற முக்கிய உரை

வாள்நுதற் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கெண்ணிய எம்பெருமாட்டியைப் பேதை நெஞ்சில்
காணுதற்கண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே!

★ ★ ★

வல்லபம் ஒன்(று) அறியேன், சிறியேன்; நின்மலரடிச் செம்
பல்லவம் அல்லதுபற்(று) ஒன்(று) இலேன்; பசும்பொற் பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்; வினையேன் தொடுத்த
சொல் அவம் ஆயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே.

(அபிராமி அந்தாதி)

பராசக்தியின் அன்பு வீரமாகப் பரிணமித்ததையே இந்த நூல் முக்கியமாகக் கூறுகிறது. அந்த வீரத்துக்கு ஏற்ப, இந்நூலின் முதல்வரியாக, ''வாள்-நுதல்'' வருகிறது. 'வாள்' என்றால் இங்கு 'ஒளி' என்று பொருள். உண்மை ஒளி எது? ஞானம்தான். அஞ்ஞான இருளைப் போக்கும் ஒளி அது.

அஞ்ஞானத்தை வெட்டி வீழ்த்தும் கத்தி என்பதால் ஞானம் வாளும்தான். 'ஞான வாள்' பற்றி அநுபூதிச் செல்வர் பலர் பாடியிருக்கிறார்கள். நவராத்திரி என்கிற ஒன்பது இரவுகளில் அஞ்ஞான இருட்டினை விலக்கும், அஞ்ஞானக் கட்டினை வெட்டும் ஞானாம்பிகையைப் பூஜிக்கிறோம். சரத் காலத்தில் நிகழும் இந்த சாரத நவராத்திரியில் ஞானாம்பிகையை துர்க்கா பரமேசுவரி என்ற பெயரிலும், அதன் மூன்று அம்சங்களான மகாகாளி, மகாலக்ஷ்மி, மகாசரஸ்வதி என்ற திருப்பெயர்களிலும் விசேஷமாகப் பூஜிக்கிறோம். அஞ்ஞானத்தின் பலவடிவான அரக்கர்களை அழித்தவள் அவள். மது-கைடப வதத்துக்குக் காரணமாயிருந்தவள் மகாகாளி. மகிஷாசுரனை மர்த்தனம் செய்தவள் மகாலக்ஷ்மி. சும்பநிசும்பரை சம்ஹரித்தவள் மகாசரஸ்வதி.

இந்த திவ்வியமான விருத்தாந்தம் ''மார்க்கண்டேய புராண''த்தில் எழுநூறு மந்திரங்களாக விரிகின்றது. ஆம், இவ்வரலாற்றைக் கூறும் சொற்கள் சுலோகம் மட்டுமல்ல; அவை சக்தி வாய்ந்த மந்திரங்களே ஆகும். அதாவது, அவற்றின் ஒலியின் அதிர்வுச் சக்தியாலேயே பலவிதமான இக-பர நலன்களை அளிக்கவல்லவை இவை. 'மகாபாரத'த்தில் முடிமணியாக எழுநூறு சுலோகங்கொண்ட 'பகவத் கீதை' இடம் பெறுவது போல், 'மார்க்கண்டேய புராண'த்தில் எழுநூறு மந்திரம் கொண்ட துர்க்காலீலை அமைந்துள்ளது. துர்க்கையினுள் கடவுட் சக்தியின் ஆற்றல் அடர்ந்து செறிந்துள்ளதால் அவளைச் 'சண்டிகா' என்பார்கள். அவளது சரிதையைச் சொல்லும் இந்த எழுநூறு மந்திரங்களும், அவளது திருவுருவே ஆகையால், இந்த கிரந்தத்துக்கு 'சண்டீ' என்றே பெயர் வழங்குகிறது; ''துர்க்கா ஸப்தசதீ'' என்ற திருநாமமும் உண்டு. ஸப்த-சதம் என்றால் எழுநூறு எனப் பொருள். உலக வழக்கில் இப்புனித 'நூலை 'தேவீ மாஹாத்மியம்' என்றே கூறுகின்றனர் — தேவியின் மகிமையைச் செப்புவதால்.

மார்க்கண்டேய புராணத்தில் காணப்படும் இந்த தேவி மான்மியப் பகுதி, துளிக்கூட அநாவசியங்கள் இல்லாமல், அற்புதமான பிகு சுகுவோடு, கச்சிதத்தோடு, ராஜ கம்பீரமாக விளங்குகிறது. சாதாரணமாகப் புராணங்களில் காணப்படும் இழுவல்கள், உபகதைகள், சுயமார்க்கத்தை உயர்த்தி மற்றையோர் வழிகளைப் பழித்தும் பரிகசித்தும் செய்கிற விமர்சனங்கள் — இவை ஏதும் இன்றி, ''சண்டீ'' நூலானது கடைசல் பிடித்த ரத்தினமாக, ரத்தினச் சுருக்கமாக இருக்கிறது. 'நிச்சயமாக ரிஷி வாக்கே, இதில் அசத்தியம் எதுவும் இல்லை. இடைச் செருகல் ஏதும் இல்லை' என்ற உறுதி அதைப் படிக்கும்போதே உண்டாகிறது.

இதனால்தான் நீண்ட நெடுங்காலமாக இதனை நவராத்திரியின்போது பாராயணம் செய்கிற வழக்கம் இருந்து வருகிறது. பாராயணம் மட்டுமின்றி இந்த சுலோகங்களை, அதாவது மந்திரங்களைக் கூறி வேள்வி செய்யும் வழக்கமும் இருக்கிறது. ''சண்டீ ஹோமம்'' எனப்படும் உத்தமமான சடங்கு இதுவே.

இதே வரலாறுகள் 'தேவீ பாகவதத்திலும் காணப்படுகின்றன. பதினெட்டு மகாபுராணங்களில் ஒன்றான 'தேவீ பாகவதம்' ஸாக்ஷாத் வியாச முனிவரே அருளியதாகக்

கருதப்படுகிறது. தேவியின் பல ஆவிர்பாவங்களையும்,அருளிச் செயல்களையும் கூறும் இந்த 'சாக்த வேதம்' போன்ற புனித நூலில் துர்க்காதேவியின் மூன்று வடிவங்களின் விருத்தாந்தம் விரிவது இயற்கையே அன்றோ? தேவீ பாகவதத்தின் முதல் ஸ்கந்தத்தில் ஆறாவது அத்தியாயத்திலிருந்து ஒன்பது முடிய 231 சுலோகங்களில் மதுகைடப-மாகாளி வரலாறும், ஐந்தாம் ஸ்கந்தத்தில் இரண்டிலிருந்து முப்பத்து ஐந்தாவது அத்தியாயம் முடியச் சுமார் 2000 சுலோகங்களில் மகிஷாசுரமர்த்தினி, மகாசரஸ்வதி சரிதங்களும் விரிகின்றன. மீளவும் பத்தாம் ஸ்கந்தத்தில் பத்து, பதினொரு, பன்னிரண்டாவது அத்தியாயங்களில் வெகு சுருக்கமாக இந்த வரலாறுகள் கூறப்படுகின்றன.

மார்க்கண்டேய புராணத்தில் கூறியிருக்கும் 'துர்க்கா ஸப்த சதி'க்கும் தேவீ பாகவதக் கூற்றுக்குமிடையே மாறுபாடுகள் உள்ளன. தேவீ பாகவதத்திலேயே முதலில் விரிவாகக் கூறப்படுவதற்கும் பிறகு சுருக்கிக் கூறப்படுவதற்கும் இடையே வித்தியாசங்கள் உள்ளன.

இதுபோன்ற மாறுபாடுகளுக்குப் பண்டிதர்கள் ஒரு காரணம் சொல்கிறார்கள். சிருஷ்டி அனைத்தும் ஊழியில் ஒடுங்குவதும் மீளவும் படைப்புத் தொடங்குவதும், இப்படைப்பு மறுபடி பிரளயத்தில் லயிப்பதும், மறுபடி சிருஷ்டி தொடங்குவதுமாக ஒரு பெரிய காலச் சக்கரம் சுற்றிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சிருஷ்டியிலும் தேவீபாகவதமும், ஸ்காந்தமும், ராமாயணமும், பாரதமும் மற்ற வரலாறுகளும் நடைபெறுகின்றன. ஆனால் இவை ஒரே போல அச்சான 'சினிமா பிரின்ட்' மாதிரி முற்றிலும் ஒரே விதத்தில் ஒவ்வொரு சதுர்யுகத்திலும் நடப்பதில்லை. திரைப்படமாக அன்றி, மேடை நாடகத்தை நடத்தும் போது, மூலக்கதை என்றும் ஒன்றே ஆயினும் அதற்குள் அன்றன்றும் புதுச்சுவை கூடுமாறு கால தேச வர்த்தமானத்தை அநுசரித்துச் சில மாறுதல்கள் செய்யலாம் அல்லவா? இவ்விதமே சதுர்யுகம் தோறும் நடைபெறும் நிகழ்ச்சிகள் அடிப்படையில் ஒன்றாக இருப்பினும், அவற்றுள் சிற்சில மாறுதல்களும் இருக்கும் என்கின்றனர். பிரபஞ்ச நாடக சூத்திரதாரிணியான தேவி அச்சடித்த பிரதிகளை சினிமா காட்டிக் கொள்வதைவிட, அவ்வப்போதும் உயிர்க் களையோடு நாடகம் போட்டுப் பார்த்துக் கொள்வதையே விரும்புகிறாள் போலும்! ஒரு புராணத்தில் ஒரு ரிஷி ஒரு சதுர்யுகத்தில் நடந்த திவ்விய லீலைகளை ஞானக் கண்ணால் கிரகிக்கிறார். இன்னொரு

புராணத்தில் இன்னொரு முனிவர் இன்னொரு சதுர்யுகத்தில் நடைபெற்ற சம்பவங்களை கிரகிக்கிறார். இதனால்தான் புராணத்துக்குப் புராணம், அடிப்படைக் கதை ஒன்றாக இருந்தாலும், அதில் ஆங்காங்கு மாறுதல்கள் காணப்படுகின்றன. இது பெரியோர் தரும் விளக்கம்.

என்னைப் பொறுத்த மட்டில் 'சண்டீ' என்கிற பெயரில் மார்க்கண்டேய புராணத்தில் விரியும் 'துர்க்கா ஸப்தசதீ' சுண்டக் காய்ச்சிய பால் மாதிரி ஓர் அடர்த்தியோடு மனஸைக் கவ்வுகிறது. 'தேவீ பாகவத'த்தில் கதை மிகவும் நீளுகிறது. அதனாலேயே நீர்த்துப்போவதாகத் தோன்றுகிறது. (ஒரு வேளை இதுவே என் எழுத்தில் உள்ள குறையாகவும் இருக்கலாம்!) காளி, லக்ஷ்மி, சரஸ்வதி மூவர் வரலாற்றிலும் பகையரக்கன் காமவசப்படுவதாக ஒரே கதை தேவீ பாகவதத்தில் திருப்பப்படுவதும் இலக்கிய நோக்கில் மட்டுமின்றி, பக்தி நோக்கில் கூடச் சுவையாகத் தென்படவில்லை. ஆயினும், இதில் ஆங்காங்கு மின்னும் வாசகங்கள் காணப்படுகின்றன; நுட்பமான உணர்வுகள் பரிணமிக்கின்றன; சுவாரஸ்யமான நிகழ்ச்சிகள் பரிமளிக்கின்றன.

'சண்டீ'யை முக்கியமான ஆதாரமாக வைத்துக் கொண்டு, 'தேவீ பாகவதத்'திலிருந்தும் ஆங்காங்கே பல அம்சங்களை அதோடு சேர்த்து இங்கே எழுதியிருக்கிறேன்.

நூலினுள்ளே பல இடங்களில் நான் 'மான்மியம்' அல்லது 'மாகாத்மியம்' என்று குறிப்பிடுவது 'துர்க்கா ஸப்தசதீ'யாகிய 'சண்டீ'யையும், 'பாகவதம்' என்று குறிப்பிடுவது 'தேவீ பாகவத'த்தையும் குறிக்கும்.

பல்வேறு கல்பங்களில் நடந்த கதைகள் என்பதால் 'தேவீ மஹாத்மியம் வேறு, 'தேவீ பாகவதம்' வேறு என்று பிரித்து இவற்றைத் தனித்தனியே எழுதியிருந்தால், இவற்றிடை பொதுச் சம்பவங்கள் நிறைய இருப்பதால் வாசகர்களுக்குப் படித்ததையே படிக்கிற சலிப்பு ஏற்படும். கதையின் ஊடே 'இது சப்தசதீப் பகுதி' 'இது தேவீ பாகவதப் பகுதி' என்று ஒவ்வொரு கட்டத்திலும் குறிப்பிட்டுக் கொண்டு போவதும்கூட ஓரளவு அலுப்பாகவே இருக்கும். எனவே இரண்டையும் பெருமளவு ஒன்றாக இழைத்தே தந்திருக்கிறேன்; ஓரளவுக்குப் பிரித்துப் பிரித்தும் காட்டியிருக்கிறேன்.

இரண்டிலும் இல்லாத விரிவுகளும் செய்திருக்கிறேன். மூலநூல்களுக்கு விரோதமில்லாமல், விரிவு செய்யவும் குறைக்கவும் இலக்கிய கர்த்தனுக்கு நம் ஆன்றோர்கள் சுதந்திரம் தந்திருக்கிறார்கள். காரணம், புராணம் 'ஸுஹ்ருத்

ஸம்மிதை' என்பதும், இலக்கியம் 'காந்தா ஸம்மிதை' என்பதுமே ஆகும். வேதமானது, முதலாளி கட்டளையிடுவது போலப் பேசுமாதலால் அது 'ப்ரபு ஸம்மிதை'. இக் கட்டளைகளை ஒரு நண்பன் (ஸுஹ்ருத்) எடுத்துச் சொல்வது போலக் கதையாகக் கூறும் புராணமானது 'ஸுஹ்ருத் ஸம்மிதை' எனப்படுகிறது. நண்பன் கூறுவதைவிட மனதுக்குப் பிடித்ததாக இருப்பது நாயகியின் நயமான, நேயமான பேச்சே அல்லவா? நாயகனை நல்வழிப்படுத்துவதற்காக ஓர் உத்தமப் பெண் கூட்டியும் குறைத்தும் கூடப் பேசுவாள் அன்றோ? இலக்கிய கர்த்தரை இப்படித்தான் அன்பின் காந்த சக்தியோடு நெஞ்சை இழுத்துப் பேசும் காந்தையின் இடத்தில் வைத்திருக்கிறார்கள். 'காந்தா சம்மிதை'க்குரிய சுதந்திரத்தை இங்கு நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

ஆகா. இந்த நூலை நான் எழுத நேர்ந்தது எப்பேர்ப்பட்ட பாக்கியம்! அபிராமி பட்டரோடு சேர்ந்து 'முன் செய்புண்ணியமே!' என்றுதான் சொல்லவேண்டும்! யாரும் ஆழம் காணமுடியாத ஆதி மகா பராசக்தியைப் பற்றி என்ன புரிந்து கொள்ள முடியும்! புரிந்து கொண்டதையும் எவ்வளவுக்கு எழுத இயலும்? வேறெதைப் புரிந்து கொள்ள முடிந்தாலும் முடியாவிட்டாலும் அதைப் பற்றிக் கவலை இல்லை; அவளது அன்பை அளவறப் பெற்று வருகிறேன் — இதைப் புரிந்து கொண்டிருக்கிறேனே! அதுவும் அவளது அன்பால்தான்! இதுவே போதும்! தகுதியைப் பார்க்காமல் எப்படித் தாயாக இருக்கிறாள் என்பதை நிரம்ப அநுபவித்து வருகிறேன். அதற்குரிய அளவு நன்றி செலுத்துகிறேனா என்பதும் சந்தேகம்தான். இதையும் பொருட்படுத்தாமல் அவள் அரவணைத்தே வருகிறாள். அந்த தைரியமான காப்பில்தான் இதை எழுதுகிறேன். ஏனெனில், அவளைப் பற்றி எழுதுவது புண்ணிய கைங்கரியமாகவும் இருக்கலாம். மாறாக நமது மமதையால் அபசாரமாகவும் ஆகிவிடலாம். மமதையில்லாமல் எந்த அளவுக்கு எழுதுபவன் சரணாகதி செய்கிறானோ, அந்த அளவுக்கே சத்தியமான கருத்தை, எழுத்தை அவன் மூலம் உதிக்கச் செய்வாள். இந்நூலை எழுதுகிறவன் எந்த அளவுக்கு சரணாகதி செய்யப் போகிறானோ? ஆனாலும், அபசாரம் என்பதும் கூட நம் நோக்கில் தான் இருக்கிறதே தவிர அவள் பார்வையில் ஏதும் அபசாரமாகப்படவில்லை என்பதையே என் சொந்த அநுபவங் களிலிருந்து பெறுகிறேன். எத்தனையோ அபசாரங்களைப் பொறுத்து வந்திருக்கிற அம்மா, இதில் நேரும் அபசாரங் களையும் பொறுத்துக் கொள்வாள். 'என் சொல்லில்

குற்றம் இருந்தாலும் உன் பெயரைத்தானே கூறுகிறேன்? அதனால் இதுவும் புண்ணியத் துதியாகிறது' என்கிறாரே அபிராமிபட்டர். அம்மாதிரி அவளைப் பற்றி எழுதப்பட்டது என்பதாலேயே இதிலுள்ள பிழைகளையும் மன்னிக்க வேண்டியதுதான்! ஞானாம்பிகை என்றால் பேரறிவின் பொலிவு என்று பொருள். சிற்றறிவு அதில் எவ்வளவை கிரஹிக்க இயலும்? முடிந்ததைத்தானே செய்யலாம்?

* * *

ஞானாம்பிகை, ஞானாம்பிகை என்று திரும்பத் திரும்பச் சொல்கிறேன். ஸ்ரீ காமகோடி பெரியவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். அஞ்ஞானிகளான நமக்கு அவளே ரக்ஷை; அவளுடைய ஞானப்பால்தான் குழந்தைகளான நம்மைக் காக்கும் என்பார்கள்.

ஆனால் அஞ்ஞானம் என்பது ஒன்று இருக்கிறதே! அத்தனை பேரையும் பிடித்து ஆட்டுகிறதே! இது மட்டும் அவளிடம் பிறக்கவில்லையா? ஜீவப் பிரபஞ்சம் முழுவதையும் கல்ப கல்பமாக ஆட்டிப் படைத்து அலைக்கழித்து வரும் இந்த அஞ்ஞானத்தில் கோடியில் ஓர் அம்சங்கூட ஞானத்தைக் காணமுடியவில்லை! கோடி அஞ்ஞானிகளிடையில் ஒரு ஞானியைக் காண்பதும் அபூர்வமாக அல்லவா இருக்கிறது!

இதைப்பார்த்தால், அவளை அஞ்ஞானாம்பிகை என்றே சொல்லிவிடுவதா? அத்வைத வேதாந்திகள் அப்படித்தான் சொல்கிறார்கள். அவளை அவித்யா, மாயா, அஞ்ஞானம் என்றே சொல்வார்கள். குணமும் குறியுமற்று ஏகவஸ்துவாக உள்ள பிரம்மம் இத்தனை பிரபஞ்சமாக, ஜீவராசிகளாகத் தோன்றுவது மாயா காரியமே; நாம் நம்மை ஏதோ தனி ஜீவர்கள் என்று நினைத்துக் கொண்டு பிரம்மத்திலிருந்து பிரிந்திருப் பதற்குக் காரணம் அவித்யைதான் — அஞ்ஞானம்தான் என்கிறார்கள்.

ஒருபுறம் இந்த 'அவித்யா' முழக்கம். இன்னொரு புறமோ, பிரபஞ்ச இயக்கத்துக்குக் காரணமான பராசக்தியைப் பல உருவங்களில் உபாஸிப்பவர்கள், அந்த ஒவ்வொரு மார்க்கத்தையும் ஒவ்வொரு 'வித்யை' என்றே சொல்கிறார்கள். அதாவது பிரம்மத்தை மறைத்து அதன் இடத்தில் பிரபஞ் சத்தைக் காட்டுவதால் அத்வைதி அ-வித்யை என்று சொல் வதையே சாக்தர்கள் ஞானமளிக்கும் வித்யை என்கிறார்கள். 'தச மஹாவித்யா' என்று பராசக்தியின் பத்து ரூப பேதங்களைக்

குறித்த பத்து உபாஸனா மார்க்கங்கள் உள்ளன. இவற்றில் ஸ்ரீ லலிதா மகாதிரிபுரசுந்தரி என்கிற ரூபத்தை உபாசிப்பதற்கு ஸ்ரீவித்யா என்றே பரம மங்களமான, உத்தமமான பெயர் இடப்பட்டுள்ளது.

அத்வைத வேதாந்திகள் சொல்வது சரியா, சாக்தர்கள் சொல்வது சரியா? அஞ்ஞானத்தால் நாம் அவஸ்தைப்படுவதே பிரத்தியட்ச அநுபவமாக இருப்பதைப் பார்த்தால் அத்வைத வேதாந்திகள் சொல்வதே சரி போலத் தோன்றுகிறது. ஆனால் அத்வைதிகளும் இந்த அவித்யா சம்பந்தமுள்ள பராசக்தியின் வழிபாட்டுக்குத் தங்கள் சாதனையில் தொடக்கக் கட்டத்தில் இடம் தருகிறார்கள். ஏன் தெரியுமா? நம் அவஸ்தைகளை எல்லாம் அநுபவிக்கக் காரணமாக இருக்கிற இந்த மனத்தை ஒழித்துக் கட்டி விட்டு அப்படியே பிரம்மமாக இருந்து விட வேண்டும் என்றால், எடுத்த எடுப்பில் அது முடியவே மாட்டேன் என்கிறது. மனம் அடங்கவே மாட்டேன் என்கிறது; ஒடுங்கவே மாட்டேன் என்கிறது. இந்த நிலையில்தான் 'பராசக்தியையே மனத்தால் நினைக்கப் பழகு' என்கின்றனர். அத்வைதிகள் 'பராசக்தி' என்ற பதத்தைக் கூறமாட்டார்கள். 'ஈச்வரன்' என்பதே அவர்கள் உபயோகிக்கும் பதம். காரியமற்ற பிரம்மத்துக்கு மாறாக, இந்தக் காரியப் பிரபஞ்சத்தை நடத்திக் கொண்டிருக்கிற அதனுடைய மகாசக்தியை — பராசக்தியை —'ஈச்வரன்' என்றே அத்வைத சாஸ்திரங்கள் கூறும். பலப் பலவானவற்றை இந்த பராசக்தி இயக்குகிறது; பலப்பல கர்மங்களுக்கு உரித்தான பலன்களை வழங்குகிறது. இதை அத்வைதிகள் ஒப்புக் கொள்கிறார்கள். அதோடு, பல படித்தாகச் சிதறும் மனத்தை இந்தப் பராசக்தியிடம் ஜபம், பூஜை, தியானம் என்கிற வகையில் செலுத்தத் தொடங்கினால் அந்த மனம் ஒருமைப்படவும் செய்கிறது என்பதையும் அவர்கள் கண்டிருக்கிறார்கள். எனவேதான், மனத்தை மாய்ப்பதற்கு முதற்படி இந்த ஒருமைப்பாடாகையால்தான் அவர்களும் இந்த அவித்யா பராசக்தியை உபாஸிப்பதைத் தொடக்க காலத்தில் ஒரு சாதனையாக வைத்திருக்கிறார்கள். பிறகு இந்தப் பராசக்தியை அறவே மறந்து விடுவதுதான் அவர்களுடைய லட்சியம். பிரம்மத்தோடு பிரம்மமாகி விடுகிறபோது எதை நினைப்பது? எவர் நினைப்பது?

அவனவனும் தனக்குப் பிடித்தது எதுவானாலும் அதனிடம் மனத்தை ஒருமுகப்படுத்தி விட்டால் அந்த மனமானது தூய்மை பெற்று ஒருமை உறும் என்று இவர்கள் கூறாமல், ஈசுவர உபாஸனை ஒன்றாலேயே மனத்தில்

ஒருமைப்பாடு உண்டாவதாகச் சொல்வது கவனத்துக்குரியது. எனவே இவர்கள் விண்டு சொல்லாவிட்டாலும், இந்த உபாஸனையில் ஜீவன் மட்டும் செயற்படாமல், இதற்குப் பிரதியாகப் பராசக்தியும் செயற்பட்டு இவனது மனத்தைத் தூய்மையிலும் ஒருமையிலும் திருப்புகிறது என்றாகிறது. இத்தனை சஞ்சலங்களுக்கும் எது காரணமோ, அதே பராசக்தி ஒருவன் மனச் சஞ்சலத்தைப் போக்குவதற்கு முயற்சி எடுத்தாலும் கை கொடுக்கிறது என்ற அளவுக்கு இதிலிருந்து ஏற்படுகிறது. கர்ம பலனை எல்லாம் அளிப்பது இந்தப் பராசக்தி என்பதை அத்வைதிகளும் ஒட்டிக் கொள்கிறார்கள் அல்லவா? எனவே உபாஸனை என்ற கர்மத்துக்குப் பலனாக உபாஸகனின் மனத்தை பராசக்தியே ஒருமுகப்படுத்துகிறது எனலாம். ஆனாலும் அத்வைதிகள் இப்படி விளக்கமாகச் சொல்வதில்லை. உபாசனை செய்தால் மனம் ஒருமுகப்படும் என்று இது ஏதோ தானாக—'ஆட்டோமேடி'க்காக—நிகழ்வதுபோலவே சொல்வார்கள். இந்த உலகில் ஒவ்வொருவனும் தன் தொழிலில் உபாசனையை விடத் தீவிரமாக ஈடுபட்டு அதிலேயேதான் சித்தத்தைச் செலுத்தி வருகிறான். ஆனால், இதனால் மேலும் மேலும் எப்படி சாமர்த்தியமாகத் தப்பு செய்து பணம் பண்ணலாம், அல்லது பெயர் எடுக்கலாம் என்றுதான் கண்டு கொள்கிறார்களே ஒழிய இவர்களது மனம் சுத்தம் அடைந்து பிரம்மத்தை நோக்கித் திரும்புவதாகக் காணவே காணோம். ஆனால் உபாசனை என்று பூஜை, க்ஷேத்திராடனம், ஜபம், தவம் இவற்றில் உண்மையான ஈடுபாட்டோடு இறங்கினால் மனம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிந்து சுத்தமாகத் தொடங்குகிறது. இதிலிருந்து, மாயா பராசக்தி நம்மை அவித்தையிலிருந்து விடுவிக்கவும் தயாராக இருக்கிறாள் என்று நிச்சயமாகத் தெரிகிறது.

அப்படியானால் உபாசனை என்பதே இதுதானா? அத்வைதிகளைப் போல ஞானமார்க்கத்தில் செல்லாமல் பக்தி மார்க்கத்தில் செல்கிறவர்கள், மன ஒருமைக்கு வழி வழிபாடு என்றமட்டோடு நிற்கவில்லை. இவர்கள் மன ஒருமைக்குப் பின் இந்தப் பராசக்தியும் விலகிப் போக வேண்டும் என்று கருதி, அதை உபாசிக்கவில்லை. ஞானிகளைப் போல் காரியமற்ற பிரம்மத்தில் இரண்டறக் கரையாமல், இந்தப் பராசக்தியின் காரியப் பிரபஞ்சத்திலேயே அவித்யா துன்பங்கள் இல்லாமல் அச்சக்தியுடன் பக்தியில் கலந்து நின்று சாசுவதமாகக் களிக்கலாம் என்பதே அவர்கள் முடிவு. அதுவே இவர்களது லட்சியம். பக்தர்களின் வரலாறுகளைப் பார்க்கும்போது இப்படிப்பட்ட ஆனந்த நிலையும் உள்ளது என்பது தெரிகிறது.

அப்படியானால், பொதுவாகக் கொடுமையான மாய காரியமே செய்யும் பராசக்தி, உபாசிக்கிறவர்கள் விஷயத்தில் மட்டுமே ஆனந்தத்தைத் தருகிறது என்று அர்த்தமா? காரியம் உள்ள நிலையிலேயே ஆனந்தத்தைத் தர முடியும் எனில் எல்லோர் விஷயத்திலும் ஏன் இதே ஆனந்தம் நிலவக்கூடாது?

சரி, காரியம் என்றால் என்ன என்று பார்க்கலாம். அதில் இரண்டு விதங்கள் உள்ளன. நம் மனத்தைக் கொண்டு நம் இஷ்டப்படி நாம் செய்வதாக எண்ணுவது ஒன்று. நம் இஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் 'இயற்கையாக நடக்கிற' காரியம் இன்னொன்று. மனம் என்பதே இல்லாத ஜடப் பொருள்களுக்கும் கூடக் குறிப்பிட்ட தன்மைகள் உள்ளன. காற்று, நெருப்பு, நீர் முதலிய யாவும் குறிப்பிட்ட நியதிகளின்படியே இயங்குகின்றன. நம்மையே எடுத்துக் கொண்டாலும் நமது இதயமும் ஈரலும் நுரையீரலும் மூளையும் இயங்குவது நமது சுய இஷ்டப்படி அல்லவே! நமது புலன்களை எடுத்துக் கொண்டாலும், கண்ணால் பார்க்கத்தான் முடிகிறது; கேட்க முடியவில்லை. காதால் கேட்கத்தான் முடிகிறது; பார்க்க முடியவில்லை. இப்படியே ஒவ்வோர் இந்திரியமும். சகல மக்களுக்கும் இவ்விதமே இருக்கிறது. இதிலிருந்து தனித்தனியாக நாமே சுயேச்சைப்படி சுதந்திரமாக இப்படிக் கற்பனை செய்து கொள்ளவில்லை என்று நிதரிசனமாகிறது.

மேலும் விநோதம் யாதெனில், நாமே சுயேச்சைப்படி செய்கிற காரியங்கள் தாறுமாறாகப் போகின்றன. நம் சுயேச்சையின் மூல ஸ்தானமான மனம் நம் ஆதீனத்தில் கட்டுப்படாமல் அலைபாய்கிறது. இப்படியின்றி, 'இயற்கை' என்று சொல்கிறோமே, அதன் காரியங்கள் சீர்குலையாமலும், எத்தனை எத்தனையோ வேறுபட்ட வஸ்துக்களையும் சக்திகளையும் அற்புதமாக இசைவித்துக் கொண்டும், யுகயுகாந்தரமாகப் பழுதின்றி நடந்து வருகின்றன. வெவ்வேறு வஸ்துக்கள் இசைவு பெறுவது மகா அதிசயம்! மனிதனுக்குப் பசி இருக்கிறதெனில், அதைத் தீர்க்க இயற்கையில் பயிர் இருக்கிறது; இவனுக்கு சுவாசிக்க வேண்டுமெனில் இயற்கையில் வாயு உள்ளது; இவனுக்கு வியாதி வந்தால் இயற்கையில் அதற்கான மூலிகை இருக்கிறது! மனிதனா இவற்றை ஏற்படுத்தினான்? அல்லது ஜீவனில்லாத ஜடமான 'இயற்கை' என்பது இவனது தேவைகளை உணர்ந்து அவற்றைப் பூர்த்தி செய்வதுதான் நடக்கிற காரியமா?

இதையெல்லாம் யோசிக்கின், காரியமே இல்லாத ஆத்மா அல்லது பிரம்மத்துக்கும், காரியமான ஜீவனுக்கும் நடுவே சகல காரியங்களுக்கும் ஆதாரமாக ஒரு மகாசக்தி பேரறிவுடன் உயிர் கொண்டு விளங்குவது நன்கு தெரியும். அதன் திட்டம்தான் லோக வாழ்வு என்பது தெரியும்.

பிரம்மம்தான் ஒரே சத்தியவஸ்து. காரியமற்ற அந்த சத்திய வஸ்து எவ்வாறோ தன் சக்தியை உணர்கிறது! அந்த சக்தியைக் கோடானு கோடி விதங்களில் வெளிக் கொட்டி விளையாடிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பராசக்தியே ஒரு நிலையில் ஜட வஸ்துக்களாகிறது. இவை தனி மனம் அற்றவை. (தேவி மான்மியத்தில் நாம் காணப்போகும் முனிவர் மேதஸின் வார்த்தையில்) இவை எப்போதும் 'குருடுகள்'. ஆனால் குருடாக இருந்தாலும் இவற்றாலும் ஜீவராசிகளின் வாழ்க்கைக்குப் பயன் இருக்கிறது. அது ஒருபுறமிருக்க, இந்த அறிவற்ற ஜட வஸ்துக்களின் அணுக்களும்கூட கதி தவறாமல் இயங்குகின்றன. ஜடமான மூலப்பொருள் ஒவ்வொன்றுக்கும் தனித்தன்மைகள் காணப்படுகின்றன. இந்த ஜடவஸ்துக்கள் முற்றிலும் பராசக்தியின் நேர் ஆளுகையிலேயே இருப்பதாகச் சொல்லலாம். இதைக் குருட்டுத்தனம் எனலாமா? பராசக்தி அங்கும் விழிப்புடன்தானே செயல்படுகிறது? புதிரான கேள்விதான், போகட்டும்! இனி அடுத்த நிலையில் தாவரங்களாகத் தோன்றுகிறது அதே பராசக்தி. இவற்றுக்கு உணவு தேடி வேரைச் செலுத்துவது, இனவிருத்தி செய்வது முதலிய சில உணர்வுகள் உள்ளன. மற்றபடி, இவையும் பராசக்தியின் அடிமைகளே. அடுத்த நிலையில் பராசக்தியின் கண்ணாமூச்சி விளையாட்டு அதிகமாகிறது. பராசக்தி தன்னைத்தானே மறந்தாற்போல், தனிமனங்களை எடுத்துக் கொண்டு விளையாடுவது அதிகமாகிறது. இங்கே விலங்கினங்கள் தோன்றுகின்றன. இவற்றுக்குப் பலவிதமான சுய இச்சைகள் உள்ளன. தனிமனமானது அதிகம் செயல்படும்படி இவற்றைப் பராசக்தி விட்டிருக்கிறது.

இவ்வுலக உயிரினங்களின் முடிவாக மனிதன் வருகிறான். இங்குதான் கண்ணாமூச்சி—பார்வையை மறைக்கும் குருட்டு விளையாட்டு—பூரணமாகிறது. இவனது மனச்சக்தியும் புத்தி வன்மையும் அபாரம். இவனது இச்சைகளுக்கு எல்லையே இல்லை. இவனது சுவாசம், ஜீரணம் முதலிய செயல்களை மட்டும் தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு, இவனது மனத்தை—புலன்களை இவன் இஷ்டப்படியே தாராளமாக அவிழ்த்து விட்டிருக்கிறது

பராசக்தி. இவன் தன் இச்சைப் பூர்த்திக்காகப் பல விதத்திலும் அலைகிறான். ஆனால் நிலைத்த, சாசுவதமான ஆனந்தமோ அமைதியோ இவனுக்குக் கிட்டவில்லை. யோசித்துப் பார்த்தால் இதுவே தான் பராசக்தி இவனுக்குச் செய்துள்ள பரம கிருபை! ஏன் தனக்கு நிலையான சுகம் இல்லை என்று இதனால்தானே இவன் சிந்திக்கிறான்? இந்தச் சிந்தனைதானே இவனை ஸாதனையில் செலுத்தி, இறுதியில் அமர நிலைக்கு உய்க்கிறது? தன் மனச் சுகங்கள் நிலையில்லை என்று கண்டவுடன் 'எது நிலையான சுகம்' என்று ஆராயத் தொடங்குகிறான். இவனுடைய ஆராய்ச்சியின் சிரத்தைக்குத் தக்கவாறு சிறிது சிறிதாக பராசக்தி அந்த சுகத்தை, அதற்கான மார்க்கத்தை இவனுக்குப் புலர்த்தி காட்டுகிறது. வளர்ச்சி-— தேய்வுகளால் மாறிக் கொண்டேயிருக்கும் உலகப் பொருள்களில் நாட்டம் உள்ள வரையில் அவற்றால் கிடைக்கும் சுகமும் மாறித் துக்கம் தொடரத்தான் செய்யும் என்று மனிதன் உணர்கிறான். வளரவும் தேயவும் முடியாமல் இருக்கிற ஆதார ஆத்மாவை, பிரம்மத்தை எய்தினாலே நிரந்தர சுகம் எனக் காண்கிறான். ஆனால், பிரம்மத்தை எப்படி அநுபவிப்பது? அநுபவம் என்பது மனத்தினால் நுகருகிற விஷயம் என்றே மனிதன் எண்ணுகிறான். பிரம்மம் எப்படியிருக்கும் என்பதே மனத்துக்குத் தெரியாத விதத்தில் மனத்தைப் பராசக்தி படைத்திருக்கிறது! கண்ணாமூச்சியின் முக்கிய அம்சமாக மனிதனின் மனம் ஓயாமல் புலன்களின் மூலம் வெளி வஸ்துக்களை அநுபவிப்பதிலேயே இயங்குகிறது. இது எப்படி உள் வஸ்துவாம் பிரம்மமான ஆத்மாவைப் பிடிக்க முடியும்?

''வெளியே ஓடாதே ஓடாதே'' என்று மனத்தை இவன் இழுத்து, ''உனக்கு ஓர் ஆதாரம் இருக்கிறது'' என்பதை நினைவுறுத்திக் கொண்டேயிருக்கிறான். எண்ணங்கள் எங்கேயிருந்து பிறக்கின்றன என்று பார்த்துக் கொண்டேயிருந்தால் எண்ணுகிற மனம் அந்த மூலத்தில் அப்படியே கரைந்து, ஆத்மா மட்டும் தன்னைத் தானே (மனத்தினால் அல்ல) அநுபவிக்கும் என்று அறிந்து கொள்கிறான். ஆனால் இதை அவன் அறிந்தது எப்படி? மனம் தன்னையே மாய்த்துக் கொள்ள எப்படி வழி கண்டது? பராசக்தியேதான் அறிவித்தது! அதுதான் வழி காட்டியது! அதுவே தான் மனத்தை அழிக்கவும் செய்தது! ஆனால் இங்கும் அதன் கண்ணாமூச்சி நிற்கவில்லை. தன்னையே தேடிச் செல்கிற ஞான மார்க்கத்தில் போகிற இந்த சாதகன் தானாகவே இந்த வழியைக் கண்டு கொண்டதாகவே பெரும்பாலும் மயங்குகிறான். தனித்துவத்தை இழந்து ஆத்மாவில் கரைய இவன் தயாராக இருந்தபோதிலும், அப்போதும்கூட அதற்கு வழி கண்டதில் தனிப் பெருமை கொண்டாடிக் கொள்கிறானா என்ன? இல்லாவிடில்,

அத்வைத சாஸ்திரங்களில் ஏதோ சில இடங்களிலேயே ஈச்வரனை மோக்ஷமளிப்பவனாக சிறிது காட்டி, மிகப் பெரும்பாலும் அவனை மாயையோடு கூடி இம்மாய உலகை நடத்துபவனாகவே முக்கியமாக தெரிவிப்பானேன்?

ஆனால் தனது என்று எதுவுமே இருக்கக்கூடாது என்று கருதிய மகான்களான ஞானிகளோ, ஆத்மாவான ஒன்றேயாகிவிடும் அத்வைதத்தில் தங்களுக்கு நாட்டம் வந்ததே பராசக்தியின் அநுக்கிரகத்தினால்தான் என்கிறார்கள்: **''ஈச்வராநுக்ரஹாதேவ பும்ஸாம் அத்வைத வாஸனா.''**

நாட்டம் வந்தது மட்டுமல்ல: அப்புறம் இவன் மனத்தை அடக்கும் சாதனையும்கூட அந்த அநுக்கிரகத்தால்தான் நடக்கிறது. கடைசியில் இவனது மனம் அலாக்காகக் கழன்று விழ, ஆத்ம ஸ்வருபத்தை இவன் உணருகிறானே, இந்த அத்வைத முக்தி நிலைகூட பராசக்தியால்தான் அருளப்படுகிறது. அதன் பின் இவன் ஏனோ அந்த வெளிப் பிரக்ஞையற்ற சமாதி நிலையை விட்டு வெளிவருகிறானே! உள்ளுக்குள்ளே ஆத்மாவையும், அதேபோதில் அதே ஆத்மாவை வெளி உலகாகவும் கண்டு, வெளி உலகுக்கு உபதேசிக்கிறானே ! — இந்த மகா அற்புதமும், பராசக்தியின் கிருபையால் தான் நடக்கிறது! ஆனால் இன்னமும் கண்ணா மூச்சியைப் பாருங்கள்! இப்படி உள்ளங்கை நெல்லிக் கனியாக பிரம்ம சாக்ஷாத்காரம் பெற்றவர்களில் பெரும்பாலாரும் கூட, ஏதோ தானாகவே முக்தி நிலை சித்தித்து விட்டது போலத்தான் பேசு கிறார்கள். 'மனம் தொலைந்தால், தானே ஆத்மா பிரகாசிக்கிறது' என்கிறார்கள். 'தொலைந்தால்' என்றால் மனம் எப்படித் தொலை யும்? இவன் முயற்சியால் தொலையுமா? முயற்சி என்பதும் மனத்தை வைத்துக் கொண்டுதானே செய்ய வேண்டும்? ''முயற்சியே இல்லாமல் வெறுமே இரு'' என்று வாயால் சொல்லிவிட்டால் மனம் ஒய்ந்து வெறுமையாகிவிடுமா, என்ன? ஆக, உண்மையில் இவனுடைய சிரத்தையைப் பார்த்துக்கொண்டே இருக்கிற பராசக்திதான் கருணைகொண்டு இவன் மனத்தை அப்பாலே விரட்டுகிறது. மனம் போனபின் ஆத்மாவைக் காட்டுகிறது. நமது தூக்கத்தில் மனத்தின் செயலில்லாவிடிலும் நாம் அப்போது ஆத்மாவை உணர்வதில்லை. ஸமாதியிலோ பராசக்தி மனத்தை மாய்ப்பதோடு, ஆத்மாவை இவன் உணரும்படியாகவும் செய்கிறது. இது இவனாகச் செய்து கொள்வதல்ல என்பது சர்வ நிச்சயம்.

தானே ஆத்ம சாக்ஷாத்காரம் ஏற்படுகிறது என்றால் சமாதிநிலைக்கு அப்புறம் இவனது பிராரப்த கர்மத்தை உத்தேசித்தோ, அல்லது இவனால் உலகுக்கு அநுக்கிரகம் கிடைக்க

வேண்டுமென்பதற்காகவோ, இவன் மீண்டும் வெளிப் பிரக்ஞை கொள்வதும் நடக்காத காரியம். ஏனென்றால் இவனைப் பொறுத்த மட்டில் கர்மத்தைப் பற்றி எந்த உணர்வும் இல்லை! அநுக்கிரகம் பெற வேண்டிய உலகம் என்று இவனுக்கு வெளியே எதுவும் இருப்பதாகவும் இவன் சமாதியில் கருத முடியாது. எனவே வெளிப் பிரக்ஞை அற்ற சமாதியிலிருந்து, வெளிப் பிரக்ஞையும் இருப்பது போன்ற ஓர் அநுக்கிரக நிலைக்கு இவன் பிற்பாடு வருகிறானே, அது பராசக்தியின் செயலே என்பதில் ஐயமில்லை. **சுருங்கச் சொன்னால் சம்ஸாரம், முக்தி இரண்டுமே முழுக்கப் பராசக்தியின் செயல்தான்.**

முதலில், இவனாக சம்ஸாரத்தில் விழவில்லை. இவன் மனத்தை இவனாகப் படைத்துக் கொள்ளவில்லை. இத்தனை கோடி ஜீவர்களும் தாங்களே தனித்தனியாகவா தங்களுடைய கண்ணும், காதும், காலும், கையும் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்று ஒரே மாதிரி சங்கற்பித்துக் கொண்டார்கள்? தனக்கு உயிர் வாழ அவசியமான பொருள்கள் உலகில் உண்டாக வேண்டும் என்று மனிதன் சங்கற்பம் செய்தால் அவை உண்டாகி விடுமா என்ன? எனவே வெள்ளிடை மலையாகத் தெரிகிற உண்மை யாதெனில், இவை எல்லாவற்றையும் ஒரே பேரறிவான பராசக்திதான் செய்தது. மனம் உள்பட ஆத்மாவுக்கு புறம்பான சகலத்தையும் செய்தது எதுவோ, அதுதான் அந்த சகலத்திலிருந்தும் ஜீவனை மீட்டு ஆத்மாநுபவத்தைத் தரமுடியும், 'தானாகவே' நடப்பது இங்கு எதுவுமில்லை; இவனாகவே நடத்திக் கொள்வதும் ஏதுமில்லை.

அத்வைதிகளில் பலர் தானே முக்தி நிலை சித்திப்பதாக சொல்வதிலிருந்து ஞானியும்கூட பராசக்தியை அறிந்து விட முடியாது —அவளே அவ்வறிவையும் தந்தாலொழிய—என்றே ஆகிறது!

ஆம்! பரப்பிரம்மமாக ஞானி ஆகிறான்; பிரம்மத்தை அறிகிறான். ஆனால் பராசக்தியை முற்றிலும் அறிய அவனாலும் முடியாது. ஏனெனில் எவருமே பிரம்மமாக இயலுமேயன்றிப் பராசக்தியாக முடியாது. பலர் ஒரே சமயத்தில் மௌனமாக இருக்கலாம்; பலர் ஒரே சமயத்தில் பேசினாலோ? கொஞ்சமேனும் பேச்சு அர்த்தமாகுமா? பிரம்ம மோனத்தில் பலர் ஆழ்ந்திருக்கலாம்; ஆனால் பிரம்ம சக்தியைப் பலர் பூரணமாகப் பெற்றால் ஒருவன் சிருஷ்டி பண்ணும்போதே இன்னொருவன் சம்காரம் செய்யலாம் — இப்படிப் பல கோளாறுகள் உண்டாகும். ஒழுங்கே இராது. ஸ்ரீ சங்கர பகவத்பாதரே செப்பிய உண்மை இது. பூரண பராசக்தியாவதற்கு எவனையும் பராசக்தி அநுமதிப்பதில்லை. பிரம்மத்தின் மனமாகிற பராசக்தியே சாதகனின் சின்னஞ் சிறிய மனித மனத்தை மேன்மேலும் உயர்த்தி, கடைசியில் பராசக்தி என்கிற மாபெரும் மனத்துக்கும்

மூலமான பிரம்மத்தில் கரைக்கிறது. இந்தச் சிறிய மனம் அந்த மாபெரும் மனத்தின் ஊடே தோய்ந்துதான் பிரம்மமாகிறது. தண்ணீரின் ஊடே முழுகி முத்து எடுப்பவன் அந்த நீரில் தோய்ந்தே ஆக வேண்டி யிருப்பதுபோல், ஆத்மஞான சாதகனும் பராசக்தியில் முழுகுவதால் அதற்குரியதான பலவித ஆற்றல்களில் ஓரளவை— ஓரளவு மட்டுமே— பெற்றுவிடுவதும் உண்டுதான். இதனால் தான் சமாதியில் இருந்து வெளி உலகிற்கு வருகிற நிலையில் அதன் சக்தியில் தோய்ந்ததால் இந்திரிய அதீதமான அமாநுஷ்ய ஆற்றல்களைத் தானாக அபேட்சியாவிட்டாலுங்கூட அடைந்து விடுகிறான் . இருந்தாலும் இவனையும் பராசக்தி கண்ணாமூச்சியில் கட்டித்தான் வைத்திருக்கிறது. தனக்கு இந்த ஆற்றல்களையும், ஆற்றலுக்கு எல்லாம் அப்பாற்பட்ட எல்லையற்ற அமைதி நிலையையும் தந்ததே இப்பராசக்தி என்பதை அவன் அறியாதவனாக வைத்திருக்கிறது. இவன் என்ன சொல்கிறான்? 'உலகம் எல்லாம் மனிதனின் மாயக் கற்பனை எனத் தள்ளிவிட்டால் பிரம்மமாகிவிடலாம்' என்று முக்தி பெறுவதைத் தானாக நடக்கிற ஒரு விஷயம் போல் பேசுகிறான். பிரபஞ்சம் ஒரு மனத்தின் மாயக் கற்பனைதான். ஆனால் அது எந்த மனம்? பிரம்மத்தின் மனமாகிய பராசக்தி புனைந்த மாயைதான் பிரபஞ்சம். ஆனால் இவனோ ஜீவர்களுடைய மனமே இந்தப் பிரபஞ்ச வாழ்வு என்கிற மாயையைப் புனைந்தது போல் பேசுகிறான். பெரிய மனம் செய்ததைச் சிறிய மனம் எப்படி அழிக்க முடியும்? அந்தப் பெரிய மனம் 'பெரிய மனசு' பண்ணினால்தான் உண்டு.

பிரபஞ்சம் ஒரு தனி மனிதக் கற்பனை என்றால் அம் மனம் நசிந்ததும் பிரபஞ்சத்தின் மாய வாழ்வு முற்றும் நசித்து விட வேண்டும். ஆனால் வாஸ்தவத்திலோ? ஒருவன் மனம் நசிக்கப் பெற்று பிரம்ம சமாதி பெற்ற பின்பும், மற்ற ஜீவர்கள் இந்த மாயை யிலேயே உழன்று கொண்டுதானே இருக்கிறார்கள்? இவன் மனம் நசித்தவுடன் மாய வாழ்வு எல்லோர்க்குமே நசித்து விடுகிறதா என்ன?

மனித மனத்தின் கற்பனையாகக் கருதுவதால்தான் இந்தப் பிரபஞ்சத்தை ஞான மார்க்கக்காரன் பழிக்கிறான். ஏனெனில், மனிதனின் மனம் சுய ஆசைகளின் பொருட்டு தர்மத்தை விட்டு விலகிப் போவதிலே ருசி காண்கிறது. தர்மம் என்பது ஒழுங்கு, கட்டுப்பாடு. ஜட வஸ்துக்களில் பூரண ஒழுங்குக் கட்டுப்பாட்டைக் காட்டும் பராசக்தி, தாவரம்-கிருமி-மிருகம் என்ற படி வரிசைகளில் வரும்போது மேலும் மேலும் சுயேச்சையைப் பெற்று மனித னாகும்போதுதான் சுயேச்சையின் எல்லை நிலத்தில் நிற்கிறது. தர்ம விதிகள் இந்த சுயேச்சைக்குத் தடையாக உள்ளன. மனிதமனம் தர்மத்துக்குக் கட்டுப்படாமல் தவறான எண்ணங்களில்

பாய்வதால்தான் இம்மனித எண்ணங்களில் ஒன்றாகவே ஞான மார்க்கக்காரன் கருதுகிற பிரபஞ்சத்தையும் அவன் ஒரு பழிப்புக்குரிய பொருளாக எண்ணுகிறான்.

ஆனால், உண்மையில் பிரபஞ்சம் எத்தனை அற்புதமான நியதிக்குக் கட்டுப்பட்டிருக்கிறது! அதில் எத்தனை எத்தனை பேரழகுகள் மண்டிக்கிடக்கின்றன! பிரபஞ்ச வாழ்வில் உள்ள பேரழகுகள் மனித வாழ்வில் மட்டும் இருக்க முடியாதா? ஜடப் பொருள்கள் அறிவு விளக்கமே இல்லாமலும், தாவரங்கள் மிகக் குறைந்த அறிவு விளக்கத்துடனும் அழகாக, தர்மமாக இருப்பதுபோல், நிறைய அறிவு பெற்ற மனிதனும் பிரபஞ்ச வாழ்வில் அங்கம் வகித்துக்கொண்டே அழகாக, நன்மையாக, தர்மமாக இருக்க முடியாதா என்ன? இவன் மனத்தில் அதர்மம் இருப்பதால் தர்ம உலகையே மறுப்பதற்குப் பதில் இவன் தார்மிகமாக இருந்து கொண்டு மாயையையே வித்யையாக அநுபவித்து ஆனந்திக்க முடியாதா?

முடியும். ஆனால் எப்போது? சுயேச்சையைப் பராசக்திக்கு அடியோடு பலிகொடுக்கத் தயாராக இருக்கும்போதுதான் இது முடியும். வேதகால ரிஷிகள் அப்படித்தான் இருந்தார்கள். யாகம், யாகம் என்று சொல்லி அவர்கள் செய்த ஆஹுதி தங்களையே பராசக்தியில் ஆஹுதி செலுத்திக் கொள்கிற தியாகத்தின் வெளி அடையாளம்தான். வேள்வியில் அவர்கள் தந்த பலி தனி மனத்தின் சுயேச்சைப்பலிதான். சுயேச்சை என்கிற வஜ்ரம் இந்த ஜீவன் என்கிற மரத்திலிருந்து கரைந்து ஓடினபின் உள்ளீடற்ற மூங்கிலாயினர். உடனே பராசக்தி அதைத் தனக்குக் குழலாக்கிக் கொண்டு மனித தர்மம் என்கிற இசையை அதன் மூலம் வைதிகவாழ்வாகத் தந்தது. இந்த வேதரிஷிகளின் மனங்கள் தர்மமயமாக மணந்தன. எங்கும் பராசக்தியின் தர்மப் பிரபாவத்தைப் பார்த்துக் கொண்டு, மனித வாழ்விலும் அந்த தர்மத்தைக் கைக்கொண்டு ஆனந்தமயமாக வாழ்ந்தார்கள். அவர்களுக்குப் பிரபஞ்சத்தை விட்டுத் தனியாக முக்தி என்று ஒன்று தேவைப்படவில்லை. தனிமனத்தின் கிருத்திரிமங்களிலிருந்து விடுபட்டு, மகாபராசக்தி மனத்தோடு இசைந்து இவ்வுலகில் வாழுவதே முக்தியாகத்தான் இருந்தது. காரியப் பிரபஞ்சமே முக்தியின்பமாக இருந்தது. இந்த இன்பங்களை ரசித்தும், இன்ப மூலமான இறைவனைப் போற்றியும் எழுந்த நான்மறைகளை பக்தி மார்க்கம் என்றே மொத்தத்தில் சொல்லிவிடலாம்.

பற்பல ஜீவராசிகளாக பற்பல நிலைகளில் தன்னை வகுத்துக் கொண்ட பராசக்தி மனிதனில் ஒரு சாராரை இப்படி உயர்த்தியது. இன்னொரு சாராரை இன்னொரு நிலைக்கு உயர்த்தியது. வேத ஸம்ஹிதைக் காலத்துக்குப் பிற்பட்டதாகக் கருதப்படும் உபநிஷத காலத்தை உண்டாக்கியோர் இவர்களே. பராசக்தியானது, இவர்களைக் காரியத்திலிருந்து காரணத்துக்குத் திருப்பி பிரபஞ்சத்தின் காரணம் என்ன, தங்களுடைய மூலம் என்ன, அவதியுறும் மனத்தின் அடிப்படை என்ன என்று தேட வைத்தது. இவர்களும் இந்தத் தேட்டத்தில் தங்களுடைய சகலத்தையும் பலிகொடுக்கச் சித்தமாயிருந்த தீரர்கள் ஆவர். பூரண பலி கொடுக்கிற இடத்தில் பராசக்தியின் அநுக்கிரகமும் பூரணமாக இருக்கும். எனவே இந்த உபநிஷத ரிஷிகளை அவர்கள் விரும்பியபடி, சகலத்துக்கும் காரணமாகிய பிரம்மத்தில்சேர்த்துக் கரைத்தாள் பராசக்தி. உலக வியாபாரம் முழுவதற்கும் காரணம் இந்தப் பராசக்திதான். ஆயினும், தானே ஸகலத்துக்கும் மூலம், காரணம் என்று காரியமான பிரபாவத்தைக் காட்டுவதோடு அவள் நின்றிருந்தால், அப்போதும்கூட அந்த ரிஷிகள், 'இப்போது நாம் பெற்றுள்ள இந்த அறிவுக்கு எது மூலம்? இத்தனை செய்கிற பராசக்திக்கு எது மூலம்?' என்று நினைக்க இடமுண்டே! அதற்கெல்லாம் இடமேயில்லாமல், அவர்களது ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் மெச்சி, அவர்கள் மேற்கொண்டு கேள்வியே கேட்க முடியாத காரியமற்ற பிரசாந்த பிரம்ம நிலையில் அவர்களைச் சேர்த்தது பராசக்தி. ''தங்களுக்கும் அதுவே மூலம், மூலம் மட்டுமா அது? அதுவே முற்றிலும் கூட. அந்த ஒன்றின் பல தோற்றம்தான் இத்தனையும். 'இத்தனையும்'-'அத்தனையும்' - என்பதும், 'வெளிவஸ்து', 'தான்' என்பதும்கூட அந்த ஒன்றேதான்'' என்று உபநிஷத ரிஷிகள் பிரம்ம சமாதி நிலை எய்தியபின் கானம் செய்தனர்—அல்லது இந்த ரிஷிக் குழல்களின் மூலம் பராசக்தியே உபநிஷத கானம் செய்தது.

வேத ஸம்ஹிதா ரிஷிகள் பிரபஞ்சத்திலேயே தெய்வத்தன்மையைக் கண்டனர். உபநிஷத ரிஷிகள் அதன் தோற்றுவாய்க்குப் போகும்போது பிரபஞ்சத்தை விட்டு விட வேண்டியதாயிற்று. ஒரு மரத்தின் வேர் எங்கிருந்து புறப்படுகிறது என்று பார்க்க வேண்டுமாயின் பூமிக்கு அடியில் தோண்டிக் கொண்டேதான் செல்ல வேண்டும். அப்போது பூமிக்கு வெளியே உள்ள மரம், அதன் அழகிய கிளைகள், இலைகள், பூக்கள், பழங்கள் எதுவுமே கண்ணுக்குத் தெரியாது தானே?

அம்மாதிரி, காரணப் பொருளைத் தேடிய போது, அதிலிருந்து விளைந்த காரியப் பிரபஞ்சத்தை இவர்கள் விடவேண்டியதாயிற்று. அந்த மூலம், அந்த வேர்! அது சாதாரண மரத்தின் வேர் போன்றதல்ல. இது அற்புத சம்ஸார விருட்சம் அல்லவா? சாக்ஷாத் இதைத் தேடியவர்களுக்கும் அதுவே வேர் அன்றோ?

எனவே இவர்கள் வேருக்கு நெருங்கி வந்தவுடன், அதில் ஏதோ ஒரு காந்த சக்தி இருந்து, அது நெருங்குகிறவனையும் அப்படியே தன்னுள் உறிஞ்சிக் கொண்டது. கருணை என்கிற காந்த சக்திதான் அது. அப்போது பராசக்தியின் ரகசியங்கள் பல வெளிப்பட்டன. இந்த வேர்தான் பௌதிகப் பொருளுக்கும் வேர், இதுவே அறிவுக்கும் வேர் என்று தெரிந்தது. இதிலிருந்தே பிரம்மத்தை மனமூலத்தால் எய்தும் ஞானமார்க்கமும், சரீரத்தை வளர்க்கும் சுவாச மூலத்தால் எய்தும் யோக மார்க்கமும் பிறந்தன.

சரீரத்துக்கு சுவாசம்தானே உயிரளிக்கிறது? பராசக்தியே ஜீவனின் தேகந்தோறும் சுவாசிக்கிறது. சுவாசத்தை நிறுத்தின பின் பூதவுடல் பிரேதமாகிறது. ஜீவன் இன்னொரு சரீரத்துக்குள் போகிறான். அங்கு பராசக்தி மீண்டும் சுவாசிக்கத் தொடங்குகிறது. இவன் ஏன் இன்னொரு தேகத்துக்குப் போகிறான்? கருமத்தை அநுபவிப்பதற்கு. அப்படி அநுபவிக்க வைப்பதே பராசக்தியின் தர்மம்.

இயற்கையில் இதற்கு இதுதான் விளைவு என்று எல்லை யற்ற விதிகள் மயமாக, தர்ம ஸ்வரூபமாகவே பிரகாசிப்பதல்ல வோ பராசக்தி? இவ்விதிகள் மாற்ற வொண்ணாமல் நடப்பதாலே யேதானே நாஸ்திகர்கள் அவை தாமாக நடப்பதுபோல் பேதலித்து நினைக்கிறார்கள்? இப்படித் தன்னை 'இயற்கை'யில் கட்டிப்போட்டுக் கொண்டதற்கு ஒரு மாற்றாகத்தான் பிராணிகளுக்கு சுதந்திர மனம் மாதிரி ஒன்றைத் தந்து, தன்னிலிருந்து தானே விலகி வேடிக்கை பார்க்கிறது பராசக்தி!

ஜீவன் தப்புச் செய்கிறான், மனத்தின் சுயேச்சை ஆட்டத்தால். இதற்கு எல்லை கட்டாமல் விடுமா, தர்ம ரூபமான பராசக்தி? அதனால்தான் மரணம் என்ற எல்லையைக் கட்டுகிறது. மனிதன் மட்டும் ஒரே சரீரத்தில் சிரஞ்ஜீவியாக வசிப்பானேயாகில் தனக்காகவும், தன்னைச் சேர்ந்தவர் களுக்காகவும் உடைமைகளைப் பெருக்கிக் கொள்வதற்கு அப்போது முடிவே இராது அல்லவா? இந்தத் தேட்டத்தில்

எத்தனை பாவம் புரிவான்? அதனால்தான் மரணத்தையும், பற்பல பிறவிகளையும் வைத்தது பராசக்தி. எல்லாவற்றுக்கும் பலனைத் தருவது போல, இவன் சுயேச்சையாகச் செய்த பாப புண்ணியங்களுக்கும் அததற்கான பலனைத் தந்தாலும் அந்தந்தப் பிறவியிலேயே தராசைச் சரி எடை கட்டி விடாமல், முற்பிறவி வினைகளுக்குப் பிற்பிறவியிலும் பலனைத் தந்தது. இவன் பிரிந்து பிரிந்து காணும் பிறவிகளில் கர்ம பலனைப் பிரிவுபடாத தொடர் இழையாக விட்டுப் பார்ப்பதில் அதற்கு ஒரு வேடிக்கை! புத்திச் செருக்கால் எதையும் அறிய முடியும் என்று நினைக்கிற மனிதனைச் சொந்த விஷயத்திலேயே இப்படிக் கண்ணைக் கட்டிப் போடுவதும் தகுந்த தண்டனைதானே!

ஒரு சரீரத்தைவிட்டு ஜீவனானவன் வெளியேறியபின், இந்த சரீரத்தில் பாப புண்ணியம் செய்த மனம் இன்னொன்றில் புகுகிறது. அங்கு அதே போதில் சுவாசமும் பிறக்கிறது.

இந்த ஜீவமனம் சுவாசம் பிறக்கும் அதே மூலத்தில்தான் உதிக்கிறது. அதாவது மூச்சுக்கும் எண்ணத்துக்கும் வேர் ஒன்றேதான். இங்கு பராசக்தி புரியும் விநோதமே விநோதம்! ஜீவன் தன்னிச்சைப்படி மூச்சு விடாமல், பராசக்தியால் சுவாசிப்பவனாக இருந்தாலும், இவனது மனோ வேகங்களால் அந்த மூச்சும், அந்த மூச்சின் போக்கினால் இவனது மனப்போக்கும் பரஸ்பரம் பாதிக்கப்படுமாறு செய்கிறது. ஆனந்தத்தில் மூச்சு திணறுகிறது; சாந்தத்தில் மூச்சு அடங்கிச் சமமாக, சீராக அமைகிறது; உணர்ச்சிப் பரவசத்தில் மூர்ச்சைப் போட்டால் க்ஷணகாலம் மூச்சே நின்றுபோகிறது.

சகல எண்ணங்களுக்கும் ஆதாரமான மனத்துக்கு ஆதாரத்தை ஞானி எய்துகிறான். சகலச் செயல்களுக்கும் சக்தி தருகிற மூச்சு எந்த வேரில் பிறக்கிறதோ, அதை அடைகிறான் யோகி. சிலர் சுவாசத்தை அடக்குகிற யோகிகளாகிறார்கள்; சிலர் மனத்தை அடக்குகிற ஞானிகளாகிறார்கள். சுவாசத்தை அடக்குகிறவர்களுக்குத் தானே மனம் அடங்குகிறது; மனத்தை அடக்குகிறவர்களுக்கும் தானாகவே சுவாசம் சீர்பட்டு அடங்குகிறது. முடிவில் இருவரும் சமாதியில் ஒரே பிரம்மானுபவத்தை எய்துகிறார்கள்! பற்பலவாகிக் களிக்கிற பராசக்தி இங்கும் இரட்டை மார்க்கத்தைத் திறந்து விடுகிறது!

ஞானசாதகன் மனத்தைத் தன் இஷ்டப்படி இயங்கவிடாமல் இருப்பதே போல், சுவாசத்தை மனத்தின் ஆட்டப்படி பாதிக்கப்

பட விடாதவனே யோக சாதகன். தானாக சுவாசம் எப்படி இயங்குகிறது என்று அறிகிறவன் இவன். அதாவது, அப்படி நினைப்பவன். உண்மையில், 'தானாக' என்று ஏதேனும் உண்டா, என்ன? எல்லாம் பராசக்தியின் செயல்தான்! ஆகக்கூடி, பராசக்தி மனிதமன உலைப்புகளுக்கு ஆட்படாமல் ஜீவனிடம் எப்படி பிராண ரூபமாக இருக்கிறாள் என்பதை அறிய முயல்பவனே யோகி. மனம் ஆடாமலிருந்தால்தான் இந்த சுபாவமான சுவாச நிலை தெரியும். ஆனால் மன ஆட்டத்தை எப்படி நிறுத்துவது? பிராணாயாமம் என்ற சுவாசப் பயிற்சியாலேயே மனம் ஓரளவு கட்டுப்படுகிறது. இப்படி விசித்திரமாகப் பிராணனும் சித்தமும் சேர்ந்திருப்பதை யோக சாதகன் உணர்ந்து அப்பியாசம் செய்கிறான். இதை இவனுக்குச் சொன்னது யார்? பராசக்தியின் கிருபைதான்! சாதனை முதிர முதிர, சுவாச கதி மேன்மேலும் ஜீவமனத்தின் வசத்திலிருந்து விலகி, தன் இயல்பை (அதாவது, பராசக்தியின் நேர் சங்கற்பத்தை) அடைகிறது. சகலப் பிராணனுக்கும் ஆதாரமான பிராணனை அது வந்தடைகிறது. அப்போது அம்மகா சக்தியில் தோய்ந்ததால் அற்புத சித்திகள் இவனுக்கு லபிக்கின்றன. கடைசியில் சுவாசம் நின்று அமரமான ஒரே பிராணனே — உண்மையாம் ஸத்தும், உயிர்-உணர்வாம் சித்தும் ஒன்றிய பிரம்மமே — சுயம் பிரகாசமாக இலங்குகிறது. இவ்வாறே மனத்தின் மற்ற ஆட்டத்தை எல்லாம் தள்ளி, அதன் மூலம் என்ன என்பதிலேயே சித்தத்தை ஆழ வைத்த ஞானசாதகனின் மனம் கடைசியில் அடங்கி, சகல மனங்களுக்கும் ஆதாரமான பராசக்தி மனத்தில் தோய்ந்து அதற்கும் அடிப்படையாய், அடிப் படுகையாய் உள்ள ஸத்-சித் பிரம்மத்தில் ஐக்கியமாகிறது.

மனமடங்கி, மூச்சடங்கி பிரம்மமானவன் அப்படியே இருந்து விடுகிறானா என்ன? வேருக்கு அடியில் போன அவன் வெளியே உள்ள விருட்சத்தைக் காண்பதே இல்லையா? பிரம்ம சாட்சாத்காரத்தில் காண்பவன், காணப்படுவது, காண்கிற செயல் எல்லாமே ஒன்றாகிவிட்டனவே! ஆனால் இதே நிலையிலா இவன் இருக்கிறான்? இல்லை. முதலில் மனித மனம் ஒன்றை சிருஷ்டித்த பராசக்தி, இவனைப் பொறுத்த மட்டில் இப்போது அதைக் கபளீகரம் செய்துவிட்டு, இப்போது இவனுக்கு இன்னொரு அதிசய மனத்தைக் கொடுக்கிறது. அது, அற்புதமான பராசக்தி மனத்தின் தன்மைகளைக் கொண்ட புதிய மனமாகும். அதைச் சாமானிய மனுஷ்யர்களால் புரிந்து கொள்ள முடியாது. மனித மனம் எப்படியிருக்கும் என்று எறும்பினால் புரிந்து கொள்ள முடியுமோ? முடியாதல்லவா? அப்படியே இந்த ஞானி, யோகி பெறும் மனத்தை நம் மனத்தால் புரிந்து கொள்ளவே முடியாது. ஏன், இதைப் பல ஞானியரும், யோகியரும்

புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதுதான் — மறுபடியும் பராசக்தியின் கண்ணா மூச்சி போலும்! இது மட்டுமில்லை. இவ்விரு வழிகளில் ஒன்றின் மூலம் சமாதி எய்தி, பிற்பாடு வெளிமுகப்படுவதாகக் காண்கிற ஒருவன், தனக்கு மனமே இல்லை, தான் அனைத்துமான பிரம்மமே என்றுதான் அநுபவ ஸித்தமாக உணர்கிறான். ஆனால் நாமோ, அவனும் நடப்பதாக வும், பேசுவதாகவும், பல செய்கைகள் புரிவதாகவும்—ஆனால் இவை ஒவ்வொன்றும் தன்னலனுக்காக அன்றி லோக அநுக் கிரகத்துக்காகவே செய்வதாகவும்—காண்கிறோம். அவன் பிரம்ம மாகவே இருக்கிறான் என்றால் நமக்கு சங்கை எழும். 'தன்னைத் தவிர வேறொன்றும் இல்லை என்கிற அநுபவத்தில் இவன் அனைத்துமாக இருந்தால், இவனுக்கு தர்மம் என்றும் அதர்மம் என்றும் பாகுபாடு ஏது? இவன் எதற்காக தர்மத்துக்கு உழைக்கப் போகிறான்? பிறர் என்றும், அவர்களது துயரம் என்றும் எதுவும் காணாத நிலையில் இவன் எதற்காக தீனர்களிடம் இப்படிக் கருணையைக் கொட்டவேண்டும்? எனவே, இவன் அபேதமான ஆத்மாநுபவ நிலையில் இல்லை' என்றே நாம் எண்ணுவோம். ஆனால் அவனோ, இந்தத் தருமப் பணியையும், கருணைப் பொழி வையும் தான் செய்வதாக நினைக்கவே இல்லை. அவனுக்கு ஆத்மாதான் அதற்கு இரண்டாவதாக ஏதும் அற்ற அத்வைத சத்தியமாக அநுபவத்தில் உள்ளது. அதாவது பராசக்தி நம்முள் எப்படி நம்மை அறியாமலே சுவாசம், இதயத் துடிப்பு, ஜீரணம் முதலிய பௌதிகச் செயல்களைச் செய்கிறதோ இவ்விதத்திலேயே யோகி, ஞானியினுள்ளிருந்து அவனறியாமலே தர்மோத்தாரணம், காருண்ய அநுக்கிரகம் ஆகிய மானஸிகச் செயல்களையும் செய்கிறது. என்னே, கண்ணாமூச்சி!

வேத (ஸம்ஹிதை) ரிஷிகள், யாவுமாகிற பராசக்தி உலக வாழ்விலும் தர்ம ரூபத்தில் நன்கு கிரகிக்கும் விதத்தில் மலர்ந்திருப்பதை அநுபவித்து, மனித வாழ்விலும் அந்த தர்மத்தை மலர்த்துகின்ற கர்மங்களைச் செய்தனர். வேதரிஷிகளின் இக-பர பேதமற்ற 'லௌகிக' வாழ்க்கையை அவர்களுக்கு மட்டுமே உரித்தானதாகச் செய்துவிட்டது பராசக்தி. அவர்களுக்கு முன்னும் அப்படி ஒரு மகா சமுதாயம் வர வில்லை; பின்னும் வரவில்லை. ஒரு சில தனிமனிதர்கள் வேண்டுமாயின் அப்படி லௌகிகத்தி லேயே ஆத்மிகமாகயிருந்திருக் கலாம். ஒரு சமுதாயம் முழுவதும் இக-பர பேதம் காணாத அதிசயம் வேறெப்போதும் நடக்க வில்லை. எக்காரணத்திற்காகவோ (பேரறிவின் காரணங்களைச் சிற்றறிவு எப்படி அறிய முடியும்?) இப்படிப்பட்ட தர்ம-கர்ம ஆனந்தநிறைவு வாழ்வை வேத ரிஷிகளின் சமுதாயத்துடன்

முடித்துவிட்டது பராசக்தி. வேத ரிஷி சமூகமே ஒப்பற்ற பக்தி சமுதாயம். உபநிஷத காலத்தவர்கள் வேத கர்ம-தர்ம-பக்தி வாழ்வை உலகுக்கு வலியுறுத்திய போதிலும் இதிலிருந்தும் விடுதலை பெறுவதையே லட்சியமாகவும், அந்த லட்சியத்துக்கு இதுவும் முதலில் உதவும் என்றுமே கருதினர். தர்மம்-அதர்மம் எல்லாவற்றுக்கும் மூலமான கர்மமற்ற சாந்திநிலைதான் அவர்களது லட்சியம். பராசக்திக்கும் அடிப்படையான அந்த சாந்தப் பிரம்மத்திலேயே கரைந்து இந் நிலையை எய்தினர். பக்தன், பக்தி செய்யப்படும் பொருள் என்ற பேதமும் அங்கில்லை. எனவே, உலக வழக்குப்படியான பக்தியும் அங்கில்லை. இவர்களையே 'ஞானி' என்பது பொது வழக்கு. இதன் இன்னொரு கிளையில் தோன்றினான் யோகி.

★ ★ ★

உள்ளே நாம் படிக்கப்போகும் தேவி மான்மியத்தில் மேதஸ் என்ற முனியை ஸுரத மன்னனும், ஸமாதி என்கிற வணிக குலச் செம்மலும் அணுகித் தங்களது மனம் ஏன் கட்டுப்படாமல் மோகத்தில் அலைபாய்கிறது என்று கேட்கப் போகிறார்கள். அப்போது மேதஸ் முனிவர் ஸுரதனிடமும் ஸமாதியிடமும் அவர்களது மனச் சலனத்தின் காரணத்தையும் அதற்கான நிவாரணத்தையும் கூறுகிறார். ''சாதாரண பசு பட்சிகளும், பாமர மக்களும் மட்டுமின்றி, அறிவாளிகளான உங்களைப் போன்றோரும்கூட மோகத்தில் விழுந்து விடுகிறீர்கள். இது மகா மாயையான பகவதியின் லீலை. நீங்கள் மட்டும்தானா? பசு பட்சியைவிட நீங்கள் எத்தனை உயர்ந்தவர்களோ, அந்த அளவுக்கு உங்களையும் விட உயர்ந்த **ஞானிகளின் சித்தத்தையும் அந்த மகாமாயையான தேவி பகவதி பலாத்காரமாக இழுத்து மோகத்தில் செலுத்துகிறாள்''** என்கிறார் முனிவர் மேதஸ்.

ஞானினாம் அபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா ।
பலாத் ஆக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ॥

'ஞானிகள்' என்று அவர் சொல்வதில் யோகிகளும் கூட அடக்கம்தான். ('அறிந்தவன்' என்ற பொருளில் ஞானி எனக் கூறப்படுபவனே அறியாதவனாக மோஹத்தில் விழுவதுதானே விசித்திர சிகரம்? அதனால் 'ஞானி' என்று குறிப்பிட்டார்.)

''ஸப்தசதீ''யாகிய எழுநூறு மந்திரங்களின் சாரமாகக் கருதப்படும் ''ஸப்த ச்லோகீ'' என்னும் ஏழு சுலோகங்களில் இதுவே முதலானது.

இந்த வாக்கை விளக்குவது மிகவும் கடினம். அந்த மகாமாயையையே வேண்டி வேண்டித் தொழுதால்தான்,

இத்தொழுகையில் எத்துணை தூரம் அகங்காரம் கரைகிறதோ, அந்த அளவுக்கு விளக்கம் பெறலாம். இந்தப் பிரயாசையில் தான் இங்கு இறங்கியிருப்பது. தேவியின் லீலா சரிதத்தைப் படிக்க ஆவல் கொண்ட வாசகர்கள், அதற்கு இடையூறாக இப்பகுதி வருகிறதென அலுப்படையக் கூடும் என்பதாலேயே, இந்நூலின் உள்ளே வரவேண்டிய இப்பகுதியை முகவுரையில் சேர்க்கிறேன். இதை முகவுரை என்பதைவிட முக்கிய உரையாகவே எண்ணுகிறேன். துர்க்காதேவியின் திருவிளையாடல்களை உளம் துளும்பிக் கூறும் பரமபக்தர் மேதமுனிவர். அப்படிப்பட்டவருமா, அத்வைத சாஸ்திரக் காரர்களைப்போல் தேவியை அஞ்ஞான-அவித்யா மாயையாகக் கருதுகிறார்? இந்த மகத்தான சங்கையை அவசியம் தெளிவுபடுத்திக் கொள்ளத்தான் வேண்டும்.

புராண இதிஹாஸங்களைப் பார்க்கும்போது ஞானிகளும் கூடத் தங்கள் மகிமை குலைந்து மோகத்தில் விழுகிற நிகழ்ச்சிகள் பலவற்றைக் காண்கிறோம். விசுவாமித்திரர் மேனகையைக் கண்டு மோசம் போனது, துர்வாஸர் கோபத்தினால் அம்பரீஷனிடம் கடுமையாக நடந்துகொண்டு கடைசியில் அவனிடம் தஞ்சம் புகுந்தது, முற்பிறவியில் ஜடபரதர் மான் குட்டியிடம் வாத்ஸல்ய வெறி கொண்டது போன்ற சம்பவங்களைக் காண்கிறோம். ஆயினும் இவர்களும் கூட இச்சம்பவங்கள் நடைபெற்ற சமயங்களில் மகாதபஸ்விகளாக இருந்திருக்கலாமே தவிர, பிரம்மத்திலேயே திளைத்து சகஜ சமாதியில் இருந்திருப்பர் என்று சொல்வதற்கில்லை. எனவே, ஏனைய மானுடரைப் போல் தனி மனத்தின் சாயலும், அதன் பூர்வ வாசனை பலமும் இவர்களையும் அவ்வப்போது ஆட்டி வைத்திருக்கக்கூடும்.

தனி மனிதர்கள் மோகத்தில் விழுவதுபோல் இவர்களும் விழுந்தால், அதை மகாமாயை இழுத்துப் பிடித்துத் தள்ளியதாகச் சொல்வது எப்படிப் பொருந்தும்? மிகவும் துர்ப்பலமான ஜீவர்கள், தாங்கள் இப்படி வழுக்கிவழுக்கி விழுகிறோமே என்று ஒரேயடியாக் மனம் நொடித்து விடாமலிருக்கவே, அவர்கள் வியக்கிற சக்திகளைக் கொண்ட பெரியார்களையும் மகாமாயை இடறிவிழச் செய்தாள் என்று வேண்டுமாயின் கூறலாம். ஆனால் மக்களின் நலனுக்காக இப்படிச் செய்வது காருண்யச் செயலே அன்றி, மாய மயக்கு அல்ல! இதைச் செய்பவளை மாயை எனலாமா?

மேதஸ் 'ஞானிகள்' என்று கூறும்போது பிரம்ம

ஞானியை, அதாவது பிரம்ம சாட்சாத்காரம் எய்தியவனையேதான் குறிப்பிடுகிறார் என்பதில் சந்தேகமில்லை. இவர்களை ஏன் அந்த மகாமாயை என்பவள் மோஹத்தில் தள்ளவேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இது உண்மையாயின், அவள் மகா கொடியதொரு சக்தியாக இருக்க வேண்டும் என்று ஆகிறது.

அது சரி, இந்த மகாமாயை எனப்பட்டவள் யார்? அத்வைதிகளின் ஈச்வரனாகிய பராசக்திதான் அவளா? அல்லது வேறா? வேறு எனில், மகாமாயை எனப்படுபவள் இப்படித் தள்ளுவதைப் பராசக்தி வெறுமே பார்த்துக் கொண்டுதான் நிற்க வேண்டுமா? இதை அவளாலும் தடுக்க முடியாதா என்று கேள்வி எழும். பிரம்மத்தின் சக்தியான பராசக்தியைவிடப் பெரிய சக்தி எதுவும் இருப்பது சாத்தியமே அல்ல என்பது சர்வ நிச்சயம். அந்தப் பராசக்திதான் சம்சார பந்தத்திலிருந்து, மனத்தின் கட்டிலிருந்து ஜீவனுக்கு விடுதலை அளித்து முக்தி தருகிறவள். அந்த நிலைக்கு ஜீவனை உயர்த்துகிறாள் பராசக்தி. ஆனால் இந்த மகாமாயை என்பவள் இப்படி உயர்த்தப்பட்டவனையும் மோகத்தில் தள்ளுவதுண்டாமே! யார் அவள்? அவள் இப்படிச் செய்வதைப் பராசக்தி ஏன் அனுமதிக்கிறாள்?

தேவி பகவதியேதான் அந்த மகாமாயை என்று தெள்ளத் தெளியச் சொல்கிறார் மேதஸ்

பராசக்தி, பராசக்தி என்றும் 'அது' 'அது' என்றும் அஃறிணையாக இதுவரை இங்கு சொல்லிவந்த பிரம்மசக்தியைத் தான் தேவி பகவதி என்பார் முனிவர். பராசக்தியே தான் மாயை என்கிறார் மேதஸ். அவர்கள் வேறு வேறு அல்ல.

'தேவி' என்றால் என்ன? 'பகவதி' என்றால் என்ன?

அசைவற்று, தானான ஒன்றேயாக இருக்கும் பிரம்மத்தை ஆண்பாலாகப் புருஷன் என்றும், சிவன் என்றும்; அசைந்து பலவான உலகுகள்-உயிர்களாகித் தன்னை விளக்கிக் கொள்ளும் அதன் சக்தியைப் பெண்பாலாகப் பிரகிருதி என்றும் பராசக்தி என்றும், தேவி பகவதி என்றும் உணர்ந்தனர் முனிவர் பெரு மக்கள். அப்படி உணர்வித்ததும் அப் பராசக்தியே. ஒன்றாக இருந்து, பலவாகித் தன்னை விளக்கிக் கொண்டவள் அல்லவா? இப்படி விளக்குகிற விளக்குதான் 'தேவி' எனப்படுகிறவள். 'தேவி' என்றால் ஒளியுள்ளவள் என்றே பொருள். இருளில் உள்ள பொருட்களை விளக்கி வைப்பதால் தான் ஒளிக்கு விளக்கு என்று பெயர். பிரம்மம் தன் சக்தியை அறிந்துகொள்ளா மல் இருந்தால், அது நம்முடைய அறிவு இருண்டுள்ள

தூக்கம்போலத்தானே? அப்படிக்கின்றி அது தன் ஆற்றலை அறிந்துகொள்ளும் போது ஒளியாகிறது, விளக்காகிறது, 'தேவி' யாகிறது. தான் அறிந்த இந்த ஒளியையே வெளியில் உலகாக்குகிறது.

'பக'த்தை உடையவள் 'பகவதி'. பகம் என்றால் ஐசுவரியம். ஈவரனுக்கு உரியது எதுவோ, அதுவே ஐசுவரியம். ஈச்வரன் என்பது பிரம்மசக்தியாம் பராசக்தி தானே? எனவே ஈச்வரனுடையவை எனப்படும் ஐச்வர்யம் முழுதும் அந்தச் சக்தியுடையதுதான். ஈச்வர-ஈச்வரி என்பதெல்லாம் ஆளும் சக்தியைக் குறிக்கும். அண்டசராசரங்களை அடக்கி ஆள்வதே ஐசுவரியம்; பகம். 'பகம்' நிறைந்தவளே பகவதி—ஆணாகக் கண்டால் பகவான்.

அடக்கி ஆளும் தன்மை என்று சொன்னால், அது கொடுங்கோலாகவும் தோன்றலாம். இப்படி இல்லை என்பதால்தான் 'பகம்' என்பதற்கு ஆறுவிதமான சம்பத்துக்களைப் பொருளாகச் சொல்கிறார்கள். ஆளும் தன்மைக்கு அடுத்ததாக 'தர்மத்தைச் சொல்கிறார்கள். தர்மத்தில் ஆளுகிறாள் — அதர்மக் கொடுங்கோலின் கீழ் அல்ல. தர்மமானது ஆளப்படுகிறவர்களுக்கும் அரிய நிறைவைத் தருகிறது. எனவே அவர்களும் ஆளுகிறவளை வாயாரப் புகழ்ந்து துதிக்கிறார்கள். இப்போது மூன்றாவது 'பக'மாக 'கீர்த்தி' சேருகிறது. இந்தக் கீர்த்தியில் அவளது குண சம்பத்துக்களை எல்லாம் பாராட்டுகிறார்கள்; அண்ட பிண்டங்கள் அனைத்தும் அவளுடையதே அல்லவா, அவளே அல்லவா என்று போற்றுகிறார்கள். இப்போது இந்த சகல சராசர சம்பத்துக்களான 'செல்வ'மும் நான்காவது 'பக'மாகிறது. செல்வம் படைத்தவர்களுக்கு, உடனே அதை மனம் போனபடி துஷ்பிரயோகிக்கும் கொழுப்பும் உண்டாகிவிடுமே! ஆனால் இத்தனை செல்வமும் படைத்த ('படைத்த' என்றால் 'சிருஷ்டித்த' என்றே இவள் விஷயத்தில் பொருள் கொள்ளலாம்.) பகவதி, மனம் போனபடி அண்டாண்டச் செல்வங்களை ஆட்டி வைப்பதில்லை — ஏராளமான விதிகளைப் போட்டு அவற்றின்படியே அண்டசராசரங்களைக் கற்பகாலமாக இயக்கவிட்டு, தான் அவற்றைச் செய்வதாகக் கூடக் காட்டாமல் ஒதுங்கியிருப்பதுபோல் இருக்கிறாள். இதைப் பார்க்குமிடத்து இவளிடத்தில் எத்தனை வைராக்கியம் குடிகொண்டிருக்கிறது என்று வியக்கத் தோன்றுகிறது. 'வைராக்கியமே' இவளது ஐந்தாவது 'பக'மாகிறது. ஆனால் இந்த வைராக்கியம் பௌதிக, ஜடப்பிரபஞ்சத்தின் விஷயத்தில்தான்.

ஜடப்பிரபஞ்சத்துக்கு மனம் இல்லை. மனம் இருந்தால்தான் அன்பு பிறக்கும். காய் பழமாகும்போது சிவப்பது போல் மனம் முதிர்ச்சிபெறும்போது அன்பு மயமாகிறது. அன்புதான் மனத்தின் சிவப்பு. 'செம்மை' 'செவ்வியது' என்றெல்லாம், தமிழில் பக்குவ முதிர்வைச் சொல்கிறோம் அல்லவா? ஸம்ஸ்கிருதத்தில் 'ராகம்' என்றால் 'சிவப்பு' என்று பொருள்; அன்பு என்றும் பொருள். அன்பு செவ்விய வஸ்து. ரக்தம் — ரத்தம் என்பது ராகத்திலிருந்து வந்ததுதான். சிவப்பு இல்லாவிட்டால் விரக்தம் — விரக்தி; விராகம் — வைராக்கியம். அன்பு செய்யும்போது, தான் செய்கிறோம் என்ற அஹங்காரம் விலகிப் போய்விட்டால் அதுவே வைராக்கியம். அன்பு தன்னலம் கருதாமல், பிறர் நலனே கருதுவது. அது ஒருபோதும் விலகிப் போக வேண்டியதில்லை. ஞானிகள் விஷயத்திலும் கூட அவர்களாக அதைப் போக் கடித்துக் கொள்வதோ, வேண்டும் என்று பிடித்து வைத்துக் கொள்வதோ இல்லை. ஆனால் ஞானிகள் சுயநலப் பாசங்களை விட்டவர்கள். 'வைராக்கியம்' என்று இவர்கள் விஷயத்தில் சொல்வது சுயபாச நீக்கத்தைத்தான் — அன்பின் அழிவை அல்ல, ஆனால் பொதுவில் அன்பு உள்பட எல்லா உணர்வும் மரத்து விடுவதையே வைராக்கியம் என்கிறோம். அன்பையும் துவேஷத்தையும் உணரமுடியாத ஜடப் பிரபஞ்சத்தின் விஷயத்தில் பகவதி இந்த அர்த்தத்தில் வைராக்கியமாக இருப்பது சரிதான்! ஆனால் அவற்றைப் போலன்றி, மனத்தோடு செயல்பட்டு அந்த மனத்தின் சுதந்திரத்தினாலேயே மனிதனுக்குரிய தர்மநியதிகளிலிருந்து விலகுகிற ஜீவப்பிரபஞ்சத்தின் விஷயத்திலும் இவள் மரத்துப் போனது போல் வைராக்கியத்துடன் இருந்து விட்டாலோ? இவர்களுக்கு உய்வு என்பதே இல்லாமல் அல்லவா போகும்? எனவே, தன்னிடமிருந்து விலகிப் போகத் தன்னாலேயே சுதந்திரம் தரப்பட்ட ஜீவராசிகளின் விஷயத்தில் இவள் வைராக்கியத்தைத் தள்ளி, ராகமயமாக, கருணாமயமாக அநுக்கிரகம் செய்கிறாள்; உய்வு தருகிறாள்; மோக்ஷத்தில் சேர்க்கிறாள். அவளேதான் அம் மோக்ஷநிலை. ஆறாவது பகம் இம் மோக்ஷமே.

மனத்தின் அதர்ம ஆட்டத்திலிருந்து விடுபட்டு தார்மிக உலகையே பேரின்ப வீடாய்க் காணும் மோக்ஷ நிலையை வேதரிஷிகளுக்குத் தந்தாள். அதர்மத்தோடு தர்மத்தையும் கடந்து மூலத்துக்குப் போய் அங்கேயே கரைந்து கிடக்கிற மோக்ஷத்தை உபநிஷத ரிஷிகளுக்கு அளித்தாள். வேதரிஷிகள் கர்மத்தில் இருந்து கொண்டே தர்மத்தைச் செய்து அதில் மோக்ஷம்

கண்டார்கள். உபநிஷத ரிஷிகள் கர்மத்தை விட்டு தர்மாதீதமான ஞானத்தில் திளைத்து மோக்ஷம் கண்டார்கள்.

இதோடு மூன்றாவதாக, பக்தி என்பதன் மூலமும் மோக்ஷ சுகம் தருகிறவள் பராசக்தி. வேதரிஷிகள் பிரம்மசக்தியிடம் பேரன்பு கொண்டவர்கள். இதுவே பக்திதான் என்றாலுங்கூட, பிற்கால 'அசல்' பக்தி மார்க்கக்காரர்களோடு இவர்களைச் சேர்ப்பதற்கில்லை. ஏனெனில், பிரம்மசக்தி பலவித இயற்கைச் சக்திகளாக வருவதைக் கண்ட வேத காலத்தவர்கள், இந்த இயற்கைச் சக்தி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனி வடிவில் கண்டு (இவ்வடிவம் ஒவ்வொன்றும் ஒரே பராசக்தியின் தோற்றங்களே என்பதை உன்னி உணர்ந்திருந்தும்கூட) அந்தந்தத் தனி வடிவத்துக்கென தனிப்பட்ட மந்திரமும், வேள்வியும் கொண்டே வழிபட்டனர். பலவும் ஒன்றே என்று அறிந்தவர்களாயினும், தனித்தனித் தர்மத்தோடு பலப்பலவாகக் காணும் மகாமதியிடம் உள்ள மதிப்புக் காரணமாக, அந்தத் தனி தர்மங்களைக் கொண்ட தேவ சக்திகளைத் தனித்தனியாகவே வழிபட்டுத் தம்மோடு பிணைத்துக் கொண்டு ஆனந்தித்தவர்களே வேதரிஷிகள். இதோடு இவர்களது பக்தி நிற்கவில்லை. தனி மனிதனுக்கு உள்ள தர்மங்கள், குடும்ப தர்மம், லோக தர்மம் ஆகியவற்றை அவர்கள் பக்தியோடு வழிபட்டு நடத்தியதே வைதிக கர்மங்களாக அமைந்தன. தன்னிலும், குடும்பத்திலும், நாட்டிலும், உலக சமுதாயத்திலும் தேவசக்திகளையே விதம் விதமாகக் கண்டு விதம் விதமாக அவற்றைத் திருப்தி செய்தனர். அனைத்தும் ஒன்றே என்ற அடிப்படை ஞானத்தோடு அதன் பல்வேறு தேவ வடிவுகளிடம் பக்தி பொழிந்து, மனித தர்மத்தில் இன்புற்றுக் கர்மம் புரிந்த ஞான-பக்தி-கர்மக் கலவை வேத சமூகத்துடையது.

ஆனால், இவ்விதம் வழிபடு பொருளைப் பல தெய்வங்களாகக் காணமுடியாத ஒரு பக்தி உண்டு. ஒரே ஒரு கடவுளிடம் செலுத்துகிற பக்தியே அது. பிற்கால 'அசல்' பக்தி சகாப்தம் இவ்வாறு பக்திப் பிரேமை செலுத்தியவர்களாலேயே உருவாயிற்று. மூலம் என்ன என்று உபநிஷத ரிஷிகள் அறிய முயன்றது போல் இங்கே ஆராய்ச்சி எதுவும் இல்லை. இயல்பாகப் பொங்கும் அன்பை அந்த மூலத்திடம் கொட்டினார்கள், பக்தசிகாமணிகள் — அதாவது அப்படிக் கொட்ட வைத்தாள் பராசக்தி.

வேதரிஷிகள் தர்மத்தில் ஆனந்தித்து பொறி புலன்களையும்

மனத்தையும் தர்மமான கர்மத்திலேயே செலுத்தியதுபோல், அதற்கப்புறம் வேறெந்த முழு சமூகத்தையும் ஏனோ அவள் படைக்கவில்லை என்று முன்னரே கூறினோம் அல்லவா? அதற்கப்புறம் வந்தவர்களுக்கெல்லாம் லௌகிக வாழ்விலும்கூட மனத்தை-இந்திரியங்களை, தர்மத்திலேயே செலுத்திக் கொண்டிருக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏனோ இழக்க வைத்தாள்! உலக வாழ்க்கையில் மனம் இடக்குத்தான் செய்யும், அதர்மத்தில் பாயும் என்பதால் மனத்தையே தொலைத்துத் தலை முழுகுவதற்கு முயன்றார்கள், பிற்கால ஞான மார்க்கக்காரர்கள். இப்போது கர்மத்துக்கும் ஞானத்துக்கும் இடைநிலையில் பக்தி மார்க்கத்துக்கு எழுச்சி தந்தாள் பகவதி.

தர்மப்படி தாங்கள் வாழ்வதற்காக உலகைத் தங்களுக்குப் பராசக்தி தந்திருக்கிறது என்ற அசைக்கவொண்ணாத அடிப்படையில் லௌகிகத்தை வெறுக்காமலே, ஏற்று வாழ்ந்தவர்கள் வேத ரிஷிகள். ஆனால், பிற்பாடு வந்த பக்தர்களுக்கு இத்தனை தர்மத்துடன் லௌகிக வாழ்வு நடத்த இயலவில்லை. லௌகிகம் என்று வந்துவிட்டால் அதில் அகங்கார சுய பாசங்கள், அதர்மம், பாபம், தூய்மைக் குறைவு எல்லாம் வரத்தான் செய்தன. எனவே வேத ரிஷிகள் போல், 'உலகம் தங்களுக்காகப் பராசக்தி அளித்தது' என்று இவர்களால் பாவித்து, ஜீவித்து, ஆனந்திக்க இயலவில்லை. எனினும் பராசக்தியிடம் அன்பு செலுத்த வேண்டுமென்பதால் மனமே வேண்டாம் என்று இவர்கள் ஒதுக்கவுமில்லை. சிற்றின்பங்களுக்காக இல்லாத இந்த உலகமும் உணர்வுகளும் பராசக்தியுடையதே என்பதை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். உலகை மறந்து, பிரம்மத்தின் அமைதியில் தோய விரும்பினான் ஞானமார்க்கி. உலகிலேயே பாபம் கலக்காத புனித தர்மத்துடன் வேதரிஷியினர் சகல துறைகளிலும் இன்பமாகக் கர்மம் புரிந்தனர். ஞானியின் மகா அமைதி, கர்மியின் ஓயாத உற்சாகச் செயல் இரண்டுக்கும் இடையில் இந்த அமைதியிலிருந்து பிறந்த காரிய உலகில் பராசக்தியின் அழகை, ஆனந்தத்தை, அன்பை நாடினர் பக்திமார்க்கக்காரர்கள். கோரமும் துன்பமும் துவேஷமும் கூட அதே பராசக்தியிடம் பிறந்தவைதாமெனினும், இவை புலன் வழியேபோகிற சுய பாசமனத்துக்குத்தான் உரமிடுமாதலால், தங்களுக்கென்று லௌகிக சுகங்களை நாடாத பக்தர்கள் அழகு, இன்பம், அன்பு ஆகியவற்றையே நாடினர். ஆனால் நாட்டத்தின் முதிர்ச்சியில் கோரமும் துன்பமும் துவேஷமும் கூட பராசக்தியின் லீலாவடிவமாகவே அவர்களுக்குத் தெரிந்தன.

பக்தி என்கிற அன்பைச் செய்ய மனம் வேண்டும். இந்த

மனம் அதர்மத்தில் போகாமலிருப்பது எப்படி? அதுவும் அன்பு செய்வதால்தான்! அன்பு தவிர வேறேதுவும் நினைக்க வொட்டாமல் பராசக்தியிடம் அன்பையே செய்து கொண்டிருந்தால், அதர்மத்தை நோக்கிச் செல்ல மனத்துக்கு அவகாசம் ஏது? இந்த ஓயாத அன்பு நிலையில் தர்மம் என்று ஏதோ ஒன்றைப் பற்றி எண்ணி, அதைச் செய்யவும் மனத்துக்கு அவகாசம் இல்லை. ஆனாலும் ஞானியின் மூலம் — அவன் அபேட்சியாமலே — பராசக்தி தர்மத்தைப் பிரசாரம் செய்ததுபோல பக்தனின் மூலமும், அவன் அறியாமலே, தர்மத்தைச் செய்தாள். ஞானிக்கு ஏதோ ஓர் அற்புதமான மனத்தைத் தந்ததுபோல் பக்தனுக்கும் தந்தாள். அதில் காருண்யமே பிரதான ரஸமாக வெளியே வழிந்தது. உள்ளுக்குள்ளேயோ பக்தியே நறுஞ்சாறாகப் பெருகியது. ஞானி நிர்குணமான ஆத்மாவில் திளைத்துக் கொண்டே லோகாநுக்கிரகம் செய்வதுபோல், பக்தன் ஆனந்த கலியாண குண நிலயமான பராசக்தியிடம் பக்தி செலுத்திக் கொண்டே உலகுக்கும் அருள் புரிந்து கொண்டிருக்கிறான்.

'தேஹளீ தீப நியாயம்' என்று சொல்வர்—'இடை கழியில் வைத்த விளக்குப் போல' என்று அர்த்தம். அதன் வெளிச்சம் வீட்டு வாசலிலும் படும்; வீட்டுக் கூடத்துக்குள்ளும் வீசும். இப்படிப்பட்ட தீபமாக ஞானியும் பக்தனும் தன்னுள் முறையே பரப்பிரம்மத்தையோ பராசக்தியையோ அநு பவித்துக் கொண்டே வெளி உலகை அநுக்கிரகிப்பான். ஞானி பரப்பிரம்மத்தை இரண்டற அநுபவிக்கிறான். பக்தன் பராசக்தியைச் சிறுச்சிறிதே பிரிந்திருப்பதுபோல் விலகி யிருந்து அன்பு செய்வான். அந்தப் பராசக்தியின்றி எதுவும் இல்லை என்று இந்தப் பக்தனுக்கு நன்றாகத் தெரியும். எனவே, தானும் அப்பராசக்தியின் ஒரு தோற்றமே என்பதை அறிவான். என்றாலும், பராசக்தியின் அனந்த கோடிப் படைப்புக்களுள் மிக மிக சௌந்தரியமான படைப்பு அன்பே என்று இவன் கண்டிருப்பதால், இந்த அன்பைச் செலுத்தவும் பெறவும் இருவர் தேவைப்படுகிறது என்ற காரணத்துக்காக, பராசக்தியிடமிருந்து இரண்டாமவனாகக் கொஞ்சம் பிரிந்து நின்றே பக்தி செய்கிறான்.

அன்பு என்ற ஒன்றைப் படைத்து விட்டு, ஜீவன் அதை அள்ளிச் செலுத்துமாறும் செய்த பராசக்தி அதை வாங்கிக் கொள்ளாமல் இருக்குமா? தானும் பிரதியாகப் பலவிதங்களில் அன்பு செய்து மகிழாமலும் மகிழ்விக்காமலும் இருக்குமா?

அன்பு செய்கிற தனக்கும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய ஓர் ஒப்புயர்வற்ற அநுபவத்தைப் பராசக்தி ரசிக்காமலிருக்குமா? எனவே, பக்தரிடம் அதுவும் அன்பைக் கொட்டுகிறது; ஆனந்தமாக விநோதங்கள் செய்கிறது! விசித்திரமாக, ஏன், சிற்சில சமயங்களில் புத்திக்கு விபரீதமாக, விரோதமாகக் கூடத் தோன்றக்கூடிய லீலைகளைச் செய்கிறது! புத்திக்கு அவை எப்படித் தெரிந்தாலும், அதைப் பற்றி இங்கு கேள்வியே இல்லை. பக்தி உள்ளத்துக்கு அத்தனையும் அன்பாகவே தெரியும். அன்பாக இருப்பதற்கு புத்திபூர்வமாக என்ன காரணம் சொல்ல முடியும்?

அன்பான லீலைகளைச் செய்வதற்கு மனம் மட்டுமின்றி கர-சரணாதி அவயவங்களும் கொள்ளலாம். எனவேதான், பக்திக்கு லட்சியமாகிறபோது, பராசக்தியானது, பல தேவதா ரூபங்களைத் தாங்கி வருகிறது. சாதாரண மானிட சரீரம்போல் தோன்றினாலும், அது தத்துவமயமான ஸ்வரூபமாக இருக்கிறது. பக்தனின் பாவத்துக்கு ஏற்ப அது ஒவ்வொரு வடிவு கொள்ளும்போதும், அதன் நிறம், வடிவமைப்பு, அதற்குள்ள ஆயுதங்கள், வாகனங்கள் யாவும் அழகாக அமைவதோடு, இது ஒவ்வொன்றாலும் தத்துவத்தையும் சேர்த்தே பக்தனுக்கு உணர்த்துகிறது. முதலில் இந்தத் தத்துவங்களை அவன் ரசிக்குமாறு செய்து, முடிவில் ''என்ன தத்துவமாயின் அதனாலென்ன? நீ அன்பு — அன்பு — அன்புவடிவம். அதற்கு மேல் எந்தத் தத்துவமும் இல்லை'' என்று கனிய வைத்து அவனைப் பரம எளிமையாக ஆக்குகிறது. மனித மனத்தைத்தான் எப்படி யெல்லாம் விட்டுப் பிடிக்கிறது, தயாள பராசக்தி! பக்தி மார்க்கத்தில் இறங்கினவனுக்குக்கூட ஆரம்பத்தில் புத்திப் பெருமை அடியோடு போகாது என்பதால்தான் தத்துவங்களைக் காட்டி அவனைத் திருப்திப்படுத்துகிறது!

இப்படியேதான் கர்ம மார்க்கத்திலும் ஞான மார்க்கத்திலும் போகிறவர்களுக்கும் தங்கள் தங்கள் வழிபற்றி ஏற்படுகிற செருக்கைக்கூட எத்துணையோ தூரம் மன்னித்து அதற்கெல்லாமும் ஈடு கொடுத்து, திருப்திப்படுத்திக் கடைசியில் அவர்களையும் எந்தவிதமான அகங்காரப் பற்றும் — தங்கள் மார்க்கத்தின் மீதான பற்றுங்கூட — இற்றுப்போகச் செய்து, முற்றிய முக்தி நிலையைத் தருகிறது.

இங்கு கர்ம மார்க்கம் பற்றிப் பார்ப்போம். வேதரிஷிகளுக்கும் பிற்கால பாரதத்தின் கர்ம மார்க்கக்காரர்களுக்கும் மிகுந்த

மாறுபாடு உண்டு. பிற்பட்டவர்களில் ஒரு சாரார், கடவுளை மறுத்து கர்மமே பலன் தருகிறது என்று கூறியவர்கள்! இன்னொரு சாரார் கர்மத்தை கீதை வழியில் யோகமாக செய்தவர்கள். அதாவது, பலனில் இச்சை இல்லாமல், சமுதாய வாழ்க்கை சீராக அமைய வேண்டும் என்பதற்காகவே, சுயபாசம் இல்லாமல் பரம த்யாகி களாக கர்மங்களைப் புரிந்தனர். வேதரிஷிகளுக்கு கர்மத்தில் இருந்த விந்தைக் கிளுகிளுப்பும், குழந்தைக் குதூகலிப்பும், வெள்ளையான இன்ப ரஸனையும் இவர்களிடம் இல்லைதான். மனம் இந்திரிய வழி போகாமல் மரத்துப்போவதற்கே — அதை சுத்தீகரிப்பதற்கே — இவர்களது கர்மயோகம் பயனாயிற்று. இவர்களுக்குக் கர்மத்தில் முக்தி இன்பம் இல்லை. பற்றற்ற கர்மத்தினால் முக்தி இன்பத்துக்கு முயன்றார்கள் — அவ்வளவே! சுயநலமே இல்லாமல் இவர்கள் வாழ்வு நடத்தியதை மெச்சிப் பராசக்தி இவர்களை ஞானியராக்கி பிரம்மத்தில் கரைத்து முக்தி தந்தது — அல்லது பக்தர்களாக்கி பராசக்தியின் நிரந்தர அன்பாம் முக்தியைத் தந்தது. (கர்மபலனை அநுபவிக்கவே பிறவி லபிக்கிறது. இவர்கள் பலனைக் கருதாமல் கர்மம் செய்ததால் பிறவி எடுப்பதற்கில்லை. ஆனால் அது சூன்ய நிலையாகவா இருந்திருக்கும்? பிரம்ம நிர்வாணமாகவோ, பக்தி சாம்ராஜ்யமாகவோதானே இருக்க வேண்டும்?)

சம்ஸாரத்திலிருந்து தப்பிச் சாசுவதமாக இன்புற்று இருக்கிற நிலைதான் முக்தி. ஞானி பிரம்மத்தில் கரைந்து முக்தி பெறுகிறான். பக்தனின் முக்தி யாது? பக்தர்களின் இந்தப் பிறவி முடிந்த பின்னர், அவர்களது ஜீவனைப் பராசக்தி அவர்கள் வழிபட்ட பல்வேறு தெய்வங்களுக்குரிய பல்வேறு லோகங்களில் ஒன்றுக்கு அழைத்துச் சென்று அங்கங்கே அந்தந்த மூர்த்தி மூலம் சாசுவதமாக லீலானந்தமும், பிரேமானந்தமும் தருகிறாள். சாமானிய மக்களுக்கு பூவுலகம் இருப்பது மெய் என்றால், அவ்வளவு மெய் பக்தர்களுக்கு இந்த தேவதா உலகங்களும். ஆனால், பூவுலகிலுள்ள துன்பக்கலப்பு அங்கு இல்லை. ஏனெனில் அங்கு செல்கிற பக்தர்களுக்குத் துன்பத்துக்குக் காரணமான மனவிகாரங்களே இல்லை. அவர்களது பிரேம மயமான மனங்களுக்கு ஏற்ற சாசுவதப் பிரேமை மட்டும் அவ்வுலகில் நிலவும்.

இந்த தெய்வ லோகத்திலிருந்து விடுபட வேண்டும் என்று அவர்கள் எண்ண வேண்டியதுமில்லை. அஞ்ஞானிகள் முடிவேயில்லாமல் ஜனன-மரணங்களுக்கு ஆளாகி, சம்ஸாரத்தில் உழன்று கொண்டே இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்

கொள்கிறவர்கள், இவ்வாறே பக்தர்களும் முடிவேயில்லாமல் தங்களது இஷ்ட தேவதையுடன் இன்ப லோகத்தில் வாழ்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்வதில் தடை ஏதுமில்லை. இஷ்ட தெய்வத்தோடு இணைந்து வாழும் அந்த இன்பு-அன்பு நிலையிலிருந்து விடுபட வேண்டும் என அவர்கள் எண்ண வேண்டியதுமில்லை. எனவே, இதுவே அவர்களுக்கு மோக்ஷ நிலை.

இவ்விதத்தில் அன்பும் இன்பமும் கலந்த பக்தி மோக்ஷமும், இவ்விரண்டும்கூட அநுபவிப்பவனுக்குப் பிரிந்திராமல் சாந்தியில் ஒன்றாகிவிட்ட அத்வைத ஞான மோக்ஷமும் தருகிறவள் பராசக்தி. ஆறாவது பகமாக, இறுதி பகமாக இந்த ''மோக்ஷ'த்தையே வைத்திருக்கிறது.

இப்படிப்பட்ட மோக்ஷதாயினியைத்தான் மேதஸ் மோஹதாயினியாகச் சொல்கிறார்! மோக்ஷத்தை எய்திய ஞானியையும் மோஹத்தில் பலவந்தமாக இழுத்துத் தள்ளுகிறாள் என்கிறார். அவள் ஏன் இவ்விதம் செய்கிறாள் என்றால், ''அவள் மகா மாயை! அதனால் இப்படிச் செய்கிறாள்'' என்கிறார்!

மாயை என்றால் என்ன? மோசடி செய்வது என்று அர்த்தம். மோசடி என்ன? இல்லாததை இருப்பதாகக் காட்டுவது. யா-(எவள்) எது; மா-இல்லையோ, அதுவே மாயை.

நிலையில்லாத உலகை நிலைபோலக் காட்டுகிறவளே மாயை. உலகத்தில் எல்லாம் மாறிக் கொண்டேயிருக்கின்றன. வயது ஏற ஏற மனிதன் மாறிக் கொண்டேயிருக்கிறான். இன்றைக்குப் பன்னிரண்டாண்டுகளுக்குப்பின் நமது தேகத்தில் உள்ள ஒரு 'ஸெல்'கூட இன்று நமக்கு இருப்பதல்ல என்கிறார்கள்! இவனது மனமும் மாறிக் கொண்டிருக்கிறது. செடி கொடிகள் தோற்றத்தில் மாறியபடி இருக்கின்றன. மற்ற ஜீவராசிகளும் அப்படியே. ஜட உலகமும் க்ஷணம்கூட மாறாமல் இருப்பதில்லை. கடல் நீர் மேகமாகிறது. அந்த மேகம் நானா ரூபங்களாக விநாடிக்கு விநாடி மாறுகின்றது. மழைக்காலம், குளிர்காலம் வேனிற்காலம் என்று பருவங்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன. இரவு, பகல் என்கிற மாற்றமோ தினமும் நிகழ்கிறது. ஒரு காலத்தில் சமுத்திரமாக இருந்த இடம் இன்று உலகிலேயே பெரிய பாலையான ஸஹாராவாகியிருக்கிறது. ஒரு காலத்தில் கடலாக இருந்த பகுதி இன்று உலகிலேயே உயர்ந்த இமாலயமாக மாறியிருக்கிறது. அண்ட கோளங்களிலும் எத்தனையோ மாற்றங்கள்.

'மாறுவது' என்கிற போது ஒன்று பழைய உருவில் இல்லாமற் போகிறது — பழைய வடிவம் சாகிறது; புதிய உருவம் பிறக்கிறது. ஆனால், இல்லாமல் போகிறது என்பதைக் கவனியாமல் எல்லாம் அப்படி அப்படியே இருப்பதுபோல் நினைத்துக் கொண்டிருக்கிறோம். கடைசியில் ஒரு நாள் இந்தச் சரீரமே இல்லாமற் போகப் போகிறது என்பதை மறந்து, அது இருந்து கொண்டே இருப்பதுபோல் எண்ணி வாழ்வை நடத்துகிறோம்.

இத்தனை கோடி ஜீராசிகளும் இப்படி நிலையில்லாததை நிலையாக நினைக்கிறார்கள் என்றால், அது அவரவரும் தானாக ஏற்படுத்திக் கொண்ட பிரமையாக இருக்க முடியாது. அனைவர்க்கும் பொது மூலமான பராசக்தி தான் இந்த பிரமையை உண்டாக்கியிருக்கிறாள் என்பது தெளிவு. அதனால்தான் அவள் மாயை.

நிலையாக இல்லாததை அவள் நிலைத்திருப்பதாகக் காட்டுகிறாள் என்று இங்கு சொல்கிறோம். ஆனால், அடியோடு இல்லாததை அவள் இருப்பதாகக் காட்டுகிறாள் என்பது அத்வைத வேதாந்திகளின் கருத்து. இந்த வேதாந்திகள் பரம ஞானத்தை எய்தி பிரம்மத்தோடு பிரம்மமாக ஐக்கியப்பட்ட நிர்விகல்ப சமாதி நிலையில் உலகம், உணர்வு எதுவும் அவர்களுக்கு அடியோடு இல்லவே இல்லை. எனவே அவர்கள் சமாதிக்குப் பிற்பட்ட வ்யுத்தானம் என்று சொல்லப்பட்ட வெளிப் பிரக்ஞை போன்றதொரு நிலைக்கு வரும்போது, ''இப்போது வெளியில் தெரிவது எதுவும் முக்தி நிலையில் இல்லவே இல்லை; அடியோடு இல்லாதவை அல்லவா இருப்பதாகத் தெரிகின்றன?'' என்று எண்ணுகிறார்கள். விவகார சத்தியம் என்பதாக தாற்காலிக உண்மையாகக் காணப்படுகிற பிரபஞ்சம், இல்லாத ஜலமே கானல் நீராகத் தெரிவது போலத்தான் என்று இவர்கள் கருதுகிறார்கள்.

எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். நிலையில்லாததை நிலை என பிரமிக்க வைப்பதாக இருந்தாலும் சரி, அடியோடு இல்லாததை உள்ளதாகக் காட்டி மயக்குவதாக இருப்பினும் சரி — இரண்டும் மோசடிதான்.

பராசக்தி ஏன் மோசடி செய்கிறாள்? அதுவும் யாரோ சிலரை, ஏதோ சில காலத்துக்கா மோசடி செய்கிறாள்? கல்ப கல்பாந்தரங்களாக, எண்ணவே முடியாத ஜீவராசிகளை மோசடி செய்து, மகாமாயை என்றே அல்லவா பெயர் வாங்கியிருக்கிறாள்! ஏன்?

ஏன் மோசடி செய்கிறாள் என்பதற்கு முன் யாரை மோசடி

செய்கிறாள் என்பதை மீண்டும் பார்ப்போம். அனைத்து ஜீவராசிகளையும்தான்! ஆனால், இந்த ஜீவராசிகள் என்பவர்கள் இறுதியில் யார்? இவர்களும் அவளேதான்! பிரம்மத்தைத் தவிர, பிரம்மத்தின் சக்தியைத் தவிர பிறிதாக ஒன்று உண்டோ? அவ்வாறெனில் பிரம்ம சக்தியேதான் இத்தனையாகவும் தோன்றுகிறது என்பதில் அணுவளவும் சந்தேகமே இல்லை. ஆத்மஞானியின் வார்த்தையை நம்ப முடியவில்லை என்றாலும், அணு விஞ்ஞானியின் வார்த்தையை நம்பித்தான் ஆக வேண்டும். வேறு வேறாகத் தோன்றும் பிரபஞ்சத்தின் சகல வஸ்துக்களும் ஒரே சக்தி (Energy) யின் பலவித ரூபங்கள்தான் — எல்லாம் ஒரே எலெக்ட்ரோ-மாக்னெடிக் கரன்ட் தான் என்று அணு விஞ்ஞானிகள் ஐயமறச் சொல்கிறார்கள்.

உண்மையில், சிருஷ்டி என்பது பராசக்தியின் வெறும் எண்ணங்களே அன்றி வேறில்லை. இந்த பௌதிகப் பிரபஞ்சம் இத்தனை ஸ்தூலமான பொருட்களுடன் இருக்கின்றனவே, இவற்றை எதைக் கொண்டு பராசக்தி சிருஷ்டித்தது? வேறு ஏதோ மூலப் பொருளைக் கொண்டு படைத்தது என்றால் அந்த மூலப்பொருள் எங்கிருந்து வந்தது? இப்படிக் கேட்டுக் கொண்டே போனால் பராசக்தியிலிருந்தேதான் இத்தனையும் வந்தது என்றாகும். பராசக்திக்கு வெளியே இருந்து இவை வரவில்லை. உள்ளுக்குள்ளேயே இருந்தன என்றால், இவை பராசக்தி என்கிற பிரம்ம மனத்துள் இருந்தவை என்றே அர்த்தம். மனத்துக்குள் என்ன இருக்கும்? எண்ணங்கள்தான் இருக்கும்! நம் மனத்துக்குள் எண்ணம்தான் உள்ளதே ஒழிய ஸ்தூலப் பொருளா உள்ளது! எனவே பராசக்தியின் எண்ணமே தான் நாம் பார்க்கும் ஸ்தூலப் பிரபஞ்சமாகவும் உருக்கொண்டது என்பதில் ஐயமில்லை. எண்ணம் என்பது மனிதனின் சிந்தனையாக இருக்குமளவுக்கு 'ஒன்றுமே இல்லாத விஷயம்'தான். 'வெறும் எண்ணம்தான்' என்கிறோமல்லவா? 'வெறும் செயல்' என்று சொல்வதில்லையே! இதனாலேயே பிரம்ம சக்தியின் எண்ணங்களையும் ஒன்றுமேயில்லாத, அடியோடு இல்லாத மாயையாக அத்வைதிகள் சொல்கிறார்கள். அதற்கேற்க, அந்தப் பராசக்தியும் தன் எண்ணங்களை அடியோடு இல்லாமல் உள்வாங்கிக் கொண்டு இவனை அந்த உட்சாந்தத்தில் கரைக்கிறது. ஸ்தூலமில்லாத, அரூபமான அலை (Wave) தான் ஜடப் பொருள்களாகவுள்ள ஜகத் காரணம் என்றே விஞ்ஞானிகளும் கூறுகின்றனர். இந்த அலைக்கும் அடிப்படை பராசக்தியின் எண்ணம், அல்லது சங்கற்பம். இந்த அலை நீளத்தைக் கிரகிக்கும் சக்தி பெற்ற சித்தர்கள், மின்சாரமான சப்த அலைகளைப்

பிடித்து மீண்டும் சப்தமாக மாற்றும் ரேடியோ போல், தங்கள் எண்ணங்களாலே வஸ்துக்களைச் சிருஷ்டிக்கிற அற்புத சித்தி பெறுகிறார்கள்; அவ்வாறே ஸ்தூலமான உடலை ரூப அலையாக்கி எங்கு வேண்டுமாயின் தடையின்றிச் சென்று அங்கு மீண்டும் உடலை அமைத்துக் கொள்கிறார்கள். ஆகக்கூடி பிரபஞ்சம் முழுதும் பராசக்தியின் எண்ணம்தான். ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்ற பெரிய விஞ்ஞானி, "The universe seems to be nearer to a great thought than a great machine" என்கிறார். அப்படி எண்ணுகிற பேரறிவு ஒன்றே உண்மையான ஏகம்.

மோசடி செய்கிற பராசக்தியே மோசடி செய்யப்படுகிற ஜீவராசிகளாகவும் இருக்கிறாள். தன்னைத்தானே எவராவது மோசடி செய்து கொள்வார்களா? மாட்டார்களே!

'அப்படியாயின்' இல்லாததை இருப்பதாகக் காட்டுவது மோசடியாக இல்லாமலும்கூட இருக்குமோ? அது ஒரு நல்ல விஷயமாகவும் இருக்க முடியுமோ?

யோசித்துப் பார்த்தால், இல்லாததை இருப்பதாகக் காட்டுவதிலும் மோசடியில்லாத ஒரு தூய ஆனந்தம் இருக்கமுடியும் என்று தெரிகிறது. உலகம் தோன்றிய நாளாக எத்தனையோ மகாகவிகள் இருந்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் மோசக்காரர்கள் என்றா சொல்கிறோம்? ஆனால், அவர்கள் செய்ததெல்லாம் என்ன? இல்லாத பாத்திரங்களை இருப்பதாகக் காட்டி, அவர்களைச் சுக துக்கங்களில் முக்கி முக்கி எடுத்திருக்கிறார்கள். இல்லாதவர்களின் சுக துக்கங்களைப் படித்தும் நாடகத்தில் பார்த்தும் நாமும் சிரிக்குமாறும், அழுமாறும் செய்திருக்கிறார்கள்! நாம் அந்த அழுகையில்கூட உள்ளே ஓர் ஆன்ம நிறைவு கொள்கிறோம்!

பராசக்தி மகாமாயை என்பது இரண்டாம் பட்சம். முதல் பட்சத்தில் அவள் மகாகவி, மகா ரசிகை. பிரம்மத்தை ''ரஸோ வைஸ:'' என்றனர். அதுவே ரஸம் என்றனர். தீஞ்சுவைச் சாற்றைப் பருகாமலே இருந்தால், அது இருந்தென்ன, இல்லாதென்ன? இந்த பிரம்ம சக்தியான மதுரப் பொருள் தன் மதுரத்தைத் தானே பருகிக் கொள்வதற்காக இத்தனையாகவும் ஆகியிருக்கிறது. பிரபஞ்சம் அவளது சங்கீதம்; சமநிலை குலையாத அதிர்வுகளை உள்ளே கொண்ட ஜட அணுக்களுக்குள் இந்த சங்கீதத்தின் வெறும் தாள இன்பம் உள்ளது. வீசு தென்றலிலும் வீழ் புனலிலும், மற்ற இயற்கை விநோதங்களிலும் தாளத்தோடு ஸ்வரங்களும் சேர்ந்த இன்பத்தை அநுபவிக்கிறாள்! அந்தத் தாளமும் ஸ்வரங்களும் உணர்வுகளோடு

கலந்து கீர்த்தனமாவதை மானுட வாழ்வு மூலம் புனைந்து, தனக்கே அளித்துக் கொண்டு ரசிக்கிறாள் — ''**ஆடல் கண்டவனும் நீ, ஆடுகின்றவனும் நீ**'' என்று ஆப்தர் சொன்னதுபோல்.

அவள் மகாகவி. ''**கவிம் கவீனாம்**''. இங்கு கவி என்றால் 'தீர்க்கதரிசி' என்று அர்த்தம் செய்ய வேண்டிய அவசியமே யில்லை. அப்பட்டமான காவிய கர்த்தாவாகவே பராசக்தியைச் சொல்வதால் அவள் மகிமைக்கு ஒரு பங்கமும் இல்லை.

காவியம் என்று இருந்தால் அதில் துன்பம் இருந்தேதான் தீர வேண்டும். எல்லாப் பாத்திரங்களும் எப்போதும் சந்தோஷமாக இருந்ததாக எந்தக் கதையேனும் இலக்கிய உலகில் உண்டோ? அப்படி ஒரு கதை எழுதினால் அது சற்றேனும் ருசியாக இருக்குமோ? ரஸனைக்கு விதவிதமான அழகுகள் வேண்டும். ஒன்றே இருந்தால் திகட்டிப் போகும். இன்பம் என்கிற அழகோடு துன்பம் என்கிற அழகும் வேண்டும். இனிமை என்கிற அழகோடு கொடுமை என்கிற அழகும் வேண்டும். மகா காவியங்களில் துன்பமும், கொடுமையும் நமக்கு ஆன்ம நிறைவைத் தருவது எதனால்? அவையும் உண்மையில் இன்பத்தையும் இனிமையையும் தூக்கிக் காட்டுவதை லட்சியமாகக் கொண்டிருப்பதாலேயே அன்றோ?

இதனால்தான் உலக வாழ்வாகிய பராசக்தியின் காவியத்தில், அல்லது நாடகத்தில் துன்பம், கொடுமை எல்லாம் இருக்கின்றன.

ஆனால் ஒரு வித்தியாசம். மானுடர்களின் காவியத்தை நாம் விலகி நின்றுபார்க்கிறோம். அது நம் கதை அல்ல என்று நமக்குத் தெரியும். என்றாலும் அதைப் பார்க்கத் தொடங்கிய பின், விலகி நிற்பது சிறிது சிறிதாகக் குறைந்து பாத்திரங் களுடன் ஒட்டிக் கொள்ளத் தொடங்குகிறோம். இருப்பினும்கூட அந்தப் பாத்திரமே நாம் இல்லை, அதன் கஷ்ட சுகங்கள் முற்றிலும் நம்முடையவையல்ல என்பதும் நமக்குத் தெரிகிறது. ஒரளவுக்கு நம்மை இழந்து கொண்டு, ஒரளவுக்குப் பாத்திரத்தோடு இழைந்து கொண்டு பார்க்கிற பார்வையில் அதன் துக்கத்திற்காக நாம் துக்கிப்பதிலும் கூட ஓர் ஆனந்தத் திருப்தியைப் பெறுகிறோம். கொஞ்சமேனும் நம்மை நாமே இழந்து கொண்டோமல்லவா? அந்த சந்நியாசத்தின் நற்பலன் இது!

ஆனால், நம்முடைய சொந்த வாழ்வு என்று ஒன்றை நினைத்துக் கொண்டிருக்கிறோமே! அதில் நாம் துளி கூட சுயப்

பற்றிலிருந்து விலகியே நிற்க மாட்டேன் என்கிறோம்! சுய வாழ்வில் நம்மைத் துளிகூட இழந்து கொள்ள நாம் தயாராக இல்லை. எனவேதான், நம் துன்பம் வெறும் துன்பமாகவே இருக்கிறதே ஒழிய, அதன் அடிப்படையில் உள்ள ஆனந்தம் தெரியவே இல்லை. துயர நீரை சுயப் பற்றால் கலக்கிக் கொள்வதால் அடியில் உள்ள ஆனந்தப் படுகை தெரியாமலே போகிறது.

துயரங்களுக்கு அடியில் புதைந்துள்ள ஆனந்தம்தான் தர்மத்தின் ஆனந்தம். ஆனந்தமாக விரிந்து, அதையும் விதிகள் என்கிற தர்மத்தில் கட்டிப் போட்டுவிட்டு, மனித மனம் ஆகும்போது கொஞ்சம் சுதந்திரம் தந்து கொண்டிருக்கிறாள் அல்லவா? இருந்தாலும் இயற்கை எங்கணும் பரப்பியுள்ள விதிகளாகிய காரணம்-விளைவு (Cause and Effect) செயல்-பிரதிச் செயல் (Action and Reaction) என்ற மகா தர்மத்திலிருந்து மனிதனாகும்போது தனக்கு அவள் விலக்குத் தந்து கொள்வதில்லை. மனச் சுதந்திரத்தால் இவன் பாவம் செய்தால் அதற்குப் பிரதியாக துன்பம் அநுபவித்தேயாக வேண்டும் என்று வைத்திருக்கிறாள். எனவேதான் மனிதன் துன்புறுகிறான். தன்னைத் துன்பப்படுத்துவதாக இவன் பராசக்தியைக் குறை கூறிப் பயனில்லை. மாறாக, துன்புறுவதால் தான் செய்துள்ள பாவத்தை உணர்ந்து இனி பாவம் செய்யாதிருக்க அவள் அருளைப் பிரார்த்திக்க வேண்டும். தன் சுதந்திரத்தை அவளிடம் இழக்கத் தயாராக வேண்டும். அப்படி செய்தால் தர்மமாக வாழ்வதன் பேரானந்தம் இவனுக்குக் கிட்டும். ஏதேதோ இன்பங்களைக் கருதித்தானே பாவம் செய்தான்? அந்த இன்பங்கள் யாவும் தர்மவானாக இருக்கிற நிறைந்த சுத்தமான இன்பத்திற்கு லவலேசமும் ஈடாகாது என்பதைக் காண்பான். ஒப்புமை மூலம்தானே எதன் பெருமையும் நன்றாகவே தெரிகிறது? அதர்மத்தால் காண்கிற 'சௌகரிய' இன்பத்தைவிட எவ்வளவு பெரியது தர்மத்தால் காண்கிற 'அசௌகரிய' இன்பம் என்பது இரண்டையும் அநுபவித்தால்தானே தெரியும்? மாறுபாட்டாலேயே ருசி கூடுகிறது. அதர்மத்தால் துன்ப தண்டனை வந்தது என்று உணர்கிறபோதே தர்மத்தில் நாட்டம் உண்டாகிறது. முடிவில் தர்மத்தின் இன்பம் கிட்டுகிறது. இப் பேரின்பத்தை நாடுவதற்காகவே துன்பத்தைத் தந்தாள் என்று தெளிவான். துன்பம் தந்ததே இப்போது பரம கருணையாகத் தெரியும். அவள் அருள் வடிவாக இல்லாமல் அறமாக மட்டும் இருப்பதாலேயே தன்னைத் தண்டித்தாள் என்று எண்ணியது எத்தனை அறிவீனம் என்று இப்போது ஜீவன்

உணருவான். அறம் என்று ஒன்றை வகுத்ததே அவளது அருள்தான்: அறமே அருள், Law itself is Love என்று உணர்வான். ஒழுங்கு விதிகளாகிய தர்மத்துக்குக் கட்டுப்பட்டுப் பிரபஞ்சம் இல்லாவிடில் நாம் ஒரு கணமாவது நிம்மதியாக உயிர் வாழ முடியுமோ? பகலிரவும், பருவங்களும், நீரும் நெருப்பும், பயிரும் பச்சையும் சிருஷ்டித் தொடக்கத்திலிருந்து அதே மாதிரி விதித்த தர்மப்படி இருப்பதால்தானே நாம் வாழ்க்கை நடத்த முடிகிறது? இல்லாவிடில் எத்தனை குழப்பமயமாகும்? மற்ற எல்லாவற்றுக்கும் நியதி இருக்கும்போது, ''மனிதனாகிய எனக்கு மட்டும் எந்த நியதியும் கூடாது; நான் எப்படிச் செயல்பட்டாலும் என்னைத் தண்டிக்கக் கூடாது'' என்று கேட்பது எத்தனை அக்கிரமம்? கிரமத்தில் நம்மைக் கொண்டு வந்து அதில் உள்ள நிறைவை நாமே சுவைத்து இன்புறத்தான் துன்பம் தருகிறாள்.

பார்க்கப் போனால் தண்டனை பெறுபவளும் அவளேதானே? அவளே ஒரு வேஷம் போட்டுக் கொண்டு, தவறு செய்துவிட்டு, தண்டனையும் பெறுகிறாள் — நாடக ஆசிரியன் தானே நாடக பாத்திரமாக வேஷம் போட்டுக் கொண்டு நாடகத்தில் தண்டனை பெறுவது போல! ஆனால் நாடக பாத்திரமாக வரும் போது அவன் ஆசிரியனை வேறாக எண்ணித் தூஷிப்பதில்லை. நாமோ பராசக்தியுடன் நம்மை வேறாக அல்லவா எண்ணுகிறோம்?

இப்படி நம்மைத் தவறாக எண்ணச் செய்வதும் அவள்தானே? இவ்வாறு செய்வதை வேண்டுமாயின் அவளது வஞ்சனை, மோசடி எனலாமா? அதுவும் நியாயமில்லை. வேறாக எண்ணச் செய்தாலும், அவளோடு ஐக்கியத்தை உணருவதற்கும் அவள் எத்தனை எத்தனையோ வாய்ப்புக்களைத் தந்திருக்கிறாளே! முதலாவதாக, அதர்மத்தைச் செய்யும் போது நம் மனமே உள்ளுக்குள் கூசிக் கொள்ளும்படிதானே செய்திருக்கிறாள்? அப்புறம், எத்தனை ஞான ஆசிரியர்களை நமக்காக அவள் அனுப்பி வைத்திருக்கிறாள்? தன் தர்மத்தைக்கூடத் தளர்த்திக் கொண்டு நம்மை எத்துணை முறை க்ஷமித்து விட்டிருக்கிறாள்?

இருந்தாலும், மனிதன் என்பவனாக வருகிறபோது, அவனுக்கு எப்படியோ சுயபாசம் என்கிற ஒன்றை அவள் இந்த 'சின்ன நான்' என்பதிடம் வைத்துத்தான் விட்டாள். அதைப்

போக்கிக் கொள்ள மார்க்கம் பல காட்டினாலும், உண்மையில் போக்கிக் கொண்டவர்கள் கோடியில் ஒருத்தர்தான்.

சிருஷ்டியில் மனித இனமே மிக உயர்ந்தது என்று நாம் சொல்லிக் கொண்டாலும், சுயபாசத்துக்காகத் திட்டமிட்டுத் தப்புத் தண்டாக்களை ஜோடனை செய்து நிறைவேற்றிக் கொள்வதில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்த படைப்பினம் இவன்தான் என்பதில் சந்தேகம் இல்லை. இது களங்கம்தான் எனில், அதிருப சுந்தரியின் அழகை எடுத்துக் காட்டவே கன்னத்தில் ஒரு கரும்புள்ளி வைப்பதுபோல், இந்தக் களங்கப் பொட்டை பராசக்தி தனக்குத்தானே வைத்துக் கொண்டிருக்கிறாள் போலும். நமக்கு அது கருமைக் களங்கம் — அவளுக்கோ அழகை அதிகரித்துக் காட்டும் அலங்காரம்.

'எண்பத்து நாலு லட்சம் யோனி பேதங்கள்' என்று பெரியவர்கள் பாடுகிறார்கள். அத்தனை விதமான ஜீவராசிகள் உள்ளன. சாதாரண நிலையில் நம் கண்ணின் அலை நீளத்துக்கும் (Wavelength) காதுகளின் அலை நீளத்துக்கும் அகப்படாத அநேக ஜீவராசிகள் — தேவர், இயக்கர், கிம்புருஷர், சாரணர், சித்தர், வித்யாதரர், கந்தர்வர் — என்பது போன்ற எத்தனை எத்தனையோ உயிரினங்கள் உள்ளன. நம் உலகத்தைப் போல் எத்தனை எத்தனையோ உலகங்கள் உள்ளன. அவற்றில் என்னென்ன ஜீவ ராசிகள் உண்டோ? அப்படியிருக்க, நம்மைத் தான் சிருஷ்டியின் பூரண நிலையில் உள்ளவராக நாம் ஏன் கருத வேண்டும்? நமக் குள்ள களங்கங்கள் இல்லாமல் எத்தனையோ உயிரினங்களைப் பராசக்தி படைத்திருக்கலாம். கிளைக்குக் கிளை பழுத்துக் குலுங் கும் மாமரத்தில் ஒரு பழம் சொத்தையாக இருந்தால் மரத்தையே குற்றம் சொல்வது போல் இந்த மனித இனத்துக்கு மட்டும் ஊனம் இருப்பதால் பராசக்தியை தோஷம் சொல்லலாமா? பரம சாஸ்திரீயமாகப் பாடும் வித்வானும்கூட ரஸத்தை முன்னிட்டு எப்போதேனும் அன்னிய ஸ்வரம் பிடிப்பது போல் கோடானு கோடி தர்மப் படைப்புக்களிடையே மனிதனில் அவள் அன்னிய ஸ்வரம் பிடிக்கிறாள் என்று சொல்லவேண்டியது தான்.

நாம் நல்லவராக இல்லாததற்கு அவளைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. ''நல்லவனாக்கு!'' என்று அவளிடம் பிரார்த்திப்பதே பயன்தரும். உண்மையான பிரார்த்தனைக்கு அவள் நிச்சயம் செவி சாய்க்கிறாள். அதுவும், ''இது வேண்டும், அது வேண்டும்'' என்று கேளாமல், ''நல்லவனாக்கு!'' என்று வேண்டிக் கொண்டே யிருந்தால், விரைவுடனேயே பரிந்தருள் பாவிக்கிறாள்.

அவளை ''ஏன், எப்படி'' என்று கேட்க நமக்கு அதிகாரமில்லை. உலக காவியத்தை அவள், தனக்கு

எப்படியெல்லாம் இஷ்டமோ அப்படிப் புனைந்து பார்ப்பதை ஆட்சேபிக்க நமக்கு அருகதை இல்லை. காவியம் இருந்தால், துன்பம் இருக்கத்தான் இருக்கும். மனித காவியங்களில் நல்லவன் துன்பமடைவதே மிக உயர்ந்த படைப்புகளாகின்றன. இதைத் துன்பியல், Tragedy என்று தலைமேல் வைத்துக் கொண்டாடுகிறோம். இதுவே நம் இதயத்தைத் தொட்டு, இனம் தெரியாத ஒரு நிறைவைத் தருகிறது. இதற்குக் காரணம், பராசக்தியின் காவியமாகிய உலகிலுள்ள நல்லவர் கெட்டவர் யாவரும் நம்மையும் அறியாமல் உள்ளூரப் பிணைப்புண்டிருப்பதேயாகும். இந்தப் பிணைப்பை உணர்ந்த மகாத்மாக்கள் கெட்டவர்களின் பாபத்தைத் தாங்களே வாங்கிக் கொண்டு, அதற்கான தண்டனையை அநுபவிக்கிறார்கள். நம்மால் அது முடிவதில்லை. ஆனாலும் சுயத் துன்பமாக இன்றி, இன்னொருவரின் துன்பத்தில் நாமும் துன்புறுவதிலேயே நம்மையும் அறியாமல் பாப பாரத்தை — விசுவ வேதனையை — ஓரளவு குறைக்கிறோம். கெட்டவர்கள் துன்புறும்போது, நம்மால் அத்துன்பத்தை அதிகம் பகிர்ந்து கொள்ள முடிவதில்லை. நல்லவர்கள் துன்புற்றால், நாமும் துயர் உறுகிறோம். கதையில் வருகிற நல்லவர்கள் நடைமுறை உலகில் நாம் காண்பவர்களை விட நல்லவர்களாகவும், கதையில் வருகிற துஷ்டர்கள் நடைமுறையில் நாம் காண்பவர்களைவிடத் துஷ்டர்களாகவும் இருப்பது பொது வழக்கு. இந்தத் தாரதம்மியம் இருந்தால்தான் கதை ருசிக்கிறது. எனவே கதையில், ஒரு கெட்டவன் கஷ்டப்பட்டதாக வந்தால் ''நன்றாக வேண்டும்'' என்று நமக்கு ஆறுதலாகவே இருக்கும். நல்லவன் இன்னற்பட்டால் தான் நம் மனம் கரையும். இப்படிக் கரையும்போது உலகின் பாபச்சுமையில் சிறிதேனும் நம்மையும் அறியாமல் கரைந்துபோகும் — நமக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும்! எந்தச் செயலுக்கும் ஒரு விளைவு இருந்தே தீரும் அல்லவா? பாபச்சுமை குறைவது தெரியாவிட்டாலும், அந்தச் சுமையைக் குறைத்த புண்ணியத்துக்கு விளைவாக நமக்கு இனம் தெரியா ஒரு நிறைவை இந்தத் துன்பத்திலேயே தருகிறாள் பராசக்தி! இது நம் கதை; நம் கவிகள் எழுதும் கதையைக் குறித்து நமக்கு ஏற்படும் பாதிப்பின் கதை.

ஆனால் அவள் கதை வேறு. அங்கே துன்பத்தை நல்லவர்களுக்குத் தருவதற்கில்லை. தர்மம் என்கிற பிரேமையே வடிவான பராசக்தி தன் காவியத்தில் நல்லவர்களை எப்படித் தண்டித்துத் துன்பம் தரமுடியும்? எனவே, அவளது எதிர்மறை ருசிக்காக அவளிடமிருந்து துன்பத்தைப் பெறும் ''தகுதி''யை அடைவதற்காகவே சிலர் பாபம் செய்தாக வேண்டியிருக்கிறது!

அவர்கள் நல்லவர்களைத் துன்புறுத்தி இப் பாபத்தை ஈட்ட வேண்டியும் வருகிறது. இப்படி நல்லவனுக்கும் துன்பத்தைக் காட்டினாலும், இறுதியில் அந்த நல்லவனைத் தன் பேரின்பத்தில் அவள் முழுக்கிக் கொள்கிறாள், பரிகாரம் செய்துவிடுகிறாள். கடைசியில் அவனே அனைத்துமானவள் என்பதைக் கவனித்தாலோ இந்தப் பாவமும் அவளே செய்து, தண்டனையும் அவளே பெறுவதாகத் தானாகிறது! பாவத்தை மட்டும் அவள் பொறுப்பாக்கிவிட்டு, தண்டனையை நம்முடையதாக எண்ணிக் குறைகூறுவது சரியல்ல. ''பாபத்தை நீதானே செய்தாய்?'' என்று அவளைக் கேட்க வாய் எடுக்கும் போது, ''அப்படியானால் தண்டனையும் அவள் தானே பெறுகிறாள்?'' என்ற நினைப்பும் நமக்குச் சட்டென்று வரவேண்டும்.

அவளை இப்படி இரு, அப்படி இரு என்று சொல்ல நாம் ஆள் இல்லை. அவள் இருக்கிறபடி இருப்பாள். விசை நிலையத்திலிருந்து மின்சாரம் வருகிறது. மின்சாரம் வெறும் மின்சாரமாக இருக்கிறது என்பது தவிர அதற்கு என்ன குணம் சொல்ல இயலும்? அதைக் குளிர்பதனப் பெட்டிக்குள் சில்லிப்புச் சாதனமாக்கிக் கொள்கிறோம்; அதையே ஊது உலையில் வெப்ப சக்தியாக்கிக் கொள்கிறோம். குளிர்பதனப் பெட்டிக்கு ஒரு தர்மம் உண்டு; அது சில்லிப்புத் தரவேண்டும் என்பதே அந்த தர்மம். ஊது உலைக்கு வெப்பம் தரவேண்டியதே தர்மம். இவை சரியாகச் செயல்படாவிடில், இவற்றை இவற்றின் தர்மப்படிச் செப்பம் செய்ய வேண்டுமேயன்றி, இந்த தர்மங்கள் எதிலும் கட்டுப்படாத மின்சாரத்தில் குறைகண்டு, அதை மாற்ற வேண்டும் என்று சொல்வதா? ஏதோ ஒரு ஸ்விட்சைத் தொடும் போது 'ஷாக்' அடித்தால் மெயினைத் தோஷம் சொல்லித் திருத்தப் போவோமா? நமக்கென தர்மங்கள் உண்டு. மின்சக்தி வெப்பமாகவும் குளிராகவும் ஒவ்வோரிடத்தில் ஆவது போல் பராசக்தி ஹம்ஸத்திடம் மென்மையாகவும், சிங்கத்திடம் வன்மையாகவும் இன்னும் இப்படிப் பலப்பலவாகி உள்ளது. அது அதுவும் அப்படி அப்படி இருப்பதே அதனதன் தர்மம். மனிதனுக்கும் தர்மம் உண்டு. இதில் பிறழ்ந்தால் ஷாக் அடிக்கத் தான் செய்யும். உடனே நம்மையே பழுது பார்த்துக் கொள்ளவேண்டுமேயன்றி, மூலத்தைப் பழிப்பது அறிவீனம்தான்.

இன்பத்தில் கொண்டு சேர்க்கும் இந்த உண்மைகளை அறியவொட்டாமல் மறைத்து வைத்து, இறுதியின்பம் தராத சுய பாசம் ஒன்றையே இன்பமாகக்காட்டி மோசடி செய்வதால்தான் பராசக்தியைப் பெரும்பாலும் மாயை என்று தோஷம் சொல்கிறோம். இதனால் அவள் பெறுகிற நன்மைகள் என்ன?

அவளை விட்டு நாம் விலகிப் போகிறோமே — அப்படிப் போகுமாறு செய்வதால் அவள் பெறுகிற லாபம் என்ன?

கடைசி கடைசியில் லாபம் இருக்கிறது. அவளுக்கல்ல, நமக்கே லாபம் இருக்கிறது! எத்தனைக்கெத்தனை விலகுகிறோமோ அத்தனைக்கத்தனை ஆனந்தம் மறுபடியும் சேரும் போது உண்டாகப் போகிறது! இந்த ஆனந்தத்தை விருத்திச் செய்யவே பிரிவு! ''படார் வெடிப்புக் கொள்கை'' (Big-Bang Theory) என்று பௌதிக பிரபஞ்சத்தின் விஷயத்தில் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். இறுகி இருந்த ஒரு கரு வெடித்துத்தான் மேலும் மேலும் மேன்மேலும் பிரபஞ்ச கோளங்களாக எல்லையில்லாமல் விரிந்து கொண்டே போகிறதாம்! மூலமான மையஸ்தானத்திலிருந்து ஒவ்வொரு கோளமும் விலகிக் கொண்டே போகிறது; பரஸ்பரம் ஒன்றுக்கொன்று விலகிக் கொண்டிருக்கிறது. ஆனாலும் ஒன்றோடொன்று இழுத்துப்பிடித்துக் கொண்டுமிருக்கிறது என்கிறார்கள். ஈர்ப்பு — விலக்கல் (Attraction and Repulsion) என்ற த்வந்தமே பௌதிக பிரபஞ்சத்தின் பெரு நியதியாக உள்ளது. கிரகங்களும் நட்சத்திரங்களும் விலகி விலகி இருந்தாலும் ஒன்றை ஒன்று ஆகர்ஷித்துக்கொண்டும் இருக்கிறது. அந்தரத்தில் எல்லாம் தொங்கிக் கொண்டே, ஒன்றின் மீது ஒன்று மோதிக் கொள்ளாமல் சுழன்று சுழன்று வருவது இதனால்தான். இத்தனைக் கோளங்களும் அம்மா பராசக்தியின் அம்மானை ஆட்டம். கையிலிருந்து மாறி மாறி எறியவும் (repulsion) வேண்டும், பிடித்துக் கொள்ளவும் (attraction) வேண்டும் — இதுதான் அம்மானை.

இப்போது நம்மை அவள் எறிந்ததாகத் தோன்றுகிறது. லபக்கென்று அமுக்கி பிடித்துக் கொள்ளவும் போகிறாள்! அவள் பிடிப்பிலேயே எப்போதும் இருந்து விட்டால் அதன் சுகம் தெரியாது. அதற்காகவே எறிந்திருக்கிறாள். வெயிலில் இருந்தால்தானே நிழலின் அருமை தெரியும்?

பௌதிகப் பிரபஞ்சத்தின் ஈர்ப்பும் விலக்கமும் தான் ஜீவப் பிரபஞ்சத்தில் அன்பாகவும் துவேஷமாகவும் ஆகி இருக்கிறது என்ற உண்மையை ராஜாஜி அற்புதமாக விண்டுரைத்திருக்கிறார். ஜீவர்களிடையில் பரஸ்பரம் இருக்கிற ஈர்ப்பும், விலக்கும் ஒரு புறமிருக்கட்டும். பராசக்தியும் ஒரு விதத்தில்

ஜீவராசிகளை மாயையால் விலக்கி வைத்திருக்கிறாள். அவள் அறவே விலக்கினால் நாம் உயிர்வாழவே முடியாது — எனவே அடிப்படையில் அவள் விலக்குவது என்ற வார்த்தைக்கே இடமில்லை. அவளை விலக்கவும் முடியாது. சேர்த்துக் கொள்ளவும் முடியாது. உட்கரைந்திருக்கிற வஸ்துவை புதிதாக எப்படிச் சேர்த்துக் கொள்வது? இவ் வுண்மையை லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ''ஹேயோபாதேய வர்ஜிதா'' என்ற திருநாமம் கூறுகிறது. ஆனால் ஜீவ பாவத்தில் நாம் விலகி இருப்பதாகத் தவறாக எண்ணுகிறோம் அல்லவா, அந்த அளவுக்கு அவள் விலக்கித்தானே வைத்திருக்கிறாள்?

Big-Bang-ஐ மட்டும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மறுபடியும் எல்லாம் சேரப் போவதையும் மகரிஷிகள் கூறுகிறார்கள். மகா பிரளயத்தில் பிரபஞ்சம் முழுவதும் அவளிடமே லயித்து விடப்போகிறது என்கிறார்கள். இந்த உலக நாடகம் எத்தனை நீண்டகாலம் நடைபெற்றதோ, அதற்கு சரி சமமான பன்னெடுங்காலம் யாவும் அவளிடம் ஒடுங்கி இருக்கப் போகின்றன என்கிறார்கள். விஞ்ஞானப்படி இது மிகவும் பொருத்தமாகவே காண்கிறது. எச்செயலுக்கும் சரி சமமான பிரதிச்செயல் எதிர்த் திசையில் உள்ளது; (Action and reaction are equal and opposite) என்பது விஞ்ஞானத்தின் மாற்றவொண்ணாத விதி அல்லவா? அந்த முறைமையை ஏற்படுத்தியது அவளே என்பதைப் பார்த்தால், உலக வியாபாரம் என்கிற விலக்கல் ஒரு குறிப்பிட்ட காலம் நடந்தால் இதற்கு எதிரிடையான சேர்க்கை நிலையில் சமமான காலம் இருக்க வேண்டும் என்றாகிறதல்லவா?

மகா பிரளயத்தின்போது ஜீவர்களின் பாப புண்யங்களைப் பொருட்படுத்தாமல் மகா பாபி உட்பட எல்லாரையும் பராசக்தி தன்னிடம் இழுத்துக்கொள்வாள். எந்த மகாவேகத்தில் படார் என்று விலக்கல் நேர்ந்ததோ அதற்கு சமமான வேகத்தில் ஈர்க்கப்படுவோம். ஞானம்-பக்தி-கர்மம்-யோகம் ஆகிய எந்த மார்க்கத்தின் மூலமும் நிரந்தரப் பேரின்பப் பெருவாழ்வுக்காக முயலாதவர்களும் கூட அப்போது அவளிடம் ஈர்க்கப்படுவோம்! அப்போது எத்தகைய அன்பு எத்தகைய வேகத்துடன் நம்மீது வர்ஷிக்கப்படும்? அதை எண்ணிப் பார்க்கையில் பராசக்தி செய்கிற

மாயை - மோசடி - வஞ்சனைக்கு அதிகமாக ஈடுகட்டி விடுவாள் என்று தெரிகிறதல்லவா?

இப்போதுகூட, நம் குற்றத்திற்கு சம ஈடாக அவள் தண்டிப்பதே இல்லை. சிறிது குறைத்தேதான் தண்டிக்கிறாள்; மன்னிக்கிறாள்; வாய்ப்புக் கொடுக்கிறாள்; வழிகாட்டுகிறாள். இத்தனைக்கும் மசியாவிட்டாலும் கூட மகா பிரளயத்தில் நம்மைத் தன்னுள் இழுத்து வைத்துக் கொள்கிறாள். இதுவல்லவோ கருணை?

ஒவ்வொரு தினத்திலும் மாபாவி உள்பட அனைவருக்கும் உறக்கம் என்கிற நிம்மதியான ஒன்றைத் தருகிறவள் இவள் என்பதைப் பிரத்தியட்சமாகக் கவனிப்பதிலிருந்து, ஒவ்வொரு பிறவிக்குப் பின்னும் இவ்விதமே மறுபிறவி எடுக்கும் வரையில் அமைதியின்பம் தருகிறாள் என்பதையும் மகாப் பிரளயத்தில் தன்னோடு லயிக்கும் ஆனந்தத்தையும் தருவாள் என்பதையும் திடமாக நம்பி ஆறுதல் பெறலாம்.

பிர + லயம் என்றால் நன்றாக லயிப்பது என்று பொருள். லயிப்பது வேறு; ஐக்கியமாகிவிடுவது வேறு. ஐக்கியமானால் அப்புறம் பிரிக்கவே முடியாது. லயத்தின் ஒடுக்கம் இப்படிப்பட்டதல்ல. லயித்த வஸ்து மீண்டும் விலகி விடலாம். லயத்தில் ஒன்று மற்றொன்றோடு வேக நெருக்கமாக இசைவு பெறுகிறதேயன்றி, பூரணமாகத் தன்னை இழந்து ஒன்றிவிடுவதில்லை. தாளத்தை லயம் என்கிறோம். தாளத்தைப் பாடல் கவ்விக் கொண்டு, அதனுடனேயே அப்பழுக்கின்றி இசைந்திருந்தாலும் தாளமே பாடல் அல்ல, அவை ஐக்கியமாகி விடுவதில்லை. பிரளயத்தின் போதும் ஜீவர்கள் இப்படித்தான் பராசக்தியுடன் லயித்திருக்கிறார்களேயன்றி, பரப்பிரம்மத்துடன் ஒன்றிவிடவில்லை என்றும், பிரளய காலம் முடிந்த பின் மறு சிருஷ்டியில் இவர்கள் மீண்டும் பழைய கர்மப்படி பிறப்பார்கள் என்றும் சொல்கிறார்கள். அதெப்படியாகினும் பக்தர்கள் எப்படி இந்தச் சரீரம் போன பின்பு, தங்கள் இஷ்ட தேவதையின் உலகில் பிரேம சரீரத்துடன் அதன் பிரேமையை நிரந்தரமாக அநுபவிப்பார்களோ, அப்படியே நாம் அனைவரும் பிரளய காலத்தில் பராசக்தியின் பரங்கருணை வெள்ளத்தைச் சூக்ஷ்மமாக அநுபவிப்போம்.

'பிரளயம்' என்ற வார்த்தையின் நேர் பொருள் இப்படி இருந்தாலும் கூட, அத்வைத வேதாந்தத்திலோ, மஹாப் பிரளயத்தில் பாமரருக்கு இந்த லய இன்பம் மட்டுமே கிடைத்தாலும் பக்தர்களுக்கு பிரம்ம ஸாக்ஷாத்காரமான அத்வைத மோக்ஷமே சித்திப்பதாகச் சொல்லப்படுகிறது. இதன்படி, ஆத்ம விசாரம் என்ற ஞான மார்க்கத்தில் செல்பவர்கள் இப்பிறவியில் இப்புவியில் உள்ளபோதே அத்வைத மோக்ஷத்தை அநுபவிக்கமுடியும். பக்தி செய்தவர்கள் மரித்தபின் 'ஹிரண்யகர்ப்ப' லோகத்துக்குச் செல்கிறார்களாம். பிரபஞ்சமாகப் பளபளக்கிற ஆற்றலைக் கருவிலே கொண்ட சக்திதான் 'ஹிரண்யகர்ப்பன்' எனலாம். ஹிரண்ய கர்ப்ப உலகை அடைந்த பக்தர்கள் அங்கு உபநிஷத மகாவாக்கியங்களின் அடிப்படையில் அத்வைத உபாசனையைத் தொடங்குவராம். கடைசியில், ஹிரண்ய கர்ப்பன் அண்டாண்ட முடிவில் பிரம்மத்தில் ஐக்கியமாவானாம். அப்போது அங்குள்ள பக்தர்களும் பிரம்ம ஸாக்ஷாத்காரமான அத்வைத முக்தி பெறுவார்களாம்! மறுசிருஷ்டியில் வேறு ஹிரண்ய கர்ப்பன் நியமிக்கப்படுவான். அத்வைத முக்தி பெற்றுவிட்ட பக்தர்களுக்கு மறுபடி பூலோகப் பிறவியோ, ஹிரண்யகர்ப்பலோக வாசமோ இல்லாமல் அவர்கள் பிரம்மமாகவே இருப்பார்களாம்!

பாபிக்கும் கூட லயம் — அதாவது பராசக்தியுடன் இசைந்திருக்கும் இன்ப நெருக்கம் — கிட்டும்போது, அவனைவிட உத்தமமான பக்தனுக்கு இறுதியான பிரம்ம சாட்சாத்காரம் கிட்டத்தான் வேண்டும் என்பதால் அத்வைத வேதாந்திகள் இப்படிச் சொல்கிறார்கள்.

இவர்கள் 'ஹிரண்ய கர்ப்பலோகம்' என்று சொல்வதை வேண்டுமாயின் பக்திமார்க்கிகள் 'இஷ்டதேவதா லோகம்' என்று பொருள் கொண்டு ஒப்புக் கொள்வர். ஆனால், அங்கு சென்றபின் இவர்களும் அத்வைத சாதனை தொடங்குவர் என்பதையோ, கடைசியில் அத்வைத முக்தி பெறுவர் என்பதையோ அவர்கள் ஒப்பமாட்டார்கள். ஞானமார்க்கிகளான அத்வைதிகள், தங்களுக்குத் தாழ்ந்த நிலையில் இருப்பதாகக் கருதும் பக்தர்களிடம் மிகவும் பெருந்தன்மை காட்டி, இவர்களுக்கும் அத்வைதம் ஸித்திக்கும் என்று சொன்னாலும், பக்தர்கள் அத்வைத ஸித்தியை லட்சியமாகக் கருதுவதில்லை. அவர்களுக்கு இஷ்ட தேவதா லோகத்தில் பெறுகிற பாபமற்ற அன்பின்பமே முக்தி; அதைவிடப் பெரிதாக அவர்கள் எதையும் நினைப்பதும் இல்லை, கோருவதும் இல்லை. ஏற்கெனவே பராசக்தியுடன் பக்தியில் லயித்துக் கிடக்கும் இவர்கள்

பிரளயத்தில் புது லயிப்புப் பெறவேண்டிய அவசியமில்லைதான். இவர்களைப் பராசக்தி பிரம்மத்தில் இரண்டறக் கரைக்காமலே நிரந்தரமாக விட்டும் வைக்கலாம். தாங்கள் கோராத ஒன்றை அவள் தரமாட்டாள் என்று அவளோடு உயிர்த் தொடர்பு கொண்ட பக்தர்கள் கூறுவதை நாம் மறுப்பதற்கில்லை.

ஆனால் நாம் மறுதலிக்கக்கூடியது யாதெனில், பிரம்மத்தில் இரண்டறக் கலப்பதான மோக்ஷம் என்றே ஒன்று கிடையாது எனப் பல பக்தி ஸித்தாந்திகள் வாதிப்பதைத்தான். ஒன்றுதான் பலவாகத் தோன்றுகிறது என்று தீர்மானமாகிவிட்டபின், அப்படித் தோன்றியவற்றுள் ஒன்றைத் தோற்றுவித்த சக்தி தன்னில் பேதமறக் கரைத்துக் கொள்ள முடியும் என்பதை இந்த ஸித்தாந்தி எப்படி மறுக்க முடியும்? பரம பக்தருக்கும்கூடத் தன் சொந்த மார்க்கத்தில் ஒரு மோகத்தை உண்டாக்கி விட்டாள் மாயா பராசக்தி என்றே சொல்லத் தோன்றுகிறது.

அது மட்டுமல்ல. இங்கே ''ஞானிகளையும் மகாமாயை பலவந்தமாக மோஹத்தில் தள்ளுகிறாள்'' என்ற ரிஷி வாக்கியத்துக்கும் பொருளைப் பார்க்கிறோம் போலிருக்கிறது. பிரம்ம சக்தியை எவராலுமே தடுக்க முடியாது. அது எதையோ ஒன்றைச் செய்ய முடியாது என்று எவருமே சொல்ல முடியாது. ஃப்ரித்ஜாஃப் ஷுவான் என்ற அநுபவி இதனால் கடவுளை All-Possibility என்றே அழைப்பார். கடவுளின் சர்வ வல்லமைக்கு சரணாகதி செய்வதாகச் சொல்லிக் கொள்ளும் பக்தி ஸித்தாந்தி, கடவுளால் ஒரு சாதகனைத் தன்னில் பேதமறக் கரைத்துக் கொள்ள முடியாது என்றே நினைப்பதாகத்தான் ஆகிறது. இது ஒருவித மோக மாயை எனில், எதையும் செய்விக்கக்கூடிய அகடிதகடனா சாமர்த்தியம் உள்ளதாக அத்வைதி கூறும் மாயை அவனிடமும் ஒரு மோகத்தை வைத்து விட்டாள்! பக்தியின்பத்திலேயே ஒருவனை நிரந்தரமாக வைத்திருக்கப் பராசக்தியால் முடியாது என்றுதானே இந்த அத்வைதி நினைக்கிறான்?

இந்த அத்வைதிகளைப் பார்த்து இத் தத்வத்தின் மூலபுருஷர்களான உபநிஷத ரிஷிகளுக்குக் குறை கற்பிப்பதற்கில்லை. முன்பே நாம் கண்டாற்போல, உபநிஷத ரிஷிகள் 'நான்' என்கிற உள்ளீடே இல்லாமல் ஆதார வஸ்துவைத் தேட, Nature never admits a vacuum என்பதால் உள்ளீடற்ற இந்த ரிஷிகளைப் பராசக்தி தன்னாலேயே நிரப்பி உபநிஷத கானத்தைப் பொழிந்தாள். அதில் அவர்கள் அடைந்த பிரம்ம ஸாக்ஷாத்காரத்தைப் பாடினாள்.

அவளுடைய பாட்டு விசித்திரமானது. அவள் எப்போதும் ஒளிந்திருப்பதிலேயே பிரியமுள்ளவள். உலகத் தொழில் அனைத்தும் அவளாலேயே நடந்தும் அவள் தன்னைக் காட்டிக் கொள்வதில்லை அல்லவா? அப்படியொரு வெட்கம் படைத்தவள்! தாய்மை காரணமாக மட்டுமின்றி இந்த வெட்க குணத்தாலும்தான் பேராற்றல் கொண்ட பராசக்தியைப் பெண்ணாகக் கருதுகிறோம் போலும்! வெட்கத்துக்கு வடமொழியில் 'ஹ்ரீ' என்று பெயர். ஆதி மகாபராசக்தியின் பீஜமந்திரமான தேவீ பிரணவம் எனப்படும் மஹா அட்சரம் இந்த ஹ்ரீயோடு மகர ஒற்றெழுத்துச் சேர்ந்ததேயாகும். புருஷ சூக்தத்தில் பிரம்மத்தைப் புருஷனாகத் துதிக்கையில் ''ஹ்ரீயும் லக்ஷ்மியும் உன் பத்தினிகள்'' என்கிறது வேதம். லக்ஷ்மி என்பவள் 'ஸ்ரீ'. இன்னொருத்தி 'ஹ்ரீ'. லக்ஷ்மி என்றால் 'அடையாளம்' என்று பொருள். இறைவன் இருக்கிறான் என்பதற்கு அடையாளமே அழகும், ஒழுங்கும் நிறைந்த இந்த உலகம் தானே? இப்படி வெளிப்படக் காணும் அழகின், ஒழுங்கின் வடிவமே ஸ்ரீ என்னும் லக்ஷ்மி. உள்ளே ஒளிந்து கொண்டுள்ள பராசக்திதான் 'ஹ்ரீ'. தேவர்கள் மறைந்து கொள்வதில் பிரியம் கொண்டவர்கள் (பரோக்ஷப்ரிய) என்று உபநிடதம் கூறுகிறது. தேவர்களுக்கும் மூலமான தேவி ரொம்ப ரொம்ப மறைவில் இருப்பாள். பொம்மலாட்டக்காரன் திரைக்குப் பின்னால் தானே இருப்பான்? அவன் முன்னே வந்துவிட்டால் பொம்மைகள் ஆடுவதைப் பார்ப்போமா? திரைக்குப் பின்னால், முக்காடு போட்ட கோஷாவாக, 'ஹ்ரீ'யாக இருக்கிறாள்! இவள் பாடும்போதும் அதில் ஏகப்பட்ட ஒளிவுமறைவுகள் வந்துவிடும். வேத உபநிடத மொழிகள் இப்படிப்பட்டனவே! புத்தி சாதுர்யத்தால் அவற்றுக்கு எத்தனை விதமாக அர்த்தம் செய்தாலும், இதுதான் பொருள் என்று சொல்லிவிட முடியாது. உபநிஷதப் பாடல் இப்படித்தான்.

பிற்பாடு உபநிஷதங்களைக் கொண்டு ஞான மார்க்கத்தில் பிரவேசித்தவர்களுக்கு எல்லா ஆசையும் போனாலும் இந்த உபநிஷதங்களின் மீதுள்ள ஆசை போகவில்லை போலும்! தங்களுக்கு வழிகாட்டிய தீபம் என்பதால் அதனிடம் பாசம்! உபநிஷத ரிஷிகள் 'எனதுரை தனதுரையாக' என்ற நிலையில் பாசமிழந்து மொழிந்த பாசமறுக்கும் மந்திரங்களிடமே பிற்கால ஞான சாதகர்களுக்குப் பாசம் வந்துவிட்டதாகத் தெரிகிறது. நான் என்கிற சம்பந்தம் எத்தனை நுட்பமாக வேலை செய்து விடுகிறது?

சின்ன 'நானை' விட்டு, ஒரே பெரிய 'நானாக' முயன்றவர்களிடமும் இதன் வேலைத்தனம் போகாது போலிருக்கிறது. அதனால்தான், இவர்கள் உபநிஷதங்களுக்குத் தாங்கள் கொண்டதே பொருள் என முடிவு கட்டியதோடு, அத்வைத முக்திக்கு உபாயம் வகுத்தபோது, உபநிஷத மகா வாக்கியங்களின் மூலமே முக்தி கிடைக்கும் என்று கூறிவிட்டார்கள். அவர்களிலேயே அத்வைதத்தை உள்ளங்கை நெல்லிக்கனியாக அநுபவித்த மகா புருஷர்களோவெனில், நமது தேசத்துக்கு அப்பால், வைதிக சமயத்துக்கு வேறான சம்பிரதாயங்களில் எங்கெங்கே பிரம்ம ஞானிகள் இருந்தாலும் அவர்களுக்கும் வணக்கம் தெரிவிப்பதாகவும் சொல்கிறார்கள்! ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்களே ''சண்டாளனும் கூடப் பிரம்ம ஞானியாக இருந்தால் அவனை என் குருவாக மதிக்கிறேன்'' என்று ஒரு பஞ்சகம் பாடியிருக்கிறார். இப்படிப்பட்ட பிரம்மஞானிகள் உபநிஷத மகா வாக்கியங்களிலிருந்தா ஞானம் எய்தினர்?

''கிறிஸ்துவின் உபதேசத்தைப் பின்பற்றினால்தான் மோட்சம் கிடைக்கும்'' என்கிற பிரசாரத்தைப் பற்றி ஸ்ரீ காமகோடி பெரியவர்கள், ''அப்படியானால் சொல்கிறவர்களுடைய முன்னோர் உள்பட கிறிஸ்துவுக்கு முன்னால் பிறந்த எல்லோரும் நிரந்தரமாக நரகத்தில்தான் இருந்தாக வேண்டும் என்றாகிறதே! ஏனென்றால் நம் மதத்தைப் போல் அவர்கள் மறுபிறவிகளை ஏற்பதில்லை. ஆனபடியால் கிறிஸ்துவுக்கு முற்பட்டவர்கள் மறுபிறவிகளில் அவரது சித்தாந்தத்தை ஏற்பதற்கும் வழியில்லை'' என்பார். ஏறக்குறைய இதே போலத்தான், உபநிஷத சப்தங்களை உலகச் செவி கேட்கப் பராசக்தி வெளியிட்டதற்கு முற்பட்ட எவருமே மறுபிறவிகளில் வேண்டுமானால் அத்வைத முக்தி பெற்றிருக்கலாமே ஒழிய, நேராக அந்நிலை எய்தியிருக்க முடியாது என்று இந்த ஞான மார்க்கிகள் நினைக்கிறார்களா? ''மனித சிருஷ்டியின்போதே வேதங்கள் வெளிப்பட்டுவிட்டன. அவற்றோடு அங்கமாக அப்போதே வெளி வந்தவைதாம் உபநிஷதங்கள். எனவே உபநிஷத காலத்துக்கு முற்பட்டவர்கள் என்று யாரும் இருந்திருக்கவொண்ணாது'' என்றும் வாதிக்க இடமுண்டு. அப்படியாயினும் முற்பிறப்பில் மகாவாக்கிய விசாரம் செய்த ஒருவர் ஏன் சண்டாளராகப் பிறக்கவேண்டும்? மனிதப் பிறவி எடுத்து, மகா புருஷனை அண்டி உபதேசம் பெறுவது மகா துர்லபம் என்றும் பகவத்பாதர் வாக்கே இருக்கையில், இப்படி உபதேசம் பெற்று மகா வாக்கிய விசாரம் செய்த ஒருவர் மறுபிறவியில் சண்டாளராக முடியும் என்றால் ஏற்க இயலுகிறதோ?

உபநிஷத மகா வாக்கியம் தங்களுக்குக் கதவைத் திறந்து விட்டதால் மோக்ஷ வாயிலுக்கு இதொன்றே சாவி, மறு சாவியே கிடையாது என்று பிற்பாடு வந்தவர்கள் எண்ணி விட்டனர் போலும்! எதிலுமே தற்கலப்பு தருகிற பாசம் போகாது போலும்! ''ஞானிகளும் மோஹத்துக்கு ஆட்படுகிறார்கள்'' என்று மேதஸ் கூறியதற்கு எடுத்துக்காட்டுத்தானே?

இதுபோதாதென்று இன்னொன்று: இந்த ஞானிகள் பக்தி மார்க்கம் தங்களைப் போன்ற உத்தம அதிகாரிகளுக்கு ஏற்பட்டதல்ல என்றும் மந்த, மத்திம அதிகாரிகளுக்கே உரியது என்றும் கருதுகிறார்களே! இதுவும் ஒரு வித சுய மோஹப் பேச்சுத்தானே? அன்பு செய்வது தவிர தனக்கேதும் தொழிலில்லை என்று பராசக்தியிடம் தஞ்சம் புகும் பெரிய சாதனையை மந்த மத்திம மக்கள் செய்துவிட முடியுமா? இதற்கு எத்துணைப் பிரேம சக்தியும், தியாக சக்தியும் வேண்டும்? லௌகிகத்தைக் கோரி ஸ்வாமிக்குத் தேங்காய் உடைக்கும் மந்த மாந்தருக்கும் மெய்யடியாருக்கும் அஜ கஜாந்தரமன்றோ? இந்த பக்தர்களுக்காகப் பராசக்தி கலியாண குணங்கள் நிரம்பிய உருவோடு, அதாவது ஸகுண மூர்த்தியாக வந்தால் இதையும் தங்களுடைய நிர்க்குணப் பிரம்மத்துக்குத் தாழ்ந்ததாகவேதான் பெரும்பாலான அத்வைதிகள் — ஞானம் பெற்றவர்கள் என்றே சொல்லக்கூடியவர்கள் கூட — கருதுகிறார்கள்.

''லோகோ பின்ன ருசி:''. உலகினர் பல்வேறு சுவைகளில் ஈடுபாடு கொண்டிருப்பவர்கள். எல்லா ஈடுபாடுகளையும் அவை தருமத்துக்குப் புறம்பாக இல்லாத வரையில், பராசக்தி மதித்து நிறைவேற்றுகிறாள். அமைதிக்கு அவாவுகிறவர்களுக்கு நிர்குண, அரூபமான ஆதார சத்தியமாயிருந்து அத்வைத முக்தி தருகிறாள். அன்புக்கு ஆர்வம் கொண்டவர்களுக்காக ரூபம் தரித்து வந்து அன்பைச் செலுத்தியும், பெற்றுக் கொண்டும் பக்தி என்கிற முக்தியைத் தருகிறாள்.

ஆனால் அத்வைத சிரேஷ்டர்களும்கூட, மனத்தை ஒருமுகப்படுத்தத்தான் பக்தி அவசியம் என்றும், அந்த அளவோடு அதை நிறுத்திக் கொண்டு பிறகு நிர்க்குண தியானத்தில் இறங்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள். இவர்கள் அத்வைத சித்தி பெற சாதகன் இன்னின்ன செய்ய வேண்டும் என்று சொல்வதோடு நிற்காமல், பராசக்தி இவ்வளவுதான் செய்ய முடியும் என்று ஓரிடத்தில் பிரம்மத்தின் பேராற்றலுக்கே எல்லைக்கோடு போட்டு விடுவது போலும்

ஒன்று இருக்கிறது! இஷ்ட தேவதா லோகத்துக்குச் சென்று சாசுவத பக்தி இன்பம் சுவைக்க வேண்டும் என்பதை லட்சியமாகக் கொள்ளாமல் அத்வைத அமைதி முக்தியை அருளும்படிப் பராசக்தியைப் பிரார்த்திப்பவர்களும் உண்டல்லவா? ஆனால் அந்நிலையை உபநிஷத மஹாவாக்கியங்களின் ஆழ்நிலைத் தியானத்தால் மட்டுமே பெற முடியும்; அது பக்தியுடன் தெய்வத்திடம் பிரார்த்தித்துப் பெறுகிற விஷயம் அல்ல என்று அத்வைதிகள் கருதுகின்றனர். வேத, உபநிஷத ரிஷிகளுக்குச் சிறிதும் வித்தியாசமின்றி சுயத்தை அறவே கரைத்து, சுயம்பிரகாச பிரம்மத்தை அநுபவித்த நமது காமகோடிப் பெரியவர்களைப் போல வெகு வெகு அபூர்வமாகச் சில அத்வைதிகள்தாம், ''நாம் நேரே முக்தி வேண்டும் என்று பிரயாசைப்பட வேண்டியதே இல்லை. பக்தி வேண்டும் என்று வேண்டிக் கொண்டாலே போதும். ஞானாம்பிகையே நமக்கு ஞானப்பால் தருவாள்'' என்று கூறமுடியும். மற்றபடி அத்வைத சாஸ்திரங்களைப் பார்த்தால் ஞானாம்பிகையையே அவர்கள் அஞ்ஞானாம்பிகையாகத்தான் நினைப்பது தெரியும். ஸ்ரீ வித்யா, தசமஹா வித்யா என்றெல்லாம் அற்புதமான சாக்த சம்பிரதாயங்களுக்குப்பெயர் வைத்த காரணமே அத்வைதிகளின் ஓயாத 'அவித்யா' வாதத்தை ஆக்ஷேபித்துத்தானோ என்றுகூடத் தோன்றுகிறது.

தனி மனிதனின் மனம் அதர்மத்தில் போகிறது என்பதால், மகத்தான அழகோடு, ஒழுங்கோடு நடக்கும் பிரபஞ்ச மகா தர்மத்தைக் காணவே இந்த ஞான மார்க்கிகள் தவறினரா? தனிமனம் விபரீத கற்பனைகளைச் செய்கிறது என்பதால் பராசக்தி கற்பித்த உலகையும் விபரீதமான துச்சம் என்று கருதினரா? இவர்கள் விவகாரப் பிரபஞ்சத்தை ஆட்டுவிக்கிற ஈசுவரனை ஒப்புக் கொண்டனர். அவனே கர்மத்துக்கு ஏற்ப விளைவு தரும் 'பலதாதா' என்றும் கூறினர். ஆனால் அவனால் இந்தப் பிரபஞ்சத்திலிருந்து விடுதலை தர முடியும் என்பதை வெளிப்படக் கூறவில்லை. தங்களது அத்வைத சாதனையை மெச்சி அதற்கு விளைவாக முக்தி இன்பத்தைத் தரும் பலதாதா அவரே என்பதை வியக்தமாகக் கூற மறுத்தனர். எடுத்த எடுப்பில் மனம் நிர்குணத்தியானத்தில் நிற்பதில்லை என்பதாலேயே இந்த ஈசுவரனுக்கு (பராசக்திக்கு) சாதனையின் ஆரம்ப காலத்தில் ஸகுண உபாசனை செலுத்தி விட்டு மனம் ஒருமைப்படத் தொடங்கிய பின், அதை 'அசல்' ஞான

மார்க்கத்தில் ஈடுபடுத்தி தியானத்தைத் தொடங்க வேண்டும் என்றே கூறினர். இது ஏதோ நடுவாந்தரத்தில் ஓர் இரண்டாங் கெட்டான் நிலையில் பராசக்தியைப் பிடித்துக் கொண்டு, பிறகு விட்டுவிட வேண்டும் என்பதே போலிருக்கிறது! இவர்களது ஈசுவரனுடைய சக்தி என்ன, அவனது காரியம் என்ன, அவன் இருப்பதன் பயன் என்ன என்பது வகை தொகையாகப் புரியவில்லை. ஜீவர்களை விடுவிக்கத் துணை புரிவதாகத் தோன்றாத ஓர் ஈசுவரன், அந்த ஜீவர்கள் துச்சமாக ஒதுக்கித் தள்ள வேண்டிய ஓர் உலகத்தை தர்ம-கர்ம நியதிப்படி 'ஆட்சி' செலுத்துகிறதாகவே ஏற்படுகிறது. இதை 'ஆட்சி' என்பது சரியா? இவனால்தான் முக்தி என்று இல்லாதபோது கூட, அத்வைத சாதகர்கள் தங்கள் மனம் ஒருமைப்படுவதற்காகப் போனால் போகிறது என்று இவனுக்கும் ஒரு கட்டத்தில் வழிபாடு செலுத்துகிறார்கள்.

பிரம்மசக்தி பலவிதமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு அவற்றை எல்லாம் விதிகள் என்ற தர்மத்தில் கட்டிப் போட்டு ஆளுகிறது என்கிற உண்மையை இப்படி விண்டு சொல்லாமல், பிரம்மத்தை மாயை என்ற ஒன்று பலவாகக் காட்டுவதாகவும் அந்தப் பலவற்றை ஈசுவரன் என்று ஒருத்தன் தர்மப்படி ஆளுவதாகவும் அத்வைதிகள் இரண்டாகப் பிரிவினை செய்வதினாலேயே இப்படிப்பட்ட குழப்பம் எழும்புகின்றது. இவர்கள் ஏன் பிரம்மமே தன் சக்தியை பலவாகக் காட்டியது என்று கூறாமல் மாயை என்று ஏதோ ஒரு வஸ்துவை வெளியிலிருந்து கொண்டு வந்து அது பிரம்மத்தில் சம்பந்தப்படுவதாகச் சொல்கிறார்கள்? காரணம், இவர்கள் அசைவற்ற நிலையையே சொல்கிறார்கள்; துளிக்கூட சலனமில்லாத ஸமாதி நிலையின் நிறைவான இன்பம் பற்றி இவர்கள் அறிந்திருப்பதால் இப்படிப்பட்ட அமைதியே பிரம்மம் என்று கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த அமைதி அசைந்ததாகச் சொன்னால் பிரம்மத்துக்கு இழுக்கு என எண்ணுகிறார்கள். அதாவது பிரம்மமே நேராக அசையக்கூடாது என்று எண்ணுகிறார்கள். அசைவு ஏற்பட்டால் அப்புறம் தர்மத்தைப் போலவே அதர்மமும் வரத்தான் செய்யும் என்பதால் இவ்விரண்டாலும் தீண்டவொண்ணாத சாந்த ஏகமாகவே தங்கள் பிரம்மத்தை வைத்து விட்டார்கள். ஆனாலும் விவகாரத்தில் நானாப்பிரபஞ்சம் இருப்பதற்குக் காரணம் சொல்ல வேண்டுமே! அதனால்தான் வெளியிலிருந்து மாயை என்று ஒன்றைக் கொண்டு

விடுகிறார்கள். ஆனால் அனைத்தும் பிரம்மமே, அதற்குப் புறம்பாக ஏதுமில்லை என்ற இவர்களது கொள்கைக்கு மாயை என்று இரண்டாவதாக ஒன்று இருப்பதாகச் சொல்வது முற்றிலும் முரணாக இருக்கிறது. அது பிரம்மத்தை ஏதோ விதத்தில் பாதித்துப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கிறது என்றாலும்கூட பிரம்மத்துக்கு இழுக்குதானே? இதுவும் ஒரு விதத்தில் சலனம்தானே? இன்னொன்று தன் தொடர்பால் எதையோ செய்ய இடம் தருவதும் அசைவுதான். 'மாயையின் தோற்றுவாய் அநிர்வசனீயமானது' (அதாவது, இலக்கணம் கூற முடியாதது; சிந்திக்க இயலாதது) என்ற ஒன்றே இவர்கள் தரும் திருப்தி தராத விடை. இதற்குப் பதில், 'பிரம்மம் பலவாகத் தோன்றியும் ஏகமாகவே இருக்கிறது. இது அநிர்வசனீயம்' என்று கூறி பிரம்மத்துக்கே அந்த இலக்கணம் கூறவொண்ணா பெருமையைத் தந்திருக்கலாம்! ஏனோ சாமானிய மானுடனை அளவுகோலாகக் கொண்டே இவர்கள் பிரம்மத்தை அளவிட்டதாலேயே **அது ஒரே சமயத்தில் சாந்த ஏகமாகவும், சலனமுள்ள பலவாக வும் இருக்கிறது** என்பதைக் காணவோ, அல்லது கண்டும் வெளிப்படக் கூறவோ தவறியிருக்கின்றனர்.

ஆனால் அத்வைதிகள் இப்படி அளந்ததுதான் வெகு வெகு விசித்திரம். ஏனெனில், இவர்கள் சாமானிய மானுடனிலிருந்து எத்துணையோ மேம்பட்ட ஜீவன் முக்தனைப் பற்றி அறிந்தவர்கள். அந்த ஜீவன் முக்தன் ஸஹஜ ஸமாதி எனப்படும் நிலையிலேயே இருப்பதாகவும், அப்போது அவன் எத்தனையோ வெளிக் காரியங்கள் செய்து சலனமுறுவதாகத் தோன்றினாலும் கூட வாஸ்தவத்தில் அவன் நிச்சலன சாந்த ஏகத்திலேயே நிலை கொண்டிருக்கிறான் என்றும் சொல்கிறவர்கள் இவர்கள். இதே ஸஹஜ ஸமாதியில்தான் பிரம்மம் உள்ளது; எனவே ஒரே சமயத்தில் சலனமாகவும் நிச்சலனமாகவும் உள்ளது என இவர்கள் காணாதது ஏன்? ஏனெனில், ஒரு காரணம் தோன்றுகிறது: ஸஹஜ ஸமாதியில் உள்ள ஒருவன் செய்வதாகத் தெரியும் காரியங்கள் தர்மமயமாகவே, அன்பு மயமாகவே, தூய்மையாகவே இருக்கின்றன. ஆனால் பிரபஞ்ச காரியத்திலோ அதர்மங்கள், துவேஷங்கள், பாவங்கள் ஆகியனவும் உள்ளனவே! இவற்றைப் பிரம்மம் செய்ததாக இருக்கக்கூடாது என்றுதான் துச்சமான மாயையைக் கொண்டு வருகிறார்கள் போலும்! பிறகு உலகில் உள்ள நியதிகளைப் பார்த்து, மாயையின் குழப்பத்திலிருந்து தர்ம ஆட்சிக்குள் உலகைக் கொண்டு வந்து நிர்வகிக்கும் ஈச்வரன் என்று இன்னொருத்தனை

ஏற்படுத்துகிறார்கள்; இவனை நிர்குண பிரம்மத்தின் ஸகுண வடிவம் என்கிறார்கள். நிர்குணம் எப்படி ஸகுணமாகச் சலனமுற்றது என்ற கேள்வி மறுபடி வருகிறது. மாயா சம்பந்தத்தால் அப்படி ஆயிற்று என்பது இவர்களது விடை. ஆனால் அது விடையேயில்லை. துச்ச மாயையின் சம்பந்தத்தால் தர்மப்படி கர்மபலன் தருகிற ஈசுவரன் உண்டானான் என்பதைவிட, அந்த மாயைக்கே இந்த லோக நிர்வாகப் பொறுப்பையும் தந்து விடலாமே! இவர்கள் மாயா சம்பந்தத்தால் உண்டானதாக நினைக்கும் ஈசுவரன் ஜீவர்களை மாயையிலிருந்து மீட்பதாக வெளிப்படக் கூறாதிருப்பது ஓரளவு நியாயம்தான். ஆனால் அந்த ஈசுவரன் மாயைக்கு வசப்படாமல், மாயையை வசப்படுத்திய 'மாயின்' என்கிறார்களே! பின் ஏன் தான் ஆளும் ஜீவனின் மாயையை அவன் மாய்த்து நேரே மோக்ஷம் தர இயலாது?

அத்வைத சாஸ்திரக்ஞர்கள் எத்தனை சமாதானம் சொன்னாலும், மாயை எல்லாவற்றின் மீதும் ஆளுகை செலுத்துவதாகவும் சொல்லி, ஈசுவரன் உலகின் மீது ஆட்சி புரிவதாகவும் ஒரு இரட்டையாட்சி (diarchy) யைச் சொல்வது குழப்பமாகத்தான் இருக்கிறது.

இத்தனை அனர்த்தத்துக்கும் ஒரு பெரிய காரணம் தர்மத்துக்கு ஈசுவரன், குழப்பத்துக்கு மாயை என்று இரட்டையை உண்டாக்கிக் கொண்டதுதான். பிரம்மத்துக்கு அதர்மத் தொடர்பே கற்பிக்கக்கூடாது என்ற உத்தம எண்ணமே காரணம். தர்மம், அதர்மம் எல்லாம் மாயை என்று தள்ளி, பிரம்மத்தைப் பரம சுத்தமாகவே காட்ட விரும்புகிறார்கள். உண்மையிலோ அதர்மம், தர்மம் எல்லாமே அதிலிருந்து உண்டானதால், அதை அவை கட்டுப்படுத்த முடியாது. ஏன் மனித தர்மத்தை அதற்கு அளவுகோலாக வைக்க வேண்டும்? முற்றிலும் அதர்மமாகவே இருக்கக்கூடச் சகல உரிமையும் பெற்ற அது, அதர்மத்துக்கு இடம் தந்தாலும் தர்மத்தையே இறுதியில் நிலை நாட்டுவதால் இதை எல்லாம் பல்சுவைக் காவியமாக இயற்றி லீலாவிநோதம் புரிகிறது என்றே பக்தர்களைப்போல் கொள்வதுதானே பொருத்தமாயிருக்கிறது? ஆக இரண்டுங்கெட்டான் மாயை, இரண்டுங் கெட்டான் ஈசுவரன் இருவரையும் விட்டு, பிரம்மத்தின் சக்தியான பராசக்தி ஒன்றைச் சொன்னாலே சரியாக இருக்கிறது. அவளே மாயை அவளே ஈசுவரன். **''ஸோகாமயத, பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி'', ''ப்ரஹ்ம வா இதமக்ர ஆஸீத்,**

ததாத்மானமேவாவேத் அஹம் ப்ரஹ்மாஸ் மீதி, தஸ்மாத் தத் ஸர்வம் அபவத்'' முதலான பல உபநிஷத வாக்கியங்களைப் பார்க்கும்போது, மாயை என்கிற இடை ஏஜென்ஸியே இல்லை. பிரம்மம் தன் ஆற்றலைத் தானே உணர்ந்து, தானே விரும்பி தன்னைப் பலவாகத் தோற்றுவித்துக் கொண்டது என்று இங் கெல்லாம் தெளிவாகப் பேசப்படுகின்றது. புத்திசாதுரியத்தால், பிரத்யட்சமான "தெள்ளிய பதப் பொருள்களை மாற்றுவது பரம்பொருளை மாற்றி விடாது. இத்தனையும் சொல்லி கடைசியில் நிற்பது என்னவெனில், மூளையறிவிற்கு மேம்பட்ட அநுபவ அறிவையே ஞானமாகக் கருதிய ஞானமார்க்கிகளும் மனித மூளையின் வரம்புகளுக்குள், மனிதனுக்கான தர்மாதர்ம நியதிகளுக்குள் பிரம்மத்தை விளக்கப் பார்க்கிற விசித்திரத்தைத்தான்! மேதஸ் சொன்னபடி ஞானியையும் மாயையான பகவதி மயக்குகிறாள்!

நம்முடைய தர்மாதர்மங்களில் கட்டுப்படுத்த வொண்ணாத பிரம்மம் தானாகவே தன் சக்தியைப் பல விதங்களில் வெளிக்காட்டுகிறது என்பதை இவர்கள் தெளிவாக ஒப்பாததால்தான், இந்தப் பலவற்றினின்று விடுபட்டு ஏக ஸத்தியத்தில் ஒன்றுவதற்கு அந்த சக்தியைப் பிரார்த்தித்தாலே போதும் என்பதை இவர்கள் ஏற்க முடியாமல் ஆயிற்று.

''லோகோ பின்ன ருசி:'' என்பதைத்தான் மீண்டும் நினைவு கொண்டு இந்த அத்வைதிகளின் அடிப்படை மனப்பான்மையை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். இவர்களுக்கு அன்பில் ருசியில்லாமல், சத்தியம் என்கிற தத்துவத்தில் மட்டும் ருசி இருக்கிறது. இதைத் தவறு என்று சொல்வதற்கில்லை.ஏனென்றால் இவர்களுக்கு அன்பில் ருசி இல்லாதது போலவே துவேஷத்திலும் ருசி இல்லை. சத்தியத்தை நுகர வேண்டும் என்ற ஒரே நாட்டத்தில் இருக்கிறார்கள். இந்த அடிப்படை மனப்போக்கு போற்றத்தக்கதே. அதைப் போற்றித்தான் பராசக்தியும் இவர்களை அன்பு வழிக்குக் கொண்டு வராமல் அவர்கள் விருப்பப்படியே சத்தியஸாக்ஷாத்காரம் அளிக்கிறாள். அவர்கள் மனப் போக்குக்கு ஏற்பவே, அத்வைதாநுபவம் அவர்களுக்கு ஸித்தித்ததும் தன் அருளால்தான் என்பதைக் காட்டாமலே ஒளித்துவிடுகிறாள்! மனம் அடங்குவதற்காக அவளை நடுவாந்தரத்தில் இவர்கள் ஏதோ ஒரு ஸகுண மூர்த்தியாக உபாசித்ததைக் கூட அவள் ஏற்று அவர்கள் விரும்பியபடி அதன் பின் ஞானத் தியானத்துக்கு அழைத்துச் சென்று, இறுதியில் முக்தியாகிய பலனைத்

தந்திருக்கிறாளே! ''அமானி'' என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சொல்வது போல் எத்துணை மானம் மரியாதை பாராட்டாதிருக்கிறாள்? அது சரி, இவளை ஒருவர் உபாசிப்பதால் மட்டும் இவளுக்கென்ன லாபம்? உபாசிக்காததாலும் நஷ்டமில்லை. பரமார்த்த சத்தியம் இவள்தான் என்று அவர்கள் அறியாவிட்டாலும் இவள் அறிவாள் அல்லவா? எனவே அதில் அவர்களுக்குள்ள நாட்டமே தன்னிடம் வைத்த பக்திதான் என்று கொண்டு நிர்விகல்ப சமாதியை அருள்கிறாள். அவர்களில் பலர்கூடப் பிறகு வ்யுத்தான நிலைக்கு வந்த போது தாங்களாகவே முக்தி அடைந்ததாக எண்ணுகிறார்கள். வெளிப் பிரக்ஞை கொஞ்சம் இருப்பதாகக் காண்கிற நிலையில் பழைய சுயப்பற்று — மோகம் — விடாததால் இப்படி நினைக்கிறார்கள் போலும். இங்கேதான் இவள் மேதஸ் கூறியபடி ஞானியையும் பலவந்தமாக மோகத்தில் இழுத்துத் தள்ளுவதைப் பார்க்கிறோம். ஏனெனில் தாங்கள் பிரம்மம் ஆகிவிட்ட நிர்விகல்ப சமாதியிலிருந்து ஞானிகள் தங்களைத் தாங்களே கலைத்துக் கொள்ள முடியாது. கலைபட்டதால்தான் பிறகு அவர்கள் இப்படி எண்ணவும், அதை எழுதி வைக்கவும், உபதேசிக்கவும் முடிந்தது. கலைத்த புண்ணியவதி இந்த மகாமாயைதான். இல்லாததை இருப்பதாகக் காட்டுகிற மாயையில், தானாக அடையாத சமாதி நிலையைத் தானாக அடைந்ததாக எண்ணுவதையும் சேர்க்க வேண்டியதுதானோ?

இப்படி இவர்களை மோகிக்கச் செய்வதற்குப் பரிகாரமாக நல்லதொரு வழியிலும் அவர்களை மோகிக்கச் செய்கிறாள் எனலாம். இந்த அத்வைத ஞானிகள் உலகம் உய்ய உபதேசம் தந்திருக்கிறார்கள் அல்லவா? தங்களது சாந்நித்தியத்தாலேயே பல வெந்த உள்ளங்களுக்குச் சந்தனம் பூசியிருக்கிறார்கள் அல்லவா? தங்களைப் போலவே அன்பைவிட சத்தியத்தில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு வழிகாட்டுகின்றனர் அல்லவா? உலகை உய்விக்க வேண்டும் என்பதை — லோகஸங்கிரஹத்தை — தங்கள் பணியாக இயற்றியிருக்கிறார்கள் அல்லவா? இதுதான் நல்ல திசையில் இவர்களுக்கு உண்டாக்கப்பட்ட மோகம். ஏனெனில், இவர்களது சித்தாந்தப்படி உலகம் என்று பிரம்மத்துக்குப் பிரிதாக ஏதுமில்லை. இவர்கள் உலகைப் பார்ப்பதாகத் தோன்றினாலும், அதுவும் பிரம்மமாகவேதான் காணப்படும். இந்த நிலையில் அந்தப் பொய்க்கு உய்வு தருவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அல்லது உலகமே பொய் என்கிற இன்னொரு அடிப்படைப்படியும் அந்தப் பொய்க்கு உய்வு தரவேண்டும் என்று உழைக்க வேண்டியதில்லை! லோக சங்கிரகமும் ஒரு பொய்தானே! ஆனாலும் பராசக்தியானவள்

உலகத்தைக் காணாமலே இருக்கக்கூடிய ஞானியை அல்லது பிரம்மமாகவே அதைக் காணக்கூடிய ஞானியை, தாற்காலிக சத்தியமாகவாவது விவகார உலகெனப் பார்க்க வைத்து, இவன் அன்பு மார்க்கத்தில் முயலாதவனாக இருந்தும்கூட இவன் மனதில் கருணை அமுதத்தை நிரப்பி, இவன் விவகார உலகினரிடம் அன்பு கொண்டு அவர்களை மேம்படுத்தப் பிரயாசை கொள்ளுமாறு செய்கிறாள்! இவன் அபேட்சியாத அன்பையும் தியாக சேவையையும் இவ்வாறு அவள் செய்வதும் பலவந்தமாக இழுத்துப் பிடித்து 'மோகத்தில்' தள்ளுவது தானே? இது ''நல்ல மோகம்''! 'அசுத்த' மாயையாயில்லாத 'சுத்த' மாயை!

அத்வைதிகள் அனைவரையும் கண்டித்ததாக எண்ணலாகாது. தங்களது சாதனா மார்க்கம் இது, தங்களது பிரமாண நூல் இது என்கிற சுயப் பற்றுக்களே இல்லாமல் அப்பழுக்கற்ற பூரண தியாகத்தோடு அத்வைத சித்திபெற்றவர்கள் எத்தனையோ மகா புருஷர்கள் உண்டு. அதில் பலர் நூல் எழுதியே இருக்கமாட்டார்கள்; உபதேசம் என்று வாத-விவாதங்களை வெளியிட்டும் இருக்கமாட்டார்கள்; இவர்கள் மூலம் நிகழ்ந்த கருணா சங்கற்ப பலத்தாலேயே மற்றும் பலருக்குக் கதிமோட்சம் தந்திருப்பார்கள்.

அத்வைதப் பிரதிஷ்டாபனாசாரியரான ஆதிசங்கர பகவத் பாதர்களை விட ஒரு சம்பூரண ஸ்வரூபமும் உண்டா? அவர்களைப் பற்றிக் குறை எழுத இந்தக் கையால் முடியாது.

அவரையும் கண்டித்து விமர்சனம் செய்கிறவர்கள், அதற்கு இடம் இருப்பதாக எண்ணுபவர்கள் இதை ஒப்பா மலிருக்கலாம். ஆனால், மாபெரும் ஞானிகளுக்கே தங்களது சித்தாந்தம், தங்களது பிரமாணம் என்று மோகப் பிடிப்பு இருக் கும்போது, போயும் போயும் எனக்கு ஸ்ரீ சங்கரரைக் குறைவு படுத்தி எழுத முடியாத மோகம் இருக்கக்கூடதா என்ன?

மேலே உள்ள அத்வைதிகளின் கண்டனமே ஸ்ரீ ஆசாரியர் அவலம்பித்த பல கருத்துக்களைக் கண்டித்ததாகத் தானே இருக்கிறது என்று அத்வைத சாஸ்திரங்களில் பரிசயம் உள்ளவர்கள் கேட்கலாம். அவரது பெயரைக் குறிப்பிடா விட்டாலும் மாயா வாதத்தை ஆட்சேபித்ததில் இத்துணை நேரமும் அவரையும் கண்டித்திருக்கிறேன் என்று இவர்கள் எண்ண நியாயமுண்டு.

எனவே — இந்த நூலுக்கு இது அவ்வளவாகத் தொடர் பில்லாத விஷயமாகத் தோன்றினாலும் கூட, நான் எழுதிய முதல்

நூலே 'ஜயஜய சங்கர' என்பதால் — ஸ்ரீ ஆதி ஆசாரியர்களைப் பற்றி அடியேனுடைய கருத்தைத் தெரிவிக்க முற்படுகிறேன். அவர்களது பாஷ்யத்தையும் பிரகரண கிரந்தங்களையும் பார்த்தால் அவற்றின் கம்பீரத்திலிருந்தும் ஒளியிலிருந்தும் அவர் பிரம்ம சாக்ஷாத்காரத்தைப் பற்றி வெறுமே எழுதியவர் மட்டுமல்ல, பிரம்மமாகவே இருந்தவர் என்பதை நன்கு உணரலாம். அவர் சத்திய வஸ்துவை அதுவாகவே இருந்து அநுபவித்த ஞானி. அதுபோல, அந்த ஏக சத்தியம் பலவாக வடிவெடுக்கக் காரணமாயிருந்த பராசக்தியிடமும் பரமப்ரேமையில் திளைத்த பக்த சிகாமணியாகவும் அவர் இருந்திருக்கிறார் என்பதற்கு அவரது அமிர்தமயமான தோத்திரங்கள் ஐயம் திரிபற சாட்சி பகருகின்றன. பராசக்தி கொண்ட பல தெய்வ வடிவங்களையும் நாவினிக்க, கண் பனிக்க, மனம் மணக்கப் பாடியிருக்கிறார். இவற்றில் பக்தியே முக்திநிலையாக இருப்பதைத் தெளிவாகக் கூறுகிறார். பராசக்தி அந்தந்த தெய்வங்களுக்குரிய லோகத்தில் பக்தி என்னும் முக்தி தருவதையும் சொல்கிறார்; அது மட்டுமின்றி இதே பராசக்தி அத்வைத முக்தி தருவதையும் செப்புகிறார்.

விரிவஞ்சி ஒரு சில உதாரணத்தோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

சிவானந்த லஹரியில் 'கஞ்சித் காலம்' (சுலோ-81) பக்தி அநுபவங்களையே ஜீவன் முக்தி இன்பமாகச் சொல்கிறது. 'ஆத்யா வித்யா' (சுலோ-91) பரமேச்வரன் அவித்தையை நீக்கி அத்வைத முக்தி அளிப்பதை சொல்லுகிறது. 'கதாவா கைலாஸே' (24) முதலிய சுலோகங்கள் நிரந்தரமான பிரம்ம கற்ப காலத்தை க்ஷணமாக நினைக்கிற அளவுக்கு நிரந்தரமான கைலாச லோக வாசத்தை சொல்கின்றன. ஸௌந்தர்ய லஹரியில் (சுலே-8)ஸ்ரீ லலிதா தேவியின் லோகமாகிய அமுதக்கடலின் நடுவே உள்ள மணித்தீவில் பக்தர்களின் வாசம் கூறப்படுகிறது. பராபக்தி எனப்படும் மிக உயர்ந்த பக்தி நிலையில் பக்தன் தன் இஷ்ட தெய்வமாக ஆவதை 'ஸாயுஜ்யம்' என்பர். இது அத்வைத முக்தியாகாது. பிரம்மத்தின் அமைதிக்கு பதில் இஷ்ட தெய்வத்தின் லீலை அனைத்தையும் தனதாக அநுபவிப்பதே இந்த ஸாயுஜ்யம். தேவியினுடைய ஸாயுஜ்யம் பெறுவது, ஸௌந்தர்ய லஹரி (சுலோ-22) ல் கூறப்படுகிறது. ஜீவத்துவமும் அதற்குரிய பாச மனமும் அடியோடு மறைந்த அத்வைத முக்தி அம்பிகையால் அருளப்படுவதை இத்துதியின் 99- வது சுலோகத்தில் சொல்கிறார். மனத்தை வேரோடு வெட்டி வீழ்த்தினாலே ஆத்மா தனி ஒன்றாக நிற்கும். மோக்ஷ நிலை உண்டாகும். ''கதா வா மனோ மே

ஸமூலம் விநச்யேத்?'', ''என்று என் மனம் வேரோடு நசிக்கும்?'' என்று நம் பொருட்டாக அவர் தேவி புஜங்கத்தில் கதறுகையில், ''என்று மனத்தை நீ வேரோடு மாய்த்து முக்தி தருவாய்?'' என்று தான் அன்னையைக் கேட்கிறார். ஸுப்ரஹ்மண்ய புஜங்கத்தில் கடைசி சுலோகத்தில் முருகனை 'முக்தி தானன்' என்று அழைப்பதும், அதன் பலச்ருதியில் 'ஸ்கந்தஸாயுஜ்யத்'தைக் கூறுவதும் கவனிக்கத்தக்கது. எவரும் பரப்பிரம்மமாக இயலும், ஆனாலும் பராசக்தியாக முடியாது என்பதை ஸ்ரீமந் நாராயணனைக் குறித்த ஷட்பதியில் ''சமுத்திரமும் அலையும் ஒன்றுதான் என்றாலும் அலைதான் சமுத்திரத் துடையதே அன்றி சமுத்திரம் அலையினுடையதல்லவே!'' என்று ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட வாக்குகளில் கூறுகிறார். ரூபமும், அரூபமும், சகுணமும் நிர்குணமும் ஆசாரியரது 'பிரபோதஸுதாகர'த்திலும், 'கோவிந்தாஷ்டகம்' முதலிய துதிகளிலும் முத்தையும் பவளத்தையும் கோத்தாற் போல மாறி மாறி ஒளிர்கின்றன. ''பஜகோவிந்த''த்தில், மனிதனைப் பார்த்து 'கோவிந்தனை வழிபடு' என்றும் சொல்கிறார்; 'தத்துவங்களை ஆராய்ந்து பிரம்மத்தில் புகு' என்றும் சொல்கிறார்; கோவிந்தனையே நோக்கி 'ஹே முராரே, சம்சார கடலில் இருந்து என்னைக் கரையேற்று' என்றும் வேண்டுகிறார். அன்னபூர்ணா அஷ்டகத்தில் மோட்ச வாயில் கதவைத் திறந்து விடுபவள் பராசக்தியே — என்கிறார்: **'மோக்ஷத்வார கவாடபாடனகரீ'!** பொதுவாக அத்வைதிகள், 'பக்தி, ஆரம்ப கால சாதனம்; பக்தியால் மனம் ஒருமை பெற்ற பின்பே ஆத்ம தியானத்தால் மோட்ச வாயில் திறக்கிறது' என்பர். இதற்கு ஆரம்ப கட்டத்தில் பராசக்தி உதவுவதால் மட்டும் அவளைத்தாம் 'ஒரு விதத்தில்' இப்படிக் குறிப்பிட்டதாக எவரும் எண்ணிவிடலாகாது என்பதால் போலும் மறுபடி இதே துதியில் ''நேரடியாகவே மோட்சத்தைத் தருபவளே'' — **''ஸாக்ஷான் மோக்ஷகரீ''** — என்று ஸ்பஷ்டமாக அழைக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, அவரே கடைசியில் பராசக்தியான ஸ்ரீ காஞ்சி காமகோடியுள்தான் இரண்டறக் கலந்ததாகக் கூறும் சரிதங்கள் உள்ளன.

ஆயினும், பக்தி கிரந்தங்களில் இப்படிச் சொல்கிற ஆசாரியர்கள், தமது வேதாந்த நூல்களிலும் பாஷ்யங்களிலும் முதலில் கண்ட அத்வைத வாதத்தைத்தான் மேற்கொள்கிறார். இதற்குக் காரணம், **பராசக்தியின் அவதாரமான அவரும் பராசக்தியைப் போலவே நடந்து கொண்டார்** என்றுதான் சொல்ல வேண்டும்! பக்தியில் இயல்பாகச் செல்லாமல்

சத்தியத்தையே தேடிய ஆராய்ச்சி மனங்களைப் பராசக்தி பக்தி வழிக்கு மாற்றவில்லை அல்லவா? சத்திய அன்வேஷணமும் மகத்தான குறிக்கோளே என்பதால் அவர்களது மனப்போக்கிலிருந்தே தொடங்கி அதற்கு அநுகூலமாகவே அவர்களை ஒவ்வொரு படியாக ஏற்றி வைத்து அத்வைத முக்திக்குக் கொண்டு விட்டாள் அல்லவா? ஆசாரியர்களும் இப்படியே இந்த மனப் போக்கினரை உத்தேசித்து அவர்களுக்குப் புரிகிற பாஷையில், அவர்களுக்கு ஏற்புடைய ரீதியில் அத்வைத சாதனையை அமைத்துத் தந்திருக்கிறார் எனலாம். பராசக்தியை உள்ளபடி சொல்லிவிட்டால், இவர்கள் தியானத்தை விட்டு பக்திக்குச் சஞ்சலித்து அது சுபாவத்துக்குப் பொருந்தாமல் இரண்டுங்கெட்டானாகத் தத்தளிக்க நேரும் என்றே ஈசுவரனை இரண்டுங்கெட்டானாக்குகிற மாயையைப் பெரிதாக விளக்கி, அன்பின் மாயையைச் செய்துவிட்டார் எனலாம்! தாம் அன்பே உருவாயிருந்தும் பாஷ்யங்களில் பிரேமை என்கிற வார்த்தையே வராமல் எழுதித் தீர்த்து, ஒரு குறிப்பிட்ட சுபாவிகளிடம் தமது மகா பிரேமையைக் காட்டி மாயம் செய்துவிட்டார் எனலாம்!

பக்தி செலுத்திப் பராசக்தியிடமிருந்து அத்வைத முக்தி கேட்கிறவர்களுக்காக அவர் ஏன் இதுபோல் பாஷ்யம் செய்ய வில்லை என்று கேட்கலாம். பக்தி செலுத்தாதவர்களுக்கே பராசக்திதான் அத்வைத மோட்சம் தருகிறாள் என்னும் போது, பக்திசெலுத்துகிறவர்களுக்கு அந்த ஆர்வம் இருந்து விட்டாலே போதும், அவளாக இன்னும் விரைவோடு தானே பிரம்ம சாட் சாத்காரம் தருகிறாள். அதற்கு வேறு நூல் எதற்கு? பாஷ்யம் எதற்கு? இயல்பான அன்பைக் கொட்டித் தீர்ப்பதற்கு சித்தாந்த வாதப்பிரதிவாதங்கள் எதற்கு? ஆசாரியர் அருளிய துதிகளை மன முருகி ஓதினாலே போதுமே! பராசக்தி பிரஸன்னமாகுவாளே! அவளே வந்தபின் அவளிடமே முக்தி வரத்தைக் கேட்டுக் கொள்ளலாமே! இதனால்தான் பக்தி பூர்வமாகத் தோத் திரங்கள் மட்டும் தந்தாரேயன்றி, பாஷ்யங்கள் தரவில்லை போலும்!

பக்தியையும் அத்வைத முக்திக்கு நேர் சாதனமாக ஆசாரியர்கள் கருதியது, அவரது துதிகளில் மட்டுமின்றி வேறு சில நூல்களில் கூட அவரையும் அறியாமலோ என்னவோ பீறிக் கொண்டுவந்து விடுகிறது. உதாரணமாக 'பிரச்னோத்தர ரத்ன மாலிகை'யில் சம்ஸார விமோசனத்துக்கு வழி என்ன என்ற கேள்வியை எழுப்புகிறார். 'ஆத்ம விசாரம்' என்றுதானே இதற்கு விடை எதிர்பார்க்கிறோம்? ஆனால் இங்கே ஆசாரியாளின் பக்தி இதயம், ''முகுந்தனிடம் பக்தி செலுத்துவதே விடுதலைக்கு

வழி'' என்கிறது. அடுத்து ''முகுந்தன் யார்?'' என்ற கேள்வி. ''நம்முடைய அஞ்ஞானம் நீங்கத் துணைபுரிபவன்'' என்கிறார். அஞ்ஞான நீக்கம்தான் அத்வைதிகளின் அதிமையமான சாதனை. அஞ்ஞானம் நீங்கியவுடன் ஞானஸ்வரூபமான ஆத்மா தனியொன்றாக ஒளிர்கிறது. இதுவே முக்தி. இங்கே அடுத்தடுத்துப் பராசக்தியாலேயே ஞானமுக்தி சித்திப்பதை வலியுறுத்துகிறார் சங்கரபகவத்பாதர்.

அவரவரது இஷ்டதெய்வத்தின் மூலம் அவரவரும் பிரம்மத்தைப் பிடிக்கலாம் என்ற சமரஸச் சிகர உணர்வில் நின்று ஷண்மத ஸ்தாபனம் செய்தவர் அல்லவா சங்கரர்? இதே ரீதியில் பக்தி தேவைப்படாத சத்தியத் தேட்டத்திலும், உபநிஷதப் பிரமாணத்திலும் பற்றுக் கொண்டவர் விஷயத்தில், ''சரி, இது இவர்களுடைய இஷ்ட தெய்வம்'' என்று கருதி, அதற்கு அநுசரணையாக பாஷ்யங்களைச் செய்துவிட்டார் எனலாம்!

பக்திக் கிரந்தம் எதுவுமே சங்கரருடையதல்ல என்று கூசாமல் சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இவர்களும் கூட மேலே சொன்ன 'பிரச்னோத்தர ரத்ன மாலிகை'யையும் 'விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்ய'த்தையும் சங்கரர் அருளியதாக ஒப்புக் கொள்கிறார்கள். இந்த பாஷ்யத்திலும் முகுந்தன் என்றால் 'முக்தியைத் தருகிறவன்' என்றே தெளிவாகச் செப்புகிறார். மேலும், இந்த பாஷ்யத்தில் 'ஸ்வாஸ்ய:' போன்ற பெயர்களுக்குப் பொருள் தருகையில் சங்கரர் எப்பேர்ப்பட்ட பக்தி நனி துளும்பும் உள்ளத்தினராகவும், புனிதமான சௌந்தரியங்களை மாந்தி மாந்தி ரசித்த கவி மனத்தவராகவும் இருந்திருக்கிறார் என்று தெரிகிறது. இவர் சௌந்தரியப் பிரபஞ்சத்தைப் பொய்யாக நினைத்தாலொழிய முக்தி இல்லை என்று எண்ணியிருக்க முடியுமா? 'சுபேக்ஷண:' என்பதற்குப் பொருள் கூறும்போது, பரமன் தனது கண்ணோக்காலேயே அவித்தையை அழித்து மோட்சத்தை வேண்டுவோருக்கு மோட்சத்தையும், போகத்தை வேண்டு வோருக்குப் போகத்தையும் தருவதாக ஐயம் திரிபின்றிக் கூறுகிறார்.

உலகை மறந்து பிரம்மத்தைக் கண்டவர் மட்டும் அல்ல அவர். உலகையும் பிரம்மமாகக் கண்டவர். உலகம் மித்யை (பொய்) என்று சொன்னவர் மட்டுமல்ல; உலகமும் பிரம்மமே என்று சொன்னவர். 'அது பூர்ணம்; இது சூனியம்' என்னாமல் 'அதுவும் பூர்ணம், இதுவும் பூர்ணம்' என்றே உபநிஷதம் தொடங்குகிறதல்லவா? இதன்படி அனந்தப் பிரபஞ்சத்தையும் பிரம்மமாகக் கண்டவரே சங்கரர். 'ஜகத்மித்யா' என்று சங்கரர்

கூறியது மட்டும் ஜகத் பிரசித்தமாகியிருக்கிறது. ஆனால் அவரே, அவரது அத்வைத நூல்களின் முடிமணியான 'விவேக சூடாமணி'யில் (391) **''ஸத் ஏவ இதம் ஸர்வம் ஜகத்''** — 'இதோவுள்ள இந்த ஜகமனைத்தும் ஸத்தியமே' என்கிறார். ''இதோ உள்ள'' என்று சொன்னதும் போதாதோ என்று, **''அவகதம் வாங்மனஸயோ:''** — ''வாக்குக்கும் மனத்துக்கும் பிடிபடும் இதே உலகைத்தான் சொல்கிறேன்'' என்று தெளிவுபடுத்துகிறார்; ஆம், வாக்கு மனமிறந்த பிரம்ம நிர்வாணத்தையே முக்தியாக கூறும் நூலில்! மூன்று சுலோகங்களுக்கு அப்பால் மீண்டும் **''பிரம்ம ஏதத் ஜகத்''** — ''இந்த உலகம் பிரம்மமே'' என்கிறார்.

பின் ஏன் மித்யை என்றும் சொன்னார்? குழந்தை ஐஸ்கட்டியை எடுத்துத் தின்னப்போகிறது. அப்போது என்ன சொல்கிறோம்? ''ஊ சுடும், அதைத் தொடாதே'' என்கிறோம். கொஞ்சம் ருசி பார்க்க அநுமதித்தாலும் குழந்தை அதை மிதமிஞ்சித் தின்ன ஆசை கொண்டுவிடும். இதனால் ஜலதோஷ ஜுரத்தை வரவழைத்துக் கொள்ளும் என்று நமக்குத் தெரியும். அதனால்தான் குழந்தை அதைத் துளிக்கூடத் தின்றுவிடக் கூடாது எனக் கருதி, குளிர்ந்த ஐஸைக் கொதிக்கும் வஸ்துவாக வர்ணிக்கிறோம். உலக ஐஸை அளவறிந்து பயன்படுத்திக் கொள்ள மாந்தருக்குத் தெரிவதில்லை. ஆசை கட்டுமீறி எழுந்து, உலகப் பொருள்களைத் தனக்கென்றே சேர்த்துக்கொண்டு பாபத்தில் விழுகிறோம்; பராசக்தியை மறக்கிறோம்; ஆத்மாவாகிய பிரம்மத்தை மறக்கிறோம். இப்படி ஜுரத்தை வரவழைத்துக் கொள்கிறோமே என்று குழந்தைகளான நம்மிடம் பரிவு கொண்ட சங்கரத் தாயார், குளிர்ச்சியான ஐஸை நேர் மாறாகச் சுடும் என்பதே போல, ஸத்யப் பிரம்மமான உலகைப் பொய்யானது என்கிறார். உலகம் பகவத்லீலை என்றே சொன்ன பக்தசிகாமணிகள்கூட மக்கள் உலகவாழ்வில் ஆசையை விட்டொழிக்க வேண்டும் என்றுதானே திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள்? ''உள்ளது உள்ளபடிச் சொல்வது சத்தியமல்ல; நல்லதைச் சொல்வதுதான் சத்தியம்; தீயதைச் சொல்வதெல்லாம் அசத்தியம்'' என்று பாரதம் கூறுகிறது. அவ்விதத்தில் உலகு நல்லதாகவும் கொள்ளத் தக்கதாயினும், அதை நாம் தவறாகவே பயன்படுத்திக் கொள்கிற தசையில் இருக்கும்போது நமக்கு நல்லதைச் சொல்கிறார் சங்கரர். எனவே சத்தியத்தை மித்யை என்று அவர் கூறுவதும் சத்தியம்தான். வேரின் ஆராய்ச்சியில் இறங்கினால் விருட்சத்தை விட்டுவிடவேண்டும் என்று முன்னமே கண்டபடிக்கும், உலகின் ஆதாரத்தைக் காண ஸாதனை

செய்யும்போது, சித்தம் இரு திசையில் சிதறாதிருக்க வேண்டுமாயின் உலகத்தை ஒதுக்கத்தானே வேண்டும்? சத்திய சாட்சாத்காரம் வந்தபின் பராசக்தி இந்த உலகை ஒரே சமயத்தில் இவனது அந்தரங்கத்தில் பிரம்மமாகவும் அநுபவிக்கச் செய்து, மறுபுறம் இவன் அதன் குறைகளைக் கண்டு உய்வுதர உழைக்குமாறும் செய்யத்தானே போகிறாள்?

பொது மக்களின் பொது இயல்பு, ஞானசாதகர்களின் தனிப்பட்ட மனப்பான்மை, சங்கரர் அவதரித்த காலத்துக்கே உரிய சந்தர்ப்பச் சூழ்நிலை (ஒருபுறம் கடவுளே இல்லாத, காரியமே இல்லாத பௌத்தம்; மறுபுறம் கடவுளே இல்லாத, ஆனால் காரியம் மட்டும் இருக்கிற பூர்வமீமாம்சை; இடையில் இரண்டுங்கெட்டானாக அறிவும் நெறியும் குலைந்த மூடபக்தி ஆகியவற்றில் நாடு சிக்கித் தவித்தபோது வந்தவர் அன்றோ அவர்?) — இவை தாம் ஸ்ரீ ஆசாரியர்களை அவரது அத்வைத கிரந்தங்களில் பராசக்திப் பிரபாவத்தையும், பக்தி மகிமையையும் மறந்தாற்போலப் பேச வைத்திருக்கிறது எனலாம்*. சங்கரருக்கு முன்னரே அத்வைத சம்பிரதாயம் இருந்ததையும் இங்கு கவனிக்க வேண்டும். கௌடபாதர், திரவிடசாரியர் போன்ற பண்டித பர்வதங்கள் அத்வைத சாஸ்திரங்களை ஸ்ரீ சங்கரருக்கு முன்பே தந்திருக்கிறார்கள். இந்த மரபில் நிலவிவந்த கொள்கைகளை மறுத்துப் பேசுவதற்குச் சம்பிரதாயக் கட்டுப்பாடு மிகுந்த ஆசாரியர்கள் முற்பட்டிருக்க மாட்டார்கள் அல்லவா? ஆயினும் அவர் எப்படிப்பட்ட தீரராக இருந்தால் 'ஞானமார்க்கம்', 'ஞானம் ஒன்றே மார்க்கம்' என்று திரும்பத் திரும்ப இந்நூல்களில் சொல்லியிருந்தும்கூட ஷண்மத ஸ்தாபனம் செய்திருப்பார்? பிரம்ம அநுபவம் தவிர மீதமனைத்தும் — ஈசுவரனாகிய பராசக்தி உபாசனையும் கூட — அவித்யா தொடர்புள்ளது என்றவரே தமது மடங்களில் ஸ்ரீவித்யா பூஜையை மையமாக வைத்தார் எனில் அவரது உள்ளத்தின் துணிவையும் சத்தியத்தையும் என்னென்பது? இன்றும்

★ அத்வைத பாஷ்ய நூல்களிலுமே ஆசார்யர்கள் ஈச்வர கிருபையாலேயே ப்ரம்ம ஞானம் கிடைப்பதாகக் காட்டியிருப்பது பற்றி ஸ்ரீ காஞ்சி மகா பெரியவர்களின் அருளுரைத் தொகுப்பான 'தெய்வத்தின் குரல்', 4-ம் பகுதியில் 'போர் தீர்ந்து அமைதி காண' என்ற பேருரையில் 'ஆதி சங்கரரும் கூறும் ஈசனது ஞான அருள்' எனும் பிரிவு பார்க்க.

சங்கர மடங்களில் எல்லாம் அத்வைத உபதேசத்தை விட பூஜை என்பதுதானே மையமான, முக்கியமான நிகழ்ச்சியாக உள்ளது?

மேலே அத்வைதிகளைக் குறைகூறினாலுங்கூட உலக மத சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் பார்க்கும்போது அத்வைதிகளைப் போல சகலப் பிற சித்தாந்தங்களையும் ஒரு நிலைவரையிலாவது அனுமதிக்கிற தாராள மனம் படைத்தவர் வேறெந்த சித்தாந்தத்திலும் இல்லவே இல்லை. மற்றவர்களை அத்வைதிகள் மந்த, மத்யம அதிகாரிகள் என்றாலும்கூட, அவர்களும் முன்னேறி தங்கள் நிலைக்கு வருவார்கள் என்றும் நம்பினர். ஆனால் மற்ற சம்பிரதாயஸ்தர்களோ, தங்களைத் தவிர பிறர் யாவரும் மந்தமானவர் என்று நினைத்தது மட்டு மில்லை; இதர சித்தாந்திகள் யாவரும் தவறான வழியில் போகிற பாவிகள் என்றே தயங்காமல் தூற்றுவார்கள்.

பரம அத்வைத அநுபூதிமான்களான சுகப்ரம்மம், நம்மாழ்வார், மாணிக்கவாசகர், தாயுமானவர், அருணகிரிநாதர், மதுசூதன சரஸ்வதி, அப்பைய தீக்ஷதர், சதாசிவப்ரம்மேந்திரர் போன்றவர்கள் ஒப்பற்ற பக்திமான்களாக நெஞ்சை அள்ளும் பக்தி இலக்கியங்களும் தந்திருக்கிறார்கள். சாந்தி ஆனந்தத்தைப் போலவே லீலா ஆனந்தத்தையும் இவர்கள் அநுபவித்தார்கள்! நிர்குணப் பெருவெளி போலவே, சுந்தர ரூபங்களையும் அநுபவித்தார்கள். ஸ்ரீ காமகோடி பீடத்திலே ஐம்பத்தொன்பதாவது ஆசாரியர்களாக முன்னூ றாண்டுகளுக்கு முன் விளங்கிய ஸ்ரீ போதேந்திரர்கள்தாம் தென்னகத்தில் பகவந்நாம சித்தாந்தத்தையும் பஜனை மார்க்கத்தையும் நிலைநிறுத்திய மகாபக்தர். 'பராசக்தியைப் பற்றிப் பொருட்டில்லை; பிரம்மத்தையே தியானிப்போம்' என்ற அத்வைதிகளுக்கு பராசக்தியும் ஆதிசங்கரரும் பெருமனத்தோடு இடம் தந்தனர். ஆனால் ஸ்ரீ போதேந்திரர்களோ இவ்விதம் செய்வது ஸகுண பிரம்மத்தை அவமதிக்கிற குற்றமாகும் என்று எடுத்தியம்பினார். ஸகுண பிரம்மம் என்பதுதான் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்து நடத்துகிற பராசக்தி.

ஆகா, இந்த மகான்களின் வரிசையில் பிற்காலத்தே வந்த பரமஹம்ஸ ராமகிருஷ்ணரை என்ன சொல்ல?

பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் எந்த சம்பிரதாயப் பற்றும், மடம் போன்ற நிறுவனப் பற்றும் இல்லாமல் வந்தார். தம்மைக் காலிக்

குழலாக்கிக் கொண்டார். காலிக்குழல் வழியாகக் காளி பராசக்தியே கானம் செய்தாள். இவர் அத்வைத முக்தியை அநுபவித்தவர். இம்மார்க்கத்தில் இவர் காட்டிய அற்புத ஈடுபாடு காரணமாக நிர்விகல்ப சமாதியை வெகுவிரைவில் இவருக்கு அளித்தாள்! அந்த ஈடுபாட்டின் அற்புதம் எப்படிப்பட்டது தெரியுமா? தமது அருமைக் காளியின் தலையையே சீவி எறிந்தாராம் அவர்! அவரே அப்படிச் சொல்லியிருக்கிறார்! அதாவது தம் பக்தி மனத்தில் எப்போதும் நின்ற அன்பு அன்னையைக் கத்தியால் வெட்டி எறிவதுபோல் பாவித்தபின்தான் அவரால் அத்வைதத்தில் தோய முடிந்தது. அத்வைதத்தில் தோயவேண்டும் என்ற ஈடுபாட்டில் இந்த மாத்ருஹத்திக்கும் தயாராக இருந்தார் மதுர ராமகிருஷ்ணர்! அதாவது, ஒப்பற்ற தாயன்பைக்கூட தமக்கென்று வைத்துக் கொள்ளாமல் சத்தியத்தையே நாடினார். காளியும் இந்த ஈடுபாட்டையே — கத்தியால் தன்னை வெட்டியதையே — மகா பூஜையாக மதித்து மனமுவந்து அவருக்கு அத்வைத ஸித்தி அளித்தாள். எல்லா மதங்களும் உண்மையானவை என்று அவர் மூலம் உலகுக்கு நிரூபித்துக்காட்ட பராசக்தி திருவுளம் கொண்டிருந்தாள். அத்வைதத்தையும் நிரூபித்துக்காட்ட எண்ணினாள் — அதுவும் மரபுப்படியே. அவள் மரபுக்குத்தான் எத்தனை அற்புதமாகக் கட்டுப்படுகிறாள்! ராமகிருஷ்ணரின் குரு தோதாபுரி, சம்பிரதாய அத்வைதப்படி ஸகுண உபாஸனையை விளக்கும் ஞான மார்க்கியாகையால், அதற்கேற்ப ஆதிபராசக்தி தானே வெட்டுண்டு, வெட்டியதற்குப் பலனாக அத்வைத ஸித்தியை அருமைப் பிள்ளைக்கு அருளினாள்! பிறகு அவருக்கும் உண்மையை உணர்த்தினாள். ''மோக்ஷத்வார கவாட பாடனகரீ'' என்று சங்கரர் சொன்னதையே இதன்பின் வெகுவெகு அழுத்தமாக பற்பல சந்தர்ப்பங்களிலும் பரமஹம்ஸ பரம புருஷர் எடுத்துரைக்கலானார்: ''எங்கம்மா இஷ்டப்பட்டாலொழிய மோக்ஷ வாசற் கதவு திறக்காது'' என்று அடித்துச் சொன்னார். அவளிடம் பக்தி செய்து கொண்டிருந்தாலே போதும், பூரண சரணாகதி நிலையில் அவளே மோக்ஷம் தருவாள், தனியாக ஞான சாதனை என்று எதுவும் செய்ய வேண்டாம் என்று வெள்ளிடை மலையாக விளக்கிக் கூறினார் ஸ்ரீ பரமஹம்ஸர். அவரைப் போல் பக்தியையே அத்வைத முக்திக்கும் நேர் சாதனமாகச் சொன்னவர் வேறெவருமில்லை.

ஞானிகளைப் பற்றிக் கூறும்போது சமீபத்தில் அத்வைத ஸ்வரூபமாக நம் கண் முன் கண்ட பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளைப் பற்றி அவசியம் சொல்ல வேண்டும். (உபநிஷத மகாவாக்கியங்

களைப் பற்றிக் கேள்வியே படாத நிலையில் இவருக்குப் பரம அத்வைத ஸமாதி ஸித்தித்தது இங்கே குறிப்பிடத்தக்கது.) அவர் தம்மை அண்டியவர்களுக்கு ஆத்மனைத் தவிர எந்த தெய்வ வழிபாடு பற்றியோ, மந்திர ஜபம் குறித்தோ, ஹோமாதி கர்மங்கள் குறித்தோ பேச மாட்டார். கடைந்தெடுத்த அத்வைதி அவர். இதர ஆசார்யர்களைப் போலக்கூட விட்டுக் கொடுத்து, தாஜா செய்து பிடிப்பவர் அல்ல. மின் வெட்டு மாதிரி ஞான விசாரம் ஒன்றையே சொல்வார். 'நான் யார்?' என்கிற விசாரத்தில் மனத்தை முழுக்க வேண்டும் என்பார். வேறு எந்தச் செயலுக்கும் — பக்திக்கும்கூட — இங்கு இடமில்லைதான். ரமண மகரிஷிகள் மெய்யாகவே 'நானை' அறிந்தவர் — இந்த உடலும் மனமும் நானல்ல என்று பிரத்தியட்சமாக நமக்கு காட்டியவர். புற்று நோய்க்காகத் தமது உடலில் அறுவை செய்த போதுகூட மயக்க மருந்து இன்றியே சாந்தஸ்வரூபமாக இருந்த மகாநுபவர் அன்றோ? இவ்விதம் தன்னையறிந்து கொண்டவர், பிறரும் தன்னையறிய ஆத்மவிசாரத்தையே மார்க்கமாகச் சொன்னார். நாகரிக விஞ்ஞான உலகில் பலருக்கு உருவம் படைத்த கடவுளிடம் பக்தி செலுத்த வொண்ணாது என்பதால், குறிப்பாக மேல்நாட்டினர் இவரை நாடி வரப் போகிறார்கள் என்பதால், பராசக்தியே இப்படி அவரை உபதேசிக்கவைத்தாள் எனலாம். என்றாலும் பக்தி மார்க்கத்துக்கு உரிய ஒரு சில உள்ளங்கள் அவரிடம் வந்தபோது அவர் பக்தியை இதயமார உயர்த்திப் பேசுவதைப் பார்க்கிறோம். எத்தனையோ எடுத்துக்காட்டு தரலாம். பிரம்மத்தைத் தியானம் செய்வது என்றில்லாமல், கடவுள் என்கிற பராசக்தியிடம் பூரண சரணாகதி செய்து விட்டு, தனக்கென்று ஏதுமே இல்லாமலிருந்தால் இந்த பக்தியே ஞானம், இதுவும் ஞான சாதனைக்குப் பலனான அதே முக்தியைத் தரும் என்று பல இடங்களில் கூறுகிறார்.

முக்தி தானாகப் பெறுவதல்ல, பராசக்தியால் வழங்கப் பெறுவதே என்பதையும் இவரது வாக்கால் பரம ஸ்பஷ்டமாக உணரலாம்.

பால் ப்ரன்டனிடம் மகரிஷி பேசுகிறார்:

"ஒரு மனிதன் தன்னுடைய மெய்யான நானை முதன் முதலில் அறிகிறபோது (அதாவது சகலத்துக்கும் மூலமான பிரம்மத்தை அறிகிறபோது), வேறு எதுவோ ஒன்று அவனது உயிரின் ஆழ்மட்டங்களிலிருந்து எழுச்சி கொண்டு அவனை அப்படியே ஆட் கொள்கிறது (Something else arises from the

depths of his being and takes possession of him). இந்த ஏதோ ஒன்றுதான் இவனது மனத்துக்கு ஆதாரமாயிருப்பது; அது எல்லையில்லாதது, என்றும் உள்ளது, தெய்விகமானது....''

சாதகனுக்கு வேறாகத் தோன்றி இவனை ஆட்கொண்டு, பிரம்மத்தில் முழுக்குவது பராசக்தி தவிர வேறு யார்?

''ஞானியை பலாத்காரமாக மோகத்தில் தள்ளுவாள் பராசக்தி'' என்றார் மேத மகரிஷி. ரமண மகரிஷிகளோ ஞான சாதகர்களை அவள் பலாத்காரமாக பிரம்மஞானத்தில் தள்ளுவதைச் சொல்கிறார்!

பிறிதோர் இடத்தில் மகரிஷி பகருகிறார்: ''நான் என்கிற எண்ணம் எங்கே தொடங்குகிறது என்று கண்டறிய முயன்று கொண்டேயிரு. அந்தத் தியானத்திலேயே விடாமல் செல்வாயாக. உன் கவனத்தை உள்ளுக்குள்ளேயே திருப்பிக் கொள்ளு. ஒரு நாள் சிந்தனைச் சகடத்தின் வேகம் குறையத் தொடங்கும். விளக்கவொண்ணாத விந்தையான விதத்தில் இந்திரியங்களுக்கு அதீதமான ஒரு பேருணர்வு பிறக்கும் (an intuition will mysteriously arise)...''

இந்த 'மிஸ்டரி' பராசக்தி செய்வதன்றி வேறென்ன?

இனி *Talks with Sri Ramana Maharshi* (1968 ed.) என்ற உபநிஷத துல்லியமான நூலில் சில பகுதிகளைப் பார்ப்போம்:

சீடர் : 'நான்' என்று தவறாக எதையோ எண்ணுவதாகச் சொல்கிறீர்கள். இந்த 'நானை' எப்படி நீக்குவது?

மகரிஷி: நானே எப்படி நானை விலக்கி கொள்ள முடியும்? நீ செய்ய வேண்டியதெல்லாம், இந்த நான் என்பது எங்கே தோன்றுகிறது என்று விசாரம் செய்து கொண்டே, இந்த விசாரத்திலேயே நிலையாக நிற்பதுதான். உன் சொந்த முயற்சிகள் இவ்வளவு தூரம் வரைதான் போக முடியும். அதன் பிறகு, எல்லாவற்றுக்கும் அப்பால் உள்ள ஒன்றே என்ன செய்ய வேண்டும் என்பதைக் கவனித்துக் கொள்ளும். இவ்விடத்தில் நீ ஒன்றும் செய்யாமல் கிடக்க வேண்டியவன் தான். எந்த சொந்த முயற்சியும் இந்த இடத்தை அடைய முடியாது. (You are helpless there. No effort can reach it.) *(பக்கம் 163)*

சீ : மாயை என்பது பொய்த் தோற்றம்தானே?

ம : சத்தியத்தின் பல வெளிப்பாடுகளையே மாயை என்பது குறிக்கிறது. எனவே மாயையும் சத்தியமேதான்.

(பக்கம் 16)

சீ : பிரம்மமே சத்தியம், உலகம் பொய்த் தோற்றம் என்பது ஸ்ரீ சங்கராசாரியரின் மையமான சொற்றொடராக உள்ளது. வேறு பலர் உலகம் சத்தியமானது என்கிறார்களே?

ம : இரண்டும் உண்மையே. 'சத்தியம் என்பது எப்போதும் ஒரே போல் இருக்க வேண்டும்; ஆனால் உலகம் மாறிக் கொண்டே இருக்கிறது; ஆகையால் உலகம் பொய்' என்ற விளக்கத்துடன் சாதகன் சாதனையைத் தொடங்குகிறான். கடைசியில் ஆத்மாவை எய்துகிறான். அங்கு யாவும் ஒன்றாகியிருக்கும் ஐக்கியத்தையே அநுபவிக்கிறான். அப்போது, முதலில் பொய் என்று ஒதுக்கித் தள்ளியதும்கூட இந்த சத்திய ஏகத்தின் அங்கம்தான் என்று உணருகிறான்.

(பக்கம் 41)

பிரம்மம் எங்குமே ஏற்றத் தாழ்வற நிறைந்திருக்கையில் தாம் ஏன் வீட்டிலிருந்து திருவண்ணாமலைக்கு ஓடி வந்த பின்னரே பிரம்மாநுபவத்தில் நிலை நின்றிருக்க வேண்டும் என்பதை ஒரு முறை மகரிஷி சிந்தித்து, ''நான் எப்படி இங்கு கவர்ந்திழுக்கப்பட்டேன்? அருணாசலத்தினால்தான், அந்தச் சக்தியை மறுக்கவே முடியாது'' என்கிறார். *(பக்கம் 228)*

கேள்வி: அருணாசலத்தைச் சுற்றியுள்ள முப்பது மைல்களுக்குள் வாழ்கிறவர்களும், இங்கே இறப்பவர்களும், தாங்கள் கோராமலே முக்தி பெறுகிறார்கள் எனப்படுகிறதே (அருணாசலபுராணத்தில்)! பொதுவாக ஞானத்தால்தான் முக்தி கிடைக்கும் என்றும் இதைப் பெறுதல் கடினம் என்றும் கூறப்படுகிறது. அப்படியிருக்க இந்த மலையை ஒட்டி வாழ்வதாலோ சாவதாலோ எப்படி முக்தி கிட்டும்?

மகரிஷி: ''இது என் ஆக்ஞை'' என்று சிவபெருமானே சொல்கிறார். இங்கு வசிப்பவர்களுக்கு உபதேசம், தீக்ஷை எதுவும் தேவையில்லாமலே, அவர்கள் முக்தி பெறுவர். அப்படி சிவாக்ஞை. *(பக்கம் 448)*

மகரிஷிகள் புராண வாக்கை ஒப்புக் கொண்டு பேசுகிறார். கர்ம பலன் தரும் பராசக்தி, ஞான சாதனை என்ற கர்மத்தை மெச்சி முக்தி

தருவது மட்டுமின்றி, ஒருவரது கர்மத்தையே கருதாமல், சாதனையே புரியாதோருக்கும் முக்தி தர முடியும் என்பதைக் கூட ஒப்பிப் பேசுகிறார்!

'ஆத்மாநுபவம் பெற ஈசுவராநுக்கிரகம் தேவையா அல்லது ஜீவனின் மனப்பூர்வமான விடா முயற்சிகள் தாமாக அவனை அந்நிலைக்கு இட்டுச் செல்லுமா?' என்பது குறித்து உரையாடல் திரும்பியது. மகரிஷிகளின் பவித்ரமான முக மண்டலத்தில் வருணனைக்கெட்டாததொரு மந்தஹாஸம் தவழ்ந்தது — அதன் ஒளி எங்கும் வியாபித்து, அவரைச் சுற்றி இருந்தோர் மீதெல்லாம் அந்த ஒளி சிந்தியது. சர்வ நிச்சயம் என்கிற உறுதியும், சத்திய அநுபவத்தின் மணிநாதமும் கலந்த குரலில் அவர் கூறினார்: **''ஆத்ம சாக்ஷாத்காரம் பெறுவதற்கு ஈசுவராநுக்கிரகம் இன்றியமையாதது.''** *(பக்கம் 33)*

சீ : ஈசுவரன், விஷ்ணு முதலிய தேவதைகளும், அவர்களது புண்ய லோகங்களாகிய கைலாசம், வைகுண்டம் முதலியனவும் மெய்யாக உள்ளனவா?

ம : இவையெல்லாம் நீ இந்த உடலில் இருப்பது எந்த அளவு உண்மையோ, அந்த அளவு உண்மையானவை.

சீ : என் உடலானது விவகாரத்தில் உண்மையாகக் காணப்படுகிற மாதிரியா அவையும்? அல்லது அவை கற்பனையா?

ம : அவை இருக்கவே செய்கின்றன.

சீ : முயல் கொம்புமாதிரி ஒருக்காலும் இல்லாத வஸ்துக்களையும், கானல் நீர் மாதிரி அரைகுறை உண்மைகளையும்கூடக் கற்பனை செய்து விடலாம். ஆனால் நம் கற்பனையாக இல்லாத யதார்த்த உண்மைகள் இருக்கின்றன அல்லவா? சிவன், விஷ்ணு முதலியவர்கள் இவ்வாறு உண்மையாக வாழுகிறவர்களா?

ம : ஆமாம்.

சீ : அவர்கள் பிரளயத்தில் அழிந்து போய்விடுகிறவர்களா?

ம : ஏனோ? மனிதனே ஆத்மாநுபவம் பெற்றுவிட்டால் பிரளயத்தை மீறி நிற்கிறான். இவனை விட அனந்தம் மடங்கு ஞானமும், சக்தியும் பெற்ற தேவதை ஏன் பிரளயத்தில் அழிய வேண்டும்? (பக்கம் 35)

ம : இந்தப் பிரபஞ்சம் ஒரு நாடகமாகத் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. ஒன்றேயான வஸ்து பலவாகத் தோன்றுகிறது. தானே பார்ப்பவனாகவும் பார்க்கப்படும் பொருளாகவும் ஆகிறது. இவற்றைத் தனக்குள்ளேயே

மீண்டும் ஒடுக்கிக்கொண்டு தனி ஒன்றாகவும் ஆகிறது. இதையெல்லாம் செய்ய ஒரு (பரா)சக்தி இருக்க வேண்டும். அவள் அற்புதமானவளாகவும் இருக்க வேண்டும். அவளும் தோற்றுவாயான பிரம்மத்தைச் சாராமல் தனியே இருக்க முடியாது. தனக்குள் தானாக இருந்து கொண்டிருக்கையில் இந்தச் சக்தியைப் பார்ப்பதற்கில்லை. ஆயினும், அவளது செயல்கள் யாவும் மிக மிக உலகறிந்தவையே! ஆஹா, அவைதான் எவ்வளவு பரம உத்தமமானவை! (பக்கம் 288)

(மற்ற அத்வைதிகளைப் போல் மாயையின் காரியத்தைத் துச்சமாகப் பேசாமல், மகரிஷிகள் எப்படிச் சுவைத்து, பூரித்துப் பேசுகிறார் பாருங்கள்!)

ம : ஈசுவரனை (பராசக்தியை)ச் சாராமல் ஜீவன் சுதந்திரமாக இருக்க முடியாது. உலகம் யாவும் ''விராட்'' என்கிற ஈசுவரனின் சரீரமே எனில் , அதில் ஜீவனின் தேகம் ஒரு சின்னஞ்சிறு புள்ளிதான். அது விராட்டில் இருக்கிறது; அது விராட்டின் உடைமையே. ஜீவனுக்கென்று இனி தனி உடைமை என்ன வைத்திருக்கிறது?... (பக்கம் 535)

எல்லாம் பராசக்தியின் சங்கற்பப்படியே நடக்கும் என்பதையும் பராசக்தியின் கிருபையை நம்பி சாதகர்கள் சாதனையைத் தொடர்ந்தால் வெற்றி திண்ணம் என்பதையும், இவர்கள் சாதனையிலேயே ஈடுபட்டால் இவர்களது மற்ற தேவைகளைக் கண்டிப்பாக அப்பராசக்தி கவனித்துக் கொள்கிறாள் என்பதையும் ஸ்ரீ ரமண பகவான் கனிந்துருகிக் கூறிய சந்தர்ப்பங்கள் பல.

பக்தி மார்க்கத்தின் வழிகாட்டிகளான ஆசாரிய புருஷர்களைவிட ஞான சிம்மங்களாக விளங்கியவர்கள் இவ்விஷயத்தில் மொழிவதற்கு விசேஷம் உண்டல்லவா? பராசக்தியின் அடியார்களுக்குத் தங்கள் வழியில் நிஸ்ஸந்தேஹமான உறுதி பிறக்கவே மகரிஷி ரமணர் குறித்து இவ்வளவு சொன்னேன். பின்னால் இன்னமும் சொல்வேன்.

இதில் கடைசியாக, ஆனால் last but not least என்கிறபடி இன்று ஆன்மீக உலகில் உள்ள மூன்று முக்கியமான வியக்திகளைப் பார்ப்போம்.

இதுவரை வந்த அத்தனை மகாத்மாக்களையும் திரட்டி எடுத்த திருவுருவம் எனத்தக்க நமது காமகோடி பெரியவர்களைப்

பாருங்கள். அவர் அத்வைதி மட்டுமல்ல; அத்வைதமே ஆவார். ஆனால் அப்படிப்பட்டவர் காமாக்ஷியின் லீலா சமுத்திரத்தில் முங்கிக் குளித்தவராக எப்போதும் சொட்டச் சொட்ட பராசக்தியிடம் பக்தி ஈரத்தோடு, நம்மிடம் கருணை ஈரத்தோடேயே காணப்படுகிறவர் அல்லவா? அவரது உபதேசங்களுக்கெல்லாம் அத்வைதம் தான் லட்சியம். அதையே பரம தாத்பரியமாகச் சொல்வார். ஆனால் பக்தியின் மகிமையை மற்ற அத்வைத சாஸ்திரக்காரர் மாதிரி ஏதோ இடைநிலையில் தேவைப்படுகிற விஷயமாக அவர் குறுக்குவதில்லை என்பது அவரது உபந்யாஸங்களைப் பார்க்கும்போது நன்கு புரியும். *''பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் முக்தி பெறலாமே!''* என்று கோபாலகிருஷ்ண பாரதி கானம் செய்ததைத்தான் ஞானமூர்த்தமான காஞ்சிப் பெரியவர்களும் கூறுகிறார் என்றே தெரியும். மகாஞானி, அதே அளவுக்கு — அதற்குச் சிறிதும் குறைவில்லாத சம அளவுக்கு — மகா பக்தர் என்கிற அற்புதக் கலவையாக உலவுகிறவர் நம் காமகோடி ஆசாரியர்கள்.

ஞான மாதாவாகத் திகழ்ந்து வருகிறார் ஸ்ரீ ஆனந்தமயீமா. (இவரும் உபநிஷத மகாவாக்கிய அநுஸந்தானம் செய்யாமலே அத்வைத ஸித்தி கண்டவர்தான்.) தம்மை பிரம்மமாக அன்றி வேறு ஏதாகவும் இமைப் பொழுதுங்கூட கருதிக் கொள்ள முடியாத சகஜ சமாதியிலேயே அனவரதமும் இருப்பவர் ஸ்ரீ அனந்தமயீ. இவர் பக்தி வழிபாட்டை, மந்திர தந்திர யந்திர மார்க்கங்களை, நாம சங்கீர்த்தனத்தை ஆத்ம தியானத்துக்கு வழியாக மட்டுமின்றி, அதற்கு சமமாகவே கூறுகிறார்.

மூன்றாமவர் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா. சமய உலக முக்கியஸ்தர்களுள் தமது வாழ்நாளிலேயே இவரைப்போல் கோடிக்கணக்கான மக்களால் 'அசல்' கடவுளாகப் பூஜிக்கப்பட்டவர் இதுவரையில் இருந்ததில்லை. அதே மாதிரி இவரைப் போல் பலரால், 'மந்திரவாதி, வெறும் சித்து விளையாட்டுக்காரர், ஹிப்நாடிஸ்ட், இத்யாதி இத்யாதி' குற்றப் பத்திரிகைக்கு ஆளாக்கப்பட்டவரும் எவரும் இல்லை. இவர் பூஜையால் கௌரவம் வந்ததாக நினைத்துப் பூரிக்கவும் காணோம். தாக்குதலால் அகௌரவம் வந்ததாக சற்றேனும் கலங்கவும் காணோம். இரண்டையும் பொருட்படுத்தாமல், *'ஸாயிராமா!'* என்று அடி மனத்திலிருந்து அரற்றுகிற எண்ணற்ற பக்தர்களுக்கு — ஏன், அப்படி அழைக்க மறந்தவர்களுக்கும் கூடத்தான் — ஆறுதல் பொழிவதே தம் தொழில் என்று கைகொடுத்துவருகிறார்.

இது பிரத்தியட்ச அநுபவம். இந்த 'நவராத்திரி நாயகி'யைப் படிப்பவர்களில் பாதிப்பேர் அவரது பக்தர்களாக இருப்பீர்கள்; மீதி பாதியர் காஞ்சி ஆசார்யர்கள், மா ஆனந்த மயீ போன்றவர்களுடன் இவரை ஏன் சேர்க்கவேண்டும் என்று முகத்தைச் சுளிக்கக்கூடும். இங்கே அவரை 'நிலை நிறுத்துகிற' பிரயாசையில் நான் இறங்கவில்லை. எத்தனையோ அற்புதங்களைச் சாதித்தவருக்குத் திருணமாத்திரமான நான் எதுவும் செய்யத் தேவையில்லை. அவர் காரியத்தை அவரே கவனித்துக் கொள்வார் — அவருக்கு சொந்தக்காரியம் என்று ஒன்று இருந்தால்! இங்கு நம் விஷயம், இன்று உலக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சமயப் புள்ளியாக இருப்பவர் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா என்பதே. அதோடுகூட, நமது நவராத்திரி நாயகிக்கு நவராத்திரியின் போது கோலாகல வழிபாடு நடத்தி, பல்லாயிரக்கணக்கான மக்கள் அவளை ஸ்மரிக்குமாறு செய்கிறார். அதற்காகவே அவரது கொள்கையை நாம் கவனிக்க வேண்டும். அவரது சித்தாந்தம் என்ன? அவரது உரைத் தொகுப்புக்களைப் பார்த்தால் அத்வைதமே அவர் போதிக்கும் இறுதி உண்மை என்பது ஐயமறத் தெரிகிறது. அதற்கு மார்க்கமாக ஆத்ம தியானத்தையே மிகவும் முக்கியமாக வற்புறுத்துகிறார். ஆனாலும் அதற்குச் சிறிதளவு கூட முக்கியத்துவத்தில் குறைந்ததல்ல பக்தி மார்க்கம் என்பதையும் வற்புறுத்துகிறார். அந்தரங்க பக்தர்களுக்கு இவர் ஆத்ம தியானத்திலேயே பயிற்சி தருகிறார் — வெகு அற்புதமான பயிற்சி அது. ஒரு காலத்தில் தாங்கள் நிர்குண உபாசனை செய்யப் போகிறோம் என்று கனவில்கூட நினைக்காதவர்களை இதில் கட்டிப் போட்டிருக்கிறார்! ஆனாலும் பஜனை, பூஜை, ஹோமம், மந்திர ஜபம் இவற்றையும் முக்தி நெறியாகவே கூறி வெகுவாகவே தழைக்கச் செய்து வருகிறார்.

பொதுவாக ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் தோன்றிய திலிருந்தே, சகல மார்க்கங்களையும் சமரஸமாக மதிக்கும் அத்வைத சமயாசாரியர்கள் அதிகம் உதித்திருக்கின்றனர். இப்படிப்பட்ட ஞானாசாரியர்கள் பக்தியை ஒரு படி இறக்கிச் சொல்லாமல் ஞானத்துக்கு சமப் பிராதான்யம் உள்ளதாக வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது.

பிரம்மம்தான் நாமாகியிருக்கிறது என்பதையும் நாம் அறியாதிருக்கிறோம். இந்த அறியாமைதான் அஞ்ஞானம் எனப்படுகிறது. அனைத்துமான பிரம்மமே நாம் என்று அறிந்துவிட்டால் அதன்பின் நமக்குப் புறம்பாக எதுவுமேயில்லை. அறியாததால்தான் — அஞ்ஞானத்தால்தான்

— நமக்கு வெளியே ஏதேதோ இருப்பதாக எண்ணி அவற்றிடம் ஆசை வைக்கிறோம். இந்த ஆசையின் பூர்த்திக்காகத்தான் எல்லாவிதத் தவறுகளும் செய்கிறோம். ஆசைப்பட்டதை அடைய இடையூறாக இருப்பதிடம் துவேஷம் கொள்கிறோம். ஆசைப்பட்டது நம்மைவிட்டுப் போனால் துக்கம் அடைகிறோம். இச்சித்த வஸ்து (அது நம் தேகமாகவும் இருக்கலாம்) நம்மைவிட்டுப் போய்விடுமோ என்று பயம் கொள்கிறோம். ஆக, நம்மை ஆனந்தத்திலிருந்து அப்புறப்படுத்தி மீண்டும் கர்மத்தில், அதன் விளைவான மறுபிறப்புக்களில் தள்ளுகிற அனர்த்த பட்டாளமான துவேஷம், துக்கம், பயம் இவற்றுக்கு ஆதிகாரணம் ஆசையெனில், அந்த ஆசைக்கு மூலகாரணம் நாம் பிரம்மமே என்பதை அறியாதிருக்கும் அஞ்ஞானம்தான். இந்த அஞ்ஞானத்துக்கு பிரம்மம் இடம் தர முடியாது என்று நினைத்தே அஞ்ஞானத்தை உண்டாக்கும் சக்தியாக மாயை என்று ஒன்றை அத்வைதிகள் தனியாகக் கொண்டு வருகிறார்கள். அதன்பின் இந்த அஞ்ஞானத்துக்கு ஆளாகாமல் லோகத்தை நிர்வகித்துப் பலன் தரும் ஈசுவரனைக் கொண்டு வருகிறார்கள். ஸ்ரீ ரமண பகவானும் இந்த பிரம்மம் (ஆத்மா) - மாயை - ஈசுவரன் என்கிற அடிப்படையை ஒப்புக் கொண்டவராகத்தான் பெரும்பாலும் பேசுவார். அதாவது, ஸ்ரீ சங்கர சம்பிரதாய ரீதியில்தான் தம்மை வைத்துக் கொண்டாற்போல் பேசுவார். ஆனால் ஓரொரு சந்தர்ப்பங்களில் இந்தக் கட்டுபாடு(!) அல்லது பற்று (?) கூட இல்லாமல், உள்ளம் பீறி வந்ததுபோல் உபதேசிக்கிறார். அப்படி யொன்றில், ''எதுவுமே ஆத்மாவில் (பிரம்மத்தில்) அன்றி தனித்து இல்லை — அஞ்ஞானம் கூடவும்தான்'' என்கிறார். (Nothing is independent of the Self, not even ignorance) *(பக். 533 : Talks)* தொடர்ந்து இதுவே பிரம்மத்தின் சக்தி என்றும், ஆனால் இந்த அஞ்ஞானத்தினால் பிரம்மம் பாதிக்கப் படவில்லை என்றும், ஜீவ பாவத்தில் உள்ளவனே பாதிக்கப் படுகிறான் என்றும் மொழிகிறார்.

ஞானாம்பிகையா, அஞ்ஞானாம்பிகையா என்று ஆரம்பத்தில் கேட்டோமே அதற்கு இதுவே பதில். அஞ்ஞானாம்பிகையும் அவளேதான். ஆனால் அப்படியிருப்பதால் அவளுடைய பிரம்மத்துவத்துக்கு ஒரு பாதிப்பும் உண்டாகவில்லை. மனிதர்கள் ஒரே சமயத்தில் ஞானமாகவும் அஞ்ஞானமாகவும் இருக்க முடியவில்லை என்பதால் பிரம்மமும் அப்படித்தான் இருந்தாக வேண்டும் எனக் கொண்டு மாயையைத் தனியாகக் கொணர வேண்டியதில்லை.

அஞ்ஞானாம்பிகையாயினும் முடிந்த முடிவில் அவள் ஞானாம்பிகையாக இருப்பதால்தான், அஞ்ஞான காரியப் பிரபஞ்சத்திலேயே ஜீவர்களுக்கு நிறைவைக் காட்டாமல், இவ்வுலக விளையாட்டை அவளே புனைந்தும்கூட, இதிலிருந்து விடுபடுகிற வேட்கையையும் ஜீவர்களுக்கு உண்டாக்குகிறாள். புலன்களின் சிற்றின்ப வாழ்வைவிட்ட பக்தி, ஞானம், யோகம், கர்மம் ஆகிய ஒரு மார்க்கத்தில் ஒருவன் செல்கிறான் என்றால் இந்த புத்தியைத் தந்தது அவளே அல்லவா? அந்தந்த மார்க்கத்தில் அவரவர் பெறுகிற லட்சிய பூர்த்தியும் அவளது சங்கற்பத்தால்தான் நடக்கிறது. ''எல்லாக் காலங்களிலும் எல்லாச் சூழல்களிலும் ஈசுவர சங்கற்பம் ஒன்றே நடக்கிறது. ஜீவாத்மாக்கள் தாங்களாகவே செயலாற்ற முடியாது'' *(பக். 546)* என்று அடித்துச் சொல்வார் ஸ்ரீ ரமணர். ஞான மார்க்க உபாஸனையும் ஸித்தியும் கூட இதில் அடக்கம்தான்.

சாதகன் உபாஸனை செய்யச் செய்ய இவனது பாப - புண்ணிய கர்மங்கள் ஈடுகட்டப்பெற்று (இருவினை ஒப்பு: கர்மஸாம்யம்), இவனது வாசனை அழுக்குகள் நீங்கி (மலபரிபாகம்), முடிவில் மனம் பரம நிர்மலமாகி, கர்மா முழுதும் தீர்ந்துவிட்ட நிலையில், ஈசுவரனின் கருணை என்கிற சக்தி இவன் மீது அப்படியே இறங்கி (சக்தி நிபாதம் அல்லது சக்தி பாதம்) இவன் மோக்ஷம் பெறுகிறான் என்று ஸித்தாந்த சைவம் கூறும். தானாக மோக்ஷம் லபிப்பதாகச் சொல்லாமல் சக்தியே அதைக் கூட்டுவிப்பதாக இவர்கள் சொல்கிறார்கள். 'சக்தி பாத்' என்று இதை அநேக வட இந்திய யோகமார்க்கிகளும் ஒப்பிப் பேசுவர். ஸ்ரீ ரமணர் இக்கொள்கையை முற்றிலும் ஏற்று, இறுதி ஸித்தி சக்திபாதத்தாலேயே அத்வைத ஞான மார்க்கத்திலும் ஏற்படுகிறது என்பதை எத்தனை தெளிவாக, அழுத்தமாகக் கூறுகிறார் பாருங்கள் :

> ஆத்மோபதேசம் பெற்ற பிறகும் ஒரு சாதகனுடைய அநுபவங்கள், ''நான் ஆத்மாவே'' என்ற நிலைபற்றி இவன் எப்படிக் கற்பனை செய்து கொண்டிருக்கிறானோ அதைப் பொறுத்தனவாகத்தான் இருக்கும். *(கடைசியில்)* சத்தியமான, சரியான அநுபவத்தைச் சக்திபாதம் மட்டுமே அளிக்கிறது. (Saktipata alone confers the true and right experience.)
>
> *(பக்கம் 231)*

அஞ்ஞான காரணமான அம்பிகையே பிரம்ம ஞானப் பிரதாயகி என்று அடியார்கள் சிறிதும் கலக்கமின்றி மனத்தில் கொள்வதற்கு இதைவிட வேறு உபதேசம் வேண்டியதில்லை.

கதையில் வருகிற வில்லன் கதாசிரியரைப் பாதிக்காதது போல், மாயையும் அஞ்ஞானமும் அவளைப் பாதிக்கமாட்டா. 'நல்லவரான கதாசிரியர் வில்லனைப் படைக்கமாட்டார்; வில்லன் அநிர்வசனீயமாக உண்டாகிறான்' என்பதா? அவளது கற்பனையாக உலக மாயைகளைப் பார்த்துவிட்டால் இவை நமக்கும் தீயன அல்ல. இதனால்தான் சக்தி பீஜத்தை மாயா பீஜம் என்றே சந்தோஷமாகச் சாக்த மகாபுருஷர்கள் கூறுவர். அவளருளால் நம்மையும் மாயை பாதிக்காமல் இருக்க, நாம் அதைக் கதைப் பாத்திரமாக ரசிக்கலாம். ஆசையின் கதையும் இப்படித்தான்: அவளோடு சேர்த்துப் பார்க்கிற போது அது மிகவும் சுவாரஸ்யமான கதாபாத்திரமாகிறது; பாப பாரத்தை எல்லாம் இழந்து பரம விளையாட்டாகிறது. ஆசைதான் காமம் — நமக்கு அது கொடிது. ஆனால் மூலப் பொருளுக்கு எப்படிக் கொடிதாகும்? 'ஸோகாமயத' என்று உபநிஷதமே சொல்கிறதே! ஸ்ரீவித்யாவில் பிரம்மமே காமேசுவரன்தான்; பிரம்ம சக்தி காமேசுவரி. மன்மத பீஜமே (ஸத்-சித்-) ஆனந்த பீஜமாக அல்லவோ சாக்தர் நோக்கில் மாறிவிடுகிறது? ஆசைகளில் மகா கொடூரம் பாலுணர்ச்சி என்றாலும் இங்கே, அம்பாளோடு நின்று விளையாட்டுப் பார்க்கும்போது ரஸவாதம் நடந்துவிடுகிறது. இல்லை, இல்லை. இது ரஸவாதம் அல்ல. வாஸ்தவமான ரஸம் இதுதான். நாம் புலன் வாழ்வில், ஜீவ பாவத்தில் விரஸ வாதம் செய்து வருகிறோம். சிற்றின்பப் புலன் வாழ்வு அடிபட்டுப் போன பரம பக்த சிகாமணிகளோ நாயக-நாயிகா பாவத்திலேயே தோய்ந்து விடுகிறார்கள்! பிரம்ம நிஷ்டரான சுகர் கூடத்தான்! பிரம்மத்தையும் அதன் சக்தியையும் கௌரி-சங்கரன், ராதா-கிருஷ்ணன், ஸீதா-ராமன் என்றிப்படி தம்பதியராகப் பார்த்தே மகா ஞானிகளும் பரவச முற்றிருக்கிறார்கள். இங்கெல்லாம் சக்தி தவிர தனியே மாயை கிடையாது.

துச்சமான மாயையின் காரியமாகவே ஜீவனின் காரியப் பிரபஞ்சத்தை வைத்தால் இந்தனை அழகும் ஆனந்தமும் என்னாவது? துச்சமாயை பறறியும் நிறையப் பேசிய ரமணர் திருவருணையில் கௌரி தவமிருந்து ஈசுவரனைக் கூட வந்தாள்

என்று அருணாசல மாஹாத்மியத்தில் படிக்கும்போது, விம்மியழத் தொடங்கிவிட்டாராம். எத்தனை முயன்ற போதிலும் மேற்கொண்டு அந்த மகா ஞானிக்கு வாய்விட்டுப் படிக்க முடியாமல் தொண்டை அடைத்ததாம். நாகம்மை இச் சம்பவத்தைப் படம் பிடித்தாற் போல் எடுத்தெழுதியிருக்கிறார்.

சிருங்காரம் உள்பட எதுவுமே பிரம்மத்தோடு பார்க்கும்போது துச்சமல்ல; அங்கே எல்லாமே உச்சம்தான். எனவே பிரம்மத்தை 'உயர்த்துவதாக' நினைத்து, மாயையை அதற்கு வேறாகப் பிரிக்க வேண்டியதில்லைதானே? ஒரே சமயத்தில் இரு வேறுவிதமாக அதுவே இருக்க முடியும்போது, அதற்கு வேறாக மாயை என்ற இன்னொன்றைக் கொண்டு வருவானேன்? ஒரே சமயத்தில் இரு வேறு விதங்களாக அது இருக்கும் என்பதை அப்பர் பெருமானின் ரத்தினச் சுருக்கமான மொழி, கடுகுக்குள் கடலைக் காட்டினாற் போல் கூறிவிடுகிறது:

நேரிழையைக் கலந்திருந்தே
புலன்கள் ஐந்தும் வென்றானை.

மாயாவாதம் போன சாக்தம் முழுதும் இதில் அடக்கம் எனலாம்.

இதையே ஒரு குட்டிக் கதையும் கூறும் : ஸ்ரீ கிருஷ்ணன் கோபியரோடு லீலா விநோதங்கள் புரிந்தான். பிறகு கோபியர் ஓர் உத்தமருக்கு அன்னம் பாலிக்க விரும்பினர் — தங்களது இஷ்டம் பூர்த்தியான மகிழ்ச்சியில். ''யமுனைக்கு அக்கரையில் தூர்வாசர் இருக்கிறார். அவரைவிட உத்தமர் இல்லை. அவருக்கு உணவருத்தி வாருங்கள்'' என்றான் கண்ணன். ''சரி, ஆனால் அக்கரைக்கு எப்படிச் செல்வோம்? ஒரு படகைக் கூடக் காணோமே!'' என்றனர் ஆய்ச்சியர். ''அதனாலென்ன? என் பிரம்மசரியத்தின் மேல் ஆணையிடுங்கள், யமுனை தானே அலைகளை விலக்கி உங்களுக்கு வழிவிடுவாள்'' என்றான் ஐயன். இத்தனை நேரம் இவர்கள் அவனோடு சிருங்காரக் கூத்தாடியிருக்கிறார்கள். என்றாலும் அவன் சொல்வதன்றி இவர்களுக்கு வேறு சத்தியமில்லை. புத்தி சாதுரிய வாத விவாதங்கள் அறியாமல் அன்பும் நம்பிக்கையுமே உருவாக இருந்த எளிய கோபிகைகள் யமுனையிடம் வந்தனர் : ''எங்கள் பிரேமகாந்தன் ராதா ரமணன் நைஷ்டிகப் பிரம்மசாரி என்பது பரமசத்தியமாதலால், ஹே யமுனையே, நாங்கள் உன்னைக் கடந்து செல்ல வழி விடுவாய்!'' என்றனர். உடனே யமுனையும் அலைக்கரங்களைச் சுருக்கிக் கொண்டு ஆய்ச்சியர்க்குப் பாதை தந்தாள்!

கண்ணன், ''நேரிழையரைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றவன்'' — ஒரே போதில் இருவேறு எதிரெதிர் துருவங்களாக இருப்பவன், கீதை தந்த இந்த ஞானாசிரியன். மன்மத பீஜத்தையே தனது மணிமந்திரமாக உகந்தவன்! 'இருவேறு' மட்டுமின்றிப் 'பல்வேறாகவும்' ஒரே சமயத்தில் உள்ள பராசக்தி அவன். கோர பயங்கரியாக நாம் கருதும் காளியாகப் பராசக்தி வருகையில் அவளுக்கும் அன்பு, அழகு இவற்றுக்கான மன்மத பீஜமே மந்திரமாகிறது! மதன மோகனக் கண்ணன் விசுவரூபம் கொள்கையில் கால ரூபமான காளியாகவே ஆகி சம்ஹாரக் கூத்தைக் காட்டுகிறான்! ''நானே சலிப்பவன்; சலியாதவனே நான்'', ''பொருட்கள் என்னிடம் இருப்புடையன; நான் ஒரு பொருளிடத்தும் இல்லை'' என்றெல்லாம் பகவான் கீதையில் கூறுவதை பரஸ்பர முரணாக எண்ணி இவற்றை இணைப் பொருத்தும் பிரயாசையில் பாஷ்யக்காரர்கள் பாடுபடுகிறார்கள். இதற்கு அவசியமில்லை. மனித மூளை அளவைக்கு, மானுட இயற்கைக்கு இவை முரணாக இருப்பதால் பராசக்திக்கும் அப்படியே இருக்க வேண்டும் என்று ஆகாது. பிரம்மத்தின் சாந்தம், சலனம் என்ற இரண்டில் ஒன்று உயர்ந்த நிலை, மற்றது தாழ்ந்த நிலை என்க வேண்டியதே இல்லை. இரண்டும் ஸமப் பிரதானமானவை என்பதால்தான் கீதாசிரியன் தன்னை 'த்வந்துவ ஸமாஸம்' என்று கூறிக் கொண்டதாகத் தோன்றுகிறது. இதனால்தான் அவன் தனது மாயா சக்தியைத் துச்சம் என்னாமல் தெய்விகமானது (தைவீ) என்றும் ஈசுவரத் தன்மை வாய்ந்த யோக நிலையில் (யோகம் ஐச்வரம்) தான் இருவேறாக இருப்பதாகவும் சொல்கிறான். இப்படி ஒன்றாகவும், வெவ்வேறாகவும் (ஏகத்வேன, ப்ருதக்த்வேன) அவனை உபாஸிப்போரும் ஒரே சமயத்தில் இருவேறு நிலைகளில் இருப்பதைக் குட்டிக் கதையின் பிற்பாதி விளக்குகிறது.

கோபியர் அக்கரை சேர்ந்தனர்: தூர்வாசருக்கு அத்தனை பேரும் கொணர்ந்த ஏராளமான அன்னத்தையிட்டனர். ரஸித்து உண்டார் முனிவர். ''ஸ்வாமி, நாங்கள் எதிர்க்கரை திரும்ப வேண்டும். சோதனைபோல் இங்கும் படகே இல்லையே!'' என்றனர் கோபியர். ''அதனாலென்ன?, 'வெறும் தூர்வாவை (அருகம்புல்லை) மட்டும் ஒரு பிடி அசனம் (உணவு) கொள்பவர் தூர்வாசர் என்பது சத்தியமாதலால் நீ எங்களுக்கு வழிவிட வேண்டும்' என்று யமுனாவிடம் ஆணைவையுங்கள்'' என்றார் அன்னமலைகளைக் கபளீகரம் செய்திருந்த முனிவர். எளிய

ஆய்ச்சியரும் அவ்வண்ணமே ஆணையிட்டனர். யமுனையும் வழி விட்டாள்! சக்தி லீலையை ரசித்து உணவை உண்டவர் அதே போதில் உண்பது முதலிய எக்காரியமும் இல்லாத ஆத்மாகவே தம்மை உணர்ந்தும் இருந்தார்!

லீலை என்று ரசிக்கும்போது, மாயையைத் துச்சமாகத் தள்ள வேண்டியதில்லை, மாயையும் பிரம்மத்தின் செயல் என்று அறியாததே பெரிய அஞ்ஞானம். தான் பிரம்மமே என்று ஜீவனுக்குத் தெரியாத அஞ்ஞானத்துக்கு காரணம் மாயை எனக்கூறும் அத்வைதிகள், இந்த அஞ்ஞானம் நீங்கப் பிரார்த்தனையில்லாத வேறு வழி சொன்னார்கள். பிரம்மமும் அஞ்ஞானத்துக்குக் காரணமாகச் சொல்லப்படும் மாயையும் வேறு என நினைப்பதும் ஓர் அஞ்ஞானம்தான். அதைப் போக்கிக் கொள்ளும் போதுதான் அத்வைதி சொல்லும் மூல அஞ்ஞானத்தின் நீக்கமும் பிரம்மசக்தியாலேயே அருளப்படும் என்பதை உணர்ந்து, இதன் பொருட்டுப் பிரார்த்திக்க இடம் உண்டாகிறது.

சில நூற்றாண்டுகளாகவே அத்வைத ஸ்மார்த்தர்களில் கணிசமானோர் குறிப்பாக ஸ்ரீவித்யா உபாஸகர்களாகவும், பொதுவில் மற்ற தெய்வங்களை வழிபடுவோராகவும் இருந்து வருகிறார்கள். சங்கரரின் காலநிலை மாறி, பக்தி எங்கும் உட்புகுந்துவிட்டதன் நல்ல விளைவு! அல்லது, அறிவு ரீதியில் இவர்கள் சொல்லும் மாயாவாதம் இவர்களுக்கே மன நிறைவைத் தராததால் 'அதீத அகம்' என்கிற sub-conscious இவர்களை இவ்வுபாசனையில் தூண்டியிருக்கலாம், ஆயினும், மேல் மட்டத்தில் இதற்குச் சமாதானம் சொல்ல இவர்களால் முடிவதில்லை. ''தாங்கள் பூஜிப்பது அத்தனையும் முடிவில் பூஜிக்கப் பெறும் மாயையைப் 'போய்ச் சேர்' என்று வழி அனுப்புவதற்குத்தானா? அதுவும் போன பிற்பாடுதானே நம் பிரமாண நூல்களின்படி நமக்கு ஞான மோக்ஷம் லபிக்க முடியும்?'' என்ற கேள்வி, இவ்வளவு தெளிவாக இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு ரூபத்தில் இவர்களைக் குடைந்து கொண்டுதான் இருக்கும். பூஜிக்கப்படும் பராசக்தி பூஜிப்பவனுக்கு வேறாக இருக்கும் நிலையிலிருந்து மாறுகிறாளே யன்றி அவள் அவனை விட்டே போய்ச் சேர்ந்து விடுவதில்லை என்றறிவதே குடைச்சலைப் போக்கும். என்னவாக மாறுகிறாள்? வேறாக உபாசிக்கப் பட்டவளே உபாசகன் தனக்கு வேறில்லை என்ற ஞானத்தைத் தருகிறாள்; அவனது மோக்ஷமாகவே ஆகிறாள். ஸ்ரீவித்யோபாசகர்களாகிய இந்த அத்வைதிகளிடம்

பாராட்டுதற்குரிய அம்சம், ஜீவனானவன் தான் பிரம்மமே என்பதை அறியாதபடி செய்திருக்கும் அஞ்ஞான மாயையும் பிரம்மசக்தியே என இவர்கள் ஒப்புவதுதான். பிரம்மசக்தி - மாயை - ஈசுவரன் என்ற குழப்பப் பிரிவினை இங்கில்லை. இங்கேயும் மாயை உண்டுதான், என்றாலும் அது ஜீவனுக்குத் 'தானே பிரம்மம்' என்பதைப் பராசக்தி மறைத்து இவ்வுலக வாழ்வை மாய நாடகமாக நடத்துவதையே குறிக்கும். பிரம்மத்தையே மாயையில் மறைத்து உலகாக்கியதாக அல்ல. ஆனால் உபாஸகரில் பெரும்பாலோர் செய்யும் தவறு யாதெனில், இந்த மாயையை விரட்டியவுடன் மூல சக்தியையே முற்றிலும் விரட்டிவிடுவதாக எண்ணுவதுதான். வாஸ்தவத்திலோ, ஜீவனின் அஞ்ஞானத்துக்குக் காரணமான மாயை பிரம்மசக்தியின் பலஅம்சங்களில் ஒன்றுதான்; இந்த ஓர் அம்சத்தை மட்டும் நீக்குவது அவளையே நீக்குவதாகாதன்றோ? அவளாகவே ஆகும் பொருட்டு, அவளில் ஓர் அம்சத்தை, அவள் அருள் கொண்டே போக்கிக் கொள்ளும் வழிபாட்டில் எவ்விதமான தாழ்வுணர்ச்சியோ, ஆதிசங்கர பகவத்பாதர்களின் போதனைக்கு இது மாறாக இருக்குமோ என்ற குற்றஉணர்ச்சியோ (guilty conscience) தேவையில்லை.

சத்யஸ்வரூபமான சங்கரர் பக்தர்களுக்கென துதிகளைச் செய்கையில், தமது பாஷ்யங்களில் ஞான மார்க்கிகளுக்காகத் தாமே சொன்ன பல ஆதாரக் கருத்துக்களைக்கூடத் தயங்காமல் மறுத்துப் பேசுகிறார். 'ஸௌந்தர்ய - லஹரி' முதல் சுலோகத்தையே பாருங்கள். சக்தியின் இயக்கம் இல்லாவிடில் பிரம்மமே சலனம் இல்லாமல் இருக்க வேண்டியது தான் என்று குறை கூடப்பட்டுக் கொண்டு அல்லவோ பேசுகிறார்! நிச்சலன, நிர்விகல்ப பிரம்மம்தான் ஞானிகளின் லட்சியம்! அது சலித்து விட்டால் அதன் மகிமைக்கு ஹானி என இவர்கள் எண்ணுவர். அப்படியிருக்க அது சலிப்பதை வியந்து வணங்கவும் துதிக்கவும் முற்படுகிறார் சங்கரர்! இவ்வுணர்வின் சிகரத்தில் தான் இத் துதி முடிவில் 'பரப்ரம்ம மஹிஷி' என்று ஒரு போடு போட்டு, நிர்குண அத்வைதத்தைக் கல்யாண சுந்தரமாக்குகிறார்! கேநோபநிஷத்தில் ஞானம் தரவரும் அம்பாளைப் பற்றி, அவளே ஞான நாயகி என்று அடித்துச் சொல்லாமல், மரபுப்படியான அத்வைத ரீதியில் பாஷ்யம் செய்தது ஆசாரியருக்கே குறையாக இருந்ததோ என்னவோ? அங்கே அவர் அவளை 'வித்யா' என்று துணிந்து கூறினாலும், ஈசுவரனோடு எப்போதும் சேர்ந்திருப்பவள் என்பதற்கு மேல் விவரிக்க இயலவில்லை. அத்வைத சாஸ்திரப்படி ஈசுவரனே பராசக்தியின் ஸ்தானத்தில் இருப்பவன் என்றால், அவனுடைய சக்தி

(பத்தினி)யின் ஆற்றல் என்ன? அவனுமே மோக்ஷம் அருளாதபோது இவள் என்ன செய்ய முடியும்? இப்படியாகத்தானே அம்பாளை ஏனோ தானோ என்று வர்ணித்த குறை தீர்கிற மாதிரியே இங்கே 'பரப்ரம்ம மஹிஷி' என்று படுதீரமாகக் கூறிவிடுகிறார். இதேநிலையில்தான் அம்பாளை 'தேவீ புஜங்க' தொடக்க சுலோகத்திலேயே 'சங்கராத்வைதம்' என்கிறார். இச் சொற்றொடரில் சங்கரர் தமது பாஷ்யங்களின் சாந்த-ஞான த்வைதமே தாம் செய்த துதிகளில் சாக்த - பக்தி அத்வைதமாகி இருப்பதைப் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்கிறமாதிரிக் கூட தொனிக்கிறது! ஜீவன் மறுபடி தனது பிரம்ம நிலையை உணர்வது அவள் கிருபையினால்தான் என்பதைத் துளிகூட சந்தேகம் இன்றி, **''புனர் ஜீவமேனம் சிவம் வா கரோஷி''** என்கிறார். அவளது அருளின்றி ஞானம் நிச்சயமாக உதியாது என்பதையும் நிச்சயவாசகமாக, **''கதம் த்வத்கடாக்ஷம்விநா தத்வபோத:?''** என்கிறார். **''காண்பார் யார் கண்ணுதலாக் காட்டாக்காணே''** என்ற அப்பர் பெருமானின் வாக்கியம் இதன் மொழிபெயர்ப்புப் போலவே உள்ளது. அத்வைதானுபவமே அவள்தான் என்பதையும், ஏழாம் சுலோகத்தில் ''ஸமாதி நிலையில் பளீரென்று ஏற்படும் ஆனந்த வடிவ ஜோதி நீயே'' என்ற அமரவாசகத்தால் குறிப்பிடுகிறார். ''இவ்வுலகம் உண்மை என்றும் உண்மையல்ல என்றும் இரண்டும் கலந்தது என்றும், பிரகிருதி (மாயை)யால் உண்டானது என்றும், புத்தி மாத்திரமானதே என்றும் முனிவர் கணங்கள் வித விதமாகப் பேசுகின்றன'' எனக் கூறி, ''நாங்களோ பிரபஞ்சம் நீயே எனத் தெளிந்தோம். இனி உன்னை விடமாட்டோம்'' என்று தாயிடம் குழந்தையின் பற்றுடன் சொல்கிறார் (சுலோ 8). இதேபோல் ''சிவாநந்த லஹரி'' ஆறாம் சுலோகத்தில் (கடோ வா) அத்வைதிகள் உள்பட எல்லா தரிசனக்காரர்களும் ஆராய்கிற காரணகாரியப் பிரமாணங்களை, ''தொண்டைக்குக் கேடுதரும் வெட்டி வேலை'' (வ்ருதா கண்ட க்ஷோபம்) என்று கண்டித்து விட்டு, ''சம்புவின் பாத கமலங்களைப் பற்றிப் பரம சுகம் காண்பாய்'' என்று இனிக்கக் கூறுகிறார். அத்வைத முக்திக்காக பக்தி செய்வது பரமாசாரியர்கள் அவலம்பித்த சம்பிரதாயத்துக்கு விரோதமாகுமா என்ற அச்சம் தேவையேயில்லை.

* * *

ரயில் பயணத்தின்போது முதல் வகுப்பில் இடமில்லை என்பதால் தாற்காலிகமாக இரண்டாம் வகுப்பில் ஏறிக்கொண்டு, 'இந்த அவஸ்தை எப்போது முடிந்து

மேல்வகுப்புக்குப் போவோம்' என்று நினைக்கிற பாவத்தில்— 'பக்திநிலை எப்போது முடிந்து ஞானம் வரும்?' என்கிற உறுத்தலோடு எவரும் ஸகுண உபாசனை செய்யத் தேவையில்லை. சக்தி வழிபாடே அத்வைத லட்சியத்துக்கும்கூட இறுதி சாதனம் என்பதை தேவீபரமான இந்த ''நவராத்திரி நாயகி''யில் விண்டு விளக்கி வைக்கப்பார்ப்பது பொருத்தம்தானே? இதற்காகவே இத்தனை நீளநெடுக, கூறியது கூறல் என்ற குற்றத்துக்கும் இலக்காக, எழுதியிருக்கிறேன். பண்டிதர்களோடு சர்ச்சையில் இறங்குகிற தகுதியோ மனோபாவமோ துளிக்கூட இல்லாதவன், சம்பிரதாய விரோதமான கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் லவலேசம் இல்லாதவன் இங்கே சர்ச்சைக்குரிய வாதங்களைக் கிளப்பி, சாம்பிரதாயிக சிம்மங்களோடு மோதுவதாகத் தோன்றுமாயினும், அந்த உத்தேசம் எனக்கு எள்ளளவும் இல்லை. இதை அம்பாள் அறிவாள். ஏனோ என்னையும் மீறி இதை எல்லாம் எழுதுகிறேன் என்றுதான் சொல்லவேண்டும். இதன் பயன் என்ன என்பதை பலதாத்ரியான அவளே அறிவாள்! என்னை அவள் சந்திக்கு இழுக்காமல் — பூமாலையும் போடாமல், கல்லெறியும் கொடுக்காமல் — அக்கடா என்று விட்டால் போதும் என்பதுதான் என் பிரார்த்தனையாக இருக்கிறது. ஞானி, யோகி, கர்மி, பக்தர் அனைவருக்கும் ஒவ்வொருவித மோகத்தை உண்டாக்கியவள், அவர்களில் எவரிலும் சேராத என்னையும் இங்கு எத்தனை மோக மயக்குகளில் முழுக்கியிருப்பாளோ? ஆயினும் எக்காரணமும் இன்றி என்னிடம் காருண்யமே பொழிந்து வரும் அவள், பூமாலை கல்லெறி இரண்டிலும் பட்டுக் கொள்ளாத பான்மையை எனக்கு அருள்வாள் என நம்புகிறேன்.

* * *

ஞானிகளுக்கு தாங்கள் ஞானம் எய்துமுன் கொண்டிருந்த மனப்போக்கின் பிடிப்பு நீங்கவில்லை — மகாமாயை அவர்களையும் இப்படி மோகத்தில் செலுத்துகிறாள் என்பதைப் பார்த்தோம். முனிவர் மேதஸ் கூறும் ''ஞானி'' என்ற பதத்தில், பக்தர்களையும் சேர்க்கத்தான் வேண்டும் — முன்பே சொன்னதைக் கொஞ்சம் விஸ்தரிக்க வேண்டும்.

''ஞானினாம் அபி'' — ஞானிகளையும் கூட — மாயை ஆட்டுகிறது என்று ரிஷி கூறுவதால் அதன் ஆளுகைக்கு

ஆளாகாதவர் எவருமே இல்லை என்றாகிறது. அவ்வாறெனில் பக்தர்கள் மட்டும் இதற்கு விலக்கா என்ன? பூரணசரணாகதியால் தங்களுக்கென்று சித்தாந்தப் பற்று அறவே நீங்கி, அன்பு செய்வதற்கு சித்தாந்தம் எதற்கு என்கிற நிலையில் பிரேமை மயமாக இருந்த பக்த சிகாமணிகள் பலர். இவர்களுக்கு ஒருவித மோகமும் இல்லை. ஆனாலும் 'பக்தி மார்க்கம்' என்று சித்தாந்தம் செய்யத் தொடங்குகிற மகான்களில் சிலரிடமும் மோகம் விடவில்லை — தங்கள் கொள்கை என்கிற மோகம்தான்! அவதார புருஷராகவே கருதப்படும் மகா மகா ஆத்மாக்களும் — அவர்களது பெயரைக் குறிக்கவே தயக்கமாக இருக்கிறது — அத்வைத கண்டனத்தில் இறங்கும்போது கௌரவ வரம்பைக் காத்துக் கொள்ள எவ்வளவு தூரம் தவறி விட்டிருக்கிறார்கள்?

பராசக்தியால் முக்தி தர இயலாது என்று அத்வைதிகள் நினைக்கிறார்கள் என்றால், இந்த பக்தர்களோ, அத்வைத முக்தி என்றே ஒன்று கிடையாது என்கிறார்கள்! ஏனென்றால், இவர்களில் பலருக்கு நிர்குணப் பிரம்மமே கிடையாது: குணமும் குறியும் இல்லாத ஏக சத்தியம்தான் இத்தனையாகி இருக்கிறது என்பதையே இவர்கள் ஒப்புவதில்லை. அத்வைதி, ஸகுணப் பிரம்மத்தை நிர்குணத்துக்கு ஒருபடி தாழ்வாகவாவது ஒப்புக் கொள்கிறான். ஆனால் பக்தி ஸித்தாந்திகளில் பெரும்பாலோரோ நிர்குணத்தை அடியோடேயே ஒப்புவதில்லை.

ஆனால், அப்படி ஒரு நிர்குண ஆதாரம் இருந்தே தீரவேண்டும் என்பதற்கு நம்மை விடவே வேறு சான்று வேண்டியதில்லை! நாம் உறங்கும்போது எந்த உணர்வும் இல்லாமல் ஏதோ ஒன்று உயிரோடு இருக்கிறதே அதற்கு என்ன குணம் உள்ளது, என்ன அடையாளம் உள்ளது? மரணம் என்று சொல்லும்போது ஏதோ ஒன்று வெளியே போய்விடுகிறது. இதற்கு உயிர் என்று பெயர் வைக்கலாம். அது நம் கண்ணுக்குத் தெரியவில்லை, ஆனால் அந்த ஒன்று போனவுடன் கண்ணுக்குத் தெரிகிற இத்தனை அவயங்களும் செயல் அற்று விடுகின்றன. சுயமாகச் செயலற்ற இந்த சரீரம் தன்னைத் தானே படைத்துக் கொண்டு, அதன்பின் அந்த உயிர் இதற்குள் வந்து இதை இயக்குகிறது என்று சொல்வது அபத்தம். இதிலிருந்து கண்ணுக்குத் தெரியாத அந்த உயிர்தான் கண்ணுக்குத் தெரிகிற உடலை உண்டாக்கி, அதற்குள் இருந்து இயக்குகிறது என்று தெரிகிறது. பல உயிர்கள் பல உடல்களை உண்டாக்கி இயக்குகின்றனவா? இவை அச்சடித்தாற்போல் ஒரே மாதிரி இயங்குகின்றனவே —

அதாவது கண்ணால் பார்ப்பது, காதால் கேட்பது, இதயத்தால் இரத்தத்தைப் பரப்புவது, ஈரலால் செரிப்பது, நுரையீரலால் மூச்செறிவது என்கிற ரீதியில் — முற்றிலும் ஒரே விதத்தில் இயங்குகின்றன என்பதைப் பார்க்கும்போது இந்த உயிர்கள் தாமாக் உதித்துத் தம்மிஷ்டப்படி தனித் தனியாக செயலாற்றவில்லை என்று தெரிகிறது. எனவே, இந்த உயிர்களுக்கெல்லாம் அடிப்படையாக ஒரு பேருயிர் இருந்தேயாக வேண்டும் என்று தெரிகிறது. உயிர் இல்லாவிட்டால் எப்படி உடல் சவம்தானோ அப்படியே அந்தப் பேருயிர் இல்லாவிட்டால் இந்த உயிர்களும் கூடச் சவம்தான் என்று ஊகித்துணரலாம். அதோடு, இந்த மனித உயிரின் இஷ்டப்படி இயங்காத வெளி இயற்கைக்கேற்ப — அதிலிருந்து சீதோஷ்ணம், உணவு முதலியவற்றை இவன் பெற்று வாழும் விதத்தில் — இவன் சிருஷ்டியாகியிருப்பதிலிருந்து, அந்தப் பேருயிரேதான் இந்த ஜடப் பிரபஞ்சத்தையும் சிருஷ்டித்து, அதில் இயற்கை நியதிகளை விதித்து இயக்குகிறது என்பதும் தெரிகிறது. இவனது உயிருக்கே உருவமில்லை என்பதால் அந்தப் பேருயிருக்கும் உருவம் இருக்காது என்பது நிதரிசனமாகிறதே! எனவே உருவம் படைத்த கடவுள் தான் — தங்களுடைய இஷ்ட தேவதை ஒன்றுதான் — ஆதார சத்தியமாக இருக்கமுடியும் என்று பலவித பக்தி மார்க்கக்காரர்கள் சொல்வது அடியோடு எடுபடாது.

நம் கனவு நிலையில் நமது உடலைக் கொண்டு நாம் நுகர்ச்சிகளைப் பெறாவிடினும் துக்கம் - இன்பம் முதலிய உணர்வுகளும், நன்மை - தீமை முதலிய குணங்களும் கனவில் உள்ளன அல்லவா? நம் எண்ணங்களே தானே பிற வஸ்துக்களாகக் கனவில் தெரிகின்றன? இந்தக் கனவைப் பராசக்தி ஒரு திருஷ்டாந்தமாகவே அநுக்ரகித்திருக்கிறாள். இதிலிருந்து நாம் என்ன அறிகிறோம்? உருவம் இல்லாவிடினும் குணங்கள் அனைத்தும் கொண்டதாக உள்ளது பராசக்தி. அதன் எண்ணங்களே ஜட உலகமாக, ஜீவராசிகளாக உருவாகியிருக்கின்றன.

பற்பல எண்ணங்கள் இருந்தாலும், இவற்றை எண்ணுகிறவன் என்கிற ஒரே ஒருவன் ஆதாரமாக இருந்தேயாக வேண்டும். பற்பல குணங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறவன் ஒருவன்தான். **அவனிடமிருந்து** இந்த எண்ணங்கள் தோன்றுகின்றன. அவனிடமிருந்து இந்த குணங்கள் வெளிப்படுகின்றன என்பதிலிருந்து இவையே **அவன்** அல்ல, அவன் இவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒருவன் என்றாகிறது. குணத்துக்கு அப்பாற்பட்டது நிர்குணமே அல்லவா? நிர்குண

பிரம்மம் என்ற ஆதாரமான ஏகம் இல்லாமலே இத்தனையும் எப்படி வரமுடியும்? பிரம்ம சக்தி இதற்கும் ஓர் அற்புதமான திருஷ்டாந்தத்தை நமக்குக் கருணையோடு கொடுத்திருக்கிறது. நமது காமகோடி பெரியவர்கள் எடுத்துக் காட்டும் அரிய உதாரணம் இது: எல்லா வர்ணங்களும் ஒரே விகிதத்தில் கலந்தால் ஒரு வர்ணமும் இல்லாத வெள்ளை நிறமாகும். எந்த நிறமும் இல்லாத சூரிய வெளிச்சம்தான் ஒளிச் சிதறலில் ஏழு வர்ணங்களாகவும் பிரதிபலிக்கிறது. இவ்வாறே பராசக்தியின் அனந்த கலியாண குணங்கள் ஒரு நிர்குண வஸ்துவிலிருந்துதான் பிறக்க முடியும். உருவங்கள் யாவும் உருவற்ற ஒன்றிலிருந்து, குணங்கள் யாவும் குணமற்ற ஒன்றிலிருந்துதானே பிறக்க முடியும்?

சமாதி நிலையில் அந்த நிர்குண பிரம்மத்தை அநுபவித்த யோகிகளும் ஞானிகளும் கூறுவதை நம்ப மறுப்பது எத்தகைய அபசாரம்? எவர்களைக் கண்ட மாத்திரத்தில் ஒரு பரிசுத்தம் கமழுகிறதோ, எவர்கள் தன்னலமே சிறிதும் கருதாத தியாகமூர்த்திகளாக உள்ளனரோ, எவர்களது அநுக்கிரகசக்தி அண்டியோரின் கர்மங்களையும் தவிடுபொடி செய்கிறதோ அப்படிப்பட்ட அத்வைத மகான்கள் ஸ்வாநுபூதியிலிருந்து சொல்வதை நம்ப மறுக்கலாமா? சுகப்ரம்மமும், ராமகிருஷ்ணரும், ரமணரும் பொய் சொல்வதாகவா பக்தி மார்க்கக்காரர்கள் எண்ணுகின்றனர்? நம் கண்முன் ரமணரைக் கண்டோம். அவர் நாட்கணக்கில் திருவருணைப் பாதாள லிங்கக் குகையில் சமாதி கூடியிருந்ததைக் கண்டவர் பலர். அவரது அடித் தொடைகளைப் புழுக்களும் பூச்சிகளும் குடைந்ததுகூட அறியாமல் சமாதியிலிருந்தார். அப்போது அவர் நிர்குண பிரம்ம நிலையில் இல்லையெனில் வேறென்ன செய்ததாகக் கொள்வது? இஷ்டதேவதையின் உருவத்திலேயே மனத்தைத் தோய்த்த பக்தர்களும் புற உணர்ச்சிகளை மறப்பதுண்டுதான். இவர்கள் வெளிப் பிரக்ஞை அடைந்தபின் தங்களது சமாதி நிலையில் அநுபவித்த இந்திரிய அதீதமான இறை லீலைகளைக் கூறுவர். ரமணர் இப்படிப்பட்ட லீலைகளையும், செயல் எதையும் தமது சமாதி நிலையில் காணவில்லையே! ரமணருக்கு இஷ்டதேவதை ஏதுமே இல்லையே! அல்லது, உருவற்ற ஒரு பராசக்தி உள்ளது என்றும், அது பிராண ரூபமாகவும் இருக்கிறதென்றும் கொண்டு, அதனிடமிருந்து மகா சித்திகளைப் பெறுவதற்காக மூச்சை அடைத்து யோகம் செய்து வெளி உணர்வை இழந்தவரா

ரமணர்? அதுவும் இல்லையே! அவர் எந்த ஸித்தியையும் வெளிக்காட்டியதில்லையே! அப்படியானால் அவர் அந்தப் பூச்சிக்கடியைக் கூட உணராமல் நாட்கணக்கில் தூங்கிக் கொண்டா இருந்தார்? தூங்கினால் அவர் முகத்தில் அந்த உயிரொளி பொழிந்திருக்குமா? அவர் சன்னிதியில் வந்தாருக்கே ஒரு மின்சாரம் பாய்ந்த உணர்வு இருந்ததே, வெறுமே தூங்கி எழுந்தால் இப்படி இருக்குமா? இப்படி பயனடைந்தவர்களின் ஆத்மாநுபவங்களை நம்பமறுத்தால் உடற்கூறு நிபுணர் சொல்வதைக் கேட்போம். சாய்மானமின்றி முதுகுத் தண்டை நேராக நிமிர்த்தியும், தலையைத் தொங்காமல் நேராக வைத்துக் கொண்டும் எவரும் தூங்க முடியாது என்று உடற்கூறு நிபுணர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் ரமணர் நிச்சயமாக உறங்கவில்லை. எவ்வித சக்தியின் ஆட்டமும் இல்லாமல், பரம சாந்தி நிலையில் வெளிஉணர்வை இழந்தபோதிலும், உணர்விழந்த உறக்க நிலையிலோ, மயக்க நிலையிலோ இல்லாமலும், தன்னந்தனி உணர்வாகவே ஆகி ஒளிவீசிக் கொண்டிருந்த ரமணர் பொய்யே அறியாத தம் வாயால், பராசக்திக்கும் ஆதாரமான பரப்ரம்ம நிர்குண ஸ்வரூபத்தில் தாம் இரண்டறக் கலந்திருப்பதாகச் சொல்கிறார் என்றால், அப்புறம் அத்வைத முக்தி உண்டா, நிர்குண பிரம்மம் உண்டா என்றெல்லாம் கேட்பதும் தகுமா?

'எத்தனை மதிப்பிற்குரியதாக இருந்தாலும் கூட மூன்றாம் மனிதரின் வார்த்தையை எப்படி சங்கை இல்லாமல் அடியோடு நம்புவது? பாழாய்ப் போகிற சித்தம் சந்தேகிக்கத்தானே செய்கிறது?' என்று கேட்கலாம். வாஸ்தவம். அத்வைத ஞானிகளின் தனிப் பெருமை, தங்களது அநுபவம் இங்கேயே இம்மாதிரி அனைவருக்கும் சாத்தியம் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்வதுதான். ஆத்மா வேறெங்கோ வேறேதோ காலத்திலோ உண்டாகிறதா என்ன? ஆத்மாநுபவம் உண்டா என்று ஐயுற்றுக் கேட்கிறவனும் அந்த ஆத்ம சக்தியால்தானே அப்படிக் கேட்கிறான்? எனவே, மகாஞானிகளைக்கூட நம்ப முடியாவிட்டாலும் பாதகமில்லை. இவர்கள் தான் யார் என்பதில் தாங்களே ஆழ்ந்த சிந்தனை செலுத்தினால் போதும். கர்ம பாரம் மிகுந்த இவர்கள் ஆத்ம அமைதியில் பூரணமாகக் கரைந்து போவரா என்பது சந்தேகம்தான். ஆயினும் இவர்கள் மட்டும் ஆத்மத் தியானத்தில் ஓரளவு முயன்று பார்த்தாலும் போதும், நிச்சயமாக தங்கள் உயிருக்கும், அந்த உயிருக்கும் உயிரான பராசக்திக்கும் அடிப்படையாக ஒரு காரியமற்ற மகத்தான அமைதி

வெளி இருக்கிறது என்பதை ஒரு சூசனையாகவாவது, ஒரு 'கோடி' காட்டினாற்போலவாவது உணர்ந்தே தீருவர். நான் யார் என்று தேடுகிற முயற்சியைத் தினமும் சிறிதேனும் பயின்றால் அத்வைத ஆத்மானுபவம் அனவரதமும் கிட்டாவிட்டாலும், அது நிச்சயமாக உள்ளது என்று ரகசிய சங்கேதம் கிடைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அதாவது, நிர்குணத்துக்கு நிரூபணம் பிரத்தியட்சமாகவே உள்ளது.

ரமணர் போன்ற அநுபூதிமான்கள் அவ்வக்காலத்திலும் உதித்து, நிர்குண பிரம்மாநுபவத்தை எடுத்துச் சொல்லியும் கூட அவர்களை இந்த பக்தி மார்க்கிகள் நம்பவில்லை என்றால் அதற்குக் காரணம் இவர்களுக்குத் தமது சித்தாந்தத்தில், மனப் போக்கில் உள்ள மோகப் பிடிப்புதானே? இவர்கள் அன்பு செய்து லீலையில் களித்தார்கள் என்பதால், அன்புக்கும் லீலைக்கும் ஆதாரமான ஓர் அமைதி இல்லை என்றோ, அதில் எவருமே அமிழ முடியாது என்றோ கருத வேண்டுமா என்ன?

உடல் மரித்து இந்த உலகிலேயே விழுந்த பிறகு — தாங்கள் இதே உடலுடன் தங்கள் இஷ்ட தெய்வத்திடம் செல்வதற்கில்லை என்பதால் — சூக்ஷ்ம உடலில் மேலுலகு செல்வதாகவும் அங்குள்ள இறைவன் உலக இயற்கைக்கு அப்பாற்பட்ட அப்பிராகிருத சரீரம் கொண்டு தங்களை மகிழ்விப்பான் என்றும் பக்தி மார்க்கிகளில் பலர் கூறுவர். அவனே ஊனக்கண்ணுக்குத் தெரிகிற மாதிரியும் வந்து இந்த உலகிலேயே தரிசனம் தருவான் என்றும் கூறுவர். பராசக்தியின் சக்திக்கு யாரும் எல்லை வகுக்க முடியாதாகையால் இதனைத்தும் உண்மையே என்பதில் ஐயப்பட வேண்டியதில்லை. உருப்படைத்த தெய்வத்தை இந்த உலகத்திலேயே தரிசிக்கிறவர்கள் உண்டு — இன்றைக்கும் இருக்கிறார்கள். உருவம் இல்லாத ஒன்று இத்தனை பிரபஞ்சங்களாகவும் ஜீவராசிகளாகவும் உருக் கொண்டுள்ள போது தெய்வ வடிவங்களாகவும் உருக் கொள்கிறது என்பதை சந்தேகிக்க இடம் இல்லை. இந்நிலையில் குண விசேஷங்களைக் கொட்டுகிறது — இதெல்லாம் சரிதான். ஆனால் இதற்காக நிர்குண, நிராகாரமே கிடையாது எனலாமா?

ஞானிகளை இந்த பக்தர்கள் ஆக்ஷேபிப்பது ஒரு புறமிருக்கட்டும். தங்களுக்குள்ளேயே, 'தந்தெய்வம் எந்தெய்வம் என்றெங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடுவதை' என்னென்பது? ஒரு பக்தருக்கு சிவனாக வருகிற பராசக்தி, இன்னொருத்தருக்கு விஷ்ணுவாக வருகிறது. மூன்றாமவருக்கு முருகனாக வருகிறது. அவரவருக்கு அவர் தெய்வமே

இஷ்டமூர்த்தியாக இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் மற்ற தெய்வ வடிவங்கள் இதற்குத் தாழ்ந்தவை என்று ஆர்ப்பரிப்பதை என்ன சொல்ல? ஒன்றிடமே பிடிப்பு இருப்பது நல்லதுதான் — சித்தம் சிதறாமலிருக்க அது உதவும்தான். ஆயினும், தன்னைப் பொறுத்தமட்டில் தன் தெய்வம் ஒன்றை மட்டும் வழிபடுவதோடு நில்லாமல், பிற தெய்வங்களைத் தொழும் பிறரை ஏன் பழிக்க வேண்டும்? ஒன்றுக்கு மேற்பட்ட பிற தெய்வங்களை மதிப்புடன் நினைக்கும் அன்பிலேயே சித்தம் சிதறுகிறது என்றால், இவர்களோ பிற தெய்வங்களைத் தாழ்த்தி நினைக்கும் துவேஷத்தால் சித்தத்தை எத்தனை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள்? தங்கள் இஷ்ட தெய்வத்திடம் ஒருமுகமாகச் செலுத்த வேண்டிய சித்தத்தைத் துவேஷத்தில் செலுத்தி மகிழ்ச்சி கொண்டு பேசுவதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள்? எத்தனை வாதங்கள்? வேத உபநிஷத புராண மேற்கோள்கள்? அன்பு மார்க்கம் எனப்படும் பக்தியில் பரசமய கண்டனத்தையே முக்கியமாக்கித் துவேஷ விஷத்தைக் கலக்கிறார்களே! பக்தியின் எல்லை நிலத்தில் பராசக்தி படைத்த உயிரினம் அனைத்திடமும் அன்பு பொங்கி வழியும் என்கிறார்கள். ஆனால் இந்த அனைத்து உயிரினங்களில் மற்ற தேவதா உபாசகர்களும், அத்வைத ஞானிகளும் சேரவில்லையோ என்று எண்ணுகிற விதத்தில், மிகப்பெரிய பக்திமார்க்கப் பிரவர்த்தகர்கள் கூட வரம்பு மீறிய கண்டனங்களைக் கொட்டுகின்றனரே!

பக்தி மார்க்கம் என்கிறபோது பொதுவாக வைஷ்ணவ சம்பிரதாயமே நினைவில் வரக்கூடும். ஸ்ரீமன் நாராயணனையோ, கிருஷ்ணபரமாத்வையோ முழுமுதற்கடவுளாகக் கொண்ட பலவிதமான துவைத, விசிஷ்டாத்வைத மார்க்கங்களே இவை. இவற்றை விட சைவ சித்தாந்தம் முதலிய சிவ பக்தி சம்பிரதாயங்கள் அத்வைதத்துக்கு நெருக்கமாக வருகின்றன என்றாலும்கூட, மேலே கூறியதில் பெரும்பங்கு இவர்களையும் தழுவும்.

இனி சக்தி உபாசனையைப் பார்த்தோமாயின், இங்கே ஒரு பெரிய மாறுதல் உண்டாகிறது. தந்திரங்கள் எனப்படும் உபாசனா முறைகளும் அவற்றில் இடம் பெறும். மந்திரம், யந்திரம் ஆகியவையும் இங்கேயே மிக மிக விரிகின்றன. மிகவும் அருவருக்கத்தக்கனவும், அஞ்சத்தக்கனவும் கூடப் பராசக்தி ஸ்வரூபமே என்பதால் இவற்றின் மூலம் அவளை அணுகச் செய்கிற தந்திரங்களையும் சாக்தத்திலேயே நிறையக் காண்கிறோம். ஆனால் இதுவே மார்க்கங்கள் பலவற்றிலும்

அத்வைதத்துக்கு மிக மிக நெருக்கத்தில் வந்து விடுவதைக் காண்கிறோம். 'நெருங்கி' என்றாலும் போதாது — 'அபேதம்' என்றே சொல்லலாம் போலிருக்கிறது. சாக்த மார்க்கங்கள் பராசக்தியின் லீலா விபூதிகளில் திளைப்பதற்காக ஏற்பட்டவையானாலும் இவை ஜீவ - பிரம்ம ஐக்கியத்தையே முடிவாக வலியுறுத்துவது புதிராகத் தோன்றுகிறதா? இங்கேதான் மிகவும் அதிகமாக அத்வைத கண்டனம் இருக்கும் என நாம் எண்ணுகிறோம். ஆனால் விந்தையிலும் விந்தையாக இங்குதான் அத்வைதாநுபவத்திற்கு மிகவும் அண்மையில் வருகிறோம். தச மகா வித்யைகளுக்கும், மற்ற சக்தி மூர்த்தி பேதங்களுக்கும் தனித்தனி லோகம் சொல்லப்பட்டிருந்தாலும்கூட முழு மூலத்தில் முழுகி அதுவாகக் கரையும் லோகமற்ற லோகத்தைக் கையற்ற கையால் பிடிக்கிற அளவுக்கு நெருங்கி வருவது இங்குதான். இதற்குக் காரணம் நம் அறிவில் பிடிபட வேண்டும் என்றில்லை. ஆயினும் ஒன்று தோன்றுகிறது. ''எல்லோரும் பிரம்மமாக முடியும்; ஆனால் பராசக்தியாக முடியாது'' என்பது உண்மையேயாயினும் அந்தப் பராசக்தி பிரம்மமாக முடியும் அல்லவா? 'ஆக முடியும்' என்ன? எப்போதும் அவள் பிரம்மமாக இருந்து கொண்டிருப்பவள்தானே? காரியம் செய்வதாக வெளியே தோன்றும் ஞானி உள்ளே பிரம்மத்திலேயே நிலைத்திருக்கின்றான் என்றால், சகல காரிய காரணியான இவளும் உள்ளூர பிரம்மம்தானே? எனவே, லீலாம்பிகையாக இருந்தாலும் லீலாப்ரபாவ வீச்சினைக் காட்டியபின் ஞானாம்பிகையாக இருப்பதுவே அவளது இயல்புபோலும்! நாம் உணராவிட்டாலும் நம் அனைவரையும் நிர்குண அத்வைதத்தில் கரைப்பதே இந்த லீலாவிநோதினிக்கு மிகவும் பிடித்த விளையாடல் என்பது சகல ஜீவராசிகளுக்கும் இவள் அன்றன்றும் தம்மை மறந்த உறக்க நிலையை அருளுவதிலிருந்தே தெரிகிறதல்லவா? இப்படி அன்றன்றும் நம்மைச் சில மணி நேரம் தனது உலக விளையாட்டிலிருந்து விடுவிக்கிறவள் இவளது பிரபாவத்துக்கு அப்படியே சரணாகதி செய்துவிட்ட சாக்தர்களை திவ்விய லோகங்களில் வைத்துக் கொண்டு சாசுவதமாகக் கூத்தடிப்பதைவிட பிரம்மஞான அமைதியில் சேர்ப்பதிலேயே ஊக்கம் கொண்டிருக்கிறாளோ என்னவோ? அதனால்தான் சாக்தமே அத்வைதத்துக்கு மிக அணித்தாக உள்ளதோ?

அது எப்படியானாலும் பராசக்தியின் லீலாநுபவ ஆனந்தம், பிரம்மாநுபவ சாந்தி இரண்டையும் பெற ஸ்ரீவித்யாதி சாக்த மார்க்கங்கள் வழிகாட்டுகின்றன என்பது வெளிப்படை.

ஞானி தனது மார்க்கத்தில் உள்ள மோகத்தால் பக்தியை தாழ்மட்ட அதிகாரிகளுக்கான இடைக்கால ஏற்பாடு என்றான். பக்தன் சுயவழி மோகத்தால் அத்வைத ஞான நிலை என்றே ஒன்று கிடையாது என்றான். இனி யோக மார்க்கிகளைப் பார்த்தால், அதில் சிலரும் பக்தியின் ஈரம் அறியா வறண்ட ஜீவர்களாக உள்ளனர். வேறு சில மகா யோகேசுவரர்களோ, ''அத்வைத நிலை உண்டு; நானே அதைத் துய்த்திருக்கிறேன். ஆனாலும் தன்னை மட்டும் விடுவித்துக் கொண்டு இப்படிச் செயலற்றுக்கிடப்பதைவிட, பராசக்தியின் ஆற்றலைப் பாருக்கு இழுத்துப் பாய்ச்சி நமது சிறிய மனத்தைக் கடந்து பராசக்தியின் பெருமனத்தைப் பெற்றுத் தெய்விகமாகிக் காரிய உலகிலேயே இழுக்கின்றி இன்பமாக வாழ வழிகாட்டுவதுதான் உத்தமமானது'' என்கின்றனர். ஓரளவு இதுவும் இவர்களுக்குத் தம் வழியில் உள்ள பற்றில் பிறந்த கருத்துத்தான். செயலற்ற அத்வைதி மூலமாக, அவன் உத்தேசிக்காவிடிலும்கூட, மக்களுக்கு எத்தனையோ நலன்கள் நடக்கின்றன என்பதைக் காண இந்த மகா புருஷர்களும் தவறிவிட்டனரா? செயலிலேயே தேவானந்தம் காணலாம் என்பதால் செயலற்று ஆனந்தம் காணக்கூடாது என்றாகிவிடுமா என்ன? இவர்கள் அத்வைதி சுயநலமி என்றும், கர்மம்-பக்தி கலந்த யோகியே பராசக்தியைப் பாருக்கு இழுத்துப் பிறர் நலன் பேணுகிறான் என்றும் தொனிக்கப் பேசுவதற்கு ரமண பகவான் பல இடங்களில் அற்புதமாக விடைபகர்கிறார்.

அவர் என்ன சொல்கிறார்? மகா சக்திதான் உலகைப் படைத்ததேயன்றி, நாம் படைக்கவில்லை. (பல அத்வைதிகள் ஜீவமனத்தின் கற்பனையே உலகு என்று சொன்னாலும் மேற்சொன்ன யோகிராஜர்கள் நிச்சயமாக அப்படி எண்ணவில்லை.) உலகத்தின் விஷயத்தில் அந்த மகாசக்திக்கு இல்லாத பொறுப்பு தனக்கு இருப்பதாக எவனும் எண்ணவேண்டியதில்லை. எவர்க்கும் தீமை செய்யலாகாது, முடிந்தமட்டும் நன்மையே செய்யவேண்டும் என்பது வாஸ்தவம். என்றாலும் உலகையெல்லாம் உத்தாரணம் செய்வேன் என்று அட்சதை போட்டுக் கொண்டு கிளம்ப நமக்கு அருகதை இல்லை. சுயநலம் பேணுவதுதான் அகங்காரம் என்று தோன்றலாம். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் ஞானி கோருகிற 'சுயநல' மோட்சத்தில் தான் துளிக்கூட அகங்காரம் இல்லையென்பதும், பராசக்திக்கே கட்டுப்பட்ட சரணாகதன் என்று தன்னை சொல்லிக்கொள்கிறவனின் உலகைத் திருத்தும் ஆர்வத்திலேயே அகம்பாவச் சாயல் இருக்கிறது என்பதும் புலனாகும். எப்படியெனில், பராசக்தி தானாகச் செய்யாத ஒன்றை இவன் பொறுப்பேற்றுக் கொண்டு செய்ய முற்படுகிறான் எனில்

அது அகம்பாவச் சாயல்தானே? 'தனக்கு அகம்பாவம் இல்லை; பராசக்தியின் அருள் கொண்டே உலக நலன் புரிய விரும்புகிறேன்.' என்றே இவன் சொல்வான். அப்படியாயினும் **இவனுக்கு** அருள்புரிந்து **இவன் மூலம்** அவள் உலக நலன் செய்யவேண்டும் என்று ஏன் எதிர்பார்க்கவேண்டும்? அவள் தானே தன் கருவிகளைத் தேர்ந்தெடுப்பாள். இவனைக் கருவியாகக் கொள்ளவேண்டுமாயின் அவளே அதைச் செய்வாள். தானே அறியாத அகங்கார வேகத்தோடு இவனாகப் புறப்பட்டால் எந்த நல்லதும் செய்ய இயலாமலே போகலாம். இவன் நல்லதாக நினைப்பதை உலகம் அப்படி ஒப்புக் கொள்ளாமலும் போகலாம். இதனால் இவனுக்கு ஆசாபங்கம், கலக்கம் உண்டாவது தவிர ஒரு பலனும் விளையாமற்போகலாம். 'சுயநலமி'யாகத் தோன்றுகின்ற அத்வைத சாதகனோ, ஜீவனாகத் தோன்றும் சிறிய 'சுய'த்தை, சுயஞ்ஜோதியாம் பிரம்மத்தில் அடியோடு இழக்க முற்படுபவன். சின்ன நானுக்கு இங்கு அடியோடு இடமில்லை. அந்த நானே இல்லாதபோது, அதோடு சம்பந்தப்பட்ட உலகம், அப்புறம் அந்த உலகின் நன்மை, அதற்கப்புறம் அந்த நன்மையை இந்த நானைக் கொண்டே செய்கிற நாட்டம் இவை எப்படி இருக்க இயலும்? தன்னை முற்றிலும் இழக்கும் இதுதானே உண்மையில் பூரண சரணாகதி? இழந்து கொண்டபின் அவளே உலகையும் பிரம்மமாக இவனுக்குக் காட்டுவாள். அவள் இஷ்டம் கொண்டால் இவன் மூலமே உலக உத்தாரணமும் ஸ்தூலமாகக் கூடச் செய்வாள்.

'யோக பலத்தால் பராசக்தியை இழுத்து உலகுக்குப் பாய்ச்சுவது' பற்றி நினைப்பதும் ஒரு மோகம்தான். தன்னைவிட அது பெரிய சக்தி என்பதால்தான் அதன் ஆற்றலை இவன் உலகுக்குத் திருப்ப எண்ணுகிறான். அப்படியிருக்க இவனைவிட மகா பெரிய சக்தியை இவனது சாதனா பலத்தால் எப்படி இழுக்க முடியும்? மெய்யாகவே பராசக்தியைப் பாய்ச்சிய வடிகாலாகப் பல்லோருக்கும் பேரருள் புரிந்த யோகீந்திரர்கள்கூட இப்படித் தொனிக்கப் பேசுகின்றனர் என்றால் அதை என்னென்பது? ஞானிக்குத் தானாக ஸித்தி லபித்தாக மோகிக்க வைக்கும் மாயா பராசக்திதான், யோகியும் தனது பலத்தால் அவளை இழுத்ததாக எண்ணுமாறு மயக்குகிறாளோ? எந்த யோக பலத்தாலும் அவளை அசைத்து இறங்கிவர செய்ய முடியாது. அப்படி அசைக்க முடியுமானால் சாதகனின் பலம் அவளது பலத்தைவிட அதிகம் என்றாகும். அவ்வாறெனில், இவன் அவளிடம் போகாமல் தன் யோக சக்தியாலேயே உலக உத்தாரணம் செய்துவிடலாம்! எனவே உண்மையில் நடப்பது யாதெனில், இவனுக்கு யோகத்தில் உள்ள

ஆழ்ந்த ஈடுபாட்டினை மெச்சி அவளே இரங்கிவந்து, இவனுக்குத் தெய்விகமான யோகஸித்தி தருகிறாள் என்பதுதான்.

ஆக (ஸித்தாந்தமாக உருவான) ஞானம், பக்தி, யோகம் ஆகிய எந்த மார்கத்தில் செல்வோருக்கும் மோஹம் ஏற்படத்தான் செய்கிறது. எந்த மார்க்கத்திலும் செல்பவனின் ஈடுபாட்டையே தனக்கு அவன் செலுத்தும் பிரார்த்தனையாகக் கொண்டேதான், அந்தந்த வழியின் லட்சியத்தை அவனுக்கு அருள்கிறாள் பராசக்தி. ஆனபடியால் ஞான மோக்ஷமோ, தெய்வ லோக மோக்ஷமோ எதையும் நேராகவே அவளிடம் பிரார்த்தனை என்ற எளிய வழியின் மூலம் பெற்றுவிடலாம். இங்கே பிரார்த்தனை எனும் போது பக்தி ஸித்தாந்த வாத விவாதங்களும், மந்திர தந்திர பூஜாக்கிரமங்களும் தெரியாத எளிய கோரிக்கையையே குறிப்பிடுகிறேன். பெரிய புராணத்தைப் பாருங்கள்; 'மகா பக்த விஜய'த்தைப் பாருங்கள் — எத்தனை எத்தனை எளியவர்கள் இந்த எளிய பிரார்த்தனை ஒன்றாலேயே பரம ஞானம் எய்தினர், கடவுளோடு முகமுகமாகக் கலந்து பழகியுள்ளனர், மகா யோகிகளும் ஆற்ற முடியாத அற்புதங்களை நிகழ்த்தியுள்ளனர்? ஏன், சமீப காலத்தில் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் பிரார்த்தனை ஒன்றாலேயே அன்றோ காளியின் த்வைத தரிசனம், அவளுடன் அத்வைத அடைவு இரண்டையும் பெற்றார்? மற்றோருக்கும் அவர் உத்தரவாதம் கொடுத்து உறுதியுடன் பேசுகிறாரே: ''பணத்துக்காக, சிற்றின்பத்துக்காக, நோய் நொடி தீருவதற்காக எப்படித் தவித்து, ஒரு மூச்சாகப் பாடுபடுகிறீர்களோ அம்மாதிரித் தவிப்புடன், முழு மூச்சுடன் கடவுளை அநுபவிக்க வேண்டும் என மூன்றே நாள் பிரார்த்தனை செய்யுங்கள்! நிச்சயம் ஒரு பலன் காண்பீர்கள்!''

இந்த எளிய பக்தி உயர்வினும் உயரிய பலன்களைத் தருகிறது. ஆனால் எளிய பக்தனை மற்ற எல்லா மார்க்கிகளும் எள்ளி நகையாடுவர். அது மட்டுமல்ல. அந்த எளியவனே பெரிய தடபுடல் பூஜை, மகாமந்திர ஜபம், தியானம், யோகம் எல்லாம் செய்கிறவர்கள் தன்னைவிட உயர்த்தி என்றும், தான் அவர்களுக்குத் தாழ்த்தி என்றும் எண்ணுகிறான்! இந்தத் தாழ்வு மனப்பான்மை நற்பண்புகளான விநயத்தோடும் அடக்கத்தோடும் சேர்ந்ததல்ல; 'ஓஹோ' என்று எதையோ சாதித்தால்தான் பராசக்தியை அசைக்க முடியும் என எண்ணும் (தானே அறியாத் தலைகீழ்) அகங்காரமேயாகும். எளியது தாழ்ந்ததாகிவிடுமா? காற்றும் தண்ணீரும் எளிதில் கிடைத்தாலும் அவையே உயிராதாரம் அன்றோ? மற்ற

மார்க்கக்காரர்களிடம் சுய வழியில் உயர்வு மனப்பான்மை என்ற மோகத்தை உண்டாக்கும் மாயா பகவதி, எளிய பக்தி வழிக்காரனுக்குத் தாழ்வு மனப்பான்மை என்ற மோகத்தை உண்டாக்கி விடுகிறாள் என்றே சொல்ல வேண்டுமோ?

★ ★ ★

நம்மில் சிலருக்கு ஒரு வித மனோதர்மமிருப்பதால் அதையே மற்றவரும் ஏற்க வேண்டும் எனலாகாது. இவற்றில் சில நமக்கு உறுத்தலாக, அருவருப்பாக இருந்தாலும்கூட இது நமக்கு வேண்டாதது என நாம் ஒதுங்க வேண்டுமே தவிர, அந்த வழிகளையே இகழ்வதற்கில்லை. இப்படி மற்ற மனோதர்மக்காரர்களைப் பழிக்கிற மோகத்தைப் பராசக்தி பரப்பி வைத்திருக்கிறதே என்று அதையும் இகழ்வதற்கில்லை. ஏனெனில், அதன் நிலையிலிருந்து பார்க்கும் போது, அது இயற்றிய பல தர்மங்களுள் மோகம் முதலிய அதர்மங்களும் கூட ஒவ்வொருவித தர்மமாகவே தெரிகின்றன. க்ஷயம் போன்ற நோய்கள் மிகத் தீயனவாக இருந்தாலும் இவை எப்படிப் பரவுகின்றன என்பதை ஆராயும் போது அதிலும்கூட ஓர் ஒழுங்குப்பாடு, தர்மம் இருப்பதாகவே தெரிகிறது. அந்த நோய்க் கிருமிகள் எத்தனை வகை தொகையாய் செயல்படுகின்றன என்று பார்த்தால் மதிப்பான வியப்புணர்வே உண்டாகும். கவியான பராசக்தியின் மோகம் என்ற கதாபாத்திரத்துக்கும் இப்படி ஒரு தர்மம் இருக்கலாம். அது நமக்குப் புரிய வேண்டும் என்பதில்லை. இத்தனை மாறுபட்ட தர்மங்களும் ஒரே பராசக்தியிடமிருந்துதான் வந்திருக்கின்றது. எனவே, எந்த தனித் தர்மத்தையோ பராசக்தி அநுஷ்டிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை. எந்த தர்மத்தின்படியும் அது நடக்க வேண்டும் எனக் கட்டுப்பட்டிருக்கவில்லை, அது எப்படி நடக்கிறதோ அதுதான் அதற்குத் தர்மம். இத்தனை ஒழுங்கான பிரபஞ்ச விதிகளைத் தானாக ஏற்படுத்திக் கொண்டுள்ள அந்த தர்ம ஸ்வரூபத்தை நம் சிற்றறிவால் எடை போட்டுக் குறை கூறலாமா? நம் தர்மத்தைத்தான் அது செய்ய வேண்டும் எனலாமா?

மனிதனை மோகிக்கச் செய்வது அதன் இஷ்டம். குழந்தையின் கையைப் பிடித்து நடத்தும்போது, நாம் அவ்வப்போது கையை விட்டு விளையாட்டுப் பார்க்கிறோம். குழந்தை பயப்படுகிறது. நாமோ சிரிக்கிறோம். நமக்குத் தெரியும், அது கீழே விழப் போனால் நாம் எப்படியும் அதைத் தாங்கிக் கொள்ளப் போகிறோம் என்று. அப்படித் தாங்கி அணைக்கும்போது அந்தக் குழந்தைக்கும் சரி, நமக்கும் சரி

கிடைக்கப் போகிற கூடுதலான ஆனந்தத்துக்காகவே இப்போது அதை நடுங்க வைத்து வேடிக்கை பார்க்கிறோம். மோகத்தில் ஆட்டப்படும் நாம் பயப்பட்டாலும், ஆட்டுகிறவளுக்கு தெரியும், எப்படியும் நம்மை அள்ளி அணைத்துக் கொள்ளப் போகிறாள் என்பது! எனவே அவள் எத்தனை மாயா மோக விளையாட்டும் விளையாடலாம்; எத்தனை எத்தனை எத்தனை கண்ணாமூச்சியும் காட்டலாம்!

எத்தனை பலாத்காரமாக மோகத்தில் தள்ளுகிறாளோ, அத்தனை பலாத்காரமாக முடிவில் தன்னிடம் இழுத்துக் கொள்வாள்! இதை அவ்வப்போது நினைத்து ஆனந்திப்போம், நன்றி செய்வோம், ஆசுவாசம் கொள்வோம். சகல உயிர்களையும் அவள் தன்னிடம் பாப புண்ணியம் பாராமல் வலிந்திழுக்கும் அந்தப் பிரளயம் வரையில் காத்திராமல், இப்போதே நாம் அவளைத் தஞ்சம் புகுந்து பாபத்திலிருந்து விடுபடத் தொடங்கினால் அவளது அணைப்பும் விரைவிலேயே கிடைக்கும்.

★ ★ ★

''மகா மாயையான தேவி பகவதி ஞானிகளுடைய சித்தங்களையும்கூட பலவந்தமாக இழுத்து மோகத்தில் செலுத்துகிறாள்'' என்பது இந்த மாகாத்மியத்தின் உபோத்காதத்திலேயே (முகவுரையிலேயே) கரட்டோணானாகச் சிலரைப் படுத்தி எடுத்துள்ள வாசகம். பிரபஞ்சமும், பிரபஞ்ச காரணியான பராசக்தியும் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டிய விஷயங்கள் என்று அத்வைத சாஸ்திரக்காரர்கள் சொல்வது போலவா, சாக்ஷாத் தேவீ மாகாத்மியத்தை உரைத்த மேத முனிவரும் கருதுகிறார் என்று பல்லாண்டுகளாக நானும் தடுமாறியதுண்டு. ''நீ போய்த் தொலை'' என்று நாம் மிரட்டி வெருட்டி ஒழிக்க முடியாத மகா சக்தியாக அவள் இருப்பதாலேயே, வேறு வழியில்லை என்று அவள் காலிலேயே விழுந்து வழிபட்டு, ''நீ போய்ச் சேரம்மா'' என்று மன்றாடிக் கேட்டுக் கொள்வதுதான் பக்தியா என்று வியந்திருக்கிறேன். ''நீ நடக்கும் போது உனது முதுகழகைக் காண விரும்புகிறேன்'' என்று மூதேவியிடம் ஒருவன் சாதுர்யமாகப் பேசி அவளைத் தன்னிடமிருந்து திரும்பிப் போகச் செய்தானாமே! அதுபோன்றதுதானா அம்பாளை வழிபடுவதும்? அல்லது பக்தி என்பது திருடன் கையிலேயே சாவி தருகிற காரியமா? இந்த ''சாமர்த்தியங்கள்'' அவளுக்கா புரியாது?

இப்போது அவளது கருணையால் தெளிவு பிறந்திருக்கிறது. இப்படிக் கூறிய அதே முனிவர் இதைவிட அழுத்தம் திருத்தமாகத் திரும்பத் திரும்பச் சொல்வது, மோஹத்தில் சூழ்ந்துள்ள அஞ்ஞானியருக்கும் அவள் ஞானம் அருள்வதையும், சம்ஸாரகாரணியான அவளே சம்ஸார பந்தம் நீக்கி மோக்ஷம் அளிப்பதையும் தானே என்பதை இப்போதே காண்கிறேன். அவரிடம் கதை கேட்ட இருவரில் ஒருவனான ஸுரத மன்னன் அப்போதிருந்த அஞ்ஞான மோஹத்திலிருந்து பெருமளவு விடுபட்டு தார்மிகமாக இகபோகம் காணவும், மற்றொருவனான ஸமாதி எனும் வைசியனோ முற்றிலுமே மோஹம் தீர்ந்து, பரம ஞானமெய்தி, மோக்ஷஸுகமே காண்பதற்கும் அதே பராசக்தியிடம்தான் முனிவர் அவர்களை ஆற்றுப்படுத்துகிறார்; அதுதான் இக்காவியத்துக்கு உயிர்ச் சாரமே என்பதை இப்போதுதான் தெளிவுறக் காண்கிறேன்.

தொடக்கத்தில் அவர்கள் அஞ்ஞாவாய்ப்பட்டிருப்பதை அவர் உணர்த்தியே நல்வழி சொல்ல வேண்டியிருந்தபோது, அவர்களை வெட்கத்தினின்றும் குற்றவுணர்வினின்றும் விடுவிக்கும் அற்புத தாக்ஷிண்யத்தில்தான், 'அவர்களென்ன? எவருமே அவளால் ஆட்டிவைக்கப்படுபவர்தான். அலகிலா அவ்விளையாட்டில் ஓரம்சமாக அவள் அஞ்ஞானவாய்ப்படுத்தினால் அதற்கும் ஆளாகவேண்டியவர் தாம்' என்று சொல்லி, ஆறுதலுக்கு உச்ச 'டானிக்'காக, 'ஞானிகளையும்கூட அவள் அப்படி மோஹத்திற்கு ஆட்படுத்தியதுண்டுதான்' என்றார். அது அம்மட்டோடு முடியும் விஷயமே! காவியத்தின் உயிர்ச்சாரம் அல்ல. முடிவாக, மாயையை ஓர் அங்கமாக மட்டுமே கொண்ட பிரம்ம சக்திதான் ஞான முக்தி, பக்தி மோக்ஷம் இரண்டையும் தருகிறது; மனமுருகிய பிரார்த்தனை ஒன்றாலேயே இந்த இரண்டையும் பெற்றுவிடலாம் என்று சர்வநிச்சயமாகத் தெரிகிறது என்றும் அதே முனிவர் வலியுறுத்தியிருப்பதே விஷயம்.

தர்க்கரீதியில் நிரூபிக்கக்கூடிய விஷயமல்ல பராசக்தியின் சித்தம். ஆயினும், இந்த மனித மூளைக்கு உள்ள அகங்காரத்தைக் கூட மன்னித்து அதற்கும் ஓரளவு அனுகூலமாகவே அவளது சித்த வினோதங்களை விளக்கி வைக்கிறாள்! இதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள ''நவராத்திரி நாயகி''யை விடப் பொருத்தமான சந்தர்ப்பம் இல்லை.

உள்ளுக்குள் உணர்ந்ததை வார்த்தையாக்குகிற போது என்னுடைய சிந்தாந்தப் பற்று,. மொழிநடைப் பற்று முதலிய பல

மோகங்கள் உண்மையைப் பல விதத்தில் திரித்துத்தான் இருக்கும். என் வசமில்லாமல் எண்ணங்கள் வருகிற அளவுக்கு அதை வடிக்கும் வார்த்தைகள் அவசமாக வருவதில்லை. அதாவது நான் முற்றும் காலிக்குழலாகி இதை எழுதவில்லைதான்! இதற்காக பராசக்தி என்னை க்ஷமிக்கவேண்டும்! பராசக்தி என்பதைவிட அவள் அம்பாளாகவே (அம்மாவாகவே) இருப்பதால் மன்னிப்பாள்! இதைப் படிக்கும் நீங்களும் இதிலுள்ள அதிகப் பிரசங்கங்களுக்காக என்னை மன்னிக்கவேணும். மில்டன் சொன்னதுபோல்தான் பராசக்தியின் போக்கை உலகுக்கு நியாயமாக நிரூபித்துக் காட்டுகிற (Justifying the ways of God to men) அதீத சாதனையில் நான் இறங்கவில்லை. என் மனத்திலிருந்த அரிப்பு வேறு சிலருக்கும் இருந்திருக்கலாம்; எனவே அது எப்படி என்னிடம் இருந்து நீங்கிற்று என்பதைச் சொன்னால் அவர்களுக்கும் தித்திப்பான மருந்து கிடைத்தமாதிரி இருக்கலாம் என்றே இத்தனை எழுதினேன். ''உத்பத்ஸ்யதே(அ)ஸ்தி மம கோ(அ)பி ஸமான தர்மா'' 'என்னைப்போலவே இயல்பு கொண்ட ஒருவன் என்றோ பிறப்பான், அல்லது இன்றைக்கே இருக்கிறான் — அந்த ஒருவனை நினைத்தே எழுதுகிறேன்' என்றான் பவபூதி. அதே ரீதியில் என் மாதிரியே இருக்கக்கூடிய ஜீவர்களுக்காக எழுதுகிறேன். உள்ளே விரியும் சரிதமானது பக்தர் உலகம் முழுவதற்காகவும் எழுதப்படுகிறது. தனிப்பட்ட முறையில் அதற்கு சம முக்கியத்துவம் வாய்ந்ததாக நான் கருதும் இந்த முகவுரையோ அபூர்வமாகவே கிடைக்கக் கூடிய ஸஹ்ருதயர்களுக்கானது. அவர்கள் எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும் கூட, ஒட்டிய உள்ளம் படைத்தவராதலின், அவர்களுக்காக இத்தனை பக்கங்களை செலவிடுவதும் நியாயமே யாகும்.

இதிலிருந்து மொத்தமாக, ஸாரமாகப் பெறப்படும் உண்மை என்னவெனில்: பரம்பொருளை அடையப் பல வழிகள் உள்ளன: அவற்றில் அவரவரும் தமக்கானதில் செல்லும்போதே பிற வழிகளில் பிழை காணாதிருக்கவேண்டும்; வழிகாட்டும் சக்தி இவ்விதத்தில் நம்மை வழுக்கிவிடாமலும் இருக்க அதனிடமே சரணாகதி புரியவேண்டும் என்பதுதான்.

⋆ ⋆ ⋆

சமயம் என்பது மதங்களுக்கான பொதுப் பெயராக இருந்தாலும், அது குறிப்பாக அம்பாளின் உபாஸனா மார்க்கங்களின் ஒன்றேயாகும். சமமாகக் காண்பதே சமயம் — ஆட்டமற்ற பிரம்மசிவத்தையும், ஆடிக்கொண்டு இருக்கிற மகாசக்தியையும் சமமாகக் கொள்வதே 'சமய' உபாசனை.

இதுவே சாக்தத்தின் பொதுநோக்கு எனலாம். லீலாநந்தம், சாந்தசமாதி இரண்டும் சமமே — ஒன்றே — என்கிற நிலையை அநுபவத்தில் கூட்டுவிப்பதற்காக ஏற்பட்டதே சக்தி வழிபாடு.

தேவீ மாகாத்மியத்தை முனிவர் மேதஸிடமிருந்து முதலில் கேட்ட ஸுரதன், ஸமாதி ஆகிய இருவரில் ஸுரதன் லீலானந்தத்தைப் பெற்றான், சமாதி ஞானசாந்தியைப் பெற்றான். ஸுரதன் என்றால், நல்ல தேரை உடையவன் என்று பொருள். தேரிருந்தால் ஓடத்தான் வேண்டும். இருக்கிற இடத்திலேயே இருக்கத் தேர் தேவையில்லை. இந்திரியக் குதிரைகள், மனம் என்ற கடிவாளம், புத்தி என்ற சாரதி எல்லாம் படைத்த சரீரத் தேருக்குள் இருக்கிறவன் ஜீவாத்மாவான ரத நாயகன் என்று உபநிஷதமும் கூறும். ரதம் என்று சொன்னதால் இது அழகாகக் குலுங்கியபடி போய்க் கொண்டேயிருக்கவேண்டும் என்றாகிவிடுகிறது. இது செயலற்ற நிலையைக் குறிக்காமல் தர்ம மார்க்கத்தில போய்க் கொண்டே இருக்கவேண்டும் என்பதைச் சுட்டுகிறது. கர்மம் உட்கலந்த பக்திமார்க்கத்தில் அல்லது பக்தி உட்கலந்த கர்ம மார்க்கத்தில் ஆனந்தமாகப் போகவேண்டும் எனலாம். ஸுரதன் செய்தது இதுவே. மற்றவனுடைய பெயரே ஸமாதி. அவன் கிடக்கிற இடத்திலேயே கிடந்து கொண்டு எல்லாமாகி இருக்கிற ஒரே உணர்வின் பூரிதமாக இருப்பான்!

''நவராத்திரி நாயகி''யைப் படிப்பவர்களில் ஒரு சிலராவது அவளிடம் காரணமே யில்லாத மெய்யான அன்பு கொண்டு, இகபர நலனை — அதாவது ஸுரதன் போல இகத்திலேயே பரம் நிறைந்திருக்கிற திருவிளையாடல் இன்பத்தையோ, அல்லது சமாதியைப்போல பரம் என்பது எங்கோ உயரேஇல்லை, இதோ இங்கேயே இருக்கிறது என்று தன்னில் தானாகப் பிரகாசிக்கும் இன்பத்தையோ — அநுபவிப்பாராக! குறைந்தபட்சம் அந்த அநுபவத்தின் ஒரு ரகசிய அழைப்பு தங்களைத் தீண்டுவதாகவாவது பாவித்து இன்புறுவாராக!

அக்டோபர் 21, 1974
(விநாயக சதுர்த்தி) **ரா. கணபதி**
சென்னை - 53.

உதயம்:

காளி என்னும் களிப்புத் தத்துவம்

1. இருள் இறுகியது; மருள் மறுகியது!

பரவி வந்தது இரவு. பகலே இரவாக இருக்கும் அந்த அடர்ந்த காட்டில் கனாந்தகாரம் கவ்வி வந்தது.

இருள் மூடிய மனத்தினனாக மன்னன் ஸுரதன் வனத்தில் புரவிமீது சென்று கொண்டிருந்தான். அவனா சென்றான்? அவனா புரவியைச் செலுத்தினான்? மாறி மாறிக் குழம்பியும் ஸ்தம்பித்தும் இருந்தது அவனது மனம். அவனுக்கு எங்கு போவது என்றே தெரியவில்லை. ராஜதானியை விட்டுத் தொலைந்தால் போதும் என்கிற வெறுப்பில் ஒரே மூச்சில் அரண்யத்திற்கு வந்து விட்டான். அதன்பின்......

பின்—? ஒரே கேள்விக்குறிதான்! விசுவாசம் மிகுந்த அந்த அசுவம் தன் பாட்டில் போய்க் கொண்டிருக்கிறது. மன்னன் ஸுரதனை ராஜ்யத்திலிருந்து எத்தனை தொலைவு கொண்டு போக முடியுமோ, அத்தனைக்கு நல்லது என்ற உள்ளுணர்ச்சி அந்த பரிக்கு இருந்தது போலும். பரவி வரும் இரவிலும் எவ்வாறோ வழிகண்டு பரிவோடு போய்க் கொண்டிருந்தது புரவி.

'ஆகா, இந்தக் குதிரையின் கஷ்டத்தை உணராமல் போனேனே!' என்று திடுமென ஓர் எண்ணம் உதித்தது ஸுரதனுக்கு.

குதிரையைத் தட்டி நிறுத்திவிட்டு அதன் மீதிருந்து குதித்தான். அதன் முகத்தை அருமையாகப் பிடித்துக் கொண்டு தன் முகத்தோடு ஒற்றிக் கொண்டான்.

அசுவம் சிலிர்த்தது அன்பில். சுழிசுழியாக அதன் உடலெங்கும் அலைகள் பரவின. பரிதாபத்துடன் பரியோடு பேசினான் ஸுரதன்.

"ஹே உச்சைசிரவமே! உன் தலைச்சுழி வலமாக இருந்ததால்தான் உன்னை என் பிரதான குதிரையாக வைத்தார்கள். ஆனால், உண்மையில் உன் 'தலைச்சுழி' நன்றாக

இல்லாததால் தான் இந்தத் துர்பாக்கியசாலியோடு இப்போது இந்த வனத்தில் வந்து மாட்டிக் கொண்டிருக்கிறாய். உன் போட்டியாளன் ஐராவதத்தின் அதிருஷ்டத்தைப் பார்! அவனை அப்போதே கோலாவித்வம்ஸிகள் மடக்கிக் கொண்டு போய் விட்டார்கள். இப்போது அவன் எதிரிகளின் யானைப் படையில் பிரதான கஜமாக ஜம்மென்று இருப்பான். நீதான் என்னோடு வயிறு காய இங்கு வந்து அவதிப்படுகிறாய். என்னை மன்னித்துவிடு அப்பனே! மன்னன் என்கிற மமதை, தோல்வி நேரத்திலுங்கூட என்னைவிட்டு மறையவில்லை. மற்றவர்களை விட நான் ஒரு படி மேலானவன் என்கிற அந்தஸ்துச் சிந்தனை, என் ஐசுவரியமெல்லாம் அஸ்தமித்த வேளையிலும்கூட எனக்கு நீங்கவில்லை. அதனால்தானே ஊரை விட்டு ஓடவேண்டும் என்று முடிவு செய்தபோது, உன் எதிர்காலத்தைப் பற்றிக் கொஞ்சம்கூட எண்ணாமல் உன்மேல் ஏறி வந்தேன்?சரி, நடந்தது நடந்து விட்டது. இனியும் உன்னை நான் அவதிக்கு ஆளாக்கவில்லை. உன்னைப் பராமரிக்க எனக்குத் துப்பு இல்லாவிடினும், உன்னை இனியும் இன்னலுக்கு ஆட்படுத்தாமலாவது இருக்கிறேன். அருமை உச்சைசிரவமே! பூவுலகத்துக்கே என்னை இந்திரனாக எண்ணித்தானே என் பட்டத்து யானைக்கு ஐராவதம் எனவும் உனக்கு உச்சைசிரவம் எனவும் பெயர் வைத்திருந்தேன்? இப்போது அது எல்லாம் கேலிக் கூத்தாகிவிட்டது. ஐராவதம் . ஏற்கெனவே பறிபோயாகிவிட்டது. பரியே! நீயும் இதோ விடைபெற்றுக் கொண்டு நாட்டுக்குத் திரும்பிவிடு. இனி வரவிருக்கும் காடு மிகவும் அடர்ந்தது. அங்கு துஷ்ட மிருகங்கள் உண்டு. நீ அங்கு வாழ முடியாது. எனவே, இப்போதே நாட்டுக்குத் திரும்பி விடு......''

குதிரையின் தாடையைத் தட்டிக் கொடுத்தான் ஸுரதன்.

அவனது கைகளை நனைத்தது அதனுடைய கண்ணீர். ''ஹ்ர் ஹ்ர்-'' என்று அது நாசியைச் சுருக்கி அரற்றியது.

'ஆகா, சகலரும் கைவிட்ட இந்த ஸுரதனை விட மாட்டேன் என்கிற ஒரே ஒரு ஜீவனும் இருக்கிறதே!'

''உச்சைசிரவமே! உன் அன்பு எனக்குத் தெரியும். அந்த அன்புக்காகவே என்னை விட்டுப் போகச் சொல்கிறேன். நான் நிராயுதபாணியாக இந்த அடவிக்கு வந்திருக்கிறேன். என்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கிஞ்சித்தும் இல்லை. தற்கொலை செய்து கொள்ளக் கூடாது என்ற ஒரே காரணத்துக்காகவே தப்பி ஓடி வந்திருக்கிறேன்,

அதனால் நான் ஆயுதம் ஏதும் எடுத்து வரவில்லை. என்னை வனவிலங்குகள் அடித்துப் போட்டாலும் மகிழ்ச்சியே! ஆனால் உனக்குத் தீங்கு வரச் சகிக்க மாட்டேன். பூர்வத்தில் செய்த பாபங்களுக்குப் பிரதியாகத்தான் இப்போது அவல நிலையில் இருக்கிறேன். இப்போதும் குற்றமற்ற அன்புயிரான உனக்குத் தீங்கு நேர நான் இடம் தந்தால் மீண்டும் பாப மூட்டை பெருகிவிடும். கண்ணே, உச்சைசிரவமே! என்னைச் சோதிக்காமல் உனக்கே உரிய உச்சகதியில் ஓடியே போய்விடு— இந்தப் பரம அபாக்கியவானை விட்டு'' என்றான் சுரதன்.

ஒரு விஷயத்தை வெகு நுட்பமாகப் புரிந்து கொள்வதை ''ஹார்ஸ் ஸென்ஸ்'' என்றே சொல்வர். இந்த அச்வ ரத்தினம் மன்னன் மனத்தை அநுதாபத்தோடு புரிந்து கொண்டு விட்டது.

ஸுரதனை மும்முறை வலம் வந்தது உச்சைசிரவம். மண்டியிடுவதே போல் குனிந்தது. ''ஹ்ர் ஹ்ர்'' என்று சிலும்பியது; புலம்பியது.

மறுகணமே அங்கிருந்து கிளம்பிவிட்டது — நாட்டை நோக்கி.

★ ★ ★

தன்னந்தனியாகக் கன்னங்கரிய கானகத்தில் நின்றான் மன்னன் ஸுரதன்.

மன்னனாவது? ஸுரதனாவது? ராஜ்யத்தை விட்டோடி வந்த பின் மன்னன் என்பது எப்படிப் பொருத்தம்? ஸுரதன் என்று குலகுரு இவனுக்குப் பெயர் இட்டிருந்தார். அதற்கேற்பச் சைத்ர வம்சம் கண்ட சக்கரவர்த்தியாக அற்புத ரதத்தில் ஆரோகணித்து இவன் வாழ்வாங்கு வாழ்ந்ததும் உண்டுதான்.

ஆனால் இப்போது இந்த ஸுரதனுக்கு ரதம் எங்கே? ஒரே ஒரு குதிரையுடன் வந்த இவனை அதுவும் கூட அல்லவா பிரிந்து விட்டது?

காலமே, நீ செய்யும் விந்தையே விந்தை!

காலஸ்வரூபிணியும் காலமேக சியாமளையுமான காளி மாதா அந்த வனத்தை அணைப்பதே போல் கும்மிருட்டு பம்மி வந்தது.

ஸுரதன் தட்டுத் தடுமாறியபடி இலக்கேதும் இல்லாமலே நடந்து கொண்டிருந்தான்.

ஆகா, இது என்ன ஒலி! திவ்யமான வேத ஒலி! மதுரமான மறையொலி! கம்பீரமான சுருதி ஒலி! காளிமாதாவைத்தான் வேத மந்திரம் கொண்டு போற்றுகிறார்கள்.

ராத்ரீம் ப்ரபத்யே ஜனனீம் ஸர்வ பூத நிவேசனீம்।
பத்ராம் பகவதீம் க்ருஷ்ணாம் விச்வஸ்ய ஜகதோ நிசாம்॥

காலமாக இருக்கும் அன்னை பராசக்தி பகலாகப் பளபளத்தாள். இப்போது இரவாக அமைதியில் அடங்குகிறாள்.

அவளா அடங்குகிறாள்? அவள் அடங்கிவிட்டால் உலகம் ஏது? இரவைக் காட்டி உலகை எல்லாம் அமைதியில் அடங்கச் செய்கிறாள். எல்லாம் உறங்குகின்றன. அவள் மாத்திரம் உறங்காமலே, ஆனால் உறக்கத்திலும் அதிக சாந்தியுடன், உறங்கும் உலகனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறாள். பார்த்துக் கொண்டு மட்டும் தான் இருக்கிறாளா? அவள் தான் இந்த உலகம் முழுவதையும் தாங்கி தரித்துக் கொண்டும் இருக்கிறாள். பகலில் மக்கள் செய்த செயல்களைப் பார்த்தாள்; இப்போது அவர்கள் செயல்அற்று உறங்கும் போதும் பார்க்கிறாள். செயல்களுக்குப் பின்னால் உள்ள சக்தி அனைத்தையும் அவர்களுக்குத் தந்து தாங்கினாள். இப்போது செயலற்று உறங்கும் போதும் அந்த சக்தி ஓயவில்லை. மக்களது கையும் காலும் இப்போது அவர்களால் செயல்படாமல் இருக்கலாம். மனதும் கூட செயல்படாமல் கனவுநிலையைக் கடந்த உறக்கத்தில் முழுகியிருக்கலாம். ஆனால் இப்போதும் அவர்களுடைய இதயமும், நுரையீரலும், சீரண உறுப்புக்களும் சீராகச் செயல்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. ஓர் எறும்பு கடித்தால்கூட அவர்கள் விழிக்கிற விதத்தில் மூளையும்கூடச் செயலிழக்காமலேதான் ஒடுங்கி மட்டும் உள்ளது. காலையில் அவர்கள் எழுந்தவுடன் இப்போது மறந்துள்ள அத்தனை விஷயங்களும் அவர்களுக்கு மீண்டும் நினைவு வரத்தான் போகின்றன! இவள்தான் இத்தனைக்கும் காரணம்! உலகின் மீது இரவு என்கிற போர்வையைப் போர்த்தி அதை மறைத்து விட்டு, தான் மட்டும் மறையாமலே தன் நியதியை ஆற்றிக் கொண்டிருக்கிறாள். ஆனால் அதிசயம்! ஒரு போதும் மறையாத இவளைத்தான் எவரும் கண்டு கொள்ளவே காணோம்!

ஒருவருமே காணவில்லை எனலாம்தானா? மகா பக்தர்களும் ஞானிகளும் கண்டு கொண்டும் இருக்கிறார்கள். அப்படி யாரோ சிலருக்கு அவளாகத் தன்னைக் காட்டிக் கொண்டிருக்கிறாள்.

ராத்திரி தேவதையைக் கண்டு கொண்டார் ரிக் வேத ரிஷிகளில் ஒருவரான குசிகர். 'கண்டு கொண்டார்' என்பதைவிடக் 'கேட்டுக் கொண்டார்' எனலாம்! வேத ரிஷிகள் சத்திய தத்துவங்களை மந்திர சப்தங்களாக கேட்டுக் கொள்ளவே

செய்தனர் — கேள்வியும் காட்சியும் அநுபவமும் திரிவேணியாகக் கலக்கும் ஓர் அற்புத நிலையில். அந்த மந்திரங்களை ஓதிக் கேட்டாலே போதும் — காட்சியும் கூடும்; அநுபவமும் கைகூடும்.

அந்த ராத்ரீ ஸூக்த மந்திரங்கள்தாம் இப்போது வனத்தில் எங்கிருந்தோ மெல்லிய குமுறல்களாக அதிர்ந்தன.

சப்தம் வந்த திசை நோக்கி நடந்தான் ஸுரதன். உறக்க மகா தேவியின் மந்திரமே இவனது கிறக்கத்தைச் சிறிது தணித்தது. உறக்கமாதா இவனுக்குச் சிறிது உற்சாகம் ஊட்டினாள்!

ஒலி நெருங்கி நெருங்கி வந்தது.

ஒளியும் வந்தது — அங்கே ஓர் ஆசிரமத்திலிருந்து.

சிரமம் எல்லாம் தீர இடம் கிடைத்ததே என்று இறைவனிடம் நன்றியில் திரும்பியது மன்னன் மனம். என்ன விந்தை! சாகவும் தயாராக இருந்தவன்தான். ஆனாலும் நிம்மதியுடன் தாற்காலிகமாவது வாழ ஓர் இடம் உள்ளது என்றவுடன் அதில் பற்றுதல் உண்டாகிவிட்டது! இது அமைதியாக வாழ வைக்கிற இடம் — யாரோ முனிவரின் பர்ணசாலை. அந்த இருட்டில் ஏதேனும் அரண்மனையையோ, மாளிகையையோ பார்த்திருந்தால் சுரதன் அதை நாடியிருக்க மாட்டான். பிரசாந்தி நிலயமான ஆசிரமமாக இருந்ததாலேயே ஆறுதலுக்குத் தவித்த அவனது மனம் அங்கு விழைந்தது.

நெருங்க நெருங்க மந்திர நாதம் ஜங்காரம் செய்தது:

துர்கேஷு விஷமே கோரே ஸங்க்ராமே ரிபு ஸங்கடே!

தாண்டவொண்ணாத கோரக் கொடுமைகளிலும், யுத்தத்திலும், எதிரிகள் செய்யும் இன்னலிலும் ரட்சையாக அன்னையின் ஆதரவை வேண்டுகிறார்கள்.

சுரதன் சிரித்துக் கொண்டான். ஆம்! அவனுக்கு இன்னும் சிரிப்பு மறந்து போகவில்லை என்று இப்போதுதான் தெரிந்தது! எதற்காகச் சிரித்தான்? மறையோதும் இந்த மகாநுபவர்களுக்கு யுத்தமும் இல்லை, எதிரியும் இல்லை, அவர்களுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. ஆம், அவர்களுடைய அன்பின் சக்தி அப்படிப்பட்டது! இதோ, கண்ணுக்கெதிரில், ஆசிரம வாசலில் புலியும் மானும் ஒட்டிப் படுத்துள்ளனவே! இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களின் விபத்துத் தீருவதற்காக உளம் கரைந்து பிரார்த்திக்கும் போது, அந்த 'மற்றவர்'களைச் சேர்ந்த தன்னைப் போன்றவர்கள்

பிரார்த்தனையை மறந்து, விபத்துக்களையே மேன்மேலும் வரவழைத்துக் கொள்கிறோமே! — இதற்குச் சிரிக்கத்தானே வேண்டும்?

> தாம் அக்னிவர்ணாம் தபஸா ஜ்வலந்தீம்
> வைரோசனீம் கர்மபலேஷு ஜுஷ்டாம்।
> துர்காம் தேவீம் சரணம் அஹம் ப்ரபத்யே
> ஸுதரஸி தரஸே நம: ॥

ராத்திரி தேவியை அக்னி வர்ணத்தவள் என்று பாடியது சுரதனுக்கு வியப்பாக இருந்தது. பிற்பாடு அது குறித்து அந்த ஆசிரமத்துக்குரிய முனிவரிடம் விளக்கம் கேட்கலாம் என எண்ணினான். தொடர்ந்து வந்த சரணாகத வாசகங்கள் அவன் உள்ளத்தில் ஆறுதலுக்கு அரணாக வந்து காப்புத் தந்தன.

''கடக்கவொண்ணாததை எளிதில் கடத்துவிக்கும் துர்க்கா தேவி! நீயே சரண் சரண்'' என்று அந்த பக்தி துளும்பும் பிரார்த்தனை முடிகிறபோது, சொல்லி வைத்தாற்போல் சுரதன் ஆசிரமத்துள் அடி எடுத்து வைத்தான். 'அப்.....பா' என்ற ஒரு நிம்மதி பிறந்தது.

''வத்ஸ, வா வா'' என்று குளிர அவனை அழைத்தார் முனிவர் மேதஸ்.

இவரை, 'தேவீ பாகவதம்' ஸுமேதஸ் என்று கூறும். எதையும் மறவாத அறிவுத்திறன்தான் மேதஸ். ''எவனை நான் விரும்புகிறேனோ அவனை மகா பலசாலியாகவோ, பிரம்ம ஞானியாகவோ, தீர்க்க தரிசனம் வாய்ந்த ரிஷியாகவோ, அறிவில் சிறந்த ஸுமேதஸாகவோ ஆக்குகிறேன்'' என்பது வேதத்தில் உள்ள தேவீ ஸூக்தத் திருவாக்கு!

'வந்தேன்' என்று அவர் காலில் வீழ்ந்தான் சுரதன். பாரத்தை எல்லாம் இறக்கி விட்டாற் போலிருந்தது!

மேதா முனிவரது சீடர்கள் சுரதனுக்கு அங்கசுத்திக்கான உபசாரங்களை அன்பும் விநயமும் கலந்து செய்தார்கள். பிறகு கனிவர்க்கங்களும், ஸக்துமாவும், ஸோமரசமும் கனிவுடனே கொடுத்தார்கள். தருப்பை மெத்தை ஒன்றும் அவனுக்காக விரிக்கப்பட்டது.

அரண்மனையின் பஞ்சபக்ஷ்ய பரமான்னங்களை விடவும், ஸப்ரகூட ஹம்ஸ தூளிகா மஞ்சத்தைவிடவும் இந்தப் பழ உணவும் புல்லாணியும் சுரதனுக்கு இதமாக இருந்தன.

''நீ யார், என்ன?'' என்று எவருமே அவனைக் கேட்கவில்லை. 'யாராயிருந்தால் என்ன? எங்கள் தொழில் அன்பு செய்வதே, ஆசி வழங்குவதே' என்பதுதான் அந்த ஆசிரம வாசிகளின் ஜன்ம விரதமாக இருந்தது!

சுரதனின் தோற்றத்திலிருந்து அவன் இன்னான், இப்போது அவனது கதி இப்படிப்பட்டது என்பதை எந்தப் புத்திமானும் ஊகித்து விட முடியும். இவர்களுக்கோ புத்தியோடுகூட பிரம்மசரிய சக்தியும், அதனாலமைந்த ஞான திருஷ்டியும் சேர்ந்துள்ளன. எனவே, அவனைக் கேட்டுப் புண்ணுண்ட நெஞ்சைக் குத்திக் கிளறுவானேன்?

குற்றமற்ற தங்களது சம்பாஷணையில் மன்னனையும் சர்வ சகஜமாகச் சேர்த்துக் கொண்டனர், மேதா முனியும் சீடர்களும்.

சிறிது போது இப்படிச் சென்றபின் அகல் விளக்குகள் ஒவ்வொன்றாக அணைக்கப்பட்டன.

இருள் இறுகி வந்து சுரதனை அணைத்தது. இருளின் கருமை வெறுக்கத்தக்கதாகவோ, அருவருக்கத்தக்கதாகவோ இல்லாமல் வேதத்தின் துதிக்குத் தகுதி பொருந்திய பரம மங்கள வஸ்துவாக இருந்தது. தூயவே சிந்தித்து, நல்லவே செய்து, நயமுறவே பேசி வந்த புனிதர்களின் இருப்பிடமான அந்தக் குடிலில் சுரதனின் மனத்தில் மண்டியிருந்த மருளும் சிறுச் சிறிதே கரையலாயிற்று.

அன்றிரவு நிம்மதியாக உறங்கினான் சுரதன். நேற்றுவரை — சொத்துக்களும் செல்வங்களும் சிறிதாவது சேர்ந்திருந்தவரை — வராத நிம்மதியான நித்திரை இன்று அடியோடு ஆண்டியாகிவிட்ட அவனுக்கு அநாயாசமாக வாய்த்துவிட்டது.

2. சித்தக் கலக்கத்தில் ஓர் ஒத்த தோழன்

பலபலவென்று விடிந்தது.

கிலகிலவென்று பட்சிகள் குதூகல கானம் செய்தன.

இதற்கும் முன்பாகவே பிராம்ம முஹூர்த்தத்தில் ஆசிரமவாசிகள் விழித்துக் கொண்டு நீராடி, திருநீராடி சந்தியோபாசனை செய்து, இப்போது வேதங்களை ஓதியபடி வேதிகையில் வேள்வித் தீ எடுக்கக் காத்திருந்தனர். அசக்தியால் ஆழ்ந்து உறங்கும் ஸுரதனை எழுப்ப அவர்களுக்கு மனமில்லை. அவன் எழுந்த பின்தான் பர்ணசாலையை நீர் தெளித்து சுத்திகரித்து, அக்னி காரியம் தொடங்க வேண்டும்.

வேத மந்திரங்களின் ஸ்பரிசத்தில் சுரதன் கண்விழித்தான். இப்படிப் பொழுது விடிகிறவரை உறங்கி விட்டோமே என்ற வெட்கத்துடன், காலைக் கடன்களுக்காக வெளியே சென்றான்.

வேத மந்திரங்கள் கேட்டுக் கொண்டே இருந்தன.

இரவாக வந்து ஒடுங்கச் செய்தவள் உதயமாக வந்து உலக நடப்புகளை அவிழ்த்துவிடும் அற்புதத்தைப் பராவுகிறார்கள்:

தஸ்யாஸ்தே ரத்னபாஜ ஈமஹே வயம்
ஸ்யாம மாதுர் ந ஸூநவ:

''ரத்ன வியாபாரி நானாவர்ண மணிகளை அவிழ்த்துக் கொட்டுவதுபோல் வண்ண விசித்திரங்களைப் பொழியும் உஷையே! அன்னைக்கு மகவுபோல் உனக்கு நாங்கள் இருப்போமாக!''

உஷையைக் கன்னி என்பார்கள். அந்தக் கன்னிகையையும் அன்னையாகவே பார்க்கிற பரிசுத்தமான குழந்தைக்கண்களை உடையவர்கள் வேதரிஷிகள்!

ராத்ரி தேவி உறங்கச் செய்த எல்லாவற்றையும் உஷை உயிர்ப்பிப்பதையும், பிராணிகளை ஓட வைப்பதையும், பட்சிகளைப் பறக்க வைப்பதையும் ரிக்குகளால் பாடினார்கள். ''இன்னும் கூடுதலாக உன் பொலிவைப் பொழிவாயாக, எந்த

வைகறையும் இன்று போலிருந்ததில்லை என்பது போல் கரையற்ற மங்களங்களை இன்று பொழிவாயாக! நாங்கள் மேலும் மேலும் மங்களமான செயல்களைச் செய்ய அருள்புரிவாய்.''

''பத்ரம் பத்ரம் க்ரதும் அஸ்மாஸு தேஹி''

ஸுரதன் மனம் உருகினான். நேற்றுவரை 'கடன் இழவே' என்றாவது வந்திகளும் பாணர்களும் இவனது சயனக்கிருகத்தின் முன் குழுமி, இவனுடைய இல்லாத புகழ்களைத் திருப்பள்ளியெழுச்சி பாடினர். அந்தத் தற்பெருமையிலேயே கண் விழிப்பான். இன்று இவன் எத்தனை புகழ்ந்தாலும் போதாத பராசக்தியின் துதியோடு எளியோனாக விழித்துக் கொள்கிறான்! இதுவேயல்லவா பாக்கியமான வாழ்வு!

ஆனால் ஏன் அவன் மனம் மீண்டும் ஏங்கவும், சாம்பவும், சோம்பவும் தொடங்குகிறது? ஏன் பழைய அரச வாழ்வும், அரண்மனை போகமும் மீண்டும் நினைவு வருகின்றன? 'எதிரிகளிடம் தோல்வியுற்றதும், சொந்த அமைச்சரவையிடமே அவமானப்பட்டதும் மனத்தைக் குத்துகின்றனவே! நேற்றிரவு கண்ட நிம்மதி ஏன் நிலைத்து நிற்கவில்லை? பாழாகப் போகிற மனசு ஏன் மறுபடி சஞ்சலிக்கிறது? ஒதுக்குவதாலேயே ஒன்றின் நினைவு அழுத்தமாக வந்து வலிய இழுப்பதேன்?

'உஷை ரத்தினக் குவியல்களை மட்டுமே கொட்டுவதாக ரிஷிகள் காண்கிறார்கள். நம் விஷயத்திலோ விஷக் கற்களையும் அல்லவா அவள் கலந்து கொட்டுவதாகத் தெரிகிறது? உறங்கிக் கொண்டே இல்லாமல் ஏன் விழித்துக் கொண்டோம்?'

நீர்நிலை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஸுரதன் தன் அருமை அசுவத்தின் குளம்புகளைக் கண்டான். ''அசுவம் அசுவமாகவே போயிற்று'' என்றெண்ணிக் கண்ணீருள் சிரித்துக் கொண்டான். அ-ச்வம் என்றால் இன்றிருந்து நாளை இல்லாமல் போவது என்று தானே பொருள்? 'விச்வம்' என்பதும் அதுவேதான்.

அசுவ சாஸ்திரத்திலும் கஜ சாஸ்திரத்திலும் விற்பன்னனான சுரதனுக்கு, மனைவி மக்களை விட அசுவரத்தினமான உச்சை சிரவஸிடமும் கஜரத்தினமான ஐராவதத்திடமும் தான் அதிகப் பற்றுதல் இருந்தது. ராஜ்ய பாரம் செலுத்துவது, பிறநாடுகளின் மீது படை எடுப்பது, இவை தவிர ஒழிந்த நேரத்தில் யானைச் சவாரியும், குதிரைச் சவாரியும்தான் அவனுக்கு முக்கியமாக இருந்தன. மகிஷியிடமோ, மகவுகளிடமோ அவனுக்கு விசேஷ ஈடுபாடு ஏதும் இருந்ததில்லை.

இதற்கு அவனது தரும உள்ளமும் ஒரு காரணம். கூடிய வரையில் ராஜ ரிஷிகளின் வழியில் இருக்க விரும்பினான். சொந்தக்காரர் பற்று குறைந்தாலே தேசப்பற்று அதிகம் இருக்கும் என நம்பினான். தன் அமைச்சரவையையும் இவ்விதமே இருக்கக் கட்டளையிட்டான். மந்திரி, சேனாபதிப் பதவிகள், பொருளையும் அதிகாரத்தையும் முக்கியமாகக் கொள்ளாமல் சேவையையே பிரதானமாகக் கொண்டிருக்க வேண்டுமென வற்புறுத்தினான். குடிகள் யாவரும் தம் மகவு என்ற எண்ணம் இவனை விட்டு என்றும் நீங்கியதில்லை. ஒரு தந்தையாகவே இருந்து பிரஜைகளைப் புரந்து வந்தான். அதனாலேயே 'சொந்த' மக்கள் விஷயத்திலும் ராஜசபைப் பிரமுகர் விஷயத்திலும் எட்டாக்கை அரசனாக இருந்தான். ஒவ்வொரு அரசர்கள் தங்கள் சந்ததிக்காகவும் அரசவையினருக்காகவும் ஏராளப் பொருள்கள் செலவிடுவதையும் சலுகைகள் வழங்குவதையும் இவன் கண்டிருக்கிறான். வரிப்பணத்தை இப்படி வாரிவிட இவனது தரும உள்ளம் விடவில்லை. நாட்டு நலத் திட்டங்களை ஈடேற்றுவதற்காகப் பொக்கிஷத்தைப் பார்த்துப் பார்த்துப் பெரிதாக்கினான். அதற்காகவே மனைவி மக்களின் பாசவலைக்கும் அதிகம் ஆளாகாமல் விலகியிருந்தான்.

இவனது விட்டேற்றி மனப்பான்மையைத்தானே அவர்களும் இவனிடம் பிரதிபலிக்க இயலும்? இவன் வெற்றிகள் கண்டபோதும் அந்தக் குதிரையும், யானையும் தான் கொண்டாட்டம் கண்டன. அரசியும், அரசிளங் குமரர்களும் அதில் பூரித்ததில்லை. கடைசியில் இவன் தோல்வியுற்றானே, அப்போதும் அவர்கள் ஒன்றும் இவனுக்காக மனம் இடிந்து விடவில்லை.

அடடா, இந்த மகாரதனான சுரதன் தோல்வியும் காணும்படியாயிற்றே! இவனது எதிரிகளான கோலாவித்வம்ஸிகள் இவனை விட மிகவும் சேனாபலம் குறைந்தவர்கள். எனவே அவர்களை எளிதில் துவம்சம் செய்து விடலாம் என்று இறுமாந்து கோலாகலமாகப் போருக்குப் புறப்பட்டான். ஆனால் நடந்ததோ முற்றிலும் வேறானது. கோலாவித்வம்ஸிகளிடம் சைத்ரவம்ச சைனியம் படுதோல்வி அடைந்தது. எதிரிகளின் மன உறுதி அப்படிப்பட்டதாக இருந்தது. எனினும், சுரத மகாராஜனும் அபஜயம் அடைந்தற்கு ஊழ்வினையைத்தான் முக்கிய காரணமாகக் காட்ட முடிந்ததே ஒழிய, எதிரிகளின் உறுதியைக்கூட இரண்டாம் பட்சமாகத்தான்

கூறவேண்டும். ஏனெனில், கோலாவித்வம்ஸிகள் தங்கள் நாட்டின் மீது படை எடுத்துவந்த சுரதனை முறியடித்துத் திரும்புமாறுதான் செய்தனரே அன்றி, அவனைத் தொடர்ந்து வந்து அவனது ராஜ்யத்தைத் தம் வசமாக்கிக் கொள்ளவில்லை. அவனது பிடியிலிருந்து தாங்கள் தப்பினாலே போதும் என்று தற்காப்புச் செய்து கொண்டனரேயன்றி, அவனைப் பிடித்து வைக்க வேண்டுமென்றோ, அவனது அரசைக் கைப்பற்ற வேண்டும் என்றோ எண்ணவில்லை. அவனது மகாசாம்ராஜ்யத்தைத் தங்களால் நிர்வகிக்க முடியும் என்று எண்ணிக்கையில் குறைந்த கோலாவித்வம்ஸிகள் எண்ணவில்லை.

இதனாலேயே சுரதனுக்கு மிக மிக மானக்கேடான நிலை ஏற்பட்டது. எதிரிகள் இவனைச் சிறைப் பிடிக்காமலே விட்டனர். இவனோ தோற்று விட்டான். இனிச் செய்வதென்ன? புறமுதுகு காட்டித் தனது நாட்டுக்குத் திரும்ப வேண்டியதுதானா? இதை விடப் போரில் வீர சுவர்க்கம் கிடைத்திருந்தாலே எவ்வளவோ சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் இப்போது ஒரு சுத்த க்ஷத்ரியன் தற்கொலை செய்து கொள்வதற்கில்லை. வேறு வழியின்றி அவமானத்துடன் தாய்நாட்டுக்குத் திரும்ப வேண்டிய நிலை வந்தது.

எப்போதும் மதநீரைப் பொழிந்து கொண்டே நிற்கும் ஐராவதம் இன்று கண்ணீரைச் சொரிந்து கொண்டு எதிரிப் படையிடை நின்றது. பீடிழந்த அரசனை வீடு கொண்டு செல்ல வேறு ஊர்தி வந்தது. ஐராவதத்துக்கு முன்பெல்லாம் வெற்றி வீரனான மன்னனைத் தானே செருக்குடன் சுமந்து சென்றது நினைவு வந்தது போலும். கண்ணீர் பொழிந்தது.

அடடா! அரண்மனைக்குத் திரும்பியபின் அவன் பெற்ற வரவேற்பு அவமானத்திலும் அவமானம்! ஒருவராவது முகம் கொடுத்துப் பேசவில்லை. ஆறுதலுக்குத் தவித்த மனம் அடியுண்டு நொந்தது. ஆனால் இதனைக்கூட அவன் பெரிதாக எண்ணவில்லை. ஏனெனில், தான் பாசம் காட்டியிராத பந்துக்களிடமிருந்து தன் பால் நேசத்தை எதிர்பார்ப்பதில் நியாயமில்லை. இதைக் காட்டிலும் அவன் இதயத்தை ஆழத் துளைத்தது மந்திரி சபையின் போக்குத்தான்.

தோற்றுத் திரும்பிய மன்னன் ராஜசபையில் நடத்தப்பட்ட விதமே தனியாகத்தான் இருந்தது. அவனது விருப்பத்துக்கு விரோதமாக அதிக வரிகள் விதிக்கும் பிரகடனத்தில் அவனை

முத்திரை இடுமாறு அமைச்சர்கள் பலவந்தம் செய்தனர். ''நீங்கள் முன்யோசனை இல்லாமல் ஆடம்பரப் போர் செய்து அபஜயத்தோடு திரும்பியதில் ஏராளமான திரவிய நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதற்காகப் புது வரிகள் விதிக்காவிடில் எங்களால் நிர்வாகம் நடத்த இயலாது'' என்றனர்.

வயிற்றில் பிறந்த பிள்ளைகளாகக் கருதிய பிரஜைகளின் வயிற்றிலடிக்கும் வரிகளையும் தாங்கொணாக் குற்ற உணர்ச்சியோடு விதித்தான் சுரதன்.

இப்படி ஈட்டிய வரிப் பணத்தைப் பிற்பாடு அமைச்சரவை துஷ்பிரயோகம் செய்து கொண்டது அவனை ஈட்டியால் குத்தியது. யுத்தத்தில் அவதியுற்றவர்களுக்கு ஈட்டுத் தொகை தருவதாகச் சொல்லி மந்திரிமார்களும், மற்ற அதிகாரிகளும் அதில் பெரும் பங்கைத் தாங்களே சுவீகரித்துக் கொண்டனர். சுரதனோ வாயே திறவாமலிருக்க வேண்டியதாயிற்று. வாய் திறந்தாலோ, ''உங்களுடைய தீர்க்காலோசனையில்லாத படாடோபப் போர்...'' என்று சாட ஆரம்பித்தனர்.

தொடக்கத்தில், மரணம் அல்லது அங்கவீனம் உற்ற வீரர் குடும்பப் பராமரிப்பு என்று காரணம் காட்டிக் கொள்ளை யடித்த மந்திரிகள், காலக்கிரமத்தில் இந்த உதவாக்கரை அரசனிடம் காரணம் காட்டுவானேன் என்ற உதாசீனத்தோடு, நேரடியாகவே பொக்கிஷத்தைச் சூறையாடலானார்கள். இத்தனைக் காலம் சலுகையும் பொருளும் பெறாதிருந்ததற்கு வட்டியும் முதலுமாக இப்போது தாங்களே கபளீகரம் செய்தார்கள்.

சுரதனுக்குத் தான் மகாரதன் என்ற செருக்கு உண்டு என்றும் இதனால் அவனுக்குப் போர்த் தினவு உண்டு என்றும், இதனாலேயே வேண்டாத படையெடுப்புகள் செய்து விபரீதத்தை வலிந்து வரவேற்றான் என்றும், இந்தத் தினவுக்கு ஊட்டம் தருவது சேனாபலம்தான் என்றும் கூறிப் படைகளை வெகுவாகக் குறைத்தனர்.

இதன் உட்கருத்தைப் புரிந்து கொண்டான் அறிவாளியாகிய ஸுரதன். 'படைபலம் குறைந்தால் கோலாவித்வம்ஸிகள் தாம்பூலம் தந்து வரவேற்றாற்போல் படை எடுத்து வருவார்கள். இப்போது சைத்ரவம்ச சைனியம் மிகப் பெரியதாக

இருப்பதாலேயே அதைச் சமாளிக்கத் தம்மால் ஆகாது என அவர்கள் பின்தங்கி நிற்கின்றனர். இதன் பலம் குறைந்தால் அவர்களுக்குச் சபலம் உண்டாகும். போர் தொடுப்பர். அதைத்தான் அமைச்சரவை விரும்புகிறது. தான் விதிக்கும் தருமக் கெடுபிடி இவர்களுக்கு உவப்பாக இல்லை. மனம்போனபடி செல்வமும் செல்வாக்கும் பெற ஆசைப்படுகிறார்கள். ஆசை எந்தக் கொடுமைதான் செய்யாது? எதிரிகள் இங்கே வந்து வெற்றி கொள்ள வேண்டும் என்றும், அவர்களுக்கு அடிபணிந்து துதி செய்து, அவர்களது ஆட்சியிலும் தாங்களே அமைச்சர்களாக இருந்து இப்போது பெறாத சௌகரியங்களைப் பெறவேண்டும் என்றும் இவர்கள் விரும்புகின்றனர். இதில் எள்ளளவும் ஐயம் இல்லை. பகைவர்கள் படை எடுத்து வந்தால் இவர்களே என்னை அவலமாக நிறுத்திச் சிறைப்படுமாறு செய்யப் போகிறார்கள்!

'சைத்ரவம்ச தரும ராஜாங்கத்தில் இப்படி சுதேச மந்திரிசபையே ராஜத்துரோகம் செய்ததாக ஒரு மகத்தான களங்கம் ஏற்படவேண்டாம். தன்னைக் காட்டிக் கொடுத்த அவக்கேடு மந்திரிசபைக்கு உண்டாகவேண்டாம். இதோ தானாகவே நாட்டைவிட்டு வெளியேறிவிடுவோம்' என்று முடிவு செய்தான் சுரதன்.

புராணமும் இதிஹாஸமும் சரித்திரமும் கேட்டிராத புதுமை — தன்னுடைய ராஜ்யத்திலிருந்து தன்னையே தேசப் பிரஷ்டம் செய்துகொள்கிறான் ஒரு சக்கரவர்த்தி!

''அறத்தினால் வீழ்ந்து விட்டாய்!'' என்று தர்மராஜ்யமான பெல்ஜியம் முதல் உலகப் போரில் ஜெர்மனியிடம் தோற்றபோது குமுறிப் பாடினாரே பாரதியார், அவ்விதமே, தனது அறத்தினாலேயே அரசிழந்தான் சுரதன்! சுயலாபங்களை எண்ணிய மந்திரி பிரதானிகளுக்கு அறம் வேண்டியிருக்கவில்லை. அறத்தை விட்டு, அவர்களை அரவணைத்துப் போயிருந்தால் இவன் அரியணையில் நீடித்திருக்கலாம். ஆனால் அரியணையை விட அறத்தின் ஆணையே அவனுக்குப் பெரியதாக இருந்தது.

எனவேதான் வேட்டைக்குப் போவதாக வியாஜம் காட்டிக் குதிரை மேலேறிக் கொண்டு வனத்துக்கு வந்து விட்டான். மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதற்கு எவ்விதத் திட்டமும் அவனிடம் இல்லை.

ராஜ்யத்தைவிட்டுத் தானாக வெளியேறிய சித்தார்த்தராகிய கௌதம புத்தரின் நினைவு வருகிறது. அவர் ஞானத்தை வேண்டிப் புறப்பட்டார். சுரதனுக்கு ஞான நாட்டம்

ஏற்படவில்லை. இத்தனை கறுப்பான, கடுப்பான சூழலிலும் அவனுக்கு வைராக்கியம் பிறக்கவில்லை. தர்மத்துக்கும் சத்தியத்துக்கும் அவன் பயந்தான்; ராஜரிஷிகள் மார்க்கத்தை வியந்து மதித்தான்; ஆனால் இதற்குமேல் ஆன்மிகமாக அவன் முன்னேறவில்லை.

அன்பான மனையாளையும் மகனையும் விட்டு ஓடினார் சித்தார்த்தர். அதன் பின் அவர்களைச் சிந்தித்துக் கலங்காத வைராக்கியம் அவருக்கு இருந்தது. சுரதனுக்கும் அவனது தார புத்திரர்களுக்கும் அப்படியொன்றும் பரஸ்பர பாசப்பிணைப்பு இருந்து விடவில்லை. எனவே வைராக்கியம் என்ற ஆன்மசம்பத்து இல்லாமலேயே அவர்களது நினைவை மறந்தான் சுரதன். ஆனாலும் அவன் பற்றுதல் கொண்டிருந்த பரியையும், கரியையும் அவனால் இப்போதும் மறக்க முடியவில்லையே! இது அஞ்ஞானமேயன்றோ! வைராக்கிய சூனியமே அன்றோ?

மேதஸின் ஆசிரமத்தை விட்டு வெளியே வந்த சுரதன் பரி, கரியை எண்ணியபடியே இங்குமங்கும் திரிந்து கொண்டிருந்தான். ஆசிரமத்துக்குத் திரும்பினால் அதன் புனித சாந்தத்தில் இந்தப் புன்மையைப் புதைத்து விடலாம்தான். அப்படிப் புதைக்க ஏனோ மனம் வராததாலேயே வெளியே சுற்றிக் கொண்டிருந்தான். இந்த மனத்தின் விசித்திரத்தைத்தான் என் சொல்ல? தனக்குத் தானே இம்சை விளைவித்துக் கொள்வதில் கூட அதற்கு ஒரு பிடிவாதம் அவ்வப்போது உண்டாகிவிடுகிறது. பழகிய விஷயங்களை விட்டுவிட அதற்கு இஷ்டம் இருப்பதில்லை — அவை கஷ்டம் தந்தாலும்கூட!

'ஐராவதத்தின் மேல் இன்று எவன் ஆரோகணித்திருக்கிறானோ? மகாமானஸ்தனான அந்த மத்தவாரணனின் பெருமை அறிந்து அதனை நடத்துவார் யார்? அதை வருத்திக்கூட குதூகலிப்பர் கோலாவித்வம்ஸிகள். அவர்கள் இப்போது ஆட்சியைக் கைப்பற்றியிருப்பார்கள். 'கைப்பற்றி' என்பானேன்? நடத்தை கெட்ட என் ஆட்களே அவர்கள் கையில் வள்ளிசாக ராஜ்யத்தைத் தந்திருப்பார்கள். அவர்களோடு சேர்ந்து இவர்களும் தன கோசம், தானிய பண்டாரம் எல்லாவற்றையும் சூறையாடியிருப்பார்கள். ஆதி காலத்தில் எனக்குச் செய்த முகஸ்துதியை எல்லாம் இப்போது கோலாவித்வம்ஸி மன்னனுக்குக் கூசாமல் செய்து வயிறு வளர்ப்பார்கள். அவர்களைப் போல் இச்சகம் பாடுமா என் ஐராவதம்? மிருகமான அதற்கு தர்மம் உண்டு. தர்மத்துக்காக அவதியுறும். தர்மம் பாரா

மந்திரிமாரோ களியாட்டம் போடுவர். தேசத்துக்கு உதவாமல் தங்களுக்கே உதவும் விதத்தில் பொக்கிஷ தனத்தை ஏராளமாகச் செலவிட வேண்டும் என்ற அரிப்பு அவர்களுக்கு என்றுமே உண்டு. நான் கட்டுப்படுத்தி வைத்திருந்தேன். இப்போது அந்தத் தடை அவர்களுக்கு இல்லை. ஆஹா, நான் கழஞ்சு கழஞ்சாகப் பார்த்துப் பார்த்துச் சேர்த்துப் பொக்கிஷத்தை நிரப்பியிருந்தேனே! அந்தச் சேமிப்பெல்லாம் நாட்டை அழிக்கிற இந்த ஊதாரிகளின் கையில் சிக்கிப் பாழாகப் போகிறது!'

வேண்டாம் தனக்கு ராஜ்யம் 'என்று ஓடிவந்த பின்னும் அந்த ராஜ்யத்தின் பொக்கிஷம் விரயமாவது பற்றி எண்ணி எண்ணித் தவித்தான் சுரதன். ஏன் இந்தத் தவிப்பு? நிர்தாட்சிண்யமாக இதை ஆராய்ந்தால், தேசத்துக்கு நலன் நடவாதே என்று மட்டும்தான் அவன் தவித்தானா — இவ்வாறு உள்ளத்துக்குக் கள்ளமில்லாமல் கூற முடியுமா? ''நான் அத்தனை பாடுபட்டுச் சேமித்தேன்; அது வியர்த்தமாகிறதே?'' என்கிற சுய அந்தஸ்தின் பங்கம் தானே அவன் உள்ளத்தை அதிகம் வருத்துகிறது? ஐராவதம் எப்படியிருக்கிறதோ என்று அதற்காகவேயா வருந்துகிறான்? 'நான் ஐராவதத்தின் மதிப்பை உணர்ந்தாற்போல வேறு யார் அதை நடத்துவார்கள்?' என்று இங்கும் சுய உணர்வுதானே முந்தி நிற்கிறது? இதுதான் ராஜஸ குணம் என்பதா? ராஜ லக்ஷணமும் கூட இதுதான் என்பார்கள். ஆனால் ராஜ்யம் இல்லாத ராஜனுக்கு இப்படிப்பட்ட மனோ பாவத்தால் என்ன பயன்? 'அரண்யவாசிகளுக்குரிய ஸத்துவ குணம் அல்லவா இனி தனக்குத் தேவை? சாந்தி நிறைந்த அந்தப் பாங்கை நான் பெறுவதில் ஒரு தடையும் இல்லை — அதாவது ஒரு வெளித் தடையும் இல்லை. வீடு வாசலற்ற, பந்துமித்திரர் அற்ற அநாதனான என்னைப் பரிந்து பராமரிக்க முனிவர் மேதஸ் இருக்கிறார். நிச்சிந்தையாக நான் ஆத்மிகத்திலேயே ஈடுபட்டு சத்துவ குணத்தை விருத்தி செய்து கொள்ளலாம், ஆனாலும், ஆனாலும்....

'அங்கே பொக்கிஷத்திலிருந்து பொன்னும் மணியும் பளிச்சுப் பளிச்சென்று கண்சிமிட்டித் தன்னைக் கூப்பிடுவது போலிருக்கிறது.

'ஆயுத சாலையில் உள்ள வேலும் வாளும் 'வாருங்கள் வாருங்கள்' என்று மினுக்கி அழைப்பதுபோல் இருக்கிறது.

'அசுவங்களும் ஆனைகளும் தனக்காக ஏங்கி அரற்றுவதாகத் தோன்றுகிறது.

'சுற்றி வளைக்காமல் விண்டு சொல்ல வேண்டுமாயின், இன்று தன்னை அவமதித்தவர்களுக்கெல்லாம் அவமானம் உண்டாக்கி, தான் மறுபடியும் அரியாசனம் ஏறிச் சக்கரவர்த்தி சுரதனாக வேண்டும் என்று அடிமனம் அவாவுகிறது. இதை எனக்குள் நானே ஒளித்துக் கொள்வதற்கில்லை. பட்ட கஷ்டம் அத்தனையாலும் மனம் பட்டுப் போகவில்லை — பழைய குருடி கதவைத் திறடி என்றேதான் அது அலைகிறது....சை!

'மனையை விட்டு வந்தேன். ஆனால் இந்த மனத்தை விட்டு எங்கே போவது? மனத்துறவு வருமுன் பொருட்துறவு கொண்ட என் அசட்டுத்தனத்தை என்னென்பது?'

தன்னிடமிருந்தே தப்ப முடியாத அந்த நிலையில் வேறு யாரிடமாவது மனத்தைத் திறந்து கொட்டிவிட்டால் சிறிது நிம்மதி ஏற்படும் போலிருந்தது. ஆனாலும் பாழாய்ப் போன மமதையானது, முனிவர்களிடமும் பிரம்மச்சாரி சீடர்களிடமும் மனத்தைத் திறந்து காட்டாதவாறு குறுக்கே வந்து தடுத்தது. எந்த மனோவிகாரமும் இல்லாமல் நிச்சலனமாக, நிச்சிந்தையாக, நிர்மலமாக வாழ்கிறவர்களிடம் தன் சலனத்தை, சிந்தையை, மன அழுக்கைக் காட்டிக் கொள்ளக் கூச்சமாக இருந்தது. அந்த வனத்தில் வேறு யார் கிடைப்பார்கள், தன் சித்தக் கலக்கத்தைப் பகிர்ந்து கொள்வதற்குரிய ஒத்த சகாவாக?

சுரதன் இப்படி எண்ணிய அதே சமயத்தில் சருகுகளின் மீது சரக் சரக் என்று காலடி ஓசை கேட்டது.

சில கணங்களில் துயரமே வடிவெடுத்தது போன்ற ஒரு வியக்தி தென்பட்டான். இவனைக் கண்டதும் வாட்டமயமான அவன் முகத்தில் ஓர் ஆறுதல் இழை ஓடியது. குவித்த கையுடன் நெருங்கி வந்தான்.

தன் மனத்தைத் திறந்து காட்ட தெய்வாதீனமாக அனுப்பப்பட்ட ஒருவனாகவே சுரதனுக்கு அவன் தென்பட்டான்.

''வாரும் ஐயா, வாரும்!'' என்று அவனை உற்சாகத்துடன் வரவேற்றான்.

'வா' என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் வாடியவனின் முகத்தில் ஒரு தளிர்ப்பு உண்டாயிற்று. ''போ, போ'' என்ற வார்த்தையே அவன் நீண்ட காலம் கேட்டு வந்திருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

சுரதனுக்கு அவனிடம் சுவாதீனம் பிறந்தது. ''ஐயா, நீர் யார்? ஒரே சோகமாக, மனமுடைந்தவராகக் காண்கிறீரே,

காரணம் என்ன? தனியராக, வெறுங்கையராக உடுத்திய துணியுடன் வனத்துக்கு வந்திருக்கிறீரே, எதனால் வந்திருக்கிறீர்? எதற்காக வந்திருக்கிறீர்?'' என வினவினான்.

தராசின் ஒரு தட்டானது சம எடையை எதிர்த்தட்டில் வைத்தால் அதற்கு நேராக வந்து அசையாமல் நிற்பது போல், சமமான துயரத்தோடு ஒருவன் எதிர்ப்பட்டதும் மன்னனின் சலன மனமும் சமநிலையில் வந்து நின்றது! இன்னொருத்தரிடம் அநுதாபம் காட்டுவது என்கிற பெயரில் தன்னையும் அறியாமல் சுய அபிமானத்தைப் போஷித்துக் கொள்வதன் ரகசியம் இதுவே!

சுரதனிடம் மகுடமும் செங்கோலும் வாளும் வேலும் இல்லாவிடினும்கூட அவனது தோற்றத்திலேயே சக்கரவர்த்தியின் காம்பீர்யம், இந்த துரதிர்ஷ்ட திசையிலும் கூட, தானாக வெளிப்பட்டது. இப்படிப்பட்டவனிடமிருந்து கனிவுமயமான வார்த்தைகளைக் கேட்டதும் புதிதாக வந்தவனிடம் இயல்பாக இருந்த அடக்கமும் ஒடுக்கமும் அதிகமாயின. தன்னைப் பிறர் அடக்கி வைத்ததால் ஆராத் துயர் கொண்ட அவன் இப்போது, தானே அடங்குவதில் உள்ள இதத்தை உணர்ந்தான்.

''ஸ்வாமி! தாங்கள் யாரோ அறியேன். ஆனால், தங்கள் திருமுகத்தைப் பார்த்தாலே ஆறுதலாயிருக்கிறது. என் உள்ளக் கொந்தளிப்பை எல்லாம் தங்களிடம் கொட்டுகிறேன்'' என்று தொடங்கினான் அப்புதிய மனிதன்.

அவன் பெயர் ஸமாதி. வைசிய குலத்தில் உதித்தவன். பரம்பரையாக வியாபாரம் செய்து தனிகர்களாக வாழ்ந்த குடியில் பிறந்தவன். இவனும் பாரம்பரிய தர்மத்தைத் தொடர்ந்தான். தர்மம் விட்டு விலகாமல் ராஜ்யபாரம் செய்ய வேண்டும் என்பதில் சுரதன் கண்ணும் கருத்துமாக இருந்ததுபோலவே வியாபாரத்தில் அதர்மம் சிறிதளவும் கலக்காமல் உரிய சிறிய லாபத்துக்கே விற்று நியாயமாக ஒழுகி வந்தான் சமாதி. தர்ம ஆட்சி நடத்திய அரசர் அநேகர் உண்டு . தார்மிக அரசனுக்கு உலகம் உன்னத அந்தஸ்து தந்து போற்றுவதும் உண்டு. அதர்மத்தால் பெறக்கூடிய எந்த லாபத்தையும் விட இந்த அந்தஸ்தில் பெறுகிற மகிழ்ச்சியும் நிறைவும் அதிகமாகத் தோன்றும். அரசனின் வெளி மனத்துக்கு இது தோன்றினாலும் தோன்றாவிடினும் உள் மனத்தில் இந்த அந்தஸ்தைக் காத்துக் கொள்ளும் நாட்டம் இருந்து கொண்டேயிருக்கும். அரசர்கள்

தர்மத்தினின்று பிறழாமல் இருக்க இதுவும் ஒரு துணைக்காரணமாகும். இன்னனொரு விஷயம், அறத்தினின்று வழுவாமலேகூட மன்னர்கள் ஏராளமான சம்பத்துக்களை ஆண்டனுபவிப்பார்கள். எனவே அவர்கள் தர்மசாலிகளாக இருப்பதில் விசேஷமாக வியப்பதற்கு எதுவும் இல்லை. இக் காரணங்களுக்கெல்லாம் மேலாக, நம் நாட்டுப் புராதன மன்னர் பலர் நமது தரும சாஸ்திரங்களில் நன்கு பயிற்றுவிக்கப்பட்டிருந்ததால் எக்காரணமும் கருதாமல் தர்மத்துக்காகவே தர்மத்தை அநுஷ்டித்தனர் என்றும் சொல்லலாம்.

ஆனால் ஒரு சாதாரண வியாபாரி தர்மத்தில் உறுதியாக நிற்பதே சிறப்பான போற்றுதலுக்கு உரியதாகும். வியாபாரத்துறையில் தர்மமான லாபத்துக்கு மேல் போகக்கூடாது என்று தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்வது அசாத்திய சாதனையே ஆகும். இந்த அசாத்தியத்தை சாதிக்க முயன்ற ஓர் அபூர்வ மனிதனாக இருந்தான் ஸமாதி.

ஸுரதனின் தர்மப்போக்கு அவனது அதிகாரிகளுக்கு ஏற்கவில்லை; ஸமாதியின் தர்மப் போக்கு அவனது பெண்டு பிள்ளைகளுக்கே ஏற்கவில்லை. ''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதுதான் தங்கள் குலதர்மம்; ஐயர்மார்க்கு உரிய ஆசையில்லா தர்மத்தை அநாவசியமாகத் தம்மீது இவர் திணிக்கிறார்'' என்று அவர்கள் கருதினர். கொள்ளை லாபம் அடிக்க வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பயன்படுத்திக் கொண்டேயாக வேண்டும் என்பது அவர்கள் சித்தாந்தம்.

அதிகார துஷ்பிரயோகத்தால் சுயலாபம் பெறுகிற ஆட்சியாளரின் போக்கு, நியாயமான லாபத்துக்கு மேலாகக் கொள்ளை லாபமடிக்கும் வியாபாரப் போக்கு இவற்றை எல்லாம் ஆறு மன்வந்தரங்களுக்கும் முற்பட்ட இந்தக் கதை படம் பிடித்தாற் போல் காட்டுகிறது!

(மன்வந்தரம் என்பது ஒரு மனுவின் ஆயுட்காலமாகும். பிரம்மாவின் ஒரு தினமாகிய ஆயிரம் சதுர்யுகங்களுக்குள் பதினான்கு மனுக்கள் மனிதகுல முதல்வராக விளங்குவார்கள். தற்போது ஏழாவது மனுவான வைவஸ்தரின் தோன்றல்களாக நாம் வாழ்கிறோம். இங்கே விரியும் ''ஸப்தசதீ'' வரலாறு இரண்டாவது மனுவான ஸ்வாரோசிஷரின் ஆயுட்காலத்தில் நடைபெற்றது. அதாவது, எத்தனை எத்தனையோ

சதுர்யுகங்களுக்கு முற்பட்ட கதை. ஆனால் மனித இயல்பு அன்றும், இன்றும், என்றும் ஒன்றாகத்தான் இருக்கிறது.)

அதர்ம வியாபாரத்தை சமாதி எதிர்த்தான். அவனை அவனது மக்கள் எதிர்த்தனர். முதலில் அவனுக்கு அஞ்சி கடைப் பண்டங்களை அவன் அறியாதபடி திருட்டுத்தனமாக அதிக விலைக்கு விற்றார்கள். தாயார்க்காரி இவர்களுக்குத் தூபம் போட்டாள். நாளடைவில் அறத்திடமும் அப்பனிடமும் அச்சம் அறவே நீங்கிற்று. வியாபாரத்தை அவர்களே நேராக ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு மனம்போனபடி நடத்தினர்.

உறவினரிடம் முறையிட்டான் ஸமாதி. ''நீ தர்ம வியாபாரம் செய்ததால் நாங்களும் அதிக லாபம் வைக்க முடியாமல் அவஸ்தைப்பட்டோம். நீ குறைந்த விலைக்கு விற்ற போது எங்களுக்கு விற்பனை குறைந்தது. இப்போது உன் பிள்ளைகள் சேர்த்து வைத்து லாபமடிப்பதால்தான் எங்களுக்கு வாடிக்கைகள் ஏறிவருகின்றன. அவர்கள் இப்படியே கொள்ளை லாப விலை வைத்துச் சிரஞ்ஜீவியாக இருக்கட்டும்'' என்று அவர்கள் அநியாயத்துக்குத் ததாஸ்து கூறினார்கள்.

கடையிலே இவனைப் பிள்ளைகள் ஒதுக்கினார்கள். வீட்டிலோ மனைவி ஒதுக்கி வைத்து விட்டாள். இனி தனது பங்கை எடுத்துக் கொண்டு தனியே போய் விட வேண்டியதுதான் என்று முடிவு கட்டினான் ஸமாதி.

''உங்கள் பங்கா? அப்படியொன்று எங்கேயிருக்கிறது? நீங்கள் தர்ம வியாபாரம் செய்த லக்ஷணத்தில் நமக்கு ஏற்பட்ட நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. இப்போதுதான் நாங்கள் அதை எல்லாம் ஒரு மாதிரி ஈடுகட்டியிருக்கிறோம். உங்களால் உண்டான கடன் கஸ்திகளோடு கணக்குப் பார்த்தால் இப்போது உங்களுக்குப் பங்காகத் தர எதுவுமே இருக்க முடியாது'' என்று அகலக் கை விரித்தனர், அவனது சொந்த பிள்ளைகள் — பணம் பாதாளம் வரையில் பாயும் என்று தெரியாமலா சொன்னார்கள்?

''இவருக்கு எதற்குப் பங்கு வேணுமாம்? சந்நியாசிக் கணக்காகத்தானே பேசி வந்தார்? சந்நியாசியாகவே போகிறது தானே?''என்று கொண்ட மனைவி இடித்துக் காட்டினாள்.

பொறுக்க முடியவில்லை சமாதியால்.

''போகிறேன், போகிறேன், சந்நியாசியாகவே காட்டுக்குப் போகிறேன்'' என்று புறப்பட்டு விட்டான்.

காடு வந்து விட்டான். வாஸ்தவம்! ஆனால் சந்நியாசி ஆகிவிட முடிகிறதா?

★ ★ ★

''ஸ்வாமி! இதுதான் என் கதை. என் கண்ணான குழந்தைகளை, அன்பான மனையாளைப் பணப் பேராசை இப்படி ஆட்டிப் படைத்து விட்டது. அவர்கள் என்னை ஒதுக்கி வைத்தாலும் ஊர் என்னை கௌரவித்தது. அந்த கௌரவத்துக்காகத்தான் இவர்களும் ஓர் அளவிலாது தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள். இப்போது நானும் இல்லாததால் மேலும் அக்கிரமம் செய்வார்கள். இப்போது அவர்கள் தப்புத் தண்டா செய்தால் ஊரார் விடவும் மாட்டார்கள். கைநிறையப் பணத்தோடு சுதந்திரமாக விடப்பட்ட என் மக்கள் என்னென்ன தீய வழிகளில் இறங்கி எப்படி எப்படி எல்லாம் அவதிப்படப் போகிறார்களோ? இனிமேல் என் மனைவி கொஞ்சத்தில் கொஞ்சம் விழித்துக் கொண்டு அவர்களை அடக்கினாலும்கூட, அவர்கள் எகிறி விழுவார்கள். எனக்குக் கிடைத்த பாரதீன வாழ்வுதான் இனி என் பாரியாளுக்கும் கிடைக்கும். கணவனைக் கூட லட்சியம் செய்யாமல் ராணியாக இருந்த என் தாரம் இப்போது எப்படியெல்லாம் அவமதிக்கப்பட்டுப் புழுங்குகிறாளோ?''

ஸமாதியின் கண்களிலிருந்து முத்துக்கள் உதிர்ந்தன.

ஸுரதனோ முத்துப் பல் தெரியச் சிரித்தான். பாந்தவியத்தோடு ஸமாதியின் தோளில் கையை அழுத்தமாக வைத்து, ''நண்பரே! இதென்ன விசித்திரம்? சகலத்தையும் இழந்து, ஸ்வஜனங்களால் துரத்தி அடிக்கப்பட்ட நீர் இப்போது உங்களுக்காக அழவில்லை. உங்களை விரட்டிவிட்டு சகலத்தையும் ஸ்வாதீனம் செய்து கொண்டு கொண்டாட்டம் போடும் அந்த துர்ஜனங்கள் என்ன ஆவார்களோ என்றல்லவா விசனிக்கிறீர்கள்? அவர்கள் எக்கேடு கெட்டால் இனி உமக்கென்ன? உங்கள் கதையை இனி நீங்கள் பார்த்துக் கொண்டாலே போதுமே! பேராசைப் பேய் பிடித்த எந்தப் பிள்ளைகளாலும் பாரியையாலும் விரட்டித் தள்ளப்பட்டீரோ, அவர்களிடம் இன்னமுமா உம் மனம் பாசத்தில் கட்டுண்டு கிடக்க வேண்டும்? நீர் இடிபட்டுக் கொண்ட வேகத்தில் உம் மனைவி சொன்னாற்போல் மெய்யாலுமே சந்நியாசியாவதற்குரிய வைராக்கியம் உமக்கு உதித்திருக்க வேண்டுமே!'' என்றான் சுரதன்.

கூனுக்கு வைத்தியம் சொல்லிற்றாம் தவளை!

ஸுரதன் தன்னுடைய சங்கடங்களை எவரிடமாவது கூறி ஆறுதல் பெறத் தவித்தான். இவனிடமே ஸமாதி தன்னுடைய சங்கடங்களைச் சொன்னவுடன் இவன் அவனுக்கு ஞானாசிரியனாகி விட்டான்! மனித மனம் எப்படி எப்படி மாறி மாறி வேஷங்கள் போட்டுக் கொண்டு தன்னைத் தானே கட்டிக் காத்துக் கொள்கிறது?

வைராக்கியம் வராமலே ராஜ்யத்தை விட்டு வந்து அந்த ராஜ்யத்துக்காக உள்ளூர ஏங்கிக் கொண்டிருந்த சாக்ஷாத் ஸுரதன்தான் இப்போது சமாதிக்கு உபதேசிக்கிறான்.

சமாதி 'உள்' சுரதனைப் பார்க்க முடுயுமோ? 'வெளி' சுரதனை மட்டுமே மதிப்போடு பார்த்துச் சொன்னான்.

''சுவாமி! நீங்கள் சிரிப்பது நியாயம். உலகமே சிரிப்பாகச் சிரிக்கிற போக்கில்தான் என் சின்ன புத்தி போகிறது. நீங்கள் பரிகசித்துச் சொன்னது முற்றிலும் மெய்தான்! என்னை அவர்கள் அடியோடு கைவிட்டார்கள் என்று நன்றாகத் தெரிகிறது. பணத்தில் இருந்த பேராசையால் பிதா என்கிற பாசம், பதி என்கிற ஆசை அவர்களுக்கு மறைந்தே போயிற்று. நான் குணக்கேடனாக இருந்து அதனால் என்னை அவர்கள் கைவிட்டிருந்தாலும் வேறு விஷயம். அதோடு, என்னொருவன் விஷயத்தில் அவர்கள் அப்படி நடந்து கொண்டார்கள் என்பதை மறந்து, பொதுவாகப் பார்த்தாலும் அவர்கள் குணம் கெட்டவர்கள் என்று நன்றாகத் தெரிகிறது. இருந்தாலும் இப்படிப்பட்டவர்களின் விஷயத்தில் என் மனம் ஏனோ கடினமாகவில்லையே.... என் பிள்ளைகள் எல்லோரும் என் மனக்கண் முன் தோன்றிக் கொண்டேயிருக்கிறார்களே, என்ன செய்வேன்? அவர்களிடம் எனக்குக் கோபம் உண்டாகவில்லை. மாறாக, அவர்கள் நானும் ரட்சிப்பதற்கு இல்லாத நிலையில் என்னென்ன ஆபத்துக்களில் சிக்கிக் கொள்வார்களோ என்ற பெருங்கவலையே உண்டாகிறதே!....'' சமாதி நீண்ட பெருமூச்செறிந்தான். அவனது உடல் முழுவதும் ஆடியது.

''சுவாமி, நீங்கள் மகாமதியாளராகக் காண்கிறீர்கள். என் பந்துக்களுக்கு என்னிடம் உண்டான அதே விரக்தி எனக்கு அவர்களிடம் உண்டாக வழி சொல்லுங்கள்! நைந்து கிடக்கும் இந்த மனம் கட்டுப்பட்டு உறுதிபெற என்ன செய்ய வேண்டும்?''

சுரதனிடம் விஞ்ஞாபனம் விடுத்தான் சமாதி. விஞ்ஞாபனத்தில் இருந்த விநயம் ஸுரதனையே ஆட்டிவிட்டது.

''என்ன செய்ய வேண்டும்?'' என்ற வினா சுரதனைச் சூழ்ந்து கொண்டது. சூழ்ந்ததோடு மட்டும் இல்லை. அவனுக்கு உள்ளே, இன்னும் உள்ளே, மேலும் உள்ளே, அப்பாலும் உள்ளே, அவனது உள்ளத்தின் அடிவாரம் வரைத் துளைத்துக் கொண்டு பிரதித்வனி செய்தது அந்த வினா: ''என்ன செய்ய வேண்டும்?''

இனி என்ன செய்ய வேண்டும் என்பதே சுரதனுக்கும் பிரச்னை. ஒரு வேகத்தில் வனத்துக்கு வந்து விட்டான். இங்கே என்ன அவன் தவசியாக அமர்ந்து இகத்தைவிட்டுப் பரத்தைத் தேடப் போகிறானா? அதற்கு அவன் தயாரா? அந்தப் பக்குவம் அவனுக்கு வந்து விட்டதா? பின் என்ன செய்யப் போகிறான்? மேதா முனிவர் தண்டச் சோறு போட்டால் காலத்துக்கும் அதை உண்டு வியர்த்தமாகச் சோம்பி வாழப் போகிறானா? இப்போது அவன் என்ன செய்ய வேண்டும்?

இக்கேள்வி கொக்கியாக அவனை வளைத்து நெரிக்க, கக்கி விட்டான் தன் குறையை!

''நண்பரே! நீர் என்னைப் பற்றி ஏதும் கேட்கவில்லை. நான் பெரிய மனிதனாகத் தோன்றுவதால் நீர் அடக்கத்தின் மீது என்னைப் பற்றி விசாரிக்கவில்லை. நானும் அகங்காரத்தினால் என்னைக் குறித்து எதுவும் சொல்லிக் கொள்ளவில்லை. கடைசியாக நீர் கேட்ட அதே கேள்வி என்னையும் அழுத்திப்பிடித்து நெரிக்கிற அவல நிலையில் இருக்கிறவன் தான் நான். இந்தக் கொக்கியிலிருந்து நம்மை விடுவிக்கிற உண்மையான மகாமதியாளர் — முனிவர் மேதஸ் — அதோ அந்த ஆசிரமத்தில் இருக்கிறார். இருவரும் அவரிடம் போவோம். விஞ்ஞாபனம் செய்வோம். அவரே வழி காட்டுவார்'' என்றான் சுரதன்.

வழிகாட்டியைத் தேடுகிற சிஷ்ய பாவம் வந்துவிட்டது. பக்குவப் பாதையில் ஒரு படி முன்னேறி விட்டான்! அடுத்த வேளை தான் செய்ய வேண்டியது என்ன என்பதே தெரியாத அஞ்ஞான நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து விட்டான். தான் அஞ்ஞான தசையில் இருக்கிறோம் என்றறிகிற 'ஞானம்' உண்டாகிவிட்டது! இந்த அழுத்தத்தில் அவன் இதயத்தடியில் மமதையால் புதைந்திருந்த சென்ற கால இழிவுக்கதை பிதிர்ந்து வெளிவரலாயிற்று. முனிவரிடம் மனத்தை அவிழ்த்துக் கொட்டுவதற்காக விரைந்தான்.

அவனை இத்திசையில் தன்னையும் அறியாமல் நெம்பி விட்ட சமாதி பின்தொடர்ந்தான்.

3. மஹாமாயை

முனிவர் மேதஸை அடைந்தனர் ஸுரதனும் ஸமாதியும்.

தமக்கே உரிய தாய்மையோடு அவர் இவர்களைக் குசலப் பிரச்னம் விசாரித்தார்; கந்த மூலங்கள் உண்பித்தார்.

சமாதிக்குச் சற்றே தெளிவு பிறந்தது, அந்த அருளின் குளுமையில்.

மன்னனுக்கு உடைத்துப் பேசி விட வேண்டும் என்று உள்ளூர ஆசை. ஆனால் மேல்மட்டத்தில் மமதா மோகம் என்கிற மேகம் முற்றும் விலகினபாடாக இல்லை.

ஒரே கமுக்கமாக இருக்கிறது. மழை மேகங்கள் உருகாமல் குமுறிக் குமுறிப் புழுக்கம் உண்டு பண்ணுகின்றன. திடுமெனக் குளிர் காற்று வருகிறது. இதோ மழை வரும் எனத் தோன்றுகிறது. இடிக்கவும் மின்னவும்கூடச் செய்கிறது. ஆனாலும் மழை பெய்ய மாட்டேன் என்கிறது. மறுபடி தண் காற்று-மின்னல்-இடி. கடைசியில் பொழிந்தே விடுகிறது.

சுரதனும் கடைசியில் தன் குழப்பத்தைக் கொட்டியே விட்டான்.

மகாபாரதத்தில் மகாரதனான அர்ஜுனன் தன் குழப்பத்தைக் கண்ணனிடம் கீறிக் கொட்டினான். கீதோபதேசம் பெற்று விமோசனம் பெற்றான். தெளிவை உண்டு பண்ணவே குழப்பம் பிறப்பதுண்டு. மருந்தைக் குலுக்கினால் அடியிலுள்ள வண்டலும் மேலே வந்து குழம்பிப் போகும். ஆனால் அப்படிக் குழப்பிக் குடித்தால்தான் பலன் உண்டு. அர்ஜுனனின் குழப்பம் 'விஷாத யோகம்' என்றே கீதையின் முதல் அத்தியாயமாக வைக்கப்பட்டுள்ளது. குழப்பம் நீங்கிய தெளிவுநிலைதான் 'யோகம்' என்று பொதுவில் சொல்லப்படுகிறது. இங்கோ குழப்பமே, கலக்கமே ஒரு யோகமாகச் சொல்லப்படுகிறது. யோகத்துக்கு அழைத்துச் செல்லும் முன்னோடி அதுவே என்பதால்!

தேவீ மாகாத்மியமாகிய துர்க்கா ஸப்தசதீயில் சுரதன், சமாதி ஆகிய இருவரது குழப்பம் முதல் அங்கமாக இருக்கிறது.

சுரதனின் விருத்தாந்தமும், சமாதியின் வரலாறும் மேதஸுக்கு விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டன. தெரிந்தும் தெரியாதவராக அவர் செவிமடுத்து வந்தார்.

கடைசியில் மன்னன் கண் கலங்கிக் கூறினான்: ''முனிஸத்தமரே! ராஜ்யம் என் கையிலிருந்து போயே போய் விட்டது என்று நன்றாகத் தெரிகிறது. நான் ஒன்றும் அறிவிலி அல்ல. அப்படியிருந்தும் இன்னமும் ராஜ்ய விஷயத்தில் எனக்கு, 'என்னுடையது' என்கிற மமதை நன்றாக ஒட்டிக் கொண்டிருக்கிறதே! கைமீறிய விஷயத்தில் செல்லாதே என்று தடுத்தாலும் இந்தச் சித்தம் அடங்க மறுக்கிறதே; மனம் துக்கம் கொண்டாடுகிறதே! ஏன் ஸ்வாமீ, இது ஏன்? என்னை ராஜசபையினரும், பந்துக்களும் ஒதுக்கியது போலவே இந்த வைசிய உத்தமனை வீட்டாரும் வேலைக்காரர்களும் ஒதுக்கினர். இருந்தாலும் இவன் அவர்களுடைய க்ஷேமலாபங்களை எண்ணித் துயரப்பட்டுக் கொண்டிருக்கிறான். எங்களுடைய இன்றைய அவலநிலைக்காக நாங்கள் கவலைப்படுவதே அஞ்ஞானம்தான். அதனினும் அஞ்ஞானமாக எங்களை அவலத்துக்கு ஆளாக்கியவர் பொருட்டும், அவர்களுக்காக நாங்கள் ஏதும் செய்யவொண்ணாத நிலையில் வருந்துவது எத்தனை ஞான சூனியம்? 'நீ என்னுடையவன் அல்ல' என்று ஒருத்தனால் தள்ளப்பட்ட பின்னும், 'அவன் என்னுடையவன்' என்கிற மமதையின் வாய்ப்பட்டிருக்கும் இந்தக் கோணல் புத்தியை என்னென்பது? ஸ்வாமி, இந்த வைசியனும் சரி, நானும் சரி, விஷயமறியாதவர் அல்ல. மோகத்தின் வீச்சை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறோம். மகாபாகரே! அறிவுக்கு நன்றாகப் புரிந்ததுகூட அநுபவத்துக்கு வராமலே போகக்கூடும் என்பதை நன்றாக உணர்கிறோம். நாங்கள் மட்டும்தானா என்ன? புராண இதிஹாஸங்களைப் பார்த்தால் மகாஞானிகளும் கூடத் திடுமெனத் தங்களது மனத்தின் சமநிலை குலைந்து மோகத்தில் விழுந்திருக்கிறார்கள் என்று காண்கிறோமே! இது ஏன்? ஞானக் கண் பெற்றிருந்தவர்களும் இப்படிக் குப்புற விழுந்தது ஏன்? ....ஏன் ஐயனே, ஏன் இந்தக் குருட்டுத்தனம்?''

ரிஷி லேசாகச் சிரித்தார். அங்கேயிருந்த விருட்சங்கள் மென்காற்றில் எழுப்பிய மர்மர ஒலிபோலவே ஞான விருட்சமான மேதஸ் பேசினார்.

இங்கே விரிக்க வேண்டிய பகுதியில் மிகப் பெரும் பாகம்தான் இந்நூலின் முகவுரையாக வந்திருக்கிறது. இதுவே சாக்தம், ஸ்ரீவித்யாதி தந்திரங்கள் என்றெல்லாம் சொல்லப்படும் ஞான பக்தி வழியின் ஜீவநாடி எனலாம். முகவுரை மிகுதியை இங்கே காண்கிறோம். கதையாக இல்லையே என்று சலிப்படைந்து

விடாமல் பொறுமையுடன் படிக்க வேணும். இங்கே சொல்லியிருப்பது அத்தனையையும் மூலநூலில் மேதஸ் கூறவில்லை. மேதா முனிவர் அப்போதிருந்த அருட்சமாதி நிலையில் வார்த்தைகளுக்கு அதிகம் பங்கு இருக்கவில்லை. அவருடைய நேர் சந்நிதானத்தில் இருந்தவர்களும், ஓரளவு ஞானத் தேட்டம் உடையவர்களுமான ஸுரதனுக்கும் ஸமாதிக்கும் அவர் தொனிப்பொருளாக, ரத்தினச் சுருக்கமாகக் கூறிய ஒரு சில வார்த்தைகள் தம்மைத் தாமே தெளிவுற விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கும்! தேவி மான்மியத்தில் இப்பகுதியில் முனிவர் பேச்சு 'கடுகைத் துளைத்துக் கடலைப் புகுத்தியது' போல் உள்ளது. ஆனால் 'நவராத்திரி நாயகி' புத்தகத்தை எழுதுபவரும், படிப்பவர்களும் மேதஸ், ஸுரத-ஸமாதியர் நிலையில் இல்லாததால் அந்தக் கருத்துச் சூல் கொண்ட கனத்த வாசகங்களை மிக மிக உருக்கி விரித்துக்கூற வேண்டியதாகிறது. (முனிவரின் மூலவாக்குக்குப் பல விதங்களில் பொருள் கூறலாம். இங்கு கூறியிருப்பதே பொருள் என்று வலியுறுத்துவதற்கில்லை.)

மேதஸின் தத்துவக் குரலைக் கேட்போம்;

''ஞானக் கண்ணைப் பற்றிச் சொல்லிவிட்டாய்! நல்லது. கண்ணிலும், பார்வையிலும், குருட்டுத்தனத்திலும் எத்தனை எத்தனையோ விதங்கள் உண்டு மன்னா! ஊனக் கண்ணை எடுத்துக் கொள். ஆந்தைக்கும் பூனைக்கும் பகலில் கண் குருடாக உள்ளது. நமக்கோ வெளிச்சம் இருந்தால்தான் வஸ்து தெரிகிறது. இருளில் கண்ணிருந்தாலும் நாம் குருடர்கள் தான். வெளிச்சமிருந்தும் நமக்குக் கண் இல்லாவிட்டால் வஸ்து தெரியவில்லை. நாம் கண்ணைத் திறந்து கொண்டிருந்தாலும் வெளிச்சம் இல்லாவிடில் நமக்குப் பொருள் விளங்கத்தான் இல்லை. துஷ்ட மிருகங்களுக்குப் பகல், இரவு இரண்டிலுமே சமமான திருஷ்டி உண்டு என்று தெரிகிறது. ஆந்தையைப் போல் வெளிச்சம் அவற்றின் பார்வையைத் தடுக்கவில்லை; நம்மைப் போல் இருட்டும் அவைகளின் பார்வைக்குத் திரைபோடவில்லை. ஊனக்கண்ணுக்குச் சொன்னதே மனக்கண்ணுக்கும் சிந்தனைக் காட்சிக்கும் பொருந்தும்.

''புலன்களுக்குக் கிட்டுகிற இன்பம் மட்டுமே பெரும்பான்மையான மானிடர்களுக்கு வெளிச்சமாகிறது. அதன் இன்பம் போய்விட்டால் 'ஐயோ, இருட்டாச்சுதே!' என்று பயந்து, துயருற்றுவிடுகிறார்கள். புலன்கள் போனாலும் இவற்றுக்கு ஆதாரமான ஆத்மா இருந்து கொண்டே இருக்கிறது என்பதைக் காண இவர்களுக்கு திருஷ்டி இல்லை.

''ஆனால் இவர்களே ஆழ்ந்து உறங்கும் நிலையை எடுத்துக் கொள்வோம். அப்போது மனமும் புலன்களும் செயற்படவே இல்லை. இருந்தாலும் அப்போது இறந்தாவிட்டனர்? இந்த உறக்க நிலையிலும் உறங்காமல் உயிருடன் இருக்கிறதே, அது தான் மனத்துக்கும் ஆதாரமான ஆத்மா.

''ஆனால் அந்த ஆதாரம் சாமானிய மக்களின் பார்வைக்குத் தெரியவில்லை. அதன் விஷயத்தில் இவர்கள் குருடர்களே. ஞானிகள் நிர்விகல்ப சமாதி நிலையில் மனத்தைப் புலன்களின் வழியில் விடாமல், மனத்துக்கும் ஆதாரமான இந்த ஆன்மாவில் தான் முழுக்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆத்மா மட்டும் வெளிச்சமாயிருக்கிறது. அப்படிச் சொல்வதும் முற்றிலும் சரியாகாது. வெளிச்சம், அதைப் பார்க்கிற கண், பார்வை என்ற பேதங்கள் அங்கே இல்லை. எல்லாமே ஒன்றிய நிலையில் இருக்கிறார்கள். வெளி நடப்பு, வெளி உணர்வு எல்லாம் அவர்களுக்குத் தெரியவேயில்லை. இவற்றைப் பொறுத்தமட்டில் அவர்களும் குருடர்கள்தான். காரியமே இல்லாத ஆத்மாவில் உறைந்தவனுக்குக் காரியமயமான உலகம் பார்வையில் இல்லை. காரிய உலகில் அலைபவனுக்கு ஆத்மா காணப்படவில்லை. பிரபஞ்சம் ஒருவனுக்கு இருட்டு; பிரம்மம் இன்னொருத்தனுக்கு இருட்டு. ('எது எல்லா மக்களுக்கும் இரவோ அதில் ஞானி விழித்திருப்பான்; எதில் அவர்களெல்லாம் விழித்திருப்பரோ அதுவே ஞானிக்கு இரவு' என்ற கண்ணனின் கீதா வசனந்தான்!) பிரம்மத்தை இருட்டாகக் கொண்ட ஜீவர்கள் தூங்கும்போதோ, இவர்களுக்குப் பிரம்மமும் இல்லை; பிரபஞ்சமும் இல்லை. அடியோடு குருட்டு நிலை அது. அப்படியே பிரமை பிடித்து ஸ்தம்பித்திருக்கிறவர்களுக்கும் முழுக் குருட்டுத்தனம் தான். பிரம்மஞானிகளில் நிர்விகல்ப ஸமாதி கலைந்து அனைத்தையும் பிரம்மமாக அநுபவிக்கும் ஸஹஜ சமாதியில் இருப்பவர்களுக்கும், ஒன்றைப் பலபோலக் காட்டும் பராசக்தியிடம் அன்பினால் இணைந்திருக்கும் மஹா பக்தசிகாமணிகளுக்கும் பிரம்மம் தெரியும்; பிரபஞ்சமும் தெரியும் — இவர்கள் இராப்பகல் இரண்டிலும் பார்வை உள்ள ஜீவராசிகள் போல.

''எது இருள், எது ஒளி என்று யாரே சொல்ல முடியும்?....''

முனிவர் குரல் துளிராகச் சுருண்டது.

ராத்திரி தேவியை அக்னிவர்ணத்தவள் என்று சொன்ன மர்மம் இப்போதுதான் சுரதனுக்கு விளங்கினாற்போல்

இருந்தது. எல்லாவற்றையும் உறங்கவிட்டு விட்டு, அவள் மட்டும் தன்னைத்தானே தெரிந்து கொள்ளும் விழிப்பின் ஒளியாக இருக்கிறாள்! எனவே அக்னிவர்ணத்தவளாகப் புகழ்ப்படுகிறாள்!

ராத்திரி என்பது பிரம்மசக்தியின் பெயர். ர, அ, த்ரி சேர்ந்து ராத்ரி ஆயிற்று. த்ரி என்பது மூன்று. விழிப்பு, கனவு, உறக்கம் என்ற மூன்றும் மனிதனுக்கு உள்ளது. இந்த மூன்றாலும் பாதிக்கப்படாமல் இவன் சமாதியிலுள்ள போதும் இவனுக்கு உயிர் தரும் சக்தி, மூன்றையும் கடந்த துரியம். மூன்றைக் கடந்ததால் 'அ-த்ரி'. 'ர' என்பதே அக்னிபீஜம். மூன்றையும் கடந்து ஞானாக்னி ஒளியாக இருக்கிறவளே ர-அத்ரி, ராத்ரி.

முனிவர் பேசிக் கொண்டே போனார்.

"தூங்குபவர், மூர்ச்சித்தவர் தவிர மற்ற ஜீவர்கள் எதையோவொன்றைப் பகலாகப் பார்ப்பதற்குக் காரணம் அவர்களது அறிவின் வெளிச்சம்தான். இதுதான் ஊனாக, உணர்ச்சியாக அவர்களது பல இந்திரியங்களுக்குப் பல பொருள்களை அறிவிக்கிறது. எண்ணக் கண்ணாக இருந்து அவர்களது மனத்துக்குப் பல விஷயங்களை அறிவிக்கிறது. இந்த அறிவு மனிதனுக்கு மட்டும் தான் இருக்கிறது என்று இல்லை. விலங்குகள், பட்சிகள் முதலிய ஜீவராசிகளுக்கும் இந்த அறிவு வெளிச்சம் உள்ளது. மனிதனுக்கு உள்ள பார்வை, கேள்வி முதலிய வெளிப்பொருள்களை ஒட்டிய நுகர்ச்சிகளும், இவன் மனதிலே பிற பொருள்களை ஒட்டி எழுகிற காமம், துவேஷம் முதலியனவும் மிருகத்துக்கும் புள்ளினத்துக்கும் கூடத்தான் இருக்கின்றன. அவையும் உணவைத் தேடி அலைகின்றன; தங்களுக்கு இருக்கை உண்டாக்கிக் கொள்கின்றன; ஓய்வுக்காக உறங்குகின்றன; சந்ததியை விருத்தி செய்து கொள்கின்றன.

''அவற்றின் குடும்ப வாழ்வைப் பார்த்தால் மனிதனை விடப் பாசநேசம் இங்குதான் அதிகம் இருக்கிறாற் போலவே தோன்றுகிறது. பசுவுக்கும் கன்றுக்கும் உள்ள ஆர்வ பாசம் மனித இனத்தில்கூட அவ்வளவு தீவிரமாக இல்லையே என்று தோன்றுகிறது! இதோ மேலே மரத்தில் பார்!''

அக்கானகத்தின் நெடிதோங்கிய விருட்சங்களில் பட்சிகள் கீச்சு கீச்சு என்று வம்பிக் கொண்டேயிருந்தன. அவற்றுள் முனிவரின் சின் முத்திரை காட்டும் விரல் நீண்டு சுட்டியது — ஓர் அன்புக் குடும்பத்தை! குளிர் வெயிலிலிருந்து அடர்ந்த

கிளையின் காப்பும் போதாது என்று இந்தப் பட்சிக் குடும்பத் தலைவனும் தலைவியும் கருதி, ஓர் அற்புதக் கூட்டைக் கட்டிக் கொண்டிருக்கின்றன. மனிதருக்குக் கூட அத்தனை கட்டுமானக் கலை தெரியாது என்ற அளவுக்குத் தேர்ச்சியுடன் கூடு கட்டப்பட்டிருக்கிறது. மேதஸ் சொன்னது எத்துணை உண்மை! மனிதனிடம் மட்டும்தான் அறிவு வெளிச்சம் இருக்கிறதா என்ன?

இப்போது இந்தக் கூட்டில் ஒரு பாச நாடகமே நடக்கிறது. எங்கெங்கோ சென்று புழு பூச்சிகளைத் தேடித் தேடி எடுத்து, எப்படியோ அலாக்காக அலகிலேயே இடுக்கிக் கொண்டு வந்திருக்கிற தாய்ப்பறவை, அந்த இரையைக் குஞ்சுக்கு ஊட்டுகிறது. தன் இன்குரலே 'கரா புரா' என்று உணர்ச்சி வசத்தில் கரகரத்துக் குமுற, அது இரையைப் புகட்டுகிறது. அந்தச் சின்னஞ்சிறு குஞ்சு தன் செக்கச் சிவந்த உள்வாய் தெரியுமளவுக்கு அலகைப் பிளந்து கொண்டு இரையைத் தின்கின்றது. இப்படித்தான் தொண்டையில் அழுத்தம் கொடுத்து விழுங்க வேண்டும் என்று அதற்கு எப்படியோ தெரிந்திருப்பது ஆச்சரியம்தான்!தாயார்க்காரி இரை தேடிவரப் போன சமயத்தில் குஞ்சை எதிரிகள் அண்டாமல் பாதுகாத்த தந்தைப் பட்சி உற்சாகமாக — தன் இயற்கைக் குரலும் மாறி ஒலிக்க — மிழற்றியவாறே குஞ்சின் இறகைக் கோதி விடுவதும், மனைவியின் இறகை நீவி விடுவதும், இருவரையும் சுற்றிச் சுற்றி வருவதுமாக நேச நாடகம் ஆடுகிறது.

'இந்த மாதிரி இன்பம் நாம் எந்த நாளும் அநுபவித்ததில்லையே!' என்ற ஆற்றாமை ஸுரதனுக்கு ஏற்பட்டது; 'இந்த மாதிரி இன்பத்தை ஒரு நாளில் நானும் கண்டவன்தான்; ஆனால் அதே பெண்டாட்டியும் பிள்ளையும்தானே என்னை அடித்துத் துரத்தி விட்டனர்?' என்று ஏக்க உணர்வில் பெருமூச்செறிந்தான் ஸமாதி.

முனிவரோ புஷ்பமாகச் சிரித்துக் கொண்டார். ''இந்தப் பாசம் மானுடனுக்கும் தானே வேண்டியிருக்கிறது? ஆனால்...' என்று நிறுத்தினார். உள்நகை இழையோடத் தொடர்ந்தார்: ''ஆனால் மனிதன் தன்னைவிடக் கீழ்நிலையில் உள்ளதாக நினைக்கிற இந்தப் பசு பட்சிகளின் பாசத்துக்கும் இவனுடைய பாசத்துக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. இவனுடைய பாசத்தைவிட அவற்றின் பாசம் கீழ்நிலையில் உள்ளனவோ என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. உண்மை நேர்மாறாக இருக்கிறது. இவனுடைய பாசம் பிரதி

உபகாரத்தையே அந்தரங்கத்தில் சாரமாக அழுத்தி வைத்துக் கொண்டிருக்கிறது. தான் இப்போது செய்வதற்குப் பிரதியாகத் தன் பிள்ளை வயதுக் காலத்தில் தன்னைப் பராமரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். இதைத் தன் வெளி மனம் அறியாவிட்டாலும் உள் மனத்தில் எதிர்பார்க்கிறான். தனக்கே தன் முழு மனம் தெரியாத அரைக்குருடாக இருக்கிறான். முதுமையில் பிள்ளைகள் தன்னைக் காப்பாற்றாவிட்டால் இவனுக்குக் கோபம் வருகிறதே, அதற்குக் காரணம் உள் மனம் எதிர்பார்க்கும் பிரதி உபகாரம்தான். பட்சிகளும் விலங்குகளும் இப்படி இல்லை. அவை முதுமை அடைந்த காலத்தில் அவற்றின் குஞ்சுகளா அவற்றை வைத்துப் பராமரித்து, இரை கொண்டு வந்து தருகின்றன? அடுத்த வாரமே இந்தக் குஞ்சு எங்கோ பறந்து போகும். அப்புறம் இவற்றுக்குள் உறவே இல்லை. பெரும்பாலான ஜீவ இனங்களில் தம்பதி ஜோடிகளான பட்சி அல்லது மிருகங்களும் பிறகு பிரிந்து விடுகின்றன. அப்புறம் ஒன்றையொன்று எண்ணி ஏங்கித் தவிப்பதில்லை. மனிதன் இப்படிப் பாசத்தை விட்டு இருக்க முடிகிறதா? இல்லை. ஏனென்றால், இவன் மற்றவரிடம் வைக்கிற பாசம் தன்னிடமே வைத்துக் கொண்ட பாசத்தின் பிரதிபலிப்புத்தான். அவர்களிடம் பாசம் வைப்பதால் தனக்கு உண்டாகிற நிறைவுக்குத்தான் உறவு கொண்டாடுகிறான். அதற்கு அவர்கள் பிரதி செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறான். என்ன, சமாதி! நான் சொல்வதை நீ ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை....அப்படித்தானே?''

சமாதி மென்று விழுங்கினான். பறவைத் தகப்பனார் தன் குஞ்சை எத்தனை பரிவுடன் பார்த்ததோ அப்படி ஸமாதியைப் பார்த்தார் மேதஸ். ''அப்பனே! நீ மிகவும் அடக்கமானவன். அதனால் என்னை எதிர்த்துப் பேச மாட்டாய்! ஆனால் உன் மனசு எனக்குத் தெரியாதா? நான் சொல்வதை நீ ஒப்பவில்லை. ஏனென்றால் பிரத்தியட்சமாக நீயே என் வார்த்தைக்கு நேர் எதிரான உணர்ச்சிக்கு உருவமாயிருக்கிறாய் — அதாவது அப்படி நினைக்கிறாய்! உன் பெண்டாட்டி பிள்ளை குட்டிகளிடமிருந்து நீ சற்றேனும் பிரதி உபகாரம் எதிர்பார்க்கவில்லை. இப்போது உன்னை அவர்கள் விரட்டி விட்ட பின்பும், அவர்கள் சங்கடத்தை வருவித்துக் கொள்ளாமல் சரியாக வாழ வேண்டுமே என்றுதான் தவிக்கிறாய். நீ மட்டும் இல்லை. பெரும்பாலான பெற்றோர் இப்படித்தான் இருப்பார்கள், தங்கள் குழந்தைகளைக் காக்கத்தான் எண்ணுவார்கள். ரிஷிக்கு இது தெரியாது என்று நினைத்து விடாதே. தெரிந்தே தான் 'பிரதி உபகாரம்' என்கிற வார்த்தையைப்

போட்டேன். ஏனென்றால் காரியத்தில் இவன் செய்ததற்கு ஈடாக அவர்கள் பிற்பாடு திருப்புவது மட்டும் பிரதி உபகாரம் இல்லை குழந்தாய்! மனத்தில் இவனுக்கு இருக்கிற பாசத்துக்கு ஈடாக அவர்களும் பாசமாக இருக்க வேண்டும் என்று இவன் எதிர்பார்க்கிறானே, அதுவும் பிரதி உபகாரத்தைக் கோருவதுதான். உன்னைப் போல 'பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு' என்பதற்கு எடுத்துக்காட்டாக பிரதிபாசம் காட்டாத குடும்பத்தாரிடமும் பாசம் குறையாமலே இருப்பவர்கள் அநேகர். தன்னிடம் பிரியம் காட்டாத பிள்ளைக்காகப் பிராண தியாகமே செய்கிற தாய் தந்தை கூட உண்டு தான். ஆனால் அவர்களுக்கும் கூட தாங்கள் மகவால் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையில் மனம் நிரம்பியிருக்கிறதா? ஸௌம்யா, உன்னையே நீ அகழ்ந்து பார்த்துக்கொள். உன் குடும்பத்தினர் எந்தச் சங்கடத்துக்கும் ஆளாகாத ஒரு பக்குவ நிலைக்கு வந்து விட்டார்கள் என்றே உனக்குத் தீர்மானமாகத் தெரிய வருவதாக வைத்துக் கொள். அப்போது நீ இன்று போல அவர்களுக்காக கவலைப்பட வேண்டியதில்லை. அப்போது உன் சொந்த வாழ்க்கைக்கும் விசாரப்பட அவசியமில்லாமல் உனக்கு வேறு விதத்தில் ஸௌகரியம் உண்டாகி விடுவதாக வைத்துக் கொள். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்திலும் நீ பூரண மகிழ்ச்சி நிறைவோடு இருக்க இயலுமா என்று யோசித்துப்பார். 'அவர்கள் அங்கே சுகமாக இருக்கிறார்கள்; நானும் இங்கு நலமாக இருக்கிறேன்; என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு அவர்களிடம் அன்பு தவிர வேறெதும் இல்லை; எனவே ஆனந்தமாக இருப்போம்' என்று உன்னால் இருந்துவிடமுடியும் என்று நினைக்கிறாயா? இரு சாராரும் நல்ல நிலையில் உள்ள அப்போதுங்கூடப் பிரிந்திருப்பதின் துயரம் உன்னைக் குத்திக் கொண்டே தானே இருக்கும்? சொல், ஸௌம்யா, சொல் — பெரிய ரிஷி கேட்கிறாரே என்று ஆமாம் போடாதே! உனக்கு என்ன தோன்றுகிறதோ, சொல்."

சமாதியின் கண்கள் கலங்கின. "ஆமாம், மகாமுனே! அவர்கள் எத்தனை ஸௌகரியமாக இருந்தாலும் கூட, நானும் எத்தனை ஸௌகரியமாக இருந்தாலும் கூட, என் மனத்தில் நிறைவு இராதுதான். மனத்தில் வேதனை ஈட்டி குத்தாமல் அவர்களைப் பற்றி என்னால் நினைக்க முடியாதுதான். அந்தப் பெண்டு பிள்ளைகளின் முகத்தை நினைக்கும் போதே, என்ன காரணம் என்பதே தெரியாமல், என் நெஞ்சில் நோவான நோவு ஏற்படத்தான் செய்கிறது. என்றென்றும் இது அப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். தாங்கள் சொன்னது முழுக்க

முழுக்க சரியே! என் மனைவி - மக்களை ஏதோ ஒரு பெரிய சிரமத்திலிருந்து காப்பதற்காக என் உயிர் பலியாகக் கேட்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். தயங்காமல் பிராண தியாகம் செய்வேன். ஆனாலும் ஸ்வாமி, பெண்டு பிள்ளைகளின் பாசமற்ற முகம் என் மனக்கண்ணில் தோன்றினால் அப்போது என்னால் மலர்ச்சியோடு சாக முடியாதுதான் — ஏதோ ஓர் ஆராப் புண்ணுடனேயே சாவேன்..''

முனிவர் அவனைத் தட்டிக் கொடுத்தார். கையால் அல்ல, பார்வையாலேயே!

''வத்ஸ! நீ ஒருத்தன்தான் இப்படி என்று எண்ணாதே! இப்படி இருக்கிறோமே என்று நீ குமைந்து கொள்ள வேண்டாம்! மானுடர்களில் கோடியில் ஒருவர்தான் இப்படியில்லாமல் இருப்பார்கள்....''

முனிவர் இப்படிச் சொன்னதே சமாதிக்கு ஓர் ஆறுதலாக இருந்தது. தன்னிடம் மட்டும் குறை இல்லை என்று அறிகிற போதே இந்த மானுட மனத்திற்கு ஆறுதலைப் பாருங்கள். அப்படிப்பட்ட சுய பாசம் அதற்கு!

'ஆறுதல்' என்கிற அற்புத சித்தியை நடத்திக் காட்டவே அல்லவா ஞானிகள் இருக்கிறார்கள்? ஞானி மேதஸ் தொடருவார்.

''இதோ இந்தச் சக்கரவர்த்தி இருக்கிறார். இவருக்கு இப்போது இவருடைய பழைய பட்டத்து யானை விஷயமாக இதே மன உளைச்சல். அந்த யானையை இப்போது ராஜாங்கம் செய்கிறவர்கள் இவரை விட அருமையாகப் பராமரிப்பதாகவே தெரிந்தாலும்கூட இந்த மன நோவு இவரை விடாது...''

முன்னாள் மன்னனாகிய தன் குட்டை இப்படி இந்தச் சாதாரண வணிகனிடம் முனிவர் உடைத்து விட்டாரே என்று சுரதன் சுணங்கவில்லை. ''ஆமாம், ஆமாம்'' என்று நன்றாகச் சிரித்துக் கொண்டே கூறினான். அகங்காரத்தால் தானாக முற்றிலும் கலைக்கப் பிரியப்படாத வேஷத்தை அவராவது கலைக்கிறாரே என்று நிம்மதியே அடைந்தான் சுரதன்.

கறுப்பாக இருக்கிற ஒருவன் சிவப்புச் சாயம் பூசிக் கொள்கிறான். வேஷம் நன்றாகத்தான் இருக்கிறது. இவன் இயற்கையாகவே சிவப்பானவன் என்று மற்றவர்களும் நினைக்கிறார்கள். ஆனால் நேரம் ஆக ஆக அந்தச் சாயம் இவன் தோலையே அரித்து பிடுங்கிச் சூடேற்றத் தொடங்குகிறது. அதைத்

தேய்த்துக் கழுவித் தொலைத்து விடலாமே என்றால், ''ஐயோ, நான் இவர்கள் முன் கறுப்பாகி விடுவேனே!'' என்கிற எண்ணம் குறுக்கே நிற்கிறது. அப்போது திடீரென்று ஒரு மழை பெய்து, இவனுடைய சாயம் தானே கரைந்தோடினாலோ? இப்போது மழை நீரில் அரிப்பும் சூடும் தணிய நிற்கிற ஆனந்தத்தில், கறுப்பு வெளிப்படுவதையா பொருட்படுத்தப் போகிறான்?

சுரதன் தன்னை உள்ளபடி காட்டிக் கொள்ள உள்ளத்தின் ஒரு கூற்றினால் திரும்பிய போதே, இன்னொரு கூறு ரஜோ குணத்தால் அதற்குக் குறுக்கே நின்றது என்பதையும், வேஷம் கலைவதிலேயே உள்ளூர அவனுக்கு நிம்மதி கிடைக்கிறது என்பதையும் அறிந்தே ஆறுதல்-கலை-நிபுணரான மேதஸ் குட்டை உடைத்தார்.

ஒரு கல்லில் இரண்டு மாங்காயாக, சமாதிக்கும் இதில் பெரிய ஆறுதல். 'தானாவது பெண்டு பிள்ளைகளுக்காக துக்கிக்கிறோம்; இந்த மகாபட்ட மன்னர் கேவலம் ஒரு யானைக்காக இம்மாதிரி துயரப் படுகிறாராமே!' என்று அவனது மனம் தன்னைப் பற்றியே சிறிது பெருமைகூட பட்டுக் கொள்ளச் செய்து விட்டார் மேதஸ்.

மனத்தைப் பெருமை சிறுமை இரண்டிலிருந்தும் விடுவிப்பதுதான் அவரது லட்சியம். அந்த லட்சியத்தில் இந்த இருவரது மனங்களையும் கொண்டுவருவதற்காகவே, ஆரம்பக் கட்டத்தில் அவற்றையும் தாஜா செய்து தட்டிக் கொடுக்கிறார்.

சொல்வார்: ''ஆகக்கூடி நாம் பாசம் வைத்தவர்களை விட்டுப் பிரிகிற போது மனம் நிறைவை இழக்கிறது. மனக்குறைக்கு காரணம், ஒன்று நாம் அவர்கள் மீது வைத்த பாசம் அவர்களால் திருப்பப்படவில்லையே என்பது; அல்லது, அவர்களும் நம்மிடம் பாசம் உள்ளவர்களாக இருப்பின், அவர்களை விட்டுப் பிரியும்போது நம் மனம் நிறைவிழப்பதற்குக் காரணம் பிரதியை இழந்தோமே என்பது. இரண்டும் சுயநலம்தான். இதுதான் காரணம் என்று புத்திக்குத் தெரியாவிட்டாலும், நெஞ்சு நோவது மட்டும் அநுபவத்தில் தெரிகிறது. நம் பிரியத்துக்குப் பிரதியாக மற்றவர்கள் செய்கிற பிரியம் என்கிற உபகாரத்தைப் பொருட்படுத்தாமலே, பூரண ஆனந்தமாகத் தங்கள் மட்டில் அன்பையே செலுத்துகிறவர்கள் மிகவும் அபூர்வமான மகான்கள்தாம். நேசத்தைக் கூட ப்ரதியாக எதிர்பாராத அந்த நிலையில் பாசம் என்பது இல்லை; அன்பே இருக்கிறது. பாசம் என்கிற வார்த்தைக்குக் கயிறு என்று அர்த்தம். நம் மனத்தை ஒருவரோடு கட்டி இறுக்குகிற கயிறுதான் பாசம்.

'என் நேசம் திருப்பப்படவேண்டும்' என்று இவன் எண்ணுவதற்குக் காரணம் இவன் தன்னைப் பெரிதாக மதிக்கிறான்; தன் பாசத்தைப் பெரிதாக நினைக்கிறான். இதற்குப் பிறர் ஈடுசெய்யவில்லை என்று காண்கிறபோது தன்னை அவமதித்ததாக எண்ணுகிறான். நெஞ்சின் நீங்காத நோவுக்கு இதுதான் காரணம். தன்னைப் பெரிதாக மதித்துக் கொள்வதுதான் காரணம். எத்தனையோ குறைகள் மலிந்த இவன் தன்னைப் பெரிதாக நினைத்துக் கொள்வதைவிட பெரும் மமதை உண்டோ? (''மம'' என்றால் ''என்னுடைய'' என்று அர்த்தம். தன் உடமைகளில் வைக்கிற பெரிய பற்று மமதை.)

''இவற்றில் தனக்கு இல்லாத பெருமையையும் இவன் ஓர் உடைமையாக நினைத்துக் கொண்டு அதன் இழப்புக்காகத் துயரப்படுகிறான் என்றால் அதுதானே மிகப் பெரும் மமதை?

''இல்லாததை இருப்பதாக நினைக்கிறான், அதே சமயத்தில் இருப்பதை இல்லாததாகவும் எண்ணுகிறான். 'எது இருக்கிறது? அதை இவன் இல்லாததாக நினைக்கிறான்?' என்று கேட்கிறீர்களா? இவன், இவன் வைத்த பாசம், அந்தப் பரசத்துக்கு ஆளானவர்கள் ஆகிய எல்லாருக்கும் அடிப்படையாக ஒரே சத்தியம் தான் இருக்கிறது. அப்படி இருக்கிற ஒன்றை இவன் பார்க்கவே இல்லை! அந்தச் சத்தியத்தின் தோற்றங்கள்தான் இந்த ஜட பிரபஞ்சமும், இத்தனை பசு, பட்சி, மிருக, மனிதர்களும். இதெல்லாம் மாறிக்கொண்டே வந்து முடிவில் அழிகின்றன. அதாவது 'இருப்பவை' என்று நினைக்கப்படும் இவையெல்லாம் இல்லாததாகவே ஆகின்றன'' - முனிவர் நிறுத்தினார். கண்ணில் நீர் ஒளிவிடச் சிரித்தவர், ''பெரிய விளையாட்டு, பெரிய லீலை — இத்தனை ஜீவராசிகளும் இப்படி இல்லாததை இருப்பதாகவும், இருப்பதை இல்லாததாகவும் நினைக்கிறார்களே! இல்லாததில் இத்தனை பாசமோகம் வைத்து மோசம் போகிறார்களே! ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவா இந்தப் பிரமை, இந்த மோகம் ஏற்பட்டிருக்கிறது? எல்லோருக்கும் ஒருமிக்க, ஒரே போல இந்த பிரமை இருக்கிறது என்றால் இதற்கு எல்லாமும் ஏகமான ஒரு மூலம் இருக்கவேண்டும் அல்லவா? அந்த மூலம் விளையாடுகிறது. அப்பன்மார்களா, அந்த மூலம் லீலாவிநோதம் செய்கிறது...''

முனிவரின் உற்சாக குதூகலம் மறைந்தது; உள்ளம் உருகும் கனிவு பிறந்தது; பிறகு அதுவும் மறைந்தது; அக்கினிமயமான ஓர் அடர்த்தி பிறந்தது.

'அனைத்தும் தன்னில் அடங்கிய மூலமான சத்தியம் அசைவே இல்லாமல் இருக்கவேண்டும். அசைந்துவிட்டால் அது அசைவதற்கு வெளியிடம் இருக்கிறது. அப்படி அதற்கு வேறாக வெளியே இடம் இருந்தாலோ, அதுவே 'அனைத்தும்' என்பது பொய்த்துவிடும். ஆகவே அது அசையாமல் கிடக்கவேண்டும். 'அசையாமல்' என்றால் 'தேகத்தால் அசையாமல்' என்று அர்த்தமில்லை. இந்த சத்தியம் அருவமானதல்லவா? அதற்கேது தேகம்? அது சிந்தனையால் அசையாமல் கிடக்க வேண்டும். அது ஒன்றைச் சிந்தித்துவிட்டால் அதற்கும் வேறாகச் சிந்திக்க ஒரு விஷயம் உண்டு என்றாகிவிடும் — எனவே அதுதான் அனைத்தும் என்பது பொய்யாகிவிடும். சிந்தனையும் சிந்திப்பவனும் ஒன்றாயிருந்தால் ஒழிய எப்படி அது அனைத்துமான பிரம்மமாக இருக்கும்? எனவே அதில் எண்ணமே இருக்கமுடியாது. தத்வ ரீதியில் இந்த முடிவுக்கே வருகிறோம். தத்வ ஆராய்ச்சி மட்டுமல்ல. பிரத்யக்ஷ அநுபவமாகவும் நிர்விகல்ப ஸமாதி நிலையில் இதைத் துய்க்கிறோம். இந்த அசட்டுக் கிழவனையும் அம்மா ஆட்கொண்டு இழுத்துக் கொண்டே போய் அப்படிப்பட்ட அசைவற்ற ஏகத்திலே அதோடு அதாகவேதான் சொருகிவிடுவதுண்டு.

"ஆனால்... ஆனால் — இதோ இந்த அனந்தமான பிரபஞ்சத்தைப் பார்க்கிறோமே! கோடாநுகோடியர் ஒரே விதத்தில் இதைப் பார்க்கிறோமே! இதிலே எண்ணி முடியாத எண்ணங்களில் ஓயாமல் மொத்துப்பட்டுக்கொண்டிருக்கிற கோடி கோடி உயிர்களை கோடி கோடி ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டேயிருக்கிறோமே. இந்த நாமும் நமது எண்ணங்களும், இந்த எண்ணங்களுக்கெல்லாம் மூலமான எண்ணமும் எங்கே பிறந்தது?

"பிறந்தது பிரம்மத்திலே! ஆம், குழந்தைகளே! நடக்கவே முடியாததுதான் நடந்திருக்கிறது. பிரம்மம் சிந்திக்கவே முடியாது என்றாலும் சிந்தித்து விட்டது! அந்தச் சிந்தனையே ஜடத்துக்கும் மூலம், எண்ணங்களுக்கும் மூலம். அந்தச் சிந்தனையில் உதித்தவைதான் இந்த ஜடப் பிரபஞ்சம், எண்ணம் கொண்ட ஜீவப் பிரபஞ்சம் யாவும். உதித்தது என்றால் எப்படி? இதெல்லாம் எப்படி இருக்க வேண்டும் என்று அது நினைத்தது! அவ்வளவுதான், எல்லாம் அப்படியே தோன்றி இருக்க ஆரம்பித்துவிட்டன! இருப்பதோடு சரியா? இவை அழிய வேண்டும் என்றும் அது நினைக்கிறது. இவை அழிகின்றன. அதாவது, இல்லாமல் போகின்றன. ஒரு காலத்தில் இல்லாமல்

போகிறவைகளை இப்போது இருப்பதாகக் காட்டுகிறது பிரம்ம சக்தி. இல்லாததை இருப்பதாகவும் இருப்பதை இல்லாததாகவும் ஒருத்தன் காட்டினால் மாயா ஜாலம் என்கிறோம். இருக்கிற பிரம்மத்தையே அத்தனை ஜீவர்களின் பார்வையிலும் இல்லாததாகவும், ஒரு காலத்தில் இல்லாமல் போகிற வஸ்துக்களை இருப்பதாகவும் காட்டுகிற சக்தியை என் சொல்லலாம்? மகா மாயா என்றே சொல்வோம். இந்த மாய சக்தி பிரம்மத்தின் சக்தி இல்லாமல் வேறு எதுவாக இருக்க முடியும்? பிரம்மத்தைத் தவிர வேறெதுவுமே இல்லை என்கிற நிலைக்கும் பிரம்மத்துக்கு வேறு போல் இத்தனை காணப்படுகிற நிலைக்கும் நடுவில் அந்த பிரம்மம் ஒன்றின் சக்தி தவிர வேறென்ன இருக்க முடியும்? ஆக, வத்ஸர்களே, பிரம்ம சக்தியேதான் மஹாமாயை.

"'சம்ஸாரம்' என்பதை உண்டாக்கி இருப்பது அந்த மகா மாயையின் மகிமைதான். இதில் ஆச்சர்யம் ஏதுமில்லை ஸௌம்யர்களே! பிரம்ம சக்தி எதைத்தான் செய்ய முடியாது? அது எதையும் அநாயாசமாகச் செய்ய முடியும். இத்தனை கோடி மக்களின் மோகத்துக்கும் அவள் தான் காரணம். சாமானிய மக்கள் மட்டுமில்லை, ஞானிகளுடைய சித்தங்களையும் மகாமாயையான தேவி பகவதி — ஸாக்ஷாத் பிரம்ம சக்தி — கவர்ந்திழுத்து மோகத்தில் செலுத்துகிறாள்..."

முனிவர் இப்படிக் கூறியதற்கு விரிவான விளக்கம் இந்நூலின் முகவுரையில் காணலாம். ஸுரதனுக்கும் ஸமாதிக்கும் அந்த விளக்கத்தை அவர் இங்கே தரவில்லை. அவர்கள் அப்போதிருந்த மனநிலையில், ''தாங்கள் மட்டுமா மோகத்துக்கு ஆளானோம்? ஞானிகளும் ஆளாயினர் அல்லவா?'' என்கிற எண்ணமே பெரிய ஆறுதல் தந்திருக்கும், ஆறுதலே தொழிலாகக் கொண்ட முனிவர் இக்கருத்துத் தொனிக்கவே பேசி இருப்பார். ஆயினும் இதன் முழுப் பொருளையும் அவர்கள் உணர்கிற மார்க்கத்தில் — இவர் விளக்கவுரை தராமல் அவர்களாகவே அநுபவத்தில் உணர்கிற பக்தி மார்க்கத்தில் — அவர்களைச் செலுத்த அவர் தீர்மானித்து விட்டார்!

அவர்கள் கேளாமலே அவர்களை அம்பாளிடம் திருப்பி விடும் காருண்ய சங்கற்பம் அவரது திருவுள்ளத்தில் பிறந்து விட்டது!

ஆத்ம ஞானிகளின் லக்ஷ்யமான அந்த பிரம்மத்தையே அவள் மோகத்தில் செலுத்தியதால்தானே? அசைவதும், அசையாதது மான சராசரத்தை அப் பிரம்மத்திலிருந்து தோற்றுவித்

திருப்பதுங்கூட?'' என்று கேட்டு விலாவெழச் சிரித்தார் முனிவர். பிரம்மம் தனக்குப் பிறிதாக வேறொன்றும் இல்லாதிருந்தும் இத்தனை இருப்பதுபோல தன் சக்தியை வெளியிட்டுக் கொண்டிருப்பது அதன் சக்தியில் அதற்குள்ள பாச மோகம்தானா? ஸுரதனுக்கும், ஸமாதிக்கும் இதைவிட ஆறுதல் உண்டா? ஆனானப்பட்ட பிரம்மத்துக்கே பாச மோகம் இருந்திருக்கிறதாக அல்லவோ ஒரு போடு போடுகிறார்!

பிரம்மம் என்ற அருவ சத்தியத்தில், உணர்ச்சி மயமான சுரத சமாதியருக்குப் பிடிமானம் கிடையாது. உபநிஷதங்களுக்கு முக்கியத்துவம் தந்த மறையாளரே பிரம்மத்தில் கருத்து வைத்தவர் ஆவர். க்ஷத்திரியர்களுக்கும் வைசியர்களுக்கும் ஸ்ரீமந் நாராயணன்தான் முக்கியம்.

வைஷ்ணவர்கள் என்றே உள்ளவர் நாராயணனையே உலகின் படைப்பு, காப்பு, அழிப்பு, மாயை, மோக்ஷமருளல் ஆகிய ஐந்தொழிலையும் புரியும் பிரம்ம சக்தியாகக் கொண்டாலும், ஏனையோர் பெரும்பாலும் உலகைப் பரிபாலனம் செய்வது என்ற காப்புத் தொழிலுக்கு உரிய மூர்த்தியாக மட்டுமே முக்கியமாகக் கொள்கிறார்கள். சிருஷ்டி செய்கிற சக்தி பிரம்மா என்றும், ஸ்திதி என்கிற உலக பரிபாலனம் புரியும் சக்தி விஷ்ணுவாகிய நாராயணன் என்றும், அழிப்புச் சக்தி ருத்திரன் என்றுமே பொதுவில் கருதப்படுகிறது. மாயை, மோக்ஷ அநுக்கிரகம் என்ற கிருத்தியங்களைப் பற்றி பெரும்பாலோர் எண்ணுவதே இல்லை. சைவர்கள் மாயைக்குரிய சக்தி மகேச்வரன் என்றும், அநுக்கிரக சக்தி சதாசிவன் என்றும் சொல்வர். தேவீ உபாசகர்கள் மேற்சொன்ன ஐந்து மூர்த்தியர் மூலம் பிரம்ம சக்தியான அம்பாளே ஐந்தொழிலும் செய்கிறாள் என்றும், பிரம்மா முதலியவர்களும் அவளால் இயக்கப்படும் கருவி மாத்திரம்தான் என்றும் கூறுவர். சைவர்கள் இவ்விதமே சிவ பெருமான்தான் ஐந்தொழிலுக்கும் அதிபன் என்றும், வைணவர் ஸ்ரீமந் நாராயணனே எல்லாக் கிருத்தியங்களுக்கும் மூலமான பிரம்மம் என்றும் கூறுவர்.

ஆனால் சமய தத்துவ நுணுக்கங்களைப் பொருட்படுத்தாத மக்களுக்கு விஷ்ணு உலக பரிபாலகர். தங்களது உலக வாழ்வு பராமரிக்கப் படுவதற்கு அதிகமாக அவர்கள் எதையும் கருதுவதில்லை. அரசன் உலகத்தைப் பரிபாலிப்பதால் அவனை விஷ்ணு அம்சமாகவே சொல்வர். சுரதன் போன்ற மன்னர்கள் அத்யாத்மக் கல்வி பெற்றிருந்தாலும் கூட இவர்களுக்கும் பாலனமே ஸ்வதர்மமாகையால், இவர்களும் விசேஷமாக

விஷ்ணுவையே வழிபடுவர்: அவனைப் பாலன சக்தியாகவே வழிபடுவர்; வியாபாரம், விவசாயம், பசு ரட்சணை, இவற்றைத் தொழிலாகக் கொண்ட வைசியர்களுக்கும் பரிபாலன மூர்த்தியான விஷ்ணுவிடமே ஈடுபாடு அதிகம்.

ஸ்ரீமந் நாராயணனிடமோ மற்ற எந்தத் தெய்வத்திடமோ பிரம்ம ஞானத்தைக் கோரினால் அதையும் அவர்கள் அளிக்கக் கூடியவர்கள்தான். ஏனென்றால் ஒரே பராசக்திதான் இத்தனை கடவுளரும். பரிபாலன சக்தியாகப் பொதுவாக நினைக்கப்படும் ஒரு மூர்த்தி தனது உள்ளார்ந்த பரிபூரண பிரம்ம சக்தியை மறந்துபோய் விட முடியாது. எனவே பல தெய்வங்களைக் கொள்ளும் போது ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தொழிலில் மட்டுமே அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட அந்தக் குறிப்பிட்ட துறைக்கு மட்டும் அதைத் தெய்வமாகக் கருதாமல் எதை வேண்டினாலுமே — முக்தி உள்பட — அனைத்தையும் ஒவ்வொரு தெய்வமுமே வழங்க முடியும். அதாவது ஒன்றேயான பிரம்மத்தின் சக்தி எந்த தெய்வ ரூபத்தின் மூலமும் முக்தி நல்க முடியும்.

இனி விரிய இருக்கிற மது-கைடபாசுரர் கதையில் விஷ்ணுவை விட அம்பாள் பெரிய சக்தியா என்ற கேள்வி எழவே கூடாது என்பதற்காகத்தான் இந்தப் பீடிகை போடப்படுகிறது.

''பிரம்மமே மாயாசக்தியால் பலவாகத் தோன்றுகிறது எனில் மற்றவர்கள் மாயா பாசத்தால் ஆட்டுவிக்கப் படுவதில் விந்தை என்ன!'' என்று சுட்டிக் காட்டியதோடு மேதஸ் நின்றுவிடவில்லை.

சுரதனுக்கும் ஸமாதிக்கும் வழிபடு கடவுளாக இல்லாத பிரம்மத்தைச் சொன்னால் மட்டும் அவர்களுக்கும் முழு ஆறுதல் ஆகாது என்பதால், அவர்களது வழிபடு தெய்வமாகிய விஷ்ணுவையும் இழுத்துவிட்டார் மேதஸ்:

''ஜகத் பதியான ஹரியை மட்டும் மஹாமாயை விட்டுவைத்தாள் என்றா நினைக்கிறீர்கள்? நீங்கள் விஷ்ணுவின் ரூபங்களைப் பார்க்கிறீர்களே! அவற்றில் நிற்கிற மூர்த்தியும், உட்கார்ந்த மூர்த்தியும் மட்டுமா உள்ளன? கிடக்கின்ற மூர்த்தியும் அல்லவா உள்ளது? பாற்கடலில் பாம்பணையில் நீளநெடுகக் கிடந்துறங்கும் சயன மூர்த்தியாகவும் இருக்கிறார் ஸ்ரீ மகாவிஷ்ணு. இதை யோக நித்திரை என்கிறோம். அவர்

யோகத்தில் அப்படியே ஆழ்ந்து கட்டுண்டு சமாதியில் இருக்கிறார் என்கிறோம். லோக பரிபாலனப் பொறுப்பு ஏற்றவர் இப்படி யோக நித்திரை செய்தால் ஆகுமா? ஒருபுறம் யோகத்திலுள்ள ஞானிகளை உலக மயக்கில் தள்ளுகிற மகாமாயைதான் உலக ரட்சணத்துக்கெனவே இவரை நியமித்தாள். மற்றொருபுறம் அவளே உலக பாலனத்துக்காக ஏற்பட்ட அந்த விஷ்ணுவை யோகத்திலும் நித்திரை புரிய வைக்கிறாள். இதிலிருந்து என்ன ஆகிறது? அவள் மோகத்தில் தள்ளுவது போலவே மோக்ஷத்திலும் தள்ளக் கூடியவள் என்றாகிறதல்லவா? எனவே, சம்சார காரணியான அவளையே இச் சம்ஸாரத்தினின்று விடுதலைக்காக மக்கள் ஆராதித்தால் அவள் முழு மலர்ச்சியோடு பிரசன்னமாகி, வரம் தருகிறவளாக வந்து நின்று, முக்தி நல்குவாள் என்றாகிறதல்லவா? அவள் எதுவும் செய்யக் கூடியவள். அவளை நாம் புத்தியால் முற்றிலும் அறிவது நடக்காத காரியம். நம் வித்தைகள் அவளிடம் பலியா! ஏனெனில், அவள் ஒருத்தியே வித்யை. பிரம்மம் தன் முற்றறிவை, முற்றுணர்வை அறிந்து அவளாகப் பிரகாசிக்கிறது. இதைவிட அறிவு, வித்தை வேறு ஏது? என்றும் உள்ளவளாக, நாம் நம் அறிவால் அறிகிற அனைத்தையும்விட உயர்ந்த பரமாக, சிற்றறிவினரான நம்மையும் பேரறிவில் கரைக்கும் முக்திக்கு வித்தாக இருக்கிறவள் அவளே. நான் முதலில் அவளை மாயை, மோகம் என்றெல்லாம் சொன்னதற்கு நேர்மாறாக அவள் மாயாமோஹத்தை நீக்கி ஞானத்தை, மோக்ஷத்தை அளிப்பவள் என்றிப்போது பேசுகிறேனே என்று பார்க்கிறீர்களா? அவள்தான் எல்லாமும் என்றால் அப்புறம் இரண்டுவிதமாகவும் இருந்துதானே ஆகவேண்டும்? எனவே சம்சார பந்தம், அதன் நீக்கம் இரண்டுக்கும் அவள்தான் காரணம். சாதாரண மக்களை சம்சாரத்தில் கட்டிப் போடுவதுபோல் பிரம்மன் முதலிய மகத்தான ஈச்வரர்களையும் கட்டிப் போட்டு ஆள்கிற சர்வேச்வர ஈச்வரியும் அவளேதான். சாதாரண மக்களை விடுவிப்பதுபோல் விஷ்ணுவையும் கூட அவருக்காக ஏற்பட்ட பாலனத் தொழிலிருந்து விடுவித்து யோக நித்திரையில் தள்ளியவளும் இவளே!''

சுற்றிச் சுற்றி இந்த விஷ்ணுவின் கதைக்கே வந்தார் முனிவர். ஸுரதன், ஸமாதி என்ற இரு அசட்டுக் குழந்தைகளை எப்படியும் ஓரளவுக்காவது ஞானச் சமர்த்தாக்கிவிட வேண்டும் என்ற அருள்வெறி அவருக்கு வந்து விட்டது! 'ஸ்ரீ மகாவிஷ்ணு பரமஞானத்தை அருள முடியும் என்பது சர்வ நிச்சயமாகிலும்,

இவர்கள் அடிநாளிலிருந்து அறிந்திருக்கிற மகாலக்ஷ்மி நாயகன் இகபோக்கியங்களுக்கே அதிபதியாக இவர்களது மனத்தில் ஆழப்பதிந்திருக்கிறான். அவனை ஞான மயனாக மாற்றிக் கொள்ள இவர்களது பழக்க வாசனை விடாது. இவர்கள் போக மூர்த்தியாக நினைத்துவிட்ட ஒன்றையே இப்போது ஞானத் தேட்டத்துக்குத் தெய்வமாக வைக்க முடியாது. அது இவர்களது தோஷமே ஒழிய ஸ்ரீமந் நாராயணனின் தோஷம் அல்ல. ஆனால் நொந்து வந்திருக்கிற இந்தக் குழந்தைகளிடம் தோஷப் பத்திரிகை படிப்பதற்கில்லை. எனவே மன்னிப்பவருள் நிபுணனாகிய ('க்ஷமிணாம் வர:' என்பது விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் ஒரு திருநாமம் அல்லவா?) ஸ்ரீ மகா விஷ்ணுவின் பரம காருண்யத்தை நம்பி, இப்போது அவனையே சிறியவனாக்கி, அவனுக்கும் பெரியதாக ஒரு தெய்வத்தை இவர்களுக்குக் காட்டவேண்டும். அந்த தெய்வத்திடமே இவர்கள் ஞானத்தைத் தேடிப் போகுமாறு செய்ய வேண்டும். அப்போதுதான் பூர்வ வாசனைப் பழக்கம் இடையூறு செய்யாமல் இவர்கள் ஒருமுகமாகத் தங்களுக்கு ஞானத்தைப் பிரார்த்திக்க இயலும்."

இப்படிச் 'சூழ்ச்சி' செய்து விட்டார் முனிவர். எனவேதான் நமட்டுச் சிரிப்புடன் விஷ்ணுவைக்கூட ஒரு சக்தி ஆட்டிப் படைப்பதாக மறுபடியும் சொன்னார்.

அவர் நினைத்தபடியே நடந்தது. தங்களது தெய்வத்தையும் ஆட்டி வைக்கிற ஒரு சக்தி உள்ளது என்றவுடன் அதில் அவ்விருவர்க்கு ஆர்வ ஈடுபாடு உண்டாகி விட்டது.

ஆயினும் சமாதி இயல்புப்படி அடங்கியிருக்க, சமாதிக்காகவும் சேர்த்து அரசனே படபடத்துக் கேட்டான்: "பகவன்! இப்படி மகாமாயை, மகாமாயை என்கிறீர்களே, அவளைப் பற்றிய எல்லாவற்றையும்கூறி அருளுங்களேன்! அவளுடைய வரலாறு என்ன? எப்படித் தோன்றினாள்? என்னென்ன செய்தாள்? அவளுடைய பிரபாவங்கள் யாவை? அவளது திருவுருவ லக்ஷணங்கள் என்னென்ன? பிரம்ம வித்துக்களில் சிறந்த மகாத்மன்! அவளைப் பற்றி எல்லாவற்றையும் எங்களுக்கு சாங்கோபாங்கமாகச் சொல்லுங்கள்..."

விஷ்ணுவை அவள் ஆட்டிப் படைக்கும் விருத்தாந்தத்தை அறிவதே இவனது முக்கியமான ஆசை. ஆனாலும் ராஜஸ அகங்காரம் மறுபடியும் குறுக்கே வந்தது; தன் தெய்வம் அடக்கி ஆளப்படுவதை விண்டு கேட்பதா என்ற கூச்சம்!

''அவளைப் பற்றி எல்லாவற்றையும் எப்படிச் சொல்வது?'' என்றார் இவனை நன்கு ஆழம் கண்டு கொண்ட முனிவர். ''எல்லாச் சக்தியும் ஆகிய அவளை அவளன்றி வேறொருவரும் அறிய முடியாது என்றேனே? அவளது செயல், மகிமை இவற்றை முற்றிலும் அறிந்தாலன்றி, எல்லாவற்றையும் எப்படிக் கூறுவது? அவளுடைய உற்பத்தி, ஸ்வரூப லட்சணம் இவற்றைக் கேட்டாய். என்றும் இருக்கிறவளுக்கு உற்பத்தி ஏது? எல்லாமாக வியாபித்து நிற்பவளுக்கு உருவ லட்சணம் ஏது? ஆனாலும் உன்னையறியாமல் நீ கேட்டதிலும் ஓர் உண்மை இருக்கிறது. நல்ல தேவ சக்திகள், தீய அசுர சக்திகள் இரண்டுக்கும் அவளே காரணம் என்றாலும் , இந்தச் சக்திகளின் மோதல் நாடகம் கட்டுக் கடங்காமல் போய் இதில் தேவர்கள் அடியோடு நசித்துப் போக அவள் அநுமதிக்க மாட்டாள். அசுர சக்திகளின் கை ஓங்கி, தேவ சக்திகள் ஒடுங்கிப் போனபோது, தேவர்கள் தன்னைத் தேடி வந்து வேண்டுமாறு செய்வாள். பிறகு அவர்களது காரிய ஸித்தியின் பொருட்டு அசுரரை வதைப்பதற்கென, என்றுமுள தேவி புதிதாக ஒரு வடிவம் தாங்கி ஆவிர்பவிப்பாள். இதையே அந்த நித்திய வஸ்துவின் உற்பத்தி என்று வேண்டுமானால் சொல்லலாம். இப்படி ஆவிர்பவிக்கிற மூர்த்திக்கு உருவ லக்ஷணமும் உண்டுதான்.

''விஷ்ணு உறங்கினபோதுகூட பிரம்மன் வேண்டியபோது இப்படித் தான் அவள் உற்பவித்தாள், என் அருமை வத்ஸர்களே!'' என்றார்.

ஸுரதனும் ஸமாதியும் ஆர்வத்தின் ஒட்டு விளிம்புக்கே வந்து விட்டனர்.

இனியும் அவர்களைக் காக்க வைக்கலாகாது என்று முனிவரும் அந்தத் திவ்விய விருத்தாந்தத்தில் நேராக முழுகினார். பால் கறக்குமுன் சுரப்பு விடுவதற்காகச் சிறிது நேரம் பசுவின் மடியை நீவி விடுவர்; பிறகு சரசரவென்று பால் சுரக்கத் தொடங்கிவிடும். இத்தனை நேரம் தன் மனத்தையே நீவிக் கொண்ட முனிவர் மேதஸ், இப்போது பாலான வரலாற்றை மளமளவென்று பொழியத் தொடங்கிவிட்டார் — இந்த இரு வத்ஸர்களை உத்தேசித்து. 'வத்ஸ' என்றாலே கன்றுதான்!

4. மதுவை மாய்த்த மாதா

பிரளய சமயம்! உலகம் யாவும் அழிகிற கல்பப் பிரளயம். 'அழிகிற' என்றால் என்ன? அனைத்துக்கும் மூல வஸ்துவிடம் பிரபஞ்சமும் ஜீவர்களும் உருவின்றி, செயலின்றி, ஒடுங்கிப் போவதுதான். அதுவே பிரளயம். இத்தனை உருவங்களும், செயல்களும் இடையில் வந்தவைதாம்; உருவங்கள் மாறிக்கொண்டே இருந்தன: செயல்களும் மாறிக்கொண்டே இருந்தன. இத்தனை மாறுதலுக்குமிடை மாறாமலே இருந்தது மூல வஸ்து. அது ஆதாரமாக இருந்ததால்தான், அதன் சக்தியைக் கொண்டு இத்தனை உருவங்கள் ஏற்பட்டு அவை ஓயாத செயல் வெள்ளத்தில் உலைந்துகொண்டிருந்தன. இப்போது மூல சக்தி இந்த உருவங்களை உடைத்தெறிந்துவிட்டு, அவற்றின் மூலம் செய்த செயல்களையும் உடைத்து விட்டு, தன்னிலேயே சிருஷ்டி முழுவதையும் லயித்துக் கிடக்குமாறு செய்யத் திரு உளம் கொண்டுவிட்டது. இதை அழிவு என்கிற கோர கிருத்தியமாக எப்படிச் சொல்வது? ஜீவர்கள் யாவரும் சரீரம் என்கிற சுமையைப் பிளந்து தள்ளி விட்டு, செயல்படுகிற பாரத்தையும் ஒதுக்கி எறிந்துவிட்டு (சிந்திப்பதும் ஒரு செயல்தான். ஜீவனுக்கு மிக மிகப்பளுவான செயல் இதுவே) மூல மகாசக்தியின் அமைதியை மட்டும், மாறும் மனத்துக்கு அதீதமான ஒன்றால் அநுபவித்துக்கொண்டு அதிலேயே ஈட்டுண்டு கிடக்கப்போகிறார்கள்.

கர்மக்கட்டுக்குள் இவர்களை இறுக்கிய மானுட மனம் ஊழியில் உடையத் தொடங்கிவிட்டது. கர்மக்கட்டு தெறித்து விழ ஆரம்பித்துவிட்டது — பிரளய சக்தியின் வேகத்தில். ஆம், பிறந்து பிறந்து செத்து செத்து அவதிப்பட வேண்டிய மகா பாபிக்கும் கூட அப்போது கர்மக்கட்டு தெறித்து, அவனும் மூலத்தின் அமைதியில் லயிக்கத் தொடங்குகிறான்.

ஜீவர்களுக்கு தனி மனத்தை தந்த மூல சக்தியேதான், அத் தனி மனத்தினால் அவர்கள் தங்களைப் பாப மயமாக்கிக் கொண்டு முடிவேயில்லாத ஜனன-மரணச் சுழலில்

சிக்கிவிட்டதைக் கண்டு, மனம் இரங்கி இந்தப் பிரளயத்தை உண்டாக்கி இருக்கிறது. அவர்களை கர்மக்கட்டிலிருந்து விடுவித்து, தன்னுள்ளேயே இன்பமாக இசைந்து ஆறுதல் பெறச்செய்யவே ஊழி என்ற அழைப்பிதழை அனுப்பிவிட்டது.

எங்கும் கடல் பொங்கி வந்து உலகம் அழிகிறது. ஜீவ ராசிகள் மடிகின்றன. ஆனால் பிறப்புத் தோறும் அவர்கள் செத்தது போன்ற சாவு அல்ல இது. அப்போது ஒரு சாவினை அடுத்து இன்னொரு பிறப்பு என்று உண்டாயிற்று! மீண்டும் சம்சாரச் சகடத்தின் ஓயாத சுழற்சிக்கு ஆளாயினர். இந்த ஊழியிலோ அப்படி இல்லை. அவர்கள் தனி மனம் கொண்டு இயங்கத் தொடங்கியதிலிருந்து எத்தனை ஜன்ம ஜன்ம ஜன்மங்கள் எடுத்தார்களோ அதற்குச் சரிசமமான வெகு நீண்ட காலம் மூலத்தோடு லயிப்பில் சாந்தமாகக் கிடக்கப் போகிறார்கள்!

இதோ, அதிவேகத்தில் அனைத்தும் ஒடுங்குகின்றன. பிரபஞ்சம் நசிக்கிற போது பிரபஞ்ச பரிபாலகரான விஷ்ணுவுக்கு என்ன வேலை? அவர் நிம்மதியாக உறங்குகிறார். சாதாரண நித்திரையா அது? அல்ல. யோக நித்திரை.

பரிபாலனம் நடத்தும் காலத்திலும் இவர் யோக நித்திரை செய்து கொண்டேதான் இருந்தார். ஆனால் பரிபாலனத்தின் போது செய்த யோக நித்திரை வேறு; இப்போது பிரளயத்தின் போது செய்கிற யோக நித்திரை வேறு.

யோகம் என்றால் சேர்க்கை என்று பொருள். பிரளயமும் ஒரு விதமான சேர்க்கைதான் — மூலமும், அதிலிருந்து வந்த சிருஷ்டியும் மீண்டும் சேர்வது, லயிப்பது, விசேஷமாக லயிப்பது தான் ப்ர-லயம். இங்கே பிரபஞ்சம் இல்லை. பிரபஞ்சம் இருந்த போதும் விஷ்ணு யோகம் செய்தாரே, எதோடு சேர்ந்திருந்தார்? உலகத்து யோகியர் உலகை மறந்து பரத்தோடு சேர்ந்திருக்க யோகு புரிவர். விஷ்ணுவோ உலக நாடக லீலை நடக்க வேண்டும் என்பதற்காக அப்போது மாயையுடன் சேர்ந்திருந்தார். யோக மாயை என்றே அவரது நித்திரை சக்திக்கு அப்போது பெயர். தாம் குணமும் செயலுமற்ற பிரம்மம் என்பது மறந்ததுபோல் — அதாவது ஏகமான பிரம்மத்தைக் காணாமல் நித்திரை செய்வது போல் — சயனத் திருக்கோலம் கொண்டு, பலவான உலகை நடத்துவதற்காக மாயையுடன் கூடியிருந்த யோகத்தைச் செய்தார்.

ஆனால் இப்போதோ கற்பப் பிரளயம் ஆயிற்றே! இப்போது பிரபஞ்சம் மறைந்தே ஆக வேண்டும். எனவே இவர் எதையும் பரிபாலிப்பதற்கே இல்லை. ஆகையால் பிரபஞ்சத்தை

மறந்து போகிற நித்திரையை மேற்கொண்டு விட்டார்; ஏனைய யோகியர் போலவே, உள்ளுக்குள் ஏகமான பிரம்மத்துடன் சேர்ந்திருக்கும் யோகத்தைத் தொடங்கிவிட்டார்.

ஊழி வெள்ளத்தில் எல்லாம் ஒரே ஜலமயமாகிவிட்டது. பகவான், பிரபு, விஷ்ணு ஆதிசேஷ சயனத்தின் மீது யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கிறார்.

திடுமென அவரது செவிக்குளிருந்து அழுக்கு வெளிப்படுவது போல் இரண்டு அசுரர்கள் குதிக்கிறார்கள். அவர்களது பார்வை நேராக திருமாலின் நாபித் தாமரையில் அமர்ந்துள்ள பிரம்மனின் மீது விழுகிறது. உடனே மதோன்மத்தர்களாகி விடுகின்றனர்.

பிரம்மன் மீது பாய்கின்றனர்.

''நாங்கள்தாம் மதுவும் கைடபனும். மகாவிஷ்ணுவின் நாபிக் கமலத்தில் உட்காருகிற தகுதி எங்களுக்குத் தான் உண்டு. துர்பலனான உனக்கு இந்தக் கமலாசனத்தில் அமர ஏது யோக்கியதை?'' என்று அவர்கள் ஆர்ப்பரித்தனர்.

பிரம்மன் கலங்கினார். அவர்கள் கூறியபடி இவர் இப்போது துர்பலராகத் தான் இருந்தார். சிருஷ்டி யெல்லாம் ஒடுங்குவதால் இவரது சக்தியும் ஒடுங்கிக் கொண்டே வந்து விட்டது. அதைப் பற்றி இவரும் வருந்தவில்லை. காரியம் இல்லாத போது பலம் இல்லாவிட்டால் ஒன்றும் மோசமில்லை என்றே இருந்தார். உலகப் பரிபாலனச் சக்தியான மகாவிஷ்ணு இவரை விட ஞானத்தில் மிக உயர்ந்தவராகையால் உலகம் யாவும் ஒடுங்குகிறபோது, தமக்கும் பாலன காரியம் இல்லாததால் ஞான யோக நித்திரையிலேயே ஆழ்ந்து விட்டார். இவரோ தமக்குத் தொழில் இல்லாத போதிலும் பிரளய வேகத்தில் இவரது ஆற்றல் பெருமளவு உறிஞ்சப்பட்ட போதிலும் கூட பிரம்மத்தில் தோயாமல் வெளிப் பிரக்ஞையுடனேயே இருந்தார்.

துயிலுகிற நிலையிலும்கூட மகாவிஷ்ணுவை அணுகவில்லை அசுரரான மது-கைடபர். தூங்கும் சிங்கத்திடம் எவரேனும் சண்டைக்குப் போவார்களா? சிங்கமாக வன்மை காட்டாமல் சிங்காரக் களஞ்சியமாக மென்மை ததும்பவே பிரபு சயன சௌந்தர்யம் பாலித்தாலும் கூட அதை அசுரர்கள் அணுகத் துணியவில்லை. தூங்கும் சிங்கமாகவே நினைத்தார்கள். விழித்துக் கொண்டிருக்கும் மானையே வேட்டையாடப் போனார்கள். ''உன் இடத்தை விட்டு இறங்கு'' என்று பிரம்மாவின் மீது பாய்ந்து விட்டனர், மதுவும் கைடபனும்.

உடனே பிரம்ம தேவர் திருமாலின் உந்தியில் உதித்த தாமரைத் தண்டுக்குள்ளேயே விருவிருவென்று இறங்கினார். மகாவிஷ்ணுவின் சரீரத்துக்குள்ளேயே மறைவாக இருந்துவிடப் போகிறாரோ? அது நடவாத காரியம். இவரை நாபி வழியே வெளியே அனுப்பிய சக்தி உறங்கிக் கொண்டேஇருக்கிறது. அது மனம் வைத்தால்தான் இவர் உள்ளே இருக்க முடியும். இல்லாவிட்டால் நமக்கு இறுக்கத்தில் மூச்சு முட்டுவது போல இவருக்கு அங்கு வாழுவதும் கடினம்தான். ஏதோ சிறிது போது அங்கே சமாளித்துக் கொள்ளலாம். அதற்குள் அசுர பயத்திலிருந்து விடுபட வேண்டும்.

அனவரதமும் நான்கு முகங்களாலும் நான்மறைகளை ஓதிக் கொண்டேயிருந்தவர் அல்லவா பிரம்மா? அந்தப் புண்ணியம் இப்போது கை கொடுத்துவிட்டது. நான்மறைகள் இப்போது ஞான மூலத்துடன் ஒடுங்கி மறைந்து விட்டன. எனினும் அவற்றை ஓதிய புண்ணிய வசத்தால் பிரம்மாவுக்குத் தன்னைக் காக்கக்கூடிய ஒரே வழி புலப்பட்டது!

ஆதி மகா பராசக்தியிடம் தஞ்சம் புகுவதே அது! எந்தப் பிரளயமும் ஒடுக்க முடியாத நிரந்தரப் பூரண சக்தி அதுவே. பிரம்மம் எப்போதும் ஒரே போல உள்ளது எனில், அந்தப் பிரம்மத்தின் சக்தியும் எப்போதும் முழுமையுடன் இருந்து கொண்டேதானே இருக்கும்? அதைத்தான் தஞ்சம் புகுந்து துதித்தார் பிரம்மன். ஆனால் அதைப் பூரணமகா சக்தி என்பதைவிட, விஷ்ணுவின் யோக நித்திரா சக்தியாகவே குறிப்பாகக் கருதித் துதித்தார்.

நேராக விஷ்ணுவைப் பிரார்த்தித்து எழுப்ப முனையவில்லை பிரம்மா. ஏனெனில் பராசக்தியின் சங்கற்பப்படி நடக்கும் பிரளயத்தில் அதை அநுசரித்தே பாலனத்தை விட்டு யோகத்தில் ஆழ்ந்த அந்த மகா தர்மமூர்த்தி, இவ்வித கால தர்மத்துக்கு மாறாக இப்போது விழிப்புப் பெற்று பிரம்மனை ரக்ஷிக்கும் தொழிலை மேற்கொள்ளமாட்டார். எனவே இப்போது இவரது யோக நித்திரையாக ஆகி, இவரை வெளிப் பிரக்ஞையில்லாமல் செய்திருக்கும் ஆதி சக்தியையே பிரம்மன் சரண் புகுந்தார்.

ஆதிசக்தி பற்பல தொழில்களைப் புரியும் பல வேறு சிறு சக்திகளாகும்போது, இந்தத் தொழில்களால் நமக்குப் பயன் கிட்ட வேண்டுமெனின், இவற்றுக்குரிய தேவதையை வேண்டினாலே போதும் — ஆதிசக்தியிடம் போக வேண்டியதில்லை. எனவே,

சதுர்முகன் ஆதி சக்தியைக் குறிப்பாக விஷ்ணுவின் கண்களை மூட வைத்து அங்கு குடிகொண்டிருந்த யோக நித்ரா சக்தியாகவே கருதித் துதிக்கலானார்.

''இந்தத் திருமால் தாமாக உன்னைவிட இயலாது; நீதான் இவரைவிட்டு வெளிப் போந்து இணையற்ற இந்தத் தேஜஸ்விக்குரிய ஒளி மயமான பிரக்ஞையைத் தந்து என்னை இவர் பாலிக்குமாறு அருள் புரிய வேணும்'' எனத் துதித்தார். (உண்மையிலோ பிரம்மனின் விருப்பப்படித் திருமால் 'நித்திரை' கலைந்து ரக்ஷணத் தொழில் மேற்கொள்வதுதான் அவர் தற்போதுள்ள ஞான யோக ஸமாதியாம் பூரண ஒளிப் பிரக்ஞைக்குத் தாழ்வாக அவ்வொளியின் சில கீற்றுக்களே கொண்ட யோக மாயா சகித நித்திரை!)

'ஸப்தசதீ'யில் இங்கே காணப்படும் தோத்திரம் பரமாத்புதமானது.

''நீயே ஸ்வாஹா! நீயே ஸ்வதா'' என்று தோத்திரிக்கத் தொடங்குகிறார் நான்முகன்.

தேவர்களுக்கு ஆஹுதி செலுத்துகையில் 'ஸ்வாஹா' என்றே கூறுவர். பித்ருக்களுக்குரிய சிராத்தம் முதலியவற்றில் ''ஸ்வாஹா'' க்குப் பதில் ''ஸ்வதா'' என்பர். எடுத்த எடுப்பில் பிரம்மன் இவ்விருவரையும் கூறக் காரணம் இருந்தது. ''ஸ்வாஹா'' என்று தேவருக்கு ஆஹுதிகள் செய்வதே வேத வழிபாட்டு முறை. இவரும் இதுகாறும் ஆபத்துக்கள் வந்த போது தேவகாரிய நிமித்தமாக வேள்விகள் செய்து 'ஸ்வாஹா' சொல்லியே பராசக்தியை வழிபட்டிருக்கிறார். இன்றைக்கு, இந்தப் பிரளயத்தில் வேள்வி செய்ய வஸ்துக்களும் இல்லை! வேதியரும் இல்லை. வேதமும் இல்லை. எனவே மானஸிக யாகமாக, 'ஸ்வாஹா' என்ற ஒரு சொல்லாலேயே தேவி யாகம் செய்து விடுகிறார் பிரம்மன். மிகுந்த இடுக்கண் ஏற்பட்டு, வேண்டுகிற காலத்திலும்கூட வைதிக மரபுப்படியே வழிபட வேண்டும் என்பதில் தெய்வங்களுக்கும் எத்துணை சிரத்தை!

அடுத்து ''ஸ்வதா'' என்றார். இது பித்ருக்களைத் திருப்தி செய்யும் சொல். ஏனைய மக்களுக்குத் தெய்வம் வேறு, பிதிரர் வேறு. பிரம்மனுக்கு அப்படி இல்லையே. அகிலாண்ட ஜனனியே தம் அன்னை என்பது அவர் அறிந்ததன்றோ? அவளைக் குறித்து மகனாகிய அவர் ''ஸ்வதா'' காரம் செய்வதே வேத விதியல்லவா? அதுவுமின்றி இவரது நேர்ப் பிதாவான திருமாலும் உணர்வின்றி உறக்கத்தில் இருக்கிறார்.

மானுடர்களின் நித்திரையை நித்தியப் பிரளயம் என்றும், அப்போது அவர்கள் உள்ள நிலையையும் ஒரு விதத்தில் மரணத்துக்கு ஒப்பானது என்றும் கூறுவர். தன் தந்தையாகிய திருமால் இப்படித்தான் உள்ளாரோ? இப்போது அவரது ஆவியின் திருப்திக்கு ''ஸ்வதா'' கூறி சிராத்தாஞ்சலி செய்ய வேண்டுமோ என்று எண்ணி விட்டார் போலும், பயபீதியில் கலங்கிய அயன்!

இது மேம்போக்கான விளக்கம். ஆழப்புகுந்து பார்ப்போம்: ''ஸ்வாஹா''-ஸ்வ ஆஹ-என்பது 'தானே பேசிய பேச்சு' என்று பொருள்படும். அதாவது பராசக்தி தனக்குத்தானே தந்து கொண்ட சப்த விளக்கமே இந்தப் பிரபஞ்சமாக விரிந்தது. பிரபஞ்ச சிருஷ்டி ஒரு வேள்வியே. 'புருஷ ஸூக்தம்' அப்படித் தான் சொல்கிறது. தன் அகண்டமான சக்தியைத் துண்டு துண்டாக்கிப் பலி தந்து கொண்டு பிரபஞ்ச லீலை என்கிற வேள்வியைப் புரிகிறாள்! ''ஸ்வாஹா'' வில் உள்ள 'ஆஹ'வுக்கும் வேள்வியில் அக்கினிக்கு அளிக்கப்படும் 'ஆஹுதி'க்கும் மிகவும் பொருத்தமுண்டு. பராசக்தியின் வெளிப்பாடு ஒவ்வொன்றும் ஒரு விதத்தில் அவளை விளக்குகிறது எனில் இன்னொரு விதத்தில் அவளை அழிப்பதுமாகும்; ஒவ்வொரு வஸ்துவும் சிறிய ரூபத்தில் அவளை விளக்கி பெரிய ரூபத்தில் அவளை அழிக்கின்றது. அழிவு, விளக்கம் இரண்டும் கைகோத்து உலவுகின்றன. வேள்வியில் ஆஹுதியாகும் பொருள் ஒரு விதத்தில் எரிந்து அழிந்தாலும் மற்றொரு விதத்தில் அது புது விளக்கமுற்று தெய்விகம் பெற்று, தேவதைகளை அடைகிறது! இப்படி வேள்வி செய்ய வேண்டும் என்று தானாகவே எதுவோ ஒன்று வேத ரிஷிகளிடம் பேசிவிட்டது. பராசக்தியின் க்ருபைதான் அப்படித் தானாகப் பேசிற்று: 'ஸ்வ ஆஹ'! அந்தக் கருணையைப் பெண்ணாக நீட்டும்போது 'ஸ்வாஹா' ஆயிற்று. இதுவே ஆஹுதிகளைப் பெறும் அக்னி பகவானின் சக்தி, அதாவது அவனது சதி அவளே என்று வைத்தனர்.

'ஸ்வதா' என்றால் தன்னியல்பாக ஏற்பட்டது — ஸ்வாபாவிகமாக ஏற்பட்டது என்றே அர்த்தம். Natural, spontaneous என்றெல்லாம் சொல்வது இதுவே. பிதிருக்களுக்குச் சந்ததியைப் பெருக்குகிற ஆசையும், அந்த ஆசையைக் காரியமாக்கும் ஆற்றலும் தாமாக உதித்தவைதாம். ('தானாக' 'தானாக' என்றாலும் எல்லாமே இறுதியில் பராசக்தியின் சங்கற்பத்தில் சேதன்றியவைதான். இங்கே விவகார நோக்கிலேயே சொல்கிறோம்.) பிதிரு கடன் செய்ய வேண்டும்

என்ற அன்பான நன்றி உணர்வு மக்களுக்குப் பிறப்பதும், இதை மூதாதையினரின் ஆவிகள் பரிந்து பெற்றுத் திருப்தி கொள்வதும் — இவை எல்லாமே இயல்பாகப் பொங்கி வருகிற விஷயங்களாகவே உள்ளன. செயற்கை அம்சமாக, ஏதோ ஒரு வெளிவிதிக்கு, கட்டுப்பாட்டுக்குப் பயந்து செய்கிற காரியங்களாக இல்லை. எனவே இது 'ஸ்வதா'. தத்துவ ரீதியில் இந்தப் பிரபஞ்ச வாழ்வனைத்துமே பராசக்தி ஸ்வயமாகத் தனக்குத்தானே தந்துகொண்ட 'ஸ்வதா' தான்! அவளுக்குப் பிரபஞ்சம் செலுத்தும் வழிபாடும் 'ஸ்வதா'வே!

தேவதா சரீரங்கள் முக்கியமாக ஒலி மாத்திரமே ஆனபடியால் ஸ்வாஹா, ஸ்வதா, வஷட், ஸ்வரம், பிரணவம், அதன் மாத்திரைகள் ஆகியனவாகவே தேவியை முதற்கண் உணர்ந்து துதித்தார் சதுர்முகத்தால் சதுர் வேதம் மொழிந்தே சிருஷ்டி புரிபவர்.

''உன் சிறப்பை எவரும் எடுத்தோத இயலாதம்மா! இகத்தையும் பரத்தையும் சேர்க்கிற சந்தி ஆகிய நீ இருளும் ஒளியும் சேரும் இடைவெளியில் சந்தியாவாக நிற்கிறாய்! சூரிய ஒளியாக உலக வாழ்வினைப் படைக்கும் சாவித்திரியாகிறாய்! அந்தச் சூரியன் உட்பட விசுவமனைத்தையும் ஆக்கியவளும் தாங்குபவளும் ஒப்புயர்வற்ற தாயான நீயேதான்! நீயே படைத்து பாலனம் செய்த விசுவத்தைப் பிரளயத்தின்போது நீயே உண்டும் விடுகிறாய்! சிருஷ்டி - ஸ்திதி - ஸம்ஹாரம் யாவும் உனது உருவங்களேதானம்மா! எதிரெதிர்ச் சக்திகளும் உன்னிடமிருந்தே வந்தவைதான். பிரம்ம ஞானமாகவும், பராசக்தியை அநுபவிக்கும் மகாவித்தைகளாகவும் இருக்கிற நீயேதான், உனது மகாமாயையால் இல்லாததை எல்லாம் இருப்பதாக எண்ணி கலக்கமுறும் பிரமையைத் தருகிறாய். உன் புத்தியின் மகத்துவம் எவரே அறிவார்? அந்த புத்தி மகத்துவத்தின் ஒரு லவலேசத்தை அடியேனுக்கும் நீ உவந்தளித்திருப்பதை என்னென்பேன்? இதனால்தானே கற்பப் பிரளய காலம் முடிந்து, மறு சிருஷ்டி தொடங்கும் போது, நான் சிறிதும் நினைவு தப்பாமல் இப்போது ஒடுங்கிவிட்ட ஜீவர்களை எல்லாம் மறுபடி அவரவர் வினைப்படி பிறப்பிக்க முடிகிறது? இது உன் ஆணை என்று நான் அறிவேன். இதன்படி இந்தப் பிரளயத்தில் மது-கைடபர் என்னைக் கொல்லாவிடினும், நானாகச் சிறிது சிறிதாக என் தனிச் சக்தியை எல்லாம் இழந்து உன்னிடம் ஒடுங்கத்தான் வேண்டும். சத்வஞான மூர்த்தியான விஷ்ணு அநாயாசமாக இந்தத் தியாகத்தை மேற்கொண்டு உன்னில், அதாவது தன்னிலேயே ஒடுங்கிக்

கொண்டுவிட்டார். ரஜோகுண வேகம் மிகுந்த எனக்கோ அந்த சரணாகத நிலை சித்திக்கவில்லை. இந்த மோகத்தை என்னென்பேன்? மறு கற்பத்தில் சிருஷ்டிக்க வேண்டியது என் கடமையாதலால் எப்படியும் நீ என்னை உயிர்ப்பித்து வெளியே அனுப்ப வேண்டியபோது அனுப்பியே தீருவாய். நான் வேண்டிக்கொள்ள அவசியமே இல்லை. ஆயினும் இந்த மது-கைடபரால் மரண பீதியுற்று உன்னிடம் வந்து முறையிடுகிறேனே, இந்த மகா மோகத்தை என்னென்பேன்? இந்த மாமோகமும் நீதான்! என்னைப் போன்ற தேவர்களாகி ஒரு விதத்தில் மோஹமுறுகிறாய்! இந்த மது-கைடபர்போல் அசுரராகி அதனினும் கொடிய மோகத்திலும் விழுகிறாய்! இந்த விஷ்ணுவின் சத்துவ சாந்த வெண்மையும், என்னுடைய ரஜோகுண வேகச் சிவப்பும், இவ்வசுரரின் தமோகுண அஞ்ஞானக் கறுப்பும் எல்லாம் உன்னுடையவைதாம். இதிலும் விந்தை, விசித்திரம் செய்கிறாய்! விஷ்ணு மூர்த்தி என் துயரைப் பாராமலும், என் குறை தீர்க்காமலும் இருப்பதால், அவரது சத்துவமயமான யோக நித்திரைச் சத்தியான நீ எனக்கு தமோ குணமாகவே தோன்றுகிறாய்! பொதுவாக, நித்திரை தமஸின் காரியம் தானே? அதோடு தமோகுண மது-கைடபரைப் பிறப்பித்தவளும் ஆயிற்றே! ஆமாமடி தாயே! உன்னை ''தாமஸீ'' என்றே தமோ வடிவாக எனது உள் மனம் அழைக்கிறது. இந்த மாயையை, மோகத்தை மெய் என்று வலுப்படுத்துவது போல், ஸத்வ மூர்த்தியான விஷ்ணுவுக்குத் தமஸின் கார் வண்ணத்தைத் தந்திருக்கிறாய். முக்குணங்களையும் இயக்கும் உன் திருவிளையாடல் இப்படி இருக்கிறது!

''சாவைக் கண்டு ஏன் அஞ்சுகிறேன்? நான் படைப்பதெல்லாம் சாகிறதே! எனக்கு மட்டும் சாவு நேரக்கூடததா? ஆம், எனக்கும் எத்துணையோ கற்பங்களுக்குப் பின் மரணம் ஏற்படத்தான் போகிறது. பலப் பல பேருக்கு, பலப் பல வித மரணங்களைத் தருகிறவள் நீ! ஒவ்வொரு பிறவியிலும் காலனாக வந்து, ஒரு சரீரத்தின் காலம் முடிகிறபோது, அந்த வாழ்வு முழுவதையும் இருட்டிப் போகச் செய்கிற காலராத்ரி நீயே! இவ்விதம் செத்தும் கர்மத்திலிருந்து விடுபடாமல் மறுபடி பிறக்கிறார்கள்! அப்படிக்கின்றி அனைத்துயிர்க்கும், கர்மக்கட்டிலிருந்து நீண்ட விடுதலை தருகிற பிரளய மகாராத்திரியாகவும் இப்போது வந்திருக்கிறாய். இப்போது மற்றவர்களுக்கு மோக இருள் போய்விட்ட போதிலும் அடியேனுக்கு மட்டும் இந்த விநாடியும் கூட மோகராத்திரி யாக இருக்கும் உன் புதிரை என்ன சொல்வேன்? இத்தனை வக்கணையாகப் பேசினாலும் எனக்கு இப்போது

பயம் ஒன்றே உள் மனத்திலே பிரதானமாக உள்ளது. அந்தப் பயமும் நீயே என்பதால் உன்னை பயங்கரியாக எண்ணி நடுங்குகிறேன். இல்லை....இல்லை! அழகும் பிரேமையும் மிகுந்த என் அன்னையான ஸ்ரீ லக்ஷ்மி, அவளும் நீதானே? ஆனால் இப்போது அவளும் என் பிதாவோடு சேர்ந்து உன்னில் ஒடுங்கிவிட்டாள்*. சர்வ ஆதிபத்தியம் பெற்றும் எங்கள் முன் தோன்றாமல் நாணத்துடன் ஒளிந்து கொள்ளும் 'ஹ்ரீ'யாகவும் இருக்கிறாய்! இப்படியெல்லாம் நீ இருப்பதற்குக் காரணம் இருந்தே தீரும். ஏனெனில் ஞான லட்சணம் பூரணமாகப் பெற்ற புத்தி உன்னுடையதேயன்றோ? அதன் காரணங்களை நாங்கள் எப்படி அறிவோம்? ஒளிந்துள்ள உன் நாணத்திலும் வெளிப் பொங்கும் ஒரு செழுமை இருக்கத்தான் செய்கிறது. நீ எங்களைச் சோதிப்பதாகத் தோன்றினாலும் உண்மையில் நீ அன்பு அன்னையே! உன்னைத் தவறாக எண்ணும் எங்களையும் மன்னித்தருளும் பொறுமை வடிவமாக இருக்கிறாய். நாங்கள் எது செய்தாலும் பொறுத்துக் கொண்டு ஆனந்தத் திருப்தி வடிவமாகவே நீ இலங்குகிறாய்....''

போற்று முகமாக துதி செய்யத் தொடங்கிய பிரம்மன் மாறாக அதுவே அவளது பெருமைக்கு இழுக்குக் கற்பிக்கிறது எனக் கண்டான். தமது துர்தசைக்கான காரணங்களை எத்தனை சமத்காரமாக அவள் மீதே மோகம், மாயை, ராத்திரி, பயங்கரி என்ற பெயர்களில் சுமத்தினாலும் இது அபசாரம் அன்றி வேறென்ன? அப்படியும் அவள் பொறுத்துக் கொள்கிறாள். அவளுக்குத் துதியால்தானா திருப்தி பிறக்க வேண்டும்? அவளே நித்திய திருப்தி ஸ்வரூபமன்றோ? அவளைத் திருப்தி செய்து காரியம் சாதித்துக் கொள்ள முயல்வது எத்தனை அறிவீனம்? காரியம் நடத்திக் கொள்வதற்காக துதிப்பது எத்தனை அசட்டுத்தனம்?

''தேவீ பாகவதம்'' இங்கே மேலும் ஒருபடி செல்கிறது. விஷ்ணுவை அம்பிகையின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து உலகைப் பரிபாலிக்கும் அதிகாரியாக மட்டும் கருதும் ''தேவீ பாகவதம்'' அவர் தர்ம ஸ்வரூபி என்பதையும் பிரளய தர்மப்படி நித்திரா சக்தியால் ஆட்கொள்ளப்பட்டார் என்றும் கூறும். எனவே, இவரிடம் துதிப்பதில் பயனில்லை என்று பிரம்மன் ஆதிபராசக்தியைத் துதிக்கிறார். இதுவும் வெகு அழகான துதியாக அமைந்துள்ளது. இதிலே அம்பிகை ஒரு பால லீலை

---

* திருமகளும் திருமாலோடு கூடப் பிரளயத்தில் ஒடுக்கமுற்றதற்காக பிரமன் பரிதவித்ததை ''தேவீ பாகவதம்'' வெளிப்படக் கூறுகிறது.

செய்வது போல் நானாவித நாட்டியம் செய்து உலக நாடகத்தை நடத்துவதாகச் சொல்கிறார். கடைசியில் நாடகப் பாத்திரங்களும் நாடக ஆசிரியரும் ஒருவரே என்று தெளிகிறார். இந்த நிலையில் இவர் ஏன் அவளைப் பிரார்த்திக்க வேண்டும்? அவள் இச்சைப்படியே நடக்கட்டுமே! ''பகவதி! நீதான் ஒரு காலத்தில் விஷ்ணுவைப் படைத்து உலகைக் காக்கும் பேராற்றலை வழங்கினாய்! நீயேதான் இப்போது அவரைச் செயலற்று உறங்கச் செய்திருக்கிறாய்! அடியேனையும் நீயேதான் ஒரு காலத்தில் விரும்பிப் படைத்துப் படைப்புக் கடவுளாக வைத்தாய். இப்போது அழிப்பாயாகில் எப்படி மறுப்பது? எனக்கு ஆட்சேபிக்கிற தகுதியில்லை என்பதை நான் உணர்ந்திருக்கிறேனா என்று பரீட்சித்துப் பார்க்கவே இவ்விரு அசுரர்களை இப்போது படைத்து அனுப்பி இருக்கிறாயா? அம்மா, உன் அற்புத விளையாட்டை ஓரளவு இப்போதே புரிந்து கொண்டேன். படைத்ததை எல்லாம் அழித்து விளையாடும் நீ என் விஷயத்திலும் இதே விளையாட்டைச் செய்யத் திரு உளம் பற்றினால் எவர் ஆட்சேபிக்க இயலும்? தாயே, உன் இச்சைப்படி அடியேனை வதைத்தருளுவாய். உன் திவ்விய சங்கற்பப்படி மரணமுறுவதில் எனக்கு சிறிதும் துயரில்லை. ஆனால்.... ஆனால்... உன்னிடம் எனக்குள்ள அன்பு காரணமாக ஒரே ஒரு நிபந்தனை விதிக்கிறேன்: அதாவது, நீயே நேரில் வந்து என்னை சம்ஹாரம் செய்யம்மா! இந்த அசுரர்கள் என்னை வதைக்க வேண்டாம்! அவுணர் கையால் மாளுவதை எனக்கு இழுக்காக எண்ணவில்லை. என் நிமித்தமாக உனக்கே இழுக்குக் கற்பித்து உலகம் பேசக்கூடாது என்பதாலேயே இப்படிக் கேட்டுக் கொள்கிறேன். அசுரர் என்னை வதைத்தால், அடுத்த கல்பத்தில் ரிஷிகள் இந்த விருத்தாந்தத்தையும் தங்களது அநீத யோகச் சக்தியால் அறிந்து உலகுக்கு வெளியிடுவார்களே! அப்போது சாமானிய மாந்தர் என்ன சொல்வர்? 'அம்பிகை எவனுக்கு படைப்புத் தொழில் என்கிற பேரதிகாரத்தைத் தந்து பெரும் கிருபை செய்தாளோ, அந்தப் பிரம்மனை அசுரர்கள் கொன்று போட்டனர். அவர்களைத் தடை செய்ய அம்பிகையாலும் ஆகவில்லை' என்று பாமர மக்கள் சொல்வார்களே! உனக்கு கீர்த்தியிலும் அபகீர்த்தியிலும் பற்றில்லா விடினும், என் பொருட்டு உனக்கு இந்த அபக்கியாதி வருவது எனக்குச் சகிக்குமா? எனவே.... என் தாயே, நீயே வா! இந்த அசுரரையோ என்னையோ வதம் செய். அல்லது குறைந்த பட்சம் என் பிதா விஷ்ணுவையாவது விழிப்புறச் செய்து அவர் மூலம் இரண்டில் ஒன்றைச் செய்வித்தருளம்மா.''

— இது பாகவதம் கூறுகிற கதை.

தேவீ பாகவதத்திலேயே பத்தாம் ஸ்கந்தத்தில் இரண்டாம் முறையாக இவ்வரலாறு கூறப்படும் போதும் ஓர் அழகிய துதி பிரம்மன் மூலமாக வெளியாகிறது. இத்துதியில் ஒன்றிலிருந்து பதினாறு (அதுவே பூரண கலை) வரையில் உள்ள எண்களில் அம்பிகை துதிக்கப்படுகிறாள் — ஏகமான சத்தியமே! ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டாகிறவளே! மூன்று வேத மூர்த்தியே! (அதர்வணத்தை நீக்கி மூன்று வேதம் என்றே சொல்வது வழக்கம்.) மும்மைகளைக் கடந்த நான்காவதான துரீயமே! ஐம்பூதமானவளே!... என்று இப்படியே போகிறது இந்தத் தோத்திரம்.

அன்னை அயனுக்கு அருள் புரிய திருவுளம் பற்றினாள்.

பிரம்மன் முன் பிரஸன்னமானாள்.

ஆகா! அப்போது ஆதி பராசக்தி கொண்டிருந்த திருவுருவத்தைத்தான் என்னென்பது?

காலமும் முடிகிற பிரளயத்தில் காளியாக, மகாகாளியாக ஆவிர்பவித்தாள்.

பேரூழியின் காரிருளையும் விடக் கன்னங்கரிய திருஉரு! ஆயினும் கறுப்பிலேயே நெருப்பினும் மிக்க ஒளி! காளியாக உற்பவித்து விட்டது பரப்பிரம்ம சக்தி! விசித்திர வடிவம்! பத்து முகங்கள், பத்துக் கைகள், பத்துப் பாதங்கள்! ஒவ்வொரு திருமுகத்திலும் மூன்று நயனங்கள். சர்வாலங்கார பூஷிதையாக எழுந்தருளியிருக்கிறாள். வலப்புற கீழ்க்கரத்திலிருந்து தொடங்கி இடது புறக் கீழ்க்கரம் வரையில் தனது பத்துக் கைகளிலும் வரிசையாகக் கத்தி, அம்பு, கதை, சூலம், சக்கரம், சங்கம், புசுண்டி (கவண்), பரிகம் (குண்டாந்தடி), வில், அறுபட்டுக் குருதி கொட்டும் தலை இவற்றைத் தரித்திருக்கிறாள். அவள் அட்டஹாஸம் புரிகையில் பற்களும், தெற்றுப் பற்களும் மின்னல்கட்டிகளாகப் பளபளக்கின்றன.

ஆனால் இவளைக் கண்டதும் பிரம்மனுக்குச் சற்றேனும் பயமோ, அருவருப்போ ஏற்பட வேண்டுமே! மாறாக அவரது அச்சம் அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் ஓட்டம் பிடிக்கிறது. தாம் "தாமஸீ" என்று அழைத்ததாலேயே தம் வார்த்தையை மதித்து குணாதீத மஹாசக்தி இப்படி தாமஸ ரூபம் கொண்டாளே என்று அன்பில் உருகினார்.

மகா காளி ரூப சம்பத்தின் உறைவிடம்; பரம சௌபாக்கியவதி; அன்பினால் பற்றி இழுக்கும் ஒளி படைத்தவள் என்பார் ரிஷி மேதஸ்.

பிரம்மனுக்கு இப்படி அழகு வடிவாகவே, அன்பு வடிவாகவே அவள் தெரிந்தாள். ''சந்திரன் போலக் குளிர்ந்திருந்திருக்கும் சௌம்யே! இல்லை, தண் மதியையும்விட அழகாக, இனிமையாக, குளிர்ச்சியாக இருக்கும் தாயே! மதுர வஸ்துக்கள் அனைத்துள்ளும் பரம மதுரமான மஹா சுந்தரி'' என்று ('ஸப்தசதி'யில் வரும்) துதியைத் தொடரலானார்.

''அம்மா, எதிரே வந்து விட்ட உன்னைத் தோத்திரம் செய்ய ஆசை முற்றுகிறது. ஆனால் உன்னை எப்படித் துதிக்க இயலும்? அப்பாலும் , அப்பாலுக்கு அப்பாலும் — அதே போதில் இப்பாலும் உள்ள உன்னை என்னவென்று வரையறுத்து எப்படி வர்ணிப்பேன்? உள்ளதனைத்தும், இல்லாததனைத்தும் உன் சக்தியே. எக்காலத்திலும் எவ்விடத்திலும் உள்ள எல்லாவற்றுக்கும் சக்தியாக விளங்கும் உன் மகிமைக்கு உரிய முறையில் துதி செய்வது எப்படிக் கைகூடும்? ஒருக்கால் மகாவிஷ்ணு உன் மகிமை அறிந்து துதிக்கக் கூடும். ஆனால் அவரையும் நித்திரையில் ஆழ்த்தி இருக்கிறாயே! பரப்பிரம்ம சக்தியான உன் பிரபஞ்சநாடகத்தைச் செய்யவே சிருஷ்டிகர்த்தா என்கிற பெயரில் நானும், பாலனகர்த்தா என்கிற பெயரில் திருமாலும், சம்ஹர்த்தா என்கிற பெயரில் ஈசனான ருத்திரனும் தேகம் தாங்கியிருக்கிறோம். உனது ஒவ்வோர் அம்சமேயான எங்களுக்கும் உன் பூரணப் பெருமை தெரியாதாகையால் துதிப்பது எப்படி? உதார குணங்கொண்ட நீ எங்கள் புன்மொழிகளையும் துதியாக ஏற்று அருள்புரிகிறாயல்லவா, அந்த அருளே தான் உன் புகழைச் சொல்லும் உண்மையான துதி!

''உன்னைத் துதித்ததாக என்னை நானே திருப்தி செய்து கொள்கிறேன். தேவீ பராசக்தி! உன்னிடம் ஏதும் கோரத் தேவை இல்லை என்றேன். ஆனால் இதோ நீ அன்புருவாக வந்து நின்று, என் கோரிக்கையை நிறைவேற்றச் சங்கற்பித்து விட்டாய். எனவே என் அரைகுறை ஞானத்தையும் சரணாகதியையும் பறிகொடுத்துவிட்டு அஞ்ஞான பாலனாக ஆகி உனக்கு நான் கோரிக்கை விடுக்கிறேன். வெல்லவொண்ணாத இந்த மது-கைடபர்களை நீயே மோகிக்கச் செய்யவேண்டும். ஜகந்நாதன் விழிப்புற்று எழவும் நீயே அருள் கூர வேண்டும். விழித்தெழுந்த அச்சுதனுக்கு இவ்வசுரர்களை சம்ஹாரம் செய்கிற விருப்பத்தையும் நீதான் தோற்றுவிக்க வேண்டும்.''

பிரம்மனின் பிரார்த்தனை பொருள் படைத்தது. ''அசுரர்களை மோகிக்கச்செய்'' என்று அவர் வேண்டியதற்குக் காரணம் உண்டு. பக்தியினால் அவரது அகம் பரிசுத்தம் பெறப் பெற, அவருக்கு

ரகசியங்கள் பல வெளிப்படுகின்றன. அவற்றில் ஒன்று இந்த மதுவும் கைடபனும் தாமே உடன்பட்டாலன்றி இவர்களுக்கு மரணமில்லை என்பதாகும். விஷ்ணுவாகட்டும், அல்லது வேறு யார்தான் ஆகட்டும், இவ்வசுரரைக் கொல்லவேண்டுமாயின் இவர்களே அதற்குச் சம்மதித்தால்தான் முடியும். அப்படிப்பட்ட வர பலம் மது-கைடபருக்கு இருந்தது. சாவதற்கு எவரேனும் சம்மதிப்பரா? அதுவும் பிரம்மனின் ஸ்தானத்தைப் பெற்று வாழ ஆசைப்படும் அசுரர் அதற்கு இணங்குவரா? எனவேதான் மகாகாளியிடம் அவர்களே இணங்குமாறு மயங்கச் செய்யவேண்டும் என்று வேண்டுகிறார் விதாதா.

ஜகத் அழியும் பிரளயத்தில் ஜகந்நாதன் தம் தர்மப்படி உறங்கிக் கொண்டேதான் கிடப்பார்! எனவே அவரைப் பிரம்மசக்தி தான் எழுப்பவேண்டும் என்பது அடுத்த பிரார்த்தனை.

'விழித்தெழுந்த விஷ்ணு மது-கைடபரை வதைக்க எண்ணம் கொள்ளவேண்டுமே!' என்ற ஐயமும் எழுகிறது, சதுர்முகனுக்கு. பக்த ரட்சணமும், அதற்காக அசத்துக்களைச் சம்ஹரிப்பதும் திருமாலின் உடன் பிறந்த திவ்விய குணமாயிருக்கையில் பிரம்மன் இப்படி ஐயுறலாமா? இதற்கும் காரணம் இருந்தது. தீயோரை வதைத்து தூயோரைக் காப்பேன் என்று நாராயணமூர்த்தி சத்தியம் செய்தது பிரபஞ்ச விவகாரம் நடக்கிற நிலையில் தான். பிரளய காலத்தில் அவர் என்ன செய்வாரோ, எப்படிச் சொல்ல முடியும்? காலதர்மம் வேறாக இருப்பின் பிரம்மனிடம் தமக்குப் பொங்கும் அன்பையும் அழித்துக்கொண்டு வெறுமே இருந்துவிடுவார் தர்மமூர்த்தியாகிய விஷ்ணு. எனவேதான், ''விஷ்ணுவின் சித்தத்தை மதுகைடப வதத்தில் திருப்பிவிடு'' என்று அம்பாளையே கோருகிறார் சதுர்முகர்.

பிரம்மாவுக்கும் தர்ம உணர்வு நிரம்ப உள்ளது! அதனால் தான் நேரில் வெளிப்பட்ட பராசக்தியிடம், ''நீயே இப்பொழுதே இந்த அரக்கர்களை வதைத்து விடு'' என்று கோராமல், விஷ்ணுவை எழுப்பி விஷ்ணுவின் மூலமாகவே அக்காரியம் நடக்கப் பிரார்த்திக்கிறார். 'அசுர சம்ஹாரத்தை விஷ்ணுவே நடத்திவிட முடியும்; பிள்ளையாகிய தன்னைக் காப்பாற்ற அவர் கடமைப்பட்டும் இருக்கிறார். அப்படியிருக்க ஆதி மகாசக்தியை மெனக்கெடுத்துவானேன்?' என்று எண்ணுகிறார் போலும்! இங்கே அவர் தேவியை ''அம்மா'' என்று அன்பில் நெருங்கி எண்ணுவதைவிட, மகத்தான பிரம்மத்தின் மகத்தான சக்தி என்றே மரியாதையில் ஒதுங்கி

நிற்கிறார். திருமாலையோ தந்தை என்று சுவாதீனத்தோடு கருதுகிறார்.

பிரம்மன் வரங்கள் கேட்டவுடன் காளிமாதா மறைந்தாள். அதேபோதில் அதே காளியின் வடிவுடன் திருமாலின் திருமேனியிலிருந்து தாமஸீதேவி என்கிற யோக நித்ராசக்தி வெளிப்பட்டாள். அவளேதான் இவள்.

திருமாலின் துயிலும் நயனங்களில் மட்டுமே அவள் குடி புகுந்திருப்பதாக நினைத்து பிரம்மன் துதித்தார். ஆனால் அவளோ அவரது சர்வ அங்கங்களிலும் வியாபித்திருக்கிறாள்! கண்களை மட்டுமின்றி ஒருவரது ஸகல இந்திரியங்களையும் மூடியிருப்பதல்லவோ நித்திரை எனும் தமோ சக்தி? இதுவோ அஞ்ஞானத் தமஸ் அன்று; அதிசயமான ஞானத் தமஸ்! பச்சைமாமலை போன்ற அந்த திவ்விய மேனி முழுவதிலும் இப்போது மெல்லலை வீசுவது போல், மயிர்க் கூச்சு உண்டாவது போல் ஓர் அதிர்வு உண்டாயிற்று. உடனே தாமரைத் தண்டினுள் பதுங்கியிருந்த சதுர்முகன் வெளியே வந்து, கமல மத்தியில் அமர்ந்து, பக்தி புஞ்சிதமாகத் தன் பிதாவின் சுந்தர சரீரத்தில் பார்வையை முழுக்கினார். புண்டரீகாக்ஷனின் கூம்பிய கமலம் போன்ற அந்தக் கண்கள், எடுப்பான நாசி, திண்ணிய புஜம், கடைந்தெடுத்த திருமார்பு, அந்த மார்பின் நடுவே அடங்கி லேசாகத் துடிக்கும் இதயம், என்றிப்படி பகவானின் பாதாதி கேசம் சகல அங்கங்களிலுமிருந்து ஒரு நீல ஒளி வெளிவந்தது. வெளி வருகையிலேயே ஒன்றாக இறுகி தாமஸீதேவியாக நின்றது.

க்ஷணகால தரிசனம்தான்; உடனே தாமஸீ திரு உருக்கரந்தனள்.

பிரம்மன் அவளைத் தரிசித்து வழிபடுவதற்கா விரும்பினார்? அவள் விஷ்ணுவை விட்டு விலக வேண்டும் என்று மட்டும் தானே விரும்பினார்? விஷ்ணுவிடமிருந்து தூக்கம் விலகி, அவர் விழிப்புற வேண்டுமென்பதேயன்றோ பிரம்மனின் விருப்பம்? அந்தத் தூக்கம்தான் தாமஸி. அவர் விரும்பியபடியே விலகினாள். அதன் முன் போனால் போகிறதென்று அவள் க்ஷணகால திவ்ய தரிசனத்தையும் தந்து விட்டு மறைந்தாள்.

யோக நித்திரை வெளியேறியவுடன் திருமால் விழித்தெழுந்தார்.

பிரளய வெள்ளத்தையும், தாமரையில் தத்தளிக்கிற விதாதாவையும், அவர்மீது ரௌத்திராகாரமாகப் பாய்கிற

மதுகைடபர்களையும் கண்டார். சினத்தால் சிவந்த கண்ணோடு அசுரர் இருவரும் ஆர்த்து எழுவதைத் திருமால் தமது செவ்வலரிக் கண்களால் கண்ட மாத்திரத்தில், அவரது பக்தரட்சண தர்மத்தைச் சுரக்கச் செய்துவிட்டாள் தேவி பராசக்தி! பிரம்மன் வேண்டிய வேண்டியாங்கு ஈந்துவிட்டாள். மகாவிஷ்ணுவுக்கு மதுகைடபவதத்தில் மதியைத் திருப்பிவிட்டாள்!

பிரம்மனின் மீது மதுகைடபர் பாய்ந்த வேகத்தைவிட வலிமையுடன் அவர்கள்மீது பாய்ந்தார் பகவான் நாராயணன்.

★ ★ ★

மது-கைடபருக்கும் மாதவனுக்கும் மாபெரும் போர் மூண்டது. பிரளய ஜலத்தின் மீது மூவரும் நின்று சமர் புரிந்தனர்.

யுத்தம் முடிவதாகவே இல்லை. திருமால் ஆயுதங்களை விடுத்து, ஞான மயமான தமது திருமேனி அவ்வரக்கர் மீது உராயுமாறு, மல்யுத்தத்தில் இறங்கி அம் மாபாதகரைக் கட்டிப் புரண்டார். அவர்களும் இவரது காதுகளிலிருந்து வெளிவந்த குழந்தைகள் தாமே என்ற கருணை போலும்! குழந்தைகளைத் தீண்டும் இன்பத்தை இப்படி விசித்திரமாக அநுபவித்தார் மாயாவி!

முன்பு அந்த தேகத்திலிருந்து யோக மாயை வெளியேறியதாகக் காட்டிக்கொண்டார்! இப்போது இவரது ஸ்பரிச விசேஷத்தால் மோக மாயையும் அதிலிருந்தே வெளிவந்து அசுரர் உடலில் புகுந்து அவர்களது உயிரில் கரைந்தது போலும்!

அசுரர்களின் புத்தியை மயக்கி, அவர்களை மரணத்துக்கு உடன்படுமாறுச் செய்யவேண்டுமென பிரமன் செய்த பிரார்த்தனை நிறைவேறத் தொடங்கியது.

மது-கைடபருக்கு மாயா மோகம் தலைக்கேறியது. எல்லையில்லாத செருக்கு அடைந்தனர். அற்ப சக்தனான விஷ்ணுவுடன் போர் புரிவதே தங்களது மகாவீர பராக்கிரமத்துக்கு அகௌரவமாகும் என்று எண்ணிவிட்டனர், மாயா வைபவத்திலே!

இத்துணை நீண்டகாலம் விஷ்ணு தங்களுடன் தாக்குப் பிடித்ததே செயற்கரிய சாதனை என்று சாட்சாத் ஸ்ரீமந் நாராயணனை மெச்சினர்!

'ஏ, விஷ்ணுப் பயலே! பலே! எங்களுக்கு நீ ஈடு ஜோடு இல்லாவிட்டாலும், இத்தனை நாழிகை சமாளித்து விட்டாயே, சபாஷ்! இனியும் உன்னால் எதிர் நீச்சுப்போட முடியாது. பாவம்!

நாங்கள் போனால் போகிறதென்று விட்டுக்கொடுக்காமல் எங்களுடைய முழு பலத்தையும் காட்டிவிட்டோமோ அவ்வளவு தான், நீ உடனேயே மடிந்து விழவேண்டியதுதான். ஆனாலும் அவ்விதம் செய்ய நாங்கள் விரும்பவில்லை. உன் தைரியத்தை மெச்சி உன்னை விட்டோம். அது மட்டுமில்லை. அதைப் பாராட்டு முகமாக உனக்கு வரம் தரவும் திருஉளம் கொண்டிருக்கிறோம்! குழந்தாய் விஷ்ணு! வேண்டிய வரத்தைக் கேள்!' என்றனர் மது-கைடபர் — இருகுரலிசை போல் ஒரே சமயத்தில். பிதாவையே குழந்தையாக எண்ணுமளவுக்கு மயக்கு ஏற்பட்டுவிட்டது!

ஈதனைத்தும் தன் லீலை என்று பராசக்தி மகாவிஷ்ணுவுக்கு உணர்த்தினாள். மதுகைடபர் தாமாக மரணத்தை வரித்தாலொழிய அவர்களை முடிக்க வழி இல்லை என்பதாலேயே அவர்களை அவள் மதோன்மத்தர்களாக்கி இருப்பதாகப் புரிய வைத்தாள்.

மாயாவிப் பெருமான் மந்தஹாஸம் செய்தான். பிரம்மனின் ஆசையும் பராசக்தியின் விருப்பமும் நிறைவேறுவதற்காக ஸாக்ஷாத் வரதராஜன் அசுரப் பதர்களிடம் வரம் கேட்கிற நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக்கொண்டான். மது-கைடபரை நோக்கி, ''வீர சிரேஷ்டர்களே! எனக்குப் பிரீதி உண்டாக்க வேண்டும் என்று பெரிய மனது செய்துவிட்டீர்கள்! மிகப் பெரிய வரம் தந்தால் ஒழிய உங்களுக்கு நிறைவு உண்டாகாது. உதார குணம் படைத்த நீங்கள், 'நம்மால்தான் இப்படிப்பட்ட வரம் தர முடியும்' என்று நிறைவு கொள்கிற வகையில் நான் வரம் கேட்கிறேன். ஆனானப்பட்ட மது-கைடபர்களையே நான் சம்ஹரித்துவிட்டேன் என்று அடுத்த சிருஷ்டியில் உலகம் என்னைக் கொண்டாடுவதை விட அதிகப் பிரீதி எனக்கு எதில் உண்டாக முடியும்? ஆகையால் என்னால் நீங்கள் வதைக்கப்படுவதையே வரமாகக் கேட்கிறேன். இதனினும் வேறாக வரம் கேட்டு ஆவதென்ன?'' — தேனாகக் கேட்டுவிட்டார் வரத்தை, தேவாதி தேவன். அவர்கள் தாமாக மரணத்தை ஏற்றால்தான் உண்டு என்கிற நிலையில், தனக்கு வஞ்சகன் என்ற பெயர் வந்தாலும் வரட்டும் என்ற தியாக சீலத்தோடு வரம் கேட்டுவிட்டான் வாசுதேவன்.

'ஆகா, வஞ்சனைக்கு ஆளாகிவிட்டோம்!' என்று அப்போதுதான் உறைத்தது அசுரருக்கு.

ஆனாலும் என்ன செய்வது? தங்களைவிடக் கீழ்ப்பட்டவனாக அவர்கள் எண்ணிய விஷ்ணுவிடம் 'வரம்

தருகிறோம்' என்று பிரமாதமாகச் சொல்லிவிட்டு இப்போது வாக்கைத் திருப்பி வாங்கிக்கொள்ள அவர்களது செருக்கு இடம் கொடுக்கவில்லை.

உயிரைக் கொடுக்கவும் மனம் வரவில்லை. யாருக்குத்தான் வரும்?

விஷ்ணு தங்களை வஞ்சித்து வரம் பெற்றதுபோல் தாங்களும் வஞ்சனையால் அந்த வரத்தை அற்றுப்போகச் செய்ய வேண்டும் என்று விரும்பினார்.

''விஷ்ணுக் குழந்தாய்! உன் விருப்பப்படியே வரம் தந்தோம். ஆனால் துரதிருஷ்ட வசமாக தண்ணீரில் இருக்கிற வரையில் எங்களுக்கு மரணம் சம்பவிக்க முடியாது. எனவே நீர் சூழாத பூமிப் பிரதேசத்திற்கு எங்களை அழைத்துச் சென்று சம்ஹாரம் செய்வாய்''

ஊழி வெள்ளம் பெருக்கெடுத்தபோது ஓர் அங்குல நிலத்தைக் கூட எங்கே காண முடியும்? எனவே விஷ்ணு வரத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் தவிக்க வேண்டியதுதான் என்று எண்ணினர் மதுவும் கைடபனும்.

ஆனால் அவரோ புன்னகைத்து, ''அவ்வண்ணமே ஆகுக!'' என்றார்.

விஷ்ணுவா தவிப்பார்? தவிக்கத்தான் செய்தார்! அதாவது தவம் செய்தார்!

தமது சக்தியாகிய பராசக்தியைத் தீவிரமாக உணர்ந்துகொள்கிற தவத்தைச்செய்தார். உடனே அதி அற்புதமான பேருருவம் கொண்டார். நீண்டு அகன்று விஸ்தரித்த தமது திருத் தொடைகளை நீட்டினார். ஆகா, அவை, கெட்டிப் பூமியாகவே இருந்தன! அந்தப் பூமிப் பகுதியில் மதுவையும் கைடபனையும் தூக்கிவைத்துக் கொண்டார். விசித்திரமான முறையில் குழந்தைகளைக் கட்டிப் புரண்டவர் இப்போது விசித்திரமான முறையில் அவர்களை மடியில் தூக்கி வைத்துக்கொள்கிறார்!

அப்புறம் ஒரே நொடிதான். அவர்களது தலையை வணக்கித் தம் திருமேனியோடு ஒட்டச்செய்து, அப்படியே சக்ராயுதத்தைப் பிரயோகித்து விட்டார்!

சிரச்சேதம் தான்!

மது-கைடப சம்ஹாரம் நடந்தே விட்டது!

★ ★ ★

''உடனே தேவரும் ரிஷிகளும் புஷ்பமாரி பொழிந்தனர்'' என்ற வழக்கமான வர்ணனை இவ்விடத்தில் புராணங்களில் காணப்படவில்லை. இது கவனத்துக்குரியது. பிரளயத்திலே தேவர் ஏது, ரிஷிகள் எது?

பிரளயத்திலும் உயிரோடு வாழ மது-கைடபர் முயன்றனர். அது பலிக்கவில்லை. மாயாவித்தனம் செய்து அவுணர்களின் ஆவிகளைத் தம்முள்ளேயே கலக்கச் செய்து விட்டார் அச்சுதன். பிரளயத்துக்கும் மேம்பட்ட சாசுவத ஐக்கிய நிலையை, வெளியிலே கோரமாகத் தெரியும் ஸம்ஹாரச் செயலின் மூலம் அசுரருக்கும் அருளி விட்டார்.

அவர்களது உயிரை உய்வித்தது மட்டுமல்ல, அவர்களுடைய உடலை — அதுவும் அசுர உடலைக்கூட — உயர்வித்து விட்டார். அதாவது மதுகைடபரின் உடற்கொழுப்பினையே (இதை 'மேதஸ்' என்பர்) பிரளயத்துக்குப்பின் மறுபடி சிருஷ்டி தொடங்கும் போது சகலப் பிராணிகளையும் தாங்கி, அவர்களுக்கான பயிர் பச்சைகளைத் தரும் பூமியாக மாற்றி யருளினார். 'பூமியில் எங்களைக் கொல்' என்று அவர்கள் கேட்டபோது, தம் சரீரத்தையே பூமியாக்கிக் 'கொண்ட பூதேவி நாயகன் அவர்களிடம் உள்ள கருணை நெகிழ்வாலும், தர்ம நியாய உணர்வாலும் அடுத்த கற்பத்தில் அவர்களது ஊனையே புவியாக்கினார். மேதஸிலிருந்து தோன்றியதாலேயே 'மேதினி' என்ற பெயர் புவிக்கு உண்டாயிற்று!

இக் கதையைச் சொன்னவரும் ரிஷியான மேதஸ்தான். ஆனால் இதில் உள்ள 'த' வடமொழியின் நான்காவது 'த'[dha]. 'கொழுப்பு' என்கிற 'மேதஸ்' மூன்றாவது 'த' [da]. மூன்றாவது 'த' நான்காவதாக கொழுக்கும்போது, உடற்கொழுப்பே, பரமத் தியாகமான யாகமாகவும் (மேதம்) அறிவின் செழிப்பாகவும் (மேதா) பரிணமித்து விடுகிறது. அதிலிருந்தே மேதை, மேதா விலாஸம் முதலிய பதங்கள் வந்துள்ளன. நல்லதற்கும் கெட்டதற்குமிடையே மிகக் கொஞ்சம் தான் மாறுபாடு உள்ளது என்பதை இந்தச் சின்ன ஒலி மாறுபாடே உணர்த்துகிறது.

மது-கைடப வதத்தைச் சொன்ன முனிவர், ''பிரம்மாவால் துதிக்கப்பெற்ற தேவி இவ்விதம் தானாகவே தன்னைத்தோற்றுவித்துக்கொண்டு காளியானாள். அவளுடைய பிரபாவங்களை மேலும் சொல்கிறேன், கேள்'' என்று வரலாற்றைத் தலைக்கட்டி, மகிஷாசுர வதத்துக்கு அங்குரார்ப்பணம் செய்கிறார்!

★ ★ ★

இவ்வரலாற்றில் உள்ளுறை பொருள் நிறைய உள்ளது. முனிவர் அதை எல்லாம் விளக்கவில்லை. ஸுரத - ஸமாதியரை அஞ்ஞானத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டுப் பராசக்தியிடம் பக்தியில் திருப்பி விடுவதொன்றே அவரது குறிக்கோள். அரக்கரிடம் அகப்பட்டு அலறிய மும்மூர்த்தியுள் ஒருவராம் பிரம்மனுக்கு இரங்கி, மும்மூர்த்தியருள் இன்னொருவராம் திருமாலின் மூலம் ஸம்ஹாரம் செய்வித்த பெருஞ்சக்தி அவள் என்று ஸுரத - ஸமாதியர்க்குக் காட்டிக் கொடுப்பதே முனிவரின் லட்சியமாயிருந்தது. எனவே தத்துவார்த்தங்களை விளக்கப் புகவில்லை. விமோசனத்துக்கு வழி பக்தியே அன்றி விசாரணையல்லவே!

அவர்களும் தாங்கள் வழிபடும் மூர்த்தியான விஷ்ணுவுக்கு மேலாகப் பராசக்தியைக் கருதி அவளிடம் மனத்தை வைக்கத் தொடங்குகின்றனர். மேதஸின் லட்சியம் கைகூடுகிறது!

முன்பே சொன்னதுபோல் விஷ்ணுவுக்குத் தோஷம் கற்பிப்பதல்ல முனிவரின் நோக்கம். விஷ்ணுவிடம் இவர்கள் கொண்டிருந்த பக்தியின் தோஷத்தை அவர் அறிவார். உலக இன்பங்களை நல்குவதை மட்டுமே விஷ்ணுவின் தொழிலாக நினைத்து அதை யாசிப்பதே இவர்களுக்கு ரத்தத்தோடு கலந்து விட்ட உணர்வாகிவிட்டது. எனவே இவர்களை லௌகிகத்திலிருந்து விடுவிக்க அதே விஷ்ணுவிடம் பக்தியை வளர்க்க இயலாது என்று முனிவர் எண்ணினார். அதனாலேயே பிரம்ம சக்தியை விஷ்ணுவுக்கும் மேலான தெய்வமாகக் காட்டிக் கொடுப்பதில் முனைந்தார். ஆனால் இதற்காகவே அவர் மதுகைடபர் வரலாற்றைப் புனைந்து கூறினார் என்று எண்ணிவிடலாகாது. பராசக்தி விடுவித்ததால்தான் விஷ்ணு நித்திரையிலிருந்து மீண்டார் என்பதும், மதுகைடபரின் சுய மரண வரண ரகசியத்தைப் பராசக்தியின் அருளாலேயே விஷ்ணு அறிந்தார் என்பதும் முனிவரின் சுய கற்பனையல்ல. பிரம்ம சக்தி பல ரூபங்களில் அடியார்களை ஆட்கொள்ள விரும்புகிறது. அவரவருக்கும் தத்தம் தெய்வத்தில் பற்று வலுப்பதற்காகவே ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு தேவதா ரூபத்தை இன்னொரு தெய்வத்துக்கு உயர்வானதாகக் காட்டிக் கொள்கிறது. ஒரு சமயத்தில் விஷ்ணு சிவனைப் பூஜிக்கிறார் — சிவ பக்தர்களுக்குத் தங்கள் தெய்வத்திடம் அனன்யமான (வேறு கடவுளை எண்ணாத) ஒருமுக அன்பு உண்டாக்க வேண்டுமென்றே. இவ்வாறே வைஷ்ணவர்களுக்குத் தம் இறைவனிடமே பற்று முற்றுவதற்காக இன்னொரு சமயத்தில் சிவன் விஷ்ணுவைப்

பூஜிக்கிறார். அவர்கள் இருவருக்கும் தாங்கள் ஒன்றே என்று தெரியுமாதலால் பரஸ்பரம் பூஜித்துக் கொள்வதிலோ — ஏன், பரஸ்பரம் சண்டை போட்டு ஒருவர் மற்றவரிடம் தோற்பதிலோ கூட — எவ்விதச் சிறுமை, பெருமையும் காணவில்லை. மகாவிஷ்ணு, தாம் அம்பாள் மூலம் அறிவுவிளக்கம் பெறுவதாகக் காட்டுவதால் சாக்தர்களுக்கு ஆத்மலாபம் கிட்டுகிறது எனில், தாராளமாக அவ்விதம் அவளிடமிருந்தே அறிவு விழிப்பினைப் பெறுவார்! ஸஹஸ்ர நாமங்களில் ஒன்றின்படி சுய அபிமானமே இல்லாத 'அமானி' அன்றோ அவர்!

★ ★ ★

மது-கைடபர் வரலாற்றில் வாசகர்களுக்கு எழக்கூடிய சங்கைகள் உண்டு.

முதலாவதாக, யாவும் அழிகிற பிரளயத்தில் ஜலம் மட்டும் எப்படியிருக்கும் என்பது. பிரளயத்தில் யாவும் அழிந்தாலும், மறுபடியும் இவை யாவற்றையும் வெளிக் கொணர்கிற பிரம்ம சக்தி மாறாமலே உள்ளது. ஜட உலகுக்கு ஆதாரமான பௌதிக மூலமும், உயிருக்கு ஆதாரமான பிராண மூலமும், சிந்தனைக்கு ஆதாரமான அறிவு மூலமும் அழியாமலே உள்ளன. ஜடமான பௌதிகத்தின் மூலப்பொருளைத்தான் 'ஜலம்' என்று கூறுகிறார்கள். 'நிலம்' என்று சொன்னால் இன்னும் பொருத்தமாக இருக்குமே என்று தோன்றலாம். ஆனால் பிரளயத்திலும் பூமி நிலைத்து நிற்பதாகச் சொன்னால் அது ஊழிக்காலம் என்ற எண்ணமே நமக்கு வரமுடியாது. ஆகையால் நம் கண் முன் காணும் பெரிய இயற்கை உற்பாதம் வெள்ளமே யாதலால் பிரளயத்தையும் பெருவெள்ளமாகச் சொல்கிறார்கள். அந்த வெள்ளத்திலும் பாம்பணை இருக்கிறதாகச் சொல்வது, பிராண மூலம் எப்போதும் இருப்பதைக் குறிக்கும். காற்றையே உண்ணும் ஆதிசேஷன் தான் பரமாத்மாவின் குண்டலினியாகிய பிராண சக்தி. அதன்மீது துயிலும் மகாவிஷ்ணுவோ அறிவின் மூலம். அவர் தமது அறிவை உலக முகமாகத் திருப்பிக் கொண்டிருப்பதைத்தான் யோக நித்திரை என்கிறோம். இதே அறிவுதான் மக்களை உலக வாழ்வில் திருப்பிவிட்ட விஷ்ணு மாயையும் ஆகும். மாயையும் ஞானமும் பரமாத்மனைப் பொறுத்தமட்டில் ஒன்றேதான்,

அடுத்த கேள்வி ஏன் பிரம்மனும் விஷ்ணுவைப் போல பிரளயத்தில் யோக ஒடுக்கம் பெறவில்லை என்பது. விஷ்ணு

குறிப்பாகப் பாலன சக்தி எனப்பட்டாலும் பராசக்தியாகவே தம்மை உணர்ந்திருப்பவர். பரப் பிரம்ம ஸ்வரூபமாகவே இருப்பவரும்கூட. இவ்விதமே ருத்திர - மகேசுவர - சதாசிவர்களும் தனித்தனித் தொழில் செய்தாலும் சர்வசக்தியும் கொண்டவர்; பிரம்மத்தோடு பிரிவற்ற அநுபவம் கொண்டவர். மானுடனாகப் பிறந்த ஞானியே பிரம்மத்தோடு ஒருமை கொண்ட அதே சமயத்தில் லோகாநுக்கிரகமும் செய்கிறான் எனில், இந்தத் தெய்வங்களைப் பற்றி கேட்கவும் வேண்டுமா? ஞானியையும் விடக்கூடப் பராசக்தியைக் கிரகிப்பதில் — ஏறக்குறைய பூரண பராசக்தியாகவே இருப்பதில் — இவர்கள் வல்லவர்கள். ஆனால், பிரம்மன் விஷயம் இப்படி அல்ல. நாமாக இஷ்டப்படி பிறக்க முடியவில்லை; வாழ்க்கை நடத்துவதில்தான் நமக்குக் கொஞ்சம் இச்சா சுதந்திரம் இருப்பதாகத் தெரிகிறது. நம்மையே பிறப்பிக்கிற பிரம்மனும் தம் இஷ்டப்படியே சிருஷ்டி செய்யவில்லை. நமது பாப புண்ணிய கணக்குப் பார்த்துத்தான் சிருஷ்டிக்கிறார். அதிக சுதந்திரம் இல்லாத இத் தொழிலுக்கு அதிக ஞானமும் சக்தியும் தேவையில்லை. எனவே, பராசக்தி பிரம்மாவாக இருக்கும்போது விஷ்ணுவையும் சிவனையும்விடக் குறைந்த சக்தியும் ஞானமும் உடையவராகவே உள்ளது. ஆயினும் பிரம்மாவுக்கும் அரிய பெரிய வரங்களைத் தருகிற சக்தி இருப்பதைப் பல புராணங்களில் பார்க்கிறோம். ஏராளமான சுர அசுரர்கள் இவரிடம் வரம் பெற்றவர்கள்தாம். இவர் மூலம் பராசக்தி மற்றோர்க்கு அருள் பாலித்திருக்கிறாள். இவரோ தம்மைப் பொறுத்த மட்டில் சக்தியில் அவ்வளவு பெரியவராக இல்லை. தனக்கே அபாயம் என்றால் இவர் விஷ்ணுவையோ, சிவனையோ அம்பாளையோதான் தஞ்சம் புகுகிறார். கருவேப்பிலை, வில்வம் போலச் சில மருத்துவ சக்தி கொண்ட செடிகள் உண்டு. இவற்றை மற்றவர் உண்டு ஆரோக்கியம் பெறுவர். ஆனால் இந்தச் செடிகள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ள முடியாமல், பூச்சி அரிப்பு முதலியவற்றுக்கு எளிதில் ஆளாகி மடிந்து போகும். பிரம்மா இப்படித்தான் இருக்கிறார்.

எல்லாவற்றிலும் பெரிய சக்தி எது? தன் சக்தி அனைத்தையும் தியாகம் செய்கிற சீலம்தான். மகா சக்தர்களான விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் இந்தத் தியாக சக்தி விசேஷமாக உண்டு. அதனால்தான் பிரளயத்தில் அவர்கள் தங்கள் தொழில்களை அடியோடு தியாகம் செய்து விட்டு பரப்பிரம்ம மயமாக இருக்கிறார்கள். குறைந்த சக்தரான பிரம்மனால் இது முடியவில்லை. தாமாக சுய உணர்வை விட்டுப் பிரளயத்தில் கரைய இவரால் முடியவில்லை. மற்றப் பிராணிகளை எல்லாம் அவற்றின் விருப்பத்தைப் பாராமலே பிரளயத்தில்

ஆட்கொள்ளும் பராசக்தியும் சிருஷ்டி கர்த்தரான பிரம்மனை சிறிதே விட்டு வைத்து வேடிக்கை பார்க்கிறது. சிருஷ்டியில் இவருக்குச் சுதந்திரம் இல்லாததால், இந்தப் பிரபஞ்ச சம்ஹாரத்தின் போதாவது கொஞ்சம் இச்சா சுதந்திரம் பெற்று விட்டுப் போகட்டுமே என்றெண்ணுகிறது போலும்! சிருஷ்டி தத்துவமானது லயத்துக்கு நேரெதிர் ஆனபடியால் அது லேசில் ஒடுங்கிப்போக இசைவதில்லை. பரிபாலனம் என்பது வளர்ப்பு. ஒன்றின் வளர்ச்சிக்குள்ளேயே முந்தைய நிலையின் அழிவு உள்ளது என்று முன்பே கூறியிருக்கிறோமல்லவா? எனவே பரிபாலன சக்தியானது லயமடைவதற்குச் சுணங்குவதில்லை. மனமொப்பி அதனை ஏற்கிறது. சம்ஹார சக்தியே ஆகிய சிவாம்ச ருத்ரனைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

விஷ்ணுவின் காதில் அழுக்கு மயமான அசுரர் உண்டானதாகச் சொல்வது என்ன? காது என்பது கேட்கிற அவயவம்—கேள்வியின் உறுப்பு. வேதங்களுக்கு 'சுருதி' என்று பெயர் — சுருதி என்பதன் பொருள் கேள்வி என்பதே. வேதத்தை எழுத்தில் படிக்காமல் காதால் கேட்டுக் கேட்டே பாடம் செய்ய வேண்டுமாதலின் இப்பெயர் ஏற்பட்டது. பராசக்தி (Energy) அதிர்வுகளாகவே (vibration) பிரம்மத்தில் (Matter-Mind) கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. அதிர்வுகளுக்கெல்லாம் ஒலி உண்டு. இந்த ஒலிகள் நேராக மனிதக் காதை எட்ட முடியது. ஆனால் இந்த ஒலிகளை ஒத்ததாக மனிதச் செவிப்புலனுக்கு எட்டுகிற சப்தங்கள் உள்ளன. விசுவவெளியின் அதிர்வுகளில் உலகுக்கு, ஜீவனுக்கு நன்மை பயக்கும் ஒலிகளை வேத மந்திரங்கள் என்ற சப்தங்களின் மூலமே மனிதக் காதுக்கெட்டும் மொழியாகப் பராசக்தி மாற்றித் தந்திருக்கிறாள். வேத சப்தங்களின் சக்தி, மூல அதிர்வுகளின் சக்திக்குச் சிறிதும் குறைந்ததலல்ல. இவ் வேதங்களின் மூலம்தான் தர்மமான கர்மங்கள் யாவும் விதிக்கப்படுகின்றன. இந்த தர்மங்களை ஆற்ற முடியாமல் மனம் பாபத்திலும் பாய்கிறது. வேத கர்மாவை மட்டுமே செய்து கொண்டிருந்தால் பாபம் என்று அநுபவிப்பதற்கு ஏதுமே சேராது; கர்மாவினால் சுத்திகரிக்கப்பட்ட சித்தத்தில் புண்ணியம் என்பதில் கூட நாட்டம் எழாமல், அது வெறும் பளிங்கு போலாகிவிடும். அப்புறம் அந்தப் பளிங்கு மூலப்பளிங்கான பிரம்மத்தின் அமைதியில் ஆழ்ந்து போகலாம்; அல்லது பிரம்ம சக்தி இந்தப் பளிங்கில் பிரதிபலித்து இவ்வுலகிலேயே குற்றமற்ற ஆனந்தங்களை வாரிச் சிந்திக் கொண்டிருக்கலாம். ஆனால் நடைமுறையில் நிஷ்காம்ய கர்மம் அநுஷ்டிக்க இயலாமல்

சொந்த விருப்பு வெறுப்புக்கள் உட்புகுந்து பாபத்தை விளைவிப்பதே அதிகம். தாற்காலிக இன்பம்—அதற்காகப் புரிந்த பாபத்தின் விளைவான துன்பம் ஆகிய இரண்டின் பிடியில் சிக்குவதே மக்களின் பொது இயல்பாகவுள்ளது.

இந்தப் பிடியிலிருந்து அவர்களைப் பிடுங்கித் தன்னிடம் உறிஞ்சிக் கொள்ளத் தொடங்கினாள் பராசக்தி, பிரளய காலத்திலே! வளர்ச்சிக்குள் உள்ள அழிவாகத் திருமாலுக்குள் ஸம்ஹார ருத்திரன் ஊழித்தாண்டவம் செய்ய, அதன் வேகத்தில் பிரபஞ்சமும் ஜீவராசிகளும் ஸ்ரீமந் நாராயணனுக்குள் உறிஞ்சப்பட்டன. ஜீவராசிகளின் தர்மமயமான சத்துவ கர்மங்கள் யாவும் அநாயாசமாகப் பிரளய கர்ப்பத்தினுள் வந்து அடங்கிவிட்டன — அதர்ம பாப கர்மங்கள் அடங்காமல் உள்ளேயே குமுறிக் கொண்டிருந்தன. தர்ம ரூபியான திருமாலும் மனமொப்பி யோகத்தில் அமிழத் தொடங்கினார். இந்த தர்மங்களின் ஆதாரமான வேதங்களும் லயம் அடைந்து விட்டன. இப்போதும் ரஜோகுண மேலீட்டால் லயிக்க மறுத்தார் பிரம்மன். ஆனால் அவர் தன் நான்கு முகங்களால் ஓத வேண்டிய வேதங்கள் மறைந்து விட்டதால் அவர் மௌனமாக வேண்டியிருந்தது. அந்த வேதங்களை அனவரதமும் செவிமடுத்த நாராயணனும் வேத சப்தம் ஒடுங்கியவுடன், வெகு விரைவில் அதிர்வுகள் அடங்கிய மூல வஸ்துவாகவே ஒன்றிச் செயலற்ற நிலையை அடைந்து விட்டார். 'அவுட்' வாணம் வானத்தில் சென்று வெடித்தவுடன், எஞ்சிய கரிக் கட்டை கீழே விழுவதுபோல், இப்படிச் சகல தர்மங்களும் பிரளயக் கருவில் வெடித்து ஒடுங்கியவுடன், அப்படி வெடிக்க மறுத்த அதர்மங்கள் — அதாவது இந்திரிய இன்பமும் அதனால் விளைந்த துன்பமும் —எந்த திருச் செவிகளின் வழியாகத் திருமால் தர்மப் பிரமாணமான வேதத்தை உட்செலுத்திக் கொண்டாரோ, அதே திருச்செவிகளின் மூலமாக அழுக்குப் போல வெளி வந்தன. அதாவது, இன்ப- துன்ப வாசனைகளே மது-கைடபர்களாக வெளி வந்தன.

மதுவைப் பருகுவதில் தாற்காலிக இன்பம் இருக்கிறது; ஆனால் அது எத்தகைய பாவத் துன்பத்தில் தள்ளுகிறது! அதர்மத்திலே தள்ளுகிற சிற்றின்ப வாசனைகளின் வடிவமே 'மது.' மனிதனை அவனுக்கான தர்மத்தை மறக்கச் செய்து, வெறும் புழு (கீடம்) போலாக்கி, பெயரளவில் மட்டுமே (ப)* மனிதனாகக் காட்டுகிற 'கீட-ப'மான துன்ப நுகர்ச்சிதான் 'கைடபன்' ஆயிற்று.

இவர்கள் ஏன் பிரம்மாவின் மீது பாய்ந்தனர்? ஒருவனுடைய பாப புண்ணியத்தைப் பார்த்துத்தானே பிரம்மா

* ப (bha); போலித்தோற்றம்

அவனுக்கு மறுபிறவி தருகிறார்? மதுகைடபரின் ரகசியத் தூண்டுதலே மனிதர் பாபம் புரியக் காரணம். பிரம்மா பாவியரை மறுபிறவியில் ஏழையாக, அங்கவீனராக, அறிவற்றவராகப் படைக்கிறார். இவ்விருவரும் இதனாலேயே அவர்மீது துவேஷம் கொள்கிறார்கள். பிரளயத்தின் போதும் அவர் உயிரோடிருப்பதைப் பார்த்து, 'மறுபிறவியிலும் இவன் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பாபிகளைக் கஷ்டப்படுத்துவானே! இவனைத் தொலைத்து விட்டு நாமே சிருஷ்டியை ஏற்று, பாபிகளுக்குப் பெருவாழ்வு தந்து படைக்க வேண்டும்' என்று வெகுண்டெழுகிறார்கள். தாங்கள் மட்டும் ஊழியிலும் அழியாத சிரஞ்ஜீவி என்றெண்ணி பிரம்மன் மீது பாய்கிறார்கள்! பிரம்மனும் பராசக்தியின் கருவியே என்றறியாத நிர்மூடர்கள்.

தாங்களே விரும்பினால்தான் இவர்களுக்கு மரணம் என்பதன் பொருள் என்ன? ஜீவாத்மா தனக்கென்று ஏதுமில்லை என்று தானாக சரணாகதி செய்து பூரண பக்தனானாலோ, அல்லது மனத்தை அழித்து ஆத்மாவில் ஒன்றியிருக்கத் தானாக முயற்சி எடுத்தாலோ அன்றிக் கர்மம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்—இதுவே விவகார தசையில் நாம் உண்மையென்று கொள்ள வேண்டியது. ஒருவன் பந்தப்படுவது, அவனை விடுவிப்பது ஆகிய எல்லாமே பராசக்தியின் சங்கல்பம்தான் என்பதே பாரமார்த்திக தசையில் சத்தியமாயினும், இதில் நடைமுறைக்கு (விவகாரத்துக்கு) ஏதுமேயில்லை. எல்லாம் சிவன் சித்தம் என்றால் மதம் எதற்கு, போதனை எதற்கு, சாதனைகள் எதற்கு? விடுபடுவதற்காக பிரயத்தனம் செய்கிற வாய்ப்பு ஜீவனுக்கு இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலொழிய சமயாசாரமே வேண்டாம். இந்தக் கோணத்தில் கர்ம பலனைத்தான் கடவுளும் அளிக்கிறாரே அன்றி, அவராக (பிரளய காலம் தவிர வேறெப்போதும்) ஜீவனை அதன் கட்டிலிருந்து வெளியில் இழுத்து விடுவதில்லை. விடுபட வேண்டும் என்ற லட்சியத்தை மகான்கள் மூலம் அவர் ஜீவனுக்கு நினைவுறுத்துவதும், இவன் அத்திசையில் சிறிது சென்றாலும் அவர் வெகுதூரம் முன் வந்து இவனை வரவேற்பதும் உண்மை. ஆயினும் பாபம் செய்ய இவனுக்குச் சுதந்திரம் இருக்கிறது என்றால், அதைக் கழித்துக்கொள்ளவும் இவனே முதலில் சுயேச்சையாக முயற்சி எடுக்க வேண்டும். இதை ஒப்புக் கொள்ளாவிடின் இத்தனை சாஸ்திரங்களும், ஞான உபதேசமும் ஏற்பட்டிருப்பதற்கே பொருளில்லை. இன்ப துன்பச் சூழலிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்று ஜீவனுக்குக்கே சங்கற்பம் உதித்தாக வேண்டும். 'தன்மே சிவ

ஸங்கல்பம் அஸ்து' என்று இதைத்தான் ரிஷிகள் திரும்பத் திரும்பக் கூறினர். தானாக விரும்பினாலொழிய இன்ப துன்பங்களை இவன் தொலைத்து முழுகுவதற்கில்லை. இதைத்தான் மதுகைடபர்கள் சுயேச்சையாக மரணம் அடைந்தாலே உண்டு என்றது.

பிரளய காலத்தில் இவ்விதம் கர்ம வாசனைகள் அசுரராக உலவும்போது மீட்சி தரக்கூடியது யார்? இவ்விரு அரக்கரும் துன்பத்தின் இரு வகைகள். ஒன்று, அசல் துன்பமாகவே தெரிகிற வியாதி, வறுமை முதலிய துன்பம். இன்னொன்று இந்திரியங்களுக்குத் தாற்காலிக இன்பமாகத் தெரிந்தாலும் இறுதியில் துன்பமே தரும் வேஷதாரிக் கிளுகிளுப்புக்கள்.

அசல் துன்பமாகவே தெரிகிற துன்பமும், இந்திரியங்களுக்குத் தாற்காலிகமாக இன்பமாகத் தெரியும் வேஷதாரித் துன்பமும் தான் இவ்விரு அசுரர். ஆக இருவரும் அடிப்படையில் துன்பமே. இந்தத் துன்பத்தை யார் அழிக்க இயலும்? ஆனந்தம்தான்! வேறெது துன்பத்தைத் தொலைக்கும்?

ஆனந்த வடிவம்தான் அன்னை காளி. பரம் பொருளின் மூன்று லட்சணங்கள் சத்-சித்-ஆனந்தம் என்பனவே. உள்ளதெல்லாம் இல்லதான பின்னும் நிற்கும் ஒரே ஆதார சத்தியம் அவளே ஆதலால் அவள் சத்து. இந்த சத்தியம் தன்னைத் தானே அறிகிறது. அப்படி அறிந்து கொள்வதே சித்து. இந்த அறிவிலிருந்துதான் சகல உயிரினங்களின் சிற்றறிவுகளும் பிறந்தன. அந்த அறிவுகள் அழிந்தாலும் மாறினாலும் இந்தச் சித்து அப்படியேதான் இருக்கும். பிரளயத்திலும் இவள் சித்தாக இருக்கிறாள்! அதோடு சத்தாக இருப்பதைப் பூரண பிரக்ஞையோடு அறிந்து சித்தாக—ஞானமாக—சைதன்ய தேஜோமயமாக இருக்கிறாள். தன்னைத்தானே அறிந்து கொள்வது உணர்வதாக ஆகிறது. அறிந்த தன்னை உணரும்போது அவள் பெறும் நிறைவுணர்ச்சியே ஆனந்தம். ஜீவராசிகளின் அறிவுக்கு அவளது சித்து ஆதாரம் எனில் அவர்களது உணர்வுகளுக்கு அவளது ஆனந்தமே ஆதாரம். இவளுக்கு சத்தியம், ஞானம், ஆனந்தம் இவை மட்டுமே ஏக உணர்வாக இருந்தாலும், அவர்களுக்கோ இவற்றிலிருந்து கவடுவிட்டு அசத்தியம், அஞ்ஞானம், துக்கம் என்பனவும் உண்டாகின்றன. அசத், அஞ்ஞானம் துன்பம் தொலைய வேண்டுமானால் ஜீவர்கள் அடியோடு பூஜ்யமாகி விடவேண்டும். அப்படி அடியோடு குறைந்து விட்டால்,

எல்லாமாய் நிறைகிற ஆனந்தத்தை இவள் தருவாள். இவ்விதம் சுயத்தை வேரோடு கல்லித் தள்ள முடியாமல் ஆசை தடுக்கிறது. அப்படியும் இவள் அவர்களைப் பிரளயத்துக்கு உட்படுத்தி, தானே உட்கொள்வாள். இப்போதும்கூட ஏதோ முருங்கைக்காயின் சத்தை உண்டு, சக்கையைத் துப்புவதுபோல அவர்களது தர்ம கர்மங்கள் மட்டுமே பிரளயத்தின் உதரத்துள் செல்ல, அதர்ம பாபங்கள் மது-கைடபர்களாக வெளியே தள்ளப்படுகின்றன. இருந்தாலும் கடைசியில் அவர்களையும் விடவில்லை ஆனந்தரூபிணியான காளி. துன்பம் முழுவதையும் துடைத்து விடுகிறாள்! 'பிரளயத்திலே துன்பமே இருக்கக்கூடாது. மறுசிருஷ்டியில், நாமே ஜீவர்களின் கர்ம பாக்கியை பிரம்மனுக்கு ஸ்புரிக்கச் செய்து அவர் மூலம் படைப்பை நடத்தலாம். இதற்காக இப்போது மது-கைடபரை விட்டு வைக்க வேண்டாம்' என்று பராசக்தி எண்ணுகிறாள்.

மது-கைடபரை ஆனந்த ரூபிணியான காளி எங்கே வதைத்தாள்? ஸ்ரீமந் நாராயணன் அன்றோ சம்ஹரித்தார்? — நியாயமான கேள்வி.

ஆனால் இப்போது நாராயணனே ஆதிபராசக்தியாகத்தான் இருந்தார். அவர் யோக நித்திரையில் ஒடுங்கியது ஒடுங்கியதுதான். அதன்பின், பிரம்மனின் பிரார்த்தனைக்காக அவரிடமிருந்து தாமஸியைப் பராசக்தி வெளியேற்றியபின், பாலன கர்த்தராக மட்டுமுள்ள பழைய நாராயணனாக அவர் ஆகிவிடவில்லை. ஒரு ஞானி பிரம்மசமாதி கூடியபின், வெளி உலகப் பிரக்ஞைக்கு வந்ததுபோல் காணப்படினும், பழைய ஜீவமனத்தோடா அவர் இருக்கிறார்? அவரது பழைய மனம் போனது போனதுதான். இப்போது பராசக்தியே அவர் மூலம் செயற்படும். இவ்வாறு ஸ்ரீமந் நாராயணனும் பராசக்தியாகவே — குறிப்பாக அவளது ஆனந்த அம்சமாகவே — இருந்து மது-கைடபர்களை வதைத்தார். எனவே அவளையே மதுகைடப நாசினி என்பது முற்றிலும் சரியே! என்றாலும் மேலே பல இடங்களில் கூறியது போல் இங்கு நாராயண சம்பந்தத்தை அதிகம் காட்டியதற்குப் பொருத்தமுண்டு.

இவ்விரு அசுரரும், நிலத்தில் தங்களை வைத்து வதைக்கச் சொன்னது ஏன்? நில உலகுக்குத் தானே கர்மபூமி என்று பெயர்? இன்ப துன்பங்களை வேறெங்கும் தீர்த்துக் கொள்ள இயலாதே! **'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்'** என்பதால் விஷ்ணுவின் சரீரத்தில் பூமியைக் காட்டியதும் பொருத்தமே.

எல்லாம் போகட்டும்; கோர காளியை ஆனந்த ரூபிணியாக, அநுக்கிரக மூர்த்தியாகச் சொல்வது எப்படி?

கோரமும் பராசக்தியே என்று கண்டாலொழிய சாசுவத ஆனந்தமே சாத்தியமில்லை. 'அழகானது' என்பதாக எதையோ தேடி, அதிலேயே ஆனந்தம் கொள்ளும்போது, எத்தனையோ அவலங்களை, அசங்கியங்களை, கோரங்களை, கொடுமைகளை ஒதுக்கித் தள்ள வேண்டியிருக்கிறது. ஒதுக்க வேண்டிய விஷயங்கள் உள்ள வரையில் அவற்றிடம் நமக்குத் துவேஷமும் இருந்து கொண்டேதான் இருக்கிறது. எங்கே அவை நம்மிடம் வந்து சேர்ந்து விடுமோ என்ற பயமும், அதனால் சோகமும் மறையாமலே இருக்கும். எனவே, ஒரு நிலை வரையில் அழகானதை, இனியதையே தேடி அதில் தெய்விகத்தை நுகரப் பயின்றாலும் கூட, இறுதியில் கோரத்தையும் கொடுமையையும் கூட அழகானதாக, இனியதாக ஏற்கத்தான் வேண்டும். இவற்றினுள்ளும் பராசக்தியின் சச்சிதானந்தம் தானே வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறது? அவளது வேஷம் தவிர வேறெதுவும் விசுவத்தில் உண்டோ? ஒரு பெரிய நடிகர் நல்ல கதாநாயகனாக வந்தால்தான் மட்டும்தான் ரசிக்கிறோமா? வில்லனாக வந்தாலும் ரசிக்கத்தானே செய்கிறோம்? அப்படியே அம்பாள் போடுகிற கொடிய வேஷங்களையும் ஆனந்தமாக ரசிக்க வேண்டும். இதில் மனிதனைப் பழக்கவே அவள் காளியாக வருகிறாள்.

சுந்தரமான தெய்வ வடிவங்களையே பார்த்துப் பழகிய தட்சிண தேசத்தவர்களான நமக்குக் காளி என்றவுடன் ஏதோ அச்சம் உண்டாகிறது. ஆனால் வங்காளத்தில் பாருங்கள், சின்னக் குழந்தைகள் கூட காளியைக் கட்டி முத்தமிட்டு அன்பு செய்கின்றன! நாமும் கால் நிமிஷம் மனத்தைச் சரிப்படுத்திக் கொண்டு காளியை உற்றுப் பார்த்து விட்டால் போதும்— எல்லையில்லாத பிரேமை பீறிக் கொண்டு வந்துவிடும். அவளது நிறம், அங்க அமைப்பு, ஆயுதங்கள் இவற்றின் தத்துவார்த்தம் எதுவும் தெரியாமலே, மகா தத்துவமான அன்பில் ஈடுபடுவோம். அழகாக இருக்கின்றன என்ற ஒரே காரணத்துக்காகத் தானே பல வஸ்துக்களை நாடிப்போய்ப் பாழாகிறோம்? எனவேதானோ என்னவோ அந்த அழகுகளுக்கு மாறான இந்தக் காளியின் அழகை மனம் ஆறுதலுக்காக நாடிப் பாய்ந்து செல்லும். இந்த மனோதத்துவக் காரணம் ஒரு புறம் இருக்க, காளியன்னையே இத்தகைய அன்புணர்ச்சியை உண்டாக்குகிறாள் என்பதுதான் முக்கியமான காரணம்.

ஒருத்தருக்குப் பகல் இன்னொருத்தருக்கு இரவு என்பதற்குத் திருஷ்டாந்தங்கள் நிறையப் பார்த்தோம். அதே ரீதியில் உலகப் பார்வையில் கோரமாக இருப்பது பாரமார்த்திகப் பார்வையில்

அழகாகிவிடும். காளி அப்படிப்பட்டவள் தான். அந்தப் பாரமார்த்திகப் பகலே நமக்கு இருட்டாக இருப்பதால்தான் அவள் கருநிறத்தவளாக வருகிறாள். கறுத்த கடல் நீர் கையில் எடுத்ததும் வண்ணமற்றதாகி விடுவதே போல், அவளை அணுகி அன்பில் அள்ளிக் கொண்டால் ஸ்படிகமாக இருப்பாள்—நம் அழுக்குகளையும் அழித்து ஸ்படிகமாக்குவாள். அழுக்குகளை அகற்றவே இத்தனை ஆயுதங்களை வைத்துக் கொண்டிருக்கிறாள். அவளது அம்பும், வில்லும் நம் புலனையும் மனத்தையும் வதைத்துப் புத்துருத் தரும். ஞான வாளால் நம் அகங்கார மண்டையை வெட்டிப் பிடித்துக் கொண்டு இருக்கிறாள். ('ஸப்த சதீ'யின்படி பிரம்மன் அவளைத் தரிசனம் செய்தபோது இத்தலை நீங்கலாக மீதம் உள்ள ஒன்பது கரங்களையே குறிக்கிறார். இன்னும் சுய அபிமானம் நீங்காததால் அதன் உருவகமான வெட்டுண்ட தலையை அவர் கூறவில்லை என்றும் எண்ணுவதுண்டு. ஆனால் அவர் இங்கு தேவியை 'கோரா' என்பது அவள் வெட்டுத் தலையைத் தாங்குவதாலேயே என உரைகாரர் கூறுவர்.) அவளது திரிசூலம் நம் முக்குணங்களைத் துளைத்து அழிக்கும். அவளது கதை நம் இச்சையை நொறுக்கி, 'அவள் இச்சையே எனது' என்று ஏற்கச் செய்யும். அவளது தர்மச் சக்கரம் நம் அதர்மங்களைக் கொய்யும்; அதுவே காலச்சக்கரமும் ஆகும். நம்மைக் கால வெள்ளத்திலிருந்து காத்து அமரராக்கவே அதைத் தரித்துள்ளாள் காளி. கால தத்வ அதீதமானவளே காளி— காலத்தை நடத்துபவள் அவ்ளே. அதனால்தான் காலமும் ஒடுங்குகிற பிரளயத்தில் இந்த ஸ்வரூபத்திலேயே அவள் பிரம்மனுக்குத் தரிசனம் சாதித்தனள். தனது சங்கத்தால் நமது மோகபாசம் விலகுமாறு கோஷிப்பாள். அதுவே நாத தத்துவமும் ஆகும். ஆன்மப் பயிருக்குச் சேதம் விளைவிக்கும் காமக் குரோதாதி பட்சிகளை விரட்டவே கவண்கல் (புசுண்டி) தரித்திருக்கிறாள். இரும்புக் குண்டாந்தடி (பரிகம்) 'நான்' என்பதன் லவலேசத்தைக்கூட அனுமதிக்காமல் ஒரே போடாகப் போட்டுக் கொலை செய்து சரணாகதியின் பரம சாந்தத்தைத் தருவது.

இவளுக்கு பத்து முகம்—ஆனால் இருபது கரம், இருபது கால் இன்றிப் பத்து கரம் பத்துப் பாதம் என்பதேன்? எட்டு திசை, மேல், கீழ் இவை சேர்த்தால் பத்துதான். இதற்கு அதிகமாக இடமே இல்லை. காலத்தைக் (Time) கடந்து காலத்தை ஒடுக்கும் காளி, இடத்தைக் (Space) கடந்து இடத்தை ஒடுக்கும் போது அனந்தத்தைக் குறிக்கும் பத்துப் பத்தாகவே முகத்தால், கையால், பாதத்தால் விரிகிறாள். பத்துப் பாதங்களால் பிரபஞ்சம்

முழுவதையும் துவைத்தாடி, பத்துக் கரங்களால் அதை முற்றிலும் வாரி எடுத்துப் பத்து வாய்களில் (முகங்களில்) பூரணமாக அடைத்துக் கொண்டு விழுங்கி விடுகிறாள்—இந்த பட்சணமே ரட்சணம்தான். அவளுள் அனைத்தும் செரித்து விடுமே! பத்து என்பதே அனந்தத்தைக் (Infinity) குறிக்கும் ஆதலால், 'இருபது' என்றால் இரண்டு அனந்தம், இரண்டு பூரணம் என்றாகும். பூரணத்தை எப்படி இரட்டிப்பதாக்குவது?

காளியைத் 'தாமஸீ' என்கிறது தேவீ மான்மியம். தமோ குணத்தவளே தாமஸீ. தமோ குணமாவது இருள், அஞ்ஞானம், செயலின்மை, சோம்பல், துன்பம் ஆகியவற்றுக்கு ஆஸ்பதமானது. இவளோ ஆனந்த வடிவினளாக, ஞான ஸ்வரூபிணியாக, அபரிமிதச் செயலாற்றலுடன் விளங்குபவள். உறங்கும் நாரணனையும் எழுப்புகிற ஒளி விழிப்பாக அல்லவா இருக்கிறாள்? இவள் எப்படித் தமோ குணத் தேவதையாவாள் எனில், பழைய பல்லவியைத்தான் திருப்ப வேண்டும்—ஒருத்தருக்குப் பகலாக இருப்பது இன்னொருத்தருக்கு இரவாகிறது. நவராத்ரி நாயகியாதலால், ராத்திரி-பகல் விஷயத்தை அலுக்காமல் கூறத் தான் வேண்டும். முக்கியமாக கார்வண்ணக் காளியேதான் ராத்ரி நாயகி. நமக்குத் தமஸாக இருப்பது பாரமார்த்திகத்தில் சத்துவமாயுள்ளது. ருத்ர சிவனை சம்ஹார மூர்த்தி, தமோ வடிவினர் என்பதும் இக்காரணம் பற்றி தான். அவர் செய்கிற சம்ஹாரம் நமக்குக் கொடும் தொழிலாகத் தெரிவதால் தமஸ் என்கிறோம். ஆனால் சம்சாரத்திலிருந்து தாற்காலிகமாகவேனும் விடுதலை தரும் பேரருள் அன்றோ சம்ஹாரம்?

''தேவீ மாஹாத்மிய'' பிரதம சரித நாயகி மஹா காளி. மத்திம சரித நாயகி மஹாலக்ஷ்மி. உத்தர சரித நாயகி மஹா சரஸ்வதி. லக்ஷ்மி திருமாலின் சக்தி. சரஸ்வதி பிரம்மனின் சக்தி என்ற ரீதியில், இந்தக் காளிதான் ருத்ர சக்தியாக இருக்க வேண்டும். ஆனாலும் ருத்ரன்—சக்தி என்று தம்பதியாக இருவரைச் சொன்னால், பிரளயத்தின் போது பிரம்மசக்தி தவிர இன்னொன்றும் சம்ஹரிக்கப்படாமலே இருந்தது என்று தோன்றும். இது அசம்பாவிதம். இதனால்தான் காளி ருத்ரனையும் சம்ஹரிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஊன்றி, ஊறிக் கவனித்தால் இங்கே சம்ஹாரமே கல்யாணம். எல்லாவற்றையும் சம்ஹரிக்கும் ருத்திரனையும் சம்ஹாரம் செய்து அவரது சடலத்தின் மீது நின்றாடுபவள் காளி. எப்படி நமக்கு சம்சாரத்திலிருந்து சிறிது விடுதலை ஏற்படுவதற்காக

ருத்திரன் சம்ஹரிக்கிறாரோ, அப்படியே அவருக்கும் அவரது தொழிலிலிருந்து ஓய்வு தரவே அவரையும் சம்ஹரிக்கிறாள் காளி என்றும் சொல்லலாம். பிரளயத்தில் எல்லா ஜீவராசிகளும் ஒடுங்கிவிட்டபின், ருத்திரனுக்குத்தான் ஆகட்டும், மற்ற தேவர்களுக்குத்தாம் ஆகட்டும், என்ன தொழில் இருக்கிறது? அவர்களையும் தன்பாற்படுத்தி ஒடுக்கிக் கொள்கிறது பிரம்ம சக்தி. மகாவிஷ்ணுவின் சரீரத்தை வதைக்காமலே, அவரை யோகத்தின் மூலம் தன் வசமாக்கிக் கொண்டது. ருத்ர சிவனையோ மிதித்து வதைக்கிறது! இதிலும் ஒரு தர்மம் இருக்கிறது. விஷ்ணு கோடாநு கோடி சரீரங்களைப் போஷித்து வளர்த்த பாலகர். அவரது திருமேனியை வதைப்பதா என்று பராசக்தி எண்ணுகிறது போலும்! ருத்திரன் இத்தனை தேகங்களையும் பிணமாக்கி, இடுகாட்டிலேயே ஆடி மகிழ்பவர். முயலகனை மிதித்து நடனமாடியவர் இவரே! எனவே அவரது தேகத்துக்கு அதே போல் அழிவு தருகிறாள் பராசக்தி, அதன் மீது ஏறி மிதித்து! இவள் காப்பாற்றினாளே, இந்தப் பிரம்மனை மட்டும் சும்மாவிடப் போகிறாளா என்ன?

மது-கைடபர் சம்ஹரிக்கப்பட்டபின் திருமாலை மீண்டும் கண் வளரச் செய்தாள். இந்தப் பிரம்மாவையும் காளி பிரளயத்தில் இழுத்துக் கொண்டாள். யுகப் பிரளயங்களுக்குப் பின் ஜீவர்கள் மறுபடி வரும்போது இதே பிரம்மாவும் வருவார். மகாப்பிரளயங்களுக்குப் பின் முற்றும் புது சிருஷ்டி தொடங்குகையிலோ பழைய பிரம்மா ஆயுசு முடிந்து அந்தப் பிரளயத்தோடு போயே போய் விடுவார். எத்தனையோ பிரம்மாக்களின் காலத்தை முடித்து அவர்களது கபாலத்தைக் கோத்து மாலையாகப் போட்டுக் கொண்டிருப்பவள் அல்லவா காளி? பிரம்மாவுக்கு இப்போது உயிரிடம் ஆசை ஒட்டிக் கொண்டிருக்கும் நிலையிலும்கூட பக்தி அதிகரித்தபோது, ''நீயே என்னை வதைத்தாலும் சரி, மனமொப்பி ஏற்கிறேன்'' என்றார் அல்லவா? இது மெய்யாகவே ஆவதுண்டு. எண்ணற்ற ஜீவர்களுக்குச் சரீரங்களைத் தந்தவர் என்ற காரணத்தால், மற்ற சரிரங்கள் யாவும் ஊழியில் அழிந்த பிற்பாடும் பல காலம் இவருக்குத் தேகத்தைத் தந்திருந்தாள். பிறகு அதை எடுத்துக் கொண்டாள். மதுகைடபர் பகையோடு எதிர்த்தபோது அதை எதிர்க்கிற உணர்வு இவருக்கு இருந்தாலும் உள்ளூர ஓய்வளிக்கும் பிரேமையிலேயே பராசக்தி தாக்கும் பிரளய வேகத்திலோ இவர் எதிர் நீச்சுப் போடவில்லை.

அப்படி அவர் மனமார லயிக்க வேண்டும் என்றேதான் இப்போது மதுகைடபரால் வதமாகாமல் அவரைக் காத்தாள்.

பிரம்ம சக்திக்குத் தனித்தனியாக சத்துவ, ரஜோ, தமோ வடிவங்களைச் சொன்னாலும் இவை எல்லாவற்றிலும் பக்தி முதிர்ச்சி கண்டவர்கள் அனைத்துமான ஒரே பரம்பொருளைத் தான் காண்பார்கள். பக்தி முதிர்ச்சி அற்றவர்கள் குறுகிய எல்லை கட்டி இவற்றை வழிபட்டாலும்கூட இத்தேவதை ஒவ்வொன்றுமே திரு அருள் கூர்ந்து பூரண பராசக்தியாக வருவதும் உண்டு. விஷ்ணுவின் யோக நித்திரையைத்தான் பிரம்மன் குறிப்பாகத் துதித்தார். அதை ஞான மயமாகக் கூட எண்ணாமல் மாயா சக்தியாகவே அவர் கருதினார். ஆனால் பரப்பிரம்மத்தின் ஆனந்த ஸ்வரூபமான மகா காளியே யோக நித்திரை என்கிற வைஷ்ணவீ மாயையாக அவருக்காக ஆவிர்பவித்தாள்! அன்னையின் கருணை அப்படிப்பட்டது! துயிலை விரட்டியவளே தமோகுணத் துயிலுமானாள்!

இந்தக் கதையை மேதஸ் முனிவரிடம் கேட்ட மன்னன் சுரதனுக்கு கடைசிவரையில் அகங்கார - மமகாரங்கள் அடியோடு போகத்தான் இல்லை. ராஜ்யாதிகார ஆசை போகவில்லை. விஷ்ணுவிடம் பிரார்த்திப்பதற்குப் பதிலாக, இப்போது விஷ்ணுவுக்கும் மேம்பட்டதாக அவனுக்குத் தெரிந்த தேவியிடமும் ராஜ்யத்தைத் தான் பிரார்த்திக்கப் போகிறான். இந்தக் கதை பின்னால் வரும், ஆயினும் இப்போதுள்ள அஞ்ஞான நிலை மாறி அப்போது அகங்கார மமகாரங்கள் பெருமளவு நலிந்து வெகுவாகப் பக்குவம் பெற்றிருப்பான். அவனது அந்த மனோபாவத்தை நன்றாகப் புரிந்து கொண்டே முனிவர், ''வைக்ருதிக ரஹஸ்யம்'' என்ற பிற்பகுதியில், ''இந்த மகாகாளியே கடக்க முடியாத வைஷ்ணவீ மாயை ஆகிறாள்; இவளை ஒருவர் ஆராதனை செய்தால் அப்படிப் பூஜித்தவனுக்குச் சராசரம் முழுவதையும் வசமாக்குவாள்'' என்கிறார். சராசர சம்ஹாரிணியே சராசர ஆட்சியும் தருகிறாள், பாருங்கள்!

எல்லாத் தெய்வங்களாலும் எல்லாவித அருளும் புரிய முடியும். ஆயினும் நம் அறிவு அனைத்திலும் ஈடுபட முடியாததால், ஓர் அம்சத்தில் அதனை ஒருமுகப் படுத்துவதற்கே, குறிப்பிட்டதொரு தத்துவத்துக்குக் குறிப்பிட்டதொரு தெய்வம் இருப்பதாகச் சொல்கிறோம். காளியின் பீஜாக்ஷரத்தைப் பார்த்தாலே இந்த உண்மை புரியும். அந்தக் கூட்டெழுத்தில் முதலாவதான 'க' தர்மத்தையும், இரண்டாவதான 'ல'* அர்த்தத்தையும், மூன்றாவதான 'ஈ' இன்பத்தையும், நான்காவதான மகர ஒற்று மோட்சத்தையும்

---

* ர என்றும் கொள்வதுண்டு. 'ல' வும் 'ர' வும் மந்திர சாஸ்திரங்களில் ஒன்றாகவே மதிக்கப் பெறும்; லௌகிக வழக்கிலும் கூடத்தான்.

தருகின்றன. எனவே அவள் குறிப்பிட்ட ஏதோ ஒரு சம்பத்தை மட்டும் அளிப்பாள் என்பதில்லை. இம்மந்திரத்தின் முதன் மூன்றங்கங்களான 'க்லீ' என்பதே நெகிழ்ந்து 'காலி' (காளி)யாயின. மேலும் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் கோர காளியின் பீஜாக்ஷரந்தான், மன்மதனுக்கும் உரித்தானதாக உள்ளது—''ஸாக்ஷாத் மன்மத மன்மத:'' எனப்பட்ட ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவுக்கும் உரித்தானதாக இருக்கிறது. பயங்கர ஸம்ஹாரிணியாக இவள் கருதப்பட்டாலும் இவளது பீஜாக்ஷரமோ, கவர்ந்திழுக்கும் ஆகர்ஷண சக்தியாக உள்ளது. பாபிகளையும் பிறவிச் சுழலிலிருந்து விடுவித்து, அதிவேகத்தோடு தன்னிடம் இழுத்துக் கொள்பவள் அன்றோ? பிரளயவேகத்தைப் போல், தப்பவொண்ணா இழுப்புச் சக்தி பிறிது உண்டோ? ஆக, தத்துவங்கள் air-tight compartment களாகப் பிரிந்து பிரிந்து இருக்கவில்லை. மனிதனுக்கு அறிவுப் பெருமை அதிகமாதலால் அதன் திருப்திக்காகத் தனித்தனி தத்துவங்களுக்குத் தனித்தனி மூர்த்திகளைக் காட்டி அருளுகிறாள் பராசக்தி. இவற்றிடம் பிடிப்பு அதிகமாக ஆக, தத்துவ நோக்கு மறைந்து அன்பு, அன்பு, அன்பு—அதொன்றே ஸர்வ வியாபகமாக நிற்கும். அந்த உயர் நிலைக்கு — உயிர் நிலைக்கு வராமல் சுரதனைப் போல் அன்பில் ஓரளவு முன்னேறினாலும் போதும், குறிப்பிட்ட தத்வ ரூபமாக நாம் எண்ணிய தேவதையே ஸாக்ஷாத் ஸர்வ தத்துவமான பரதேவதை தான் என்றறிவோம்.

நவராத்ரி மும்மூன்று நாட்களாக துர்கா—லக்ஷ்மி—ஸரஸ்வதிக்கு உரியது. லக்ஷ்மி மத்திம சரித நாயகி, ஸரஸ்வதி உத்தர சரித நாயகி எனில், இந்தப் பிரதம சரித நாயகியான காளிதான் துர்க்கையாக இருக்கவேண்டும். தட்சிண தேசத்தில் துர்க்கையும் கோரதேவதை என்றே நினைத்தாலும், வடக்கே கௌரியைப் பரம ஸௌம்யமாகவும்; துர்க்கையை ஸௌம்யம், கோரம் இரண்டும் கலந்ததாகவும்; காளியைப் பரம கோரமாகவும் கொள்கிறார்கள். துர்க்காதான் காளி என்றால் அவள் ரூபத்தில், காரியத்தில் கோரமானால்கூட குணத்தில், இதயத்தில் ஸௌம்யம்தான். ''துர்-கா'' என்றால் அடைதற்கரிதானவள். ரூபத்தால், ஆற்றலால் அவள் அப்படித் தோன்றினாலும், நாம் அன்பைக் கொட்டிவிட்டால் துர்கமாக—கோட்டையாக—நம்மைக் கட்டிக் காக்கும் அம்மா அவளே!

இந்த மது-கைடபர் வதப் பகுதியை முடிக்குமுன் காளி மாதாவை மனமார நினைத்து நமஸ்கரிப்போம். விஷ்ணுவின்

அதைப் பிரம்மன் துதிக்க, இந்த மகாசக்தி வான் பரங் கருணையால் தானாகப் பிரசன்னமானவள் அல்லவா? **'ஏவமேஷா ஸமுத்பன்னா ப்ரஹ்மணா ஸம்ஸ்துதா ஸ்வயம்'** என்று இவ்வரலாற்றின் கடைசி சுலோகத்தில் இதையே பூரித்துக் கூறுகிறார் முனிவர். 'ஸ்வச்சந்த மரணம்' என்கிறபடி தாமாகவே மரணத்தை ஏற்க வேண்டிய மதுகைடபரை வதைக்க 'ஸ்வச்சந்த ஜனன' மாகத் தானே பிறந்த தாய் அவள்! மோக்ஷம் உள்பட எதுவும் அவள் கிருபையால் மட்டுமே கிடைக்கிறது. இந்தக் கிருபையை அவளேதான் ஸ்வயமாகச் சுரக்க வேண்டும். நம் பிரயத்தனங்கள் அனைத்தும் வெறும் விளையாட்டுத்தான்! நம் சாதனை தன்னை அசைப்பதுபோல் அவள் விளையாடி, விளையாடிக் கிருபை செய்கிறாள். ஆனால் அது முழுக்க முழுக்க அவள் கையிலேயே உள்ள விஷயந்தான். கிருபையே செய்யாமல்கூட அவள் இருந்து விடலாம். ஆனால் அப்படியின்றி வெள்ளமெனப் பொழிகிறாள். துர்கா என்ற அசாதாரண நாமத்துக்குரிய காளிரூபத்தில் (தேவீ மான்மியத்தின் பெயரே ''துர்கா ஸப்தசதீ'' என்றுதானே உள்ளது?) இந்தக் கிருபா வெள்ளம் பிரளயப் பிரவாகமாகவே கொந்தளித்துப் பாய்கிறது. அதனால்தான் கோர மூர்த்திக்கு மட்டுமே **'பத்ர காளி*'** என்ற பெயர் உள்ளது. 'பத்ரம்' என்றால் பரம க்ஷேமம் — மகா மங்களம்.

பிரம்மானந்தமாகிய மாகாளியின் மலரடி பணிவோம். மற்ற ஆனந்தங்கள் வெளிவஸ்துக்களைப் பொறுத்தவை. எனவே அவை சாசுவதம் அல்ல. வெளி விஷயங்களை நாம் அடக்கி வைக்க முடியாது. அவை ஓடிப்போகும். அப்போது, அவற்றுடன் வந்த ஆனந்தமும் அழிந்துபோகும். ஆனால் வெளி என்றும் உள் என்றும் ஏதுமே இல்லாத ஒரே நிறைவான பிரம்மம் தன்னிலேயே ரமித்துக் கொள்கிற ஆனந்தம் உண்டே, அதற்கு முடிவுண்டோ? அந்தக் களிப்பு வடிவக் காளியன்னையை அன்போடு, அறிவோடு, அடக்கத்தோடு, ஆனந்தத்தோடு வணங்குவோமாக!

---

* தட்ச யாகத்தை நாசம் செய்தவளே பத்ரகாளி என்றும் இவள் நவராத்ரி அஷ்டமியில் அவதரித்தாள் என்றும் ''தேவீ பாகவதம்'' (ஸ்க. 3-அத். 27) கூறும்.

உச்சி :

இலக்குமி என்னும் ஞான இலக்கு

1. மகிஷன் பெற்ற மகிமை

ரம்பன், கரம்பன் என்ற இருவர் அசுர சகோதரர்கள். ரம்பன் மூத்தவன்; கரம்பன் இளையவன். உலகை இவர்கள் வாட்டி வதைத்தாலும் தங்களுக்கிடையே பரஸ்பரப் பாசம் மிக்கவர்கள்.

எந்தப் புராணத்தைப் பார்த்தாலும் அசுர சோதரரிடையே அந்நியோந்நிய அன்பு நிலவுவதாகவே தெரியும்; தாரகன்-சூரன் - சிம்மமுகன்; ஹிரண்யாட்சன் - ஹிரண்யகசிபு; ராவணன் - கும்பகர்ணன்; மனிதராகப் பிறந்தும் அரக்க குணத்தோடிருந்த துர்யோதனாதியர்; மேலே கண்ட விருத்தாந்தத்திலேயே வரும் மது-கைடபர் — என்றிப்படிப் பல உதாரணம் காட்டலாம். சாதுக்கள் சங்கமாகக் கூடுவது போலவே துஷ்டர்களும் சேர்ந்து இன்புறுவர். தனித்து இன்பம் காண எவராலும் முடியாது — ஞானி தவிர. அசுரருக்கும் கூட்டு வேண்டியிருக்கிறது. உடன் பிறந்தவர்களுடனேயே இயல்பாகக் கூட்டு சேர முடிகிறது. அசுரர்கள் தங்களது சோதரத்துவ நேசத்திலும் அசுர பலத்தைக் காட்டுவார்கள் — தேவரிடையும் மனிதரிடையும் கூடக் காணக் கிடைக்காத பாசப் பிணைப்பை இங்கு பார்ப்போம்,

ரம்பனும் கரம்பனும் இப்படிப்பட்ட பாசச்.சோதரர்கள். இந்த உலகை வாட்டி வதைப்பது போதாது, மூவுலகையும் வாட்டி வதைக்க வேண்டும் என்று அவர்களது ஆசை. அதற்கேற்ற அபரிமித சக்தியைப் பெறுவதற்காகத் தவம் செய்வதென முடிவு செய்தனர்.

தவப்பயனாக யாரேனும் ஒருத்தனுக்குத் திரிலோக ஆதிபத்தியம் கிடைத்தாலும் போதும்; ஒருவன் பெற்ற ஆட்சி மற்றவனும் பெற்றதே போலத்தான் என்பது இவர்களது பாச பந்த சித்தாந்தம். அதுவே இவர்களிடை ஒப்பந்தமும் ஆகும். அசுரர்களின் தீய குணங்களைச் சொல்லும் பௌராணிக

முனிவர்கள், ஒளிவு மறைவின்றி அவர்களது பாந்தவ்யம், நன்றி விசுவாசம் ஆகியவற்றையும் சொல்கிறார்கள்.

எடுத்த காரியத்தை விடா முயற்சியுடன் தீவிரமாகப் பின்பற்றுவதிலும் அசுரர்கள் ஈடு அற்றவர்கள். மெய் வருத்தம் பாராமல், பசி நோக்காமல் , கண் துஞ்சாமல் பயங்கரத் தவம் தொடங்கினர் ரம்பனும் கரம்பனும்.

பஞ்சநதம் என்கிற ஐயாறுகள் கலக்கும் புண்ணிய சங்கமத்தில் (இது பஞ்சாபாகவோ நமது திருவையாறாகவோ இருக்கலாம்) நீருக்குள் மூழ்கி, ஜல ஸ்தம்பனம் செய்து கோரத் தவமியற்றினான் கரம்பன். இவன் நீருள் மூழ்கியிருக்க, அண்ணனான ரம்பனோ, இதே பஞ்சநதக் கரையில் மேலே கொளுத்தும் சூரியனும், நாற்புறமும் தகிக்கும் நெருப்பு வெள்ளமுமாகப் பஞ்சாக்கினி மத்தியில் தவம் செய்தான்.

தபோ பலத்தால் இவர்கள் தேவலோக ஆட்சியையும் கைப்பற்றிவிடுவார்களோ என நடுங்கினான் இந்திரன். இவர்களது தவத்தைக் கலைத்தாலே, தான் இந்திர பதவியைக் காத்துக் கொள்ள முடியும் எனக் கருதினான். ஆயினும் நெருப்பிலே மூழ்கியிருக்கும் ரம்பனை அணுகவே அவனுக்கு அச்சமாயிருந்தது.

நீருள் தவமிருக்கும் கரம்பனிடம் சென்றான் இந்திரன் — நீர் வாழும் முதலை உருவத்தில். அப்புறம் அவன் காரியம் வெகு எளிதில் முடிந்து விட்டது. நாம் வாழைப் பழத்தை விழுங்குவது போல், அநாயாசமாக இந்திர முதலை கரம்பன் காலைக் கவ்விக் கொன்றது.

ஆனால் கரம்பன் வாழைப்பழம் அல்ல. 'ரம்பன்' என்றால் தான் வாழை என்று பொருள். தேன் கதலி போன்ற தேவர் காதலிக்கு இதனாலேயே 'ரம்பை' என்று பெயர். இயற்கையில் உண்டாகிற வாழையடி வாழை போல், மானுட இயல்பில் ஆதி மாயையால் ஏற்பட்டு வழிவழி வந்துள்ள இந்திரிய சுகம்தான் 'ரம்பன்' என்ற அசுரன். கரம்பம் என்றால் மாவில் தயிரைக் கொட்டிப் பிசைந்த பணியாரம். இதுவும் வாழைபோல்வழுக்கிக் கொண்டு வயிற்றுள் போகும் ருசிப்பண்டம் தான். ஆனாலும் இது மனிதனால் செய்யப்பட்டது. இயற்கை தந்த வஸ்துக்களைக் கொண்டு செயற்கையாகத் தயாரிக்கப்பட்டது. இயல்பாக எழுகிற இன்ப நாட்டங்களை இயற்கையான சாதனங்களைக் கொண்டு பூர்த்தி செய்து கொள்வது போதாதென்று, அவற்றை இவனாக வேறு விஸ்தரித்து, வேண்டாத வஸ்துக்களைத் தன் புத்தி சமத்காரத்தால் ஏராளமாகச் செய்து, இவற்றை நாடி

ஓயாமல் அலைகிறான் அல்லவா? இவனாகப் படைத்துக் கொண்டிருக்கும் இந்த சுகபோக சாதனங்கள் எனப்படும் துன்ப உபகரணங்கள்தான் கரம்பன்.

இந்திரியங்கள் இந்த அநாவசியங்களைத் தேடிப் போகாமல் வெற்றிகொள்வது முயற்சியால் தாற்காலிகமாகவேனும் சாதிக்கக்கூடியதே. இதனால்தான் இந்திரியங்களின் தேவதையான இந்திரன் கரம்பனை வெல்ல முடிந்தது. ஆனாலும் இது தாற்காலிக வெற்றிதான்.

முதலில் போக வஸ்துவைக் காரியத்தில் அநுபவிப்பது நிற்கும். இருந்தாலும் மனத்தில் அதன் நுகர்ச்சிச் சுவை இருந்து கொண்டே இருக்கும். வெளி வஸ்துவாக இருந்ததை விட, வெளியில் அநுபவிக்க முடியாமல் மனத்தில் மட்டும் மண்டியிருக்கும்போதே அது பொறுக்கவொண்ணாமல் உபத்திரவம் விளைவிக்கும். செயற்கை வஸ்து போனபின் அதில் கண்ட பொய்யின்பம் இயற்கை உந்துதலில் கரைந்து விடும். அதாவது தாற்காலிகமாகச் செத்த கரம்பனே இப்போது புனர் ஜன்மமெடுத்து ரம்பனாகி விடுவான். இப்படித் தாற்காலிக அழிவாக இல்லாதவாறு இந்திரியங்களுக்கு மேம்பட்ட மகாசக்திதான் — இந்திரனுக்கும் மேம்பட்ட பராசக்திதான் — அதை ஒரு வழியாக சம்ஹாரம் செய்து ஒழித்துக் கட்ட முடியும்.

ஏன் இப்படிச் சொல்கிறோம் என்பதை இந்நூலில் பிற்பாடு ரக்தபீஜனைப் பற்றிப் படிக்கும்போது விளங்கிக் கொள்வீர்கள். அது எப்படியாயினும், புருஷ யத்னத்தாலேயே தாற்காலிகமாகவாவது போக்ய வஸ்துக்களில் ஆசையை ஒழிக்கலாம்.

ஆனால் இயற்கை உந்துதல்களையும், இயற்கை தருகிற இன்பங்களையும் தாற்காலிகமாகக்கூட நாமாக வெல்வது மிகவும் கஷ்டம். அது இந்திரியங்களின் சக்திக்கு அப்பாற்பட்டது. இதனால்தான் ரம்பனை அணுகவே அஞ்சினான் தேவராஜன்.

கரம்பன் எழுப்பிய மரண ஓலம் ரம்பனின் தவத்தைக் கலைத்தது. தம்பி மாண்டான் என்றதும் தமையன் உள்ளம் தாங்கொணாமல் தவித்தது. அலறினான்:

''ஹே, அக்கினி! இனி பெருவாழ்வுக்காக உன்னில் நான் மூழ்கித் தவம் செய்யப் போவதில்லை. சாகவே விரும்புகிறேன். என் இளையவன் மாண்டபின் நான் உயிர் வாழ விரும்பவில்லை. என்னை எரித்துவிடு'' என்றான்.

ஆனால் அக்கினியாலும் அவனை எரிக்க முடியவில்லை. தீயால் தகிக்க வொண்ணாத தவ வலிமை பெற்றதால்தானே இவன் அதற்குள்ளேயே இருந்து கொண்டு மிக உக்கிரமான

தவத்தைச் செய்ய முடிந்தது? இவனாக விட்டுக் கொடுக்க நினைத்தாலும் இவனது சக்தி விடுவதாக இல்லை. மது-கைடபர் வரலாற்றில் இன்ப துன்பங்களின் ஸ்வச்சந்த மரணம் பற்றிப் படித்தோம். இன்ப-துன்பம் தம்மைத் தாமே தீர்த்துக் கட்டிக் கொள்ள விரும்பினால் தான் உண்டு. ஆனால் அதன் பிறகும் அவற்றைத் தோற்றுவித்த ஆதார உந்தல்கள் தாமாகச் சாகமுடிவதில்லை!

அசுர சங்கற்பம் இதற்காகச் சளைத்து விடவில்லை. செத்தே தீருவது என்ற உறுதியை ரம்பன் விட்டானில்லை. புகை எனப் படர்ந்த தன் சிகையை ஒரு கையால் தானே தூக்கிப் பிடித்துக் கொண்டு, மற்ற கரத்தால் தன்னுடைய கழுத்திலேயே கத்தியைப் பிரயோகிக்கப் போனான். எத்தனையோ ஜீவராசிகளின் கழுத்தை வெட்டித் தள்ளியவன் இப்போது சகோதர பாசம் என்ற வேள்வியில் தன்னையே வெட்டிப் பலி தந்து கொள்ள முற்பட்டு விட்டான்!

இவனது தவத்தின் உக்கிரத்தோடு, சங்கற்ப உக்கிரமும் சேர்ந்தவுடன் அக்கினி பகவானாலேயே தாங்கவொண்ணாமல் போயிற்று. ரம்பன் முன் பிரத்தியக்ஷமானான் தீத்தேவன்.

''வேண்டாம் இந்த ஆன்மஹத்தி! நீ எது விரும்பினாலும் தந்தேன்'' என்றான் தீக்கடவுள், தீய அசுரனின் நேயச் சக்தியை மதித்து. சகல தேவதைகளுக்கும் அவியை எடுத்துச் சென்றளிப்பதால் அக்கினிக்கு அவர்கள் அனைவரிடமும் மிகுந்த செல்வாக்கு உண்டு. இவன் வாக்கை அவர்கள் காக்காமலிருக்க மாட்டார்கள். இந்தத் தைரியத்தினால்தான் 'எந்த வரமாயினும் தருகிறேன்' என்று சொல்லி விட்டான்.

ரம்பன் தன் தம்பியின் உயிரை மீளவும் கேட்டிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. என்ன இருந்தாலும் அது அசுர மனம் அல்லவா? அதில் சகோதர வாஞ்சையின் சத்துவத்தைவிட, வஞ்சனை செய்த இந்திரனைப் பழிவாங்குகிற வெஞ்சினம்தான் அதிகமாகக் குமுறிக் கொண்டிருந்தது. இப்போது அதுவே வெளிப்பட்டு வெடித்தது.

''இந்திரனை வெல்லக்கூடிய மகனை எனக்கு உவந்து அளிப்பாயாக'' என்றான்.

அமுதம் உண்ட தேவர்களைக் கொல்ல முடியாது. எனவே தான் 'கொல்ல' என்காமல் 'வெல்ல' என்றே வரம் கேட்டான்.

தானே இந்திரனை வெல்ல வேண்டும் என்று கேட்காமல் இதற்காகப் புத்திர வரம் யாசித்தான். தம்பி செத்தபின் இவனுக்கு யுத்த உற்சாகமே போய் விட்டது போலும்! தானும்

மரண தேவதையைத் தழுவவே விரும்பினான் போலும்! எனவே பிள்ளை வரம் கேட்டிருக்கிறான்.

அக்கினி முன்யோசனையில்லாமல் வாக்குக் கொடுத்து விட்டான். இப்போது அதை மாற்றுவது இயலாத காரியம். சாட்சாத் அக்கினியே அசத்தியம் மொழிவதென்றால், உடனே பிரபஞ்சம் தன் தருமத்தில் தடுமாறி, அண்ட கோளங்கள் மோதிக் கொண்டு சர்வநாசம் ஏற்பட வேண்டியதுதான். இதை விட இந்திரனுக்குத் தோல்வி தருவதே எவ்வளவோ சிலாக்கியம்.

''நீ வேண்டிய வரம் தந்தேன்'' என்று கூறி மறைந்தான் தீக்கடவுள். இவன் தேனாகத் தந்த வரமே தேவருக்கு இவன் நாவினாற் சுட்ட புண்ணாயிற்று!

★ ★ ★

ஆலமரத்தடியில் ஒரு பெண்ணெருமையைக் கண்டான் ரம்பன். விரைவில் சந்ததியை விருத்தி செய்துவிட்டுத் தம்பி சென்ற வழி தானும் தொ -ர விரும்பிய ரம்பன் உடனே எருதாக வடிவம் எடுத்துக் கொண்டு அந்த எருமையை இணையாக்கிக் கொண்டான். அசுர-அரக்கர் தாங்கள் விரும்பிய வடிவங்களை எல்லாம் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குத் தரிக்கக்கூடிய காமரூபிகளாவர். இவ்வாற்றலாலேயே ரம்பன் எருமைக் காளையானான்.

இந்தப் பெண்ணெருமையிடம் முன்னரே மையலுற்றிருந்த ஓர் உண்மையான காளை, புதிதாக ஓர் எருது அதனுடன் உறவு கொள்வது கண்டு சீற்றமுற்றது. காமவெறியும் கோபவெறியும் கை கோத்து விட்டால் அப்புறம் கேட்பானேன்? ராக த்வேஷக் கூட்டுச் சக்தியைவிடப் பெரிய அசுரத்தனமும் உண்டா என்ன? அந்தக் காளையும் அரக்க பலம் கொண்டது. அந்த ஆத்திர வேகத்திலே, ரம்பன் என்கிற காளையைத் தன் கொம்புகளால் ஆழக் குத்திக் கொன்றே விட்டது.

இயற்கையான புலனின்பங்கள் ஆசையிலும் (ராகத்திலும்) துவேஷத்திலும் நம்மைத் தள்ளுகின்றன. ஞானத்தின் மூலம் புலனை அடக்க நம்மால் முடிவதில்லை. கடைசியில் ஒரு நாள் நம் காமமும் கோபமுமே எல்லைமீறிப் போகும்போது புலன்களால் அதைத் தாங்க முடியாமல் சாவு உண்டாகிறது. தன் சுமையாலேயே மாளுவது! ஆனால் ஞானத்தில் மாளுகைக்குப்

பின் மீளுகை இல்லை. காமக் குரோதாதிகளின் நெருப்பிலே மாளுகிற மானுடனோ மறுபடி பிறந்து, விட்ட இடத்திலிருந்து அவல வாழ்வைத் தொடங்குகிறான். (உலகிலே மாந்தர் பல நோய்களின் மூலமே மரிப்பதாகத் தோன்றினாலும் கூட, பெரும் பாலும் இந்த நோவுகளுக்கு அவர்கள் எதிர் நீச்சுப்போட முடியாததற்குக் காரணம் ஆதியிலிருந்து காமக் குரோதாதிகளால் அவர்கள் தளர்வுற்றதுதான்.) காமக் குரோத வசப்பட்ட ஒரு காளை தன்னைப் போலவே வடிவம் பெற்ற — அதாவது தன் இனமே ஆகிய — ரம்பன் என்கிற புலனின்பத்தைக் கொன்று போட்டது. இந்திரனாலும் முடியாததை சாதித்து விட்டது.

ரம்பன் எருமை வடிவை விட்டுச் சுய உருப்பெற்று விழுந்து மாண்டான்.

அவனது பரிஜனங்கள் அவனுக்கு தகனக் கிரியை தொடங்கினர்.

சிதையில் தீ மூட்டியாயிற்று. அப்போது ஓடிவந்தது அவனோடு இல்லற இன்பம் கண்ட அந்தப் பெண் எருமை. உத்தம பதிவிரதையாக அதுவும் தீப்பாய்ந்து விட்டது!

தேவரையும், மனிதரையும் விட இழிவாகத் தோன்று வோரிடம் உள்ள உத்தமப் பண்புகளைப் புராண கர்த்தர்களான முனிவர்கள் மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டத் தயங்குவதில்லை. முகிற் கருமையிலும் வெள்ளி விளிம்பு இருப்பதுபோல, மூட எருமையிடமும் முற்றிய நேசம் மிளிர்ந்திருக்கிறது.

எருமை ஸஹகமனம் செய்தவுடன் அதைக் கண்டோர் அனைவரும் தம்மை அறியாமல் ஆஹாகாரம் செய்தனர்.

மீளவும் அவர்கள் 'ஆஹாகாரம்' செய்யுமாறு இன்னொரு சம்பவமும் நிகழ்ந்தது.

எருமை பாய்ந்த வேகத்திலே அதன் கருப்பிண்டம் ஒன்று வெளியே வந்து விழுந்தது.

இந்தக் கருப்பிண்டம் வளர்ந்துதான் மஹிஷாஸுரனாக ஆயிற்று.

இவனையே ரம்பன் அக்கினியிடமிருந்து வரமாகப் பெற்றிருக்கிறான்.

அன்னை-தந்தை இருவரையும் 'உருட்டி' விட்டுத் திரு அவதாரம் செய்திருக்கிறது இந்த 'திவ்விய'க் குழந்தை.

இன்று பிறந்த 'ஆஹாகாரம்', இன்னும் பல காலத்துக்கு ஸத்துக்களின் 'ஐயோகார'மாகப் போகிறது!

⋆ ⋆ ⋆

ஞானம் உள்ள காலமாக, அதன் ஓர் அங்கமாக உள்ளது அஞ்ஞானம். அந்த அஞ்ஞான வடிவம்தான் எருமை, மகிஷம், மகிஷன். எனவே இதைப் 'பிறந்ததாக'ச் சொல்வதே ஒரு விதத்தில் பொருந்தாதுதான்.

அஞ்ஞானத்தால் சிற்றின்ப நுகர்ச்சிகள் ஏற்படுகிறது. அந்தச் சிற்றின்ப நுகர்ச்சிகளாலேயே அஞ்ஞானம் வளருகிறது. நுகர்ச்சி முடிந்தபின் ஏற்படுகிற தாபத்தால் அஞ்ஞானம் கொழுந்து விட்டெறிகிறது. இந்த அமோகக் கிளர்ச்சியை ஒரு புதுப்பிறவி என்றே சொல்லிவிடலாமோ, என்னவோ?

ஆக, மகிஷாசுரன் பிறந்துவிட்டான்.

மற்ற அசுரர்கள் இயல்பாக கோர வடிவில் மானுடமான அவயவங்கள் படைத்தவர்கள். தாங்கள் இஷ்டப்பட்டால் மற்ற மிருகங்களின் வடிவம் கொள்வர். அத்தனை விலங்குகளின் குண விசித்திரங்களும் ஒரு ஜீவனுக்குள் ஒளிந்து கொண்டுதானே இருக்கின்றன!

இந்த மகிஷனோ இயற்கையாகவே எருமை வடிவம் பெற்றிருந்தான். விரும்பியபோது எருமைத் தலையும், மானுடமான உடலும் எடுத்துக் கொள்வான். ஏனைய மிருக, மானுட, தேவ வடிவங்களை ஏற்கும் சக்தியும் பெற்றிருந்தான்.

ஆகா, அவனது சக்திதான் எப்படிக் கட்டுக்கடங்காமலிருந்தது! எருமை முரண்டுகொண்டு நாலுகால் பாய்ச்சலில் வந்தால் யாரும் அதைச் சமாளிக்க முடிவதில்லை என்பதைப் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம் தானே? ஆனால் இதே மகிஷம் மெத்தனமாக நடுச்சாலையில் படுத்துக் கிடக்கத் தீர்மானித்து விட்டாலோ, எந்த ஆபத்து அணுகி வந்தாலும் அது அசைந்து கொடுப்பதில்லை என்பதையும் பார்க்கிறோமே! நடுச்சாலையை விட, சேற்றுக் குட்டையாக இருந்தால் இன்னும் சிலாக்கியம்! அதை மேலும் குழப்பியபடி எருமையார் ஹாய்யாகப் படுத்து விட்டால் யுகப் பிரளயமே வந்தாலும் அசைவாரோ? அஞ்ஞானத்தின் செயல் வேகம், செயலிழந்த சோம்பல் இரண்டுக்குமே ஓர் உருவமாக மகிஷத்தைச் சொல்கிறோம்.

நம் கதாபாத்திரரான மகிஷாசுரனார் சோம்பியிருந்ததாகவே தெரியவில்லை. போருக்கு மேல் போர் என்று செய்து ஒவ்வோர் உலகாக வசம் செய்து கொண்டான். அவனுக்குப் பக்கபலமாக மகாவீர அசுரர் பலர் துணை நின்றனர். பகவான் அவதரித்தால் தேவ சக்திகளும் அவருக்குக் கைங்கரியம் செய்ய உடன் பிறப்பது போலவே, ஒரு மகாசுரன் பிறந்தாலும் அவனுக்கு ஆக்கத்தை, ஊக்கத்தைத் தர ஒரு அசுரப் பட்டாளம் துணையாகப் பிறந்து விடுகிறது. சூரபத்மன், ராவணன் முதலியோரது சேனைகளில்

எப்பேர்ப்பட்ட மாவீரர்கள் இருந்தனர்? இறைவனின் சமதர்மம் அதி விசித்திரம்தான்!

சிக்ஷுரன், சாமரன், உதக்ரன், கராளன், உத்ததன், பாஷ்கலன், தாமிரன், அந்தகன், உக்ராஸ்யன், உக்ரவீரியன், மஹாஹநு, பிடாலன், துர்தரன், துர்முகன், மஹாவீரியன், மதோத்கடன், தனாத்யட்சன், அஸிலோமன், காலன், பந்தகன், பரிவாரிதன் என்றிப்படி 'பாகவத'மும் 'மான்மிய'மும், பட்டியல் தரும் ஏராளமான படைத் தலைவர்களோடு வெற்றி எட்டுத் திக்கும் எட்ட உலகனைத்தையும் தன் ஆளுகையின் கீழ்க் கொணர்ந்தான் மகிஷன்.

வெற்றி மதத்தில் தானே உலகத் தலைவன், தானே கடவுள் என்று மஹிஷன் எண்ணத் தலைப்பட்டு விட்டான். யாகங்களில் தேவர்களை நீக்கித் தனக்கே அவிர்பாகம் அளிக்க வேண்டும் என்று அந்தணாளர்களைக் கொடுமைப் படுத்தினான்.

ரம்பன் கேட்ட வரம் வேலை செய்யத் தொடங்கியது. இந்திரனை வெல்கிற மகனை அல்லவா அவன் வேண்டினான்? மகிஷன் யோசித்தான்: 'இந்த தேவர்களுக்கு அவிர்பாகம் இல்லாமற் செய்தால் மட்டும் போதுமா? தேவலோகமே அவர்களுக்கு இல்லை என்று செய்து விட வேண்டும். பூவுலகம் முழுதையும் வசமாக்கிக் கொண்ட நான் காலதாமதமின்றி தேவருலகின் மீது படை எடுத்து வெல்ல வேண்டும்!'

அவ்விண்ணையும் சாடுவது என்று தீர்மானித்து விட்டான் மகிஷன். மகா பராக்கிரமசாலியாதலால், தர்ம யுத்த முறைப்படி பகைவனும் தன்னைப் போருக்குத் தயார்ப்படுத்திக் கொள்ள அவகாசம் வேண்டும் என்கிற நீதிப்படி ஒரு தூதுவனைத் தேவசபைக்கு அனுப்பி வைத்தான்.

''அற்பப் பதரான இந்திரன் தானாகத் தேவலோகத்தைக் காலி செய்துவிட்டு, என் பணியாளாக வெளியேறுகிறானா, அல்லது என்னிடம் போரில் தோற்று அகதியாகத் துரத்தப்படப் போகிறானா என்று விசாரித்து வா. எனக்கு எதிர் முகம் கொடுப்பது அவனால் இயலாத காரியம் என்றும், என் சேனாபலத்துக்கு எதிர்முகம் தருவது தேவப் படையால் முடியாத காரியம் என்றும் அவனுக்கு உணர்த்து. எல்லாவிதத்திலும் அவனை விடப் பெரியவனான என்னை அவன் தஞ்சம் புகுவதே தகும் என்று எடுத்துக்கூறி வா'' என்று கூறித் தூதனை அனுப்பினான் மகிஷன்.

தூதன் தேவசபைக்குச் சென்றான். ''உன்னை விட எல்லா விதத்திலும் பெரியவர் எங்களது மகா ராஜாதி ராஜ மகிஷாசுர

மாமன்னர் பிரான்'' என்று தூதன் கூறியதும் தேவராஜன் பகபகவென்று நகைத்துவிட்டான்.

''ஆம், ஆம், எல்லாவிதத்திலும் என்னைவிடப் பெரியவர் தான். எனக்கு இரண்டே கால்; மகிஷத்துக்கு நாலு பாதங்கள் அன்றோ? என் ஆகிருதியைவிட, நிறையைவிட மகிஷத்தின் ஆகிருதியும் எடையும் எவ்வளவோ அதிகம்தான். எனக்கு அடியோடு இல்லாத கொம்புகள் எருமை மன்னருக்கே நீண்டு வளைந்து முறுக்கேறியிருக்கின்றன. அதோடு, வாலுக்கு நான் எங்கே போவேன்? நான் உண்பது சிறிதளவு அமுதம் எனில் மகிஷனாரோ வைக்கோற் போர்களையும் புல்லுக் கட்டுக்களையும் வஞ்சனையில்லாமல் வயிற்றில் தள்ளுகிறார். வாஸ்தவம் தான். என்னைவிட உன் மன்னர் மிகமிகப் பெரியவர்தான்!'' என்று வெடிச் சிரிப்புச் சிரித்தான் வானவர் தேவன்.

கேலிப் பேச்சை மாற்றி, மகிஷனை யுத்தரங்கத்தில் சந்தித்து நிர்மூலமாக்கப் போவதாக வீர வாசக மறுமொழி கூறினான் தேவராஜன்.

மகிஷனிடம் திரும்பி வந்த தூதன் தயங்கி நின்றான்.

''..ம், சொல் எல்லாவற்றையும்! என்ன சொன்னான் அந்தக் கையாலாகாத இந்திரன்?'' என்று மிரட்டினான் மகிஷன்.

எருமைப் பிரபாவத்தைப் பற்றி விண்ணவர் கோன் விளம்பியதை எப்படித் திருப்பி உரைப்பான் தூதன்? வெகு சதுரனாக, ''தனது நலனையே அபேட்சிக்கும் தாசனானவன், பிரபுவின் சந்நிதியில் அவருக்கு இனிக்கிற மகிமை மொழிகளைக் கூறுவதன்றி, மாறாகப் பேசுவனா? மொத்தத்தில் விஷயம் இதுதான்: தேவர்கள் போருக்குச் சித்தமாக உள்ளனர்'' என்றான்.

''பேஷோ பேஷ்!'' என்று உற்சாக ஓலமிட்டான் போர்வெறி கொண்டிருந்த மகிஷன். ''எங்கே போர் புரிந்து என் பிரபாவத்தையும், பிரதாபத்தையும் காட்டுவதற்கின்றித் தஞ்சம் என்று எடுத்த எடுப்பிலேயே வந்துவிடுவானோ என்றுதான் நானும் விசாரப்பட்டேன். போருக்கே தயாராகி விட்டானா? நல்லது, நல்லது, வரட்டும்! ஒரு இந்திரன் என்ன? கோடி இந்திரர்கள் வரட்டும். சேனா நாயகர்காள்! இப்போதே நமது எண்ணிறந்த படைகளனைத்தையும் திரட்டிப் புறப்படுவோம்'' என்று ஆக்ஞையிட்டான் அசுரேந்திரன்.

அப்புறம் என்ன? தேவாசுர யுத்தம் நடந்தது. சம பலம் வாய்ந்த எதிராளிகளின் மோதலாக இருந்தது அப்போர். நீண்ட

காலம் யுத்தம் நடந்தும் வெற்றி தோல்வி நிர்ணயமாகவில்லை. ஆயினும், அமுதுண்டதால் மரணத்தைக் கடந்திருந்த தேவர்க்கு மரண பயமில்லை. அசுரரால் மரண பயமின்றிப் போர் புரிய முடியவில்லை. மகிஷனுக்கே ஏனோ இப் பயம் இல்லாம லில்லை. தோற்ற தேவர்கள் உயிரிழக்க முடியாமலே ஓடினர். இப்படிப் பட்ட அவமானமின்றி தோல்விகண்ட அசுரர்கள் உயிரையும் இழந்தனர். சுத்த வீரர்கள் என்ற முறையில் இதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆனாலும் மரண பயம் என்பதன் வாடை தங்களைப் பீடித்தது போலன்றி, தேவர்கள் நிர்ப்பயமாகப் போர் புரிவது மகிஷன் மனத்தை உறுத்தியது.

மகிஷனுக்குத் தபோபலத்தாலேயே தன் தந்தை அரியன சாதித்தார் என்பது சடேரென்று ஞாபகம் வந்தது. உடனே சேனாபதிகளின் பொறுப்பில் யுத்தத்தைவிட்டு, மேரு மலைக்குச் சென்று தவம் புரியத் தொடங்கிவிட்டான். பிரம்ம - விஷ்ணு - ருத்திரர்களைத் தவிர வேறெவரையும் இவன் தனக்கு மேம்பட்டவராகக் கருதவில்லை. இவர்களில் விஷ்ணுவும் ருத்திரரும் பராசக்திக்கு மிகவும் நெருக்கமுள்ள சத்துவ குணத் தெய்வங்களாதலால் அவற்றில் அரக்கனுக்கு ஈடுபாடு எழவில்லை. ரஜோகுணராகிய பிரம்மனைக் குறித்தே தவமிருந்தான்.

அதி உக்கிரமான தவம். அதற்குப் பிரதியாக பிரம்மன் பிரசன்னமாகித்தான் தீரவேண்டும்; அவன் விரும்பும் வரத்தைத் தந்துதான் ஆகவேண்டும். இது பராசக்தியின் மீறவொண்ணாத ஆணை. ஈடுபாட்டுக்குரிய பலனைத் தந்தே தீருவாள் அவள் — அவரவர் உபாசிக்கும் மூர்த்தி மூலம்.

பிரம்மன் மகிஷனுக்குக் காட்சி கொடுத்தார். வரம் நல்குவதாக வாக்களித்தார்.

''ஸ்வாமி, தேவர்களைப் போலவே எனக்கும் மரண பயம் இல்லாதிருக்க வேண்டும். மரணம் உண்டெனில் மரணபயம் இருந்தே தீரும். எனவே எனக்கு மரணமே சம்பவிக்காமலிருக்கத் தேவரீர் வரமருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான் மகிஷாசுரன்.

''அப்பனே! நீ என் சக்திக்கு அப்பாற்பட்டதை வேண்டுகிறாய். நல்லன நலிந்தாலும் அவை நாசமடையலாகாது என்றும் தீயன தழைத்தாலும் இறுதியில் அவை தேய்ந்தழிய வேண்டும் என்றும் பராசக்தி விதித்திருக்கிறது. இதன்படி தேவரன்றி வேறொருவர் அமரத்துவம் பெற முடியாது. கால தத்துவம் இப்படி இருக்கிறது. அதற்கு நானும் கட்டுப்பட்டவனாதலால் நீ கேட்ட

வரத்தை அவ்வண்ணமே நிறைவேற்றித்தர நான் சக்தன் அல்லன். எனவே ஏதேனும் நிபந்தனை விதிப்பாயாகில், அதற்குட்பட்டு உனக்கு மரணம் நேராதவாறு வரம் தருகிறேன். அவ்வளவே நான் செய்யக் கூடியது'' என்றார் விதாதா

மகிஷன் யோசித்தான். பிறகு கூறினான்: ''என்னை வெல்லக் கூடியவர் எவருமே இல்லைதான். எனவே நான் சாவுக்கு அஞ்சிடவேண்டியதே இல்லை. இருப்பினும் ஏனோ இந்த அச்சம் வந்துவிட்டது. அதனால் ஒருவேளை அமரர் என்னைக் கொன்றுவிடுவரோ, அல்லது வேதமந்திர சித்தியால் மானுடரே என்னைக் கொன்றுவிடுவரோ, இல்லாவிடில் எங்கள் அசுர குலத்திலேயே உட்பூசல் வந்து என் இனத்தாரே என்னைக் கொல்லக்கூடுமோ என்றெல்லாம் எண்ணம் தொடருகிறது. அல்லது மகாவீரரான என் தந்தையை ஒரு காளை குத்திக் கொன்றதுபோல் மிருகத்தாலும் எனக்குச் சாவு நேரிடலாம். இப்படியெல்லாம் நான் சந்தேகித்தாலும், சந்தேகத்துக்கு இடமின்றி ஒன்று மட்டும் தெரிகிறது — எந்த ஸ்திரீயும் என்னை வெல்லவோ, கொல்லவோ முடியாது என்பது உறுதி. ஆகவே நீங்கள் நிபந்தனை விதிக்கச் சொன்னீர்களே, அதன்படி பெண் ஒருத்தியைத் தவிர வேறு எவராலும், வேறு எதனாலும் எனக்கு மரணம் நேராது என்று வரம் தரப் பிரார்த்திக்கிறேன்'' என்றான் மகிஷன்.

எருமை மூளையா அது? அருமையாக அல்லவா வேலை செய்துவிட்டது? தற்காப்பு என்று வந்துவிட்டால் எவருக்கும் அதி புத்திசாலித்தனம் வந்துவிடும் போலிருக்கிறது!

''நீ விரும்பிய வண்ணமே ஆகுக!'' என்று கூறி மறைந்தார் பிரம்மன்.

⋆ ⋆ ⋆

போர்முனைக்குத் திரும்பினான் மகிஷாசுரன். நிச்சயமாய்த் தன்னை அமரர்கள் வெல்வதற்கில்லை என்று அவன் பெற்றிருந்த உறுதியும், அதனால் ஏற்பட்ட உற்சாகமும் அவனது சைனியம் முழுவதற்குமே அருமருந்தாகப் புத்துயிர் தந்தது.

மதோன்மத்தர்களான அவுணர் படையைத் தேவர்களால் சற்றும் சமாளிக்க முடியவில்லை. தோல்வி உண்டாவது திண்ணம் என்ற நிலை ஏற்பட்டது. தைரியம் இழந்தது தேவர் படை. தஞ்சம் அடைந்துவிடலாமா என்ற எண்ணமும் எழுந்தது.

இந்திரன் தங்களது குருவாகிய பிருஹஸ்பதியை ஆலோசனை கலந்தான்.

அவர் தீர்க்க திருஷ்டியில் அனைத்தும் கண்டார். இந்தத் தேவர்கள் யாவரும் தாங்களும் பராசக்தியினால் சிறுச்சிறுதே அதிகாரம் பெற்றவர்கள்தாம் என்பதை மறந்து செருக்குற்றிருந்தனர்; அதற்கு இப்போது தண்டனை அநுபவிக்கிறார்கள் எனக் கண்டார். இந்தத் தண்டனையும் போதாது எனும் வகையில் இன்னமும் வன்மையாக அநுபவிக்க இருக்கிறார்கள் என்றும் கண்டார். மற்ற ஜீவராசிகளுக்கில்லாத சிறப்புக்களை இவர்களுக்குப் பராசக்தி நல்கி இருப்பதால், இவர்கள் ஏனையோரையும் விட நன்றிப்பெருக்குடன் அந்த ஆதிமூலத்தை பக்தி புரிந்து, அதன் பிரஸாதமாகவே இன்பங்களை நுகரவேண்டும். இவ்வுண்மையை மறந்து விட்டதால் நன்றிகெட்ட பாதகத்துக்கு ஆளாகி விட்டனர். கற்பகச் சோலை நிழலும், காமதேனுவின் அமுதும், கந்தர்வர்களின் கானமும் தங்களுக்குக் கடவுள் கருணையால் கிடைத்தவை என்பதை மறந்தவுடனேயே, இவற்றை உல்லாசமாகப் பயன்படுத்தி மகிழுவதில் வரையறையும் புனிதமும் மறைந்து போய்விட்டன. கேளிக்கையில் அதியாகச் சென்றுவிட்டனர். அமுத போஜனமும், அரம்பையரின் ஆடல் பாடலுமே தங்களுக்கு வாழ்க்கை என்று வெற்றுச் சுகம் காணும் வீணர்களக இவர்கள் இருந்துவிட்டனர். அதற்குப் பிரதியாக இப்போது போர் முகத்தில் இவர்கள் உடல் களைத்துப் போர் செய்யத்தான் வேண்டும். தங்களுக்கு மேல் எவரும் இல்லை என்று இவர்கள் பரதேவதா சக்தியை மறந்ததற்குத் தண்டனையாக அசுர சக்திகள் இவர்களுக்கு மேல் ஆதிக்கம் பெறத்தான் வேண்டும். தங்களுக்கு மேம்பட்ட பகவத் சக்திகளை பக்தி பண்ணத் தவறிய இத்தேவர்களுக்கு உலகினர் பக்தி செலுத்தி அவி சொரிவதும் நிற்கத்தான் வேண்டும். இப்படி அடிபட்டு நின்றால்தான் அம்மாவின் நினைவு இவர்களுக்கு வரும். குழந்தை மனம் போனபடி விளையாடுகிறவரை 'தானே ராஜா' என்று குதூகலிக்கிறது. விளையாட்டில் கீழே விழுந்து விட்டாலோ, ''அம்மா!'' என்றே கண்ணைக் கசக்கிக் கொண்டு ஓடுகிறதல்லவா?

பரதேவதையின் சங்கற்பத்தைக் கண்டு கொண்டார் தேவகுரு வியாழபகவான். ஆயினும் இதை இப்படியே அப்பட்டமாகக் கூறுவாரா? மதியில் விஞ்சியவர் அல்லவா பிருகஸ்பதி?. வெகு அழகாக, ஆழமாகப் பேசினார்.

''தேவேந்திரா! யுத்தம் என்று வந்தால் அதில் ஜய அபஜயங்கள் மாறி மாறி வரத்தான் செய்யும், அதற்காக நீ இப்படிக் கலங்கித் தைரியமிழக்கலாகுமா? நடப்பதுதான் நடக்கும். எது

நடந்தாலும் மனோதிடத்தை விடலாகாது. நீயே எண்ணிப் பார், தோல்விதான் வரட்டும், அதற்காக நாம் மனத்தைக் கலங்க விடுவதில் என்ன லாபம்? மாறாக, மனஉறுதி குறைந்ததாலேயே தோல்வி மேலும் விரைவு படும். போர்க்களத்தை விட்டு எதிரியிடம் தஞ்சம் புகுவதை விட, இந்த மனக்கலக்கத்தை விட்டுத் தோல்வியுற்றாலும் அதுவே நிம்மதியாக இருக்கும் என்பதை எண்ணிப் பார். யுத்தத்தில் வெற்றியும் தோல்வியும் வெளியாரைப் பொறுத்த விஷயம். அவை முற்றிலும் உன் வசத்திலிருப்பனவல்ல. உன்னிடமிருப்பது உன் மனந்தான். எது நேரினும் அதைக் கலங்காமல் வைத்துக் கொள்வதே நீ செய்யக்கூடுவது. இப்போது நீ செய்ய வேண்டுவதும் அதுவே. 'கலங்குவதால் லாபமில்லை; கலங்காதிருப்பதால் நஷ்டமில்லை' என்பதை ஒரு மந்திரமாக ஏற்றுக் கொள். ரண களத்தில் தோல்வியோ வெற்றியோ நடப்பது நடக்கும். மனக் களத்தில் கலக்கமே தோல்வி. கலங்காமையே வெற்றி. இங்கே நீ ஜயசாலியாக இரு.

''கலக்கத்தினால் தளர்வு பிறக்கிறது. உடனே தஞ்சம் புகும் எண்ணம் உண்டாகிறது. உள்ள உறுதி பெற்றால் எதிரியை நாமாக சரண் அடைகிற எண்ணமும் போய்விடும். இறுதிவரை நம்மால் முடிந்த முயற்சியைச் செய்வதில் ஊக்கம் உண்டாகும். சசீபதி! 'நடப்பது தான் நடக்கும் என்று கூறியபின், என்ன முயற்சி செய்துதான் பயன் என்ன?' என்றுதானே எண்ணுகிறாய்? புருஷயத்தனத்தால் பயனில்லை, தெய்வ சங்கற்பப்படியே நடக்கும் என்பது வாஸ்தவம்தான். ஈசுவர இச்சையின்றி, உனது நால்வகைச் சேனைகளாலும், குருமார்களின் ஆலோசனைகளாலும், ராஜதந்திரிகளின் யுத்தத் திட்டங்களாலும் வெற்றி ஈட்டித் தர முடியாது என்பது முற்றிலும் உண்மையே. ஆயினும் முயற்சியில்லாமல் கிடக்கிற நிலையில், தெய்வ சித்தம் எதுவாயினும் அப்படியே நடக்கட்டும் என்று உவந்து ஏற்கிற மனத் தெளிவு இருக்க வேண்டும். தனது எதிர்காலம் என்னாகுமோ என்று லவலேசமும் சிந்தையின்றி, அப்படியே தன்னைக் கடவுளுக்கு சரணாகதி செய்து கொள்கிற நிலையில் முயற்சியே வேண்டியதில்லைதான். ஆனால் இப்படி ஏற்கிற பெருநிலை உனக்கோ உன் தேவகணங்களுக்கோ தற்போது உள்ளதா? முயற்சியை விட்டாலும் மனம் குழம்பிக் கொண்டுதான் இருப்பீர்கள். அதற்குப் பதில் முயன்று கொண்டேயிருப்பீர்களாயின், இதற்காகவே ஓரளவேனும் மனோ பலத்தை ஒருங்கு திரட்டிக் கொண்டவராவீர்கள். ஒரு

காரியத்தில் மனத்தை ஈடுபடுத்தியுள்ள வரையில் அது ஓரளவாகினும் கட்டுப்பட்டு நிச்சலனமாக இருக்கிற அளவுக்குக் கூட, காரியமே இல்லாத நிலையில் இருக்காது. காரியமே இல்லாமலும், அதேபோதில் மனம் சஞ்சலியாமலும் இருப்பது மகாஞானிகளுக்கே சாத்தியம். அவர்கள் சொந்த வாழ்க்கை அற்றவர்கள். நாமோ சொந்த வாழ்க்கை ஒன்றிருப்பதாக நினைப்பவர்கள். 'எல்லாம் இறைவன் விட்டபடி' என்றில்லாமல் நமக்குச் சொந்த வாழ்வு ஒன்று இருக்கிறது என்று எண்ணும் வரையில் நமக்கு இறைவன் அளித்துள்ள பிரயத்தன சக்தியைப் பிரயோகிக்க வேண்டும். பரம்பொருளின் வசம் நம்மைப் பூரணமாக ஒப்புக் கொடுத்து கொண்டாலே, அதுவே முற்றிலும் நம் வாழ்க்கையை நடத்திக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாம். அதை விடுத்து சொந்த வாழ்க்கை என்று நமக்காக ஒன்றை ஏற்படுத்திக் கொண்டபின், இதை நம்மிஷ்டப்படி ஆனால் நம் முயற்சியை எதிர்பாராமல், அந்தப் பராசக்தி நடத்தித் தர வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் சற்றும் நியாயமில்லை.

''இந்திரா! தெய்வ நினைவு இப்போதுதான் உனக்கு வரத் தொடங்கியிருக்கிறது என்பதை அறிவேன். பகைவனின் எழுச்சியினால்தான் பகவன் நினைவு வந்திருக்கிறது. ஆனால் இந்த நினைவு ஒன்றுக்காக மட்டும் பராசக்தி உன் சார்பில் காரண-காரிய விளைவுகளை முறித்துப் போட்டு நேரடியாகத் தலையிட்டு விடாது. தெய்வத்தையே மறந்து எல்லாம் நம் முயற்சி என்றும் இராமல் — தெய்வம் இருக்க நம் முயற்சி எதற்கு என்றும் நம்முடைய அரைகுறைப் பக்குவநிலையில் இராமல் — நமக்குச் சொந்தமாக ஒரு வாழ்க்கையைத் தர்மத்துடன் நாம் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு தெய்வத்தை நம்பி நமது முயற்சிகளை நாம் மேற்கொண்டால், அப்போது இந்த முயற்சிகளால் நாம் எதிர்பார்க்கிற அளவு வெற்றி கிடைக்காவிட்டாலும், நமது யத்தனத்தின் அளவைப் பொறுத்து எதிரான வினைப் பயனைத் தெய்வம் குறைத்தருளும்.

''ஆகவே தஞ்சம் புகும் பேடித்தன்மையையும், முயற்சியைக் கைவிடும் மதியின்மையும் ஒதுக்கித் தள்ளி, யுத்தத்தில் வெற்றியோ தோல்வியோ வருகிற வரை மனம் தளராமல் ஈடுபடுவாயாக. சக்ரா! மகிஷன் என்ற சத்துருவிடம் சுவாதீனப்படக்கூடாது என்று எண்ணுவதைவிட, சுக துக்கமாகிய சத்துருவிடம் சுவாதீனப்படலாகாது என்பதை முக்கியமாகக் கொள்வாயாக! அற்ப சுகம் உண்டான காலத்தில் அதையே பெரிதாக எண்ணி

இறைவனை மறந்து இறுமாந்து விடாமல், நித்திய சுகத்தை அவ்வப்போது நினைவு கொள்ள வேண்டும். அதாவது சிற்றின்பங்களால் ஏற்படும் மனத் தடுமாற்றத்தைப் பேரின்பத்தின் நினைவால் நீக்கிக் கொள்ள வேண்டும். இவ்விதமே இந்த அற்ப வாழ்க்கையில் துக்கம் ஏற்படும்போது இதெல்லாம் சிறிய துக்கமே, பரதேவதையை மறந்திருப்பதே பெரிய துக்கம் என்ற நினைவை விடாமல் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். அதாவது சிறிய துக்கத்தைப் பெரிய துக்கத்தின் நினைவால் போக்கிக் கொள்ள வேண்டும். இந்திரா! உள்ளுக்குள் நீ எப்படிக் கலங்கிக் கொண்டிருக்கிறாய் என்று நான் அறியேனா? ஹா! இந்த மனம் தான் என்ன பரிதாப வஸ்து? கலங்குவதால் அது துன்புறுகிறது; தெளிவதால் இன்புறுகிறது. ஆனால் கலங்கிக் கலங்கித் துன்புற்றவர்களையே காணமுடிகிறதேயொழிய உறுதியாக நின்று இன்புற்றவர்களைக் காண முடியாமல் இருக்கிறதே? இந்திரா, கலங்குவதில் இவ்வளவு துக்கம் சம்பாதித்துக் கொள்ளும் நீ சற்றுக் கலங்காமல்தான் இருந்து அதில் உள்ள இன்பத்தை ருசித்துப் பாரேன்... முடியவில்லையா? எப்படி முடியும்? மனம் என்று ஒன்று உள்ள வரையில் அதை நேராக வைத்துக் கொள்வது முடியாமல் தான் இருக்கிறது. மனத்தினால் சௌக்கியம் உண்டாக்கிக் கொள்வதே முடியாது. மனத்தையே விட்டால் தான் சௌக்கியம் என்று தோன்றுகிறது. 'நான்' என்கிற அகங்காரமும் 'என்னுடையது' என்கிற மமகாரமும் மனம் உள்ள மட்டும் போகாது போல் தானிருக்கிறது. இத்தனை நான் சொல்லியும் என்ன பயன்? ஒரே வார்த்தையில் ஞானிகள் சொன்னதொன்றே உண்மையாக நிற்கிறது: அகங்காரம் போனாலன்றி ஆனந்தம் இல்லை. யுத்தரங்கத்தில் மேல் நடவடிக்கைக்கு ஆலோசனை கோரும் உனக்கு இந்த ஞான உபதேசம் தருவது பொருத்தமில்லைதான். என் மனம் நினைக்கிறதையெல்லாம் அப்படியே கொட்டுகிறேன், அவ்வளவே! உன்னை ஞான விசாரத்தில் ஈடுபடுத்த இதுவல்ல சமயம். சூழ்நிலையும் உன் மனநிலையும் அதற்குச் சற்றும் அநுகூலமாக இல்லை. ஆனாலும்...''

மனக்கலக்கத்தைப் பற்றிப் பெரிய உபந்நியாசம் செய்த தேவ குருவுக்கே மனம் கலங்கி விட்டது. அருமைச் சீடன் அபஜயமே காணப் போகிறான் என்று தெரிந்து கொண்டபின் அவர் என்ன சொல்லவிருக்கிறது? அவன் தோல்வி அடையப் போகிறான் என்பதைச் சொல்லாமல் மட்டும் இருக்க முடிந்ததே தவிர, ஆலோசனை கோரிய அவனுக்கு ஏதுமே உருப்படியாகச்

சொல்லவொண்ணாதவராக இருந்தார் பிருஹஸ்பதி. இதனால் கலங்கியவராக கருணையோடு இந்திரனிடம் சொன்னார். ''போரின் முடிவு இரண்டில் ஒருவிதமாகத் தானாகவே அமைகிற வரையில் யுத்த முயற்சியை விடாதே என்பதற்கு அதிகமாக உனக்கு ஏதும் வழி கூற இயலாதவனாக இருக்கிறேன். அப்பனே! புறப்பட்டுப் போ, போர்முனைக்கு! உனக்கு ஆசி மொழியாக இதை மட்டும் சொல்கிறேன்: நாம் விரும்புகிறபடி நமக்கு சுகம் உண்டாவதே அநேக சந்தர்ப்பங்களில் நம் புண்ணியத்தை நாசம் செய்து விடுகிறது; மாறாக நமக்கு ஏற்படுகிற துக்கங்களோ நம்முடைய பாப கர்ம வினையை நாசம் செய்து நமக்கு நன்மையைச் செய்கிறது!''

தழுதழுத்துக் கூறினார் வியாழ பகவான். 'இந்திரலோக சுகத்தால் தேவர்கள் பாபத்தைத்தான் தேடிக் கொண்டனர். இப்போது பாபம் நசிக்கும் பொருட்டே தோல்வி எனும் துயரத்தை அடையப் போகிறார்கள். ஆசாரியனான நான் இவர்கள் தோல்வியைத் தழுவுவதற்காகவே வாழ்த்தி அனுப்புவதா?'' அது அவருக்கு அடாத செயலாகப்பட்டது.

சஞ்சலத்தைத் தீர்த்துக் கொள்ளுமாறு உபதேசித்தவரே சஞ்சலமுடன் பேசினார்: ''இந்திரா, உன்னை, உன்னை நான் போருக்கு அனுப்பவில்லை... அனுப்பாமல் தடுக்கவும் இல்லை....''

இதுகாறும் வாய் திறவாமலே இருந்த இந்திரன், ''குரோ! எங்களுக்கு எப்போதும் திட்டவட்டமாய் உபாயம் கூறியருளும் கடமையைக் கொண்ட ஆசாரியரான தாங்கள் இப்படி எங்களைக் கை கழுவிவிட்டதுபோல் பேசலாமா? நான் நீங்கள் சொன்னது போலவே ஜயாபஜயங்களைக் கருதாமலிருக்க முயல்கிறேன். மகிஷனிடம் சரணாகதி செய்யாமல் மேலும் புருஷ யத்தனத்தைத் தொடருகிறேன். ஆனால் இனி யத்தனம் என்று செய்ய என்ன இருக்கிறது? எதிரிகளின் சக்தி மிக அதிகமாக இருக்கிறது. வெகு விரைவில் அவர்கள் நம்மை விரட்டியடிக்கத்தான் போகிறார்கள். இந்தத் தோல்வியை மாற்றத் தாங்கள் ஏதும் உபாயம் கூறக் காணோம். எனவே இதோ நிச்சயமான தோல்வியை வரவேற்கப் புறப்படுகிறேன்'' என்று மிகுந்த அதிருப்தியுடன் கிளம்பினான்.

''அப்பனே, சற்று நில்!'' என்று அவனை நிறுத்தினார் வியாழன்.

கடைசி வரையில் அவன் யத்தனம் செய்ய வேண்டும் என்று கூறிய இவரும் அந்த நியாயப்படி நடக்க வேண்டும். சரீரத்தால் யத்தனம் செய்து போர் புரிவது அவனது கடமை.

மதியினால் யத்தனம் செய்து உபாயங்கள் காண வேண்டியது இவரது கடமை. அதற்காகத்தான் இவரை ஆசாரியராகப் பூஜித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவனை மட்டும் யத்தனத்தை எத்தினமும் விடாமல் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு, இவர் ஏதும் உபாயம் கூறாமலிருப்பது எப்படி நியாயமாகும்? அவனது யத்தனம் நிஷ்பலனே ஆகும் என்றாலும் கூட அவன் முயற்சியை விடக்கூடாது எனில், இவரது உபாயம் ஏதும் பயன் தராது என்றாலும்கூட இவர் ஏதுமே வழி சொல்லாமலிருப்பதும் தகாதுதானே?

இந்திரன் மிகவும் கௌரவமாகத் தன்னைக் குத்திக் காட்டிப் பேசியது நியாயமே என்றுணர்ந்தார் பிருஹஸ்பதி.

ஆனால் என்ன உபாயம் சொல்வது?

'ஆகா, இது ஏன் தமக்கு முன்னரே தோன்றாமல் போயிற்று? தெய்வ நினைவோடு முயற்சியை மேற்கொள்ளுமாறு கூறினோம். இப்போது அந்த தெய்வ சகாயத்தையே நாடினால் என்ன? இதைவிடச் சிறந்த உபாயம் என்ன கூற இருக்கிறது?'

பிருகஸ்பதிக்குச் சிறிது உற்சாகம் உண்டாயிற்று.

''இந்திரா, நமக்கும் மேம்பட்ட திவ்விய சக்தியின் துணையைக் கோருவோம். அதனினும் பெரிய உபாயம் வேறில்லை. வா, பிரம்மதேவனைச் சென்றடைவோம்'' என்றார்.

அநேகமாக எப்போதுமே தேவர்கள் முதலில் குருவைத் தேடிப் போவார்கள். பிறகு அவரோடு பிரம்மனைத் தேடிப் போவார்கள். பிறகுதான் அவரோடு சிவன், விஷ்ணு, அம்பாள் முதலிய தெய்வங்களை நாடிச் செல்வார்கள். நோயுற்றால் முதலில் சாதாரண மருந்து, பிறகு ஊசி, அதன்பின் அறுவை என்று போவதுபோல்!

அதோடு கூட இப்போது இவர்கள் பிரம்மனை நாடியதற்கு இன்னொரு காரணமும் உண்டு. பெண்ணின் மூலமே தனக்கு மரணம் நேரலாம் என்று பிரம்மனிடம் மகிஷன் வரம் பெற்றதை தேவர்கள் உள்ளபடி அறியாவிட்டாலும் அவரைக் குறித்துத் தவம் இருந்து அவரருளாலேயே புது பலம் பெற்று வந்தான் என்பதை அறிந்திருந்தனர். ஆக்கியவர்தானே அழிக்கவும் கூடியவர் என்றெண்ணினர். எனவேதான் பிரம்மனைச் சென்றடைந்தனர் பிருகஸ்பதியும் சசிபதியும்.

பிரம்மன் தேவர்களின் அபாய நிலையை உணர்ந்தார். இங்கே அபயம் தரத் தம்மாலாகாது எனக் கண்டு, சற்றும் கால தாமதமன்னியில் அவர்களை வைகுந்தத்துக்கு அழைத்துச் சென்றார்.

கருணாமூர்த்தியான கார்மேக வண்ணன் இந்திரனுக்கு ஆசி கூறி, ''மீண்டும் போர்முனை புகுவாய், உன் சேனையின் புதுத் தெம்பை நீயே பார்த்து வியப்பாய்!'' என்று திருவாய் மலர்ந்தார்.

நாம் எத்துணையோ பலவீனமாக இருக்கும் போது ஒரு மகாத்மாவின் ஆசி கிடைத்தால் திடுமென எப்பேர்ப்பட்ட சக்தி உண்டாகிறது? சாக்ஷாத் நாராயணன் அநுக்கிரகம் புரிந்தவுடன் இந்திரன் இழந்த ஊக்கத்தை மீண்டும் பெற்றான்.

மகிஷன் பிரம்மனைக் கண்டு திரும்பியபின் அவுணர்கள் புதுவேகம் பெற்றது போல், இப்போது தேவர்கள் தமதரசன் திருமாலைக் கண்டு திரும்பியபின் உற்சாக சக்தி பெற்று போர் முனைக்கு மீண்டும் திரும்பி அற்புதமாகச் சமர் புரிந்தனர்.

யுத்த ரீதியில் இவர்களை வெல்வது அரிதே என மகிஷனே மயங்கினான். மயங்கியவன் மாயாப் பிரயோகத்தில் இறங்கினான். சாம்பரீ என்ற மகாமோகத்தை விளைவிக்கும் சக்தியை மந்திர சாதனையால் ஏவிவிட்டான்.

அதன் விளைவாக எண்ணிறந்த மகிஷாசுரர்கள் யுத்த பூமிமுழுவதும் நிறைந்தனர். ஒன்றான பிரம்மத்தை மாயை பலவாகக் காட்டிற்று — அது பரமகலியாண நிலயமான சம்புவுக்குரிய சாம்பவீ மாயை. இதுவோ சாம்பரீ மாயை. எனவே, அமங்கள நிலயமான ஒரு மகிஷன் இருப்பது போதாது என்று அவனை அனந்தம் மகிஷர்களாக்கிக் காட்டிற்று. இந்த மாயா தந்திரம் ஒரு சில முகூர்த்த காலமே நிற்க முடியும். ஆனால் அதற்குள் எதிரிகள் பிரமிப்பதிலேயே செயலற்று, அதனால் தோல்விக்கு ஆளாகிவிடலாம் அல்லவா?

திரும்பிய இடமெல்லாம் மகிஷனைக் கண்டு திகைத்தனர் தேவர்கள். இனி, தன்னால் போர் செய்ய முடியும் என்ற எண்ணத்தையே இந்திரன் கைவிட்டு, மலைத்து, மதி மழுங்கி மனம் மயங்கி நின்றான்.அக்னி, யமன், வருணன், குபேரன், சூரியன், சந்திரன் முதலிய மகா பலிஷ்டர்களும் செய்வதறியாது மயங்கி நின்றனர்.

அநாத ரட்சகனாகிய ஸ்ரீமந் நாராயணன் பரிந்தோடி வந்தார், கருடாழ்வானின் மீது கம்பீரமாக வீற்று. தமது சுதர்சனச் சக்கரத்தைச் சுழற்றி விட்டார். அது சொம்பொற்சோதியைப்

பொழிந்து கொண்டு ரணகளம் முழுவதும் சுற்றி விட்டு திருமாலின் கரகமலத்துக்கே திரும்பியது. அதன் ஞானப் பிரகாசத்தில் அசுரனின் மாயா ரூபங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன.

மகிஷன் ஆராச் சினம் கொண்டான். மகிஷ உருவை விடுத்துச் சிம்மரூபம் தரித்து, நரசிம்மனான நாராயணன் மேல் பாய்ந்தான்.

அவரோ அப்போது இரணியனை வதம் செய்தது போல் மகிஷனை வதைக்கவில்லை. ஸ்திரீயின் மூலமே தனக்கு மரணம் என்றல்லவோ இவன் வரம் பெற்றிருந்தான்? இதைத் தேவர்கள் தீர்மானமாக அறியாமல் போர் செய்த போதிலும், விஷ்ணு மூர்த்தி அறிவார் அன்றோ? ஆயினும் ஸ்வதர்ம கர்மத்தாலேயே பாபம் தீருமாதலின் தேவர்களுடைய பாபம் தீருவதற்காகவே அவர்கள் யுத்தம் செய்வதையும் தடுக்காமலிருந்தார். அதோடு, தம்மை அவர்கள் அண்டியதால் அவர்களுக்கு ஓரளவு உபகாரம் புரியவும் திருவுளம் கொண்டு தாமும் போரில் கலந்து கொண்டார். இவர்களுக்கு வினை தீர இன்னும் நிரம்பக் காலம் இருக்கிறது என அவருக்குத் தெரியும். ஆயினும் தெய்வத்தின் கருணை இயல்பு யாதெனில், நமக்கு நிரம்பப் பழைய 'பாக்கி' இருக்கும்போது கூட, நாம் அதை அடுத்து விட்டால், இந்தப் பிடிப்பு நலிந்து போகக் கூடாது என்பதற்காக, அப்போதைக்கப்போது நம் கர்மத்துக்கு மேலாகவே கொஞ்சம் அநுக்கிரகம் புரிந்து விடும்! நமக்குக் கொஞ்சம் சுகம் ஏற்படும். ஆனால் மறுபடி கருமம் வந்து பிடித்துக் கொள்ளும். முன்பு கடவுள் கை கொடுத்ததால், இப்போது நாம் முன்னிலும் கூடுதலாக பக்தி செலுத்துவோம்; சிறிது கூடுதல் பலனும் கிடைக்கும். மறுபடி நம் கருமகதி, இறைவனிடம் கொஞ்சம் சரணாகதி, இறைவனின் கருணாகதி — இப்படிப் போகும்.

தாற்காலிகமாக தேவர்களுக்கு ஒரு நிம்மதி தந்து அவர்களது தெய்வ சிந்தனையை வளர்க்கவே விஷ்ணு வந்தார். மகிஷன் சிம்மமாகித் தாக்கிய பிறகு அவர் பரமபதத்துக்கே திரும்பி விட்டார்.

'இந்த அற்ப தேவர்களோடு சமரிடச் சிம்மரூபம் எதற்கு?' என்று கருதி எருமை வடிவை மீண்டும் எடுத்துக் கொண்டான் மகிஷன். ஆனால் கோடி சிம்மங்களும் எதிர்த்து நிற்கவொண்ணாத வீர தீரத்தைத் திரட்டிக் கொண்டு யுத்தம் செய்தான்.

ஸ்ரீமந் நாராயணன் மறைந்ததுமே தேவர்கள் சோபையை அடியோடு இழந்து சோடையாகிவிட்டனர். 'அவர் தங்களைக் கைவிட்டாரா? அல்லது, ஒரு வேளை, மகிஷாசுரனுடன் தோற்றுப் போய்த்தான் அவரே திரும்பிவிட்டாரா?' என்ற கேள்வி அவர்களுள் எழுந்தது. எப்படிப் பார்த்தாலும், இனிப் போர் புரிவதில் பயனில்லை என்றே ஆயிற்று. மேலே செய்வதென்ன?

''பகைவனிடம் சரணாகதி'' என்ற பதத்தைத் தன் அகராதியிலிருந்து எடுத்து விட்டு, ''தெய்வ நம்பிக்கையோடு கூடிய முயற்சி'' என்ற பதத்தை அதனிடத்தில் போட்டுக் கொண்டிருந்தான் இந்திரன். இப்போதும் மஹிஷனிடம் சரணாகதி செய்யப் போவதில்லை. முயற்சிசெய்வதோ மேருமலையைப் பெயர்க்க ஒரு சிட்டுக் குருவி யத்தனம் செய்வது போன்ற பேதைமையாகவே இருக்கும். 'வெற்றி அல்லது வீர சுவர்க்கம்' என்பார்களே, அதுவும் இவர்கள் விஷயத்தில் பொருந்தாது. மற்ற இனத்தவர், வெற்றி கிட்டாத போது போரிலேயே மரணத்தைத் தழுவி சுவர்க்கம் புகுவர். துரதிருஷ்டவசமாக, தாங்கள் மரணமே அடைய முடியாது என்ற பேருண்மையை அமரர்கள் இப்போதுதான் பரிதாபகரமாக உணர்ந்தனர். எனவே, இவர்கள் செத்துச் சுவர்க்கம் புகுவதற்கும் இல்லை. நேர்மாறாக ஜீவிய காலத்திலேயே இவர்களது இருப்பிடமாகிய சுவர்க்கத்தை விட்டு இப்போது வெளியேறிவிட வேண்டுமென்று முடிவு செய்தனர். மண்ணுலகத்தவர் வீரசுவர்க்கம் எய்துவர் என்றால், இந்தச் சுவர்க்கவாசிகளோ இப்போது மண்ணுலகுக்குப் போகத் தீர்மானித்தனர். எதற்காக? இப்போதைக்கு மேருமலையுச்சியிலுள்ள தங்கள் இருப்பிடம் நீங்கி மண்ணுலக மையத்திலுள்ள அதன் அடிப்பகுதி சென்று அங்குள்ள முழைகளில் மறைந்து வாழ்வதற்காக. பிற்பாடு தாங்கள் அவுணரை எதிர்ப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்கிற நல்ல காலம் பிறக்கும். அப்போது அந்த முயற்சியைச் செய்யவே இப்போது தலைமறைவாக வேண்டும் என்று கருதினர்.

இந்த முடிவை விரைவுபடுத்தியது மகிஷனின் போர்க்கோலம். அந்த அசுர எருமைக்குப் பயந்து தெய்வீக யானையான ஐராவதம் திக்குத்திசை புரியாமல் சுற்றித் தவித்தது. ஐராவதத்தின் மீது வீற்றிருந்த இந்திரனுக்கு இதுவே கடைசி அடியாக இருந்தது. அந்த அருமை கஜத்தின் சக்தியை சூட்சுமமாகத் தன்னிடம் கிரகித்து வைத்துக் கொண்டு, அதை விட்டுக் குதித்தான்.

அவனது சங்கேதத்தை தேவர் படை புரிந்து கொண்டு விட்டது. உடனே அமரர் அனைவரும் தம் உருக் கரந்தனர். மேருமலையடியில்தான் அவர்கள் மீண்டும் சுயரூபம் கொண்டனர்.

தேவரனைவரும் மறைந்தோடினர் என்றதும் அசுரர்கள் அடைந்த வெற்றிப் பெருமிதத்தைச் சொல்லவும் வேண்டுமா?

மகிஷன் மகிழ்ந்து கூவினான். ''இதோ ஐராவதம் எனது பட்டத்து யானை ஆயிற்று! அடுத்து, இதனுடனேயே பாற்கடலில் தோன்றி இந்திரனைச் சென்றடைந்த அசுவமாகிய உச்சைசிரவஸின் மீது பவனி வருவேன். ஜயசாலிகளான என் அருமை அசுரர்காள், வாருங்கள்! கற்பகச் சோலைக்குச் சென்று கேளிக்கைகள் புரிவோம். ஸுதர்மா என்ற தேவ சபைக்குச் சென்று நம் அதர்ம ஆட்சியைத் தொடங்குவோம்!''

தேவலோகத்தை அநாயாசமாக அசுரலோகமாக்கிக் கொண்டு விட்டார்கள்! அங்கு எதிர்ப்பதற்கு எவரேனும் இருந்தால் தானே? சுதர்மா சூனியமாயிருந்தது. தேவேந்திரன் அமரும் சிம்மாசனம் சும்மாக் கிடந்தது.

இந்திரன் அமரும் அந்த அரிய அரியாசனத்தில் மகிஷன் கம்பீரமாக அமர்ந்து எருமாசனமாக்கினான்!

ரம்பன் பெற்ற வரம் பலித்துவிட்டது!

அடடா! மகிஷாசுரனுக்கா இந்த மகிமை? **'தர்மமே வெல்லுமெனும் சான்றோர் சொல் பொய்யாமோ?'** என்று கவி கேட்டது போலல்லவா இருக்கிறது? அடுத்த வரியிலேயே கவி தொடருகிறார்: **''கர்ம விளைவுகள் யாம் கண்டதெல்லாம் போதாதோ?''** ஆம். தேவர்கள் இத்தனை இன்னல் அநுபவித்தும் அவர்களது பாப கர்மப்பயன் முடியவில்லை; அவுணர் இத்தனை இன்பம் அநுபவித்தும் அவர்களது புண்ணிய கர்மப் பயனும் முடியவில்லை!

ஆனால், இரண்டுமே முடிவுறத்தான் போகின்றன. இப்படி ஆதிகாலம் தொட்டு எத்துணையோ முறைகள் நடந்தாகிவிட்டது. அமரரை அசுரர் வெல்வதும், மீண்டும் இவ்வசுரரை அமரர் ஜயிப்பதும் பன்முறை நடந்து விட்டது. மொத்தத்தில் கணக்கு எடுத்தால் அமரர் சுகபோக்கியங்களை அநுபவித்ததை விட அவற்றை இழந்த காலம் மிகக்

குறைவாகவே இருக்கும். இந்தக் குறைந்த காலத்தில் மட்டுமே அசுரர் இந்த போகங்களை அநுபவித்தனர். பொதுவாக தேவர்கள் நல்ல சக்திகளாயினும், பதவிச் செருக்கினால் தவறு செய்து அதற்காக இடையிடையே துன்புறுவர். அரக்கர்கள் மிக்த தீயோராயினும் அவர்களுக்கும் விடா முயற்சி, விசுவாசம் முதலியன அதிகமாதலால் அவ்வப்போது அமரரின் ஸ்தானம் இவர்களுக்குக் கிட்டியது. பராசக்தியின் துலாக்கோல் தப்பாது!

மகிஷன் மகிமையுற்றதும், இந்திரன் இழிமை உற்றதும் அவளது தர்ம உள்ளம் விதித்தவாறே நடந்தன. இந்தச் சிறுமைக் காலத்தில் தேவர்கள் மேலும் தவறித் தண்டனையை அதிகரித்துக் கொள்வார்களா? அல்லது உயர்வுற நடந்து கொண்டு மீட்சி பெறப் போகிறார்களா?

2. பிறந்ததே பேரொளி!

மாளிகையும் சூளிகையும், சிவிகையும் கவிகையுமாக வாழ்ந்த தேவர்கள் அநாதைகளாக மேருமலைக் குகைகளில் தலைமறைந்து வாழ நேர்ந்து விட்டது!

மகிஷன் இவர்களைத் தேடிவந்து இம்சிக்காததற்குக் காரணம், இந்தப் பரம அற்பர்களால் தனக்கு இம்மியும் ஊறு விளையாது என்ற திட நம்பிக்கைதான். இவர்களுக்குரிய யக்ஞ பாகங்களை எல்லாம் மகிஷனே பெற்றான்! சசிதேவிக்கு இந்திரன் பிரேமையுடன் சூட்டும் பாரிஜாத மலர்ச் சரத்தை, இன்று அந்த எருமை தன் கழுத்தில் அணிந்து, பல்லால் கடிப்பதும் அதுவும் போதாதென்று கழுத்திலிருந்து கழற்றி எறிந்து காலால் நசுக்குவதுமாக இருந்தது!

தேவர்கள் மலைமுழைகளைத் தஞ்சமடைந்து ஆண்டுகள் பல ஆகிவிட்டன. மகிஷாசுரனை இவர்கள் மறுபடி எதிர்க்க முடியும் என்று நம்பிக்கை வைக்குமாறு எதுவுமே நடக்கவில்லை. பிரம்மலோகத்துக்குக் கீழ்ப்பட்ட எல்லா அண்டங்களிலும் அவனது சர்வாதிகாரமே கொடிகட்டிப் பறந்தது.

இந்நிலையில் பிரம்மனிடம் மீண்டும் சென்று பிரலாபிப்பது தவிர வேறேதும் செய்வதிற்கில்லை எனக் கண்டனர் வானவர் — அதாவது 'முன்னாள்' வானலோகவாசிகள்.

கமலசம்பவரை அணுகித் தேவர்கள் ஒரு குரலில் ஓலமிட்டனர். ''கமலாசன! மகிஷனிடம் புறமுதுகிட்டு நாங்கள் ஓடியபின் எங்கள் கதி என்ன ஆயிற்று என்றே தாங்கள் கவனிக்கவில்லையா? பொன்னாடு ஆண்ட நாங்கள் மண்ணாட்டில் பரதேசியராகப் பரிதவிப்பதைத் தாங்கள் அறியவில்லையா? ஸுதர்மையில் மகிஷாசுரன் ராஜ்யபாரம் செய்வது தங்களுக்குத் தெரியவில்லையா? அவனது கொட்டத்தை அடக்க வழியே இல்லையா? இனி எந்நாளும் அவனேதான் சிரஞ்ஜீவியாக திரிலோகாதிபத்தியம் வகிக்கப் போகிறானா? எங்களை இந்தப் பராதீன வாழ்விலேயேதான் வைத்திருக்கப் போகிறீர்களா? தாங்கள் எம் தந்தை இல்லையா? இப்படியும் புத்திரர்களை உதாசீனம் செய்யும் பிதா உண்டா?

அப்படி என்ன பிழை செய்தோம்? கலைவாணி நாதரே! தாங்கள் எங்களை நிராகரிக்கலாம்; ஆனால், நாங்கள் தங்களை விடமுடியுமா? தங்களை அடைக்கலம் புகுந்தோம். என்ன செய்வீர்களோ செய்யுங்கள்'' என்று ஏங்கி, வாடி, சோர்ந்து அயனடியில் வீழ்ந்தனர் அமரர்.

சதுர்முகனின் மனம் உருகிற்று. அவர் தர்மசங்கடமான நிலையில் இருந்தார். மகிஷனுக்கு வரம் தந்தது இவரேதான். அவனை வெல்ல இப்போது இவருக்கு வகை ஏதும் தெரியவில்லை. ஆயினும் தவித்து வந்த தனயர்களிடம், தன் இயலாமையைச் சொன்னால் அது நன்றாக இருக்குமா? நன்றாக இராது என்பது ஒரு புறமிருக்க, ரஜோகுணியான பிரம்மனுக்கே மகிஷனின் மகோற்பவத்தில் தனக்குள்ள பொறுப்பை ஒப்புக் கொள்ளவும், தற்போது தன் இயலாமையை வெளியிடவும் சுயாபிமானம் இடம் தரவில்லை. பல பல யோசித்துக் கூறினார்!

''குழந்தைகாள், துயர் வேண்டா! மகிஷனுக்கு முடிவே இல்லையா என்று கலங்கவேண்டியதில்லை. ஒரு பெண்ணை அன்றி வேறெவராலும் தனக்கு மரணமின்மை என்பதே அவன் பெற்ற வரம். எனவே ஒரு ஸ்திரீயால் தனக்கு முடிவு நேரலாம் என்று அவன் மறைமுகமாக ஒப்புக் கொண்டதாகிறது. ஆனால் இப்படி மகிஷனுக்குச் சமதையாக யுத்தத்தில் இறங்கக் கூடிய வீராங்கனையான பெண் எங்கிருக்கக்கூடும் என்பதுதான் தெரியவில்லை. எனினும் அசுரர் அமரத்துவம் பெற்றவரல்லர் என்பதால் அவன் நிச்சயமாகப் பெண்ணால் வதையுற்று மடிவான் என்பதை மனத்தில் கொள்ளுங்கள். கற்பகாலமும் அவனே மூவுலகிலும் ஆட்சி ஓச்சுவானா என்று நீங்கள் அஞ்சவேண்டியதே இல்லை. இவனுக்குப் பெண் மூலம் மரணம் என்பது எப்படிக் காரிய உருவில் நிறைவேறக் கூடும் என்பதற்கு கருணையங்கடலாகிய கயிலயங்கிரிநாதனைக் கலந்தாலோசிப்போம், வாருங்கள்'' என்றார்.

மகிஷனுக்கு ஒரு பெண்ணால் மரணம் உண்டாக முடியும் என்ற விஷயமே தேவர்களுக்குத் தேவாமுதமாக இருந்தது. இதைக் காரிய சாத்யமாக்கப் பரமேச்வரன் வழிவகுத்துத் தருவான் என்ற நம்பிக்கையின் உதயத்தோடு அனைவரும் வெள்ளியங்கிரி சென்றடைந்தனர்.

அந்தப்புரத்தில் அம்பிகையுடன் இருந்த பனிமலைப் பரமன், பிரமனுடன் துயருற்ற குழந்தைகள் வருகிறார்கள் என்றவுடன் பனிமலை உருகுவது போலவே பரம கருணையில் உருகி, அந்தப்புரத்திலிருந்து முன்வாசலுக்கே வந்து அவர்களை எதிர்கொண்டார்.

''பரமேசுவரா! இந்த எளியேங்களுக்கும் இத்தனை எளியனாகக் காட்சி தந்தாயே! எங்களுடைய தாங்கொணாத்

துக்கத்தைத் துடைக்க இந்தத் தரிசனம் ஒன்றே போதும்''' என்று தேவர் நெஞ்சாரக் கூறி, உடல் சோர விழுந்து தண்டனிட்டனர்.

அமரர்களின் சார்பில் சதுர்முகனே பேசினார்: ''அனைத்துமறிந்த சர்வக்ஞ! நீயாகவே அனைத்தும் அறிந்தாலும், வாய்விட்டுக் குறையிரப்பதால் எங்களுக்கு ஏற்படும் மன ஆறுதலின் பொருட்டு விஞ்ஞாபனம் செய்து கொள்கிறேன். பொன்னாடு உட்பட அண்டசராசரங்கள் யாவும் மகிஷாசுரனின் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் வந்துவிட்டன. இந்தத் தேவர்கள் அநாதைகளாக, அகதிகளாக மேருமலைக் குகைகளில் ஒளிந்து வாழ்ந்து வருகிறார்கள் பிரபு! இந்திரனும், அக்கினியும், யமனும், நிருதியும், வருணனும், வாயுவும், குபேரனும், தங்களது அம்ச பூதனான ஈசானனும் அஷ்டதிக் பாலகர்கள் எனப் பெயர்பெற்று விசுவத்தின் எண்திசைகளையும் காக்கவேண்டியவர்கள். இவர்களே இப்போது திக்குத்திசை தெரியாதவர்களாக, திக்கற்றவர்களாகத் தவிக்கிறார்கள் எனில் இந்த விபரீதத்தை என்னென்பது? திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை! திக்கற்ற இத்தேவர்கள் திக்குகளையே ஆடையாகக் கொண்டு சர்வவியாபியாக விளங்கும் திகம்பரனாகிய உன்னையே துணையாக நாடி வந்துவிட்டார்கள். அள்ளி அணைத்து ஆசுவாசம் தருவாய்! இவர்களது இன்னல் தீர இன்னருள் புரிவாய்!'' என்று பிரார்த்தித்தார் பிரம்மதேவர்.

தேவரிடம் இவ்வளவு பரிவுடனும், மகாதேவரிடம் இவ்வளவு பணிவுடனும் பேசிய போதிலும் இப்போதும் அவருக்குத் 'தான்' என்பது போகத்தான் இல்லை. மகிஷனை வதைக்கக்கூடிய ஸ்திரீயை எவ்விதத்தில் பெறுவது என்று ஆலோசனை கலக்கவே இங்கு வந்தார். ஆயினும் அதைப் பிரஸ்தாவிக்கப் புகுந்தால், மகிஷனுக்குத் தானே இவ்விதமாக வரம் கொடுத்ததும் பொத்தைப் பூசணியைப் போட்டு உடைத்தாற்போல் வெளிப்பட்டுவிடுமே என்று ஒரு கூச்சம் வந்துவிட்டது சதுர்முகனுக்கு! மகிஷனின் தவத்துக்கிரங்கி அவன்முன் தோன்றியபோது, ''உன்னை மரணத்திலிருந்து பூரணமாக விடுவிப்பது என் சக்திக்கு அப்பாற்பட்ட காரியம்'' என்று மனம் திறந்து, தம் எல்லை அறிந்து, கூறினார். ஆனால் தான் வணங்கும் சிவபெருமானிடம் அந்த அளவுக்கு மனக்கரவு இல்லாமல் இருக்க முடியவில்லை! ரஜோகுணச் சேஷ்டை இப்படிப்பட்டது.

இவர் சொல்லாவிட்டாலும் சிவபெருமானுக்கா தெரியாது? பிரமனே சற்றுமுன்தானே அவரை சர்வக்ஞர் என்று அழைத்தார்? பிரம்மனின் மன அடைப்பைத் தானே திறந்துவிட்டால்தான் உண்டு,

பிறகு அது அவருக்கே நிம்மதி தரும் என்று திரு உளம் கொண்ட உமாகாந்தன், தன் சிரத்தில் அணிந்த இளமதி போலவே இளநகை புரிந்தார். ''வாணீகாந்த! உங்களுக்கெல்லாம் உதவிபுரிய எந்நாளும் காத்திருக்கிறேன். உங்களுக்கு அமுது கிடைக்குமெனில் அதன் பொருட்டு நான் நஞ்சு உண்ணவும் சித்தமாக இருக்கிறேன். ஆனால் முதலில் உன் மனக்கடலைக் கடைந்து விஷத்தை வெளியேற்றுவாய்! அதில் அமுதத்தோடு என்னிடம் வா! மகிஷனுக்கு வரம் தந்தது நீயே அன்றோ? தன்னையே ஒரு கர்த்தாவாக எண்ணி வரம் தரலாமா? உன் பிதாவும் பிரபஞ்ச பரிபாலகனுமான நாராயணனை நீ மகிஷனுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டு, பின்னணியில் நின்றிருந்தாயாகில் இந்த விபரீதம் எதுவுமே நடந்திராது. மாய அசுரருக்கு எப்படி வரம் தருவது என்பதை மாயாவியான மாலவனே அறிவார். நீ உன் சக்திக்கு அப்பாற்பட்ட காரியத்தையே மேற்கொண்டாய். ஆனால், அதற்குள்ளும் உன் சக்தியின் எல்லையை ஒருவாறு உணர்ந்து, மகிஷனையே மரணத்துக்கு நிபந்தனை விதிக்குமாறு பணித்தாய். அந்தமட்டில் சிலாக்கியமே! மகிஷன் பெண்ணால் அன்றி வேறெவராலும் தனக்கு மரணம் இல்லை என்று வரம் கேட்டுக் கொண்டான். 'ஆகா' என்று நீயும் வரம் தந்துவிட்டாய். மெய்வருத்தித் தவம் இருந்து பக்தி பண்ணியவனுக்குரிய வரத்தைத் தரத்தான் வேண்டும்; உண்மை. ஆயினும் மகிஷனைப் போன்ற அரக்கர்களுக்கு வரம் தருவதில் நமக்குச் சாமர்த்தியம் போதாது. நானும் பன்முறை சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். இவர்களுக்கு ஈடு கொடுக்கக் கூடியவர் ஸ்ரீமந் நாராயணன் தான். மகிஷனுக்கு நிபந்தனையோடு வரம் தருகிறபோதே திருமாலானவர் அந்த நிபந்தனையானது வரம் கேட்கிற அதருமக்காரனுக்கு எப்படிப் பயன்படாமல் போக வேண்டும் என்றும் திட்டமிட்டிருப்பார். இந்த நிபந்தனையாலேயே தர்மத்துக்கு எப்படி நலம் விளைவித்து, அதர்ம அசுரனை மாய்க்கலாம் என்பதிலேயே கண்ணாக இருந்து மாய்மாலம் செய்திருப்பார், நம் மாய மாலவர். குறைந்தபட்சம் மகிஷனைக் கொல்லக்கூடிய ஒரு பெண்ணின் உற்பத்தியை நிச்சயம் செய்து கொண்டு அதன் பின்பே வரம் தந்திருப்பார். ஆனால் உன் நிலையைப் பார். வரத்தை நீயே கொடுத்துவிட்டு மகிஷனைக் கொல்லக்கூடிய ஸ்திரீ யாராக இருக்கமுடியும் என்றறிய என்னிடம் வந்து நிற்கிறாய்! அப்பனே, உன்னிடம் எனக்குக் கோபம் இல்லை. உன் நலத்தை எண்ணியே இவ்வளவும் சொன்னேன். நீ முன்பு உன் பிதாவைக் கலக்காமல் வரம் தந்ததற்கு அபராதமாக — அல்ல, பரிகாரமாக — இப்போது அவரிடமே செல்வாயாக! மாயையில் அசுரருக்கு எவ்வளவு சக்தி உண்டோ, அத்தனையும்

தினையளவாகும் மாமாயசக்தி படைத்த என் ஆத்மசகா நாராயணனே இப்போது தீர்வு கூற இயலும். அவரிடமே செல்லுங்கள். தேவர்கள் துயர் தீர்ந்து, மறுபடி தங்களுக்குரிய இன்பங்களைப் பெறவேணுமென்று எனது மனம் பொங்கி ஆசி தருகிறேன்'' என்று கூறிப் பரமேசுவரன் அவர்களை ஸ்ரீவைகுந்தத்துக்கு அனுப்பிவைத்தார்.

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி வெளி வாயிலுக்கு வந்து இவர்களை வரவேற்கவில்லை. ராஜாதிராஜ மிடுக்குடன் தமது ஆஸ்தான மண்டபத்திலேயே எழுந்தருளியிருந்தார். பிரம்மனுக்கு ரஜோகுண கர்வம் அடியோடு தொலைய இதுவும் உதவும் என்பதால்தான்.

பிரம்மாதியர் அவரது திருமுன் சேர்ந்தனர்.

பிரம்மன் குற்றவாளி உணர்ச்சியுடன் பேசாமலே இருந்தார். எனவே, இங்கு இந்திராதி தேவர்களே முறையிட்டனர். ''பக்த வத்ஸலா! மகிஷனின் கொடுமையை நாங்கள் அதிகம் சொல்லத் தேவையில்லை. தாங்களே அதை யுத்த பூமியில் கண்டு போரொழித்துத் திரும்பினீர்கள் எனில், பேதைகளான எங்களை என்னென்பது? அவனது பலத்துக்கெல்லாம் காரணம் இந்த பிரம்ம தேவர்தான் என்று இப்போது தீர்மானமாக அறிகிறோம். அவனை வதைக்கக்கூடியது ஒரு ஸ்திரீதான் என்றும் தெரிந்து கொண்டோம். எந்த ஸ்திரீயை உபாயமாகக் கொண்டு மகிஷனை சம்ஹரிக்க இயலும் என்பதற்குத் தங்களையே ஆலோசனை கலக்குமாறு மகாதேவன் எங்களை இங்கு அனுப்பியுள்ளார். மகிஷனை வதைக்க உபாயம் கண்டு எங்கள் மதியைக் குளிர்வியுங்கள் மதுசூதனரே!'' என்றனர்.

மதுசூதனன் சிந்திப்பது போலிருந்தார்; பின் மொழிந்தார்:

''மதுசூதனனா? மதுவை சம்ஹரித்தது நான்தானா? ஜகத்ரக்ஷகன் என்று நீங்கள் நினைத்திருக்கும் இந்தத் திருமால் அல்ல, மதுவை வதைத்தது. இவருக்கும் ஸாரபூதமாக இருக்கும் பிரம்ம சக்தியாகிய பரதேவதைதான் அவனை வதைத்தாள். அவளை ஏன் அனைவரும் மறந்துவிட்டீர்கள்? ஸ்திரீயால் வதம் என்றவுடனேயே சகல சக்தி நிலயமான அவ்ளைத்தானே நீங்கள் எண்ணியிருக்கவேண்டும்? மாறாக, 'போயும், போயும் ஒரு பெண்ணால் இந்தப் பேரசுரனோடு போரிடமுடியுமா! காரிய சாத்தியமற்ற வரத்தை பிரம்மா கொடுத்து விட்டார்' என்றல்லவா எண்ணிவிட்டீர்கள்? அவள் நினைவு உங்களுக்கு வராததும் அவளது லீலைதான். நீங்கள் பூர்வகர்மத்துக்காக

இத்துணைக் காலம்வரை சஞ்சலித்தேயாக வேண்டும் என்றிருக்கும்போது, அதற்குள் உங்களுக்கு எப்படி அவளது நினைவு வரமுடியும்? நாம் அவளை மறந்தாலும், நம்மை அவள் மறக்கவில்லை. அவள் நம்மை மறந்தால் உடனே நாம் சவமாக வேண்டியதுதான். நம்மை மறக்காத மாதா நம்முள்ளேயே மறைந்து, நமக்கு ஒவ்வொரு சக்தியைக் கொடுத்து, காரியங்களைச் செய்விக்கிறாள். முன்பு இந்தச் சக்திகளைத் தவறாக உபயோகித்தீர்கள். அதற்காகத் தண்டனை தந்தாள். பிறகு நீங்களே குருவின் உபதேசப்படி, சுயசக்தியால் தப்புச் செய்ததற்குப் பரிகாரமாகச் சுயசக்தியால் செய்ய முடிந்த நன் முயற்சிகளைப் போர்க்களத்தில் செய்தீர்கள். 'இனி சுயமுயற்சிக்கு இடம் இல்லை; நம் யத்தனம் இல்லை; கடவுளே சரண்' என்று கிடக்கிற பக்குவம் இப்போதுதான் உங்களுக்கு மெல்ல மெல்ல வந்திருக்கிறது. இவ்வுணர்வை வளர்த்துக் கொண்டு அவளைத் தியானிக்கத் தொடங்குங்கள். உங்கள் தண்டனையைக் கருணை மேலீட்டால் பகிர்ந்து கொண்டுள்ள நானும், நீலகண்டனும்கூடத் தியானிக்கிறோம். தியானிக்காதிருப்பினும் அவள் அறிவாள். நமக்குள்ளேயே இருந்து உயிர் தருபவள், நம் எண்ணங்களை அறியமாட்டாளா? நாம் தீவிரமாகத் தியானித்தால் நம் அனைவருள்ளும் அத்வைதமாக விளங்கும் அத் தேஜோரூபம், நம்பால் கருணைகூர்ந்து நம்மிடமிருந்தே வெளிப்படும் எனக் காண்கிறேன். முன்பு மதுகைடபர் துன்புறுத்துகையில் இந்தப் பிரம்மன் பிரார்த்தித்த போது, எனக்குள்ளிருந்தே அவள் தாமஸியாக வந்தாள். இப்போது நம் அனைவரிடமிருந்தே அவள் வெளிவருவாள். அவள் வெளிப்பட்டபின் நாம் அனைவரும் சுதந்திர சக்தி படைத்தவராக நம்மை எண்ணுவதற்கு இடமேயிராது. 'சக்தி'யான அவள் வெளியேறியபின் நாம் அசக்தர்தாமே? எனவே, அவளிடம் அடியோடு சரணாகதி செய்துவிடுவோம். எப்படி யுத்தத்தில் சரணாகதி செய்கையில் எதிரியரசனிடம் ஆயுதங்களைப் போட்டு விடுவரோ, அப்படியே நம்முடைய ஆயுதங்களை அப் பரதேவதையின் பாதத்திலேயே போட்டு விடுவோம். 'எங்களுக்கு முயற்சியில்லை; செயல் இல்லை; எனவே எங்களுக்குத் எந்த ஆயுதமும் தேவையில்லை; எங்களுக்கு தனித்தனி அதிகாரங்களைத் தந்து, அவற்றை ஆற்ற இந்த ஆயுதங்களை அளித்த உன்னிடமே எங்கள் அதிகாரங் களையும், ஆயுதங்களையும் அர்ப்பணித்தோம். உனது கருணைக் கவசம் ஒன்றே எங்களுக்குப் போதுமானது. இனி, நாங்களே நீ ஏவும்படி இயங்கும் உன் ஆயுதமாவோம்' என்று கூறுவோம்.''

தேவரெல்லாம் எவரைப் பணிந்து பக்தி புரிந்தனரோ, அந்தப் பரமபதநாதன் அவர்களுக்கு பக்தியின் பெருமையை அறிவிப்பதற்காகவே இப்படித் தாமும் பராசக்தியின் பரமபக்தராகிப் பணிவுமயமாய்ப் பேசினார். பரமபக்திக்கு இலக்கணம் என்று தவறாக எண்ணப்படும் பரதெய்வ நிந்தனையை அகற்றுமுகமாகத் தொடர்ந்து கூறினார். ''நாம் அனைவரும் தியானித்தால் மட்டும் போதாது; சங்கரரும் தியானிக்க வேண்டும். உலகை அழிக்கும் தொழில் கொண்ட அவரே மாயை அழியும் பராசக்தி நிலைக்கு வெகு நெருக்கத்தில் உள்ளவர். நெருக்கம் என்ன? அதற்கு அபேதமாகவே தம்மை எப்போதும் உணர்பவர். அவரது சங்கற்பமும் சேர்ந்தாலே பராசக்தி ஆவிர்பவிப்பாள். அவள் வருமுன் அவர் வரட்டும்'' என்றார்.

திருமால் திருவாய் மூடுமுன்பே, பக்தியால் உடனுக்குடன் திருப்தி அடையும் 'ஆசுதோஷி'யான பரமேசுவரன் அங்கு பிரஸன்னமானார். அவர்தான் அமரரை இவரிடம் அனுப்பினார் — இவர் அவரையே இங்கும் வரவழைத்துவிட்டார். அப்படியொரு அந்நியோந்நியம்!

பரமேசுவரன் பரமகிருபா மூர்த்தியாக எழுந்தருளியவுடனேயே தேவர்கள் சிலிர்த்து, ''ஹரஹர'' என்று போற்றினர்.

★ ★ ★

துர்க்காதேவி லீலையின் இரண்டாம் பகுதி தொடங்கியதிலிருந்து, சென்ற அதிகாரம் முழுவதும் இந்த அதிகாரத்தில் இதுவரையிலும் கூறியிருப்பதனைத்தும் வியாஸ பகவான் தந்த 'தேவீ பாகவத'த்தைத் தழுவி எழுதியதாகும்.

'துர்க்கா ஸப்தசதீ'யாக சுரதனுக்குக் கதைகூறிய மேத முனிவரோ இத்தனை விவரங்களையும் ஓரிரு சுலோகங் களிலேயே அடக்கி விடுகிறார். ஐராவதத்தையும் உச்சைசிரவசையும் இழந்து வந்த ஸுரதனுக்கு இதே போல ஆதியில் தேவேந்திரன் உற்ற பரிபவத்தை விளக்கிக் கூறி அவனைப் புண்படுத்த முனிவர் விரும்பவில்லை போலும். அல்லது அன்னை பராசக்தியின் ஆவிர்பாவத்தை நிறுத்தி வைக்க முடியாத ஒரு பக்தி வேகம் அவருக்கு ஏற்பட்டுப் பூர்வ பீடிகைகளை வெட்டித் தள்ளியிருக்கலாம்!

மகிஷாசுரனிடம் தோல்வியுற்ற தேவர்கள் பிரம்ம தேவரை முன்னிட்டுக் கொண்டு ஈசுவரனும் கருடக் கொடியோனும் கூடியிருந்த இடத்திற்குச் சென்றனர் என இங்கே மேதஸ் கூறுவதைப் பார்த்தால் எப்போதுமே ஹரியும் ஹரனும் ஒரேயிடத்தில் கூடித்தான்

காணப்படுவர் என்பது போல் தோன்றுகிறது. கைலாசத்துக்கோ, வைகுந்தத்துக்கோ சென்றதாகச் சொல்லாமல், 'விஷ்ணுவும் சிவனும் உள்ள இடத்துக்குச் சென்றனர்' என்கிறார். 'இருவரும் ஒன்றாகவே இருப்பவர்கள்; ஒருவருக்குள்ளேயே இன்னொருவர் இருக்கிறார்; **'இருவரங்கத்தால் திரிவரேனும் ஒருவனொருவன் அங்கத்துளன்'** என்ற ஆழ்வார் கூற்று நினைவில் வருகிறது!

மகிஷனுடைய கொடுஞ் செயல்களை எடுத்துக் கூறி ''எங்களுக்குப் புகலிடம் தாங்கள் இருவருமே! சரண் என்று வந்து விட்டோம். மகிஷன் வதத்துக்கான வழியைத் தாங்கள் சிந்தித்து அருள வேண்டும் என்று முறையிட்டனர்'' என்று கதையைச் சுருக்கி விட்டார் மேதஸ். இனி பெரும்பாலும் 'ஸப்த சதீ' வாய் மொழியையே எடுத்துக் கொண்டு ஆங்காங்கு 'பாகவத' வசனங்களை இழைத்துக் கொள்வோம்.

★ ★ ★

அனைவரும் தியானத்தில் ஈடுபட்டனர். அப்போது விஷ்ணுவும் சிவனும் செய்த தியானம் அமைதி மயமானதல்ல. அப்படிச் செய்தால் இவர்கள் தர்ம அதர்மங்களைக் காணாத பிரம்ம நிலைக்கு அல்லவா சென்றுவிடுவர்? அதனால் தேவகாரிய ஸித்தி எப்படி ஏற்படும்? எனவே, அதர்மத்தை அழிக்கிற கோபத்துடன் தியானம் செய்தனர். அவர்கள் 'கோபத்தைச் செய்து கொண்டார்கள்' **(கோபம் சகார)** என்று முனிவர் கூறுவதிலிருந்து தங்கள் இயல்புக்கு மாறான ஒன்றை வலிந்து வரவழைத்துக் கொண்டது தெரிகிறது. மறத்துக்கும் அன்பே துணையாவதுண்டென வள்ளுவர் பெருமான் சொல்கிறார் அல்லவா? அதற்கேற்ப இது பரமகருணையில் பிறந்த கோபம் ஆகும். தங்களது மலர்ந்த முகங்களில் கடுகடுப்புத் தெறிக்க, விற்புருவங்கள் வளைந்து நெரிக்கப் பராசக்தியைக் கோப உருவில் உன்னிப் பார்த்தனர் சங்கரனும் நாராயணனும்.

உடனே அவ்விருவரது முகங்களிலிருந்தும் ஒரு பேரொளி வெளிப்பட்டது. தங்களது சக்தியை எல்லாம் திரட்டி வெளியே அனுப்புகிறார்கள் — இந்தத் தியாகராஜர்கள்.

வால்மீகியின் கோபத்திலேயே மதுர சுலோகம் பிறந்தது போல், இவர்களது சினத்தில் பிறந்த ஜோதியிலும் இனிமை ததும்புகிறது.

உடனேயே பிரம்மனும் மற்ற தேவர்களும் கூடத் தங்களது உள்ளாற்றலைத் தாங்களே வெளித்தந்து கொள்ளும் தியானத்தை, தியாகத்தை நிறைவேற்றினர். ஒவ்வொரு தேவனின் சக்தியும் அவனவனது தேகத்திலிருந்து வெளிவந்தது.

வெளிவந்த தனித்தனிப் பிழம்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தன.

மகா ஜோதி!

திக்குத் திகந்தமெல்லாம் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சும் அற்புத ஜோதி!

ஒன்றேயான ஜோதி! ஆயினும் அதற்குள்ளேயே பிரம்மனின் பத்மராகச் சிவப்பும், திருமாலின் சியாமள கோமளமும், சிவமூர்த்தியின் சுத்த வெண்மையும், இந்திரிய உலைப்புக்களுக்கு உருப் போன்ற இந்திரனின் நானாவித 'இந்திர ஜால' வர்ணங்களும், இவ்விதமே ஒவ்வொரு தேவருக்குமுரிய நிறங்களும் தனித்தனியே காணப்பட்டன.

''அற்புதம், அருமை! அதிசயம், ஆச்சரியம்!'' என்று தேவரெல்லாம் வியந்தனர்.

இதில் அற்புதம் என்ன? எந்த ஒரு ஞானம் இத்தனை சிற்றறிவுகளாகவும் உத்தம அறிவுகளாகவும் தனித்தனியே ஆகிய பின்பும், இவற்றுக்கு ஆதாரமான ஏக மூலமாகவும் உள்ளதோ, அந்த ஞானத்தின் வடிவமன்றோ இந்த ஜோதி! இது ஒன்றாக இருக்கும்போதே பலவாகக் காண்பதில் விந்தை என்ன? ஒரே வண்ணம்தான் ஒளிச் சிதறலில் (refraction) ஏழாயிற்று. இன்று எல்லா எண்ணங்களும், அவற்றைப் பிறப்பித்த எண்ணமான ஏக மூலமாக ஒன்று கூடியுள்ளன.

அற்புதமாகவும், ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் இருப்பதைக் கண்டு வியக்கலாம், மலைக்கலாம், பிரமிக்கலாம். ஆனால் அணுகி வந்து அன்பு செய்ய முடியாது. அருணாசலத்தில் உதித்த ஞானஜோதி ஆதியில் இப்படித்தான் அருகில் அணுக முடியாமலிருந்தது — அதனாலேயே அண்ணாமலை எனப் பெயர் பெற்றது.

இதுவோ கருணாசலம் — அன்புமலை. இது வியப்பை ஊட்டுவதைவிட அன்பைப் பொழிவதையே முக்கியமாகக் கொண்டது.

எனவேதான் திரிலோகங்களையும் வியாபித்த அந்த காந்தி சமூகம் அன்பே வடிவான ஒரு திவ்விய மங்கள ஸ்திரீ ரூபமாக இறுகிற்று.

சம்புவின் வெள்ளொளி அந்த ரூபத்தின் முகமாக முறுகிற்று. இந்த வெண்மையைத் தூக்கிக் காட்டுவதே போல் யமனுடைய தேஜஸ் கருங்குழல் கற்றையாக மதிவதனத்தைச் சூழ்ந்தது. அநுக்கிரகமும் நிக்கிரகமும் இத்தனை நெருக்கம்!

பாலனத்துககாகவே வந்து போர்புரியப் போகிற தேவியின் திவ்விய புஜங்களாகிப் பரிணமித்தன ஸ்ரீமந் நாராயணனின் திவ்விய நீலத்தேசு! ஆகா, இரண்டல்ல, நான்கல்ல, பதினெட்டுத் திருக்கரங்களோடு நிற்கிறாள் எம்பிராட்டி!

புஜபல பராக்கிரமத்துக்கு மாற்றாகச் சந்திரனின் தண்ணிய காந்தியில் தாய்மையின் உறைவிடமான நகில்கள் உதித்தன. இந்திர தேஜசால் இடைப்பகுதி உருவாயிற்று. வருணகாந்தி வருணனைக்கெட்டாத கருங்கதலித் தொடைகளாயின. புவியின் ஒளியால் பின்புறம் தோன்றியது. பிரம்மனின் செம்மை செந்தளிர் பாதங்களாயின. அச்செம்மையிலிருந்து புறப்படும் அடர்ந்த செங்கிரணங்களே போன்ற பாத விரல்களாகச் சூரியனின் ஜோதி பரிணமித்தது. வசுக்களின் ஒளி இவளது கைவிரல்களாயின. சிவனொளியால் தோன்றிய திருமுகத்திலேயே அவரது அருமை பக்தனான குபேரனின் ஒளி நாசிகையில் குடிகொண்டது. பிரஜாபதி (பிரம்மன், பிரஜாபதி, ஹிரண்யகர்ப்பன் ஆகியோரை ஒன்றாகவே கருதுவதுண்டு; வெவ்வேறாகக் கருதுவதும் காணப்படுகிறது) தன் ஒளியை அவளது மல்லிகைப் பற்களாக மலர்த்தினார். அக்கினி அவளது திருநயனங்களில் — திரிநயனங்களில் — தனது உக்கிர தேஜஸைக் குடிபுகுத்தினார். ஆயினும் இக் கண்கள் அசுரரிடம்தான் உக்கிரத்தை உமிழும்! தஞ்சம் புகுந்த குழந்தைகளிடம் சிவத்தின் அன்பையே இந்தக் கமலக் கண்கள் பிலிற்றும். விசாலமான அந்த நெற்றியை முகத்தில் ஒரு பாதியாகப் பிரித்து, கண், நாசி முதலிய பகுதிகளை சந்தி செய்விக்கிற புருவங்களாக உருவம் கொண்டது சந்தியாவின் காந்தி. வாயு அவளது திருச்செவிக் கிண்ணங்களில் தன் தேஜஸை நிரப்பிவைத்தான்.

உதயச் செம்மையைக் கொட்டும் அருணனின் தேசு அம்பிகையின் கீழுதடாகவும், தேசுக்களில் சிறந்த செவ்வேள் முருகனின் ஒளியானது மேல் அதரமாகவும் பரிணமித்தன என 'தேவீ பாகவத'த்திலிருந்து அறிகிறோம்.

அரூபம் முதலில் ஒளியாயிற்று. அதற்கு ரூபம் இருந்தாலும் அங்கமில்லை. அருவுருவம் எனலாம். பிறகு, இப்போது பூரணமாக ரூபம் கொண்டுவிட்டது.

ஸாக்ஷாத் பரப்பிரம்ம சக்தி பல தேவசக்திகளாகப் பிரிந்திருந்தது, இப்போது மீண்டும் ஒன்று கூடிப் பூரணப் பிரம்ம சக்தியாகவே நிற்கிறது!

நம் அம்பாள் பிறந்து விட்டாள்!

விந்தைதான்!

மன்னுயிர் புவனம் ஏனை மற்றுள பொருளுக்கெல்லாம்
அன்னையாய் உதவி நாளும் அவற்றினை வளர்த்து நிற்பாள்,
தானுமே பிறப்பதுண்டோ? பிறந்தது சழக்கே — அந்தக்
கன்னிதன் அருளின் நீர்மை காட்டினள் போலும் அன்றே!

என்ற கச்சியப்ப முனிவரின் வாக்கைத் தித்தித்துப் பாட வேண்டியதுதான்! 'அருளின் நீர்மைகாட்டினள் போலும்' என்ன போலும்! கருணைதான், அவள் இப்படி ஆவிர்பவித்தது! பிறப்பற்ற பராசக்தி பக்தர் பொருட்டுப் பிறப்பதாகவும் காண்பித்துக் கொள்வாள்; தர்ம ரட்சணத்துக்காக, தேவ காரிய ஸித்திக்காகப் பிறந்தும் காட்டுவாள் என்று முன்பே மேதஸ் கூறினார் அல்லவா?

அசுரர் முன் அசக்தராக நின்ற தேவர்களின் உள்ளிருந்தே அவர்களது புத்திரியைப் போல மஹா சக்தியான மஹா மாதா பிறந்தாளே — அது பரமாற்புதந்தான்!

தேவி தோன்றிய காட்சி எப்படியிருந்திருக்கும்? அதை நம்மால் கற்பனையேனும் செய்து பார்க்க முடியுமா?

நம் கற்பனைக்கும் எட்டாத சௌந்தரியப் பிரகாசத்தை, காருண்யப் பிரவாகத்தை, சௌரிய பிரதாபத்தைக் கண்ணாரக் கண்டனர் விண்ணாட்டவர். இந்த அம்ருத தரிசனத்துக்கு இத்தனை நாட்கள் உற்ற இன்னலும் ஈடாகாது!

''அம்மா வந்தேவிட்டாள்! இப்போதே மகிஷன் மடிந்தது போலத்தான்!'' — தேவர்கள் ஆனந்தத்தின் எல்லைக்கே சென்றனர்.

''ஜய ஜய ஜய ஜய'' என்று தேவி பராசக்திக்கு வாழ்த்தும் போற்றுதலும் கூறிப் பணிந்து எழுந்தனர்.

★ ★ ★

குழந்தை பிறந்தால் அதைப் பார்க்க வருவோர் பரிசுப் பொருள் தருவர் அல்லவா? இந்தக் குழந்தை பிறக்கும்போதே மங்கைப் பருவ மடக் கொடியாகத் தோன்றிவிட்டது! இதற்கு தேவர்கள் என்ன பரிசு தந்தனர்? முன்னரே திருமால் கூறியிருந்தபடி தங்களது ஆயுதங்களை எல்லாம் அவளுக்கு அர்ப்பணித்தனர். நேராக ஆயுதங்களை எல்லாம் அவளுக்குத் தந்து வெறுங்கையராக நிற்கவில்லை. பூர்வத்தில் அவள் இவர்களுக்குத் தொழில் தந்தபோது அதற்காகத் தந்த ஆயுதங்கள் இவை. இப்போது தொழிற்படுபவள் இவள் ஒருத்தியே என்று அவர்கள் தொழில் ஒழிந்து, தாயையே நம்பித் தன் செயலில்லை என்று கிடக்கும் குழந்தைகளாய் ஆகிவிட்டாலும், முன்பு அவள் அன்புகூர்ந்து அளித்த நினைவு மறக்காமல் அந்த ஆயுதங்களை

விளையாட்டுப் பொம்மைகளைப் போல் தாங்களே வைத்துக் கொண்டனர். அவற்றின் சக்தியை முழுவதும் திரட்டி அந்தந்த ஆயுத வடிவமாகவே ஆக்கி அவளுக்கு அர்ப்பணித்தனர். இவர்களது சரீரம் தனித்தனியாக இருக்கும் போதே, அவற்றின் சக்தி இவளிடம் கூடியதுபோல். அந்த ஆயுதங்கள் அவர்களிடமே இருந்தாலும், அவற்றின் சக்திகள் இவளிடம் அந்தந்த ஆயுதரூபமெடுத்து வந்து கூடின.

முதலில் பரமேசுவரன் தமது சூலாயுதத்திலிருந்து அதன் சக்தியை எல்லாம் வடித்துச் செய்த இன்னொரு சூலாயுதத்தை உண்டாக்கி, அதனை அம்பாளுக்கு அளித்தார். எத்துணை ஆயுதங்களைத் தரித்தாலும் சூலினியாக இருப்பதே அவள் பெருமை! ஜீவனை அலைப்புறுத்தும் பலவிதமான மும்மைகளை — திரிபுடிகளை — அடியோடு கல்லவே, கொல்லவே மூவிலை படைத்திருப்பதன்றோ திரிசூலம்! ஞானாம்பிகையின் முதல் ஆயுதம் இதுதான்!

அடுத்து மேகவண்ணன் தமது சுதரிசனத்திலிருந்து ஒரு சக்கரத்தைப் படைத்து அவளுக்குக் காணிக்கை செலுத்தினார்.

வருணன் சங்கத்தையும், அக்னி சக்தியாயுதத்தையும் (சக்திக்கே தருகிறார்!), வாயு தநுர்பாணங்களையும் அளித்தனர். இந்திரன் வஜ்ராயுதத்தை அளித்தான். குறிப்பாகத் தன்னைப் பதவியில் இருத்தவே வந்த பராம்பிகைக்கு இது ஒன்று போதாதென்று, சூட்சும சக்தியாகத் தன்னிடமிருந்த ஐராவதத்திலிருந்து தோற்றுவித்த ஒரு மணியையும் கொடுத்தான். ''யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே'' என்பார்கள். இங்கோ யானையே மணியாயிற்று! இந்திர ஜாலம்தான்!

யமதர்மன் தண்டம் தந்து தண்டனிட்டான்; ஜலதேவன் (வருணனையும் ஜலதேவனையும் ஒன்றாகக் கருதுவதும் உண்டு. மழையை மட்டும் வருணன் என்றும், நீர்நிலைகளுக்கு தேவதை ஜலதேவன் என்றும் பிரிப்பதும் உண்டு) பாசத்தை அளித்தான், பாசமே உருவான மாதாவுக்கு! பாசத்தை வெல்லும் ஞான மாதாவுக்குப் பிரஜாபதி அக்ஷமாலையையும் பிரம்மா கமண்டலத்தையும் தந்து, இவளது ஞான வடிவை நிலை நாட்டினர். தேவியின் ரோமக்கால்களில் பிரகாசிக்கும் ஒளியாகக் கதிரவன் தன் கதிர்களை அளித்தான். காலன் (இவனை யமனுக்கு வேறாகவும் கருதுவதுண்டு) கத்தியும் கேடயமும் தந்து அடி பணிந்தான். க்ஷீரசாகரத்தின் அதிதேவதை, பால் நுரையையே மலர்வித்தது போன்ற வாடாத மாலையையும் என்றும்

நூதனமாயிருக்கும் பாலேடு போன்ற உத்தரீயம் அந்தரீயம் ஆகிய வஸ்திரங்களையும் சமர்ப்பித்தான். லவண சமுத்திரராஜனும், தன் பங்குக்கு, வாடாத கமல மலர் மாலையினை அர்ப்பணம் செய்தான். அதை அம்பிகை வாங்கிக் கழுத்தில் அணியாமல், ஜடாமகுடாகாரமாகப் புனைந்திருந்த தனது திருமுடியில் 'கண்ணி'யாகச் சுற்றிக் கொண்டாள். (காமகோடி பெரியவர்களின் நினைவு வருகிறது.) சொல்லொணா எழில் கொழித்தது. சளைக்கவில்லை சமுத்திரராஜன். இன்னொரு தாமரை மாலையை அளித்தான். இதனைத் தேவி தனது மலர் மேனி முழுதும் படியுமாறு திருத்தோளில் 'தார்'என்பதாக அணிந்து, பரம சௌபாக்கிய மூர்த்தியாக நின்றாள். சிரத்திலும், உரத்திலும் அணிந்தது போதாது என்று அவள் கரத்திலும் தரிக்க ஓர் ஒற்றைத் தாமரையைத் தந்தான் கடலரசன். இதுவும் அவளுக்கு ஆயுதம் ஆயிற்று. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்களே? நம் அம்மாவுக்கு தாமரையைப் போலவே, குபேரன் தந்த பானபாத்திரத்திலிருந்த மது, பிரம்மா அளித்த கமண்டல தீர்த்தம் இவையும் ஆயுதங்களாயின! தாமரையை அவள் எதிரியிடம் காட்டினாலே போதும், அந்த அழகில் மோகித்து, அப்படியே ஸ்தம்பித்து நின்று விடுவான். மதுவின் மணத்தில் கிறங்கிவிடுவான். அதோடு, மதுவை இவளே பருகியும் யுத்தமதத்தைப் பெருக்கிக் கொள்வாள். குண்டிகை நீரைச் சண்டிகை தெளித்து விட்டாலோ எதிரி அசல் கல்லாகவே மாறிவிடுவான்! தேவர்களின் ஆபரண-ஆயுத உற்பத்தியாளன் விசுவகர்மா (இவனையும் துவஷ்டாவையும் ஒன்றாகவும் சொல்வர், வேறாகவும் சொல்வர். 'துர்க்கா சப்தசதீ'யில் துவஷ்டா என்ற பிரஸ்தாவம் இல்லை) தேவிக்கு விதவிதமான நகைகளை அர்ப்பணித்தான். இயல்பாகவே திரிபுர சுந்தரியாக இருந்த அன்னைக்குச் செயற்கையாகவும் அழகு செய்து மகிழ்ந்தான். அடாடா! எத்தனை ஆபரணங்கள்! சிரத்தில் சூடும் சூடாமணியிலிருந்து, பாதத்தில் குலுங்கும் நூபுரம் வரையில், குண்டலம், கடகம், சந்திரப்பிரபை, கேயூரம், அட்டிகை, மோதிரங்கள் என்றிப்படி இழைத்து விட்டான். பதினெட்டுக் கரங்களிலிருந்த தொண்ணூறு பிஞ்சு விரல்களுக்கும் ரத்ன அங்குலீயங்கள் படைத்துத் தந்து விட்டான்! (தேவி பாகவதப்படி) கதாயுதத்தையும் மற்றும் பல அஸ்திரங்களையும் துவஷ்டா அளித்தான். (தேவியின் பதினெட்டு ஆயுதங்களில் ஒன்றான கதையின் தோற்றுவாய் 'ஸப்தசதீ'யில் காணப்படவில்லை. விசுவகர்மா பரசு (கோடரி), கவசம் முதலிய

அஸ்திரங்களையும் அளித்ததாகக் கூறுவதில் இந்தக் கதாயுதத்தையும் முனிவர் உள்ளடக்கிவிட்டார் போலும்!)

இப்படி இயற்கையாகவே சர்வாங்க சுந்தரியான தேவி, சர்வாபரண பூஷிதையாகி மேலும் அழகு பெருக்கிட, சர்வ ஆயுதங்களும் கூட ஒப்பனைப் பண்டங்களைப் போலவே அவளுக்கு அழகு செய்தன. சர்வ தேவர்களின் ஆயுதங்களையும் பெற்று சர்வதேச சக்கரவர்த்தினியாக, ராஜ ராஜேசுவரியாக நின்ற எம்பிராட்டிக்குச் சிம்மாதனம் வேண்டாமா? மெய்யாலுமே ஒரு சிம்மத்தை அவளுக்கு ஆதனமாகவும் வாகனமாகவும் கொணர்ந்து கொடுத்தான், இமயமலைக்கு தேவதையான ஹிமவான். அந்த சிம்மம் சாட்சாத் தர்ம ஸ்வரூபமே ஆகும். சத்தியம், தயை, தவம், ஒழுக்கம் என்ற நாலுமே அதன் நாலு பாதங்கள். அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிறுத்தவே திருஉருத் தாங்கிய பரதேவதையைத் தாங்கப் போகிறோம் என்ற பெருமையில் பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு கம்பீரமாக வந்து நின்றான் மிருகேந்திரன்.

ஸுரத ஸமாதியருக்கு துர்கா லீலைகளைக் கூறி முடித்தபின், வழிபாட்டு முறைகளை 'வைக்ருதிக ரஹஸ்ய'த்தில் விளக்கிய மேத முனிவர், இத் தேவியைப் பூஜித்த உடன், அவளுக்கு எதிரே சற்று வலப்புறமாக இந்த சிம்மத்தை வைத்து, இதனைச் சம்பூர்ணமான தர்மத்தின் அதிதேவதையாகக் கருதி (**ஸமக்ரம் தர்மம் ஈச்வரம்**) பூஜிக்க வேண்டும் என்கிறார். தேவியைத் தாங்கும் வாகனம் என்பதால் இதுவே சராசரமனைத்தையும் தாங்குவது என்ற உணர்வோடு வழிபட வேண்டும் என்பார்.

அம்பிகை ஸிம்மத்தின் மீது மிடுக்கோடு ஆரோகணித்ததும் அனைவரின் கண்டத்திலிருந்தும் ''போற்றி போற்றி'' என்ற வாழ்த்தொலி எழுந்து விண்ணெட்டியது. தர்மம் சிம்மாசனம் ஏறிவிட்டது; இனி மகிஷன் மூவுலக அரியணையிலிருந்து இறங்க வேண்டியதுதான்.

அம்பிகையின் பெருமையைப் பாருங்கள்! சக்கரவர்த்திகளுக்கெல்லாம் சிம்மாசனம் இடுவதாகப் பெருமைப் படுத்திப் பேசினாலும் அவர்களின் ஆசனங்களின் கைப்பிடியில் பெயருக்கு சிம்மத் தலை பொருத்தியிருப்பதோடு சரி. உண்மையாகவே சிம்மாசனம் இவள் ஒருத்திக்குத்தான். பிரம்ம சக்தியான அவளே அல்லவா சகல சராசரங்களுக்கும் தனியோர் அரசி? ''ஸிம்ஹாஸனேச்வரீ'' என்ற பெயர் இவளொருத்திக்குத்தானே உண்டு?

இமயமலைச் சுரங்கங்களில் தோன்றும் ரத்தினங்களையும் அரசிக்குக் கப்பம் செலுத்தினான் ஹிமவந்தன். அம்பாள் பார்வதியாக இருக்கும்போது இதே ஹிமவான் இவளது தந்தை. இப்போதோ இவளே சகலருக்கும் தாய், அரசியான தாய்.

இந்த மகாராணிக்கு உற்சாகப் பொருள்களைக் காணிக்கை தரவேண்டாமா? இச்சமயத்தில்தான், செல்வத்துக்கு அதிபதியான குபேரன், எந்நாளும் குறையாத மது பாத்திரத்தை அன்னைக்கு அளித்தான். அவளிடம் எதிரெதிர் துருவங்கள் ஒன்று சேர்ந்தன. கீழ் இடக்கரத்தில் போத மயமான கமண்டலு இருக்கிறதெனில், அதையடுத்த மேற்கரத்திலோ போதை மயமான மது பாத்திரம்.

மகிஷனின் பாபத்தால் நெரிக்கப்பட்ட புவியின் பாரத்தைத் தீர்க்க வந்த தேவிக்கு, இந்தப் புவியைத் தாங்கும் ஆதிசேஷன் நாகஹாரத்தைச் சமர்ப்பித்தான். நாகரத்தினத்தின் ஒளியை நாற்புறமும் சிந்தியது அற்புத ஹாரம்! அதை அணிந்து நாகபூஷணியாக விளங்கினாள் தேவி. குண்டலினியாம் பிராண சக்திக்கு உருவகம் இந்த நாகஹாரமே ஆகும்.

சகல தேவர்களும் இவ்விதமே தேவிக்குக் காணிக்கைகள் சமர்ப்பித்தனர். அவற்றை அளப்பரும் பெருந்தன்மையோடு அங்கீகரித்து அருள் செய்தாள் பரமேச்வரி.

நம் மனத் திரையை விஸ்தாரமாக்கிக் கொண்டு அதிலே இந்த அற்புத ஆவிர்பாவத்தைச் சித்தரித்துப் பார்க்க வேண்டும். நாமே சித்திரிக்காமல், மனத்தை சிந்தனையின்றி வெள்ளைவெளேரென்று வெள்ளித் திரையாக்கிக் கொண்டுவிட்டால் இன்னும் விசேஷம்! அதில் தேவியே இதை எல்லாம் திரைப் படமாகப் போட்டுக் காட்டுவாள்!

★ ★ ★

பரப் பிரம்மத்தின் பரிபூரண சக்தியானது சகல தேவ்தா சக்தி ஸ்வரூபமாக ஆவிர்பவித்த இந்த மகாபுண்ணிய சம்பவம் நிகழ்ந்தது ஓர் ஆச்வின மாத க்ருஷ்ணபட்ச சதுர்த்தசியில் ஆகும். அதாவது, மஹாளய அமாவாசைக்கு முதல் தினம். எல்லாமே லயித்த மகாப்பிரளய காலத்தில் மாகாளியாக வந்தாள். இப்போது மகாலயத்துக்கு முன் மகாலக்ஷ்மியாக வந்திருக்கிறாள்.

ஆம், இவளே மஹாலக்ஷ்மி.

பாற்கடலில் உதித்துப் பரவாசுதேவனை மணந்த பதுமாவதியையே நாம் பொதுவில் மகாலக்ஷ்மி என்கிறோம்.

'லக்ஷ்மம்' என்றால் 'அடையாளம்'. இறைவன் இருக்கிறான் என்பதற்குப் பகிரங்க அடையாளமாக அவன் காட்டும் சௌந்தரியங்கள்தாம் விஷ்ணு பத்தினியான மகாலக்ஷ்மி.

இப்போது நாம் காணும் மகாலக்ஷ்மியோ சாட்சாத் பிரம்ம சக்தி! விஷ்ணுபத்தினி உட்பட சகல தேவ தேவியரின் சக்திக்கும் இவள்தான் மூலம். மகத்தான லக்ஷ்யம் எதுவோ, அதன் உருவம் ஆதலால் இவளுக்கு மஹாலக்ஷ்மி என்று பெயர்.

விஷ்ணு பத்னியான லக்ஷ்மியின் மந்திரம் மகர ஒற்றோடு சேர்ந்த 'ஸ்ரீ'. நம் சரிதநாயகியான லக்ஷ்மியின் மந்திரமோ தேவீ ப்ரணவமான மகர ஒற்றோடு சேர்ந்த 'ஹ்ரீ'. மகாலக்ஷ்யத்திற்கு ஒலிவடிவம்.

அந்த லட்சியம் என்ன? ஞானம்தான்! பிரம்மத்தை அறிகிற ஞானத்தைவிடப் பெரிய லட்சியம் என்ன இருக்க முடியும்? பிரம்மத்தின் ஞான வடிவமே இவள். பிரம்மம் தன் சக்தியைத் தானே உணர்ந்துகொண்டது; இந்தச் சக்தியும் அதனை உணர்ந்த அறிவும் வேறு வேறு அல்ல. சக்தியேதான் இங்கு ஞானமும். அந்தச் சக்தியே இவள்; இவளே ஞானாம்பிகை ஆவாள்!

கேனோபநிஷத்து கூறும் ஞானாம்பிகையானவள், அகம்பாவம் கொண்ட தேவர்களால் அறியவொண்ணா வண்ணம் நின்ற யக்ஷவடிவ தேஜஸ் இன்னது என்று அவர்களுக்கு அறிவுறுத்துவதற்காக அத் தேஜோமயத்தின் இடத்திலேயே தோன்றினாள். தேவர்கள் வெற்றிச் செருக்குக் கொண்டபோது நடந்த விருத்தாந்தம் அது. இங்கோ தேவர்கள் தோல்வியால் செருக்கிழந்து நிற்கிறார்கள். இங்கு அவர்களது உள்ளொளியாய் அவளே தன்னிலிருந்து அளித்திருந்த சைதன்யமே வெளிப்போந்து உண்டான தேஜோமயம் அதே ஞானேசுவரியாகிறது!

துன்ப வடிவமான மது-கைடபரை வதைக்க பிரம்மத்தின் ஆனந்த சக்தி தேவைப்பட்டது. அஞ்ஞான வடிவமான மகிஷனை வதைக்க இப்போது பிரம்மத்தின் ஞான வடிவம் வந்திருக்கிறது. இவளே ஸத்-சித்-ஆனந்தத்தில் 'சித்' எனும் ஞானத்துக்கு வடிவமாகிய சைதன்ய ஸ்வரூபிணி.

பிரம்ம சக்தியை ஸத்-சித்-ஆனந்தம் என்று சொல்லாமல் 'சித்' என்று சொன்னாலே போதும். 'ஸத்'தாக அது இருந்து மட்டும் பயனில்லை — தனது 'ஸத்'துவத்தைத் தானே அறியாத வரையில்! 'சித்'தாகி இப்படி அறிகையிலேயே ஆனந்தமும் உண்டாகிறது. தன் அகண்டத்துவத்தை உணரும்போதேதான், அது இதைக் கண்டம் கண்டமாக, நானா வஸ்துக்களாகக் காட்டவும் உணர்வு பெறுகிறது — மாயையாக ஆகிறது. அதாவது, தன்னில் தானே ஞானமாகவும்,

தன்னை வெளியிட்டுக் கொள்வதில் மாயையாகவும் இருக்கிறது. ஞானமாகிய பூரண பிரம்ம சக்தியின் பீஜாக்ஷரமேதான் மாயா பீஜம் என்றும் சொல்லப்படுகிறது. இதையே ''தேவீ ப்ரணவம்'' என்பர். வெறும் பிரணவத்தை உபாசிப்பதால் பரமசாந்தம் கிட்டும் எனில், மாயா பீஜமாம் தேவீ ப்ரணவத்தை உபாசிப்பதால் சுத்தப் பிரணவத்தின் பரம சாந்தமும், அதே சமயத்தில் அதோடு கூட ஒரு விழுமிய சக்தியும், பிரேமையும், லீலானந்தமும் விவரிக்க வொண்ணாத விதத்தில் கலந்து பூரித்திருக்கும்.

நவராத்திரி நாயகியான துர்க்கா தேவிக்கு உரிய ஒன்பதெழுத்து மகாமந்திரமான நவாக்ஷரீயில் முதலில் ஸத்தின் பீஜமும், பிறகு சித்தின் பீஜமாகிய தேவீ ப்ரணவமும், அதன் பின் ஆனந்த பீஜமும் வரும். அதனை அடுத்து வரும் அக்ஷரங்கள் இவையெல்லாம் பராசக்தியின் அக உணர்வாக மட்டுமன்றி இவற்றை அவள் அடியாரின் பாற்படுத்தி வைப்பதைச் 'சாமுண்டா' என்பதால் குறிக்கும். 'சாமுண்டா' என்பது ஜீவர்களை வதைக்கும் அசத்திய-அஞ்ஞான துன்பப்படைகளை மாய்ப்பதற்காக ஏற்ற திருநாமமாகும். முடிவில், இம்மந்திரத்தை ஜபிக்கும் சாதகன் அவளோடு தன்னைக் கரைத்து ஐக்கியம் அடைவதாகக் கூறும் இறுதி வாசகமும் சேர்ந்ததாகும் நவாக்ஷரீ.

முதலிலேயே சித்பீஜம், அடுத்து சித்-ஆத்மக பீஜம் என்று ஒரு பாகுபாடு சொல்கிறார்கள். 'சித்' எப்போதுமே ஆத்மகமானதுதான்! அநாத்மகமான 'சித்'தும் உண்டா என்ன? இந்தப் பாகுபாட்டினால் ஸத்சிதாநந்தத்தில் முதலாவதான ஸத்து விட்டுப் போகிறது. ஆயினும், இம்மூன்று பீஜங்களும் முறையே மகா சரஸ்வதி, மகாலக்ஷ்மி, மகா காளிக்குரியன வாகையால், ஞான ரூபிணியான சரஸ்வதியை 'ஸத்' என்பதை விடச் 'சித்'தாகக் கொள்வதுதான் பொருத்தம் என்று கருதி இப்படிப் பாகுபடுத்தியிருக்கிறார்கள். பிரபஞ்சம் என்ற கலைப் பொருளைப் படைத்து, அதில் உள்ள மனிதனின் சித்தத்திலும் கலையறிவாக இருப்பவள் சரஸ்வதி. பௌதிக தர்மங்கள் அனைத்தாகவும் இருப்பவள் அவளே. இதனால் தான் அவளைச் 'சித்'தாக வைத்தனர் போலும்! ஆனால் ஜடப் பிரபஞ்சம் அற்புத அழகும் ஒழுங்கும் கொண்ட கலைப்பண்டமாக இருப்பினும், அதுவே தன்னை இவ்வாறு அறிந்து கொள்ளவில்லை; ஜீவனோ தனது கலையறிவைத் தனது தனி மனத்தின் சிறப்பாகவே நினைத்திருக்கிறானே அன்றி, தன்னுள் பராசக்தி வைத்துள்ள அவளது கலைப் பொருளாக அறியவில்லை. (Art lies in

concealing Art என்பதை artist-ன் விஷயத்திலேயே செய்து விடுகிறாள் மஹாமாயை!) பௌதிக தர்மங்கள் தம்பாட்டில் இருக்கின்றனவே ஒழிய, அவை அறிவுடன் இப்படி இருக்கவில்லை. இந்த நிலையைத் தான் மகா சரஸ்வதி உருவகப்படுத்துகிறாள். அறிவை விட இருப்பே இங்கு பிரதானம். தர்மம் இருந்தபடி இருக்கிற ஒன்றுதான். அதில் சலனமில்லை. இதனைத்தும் 'சித்'தைவிட 'ஸத்'தையே சாரும். பிரம்ம சக்தியின் வெளிப்பாடுகளைப் பொறுத்த வரையில், இது இருந்தும் அறியாத நிலையாதலால் 'ஸத்'தே என்றோம். பிரம்ம சக்தியின் உள்ளார்ந்த நிலையிலோ, இதுவே பிரம்மம் தனது அசலன சாந்தத்திலிருந்து மெல்ல மெல்ல எட்டிப் பார்க்கிற வைகறை நிலை. எட்டிப் பார்த்தவுடனேயே தர்மங்களும், அழகுகளும், ஒழுங்குகளும், ஜீவராசிகளின் அறிவுகளும் அநாயாசமாகத் தோன்றி விடுகின்றன.

இந்த அநாயாசத்தின் வெண்மையே மகாசரஸ்வதி. பிரம்மத்தின் அநாயாச சிருஷ்டியையே படைப்பு என்கிற ஒரு தொழிலாக விதிக்குட்படுத்தி பிரம்மா என்கிறோம். இவருக்கு விதி என்றே பெயர். இவர் ஜீவராசிகளை அவர்களது கர்மம் என்கிற விதிப்படிப் பிறப்பிப்பது மட்டுமல்ல; இவருமே சிருஷ்டிக்கான விதிகளுக்குக் கீழ்தான் தொழிலாற்றுகிறார். சரஸ்வதியின் அநாயாசம் இப்போது ஓர் ஆயாசம் கொள்கிறது. நாம் ஆயாசத்துடன் ஒரு காரியம் செய்தால் நம் உடம்பில் ரத்தம் குப்பென்று சிவக்கிறதல்லவா? இப்படியே சரஸ்வதியின் வெண்மை பிரம்மாவிடம் சிவந்து விடுகிறது. விசேஷமாக ஞானம் கலக்காமல் ஓயாது செயல்பட்டுக் கொண்டிருக்கும் பிரம்மாவை ரஜோ குணத்தவர் என்றும், ரஜஸின் சிவப்பு இவருக்கு ஏற்பட்டு விட்டது என்றும் சொல்கிறோமல்லவா?

பதினெண் புஜத்தோடு இங்கே நாம் காணும் மகாலக்ஷ்மியும் சிவந்தவள்தான். அந்தச் சிவப்பிலேயே சிவனின் வெண்மையும், விதியின் செம்மையும், திருமாலின் நீலமும், இந்திரனின் வர்ண விசித்திரங்களும் ஊறிக் கரைந்திருக்கின்றன. இவளது பற்பல அவயவங்களுக்குப் பற்பல நிறங்கள் கூறியிருந்தாலும் இவள் அருணச் செஞ்சோதியாகவே மொத்தத்தில் தோன்றுவாள் — மாமரத்தின் கிளைகள், பூக்கள், பழங்கள் எல்லாம் பல்வேறு நிறத்திலிருந்தாலும், மொத்தத்தில் இலைகளின் பச்சையே மரத்தின் வர்ணமாகத் தெரிவதேபோல! இவளது சிவப்பிலேயே ஓரிடம் இளம் சிவப்பு, மற்றோரிடம் கருஞ்சிவப்பு என்று தெரியும். ஆனால் இந்தச் செம்மை ஞானமற்ற வெற்று ரஜஸ்

அல்ல. இது ஞானமே கருணையாகிச் சிவந்து, ஓயாமல் அநுக்கிரகத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அற்புத ரஜஸ். வெள்ளத்தின் போது வெண் புனல் இறுகிச் சிவப்பதுபோல, சரஸ்வதியின் சத்தியம் இறுகிய சைதன்யச் சிவப்பே இவளது வர்ணம். ஆனாலும் இதை 'இறுக்கம்' என்பதும் பொருந்தாது. இது இயல்பான காருண்யம். இயல்பானது அநாயாசமானது. இறுக்கமோ ஆயாசத்தில் உண்டாவது. இந்த அநாயாச அநுக்கிரகமே பரிபாலக விஷ்ணுக்கு விதித்த தொழிலாகிறது. உடனே அதுவும் ஆயாசமாகிறது. முன்பு சரஸ்வதியின் வெண்மை விதியில் இறுகிச் சிவந்ததுபோல், சிவப்பும் இறுகிக் கறுப்பாகிறது. அதுவே மகாவிஷ்ணுவின் மேனி வண்ணமும் ஆகிறது. அநுக்கிரகத்தில் உள்ள ஆனந்தமே எல்லா ஆனந்தங்களையும் விட உயர்ந்தது. அன்பு செய்வதில் உள்ள இன்பம் வேறெதிலும் உண்டோ? கருணை புரிவதின் களிப்பே இறுகிக் காளியாகிறது. ரத்தம் கட்டினால் சிவப்பே கறுப்பது போல் சிவந்த ஞான மகாலக்ஷ்மியைக் கரும்காளியாக ஆனந்தத்தில் காண்கிறோம். உலகம் தன்னைப் பராசக்திக்கு வேறாக நினைக்குமளவும் இந்த ஆனந்தம் அதற்குக் கிட்டுவது சாத்தியமே இல்லை. தன்னுடைய ஆனந்தத்தை உலகுக்கும் தரவே இவர்களை லயித்துப் போகச் செய்கிறாள் — மகாப்ரளயத்தில். துக்கம் தெரியாத நிலையை வேண்டுமாயின் உலகு பெற முடியுமே தவிர, துக்கத்தின் சாத்தியக்கூறே இல்லாத இன்பத்தைப் பெற வொண்ணாது. துக்கம் தெரியாத சாவு நிலையைத் தர ருத்திரர் விதிக்கப்பட்டிருக்கிறார். கரி இறுகி வைரப்பளிங்காவதுபோல், அநாயாசக் காளியின் கரு நிறம் சிவனிடம் ஆயாசத்தில் இறுகி ஸ்படிக வர்ணமாகிறது.

சத்திய சரஸ்வதியை அடிப்படையாகக் கொண்ட இந்த ஞான மகாலக்ஷ்மியின் நிறைவே ஆனந்த காளி. ஆக மகாலக்ஷ்மி ஒருத்தியில் அவ்விருவரும் அடக்கம். இவளது சிவப்பிலேயே அவர்களது வெண்மையும் கருமையும் கலந்திருக்கின்றன அல்லவா? மகாசரஸ்வதிக்கு எட்டுக் கரங்கள், மகாகாளிக்குப் பத்துக் கரங்கள். இந்த மகாலக்ஷ்மிக்கோ இரண்டையும் சேர்த்துப் பதினெட்டுக் கரங்கள்.

இதனால்தான் ''அஷ்டாதச புஜ மஹாலக்ஷ்மி'' என்றே இந்தப் பராம்பிகை பராவப்படுகிறாள்.

பதினெட்டு என்பது மிகவும் விசேஷமான எண்ணாகும். எழுத்துக்களை இலக்கங்களாகக் கொண்டு 'கடபயாதி சங்கியை

என்று ஒன்றுண்டு. புனிதத்தால் ரகசியமாகக் காக்க வேண்டிய விஷயங்களை 'கடபயாதி சங்கியைப்'படிதான் குறிப்பிடுவார்கள். ''ஜ-ய'' என்ற எழுத்துக்கள் இந்த சங்கியைப்படி பதினெட்டாகும். இவளே ஜயலக்ஷ்மி! பிரம்மத்தின் வெற்றி இவளே! பிரம்மம் வெறுமே பிரம்மமாக இல்லாமல் அன்பு அன்னையானதுதான் அதன் வெற்றி — இதில் சந்தேகமென்ன? இவள் மகிஷாசுரன் எனும் அஞ்ஞானத்தை நாசம் செய்து ஜயசாலினியாக நிற்கும்போது அஞ்ஞானம் மட்டுமின்றி அசத்தியம், துன்பம் இரண்டும்கூட தோல்வியுற்று, அடிபட்டுப் போய்விடுமே!

சத்தியம், ஞானம், ஆனந்தம் என்ற மூன்றையுமே கமழச் செய்கிற மகத்தான வெற்றி இவளுடையதே அல்லவா?

★ ★ ★

'நவராத்திரி நாயகி' என்று இந்நூலுக்கு ஒருமையில் பொதுப்பெயர் தந்திருந்தாலும், உண்மையில் மூன்று நாயகிகள் இருப்பதாகத் தோன்றும். முதல் சரிதத்தில் கண்ட காளி, இப்போது காணும் லக்ஷ்மி, அடுத்து இறுதிப் பகுதியில் வரும் சரஸ்வதி ஆக மூவர் நாயகியராக உள்ளனர். ஆனாலும் இவளே நடுநாயகி. அவர்களையும் தன்னகத்தே கொண்டவள் இவளே.

'நவராத்திரி' என்று சரத்காலத்தில் நாம் கொண்டாடும் விழா இவளோடு சம்பந்தப்பட்டதாகவே 'லக்ஷ்மீதந்திர'த்திலிருந்து தெரிகிறது. மழைக்கால முடிவின்போது நவராத்திரியில் மகிஷமர்த்தினியாகத் தான் அவதரித்ததை தேவியே இந்நூலில் இந்திரனிடம் நினைப்பூட்டுகிறாள். **(வர்ஷாந்தே நவராத்ரே து உத்பன்னா மஹிஷ மர்த்தனீ.)** 'காளிகா புராண'த்திலிருந்தும் இவ்வாறே அறிகிறோம். இதன்படி மாளய அமாவாசைக்கு முதல் தினம் ஆவிர்பவித்த இந்த தேவி, மகிஷாசுரனை வதைத்தருளிய அஷ்டமி-நவமி சந்தியைத்தான் பரமசாக்தர்கள் நவராத்திரியிலேயே மிகப்புண்ணியகாலமாகக் கருதி விசேஷ பூஜை செய்வர்*. ஆயுத பூஜை என்று நவமியில் செய்கிறோமே, இது ஆதியில் தேவர்கள் மகிஷவதமான பின் இனி தேவியைத் தாங்கள் மெனக்கெடுத்தாமல், தாங்களே அம்பிகையின் ஆக்ஞைப்படித் தம் தொழிலை ஆற்ற வசதியாக தத்தம் ஆயுதங்களின் சக்தியை மீண்டும் பெற வேண்டும் எனக் கருதி அவற்றை அவள் அடியில் வைத்துச் செய்த பூஜைதான். விஜயதசமி என்பதே தேவி அவதார காரியம் முடித்தபின் உருக்கரந்த தினம். தான் மறைந்ததாக அவர்கள் வருந்தாத வண்ணம், தன்

* மகாலக்ஷ்மியான இவள் அஷ்டமி-நவமி கூடும் வேளையில் மகிஷவதம் செய்ததால் இவ்விரு திதிகளும் விசேஷம் பெற்றன. இதனாலேயே கண்ணன் அஷ்டமியிலும், ராமன் நவமியிலும் அவதரித்தனர். தக்ஷயக்ஞத்தை அழித்த பத்ரகாளியும் நவராத்திரி அஷ்டமியிலேயே ஆவிர்பவித்தாள்.

நினைவை அவர்களுக்கு வெகு அழுத்தமாகத் தந்து, தேவருலகில் அவர்கள் தனக்கு வெற்றி விழாக் கொண்டாடி விடைதருமாறு இந்த ஜயலக்ஷ்மி அருளிய தினம் விஜயதசமி.

ஆதியில் இந்தத் தேவர்கள் ஒரு முறை வெற்றி விழாக் கொண்டாடியதாகக் கேனோபநிஷதம் சொல்கிறது. அப்போது இவர்கள் தங்கள் சக்தியைக் கொண்டே வென்றதாக இறுமாந்திருந்தனர். அந்தச் செருக்கை அறுத்து 'பிரம்மத்தின் சக்தியே இவர்கள் மூலம் வென்றது' என்பதை உபதேசிக்க ஞானாம்பிகை உற்பவித்த உத்தம சரிதையை உபநிஷதம் உரைக்கும். இதை முன்பே குறிப்பிட்டோம்.

நமது இக்கதை அதற்கு எத்துணை மாறுபட்டது! தங்களால் ஏதும் செய்யச் சக்தியே இல்லை என்று தேவர்கள் தெளிந்து, தங்களையும் தங்கள் ஆயுதங்களையும் பிரம்ம சக்திக்கே தத்தம் செய்ய, அவளும் முன்பு இவர்கள் மயங்கும் விதத்தில் இவர்களுக்குள்ளேயே மறைந்திருந்து வென்றதுபோல் இப்போது செய்யாமல், இவர்களுடைய கண்ணும் கருத்தும் குளிரப் பிரத்தியட்சமாக ரூபம் தாங்கி வந்து இவர்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தாள். இவ்வன்புக்குத் தேவர்கள் எடுத்த விழாவாகவே இருந்தது விஜயதசமி வெற்றி விழா. இதில் அகந்தை எள்ளளவும் இல்லை. அன்பும் எளிமையுமே நிரம்பி வழிந்தன.

விஜயம் என்றால் விஷேசம் வாய்ந்த வெற்றி. பொதுவாகப் பெரியோரது வருகையை விஜயம் என்கிறோம். அவர்கள் வருவதே அவர்களுக்கும் வெற்றி, நமக்கும் வெற்றி! ஏனென்றால் அன்பிலே இரு தரப்பில் ஒருவர் வென்று மற்றவர் தோற்பது என்றில்லை. இருவரும் ஜயசாலிகளாகின்றனர். அம்பிகையின் வருகையாக இல்லாமல் போகையாக அமைந்த தசமியிலேயே அவளது ஜயத்தை உணரும் அளவுக்குத் தேவர்கள் பக்குவம் பெற்றிருந்தனர். அதாவது, அவள் அசுரரை மட்டும் வெல்லவில்லை; தேவர்களது இறுமாப்பையும் வென்று விட்டிருந்தாள். இப்படிப்பட்ட வெற்றித் திருமகளுக்கு வெற்றியின் இலக்கமாகிய பதினெட்டுக் கரங்கள் அமைந்தது பொருத்தமேயன்றோ?

பதினெட்டு என்ற இலக்கம் பலவிதப் பெருமைகள் பொருந்தியது. நமது வரலாற்றைப் பொறுத்தமட்டில், மகாசக்திபீடங்களின் எண்ணிக்கை பதினெட்டேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இந்தப் பதினெட்டு மகாபீடங்களில் காமகோடியே தலைசிறந்தது என்ற வாக்கும் உண்டு.) ஞானம்

என்கிற வித்யாஸ்வரூபிணி பதினெட்டுக் கரங்களுடன் ஆவிர்பவித்தது, பதினெட்டு வித்யைகளுக்கு உருவம் தந்தது போலவே இருக்கிறது. வேதங்கள் நான்கு; அதன் அங்கங்களான சிக்ஷை, சந்தஸ், வியாகரணம், நிருக்தம், ஜோதிஷம், கல்பம் என்கிற ஆறு; மீமாம்ஸை, நியாயம், தர்மசாஸ்திரம், புராணம் என்கிற நான்கு; ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்த சாஸ்திரம் என்கிற நான்கு — ஆக மொத்தம் வித்தைகள் பதினெட்டாகும்.

இவ்வாறு சகல சிறப்பும் பொருந்திய அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மிக்கே சண்டி, சண்டிகா என்ற திருநாமங்கள் உண்டு. கிருபையும் சக்தியும் வீரமும் மதர்த்துத் தீவிரமாகத் துளும்பும் மூர்த்தியாதலால் 'சண்டி' எனப் பெயர் கொண்டாள்.

'துர்கா ஸப்தசதீ'க்கு 'சண்டீ' என்ற பெயரும் வழங்குகிறது. இவற்றில் 'துர்கா' என்ற நாமத்தைப் பெரும்பாலும் மகா காளிக்கே உரியதாகக் கொண்டுதான் துர்கா-லக்ஷ்மி-சரஸ்வதி என்கிறோம். 'துர்கா' என்றால் அணுகுவதற்கு அரியவள் என்று ஓர் அர்த்தம் உண்டு. துர்கதி அனைத்திலிருந்தும் நம்மைக் காத்து ஸத்கதியில் சேர்ப்பவளே துர்க்காதேவி. இவ்வுலக ஆனந்தங்களிலேயே ருசி கண்ட நமக்கு பேரானந்த துர்க்கையை அணுகவே எண்ணம் தோன்றுவதில்லை. இந்த எண்ணம் அறிவில் தான் தோன்றவேண்டும். நம் அறிவுகளுக்கு மூலம் ஞானாம்பிகையான அஷ்டாதச புஜ மகாலக்ஷ்மியே. நம் அறிவு கொண்டு மற்ற விஷயங்களை ஆராயாமல் இவ்வறிவுக்கு மூலத்தையே இலக்காகக் கொண்டால் இவளை — இவள் வழியே காளியை — அடைந்து விடலாம். அதாவது ஞான இலக்குதான் இந்த இலக்குமி!

தேவீமான்மியத்தைத் தலைக்கட்டும் 'வைக்ருதிக ரஹஸ்ய'த்தில் மேத முனிவர் இவளை ரஜோகுணமூர்த்தியாக மட்டுமின்றி முக்குண வடிவினள் (த்ரிகுணா) என்றே கூறுவார். எங்கணும் பரவும் ஆயிரங்கரத்தவளாயினும் பதினெட்டுக் கரங்களோடு கூடியவள் எனச் சொல்லி வலக் கீழ்க்கரத்தி லிருந்து வட்ட வரிசையாக இடக் கீழ்க்கரம் வரை உள்ள ஆயுதங்களைச் சொல்கிறார். வலது கீழ்க்கையில் அக்ஷமாலை, பிறகு மேல் வரிசையாக தாமரை, அம்பு, கத்தி, வஜ்ராயுதம், கதை, சக்கரம், திரிசூலம், கோடரி — இதோடு வலக்கைகள் முடிகின்றன; இடது மேற்கரத்திலிருந்து கீழாக சங்கு, மணி,

பாசம், சக்தியாயுதம், கால தண்டம், கேடயம், வில், மதுபாத்திரம், கமண்டலு இவற்றைத் தரித்திருக்கிறாள்.

ஞான இலக்கான இத்தேவி நமது இதயகமலத்தில் இலகுவதால் இவளைக் ''கமலாஸனை'' என்கிறார் மேதஸ். காளிகா புராணத்தின்படி, தேவியைத் தாங்க மும்மூர்த்திகளும் அவாவினர். ஹரி (திருமால்) ஹரி (சிம்ம) ரூபம் கொண்டார். சிம்ம முதுகில் ஒரு கமலமாக உருக்கொண்டார், கமலசம்பவரான சதுர்முகன். அக்கமலத்தின் மையப்பொகுட்டிலே மகாதேவன் தனது இன்னுயிரையே அவள்பால் அர்ப்பணித்து சவமாகக் கிடந்தார். சிம்மத்தின் மேலிருந்த கமலத்தினுள்ளிருந்த சடலத்தின் மீது தேவி உறைந்தாள்.

''அரசே! சர்வதேவ வடிவினளும், சகலத்தையும் ஆளுபவளுமான இம் மகாலட்சுமியை வழிபடுபவன் சகலலோகத்துக்கும், சர்வதேவருக்கும் பிரபு ஆவான்'' என்கிறார் முனிவர். உள்ளூர ராஜ்ய ஆசை கொண்ட சுரத மன்னனுக்கு அவனது நிலையிலேயே கவர்ச்சி தரும் இந்த வார்த்தைகளைச் சொன்னார். இதன் உட்பொருளோ, பக்தி முதிர்ச்சியிலே பக்தனானவன் சர்வதேவ நாயகியும், சர்வலோக சக்கரவர்த்தினியுமான அவளாகவே கனிந்து விடுவான் என்பதே! இந்த மகா லக்ஷ்மியை மத்தியிலும், இவளுக்கு இடப்புறம் மகாகாளியையும், வலப்புறம் மகாசரஸ்வதியையும் வைத்து வழிபட வேண்டும் என்று கூறி, இவளையே நடுநாயகியாக்குகிறார்.

''முக்கியமாய் வழிபடுவதற்குரியவள் பதினெண்கர மகிஷமர்த்தினியே! இவள் மகாலக்ஷ்மி மட்டுமன்று; மகாகாளியும் இவள்தான், மகாசரஸ்வதி எனப்படுபவளும் இவள்தான். நம்முடைய புண்ணிய பாவங்களை எல்லாம் கணித்துப் பலன் தரும் அதீச்வரி இவளே. சர்வலோக மகேசுவரியும், சகல உலகையும் தாங்கும் அன்னையும், ஜகத்தாத்ரியுமாகிய இச் சண்டிகை பக்தரிடம் வாத்ஸல்யத்தைக் கொட்டுகிறவள். இவளை விசேஷமாகப் பூஜிப்பாயாக!

''அர்க்கியம், அலங்காரம், சுகந்த சந்தனாதிப்பூச்சு, மலர்கள், அட்சதை, தூபம், தீபம், நானாவித நிவேதனங்கள் இவற்றால் பூஜிப்பாய்'' என்கிறார்.

குலதர்மத்தின்படி யுத்தத்தில் ஈடுபட்டவர்களும், அசைவ உணவினரும், மது உண்பவர்களும் அநேகர் உண்டு. இப்படிப்பட்டவர்கள் இவற்றையும்கூடப் புனிதம் செய்துகொள்ளுமுகமாக இவளுக்குக் குருதி தோய்ந்த பலியும், மதுவும்

அர்ப்பணிக்க வேண்டும். இந்த உலகிலே ஹிம்சை தவிர்க்க முடியாததாக இருக்கிறது. அரசாட்சி என்று தோன்றிய காலமாக சைனியமும் இருக்கிறது. சேனாவீரர்கள் உயிர்க்கொலை செய்ய நேரிடுகிறது. இவர்கள் தேகபலத்தின் பொருட்டும் மனக்களிப்பின் பொருட்டும் மது மாமிசங்களை உண்ணவேண்டியிருக்கிறது. இவற்றையும் கூட அவளது லீலா விநோதமாகக் கருதவேண்டும். இவற்றிலும் புனிதத் தன்மையை வருவித்துக் கொள்ளவேண்டும். இவற்றை தேவியின் பிரசாதமாக ஏற்பதே அன்றோ இதற்கு வழி? வெளியிலே ஹிம்சை இருக்கலாம்; ஆனால் உள்ளத்திலே கனிந்த அன்பே இருக்கவேண்டும். பக்தி பாவத்தோடு இவற்றையெல்லாம் அம்பிகைக்கு நிவேதனமாக்க வேண்டும். எனவே ரத்தபலியை மன்னனுக்கு விதித்தார் முனிவர். பிறகு ''உன்னையே நிவேதிப்பதுபோல் நமஸ்காரம் செய். ஆசமனீயம் தந்து பச்சைக் கர்ப்பூராதிகள் சேர்த்த தாம்பூலத்தை அம்பிகையின் செவ்வுதடு மேலும் சிவப்பதற்கு அளிப்பாய். பிறகு ஒருமைப்பட்ட சித்தத்தோடு துதிகள் கூறுவாய். பிரதட்சிண வணக்கங்கள் செலுத்து; உலகினர் செய்கிற பாவங்களை எல்லாம் க்ஷமித்துத் தாங்கிவரும் ஜகத்தாத்திரியை மன்னிப்புக் கோரு. நாம் எத்தனை மன்னிப்புக் கேட்டாலும் போதாது. சென்னிமேல் கரங்கூப்பி மீண்டும் மீண்டும் அலுப்புச் சலிப்பின்றி மன்னிப்புக் கேட்பாய். ('முஹுர் முஹுர் அதந்த்ரித:' என்பது முனிவாக்கு.)சப்த சதீயின் ஒவ்வொரு சுலோகத்தாலும் எள், நெய் கலந்த பாயசத்தை ஹோமம் செய். அல்லது ஹவிஸை ஹோமம் செய்! அது முடிந்ததும் ஒருமுக மனத்தோடு தேவியின் நாமங்களை மனனம் செய். ''மகாசக்தியான உன்முன் நான் ஒன்றுமே இல்லை' என்று அப்படியே அடங்கி, தலைசாய்த்து, கைகூப்பி, சண்டிகா பரமேசுவரியையே இதயத்தில் நிலைநாட்டி ஆழ்ந்து தியானம் செய்வாய். நான் ஏதுமில்லை என்ற இந்த அடக்கம் வந்தால், தியானத்தின் மூலம் அவளாகவே ஆகிவிடலாம் — சின்மயமான தேவியுடன் தன்மயமாகி விடலாம். தேவி மகாலக்ஷ்மி இகபோகங்களைத் தருபவள் மட்டுமல்ல; பக்தனைத் தன்னிலையிலேயே இழைத்துக் கொண்டு அவளது அனந்தப் பிரபாவங்களையும் இவன் தவதாகவே கண்டுகளிக்கிற சாயுஜ்ய பதவியும் தருகிறவள் ஆவாள்'' என்கிறார் மேதஸ்!

சாயுஜ்ய பதவி தரும் தேவி தேவர்களுக்கு அவர்கள் இழந்த சாம்ராஜ்ய பதவிகளை மீண்டும் பெற்றுத் தந்த கதைக்குத் திரும்புவோம்!

3. மாய்ந்தது மகிஷப் படை!

மகிஷனை மாய்க்க வழியே காணாமல் கலங்கிய வானவரை வாழ்விக்க தேவி தோன்றிவிட்டாள்.

முதலில் அவளைக் கண்டது கண்டபடி, பேசவும் அறியாது, அன்பின் அலைகளில் மொத்துண்டு கிடந்த தேவர், பிறகு வாக்குத் திறன் பெற்றனர்.

அற்புதமான துதி மொழியால் அவளைப் போற்றினர். *(இங்கே தேவீபாகவதத்தில் 'நம: சிவாயை, கல்யாண்யை, சாந்த்யை, புஷ்ட்யை நமோ நம:' என்று தொடங்கும் அமிருதம் போன்ற தோத்திரம் உள்ளது.)*

துதித்தவர்களை நோக்கி இளநகை புரிந்தாள் தேவி. அது வெறும் அங்கீகாரச் சிரிப்பு மட்டுமல்ல. தனது மாயாவிலாசம் இவர்களைப் படுத்திவைக்கிற பாட்டை எண்ணியே நகைத்துக் கொண்டாளாம்! 'இன்றைக்கு மகிஷனுக்குக் கிட்டியிருக்குஞ் செல்வங்கள் யாவற்றையும் அவன் இழக்க வேண்டும்; மீண்டும் தாங்களே மேன்மையுற வேண்டும் என்று இந்த அசட்டுக் குழந்தைகள் ஆசைப்படுகின்றன. இந்தச் செல்வங்களை இவர்கள் இதற்குமுன் பன்முறை அநுபவித்து, ஒவ்வொரு முறையும் அசுரர்களிடம் இழந்திருக்கிறார்கள். அவதாரங்கள் பல நிகழ்ந்து அவற்றை இவர்களுக்கு மீட்டுத் தந்திருக்கின்றன. ஆயினும், அது என்றைக்கேனும் இவர்களுக்கு நிலைத்து நின்றதா? இந்த போக போக்கியச் செல்வம் உள்ளளவும் மனத்தின் நெறி தப்பத்தான் செய்கிறது; போகச் செல்வம் உள்ள வரையில் அது பகைவர் கண்ணை உறுத்தி அவர்கள் படை எடுப்பதும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். இந்த உண்மைகளைப் பலமுறை அநுபவத்தில் உணர்ந்தும் இந்த அசட்டுக் குழந்தைகள் தங்கள் ஆசையை விடக் காணோமே! தங்கள் மனத்தையும் கெடுத்துக் கொண்டு, பிறரையும் பொறாமையில் தூண்டிவிட்டு, இரு விதத்திலும் இடுக்கண் தருகிற செல்வ

வாழ்க்கையையே இன்னமும் பெரிதாக நினைத்து அதையே பிரார்த்திக்கிறார்களே! ஆகா, இதுவல்லவா மாயை! தியாகம் என்கிற சாசுவத இன்பத்தை நாடாமல், துன்பத்தால் தடைப்படும் போகம் என்கிற தற்கால இன்பத்தையே விரும்புகிறார்களே! அஞ்ஞான மகிஷனை வதைக்கச் சொல்லும் இவர்கள் மட்டும் அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு விட்டனரா என்ன?'

தேவி இப்படி நினைத்து குமிண்நகை கொண்டதாக பாகவதத்தில் வியாஸ பகவான் கூறுகிறார்!

உடனே தாயின் அருள் மேலோங்கியது. பரிகசிக்க இதுவல்ல தருணம் என்று பரிவுடன் மொழிந்தாள்: ''அருமை தேவர்காள்! மகிஷன் சகலச் செல்வங்களையும் பெற்று விட்டானே என்று இனியும் மனம் கலங்க வேண்டாம்! செல்வங்களுக்கெல்லாம் மேலான ஒரு செல்வத்தை அவன் பெறவில்லை. அறிவு என்கிற செல்வம்தான் அது. அறிவுச் செல்வம்தான் ஒருவனைக் காக்க வல்லது. மற்றச் செல்வங்கள் ஒருவனைக் காக்க மாட்டா. அறிவின் காவலை இழந்த அசுரன் இதரச் செல்வங்களையும் இழக்கப் போவது உறுதி. அஞ்சேல்! அஞ்சேல்!''

அம்பிகை செஞ்சொல் கொண்டு அஞ்சல் கூற, அமரர் ரோமாஞ்சனமுற்று அஞ்சலி செலுத்தினர்.

முதலில் தேவரையும் அசுரரையும் சமநிலையில் பார்த்துப் புன்னகைத்தாள். பிறகு தேவருக்கு ஆதரவாக இன்மொழி புகன்றாள். இப்போது அசுரர்க்கு அச்சம் தரத் திரு உள்ளம் கொண்டாள்.

உருவாலும், உளப்பாங்காலும் பரம சுந்தரியாக இருந்த தேவி அதிகோரமாகக் கர்ஜனை புரிந்தாள்!

மழையைக் கொட்டிக் குளிர்விக்கிற மேகமே நெருப்பைப் பெய்து மின்னும்போது இடிக்கிறது. இடியோசையாக இருந்தது அந்த கர்ஜனை!

மேலும் மேலும் தன்னைத்தானே கோபவெறியில் சீண்டி விட்டுக் கொள்வதுபோல் திக்கெட்டும் எட்ட அட்டஹாஸம் புரிந்தாள் மஹாலக்ஷ்மி!

திக்குகள் யாவும் அந்த வீர நாதத்தை எதிரொலித்தன.

நிலம் அதிர்ந்தது மகிழ்ச்சியிலே! மலைகள் அசைந்தன ஆனந்தத்திலே! மாகடல்கள் இன்பம் கரைபுரளத் தாமும் கரை புரண்டன!

தேவியைத் தாங்கிய சிம்மம் ராஜ கம்பீரமாக நிற்க அதன் மீது ஆரோகணித்த ராஜராஜேசுவரி சிம்மகர்ஜனை புரிகிறாள். அவள் ஏவியபடி சிம்மம் மகிஷன் இருப்பிடம் நோக்கி விரைகிறது.

தேவர்கள் 'ஜய ஜய' என்று கோஷித்துக் கொண்டே உடன் சென்றனர்.

மகிஷனுக்கு அஞ்சிக் குலை நடுக்கம் கொண்டு மேரு மலைகளில் அஞ்ஞாதவாசம் செய்தவர்கள், அன்னையின் அன்பில் தெம்பும் தெளிவும் பெற்று, சர்வ சகஜமாக மகிஷ ராஜதானியின் அண்மைக்கே அன்னையுடன் வந்து ஆர்த்து ஒலி எழுப்புகிறார்கள்.

இந்த அபயப் பிரதாபத்தை வியந்து முனிவர் யாவரும் அங்கு யோக மகிமையால் வந்து திரண்டனர். இதுகாறும் அவர்கள் நமது கதையரங்கில் இடம் பெறவேயில்லை. மகிஷனால் பாதிக்கப்படாமல் சூக்ஷ்ம சரீரத்தில் ஜப, தியான, ராஜயோகங்களிலேயே முழுகிக் கிடந்தனர். இப்போது அம்பாளின் அபய சக்தி அவர்களை அந்தந்த யோகங்களையும் விட இதுவே பெரிதென்பது போல ஈர்த்து விட்டது. தங்களது யோக மகிமையெல்லாம் இவள் போட்ட பிச்சை என்று உணர்ந்து பக்தியால் வணக்க ஒடுக்கம் பெற்ற மேனியராக அம் மாதவ முனிவர் யாவரும் வந்து கூடிப் பராசக்தியைப் போற்றினர். அவளுக்கு ''ஜய விஜயீபவ'' கூறினர்.

★ ★ ★

கதையை வேகமாக நடத்திக் கொண்டு போகிறார் மேத முனிவர்.

நகர எல்லையில் நாகரா என முழங்கிய கர்ஜனை நாதத்தைக் கேட்ட மாத்திரத்தில் எதிரியின் படையெடுப்பு என்று அசுரர்கள் புரிந்து கொள்கின்றனர்.

போர் புரிய எதிராளியே இல்லாமல், எப்போது யுத்தம் வரும் என்று தினவு எடுத்து ஏங்கிக் கொண்டிருந்த தேவ சத்துருக்கள் உடனே அணிவகுத்து ஆயத்தம் தொடங்கி விட்டனர்.

''என்னை எதிர்த்துப் போர் செய்யவும் ஒருவன் உளனா? இது என்ன விசித்திரம்?'' என்று வியப்பும் வெஞ்சினமும் மேலிடக் கூவிய மகிஷன் உடனுக்குடன் புறப்பட்டான். படைகள் புடை சூழ கர்ஜனை வந்த திக்கு நோக்கி விரைந்தான்.

அங்கே அவன் கண்ட காட்சி!

ஒரு யுவதி நிற்கிறாள்!

தனது தேஜஸினால் திசைகளை எல்லாம் திகழ்வித்துக் கொண்டு நிற்கிறாள்!

மகிஷன் அவளைக் கண்டான்!

அன்னையும் அவனைக் கண்டாள்! எவளது திருஷ்டி லேசம் படுவதற்காக மாமுனிவோரும் ஆண்டாண்டுகள் அருந்தவம் இயற்றுவரோ, அவளது திருநயனங்கள் இந்த மகிஷன் வேண்டாமலே அவன் மீது படிந்தன.

அவனையும் குழந்தையாகவே கண்டாள். 'தன்னைத் தானே பெரியவனாக நினைத்துக் கொண்டிருக்கிற அசட்டுக் குழந்தை! இதற்கு இந்தப் பெரியதனம் எப்படிப்போகும்? சம்ஹாரத்தைத் தவிர வேறு வழியே இல்லையா?' — தாயுள்ளம் இப்படி நினைத்தது.

அவ்வளவுதான்! உடனே அகிலாண்ட ஜனனி, அகிலாண்டமும் வியாபிக்கும் விசுவரூபம் கொண்டுவிட்டாள். தன்னைப் பெரியவனாக எண்ணிய குழந்தை தனது சிறிய தன்மையை உணரட்டும் என்று அருள் கூர்ந்து, மிக மிகப் பெரிய வடிவத்தை ஏற்று நின்றாள் தேவி.

அவளது சாதாரண தரிசனம் கிடைப்பதே பரம புண்ணிய சாலிகள் தவிர ஏனையோருக்குத் துர்பலம். இந்த விசுவரூப தரிசனமோ துர்லபத்திலும் துர்லபம்.

அவளது பாதச் சுமையால் பார் அழுந்தவும், கிரீடத்தினால் வான்முகட்டு விண்மீன்கள் கிழிபடவும், நாணொலியால் பாதாளம் உட்பட சகல லோகங்களும் நடுங்கவும், திக்கெங்கும் பரவிய ஆயிரம் புஜங்களுடன், அஷ்டாதச புஜையே ஸஹஸ்ர புஜையாக அதியற்புத தரிசனம் சாதித்தாள்.

பகைவரிடத்தில் பகவன் அல்லது பகவதி காட்டும் பரிவு பக்தரிடம் கூட இல்லையோ எனத் தோன்றுகிறது! இதற்குக் காரணம் என்னவெனில், ஜீவனுக்குத் தந்திருக்கிற தனி சுதந்திர புத்தி கொண்டு அவனாகவே எப்படிப் பாபம் செய்தானோ, அதேபோல் அவனாகவே மீளுவதற்கும் வழிகாட்ட விரும்புகிறது பராசக்தி. பகைவனை சம்ஹரித்துவிட்டால் பிறகு அவன் இந்த இச்சா சுதந்திரத்தை உபயோகிப்பதற்கில்லை. பக்தர்களின் விஷயம் இப்படி இல்லை. அவர்களில் மிகவும்

தெறியவர்கள் தாங்களாகவே பராசக்தியிடம் சுவாதந்திரியத்தைப் பறிகொடுத்து விடுகின்றனர்; மற்றவர்கள் தம்மிச்சை கொண்டு தாமே மேலும் மேலும் பராசக்தியிடம் நெருங்குகின்றனர். இவர்களை நோக்கிப் பராசக்தி நெருங்கி வருவதாக சமிக்ஞைகள் காட்டாவிட்டாலும் இவர்கள் விடமாட்டார்கள். தங்களது சுதந்திர இச்சையை இச் சுதந்திரத்தை இழக்கும் திசையிலேயே அவர்கள் முற்றிலும் திருப்பிவிடுகிறார்கள். மாறாக, முரண்டு பிடித்து எதிர்த் திசையில் செல்வதே அஞ்ஞான அசுர சக்திகளின் குணம். இவர்களது இச்சை பராசக்தியால் திருப்பப்படுவதற்கு நிரம்பவும் சலுகை காட்டியாக வேண்டியிருக்கிறது. இவர்களை சம்ஹரிக்கும்போது உண்மையில் பராசக்தி இவர்களைத் தன்னிலேயேதான் சேர்த்துக் கொள்கிறது. ஆனால் இவர்கள் இச்சா பூர்வமாக விரும்பி இந்த நிலையை அடையவில்லை. எந்த ஜீவனும் தன்னால் தரப்பட்டிருக்கும் தனி மனம் கொண்டு விரும்பி தர்மத்தில், பிரேமையில், தெய்விகத்தில் ஈடுபட வேண்டுமென்றே முயற்சி செய்து பார்க்கிறது பராசக்தி. இந்த விருப்பம் அசுரர்களுக்கும் உண்டாவதற்கெனவே தரிசனம், விசுவரூப தரிசனம் எல்லாம் தருகிறது.

இதிலும் அன்னைத் தெய்வம் பரமகாருண்யத்துடன் நடந்து கொள்கிறது. கிருஷ்ண பரமாத்மா தனது தூது தோற்றுப் போன நிலையில்தான் துரியோதனனுக்கு விசுவரூபம் காட்டினார். சூரபத்மனோடு கோரமான ஆயுதப் போரை செய்து முடித்த பின்னரே முருகப் பெருமான் விசுவரூபதரிசனம் தந்தார். ஆனால் அன்னையோ எடுத்த எடுப்பிலேயே மகிஷனுக்கு விசுவரூப தரிசனம் கொடுத்துவிட்டாள்! மகிஷன் என்கிற மகவு தன் சொந்த விருப்பம் இல்லாமலே இவளால் சம்ஹரிக்கப்பட்டு முக்தியை அடையுமுன், தானாகவே விரும்பி ஒருகால் நல்லதில் திரும்பினாலும் திரும்பட்டுமே என்றுதான் அவள் விசுவரூப தரிசனம் அளித்தாள்.

ஆனால் அஞ்ஞான மயமான மகிஷனா அம்பாளின் பெருமையை உணருவான்? 'பெண்ணால் மரணம்' என வரம் பெற்றவன் இப்போது பெண் வந்திருப்பதன் அர்த்தத்தையே அறியாத அஞ்ஞானியாக இருந்தான்! தான் மாயாசக்தியால் விரும்பிய உருவங்களைச் சிறிது காலத்துக்கு எடுக்க முடிகிற மாதிரித்தான் இவளும் ஏதோ மந்திர மாயம் செய்து பேருருக் கொண்டிருக்கிறாள் என்று எண்ணினான். ஞானாம்பிகையின் சங்கற்பமே மகிஷனிடம் பலிக்கவில்லை என்று அர்த்தமா?

இல்லை. அவன் நல்லவனாக வேண்டும் என்று அம்பாள் சங்கற்பித்துவிட்டால் அது நடந்தேதான் தீர வேண்டும். ஆனால் இப்போது அவள் இப்படிச் சங்கற்பிக்கவில்லை. ''இவனை நல்லவனாக்குவேன்'' என்று எண்ணாமல் ''இவனாகவே நல்லவனாகிறானா என்று பார்க்கிறேன்'' என்றுதான் எண்ணினாள் பராசக்தி. இவளே அவனை நல்லவனாக்குவதும் அவனது இச்சா சுதந்திரத்தைப் பறிப்பது, அதாவது அவனைச் சாகடிப்பதற்கே சமம்தானே?

மகிஷன் வழிக்கு வருவதாகக் காணோம்.

மாறாக, சிம்மவாஹினியின் சாதாரண ரூபத்தை முதலில் கண்டவுடன் தன்னையறியாமல் ஒரு திகைப்புணர்ச்சியுடன் மலைத்து நின்றவன், இப்போது அவளது மகத்தான உருவைக் கண்டவுடன்தான் பிரமிப்பு நீங்கினான். தன் சேனையை நோக்கி, ''ஹூம், தொடங்குங்கள் யுத்தத்தை! எவர் துணையுமின்றித் தன்னந்தனியாக ஒரு கன்னி யுத்தத்துக்கு வந்தாள் என்றாலே நாம் கதிகலங்கி விடுவோம் என்று எண்ணினாள் போலும்! அப்படி நாம் துளித் துளி கதி கலங்குவதாலேயே மாயாவித்தனம் செய்து பெரிய உருவத்தை எடுத்துக் கொண்டு நிற்கிறாள். இதற்கு நாம் அஞ்சவில்லை என்பதை நமது வாளும் வேலும் இவளுக்குச் சொல்லட்டும்'' என்றான் மகிஷன்.

ஆம், அவள் சிம்மத்தின் மீது தனியாகத்தான் ஆரோகணித்திருந்தாள். தேவர்கள் அவளது வீரபராக்கிரமத்தைக் காண மட்டுமே வந்திருந்தனர். அவளோடு சேர்ந்து அசுரருடன் போர்புரிய அவர்கள் வரவில்லை. தங்கள் சக்தி முழுவதையும் தான் இவளிடம் ஒப்புவித்துவிட்டனரே! இனி எப்படி அவர்கள் போர் செய்ய இயலும்? அம்பிகை நின்ற யுத்த பூமிக்கு மேலாக வானத்தில் கட்புலனாகாத சூக்ஷ்ம சரீரத்திலேயே இப்போது தேவர்கள் கூடியிருந்தனர். அவளது லீலையை அநுபவித்து இன்புறுவதற்கு மட்டுமே அவர்கள் இப்போது சக்தி பெற்றிருந்தனரேயன்றி, போரிட அசக்தராகவே இருந்தனர்.

மகிஷன் கட்டளையிட்டதுதான் தாமதம், அவனது மாபெரும் சேனை பல பிரிவுகளாக அணிவகுக்கப்பட்டது. அஞ்ஞானப் பட்டாளம் மிகமிகப் பெரியது. அஞ்ஞானம் என்கிற சக்கரவர்த்திக்கு காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பதுபோல் பல அவகுண சேனாதிபதிகள். இந்த துர்குணங்கள் கவடுவிட்டு மேலும் பற்பல இழிதகைமை களாகும்; அவையும் மறுபடி பலவாகப் பெருகும். இந்த சைனியத்துக்குக் குறைச்சலே இல்லை!

சேனாதிபதி சிக்ஷுரன் நால்வகைச் சேனைகளுடன் அணி வகுத்து நின்றான். சாமரனும் சதுரங்க பலத்துடன் நின்றான். உதக்ரன், மஹாஹனு, அஸிலோமா, பாஷ்கலன், பிடாலன் ஆகியோர் ஒவ்வொருவரும் ஆயிரமாயிரம் ரத வீரர்களுடன் குழுமினர். பரிவாரிதன் என்பவன் தேர்கள் மட்டுமின்றி, யானை குதிரைப் பரிவாரங்களும் சூழ வந்து நின்றான்.

மகிஷாசுரனைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! எண்ணிறந்த ரத, கஜ, துரக, பதாதிகளோடு நடுநாயகமாக நின்றான்.

நவராத்திரி நாயகியரில் நடுநாயகியான தேவியுடன் மகிஷனே யுத்தத்தைத் தொடங்கினான்.

பொதுவாக மற்ற புராண-இதிஹாஸங்களில், அசுர மன்னனே எடுத்த எடுப்பில் யுத்தத்துக்கு வருவதில்லை. காவலர், சேவகர், சேனாநாயகர், சோதரர், புத்திரர் ஆகியோர் மரணமடைந்த பின்தான் அசுர மன்னன் களத்துக்கு வருவான். அதாவது நன்றி விசுவாசத்திலும் பாசத்திலும் இணையற்ற அவர்கள் இவனைத் தங்கள் உயிருள்ளளவும் யுத்தத்துக்குச் செல்லவிட மாட்டார்கள். 'எங்கே தமது மன்னன் இறந்துவிடுவானோ?' என்பதால் மட்டும் அல்ல. 'இந்தப் பகைவன் நமது அரசனுக்கு ஈடுஜோடாவானா? மன்னனுக்கு வேலையின்றி நாமே பகைவரைத் தீர்த்து விடலாம்' என்ற நம்பிக்கையில் மற்றவர்களே முதலில் போர் புரிவர்.

ஆனால் அந்த மற்ற அசுர மன்னர்களும் கூட மகிஷனின் அஞ்ஞானத்துக்கு உறைபோடக் காணமாட்டார்கள். எப்படி அந்த ஏனைய அசுரவேந்தர்களை எதிர் கொண்ட தெய்வம், அல்லது அவதாரம் தன்னைப் பிரம்ம சக்தியின் ஓர் அம்சமாகவே எண்ணியதோ, அவ்வாறே அந்த அவுணர்களும் அஞ்ஞானத்தின் ஓர் அம்சம்தான். இங்கோ மூல பிரம்மசக்தியே ஞான பூரணமாக வந்திருக்கிறது! இதன் பகைவனும் முழு அஞ்ஞானத்தின் வடிவன்! எடுத்த எடுப்பில் முழு ஞானத்திற்கு முழு அஞ்ஞானம்தான் முகம் கொடுக்க முடியும். இது தன் பிரபாவத்தைக் கொஞ்சம் காட்டின பிறகே, இதன் அம்சங்கள் உற்சாகமுற்று, தங்கள் கைவரிசையைக் காட்ட இயலும்.

முழு ஞானம் தன்னந்தனியாக வந்திருக்க, முழு அஞ்ஞானம் அதற்கு நேர்மாறான தனது தன்மையைக் காட்டுவதே போல் அத்தனை படைகளுடனும் வந்திருக்கிறது!

சண்டிகை தன்னந்தனியாக வந்ததாகச் சொல்வதற்கில்லை தான். சிம்மமொன்று அவளுக்கு வாகனமாக வந்திருக்கிறது! தன்னந்தனியாக இருக்கிற ஞானத்துக்கு தர்மம்-அதர்மம் இரண்டும் ஒன்றுதான். ஆனால் இவள் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டவே வந்திருக்கிறாள் அல்லவா? எனவேதான் தர்ம ரூபமான சிம்மம் மட்டும் தனியே அவளுடன் காணப்படுகிறது. சிம்மமும் தேவியும் சேர்ந்தே பூரண அவதாரம். அதாவது எப்படி வான்மீகத்தின்படி ராமன் மட்டுமின்றி, லக்ஷ்மண பரத சத்ருக்னர்களும் சேர்ந்தே நாராயணனோ, அவ்விதமே சண்டிகை, சிம்மம் இரண்டும் சேர்ந்தே பூரண அநுக்கிரக மூர்த்தி எனலாம்! இனி வரவிருக்கும் யுத்தத் தொடக்கத்தில் சிம்மம் ஒன்று மட்டுமே அம்பிகைக்குச் சகாயமாகப் போர் புரிந்ததற்கு வேறு காரணம் கூற இயலாது.

★ ★ ★

மஹிஷாசுரன் நேராக அம்பிகையுடன் போர் தொடங்கிவிட்டான். தோமரம், பிந்திபாலம், சக்தி, உலக்கை, கத்தி, பரசு, பட்டிசம் என்றிப்படிச் சகல ஆயுதங்களையும் கொண்டு, தொடங்கும்போதே அதி உக்கிரமாகப் போர் செய்தான்.

இவன் கொடியேற்றியதுதான் தாமதம். மற்ற அசுரரும் ஊக்கம் பெற்று சக்தியாயுதத்தையும், பாசத்தையும் பிரயோகிக்கலாயினர். வேடிக்கைதான்! சக்தியிடம் பாசம் வைக்காமல் சக்தியின் மீதே சக்தியும் பாசமும் செலுத்துகின்றனர்!

இவற்றின் சக்தி அவளைத் தொடவே இல்லை.

அசைந்து கொடுக்காமல் மிருகேந்திரன் மீது வீற்றிருந்தாள் பரதேவதை.

உடனே வாட்போரில் இறங்கினர் வல்லசுரர்.

அவர்களது யுத்த பௌருஷத்தை அகௌரவப்படுத்தக் கூடாது என்ற கருணையால் அம்பாளும் அசைந்து கொடுத்து, ஆயுதங்களை வீசலானாள். முதலில் அவர்களையே கொன்று விடவில்லை. அவர்கள் எய்த அஸ்திர சஸ்திரங்களை அவற்றுக்கு எதிரான தனது அஸ்திர சஸ்திரங்களால் விளையாட்டாக வீழ்த்திப் பரிஹஸிப்பதோடு நிறுத்திக் கொண்டாள்.

லட்சோப லட்சம் அரக்கர்கள் சற்றும் தர்ம யுத்த முறைமைகளை மதிக்காமல் ஏகாங்கியான ஒரு வீராங்கனையின் மீது நானா திக்குகளிலிருந்து நானா படைக்கலங்களைப் பொழிய,

அவளோ அவர்களில் ஒருவரைக்கூட வதைக்காமல், படைக்கலங்களை மட்டுமே பயனற்றுப் போகச் செய்கிறாள். இத்தனை பேர் எதிர்ப்பதிலும் சரி, அதற்குச் சமமாக இவள் எதிர்ப்பதிலும் சரி, சற்றேனும் இந்த சுகுமாரி ஆயாசம் அடைய வேண்டுமே! இவளுக்கு வெளியில் ஏதோ ஒன்று இருந்தால்தானே அதன் சுமை இவளுக்குத் தெரிந்து ஆயாசம் உறுவாள்?

இவளும் மாயாமல், பகைவரும் மாயாமல் இப்படி ஒரு அஹிம்சை யுத்தம் நடக்கிற அதிசயத்தை வியந்து துதி செய்யலாயினர் வானவரும் முனிவரும்.

தர்ம ரூபமான சிம்மத்துக்கு அதர்ம அசுரர்களுடன் இப்படியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

'ஹிம்ஸ' என்பதே 'ஸிம்ஹ' என்றாயிற்றாம். எனவே, தேவியின் வாகனமாக மிருகேந்திரன் எதிரிகளை ஹிம்சிக்கத் தொடங்கியது. வெகு ரோஷத்துடன் பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு அவுணர் படையிடை காட்டுத் தீ போல் சஞ்சரித்தது சிம்மம். அதன் அறைக்கு ஆட்பட்டவர் அதோகதிதான்!

வாகனம் இப்படி விமரிசையாக சம்ஹாரத்தில் இறங்க, வாகினி ஆனந்தமாக அதன் மீது வீற்றிருந்தாள். 'அம்மா இப்படியே அமர்ந்திருக்கட்டும்! என் போல் இன்னும் பல கணங்கள் இருந்தால் எல்லோருமாகச் சேர்ந்து இந்த அசுரப்படைகளை, தலைவர்கள் நீங்கலாக, ஹதாஹதம் செய்து விடலாம். இப்போது சும்மா அமர்ந்திருக்கும் அம்மா தன் பெருமைக்கு ஏற்றபடி அசுர சேனா நாயகர்களுடன் மட்டுமே போர் தொடுக்கலாம்; மற்றவர்களை அடியார்களான நாமே முடித்து விடுவோம்' என்றெண்ணியது சிம்மம். 'ஆனால் தனக்கு சகாயமாக எந்த கணம் வர இயலும்? அமரர் அனைவரும்தான் தங்கள் சக்தியை அம்மாவுக்கே தத்தம் செய்து விட்டார்களே! எத்தனையோ காலம் அவர்களை ஆடவைத்து அந்தக் காட்சியை அம்மா சாட்சி மாத்திரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். இப்போதோ அவர்கள் அம்மாவை ஆட விட்டு வெறுமே அதைப் பார்த்து ரசிக்கிறார்கள். எனக்கு துணைப் படைக்கு எங்கு போவேன்?' என்று, அசுர சேனையை எரிக்கும் தீயாகப் பெருமூச்செறிந்து கொண்டே சென்றது சிம்மம்.

அம்பிகையும் பெருமூச்செறிந்தாள். 'பெரு' மூச்சு என்றால் அதுதான்! சகல ஜீவர்களின் பிராண சக்தியான அவள் விட்ட சுவாசம் தான் பெருமூச்சு! ஜீவர்களின் மூச்சடங்கிய பின்னும் இருக்கிற மூச்சு அதுவே. அந்த மூச்சிலிருந்துதான் வேதங்கள்

வந்தன! தேவர்களும், பிராணன் படைத்த இதர பிராணிகள் சகலமும் வந்தன. பழைய தேவர்கள் இப்போது போருக்கு வராவிட்டால் என்ன? இதோ அம்மா விடுகிற நெடுமூச்சு ஒவ்வொன்றிலிருந்தும் லட்சக்கணக்கான புதுப் புது உயிர்கள் சேனாபலமாக வெளிவந்தன! அவள் திருஉளம் கொண்டு விட்டால் எது தான் நடவாது? இவளுக்கு அமரர்கள் ஆயுதங்களைத் தந்தனர். இதோ புதிதாக இவளுடைய பெருமூச்சு பெற்றுப் போடுகிற தேவி கணங்களோ பிறக்கும் போதே கோடரி, பிந்திபாலம், கத்தி, பட்டிசம் போன்ற ஆயுதங்களுடன் குதிக்கின்றன.

நவராத்ரி நாயகியர் சரிதம் பெண்ணின் பெருமையை, மாதாவின் மகத்துவத்தைச் சொல்லவே ஏற்பட்டதல்லவா? இதற்கேற்ப பெண்படையையே பராசக்தி சிருஷ்டித்தாள்.

ஆயுதங்கள் மட்டுமின்றி வீரகோஷம் எழுப்பும் வாத்தியங்களும் படைத்திருந்தனர் இப்படையினர். தேவியின் சக்தியால் கொழு கொழு என்று செழித்திருந்த இச்சேனைகள் படக வாத்தியங்களைத் 'திமி திமி' என்று தட்டியும், வெண்சங்கங்களை 'பூம் பூம்' என்று ஊதியும் வீர உணர்வை யுத்தரங்கத்திலே நிறைவித்தன. யுத்தத்தை ஒரு கலை நிகழ்ச்சியின் அநாயாச ஆனந்தமாக்கிக் காட்டுவதற்காக மிருதங்கங்களையும் கொட்டி ஆரவாரித்தனர். இந்த நாத அதிர்விலே ஆவேசம் பெற்ற அவுணரும் இருந்தார்கள்; நடுங்கி விழுந்து மாண்ட அவுணரும் இருந்தார்கள்.

மெல்லிசைக் கச்சேரியில் பக்க வாத்தியங்கள் பின்னணியை முதலில் பாடப் பிறகு பாடகி பாட்டைத் தொடங்குகிறாள் அல்லவா? அப்படியே படைகள் யாவும் இப்போது இசைவினிகையைத் தொடங்கிய பின், சாட்சாத் அம்பிகையும் எதிரிகளை சம்ஹரிக்கும் கச்சேரியை மேற்கொண்டாள்.

தேவியின் சுவாசத்திலிருந்து நேரே புத்தம் புதிதாக வந்த படைகள் இன்னுயிர் மயமானவை என்று சொல்லத் தேவையில்லை. இவற்றுக்கு மன்னுயிர் அனைத்தும் அன்புக்கே உரியவை. பிராணனால் எப்படிப் பிராணனை வதைக்க முடியும்? இந்தக் கணங்கள் எதிரிகளின் உடல்களை மட்டுமே நசிக்கச் செய்து உயிர்களை அன்னையினுள் அனுப்பி வைத்துக் கொண்டிருந்தன என்பதே உண்மையாகும்.

ஞானமும் அஞ்ஞானமும் நேர் எதிர்ச் சக்திகள் என்று மறுபடியும் நிரூபணம் ஆகிறது பாருங்கள். மகிஷனே முதலில்

போர் தொடங்கியபின் தான் அவனது படைகள் கணைகளை விடுக்கலாயின. மாறாக இங்கோ படைகள் வதத்தில் இறங்கிய பின்தான் பராசக்தி சம்ஹாரத்தில் பிரவேசிக்கிறாள்.

சம்ஹாரம் — இதுதான் எத்துணை உயர்ந்த சொல்! 'ஹரணம்' என்றால் பறித்துக் கொள்வது என்று பொருள் — மற்றொருத்தரின் உடைமையை வலிந்து தனதாக்கிக் கொள்ளுதல் என்று அர்த்தம். இங்கே உடைமை நாசமாகவில்லை; இடம் மாறுகிறது. 'அப' என்ற கெட்ட அடைமொழியைச் சேர்த்து 'அபஹரணம்' என்றால் 'திருட்டு' என்றாகிறது. கடவுளர் எதிரிகளை வதைப்பதோ ஸம்ஹரணம் (அல்லது ஸம்ஹாரம்)! 'ஸம்' என்பது நன்மை, உயர்வு இவற்றைக் குறிப்பதாகும். சம்ஹாரத்தின் போது, பகைவன் தன்னுடைய உடைமை எனத் தவறாக நினைத்துக் கொண்டிருந்த இன்னுயிரை அதன் மெய்யான உரிமையாளரான தெய்வம் தனக்கே என்று பறித்துக் கொள்கிறது! பகைவனின் ஜீவன் பகவானிடமே ஐக்கியமாகிறது! எப்பேர்ப்பட்ட அநுக்கிரகம்! 'பகைவனுக்கு அருள்வாய்' என்பதற்கு சம்ஹாரத்தை விட உதாரணம் உண்டோ?

முதலில் பக்கவாத்தியப் பின்னணியின் போது அலுங்காமல் நலுங்காமல் அழகுப் பண்டமாக அமர்ந்திருந்த பாடகி, தானே பாட ஆரம்பிக்கும் போதே சூடு பிடிக்கிறது, களை கட்டுகிறது; அப்புறம் அவள் அலுங்காமல் இருப்பாளா?

இங்கேயும் சிம்மத்தின் மீது சொகுசாகக் கோலம் கொண்டவளின் யுத்தக் கச்சேரி ஜாம் ஜாம் என்று களைகட்டி விட்டது.

அம்பாளின் திரிசூலமும், கதையும், கத்தியும், வாளும் நானா திசைகளிலும் மின்வெட்டுக்களாகப் பளபளத்தன. ஒவ்வொரு மின்வெட்டிலும் எண்ணிறந்த அசுரர்களின் தலைகள் படபடவென வெட்டி வீழ்த்தப்பட்டன.

எதிலும் விதவிதமாகச் செய்து பார்த்துக் களிப்பவள் பராசக்தி. சிருஷ்டியில் எத்தனை எத்தனை தினுசுகள்! இப்போது சம்ஹாரத்திலும் விதவிதமாக வதம் புரிந்தாள். சிலர் மீது ஆயுதத்தைப் பிரயோகிக்க வேண்டாமென்றெண்ணி கண்டாமணியை கணகணவென முழங்குவாள். அந்த நாதத் திலேயே நாடி அதிர்ந்து விழுவான் எதிரி. சிலரைப் பாசத்தால் கட்டி இழுத்து வதைத்தாள். சிலரது வகிட்டில் இவள் வாளை வைத்த மாத்திரத்தில் அவர்கள் இரு பாதிகளாக விழுந்தனர். சிலருக்குக் கதையின் திருச்சாத்து; சிலருக்கு உலக்கையின் திவ்விய மொத்து. சில மகாவீரர்களின் மார்பகத்தில் மகா திரிசூலத்தின்

ஸ்பரிசம். வேறு சிலரோ முள்ளம்பன்றி போல் உடம்பெங்கும் அம்பு பொத்தி மாண்டனர்.

உயிரையே விட்டவர் பலர். அது தவிர, தோள் போனவர், கால் போனவர், வெட்டுக் காயம் பட்டவர் எனப் பலர் திசை திசையாக ஓடினர். சிலரது கழுத்தோடு தலையைச் சீவினாள்; இடுப்பில் வாளை எய்து இரு பாதிகளாகச் சிலரை வெட்டி ஜீவனைப் பறித்தாள். சிலரை இவள் தலையிலிருந்து கால்வரை இரு பாதிகளாக வெட்டினாள் அல்லவா? இவர்களில் மாயம் வல்ல அரக்கர்கள் ஒற்றைக் காலும், ஒற்றைக் கண்ணும், ஒற்றைக் கையும் பாதிமேனியுமாகவே தொடர்ந்து சண்டை புரிந்தனர். இப்படியே வேறு சிலரது சிரம் துண்டமான பின்னும் கூட, அவர்களது தலையற்ற முண்டங்களே தொடர்ந்து யுத்தம் செய்தன. இப்படிப்பட்ட கபந்தங்களில் பல, ''எங்களிடம் உன் கைவரிசை சாயவில்லையே'' என்று கெக்கலித்துக் கொக்கரித்தன; எக்காளம் முதலிய யுத்த வாத்தியங்களை வாசித்துக் கொண்டு கூத்தாடின. தாங்கள் இறந்ததாக எண்ணி அவள் மேலே செல்கிறாளோ என்ற ஐயத்தால், ''நில் நில்'' என்று கூவி அவளை மீளவும் போருக்கு அழைத்தன. இவற்றையும் நம் தேவி விரைவிலேயே இல்லாது ஒழித்தனள்.

தேவி இருக்கும் ஒரு மைய ஸ்தானத்தை நோக்கி அசுரப் படை அனைத்தும் திரண்டு நெருங்கிவந்து இப்படியாகத் தாமே விளக்கில் விழும் விட்டில்களாக உயிரை விட்டு, பேரின்ப வீட்டில் சேர்ந்தன. யுத்த பூமியில் அசுரர்களின் சவக் குவியலோடு முறிந்த ரதங்களும், மாண்டு போன யானை குதிரைகளும் கால் வைக்க இடமின்றி குன்று குன்றாகக் குவிந்திருந்தன. குன்றிலிருந்து பெருகும் ஆறு போல் குருதி பெருக்கெடுத்தோடியது.

ஒரு பெரிய விறகுக் குவியலை — இல்லை, வைக்கோற்போரை — அக்கினி எவ்வளவு விரைவில் எரிக்குமோ, அப்படி அம்பிகையும், மிருகேந்திரனும், அம்பாளின் சுவாசத்திலிருந்து வந்த கணங்களும் பகைவர் படையை நாசமாக்கினர். 'இனி சேனாதிபதிகள் மட்டும் மிஞ்சியிருக்கிறார்கள்; என்னுடைய பங்கை விட அம்மாவின் பங்கே இனி அதிகம். நான் போர் செய்ய எங்கே எதிரிகள்?' என்று தனது பந்துக் குச்சத்துடன் கூடிய வாலை முறுக்குடன் வளைத்துக் கொண்டு தேடினான் மிருகேந்திரன். இறந்து கிடந்த அவுணர்களின் அருகிலேயே போய் முகர்ந்து பார்த்தான் — 'ஒருக்கால் இந்த மாயாவிகளின் உயிர் இன்னமும் கூட உடலுக்குள் ஒளிந்து

கொண்டிருக்கலாம்; நான் இழுக்கிற மூச்சில் அது உந்தப்பட்டு மறுபடி எழுந்து சண்டைக்கு வரட்டுமே!' என்கிற எண்ணத்தில்.

மகிஷாசுர சைனிய வதத்தைப் பலவிதத்தில் வருணித்துப் பார்த்தார் மேத முனிவர். எதுவும் போதவில்லை. கடைசியில் 'இந்த யுத்தம் எப்படியிருந்தது என்று சொல்ல இயலவில்லை. உருக்கரந்து வானில் நின்ற தேவர்கள் புஷ்பமாரியும், துதிமாரியும் பொழிய வேண்டுமானால் யுத்தம் எப்படி நடந்திருக்க வேண்டுமோ அப்படியாக்கும் நடந்தது!' என்று முடிக்கிறார். தோல்வியுற்று யுத்தபூமியை விட்டுப் புறமுதுகிட்டோடிய அசுரர் தவிர மீதமிருந்த படை கூண்டோடு, பூண்டோடு ஒழிக்கப்பட்டு விட்டது.

★ ★ ★

யுத்த வர்ணனை சில வாசகர்களுக்கு கொடூரமாகவும் அசங்கியமாகவும் கூட இருந்திருக்கும். ஆனால் வால்மீகி -வியாஸாதி முனிவர்களே செய்கிற வர்ணனைகளை நாம் அநாகரிகமாக எண்ணுவதற்கில்லை. முக்கியமாக இந்த நவராத்திரி நாயகியில் கோர காளியைப் பிரேம மாதாவாகப் பார்த்துப் பழகவேண்டிய வாசகர்கள் சில 'அநாகரி'கங் களையும்கூட அருவருக்காது ஏற்க அப்பியசித்தலே நல்லது.

பலவிதமான அஞ்ஞான ஜீவர்களுக்கு ஏற்பப் பலவிதத்தில் வதை புரிந்தாள் அம்பிகை. பல்வேறு வியாதிகளுக்கு பல்வேறு சிகிச்சைகள் உள்ளன. ஒரு நோயாளியின் குடலைக் குடைகிறார் மருத்துவர். இன்னொருத்தனின் காலையே வெட்டி எடுக்கிறார். வேறொருவனின் உடல் முழுவதும் ஊசிகளைச் சொருகி வைக்கிறார் — மேலே சொன்ன முள்ளம்பன்றி உதாரணம் போல். எல்லாம் கொடூரமாகத்தான் இருக்கிறது வெளிப்பார்வைக்கு. உடலைக் காக்கவே அந்த உடலுக்கு இத்தனை இம்சை செய்ய வேண்டியிருக்கிறது. உள்ளத்து நோயை நீக்கி உயிரையே காப்பதற்காக அம்பிகை உடலையே அற்றுப் போகச் செய்வதிலும் பல சிகிச்சை முறைகள். அந்தந்த அசுரனின் கர்மத்துக்கு ஏற்பத் தண்டனை தந்து, இனி கன்மமும் ஜன்மமும் வன்மமும் பற்றாத இன்ப நிலையை அருளினாள்!

4. மஹிஷாஸுரமர்த்தினி

அசுர சேனைத் தலைவன் சிக்ஷுரன் அசுவ ரதம் மீதேறி அம்பிகையை எதிர்த்தான். தன் சேனை யாவும் தவிடுபொடியான ஆத்திரத்தில் தேவியின் மீது அம்பு மழையை வருஷித்தான். மழையை வாங்கிக் கொண்டு கம்பீரமாக நிற்கிற மேருவாக நின்றாள் ஜனனி; பிறகு அசைந்து கொடுத்தாள்.

குதித்து வந்த அசுரனின் தேர்க் குதிரைகளை முதலில் தனது அம்பால் வீழ்த்தினாள். பிறகு சாரதிக்குச் சீட்டு விழுந்தது!.

அப்புறம் சிக்ஷுரனை நேராகத் தாக்கினாள். சிக்ஷுரன் உயரத் தூக்கிப் பிடித்த வில்லையும், அந்த வில் நுனிக்கும் மேலே பறந்த அவனது தேர்க்கொடியையும் ஒரே பாணத்தால் முறித்துப் போட்டாள்.

வில்லொடிந்து, தேர் இழந்து, குதிரையையும் சாரதியையும் பறி கொடுத்த நிலையிலும் சிக்ஷுரன் கலங்காமல் கத்தி கேடயங்களோடு அம்பிகையின் வாகனமான மிருகேந்திரன் மீது பாய்ந்து தாக்கினான். தேவியின் இடது திருத்தோளிலும் வாளால் அடித்துவிட்டான். வாள் பொடிப் பொடியாயிற்று. அவ்வளவு தான்! உடனே சூலாயுதத்தை ஏவினான். அது சூரியப் பிழம்பு போல் தேவியை நோக்கிச் சென்றது, இங்கே அம்பிகையை 'பத்ரகாளி' என்கிறார் மேதஸ். 'பத்ரம்' என்றால் 'மங்களம்'. மங்கள ஸ்வரூபிணியாக நின்ற தேவி தனது சூலாயுதத்தை விடுத்தாள். அது சிக்ஷுரனுடைய சூலத்தை நூறு சுக்கலாகப் பொடித்தது. அதோடு நில்லாமல் அதை எய்த அசுரனின் உயிரையும் கொய்தே விட்டது! சிக்ஷுரன் சிக்ஷிக்கப்பட்டான்!

அடுத்து வந்தான் சாமரன் — சாமர கர்ணமாகச் செவியை அசைத்து வரும் யானை மீது. இந்த யானைக்குச் 'சிம்ம சொப்பனம்' இல்லை. நனவிலேயே தேவியின் சிம்மத்தைக் கண்டும் நடுங்காமல் வந்தது.

சிம்மம் யானையின் மஸ்தகத்தின் மீது சரேலென்று பாய்ந் தேறியது. யானையின் மண்டையைப் பிளப்பதில் இப்போது

அதற்குக் கருத்தில்லை. அதன் கருத்து முழுதும் யானை மீதிருந்த சாமரன் மீதே இருந்தது. தனது இரண்டு பின்னங்கால்களை கஜத்தின் சிரத்தில் ஊன்றி எழுந்து, முன்னங்கால் இரண்டையும் கொண்டு மனிதர்கள் கைப்போர் செய்வது போல் சிம்மமானது அசுரனுடன் 'கை' கலந்தது! விந்தைப் போர்தான்!

சாமரனும் மிருகேந்திரனும் கட்டிப் புரண்டனர். யானை முதுகிலிருந்து உருண்டு பூமிக்கு வந்து, மேலும் உக்கிரமமாகப் போர் புரிந்தனர்.

ஓர் எழும்பு எழும்பிக் குதித்ததே சிம்மம்! குதித்த வேகத்தோடு அது வைத்த அறையில் சாமரனின் சிரம் துண்டித்து விழுந்தது!

ஆயுதத்தால் மரணமில்லை என வரம்பெற்றிருந்த உதக்ரனைக் கல்லாலும் மரத்தாலும் அடித்துக் கொன்றாள் கொற்றவை. கராளனை வாட்பிடியின் அடியால் அடித்தே வீழ்த்தினாள். கதையால் வதையுற்றுத் தன் கதையை முடித்துக் கொண்டான் உத்ததன். அவளது பிந்திபாலத்துக்குப் பலியானான் பாஷ்கலன். அம்புக்கு உணவாயினர் அந்தகனும், தாமிரனும், துர்த்தரனும், துர்முகனும். உக்ராஸ்யன், உக்ரவீரியன், மஹாஹனு என்ற மூவரும் முக்கட் பரமேசியின் மூவிலைச் சூலத்தால் முக்தி பெற்றனர். பிடாலன் தலை வாள் வீச்சில் பறந்தது.

எஞ்சி நின்றான் மகிஷன்!

அவன் சிறிதும் மனம் தளரவில்லை. மாறாகச் சினத்திலே அவனது பலம் பன்மடங்காயிற்று.

இதுகாறும் பெரும்பாலும் எருமை முகமும், அம் முகத்தின் கீழ் நர உடலும் கொண்டிருந்தவன் இப்போது முழு எருமையாகவே, நாற்கால் ஜந்துவாக, ரணகளத்தில் சஞ்சரித்தான். துளித்துளி தன்னிடமிருந்த மனிதாபிமான குணங்களையும் விட்டு, கலப்படமற்ற அறிவின்மையாகவே வந்தான் என்று பொருள்!

தேவியின் கணங்கள் மீது பாய்ந்தது மகிஷம். முகவாய்க் கட்டையால் சிலரைத் தாக்கிற்று. குளம்பால் மிதித்தது சிலரை. வாலால் அடித்தது சிலரை. கொம்பால் கிழித்தது சிலரை. அது ஓடி வரும் வேகத்தின் அதிர்விலேயே ஆடி விழுந்தன சில கணங்கள். தொண்டையைக் கிழித்துக் கொண்டு எருமை எழுப்பிய சத்தத்தில் சப்த நாடியும் அடங்கி விழுந்தவரும் உண்டு. சிலரைச் சுழலச் சுழல உராய்ந்து வீழ்த்தியது மகிஷம்.

சிலர்மீது 'புஸ் புஸ்' என்று மூச்சைக் கக்கியே சாய்த்தான் அசுரன். அம்பாள் விதவிதமாக வதம் செய்தது போலவே இவனும் செய்கிறான்! எனினும் இந்த தேவி கணங்கள் தோற்று விழுமேயன்றி மரணம் அடையா. வீழ்ந்த அளவில் அவை வான வெளியில் உருக்கரந்து விடும்.

★ ★ ★

மூன்றே மூன்று வியக்திகள் அந்த மாபெரும் யுத்த ரங்கத்தில் நிற்கின்றனர்: ஞானம், தர்மம், அஞ்ஞானம்!

தர்மத்தின் மீது பாய்ந்தது அஞ்ஞானம். ஞானத்துக்கு எல்லையில்லாத சினம் மூண்டது. தன் அருமை வாகனத்தை அசுரன் கொல்ல அன்னை விடுவாளா? அவளது சினம் மின்சாரம் போல் மகிஷனை அப்பால் தள்ளியது.

என்ன செய்கிறோம், யாரோடு எப்படிப் போர் புரிகிறோம் என்பதே தெரியாமல், அப்பட்ட அஞ்ஞானமாக உன்மத்தக் கூத்தாடினான் மகிஷன். கடைசி மூச்சுவரை அஞ்ஞானம் தன்னைக் காத்துக் கொள்ளப் படுகிற பாடு உண்டே!

பூமியைப் பிளந்தான் குளம்பின் அறையால். கொம்புகளால் மலைகளைக் கல்லி எடுத்து நாற்றிசையும் எறிந்து பந்தாடினான். கடலை வாலால் அடித்துப் புரள வைத்தான். மேகங்களை ஒன்றோடொன்று மோதிப் பஞ்சு பஞ்சாகப் பறக்கும்படிச் செய்தான். இயற்கை நியதிகளை எல்லாம் அழிக்கப் பார்க்கிறது அஞ்ஞானம்!

வெஞ்சினத்தின் உச்சியை அடைந்து விட்டான். இவன் மலைகளைக் கொம்பால் குத்தி எடுப்பதற்குக்கூட அவசியம் இன்றி, இவன் கொல்லன் துருத்தியாக விடுகிற நெடுமூச்சே பர்வதங்களைப் பெயர்த்து வானவெளியில் பறக்க விடுகிறது!

எத்தனைதான் நமது நாகரிக விஞ்ஞானம் முன்னேறினாலும் மகிஷனின் அஞ்ஞானத்துக்குச் சமமாக நாம் 'உயர' முடியாது தான்! இன்றைக்கு அணு ஆயுதங்களால் செய்யக்கூடிய உற்பாதங்களையும் அற்பமாக்கி விட்டது அந்த எருமை — ஆயுதம் இல்லாமல்! மனிதன் செய்கிற அணு ஆயுதங்களுக்கு உள்ள வீரியத்தைப் பார்த்தே, அந்த மனிதனுமே அசுரனாகித் தன் அணுவைத் தானே பிளந்து கொண்டால், மகிஷனைப் போல் அபரிமிதமான நாச சக்தி பெற முடியும் என்பதை நம்பலாம்!

தன் மூச்சிலே மலைகள் பறக்கின்றன என்றவுடன் மகிஷனுக்கு அந்த மின்சார மங்கையை நெருங்கலாம் என்ற அபாரத் தன்னம்பிக்கை வந்தது.

நேரே அவள் மீது பாய்ந்தான்.

அவள் இப்போது மின்சாரமாக இல்லை; இன்சாரமாக இருந்தாள்! பாசத்தை வீசினாள் மகிஷன் மேல் — தாய்ப்பாசம் அதுதான்!

பாசத்தில் கட்டுண்ட எருமை அசைய முடியவில்லை. பாசத்துக்குக் கட்டுப்பட அது இசையவும் இல்லை. கொழுத்த வயிற்றோடு கூடிய தன் எருமை உருவைப் பாசக்கட்டு நெரித்ததால், ஒட்டிய வயிறு கொண்ட சிம்மத்தின் உருவத்தை எடுத்துக் கொண்டு வெளிவரப் பார்த்தான் மகிஷன். அஞ்ஞானமே தர்மத்தின் வேஷத்தைப் போடப் பார்க்கிறது!

பாசம் இங்கே பலிக்காது எனக் கண்ட பராசக்தி சிம்மமாக வந்த மகிஷனின் சிரத்தை வெட்டினாள். சிரம் துண்டித்து விழுவதற்குள்ளாக மகிஷனும் வெகு விரைவுடன் மனித உருக்கொண்டான். அம்பிகை மானுட ரூபிணி போலத்தானே காணப்பட்டாள்? (சரீர அவயவங்களைப் பொறுத்தமட்டில் தேவர், மனிதர், அசுரர், கடவுளர் எல்லாமே ஒன்றுதானே?) எனவேதான் முதலில் வாகனத்தின் உருவை எடுத்த மகிஷன் இப்போது வாகினியின் உருவைக் கொண்டான். ஆனால் மகாசக்தியை மகாமென்மை பொருந்திய பெண் உருவில் அவள் காட்டியது போல் செய்ய இவனால் முடியவில்லை. ஆணாக வந்தான்! மகிஷ அஞ்ஞானமே ஞானவேஷம் போட்டுப் பார்க்கிறது!

ஞானத்தின் சின்னமாகக் கருதப்படும் வாளினை ஏந்திய வீரனாக அவன் தோன்றினான்!

அம்பிகையின் அம்பின்முன் இந்த ரூபமும் நிற்க முடியவில்லை.

நர சரீரம் மரிக்குமுன் மத்தகஜமாக மாறினான் மகிஷன். நர வேஷம் முடியாது என்றதும் விலங்கினத்துக்கே திரும்புகிறான். சகல மிருகங்களையும் ஒரு விதத்தில் அஞ்ஞானமாகத்தான் சொல்கிறார்கள். எனினும், இவற்றுள் ஞானம் மிகுந்தது யானை. ஞான அஞ்ஞானக் கலவை அது.

எருமை, சிம்மம், யானை இவை அஞ்ஞானம், வெறும் பௌதிக பலம், ஆணவம் இவற்றின் ரூபகங்களுமாகும்.

கணேசர் வதைத்த பல அசுரர்களில் கஜமுகன் ஒருவன். முருகக் கடவுள் சம்ஹரித்த அரக்கர் பலரில் ஒருவன் சிம்மமுகன். மனித ரூபம் கொண்ட அரக்கர் எத்தனையோ பேர் பலவேறு தெய்வங்களால் கொல்லப்பட்டிருக்கின்றனர். எருமை உருக் கொண்டவனை இதன் முன்னோ பின்னோ

எங்குமே நாம் கண்டதில்லை. பராசக்திக்கு என்றே விசேஷமாக வந்திருக்கிறான்! இல்லை, இவன் முதலில் வந்துவிட்டான்; அதன்பின் இவனுக்கென்றே பராசக்தி ஆவிர்பவித்திருக்கிறாள்! ஒப்புயர்வற்ற அன்னையின் இந்த ஒப்புயர்வற்ற எதிரி ஒருவனே சிம்மம், கஜம், மனிதன் ஆகிய எல்லா உருவங்களையும் எடுத்துக்கொண்டு அவளை வெல்ல முயல்கிறான் — அஞ்ஞானத்தின் பரிபூரணத் திரட்டு அல்லவா?

யானையாக வந்து, தேவியின் சிம்மத்தைத் துதிக்கையால் பிடித்திழுத்தான்! பெருமிதத்தோடு பிளிறினான்.

சிம்மத்தைச் சீண்டினால் சண்டிகை சகிக்கமாட்டாள். துதிக்கையை அலாக்காக வாளால் துண்டித்தாள்.

மாற்று உருவங்களும் பயன்படவில்லை என்றவுடன் தனது சுய மகிஷ ரூபத்துக்கே திரும்பிவிட்டான் அசுரன். அதாவது மகிஷ முகமும் நர உடலுமாக ஆனான்.

'ஆயிற்று! மூவுலகிலும் தட்டிக் கேட்பாரின்றிக் கொட்டம் அடித்துக் கொடிகட்டிப் பறந்த கொடியவனின் கதை முடியப் போகிறது. பாவம்! தொலையட்டும்; சிறிது நேரம் தன் உன்மத்தக் கூத்தை ஆடி மகிழட்டும்!' என்று விட்டுவைத்தாள் கருணாகரி.

மலைகளை நுந்தி நுந்திப் பரமேசுவரியின் மேல் எய்தான் மகிஷன். ஒரே கர்ஜனையாகக் கர்ஜித்தான்.

குபேரன் தந்திருந்த மதுவைப் பருகினாள் மாதா. மகிஷன் சவமாவதை ஓர் உற்சவமாக நடத்திக்காட்ட எண்ணி, தன்னைத் தானே உற்சாகப்படுத்திக் கொண்டாள். உலக ரீதியில் கருணை என்று நினைக்கப்படுகிற ஒன்றை இனியும் இவன்பால் செலுத்தாமல், உண்மைக் கருணையாக இவனை உட்கொண்டு விட வேண்டும்; இவனது விருப்பத்துக்கு விட்டு வைக்காமல் வலிந்து சம்ஹரிக்க வேண்டும் என்று திருவுளம் கொண்டாள்!

தேவியின் செவ்விய ரூபத்தில் சிவத்தின் வெண்மை பாய்ந்து, இளம் சிவப்பாக இருந்த திருமுக மண்டலம் இப்போது மது மதத்தால் செக்கச் செவேல் என்றாயிற்று. சினத்தினால் அதை மேலும் சிவக்கச் செய்துகொண்டாள் சண்டிகை.

அம்பிகை மகிஷாசுரனைப் பார்த்து திருவாய் மலர்ந் தருளினாள். 'உவாச தம் மதோத்தூத முக ராக ஆகுல அக்ஷரம்,' என்கிறார் மேத முனிவர். 'ஆகுல அக்ஷரம் உவாச' என்றால் 'கலங்கித் தழுதழுத்த சொற்களைக் கூறினாள்' என்று பொருள். வதைத்தே விடுவது என்று முடிவு செய்து பகைவனிடம் பேசும்

போது, சொல் மிகவும் உறுதியாக, பாறையாக இருக்குமே அன்றிக் கலக்கத்தைக் காட்டித் தழுதழுப்பானேன்? இதற்கு முன் 'ராக' என்கிறார். ராகம் என்றால் சிவப்பு என்று முன்பே பார்த்தோம். 'மது மதம் ஏறி முகம் சிவப்பாயிற்று; அதே சமயத்தில் அன்பெனும் 'சிவப்பு 'அம்மையின் வாக்கில் தழுதழுத்து வந்தது' என்று சொல்வதுபோல் 'ராக' என்பதை மது உண்ட மதி வதனத்துக்கும், கலங்கிப் பேசிய வசனத்துக்கும் பொதுவாக வைத்து விட்டார் முனிவர்!

ஆம், தேவி — எவராலும் கலக்கவொண்ணாத தேவி — கடைசியில் கலங்கித்தான் விட்டாள். அன்பினால் கலங்கினாள். ''ஜீவராசிகளுக்கு நான் அளித்திருக்கிற வரப்பிரசாதமான சுயேச்சையைக் கொண்டு அவர்களே இந்த சுயேச்சையை என்னிடம் சமர்ப்பித்து விட வாய்ப்பு எத்தனை தருகிறேன்? இந்த யுத்தரங்கத்தில் மகிஷனுக்குக் கிடைத்த வாய்ப்பை விடவும் வேறு உண்டா? 'அத்தனை சேனா பலத்தாலும் பலனில்லை; தானே எத்தனை உருவம் எடுத்தும் பயனில்லை' என்று கண்ட பின்னும் இவன் தனது சுயேச்சை கொண்டு சரண் புகுந்தானில்லை! முடிந்த முடிவாக நானே தான் இவனை பலவந்தமாக எடுத்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது! 'அம்மா!' என்று இப்போதும் இந்தப் பிள்ளை வரமறுக்கிறதே? என்னை மிரட்டிப் பார்க்க இப்படி கர்ஜிக்கிறதே!'' தேவியே தயையால் கலங்கினாள்.

தன்னை அம்மா என்று ஒரு குழந்தை புரிந்து கொள்ள முடியாததில் தாய்க்கு ஏற்படும் கலக்கமோ அது?

சம்ஹாரத்தினால் முக்தி தந்து, தான் அவனை அன்பு செய்ய வேண்டும் என்பது மட்டுமின்றி, சுயேச்சையான அடைக்கலத்தால் அவனும் தன்னை அன்பு செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஞானமயமான அம்பிகையிடம் நீடித்து நிற்குமா? இந்தக் கதையைக் கேட்கும் சமாதிக்கு ஏற்பட்ட கோளாறே இதுதானே?

தேவி தன்னை உறுதிப்படுத்திக் கொண்டாள். பாத்திர மது முழுவதையும் பருகிப் போர் வெறி கொள்ளத் தீர்மானித்தாள். குழையத் தொடங்கிய குரலைத் திடப்படுத்திக் கொண்டாள். ஆக்ரோசத்துடன் மொழிந்தாள்:

''மூடனே! கர்ஜிப்பாய், கர்ஜிப்பாய்! இன்னும் ஒரு கணத்தில் இந்த மதுவைப் பருகி முடித்து விடுவேன். அந்தக் கண நேரம் வரையில் கர்ஜனை செய்வாயடா, கர்ஜனை செய்வாய்! அதற்கடுத்த கணமே என்னால் நீ ஹதமாகி, இதே இடத்தில் தேவர்கள் கர்ஜிக்கப் போகிறார்கள்!''

மதுகைடப நாசினியான தேவி இப்போதும் மதுவை உட்கொண்ட பிறகுதான் மகிஷனை உட்கொள்ளப் போகிறாள். இன்ப நுகர்ச்சியை முதலில் தொலைத்தாலன்றி அஞ்ஞானத்தைத் தொலைக்க முடியாது!

செந்தமிழலாகப் பேசிய சண்டிதேவி பாய்ந்தாள் பாவியின் மேல்! அவள் பாய்ந்த வேகத்திலேயே நிலை தடுமாறிக் குப்புற வீழ்ந்தான் மகிஷாசுரன். தேவியின் மேனியால் மோதப் படுவதற்கு என்ன பாக்கியம் செய்தானோ?

ஆனால் அவன் பாக்கியமாகவா எண்ணினான்? யுத்தகளத்தில் விழுவதே தோல்விக்குச் சமம்; குப்புற விழுவதோ படுதோல்வியினும் மோசமானது. ''ஓர் இளம் பெண் சர்வலோகாதிபதியான என்னை இப்படி அவமதிப்பதா? விட்டேனா பார், அவளை!'' என்று கருவிக் கொண்டு எழுந்திருக்க முயன்றான். விழுந்து அரை நொடிக்குள் அவனுக்கு இந்த எண்ணம் எழுந்ததெனில் அம்பிகை அதற்குள்ளும் அதைத் தெரிந்து கொண்டாள்.

விழுந்தவன் மீண்டும் எழுந்திரா வண்ணம் அவனது கழுத்தின் மீது தன் செம்மலர்ப் பாதத்தை அழுந்த வைத்து, கம்பீரமாக நின்று விட்டாள்!

கோடிக் கோடித் தவம் செய்தாலும் கிடைக்கக் கூடியதா அந்தக் கோமள சரணம்? இந்தப் பாதங்களைத் தலையில் சூட்டிக் கொள்வதே மோக்ஷ சாம்ராஜ்யத்துக்கும் மேம்பட்டது என்றல்லவோ வேத மாதாவும் யோகிகளும் பக்த சிரோமணிகளும் — ஞானிகளுமேகூட — ஏங்கி ஏங்கி, அதுவே தியானமாயிருக்கிறார்கள்?

இந்தச் சேவடிகளைத்தான் மாபாதகனின் பிடரியிலே பொருத்தி நின்றாள் பரதேவதை. அவன் அவளது அன்பை உணர்ந்து சுயேச்சையாக நல்வழிப்படுவானோ என்றறிய கடைசி கடைசி வாய்ப்பு! அம்மா தன் அசுரக் குழந்தைகளிடம் கூட இறுதி வரை நம்பிக்கை இழப்பதில்லை!

கழுத்தில் படிந்த கழலிணைகளின் மென்மையும் மேன்மையும் மகிஷனுக்குத் தெரியவில்லை. அடியிலே புழுப் போல நெளிந்து விடுபடத் திமிறிப் பார்த்தான். தலையைத் தூக்க யத்தனித்தான்.

தேவி திரிசூலத்தால் அந்தத் தலையை அழுத்தினாள். தாயின் பாத விரல் தீண்டியது போதாது என சூலத்தின் மூன்று இலைகளும் கூட விரல்களாக அழுத்தின.

அப்படியும் முக்குண மூர்க்கத்தனம் அழுந்தவில்லை. முரண்டிக்கொண்டு எழும்பவே முயன்றது.

இற்று விழுகிற வரையில் அஞ்ஞானம் அடிபணியாதுதான்!

சூலம் புதைகிறது; பாதம் பதிகிறது — மேலும் மேலும் ஆழமாக!

புத்தியின் ஸ்தானமாகிய சிரத்தில் சூலம் பாய்ந்து, பக்தியறியாத புத்தி அழிய வேண்டியதே என்கிற நிலைக்கு வெகு அண்மையை உண்டாக்குகிறது.

மனத்தின் ஸ்தானமாகிய கழுத்தை நெரிக்கும் தளிர்ப் பாதமோ தர்மத்தில் செல்ல மறுக்கும் மனத்தைத் துவம்சம் செய்வதன்றி வழி இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டது.

தளிரன்ன நளினமான அந்த நளிர்ச் சரணங்களிடம் சரண்புக மரண நிலையிலும் மகிஷனுக்கு மனம் வரவில்லை.

மாண்டே விட்டான் என்று நினைக்கிற அச்சமயத்திலும், நைந்து நலிகிற அந்த மனத்திலும் புத்தியிலும் தற்காப்பு எண்ணம் எழுகிறது! 'என் மாயாவித்தனத்தால் இப்போதுகூட ஏதேனும் ஓர் உருவத்தை எடுத்துத் தப்ப முடியுமா?

'இவள் அழுத்தி வைத்துள்ள என் முகத்தின் வழியே உள்ளிருக்கிற என் ஜீவனை ஏதேனும் அதிசூட்சும ரூபத்தில் நான் வெளியே கக்கிக் கொண்டு தப்ப இயலுமா?' என்று எண்ணுகிறான் மகிஷாசுரன்! பொறி புலன்கள் அடியோடு ஓய்கிற நிலையில் அந்த எண்ணமே அவனுக்கு வந்தது இறுதியில் இறை நினைவு வருவது அசாத்தியம் என்பதற்குப் படிப்பினைதான்.

''ஆகா, சூட்சும ரூபம் எடுக்கவும் முடியவில்லையே! இப்படி ஒரே நெரிப்பாக நெரித்து விட்டாளே! இவளை இதேபோல் நான் வீழ்த்திப் பழி வாங்க வேண்டும்'' என்று அப்போதும் எண்ணுகிறது மகிஷம்.

அந்த உணர்ச்சி வேகத்தில் அதியாச்சரியமாகத் தன் ரூபத்தை வெளிக் கக்கவும் தொடங்கினான்! ஆயின், ஓரளவுக்கே முடிந்தது. அப்போதும் பழிவாங்கும் எண்ணம் நலியாமல் போருக்கே மனத்தால் முனைந்தான்.

'சற்றும் அலுக்காத, சளைக்காத, களைக்காத வீரம்! இந்த வீரனுக்கு இனியும் வாதை தரலாகாது. சூலத்தின் திருகும், பாதத்தின் மிதிப்பும் தருகிற சித்ரவதை போதும்' என்று திருஉளம் கொண்டாள் மகாலக்ஷ்மி.

அஞ்ஞான சரீரத்திலிருந்து சரேலென இறங்கினாள். அதே மூச்சில், ஒரே வீச்சில் வாளைப் பிரயோகித்து கழுத்தோடு தலையை வெட்டியே விட்டாள்! அந்த அகங்கார மனத்தை, ஆணவ புத்தியை இவளாகவே இல்லாமற் போகச் செய்தால் தான் உண்டு என்று ஆனதால், கடைசிவரை அவனுக்குத் திருந்தச்

சுதந்திரம் தந்தும் அது பயனளிக்காத போது சம்ஹரித்தே விட்டாள்!

மூவுலகங்களையும் எண்ணிறந்த ஆண்டுகள் சர்வாதிகாரியாக ஆண்டு அநுபவித்த மகிஷாசுரன் மாய்ந்து விட்டான்!

ஞானம் அஞ்ஞானத்தைத் தன்னுள் இழுத்துக் கொண்டு இருந்த இடம் தெரியாமல் கரைத்துக் கொண்டு விட்டது.

★ ★ ★

அம்பாள் மகிஷனை ஹதம் செய்ததற்கு முன் நிலையில் அவனது பிடரியின் மீது நின்ற நிலையிலேயே இன்று கோயில் எங்கணும் துர்க்காம்பிகை என வழிபடப் பெறுகிறாள்.

அஞ்ஞான அசுரனிடம் கருணை கொண்டு கடைசிவரையில் அவன் சுதந்திரமாக நல்வழிப்பட அம்பாள் வாய்ப்புத் தந்ததே, அவனை அவள் சம்ஹரித்ததையும் விட விசேஷமானது. அவனது பேய் மனத்தின் இருப்பிடமான கழுத்தில் பிரம்மத்தின் சாக்ஷாத் பிரேம மனமாகிய அம்பாள் நின்றதே கருணையின் கொடுமுடி. நக-சிகா பரியந்தம் நிரம்பி வழியும் பிரேம ஸ்வரூபத்தில் மிகமிக மென்மையான அவயவமான செங்கழலைச் செந்தழல் நெஞ்சில் வைத்த கோலமாயிற்றே!

நாம் மனச் சுதந்திரத்தை அடியோடு விட்டு சரணாகதி செய்வதே மோட்ச ஆனந்தம். ஆனால் இப்படித் தனது சுதந்திரத்தை விடுவதற்கு இந்த மனமே தான் சுதந்திரமாக ஒப்பவேண்டும்! அப்படி ஒப்புவதற்கு அநுகூலமாக அம்பிகை பல வாய்ப்புக்களைக் காட்டுவாள்! இவ்விதம் ஒப்புவோரின் உடலை வதைக்காமல், தனி மனத்தை மட்டும் வதைத்துவிட்டு, அவ்வுடல் மூலம், தானே உலகுக்கு நலம் புரிகிறாள். எத்தனை வாய்ப்புக் காட்டியும் இப்படி விருப்பம் கொள்ளாத மகிஷனை, தீராப் பொறியே என்று கடைசியில் மனத்தோடு உடலையும் வதைத்து மோக்ஷத்தைத் தந்தாள்.

இதற்கு முன்நிலையில் ஜீவமனத்தைப் பெருமைப்படுத்தி அதுவாக உயருவதற்கு அவள் அளித்த வாய்ப்பின் வடிவம்தான் ஆலயங்களில் நாம் காண்கிற துர்க்காதேவியின் எழில் விக்கிரகம் — எருமைக் கழுத்தில் ஏற்றமுடன் நிற்கும் திருக்கோலம்!

பொதுவாக துர்க்கையைக் காளி என்றெண்ணினாலும், இங்கே அவள் காலின் கீழ் மகிஷ சம்பந்தம் இருப்பதால் அவளை மகாலக்ஷ்மியாகவும் உணருகிறோம்! நம் ஆலயங்களில் உள்ள துர்க்கை நான்கே கரங்களுடன் சங்கம், சக்கரம் தாங்கி, அபய-ஊரு

ஹஸ்தங்களுடன் காணப்படுகிறாள்*. ''மகிஷாசுரமர்த்தினி'' என்ற மாத்திரத்தில் நம்மில் பலருக்கு இந்தத் திருஉருவம்தான் கண்முன் நிற்கும்.

'மர்த்தினி' என்பதே எத்தனை சிறப்பான வார்த்தை! மிருது செய்வதே மர்த்தனம். மாவாக அரைப்பது மர்த்தனம். அரைக்கும்போது தானியம் அழிந்து விடவில்லை; தனது கெட்டித்தனத்தை விட்டு மிருதுவாகிறது! பிறருக்குப் பயனாகிற உருவத்தை அடைகிறது. மிருதுத் தன்மையை — அல்லது 'மார்தவ'த்தை — அடைவிப்பதுதான் மர்த்தனம். மகிஷன் கழுத்தைக் காலால் பிசைந்து பார்க்கிறாள் மிருதுவாக்குவதற்காக! அஞ்ஞானத்திடம் நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதை அவன் மூலம் காட்டுகிறாள். இவ்வாறு உலகுக்கோர் எச்சரிக்கையாக அவன் இருப்பதாலேயே பரோபகாரியாகிற பயனை அவனுக்கும் தருகிறாள்!

இவ்வாறு நமக்குப் பாடம் புகட்டுவதால்தான், தேவியின் பாதத்தில் செய்யும் அர்ச்சனை முழுதையும் மஹிஷன் தன் தலையில் ஏற்கிறான். இது போதாதென்று, தேவியால் ஸாயுஜ்யம் அளிக்கப்பெற்ற அவனைத் தனியாகவும் அவளுக்கு இடத்தே வைத்து பூஜிக்க வேண்டுமென்று 'வைக்ருதிக ரஹஸ்ய'த்தில் மேதஸ் கூறுகிறார். ஸிம்மத்தை வலப்புறமும் அசுரனை இடப்புறமும் வைத்துப் பூஜிக்கச் சொல்வதில் எப்பேர்ப்பட்ட ஸமத்வம்?

நம் திருக்கோயில்களில் உள்ள சங்க-சக்ர தாரிணியான துர்க்கையை விஷ்ணு-துர்க்கை, வைஷ்ணவி என்கிறோம். எனவே இவள் நீலமேக சியாமளை ஆவள். நமது மகாலக்ஷ்மி உருவிலும் அவளது பதினெட்டுத் திருக்கரங்களாகி புஜ பல பராக்ரமம் காட்டுவது விஷ்ணுவின் சக்தி என்றுதானே பார்த்தோம்? தத்துவங்கள் கலந்து கலந்தே காணப்படுவதை இதிலிருந்து உணரலாம். தெய்வரூபங்கள் பல இருந்தாலும் இதுதான் பெரிது, அதுதான் பெரிது என்று வாதம் செய்யாமல் சமரஸ உணர்வைப் பெற இவ்விதமான மிச்ர வடிவங்கள் மிகுந்த உதவி புரிகின்றன. ஸம்ஹாரிணியோடுகூட ஸம்ஹாரம் செய்யப்பட்டவனையும் பூஜிக்க வைப்பதில் ஸமரஸ பாவம் சிகரம் ஏறிவிடுகிறது!

★ ★ ★

---

* இந்நூலின் அட்டைச் சித்திரத்திலும் இந்த ஐதிஹ்யப்படியே அன்னையை ஓவியர் 'வினு' சித்திரித்திருக்கிறார்.

யுத்தகளத்தை விட்டு முன்னர் குற்றுயிராக ஓடிச் சென்று, வெற்றி வாய்ப்பு ஏற்பட்டால் திரும்பலாம் என்று நைப்புக் கொண்டிருந்த அசுரப் படைகளும் மகிஷன் வீழ்ந்தான் என்றதும் ராஜ விசுவாசத்தால், ''ஹா ஹா'' என்று அலறிக் கொண்டு களம் வந்து நாசம் அடைந்தன.

இருள் யுகம் முடிந்தேவிட்டது அன்னையின் அருளால்!

தேவதா கணங்களின் மகிழ்ச்சி எழுச்சியை எவரே வருணிக்க முடியும்!

தேவ ரிஷிகள் யாவரும் திரண்டு வந்தனர். தேவரும் அச்சமின்றித் தங்கள் உருவில் வெளிப்பட்டனர்.

விஜய மஹாலக்ஷ்மியை விநயமுடன் வாழ்த்தலாயினர்.

கந்தர்வபதிகள் கானம் செய்தனர். அப்ஸர கணங்கள் அம்பிகை மர்த்தனம் செய்ததில் மகிழ்ந்து நர்த்தனம் செய்தனர்.

சற்றுமுன்புவரை பயங்கர யுத்தரங்கமாக இருந்த இடமே இப்போது நெஞ்சின் நெகிழ்ச்சிக்கு, நன்றிக்கு, அன்புக்கு, இன்புக்கு உறைவிடமாயிற்று.

ஞான பராசக்தி அன்பில் ஆனந்த ரூபிணியாக அரி மீதமர்ந்து துதிகளைச் செவிமடுத்தாள்.

5. தேவீ பாகவதத்தில் சில தேன் துளிகள்

'துர்கா ஸப்த சதீ'யை அடியொற்றி மகிஷவதத்தை மேலே படித்தோம். இதே விருத்தாந்தம் சில வேறு பாடுகளோடு, வியாஸரின் 'பாகவத'த்தில் விரிகிறது. அதில் குறிப்பிடத்தக்க சில பொறுக்குமணிகளை இங்கு ரசிக்கலாம்.

★ ★ ★

மாலக்குமி ஆவிர்பவித்து கர்ஜனை புரிந்ததும், அவ்வொலி கேட்ட மகிஷன் விவரம் அறிந்து வரத் தூதுவரை அனுப்புகிறான். தூதுவர் அம்பாளின் அழகிய வடிவைக் கண்டு அவனிடம் திரும்பிச் சென்று கூறுகின்றனர் : ''விவரம் அறிந்து வரச் சொன்னீர்கள். ஆனால் விவரம் கேட்பதெப்படி? அவளைக் கண்ட கண்கள் கண்டவாறு இருந்தனவேயன்றி, 'நீ யார்?' என்று அவளை வினவ எங்களுக்கு வாய் எழவில்லை. அவள் சர்வாபரண பூஷிதையாக இருக்கிறாள். ஆனால் ஆபரணங்களைப் பூண்ட அவளது அவயவங்களின் ஒளிதான் இந்த அணிகளில் ஊடுருவி அவற்றின் ஜொலிப்பாக விளங்குகிறது என்றே தோன்றுகிறது. சிருங்கார ரஸம், வீர ரஸம் இரண்டும் விசித்திரமாகக் கலந்து சொட்டும் அவளைப் பார்த்து வரத்தான் முடிந்ததே தவிர தாங்கள் ஏவியபடி அவளை இழுத்து வர இயலவில்லை பிரபு'' என்கின்றனர்.

உடனே மகிஷன் மதனாவஸ்தைக்கு ஆளாகிறான்.

பாகவதத்தின்படி மதுகைடபரும் அம்பாளிடம் காமமுறுகின்றனர். இனி வரப்போகும் மகா சரஸ்வதி சரிதத்தில் சும்ப-நிசும்ப அசுரர்களும் காம மோகம் கொள்கின்றனர். 'துர்கா ஸப்தசதீ'யின்படி சும்ப நிசும்பர் மட்டுமே காம வேட்கை கொள்கின்றனர். பாகவத வரலாற்றைக் குறைகூற நமக்கு அருகதை இல்லாவிடினும் கூட, இப்படி ஒரே கதையை மூன்று இடத்திலும்

திருப்புவது இலக்கியச் சுவைக்கு ஊறு பயக்கிறது என்று சொல்லத்தான் வேண்டும். இலக்கியம் இருக்கட்டும், உண்மை இப்படித்தானோ என்னவோ எனலாம். தத்வ தாத்பரியங்களே இங்கு உண்மையாகும். 'துர்கா ஸப்தசதீ'யில் காண்பதுதான் தத்வ தாத்பரிய ரீதியிலும் பொருத்தமாகத் தோன்றுகிறது. பாகவதக் கூற்று அல்ல. மதுவும் கைடபரும் சிற்றின்பம், துன்பம் இவ்விரண்டின் உருவம். உண்மை இன்பமே மாகாளி. சிற்றின்பத்துக்கும், அதனால் வரும் துன்பத்துக்கும் உண்மையான பேரின்பத்தில் எவ்வித நாட்டமும் இல்லை. பேரின்பத்தைத் தாங்களே உவந்து தம்மில் கலந்து கொள்ளலாம் என்று அவை எண்ணுவதில்லை. பேரின்பத்தைப் பற்றி இவற்றுக்கு ஏதுமே தெரியாது. அதை இவை எண்ணிப் பார்க்கவும் முடியாது. அது வெளிப்பட்டால் உடனேயே இவை மாய வேண்டியது தான். ஆனந்தம் வந்து விட்டால் உடனேயே துக்கம் மாள வேண்டியதுதானே? யுத்தம் புரிவது என்பதுகூட இல்லை இங்கே. பிரம்மானந்தமான காளியும் அற்பானந்த-அற்பதுக்கங்களான மது-கைடபரும் பார்த்துக் கொள்ளக்கூட முடியாது. இதனால்தான் மாகாளியை இவ்வசுரர்கள் பார்த்ததாகவோ, போர் புரிந்ததாகவோ, அவள் இவர்களை வதைத்ததாகவோ, அச்சரிதையில் நாம் காணவில்லை. அவள் திரைமறைவிலிருக்க ஸ்ரீமந் நாராயணன் மூலமே சம்ஹாரம் நடந்தது. எனவே மது-கைடபர் அம்பிகையிடம் மோகித்ததாகச் சொல்வதில் பொருத்தமில்லை.

இனி, பிரம்ம ஞானமாகிய அம்பிகை, வெற்றுப் 'புலனறிவு' எனப்படும் அஞ்ஞானமாகிய மகிஷன் ஆகியோரிடை தொடர்பு எப்படிப்பட்டது? புலனறிவிலே சேர்ந்ததுதான் பௌதிகப் பிரபஞ்சத்தைக் குறித்த மிகச் சிறந்த ஆராய்ச்சிகளும், புத்திசாதுரியக் கண்டுபிடிப்புகளும் கூட — பௌதிகத்திலேயே தெய்விகத்தை உணராத வரையில். இப்படிப்பட்ட புத்தி சாதுரியம் பிரம்ம ஞானத்தைப் பற்றிக்கூட ஆராய்ச்சி செய்கிறது — அறிவுக்கும் அப்பாற்பட்ட அநுபவம் ஒன்றினால் மட்டுமே இயலக்கூடியதைத் தன்னால் சாதிக்க முடியும் என்ற மமதையினால்! இந்த ஆராய்ச்சிக்கு இலக்காகும் மெய்ஞ்ஞானத்திடம் இன்ப நுகர்ச்சி காணும் எண்ணம், அதை ஆராய்கிற அஞ்ஞானத்துக்கு இல்லை. தன் பெருமையை நிலைநாட்டிக் கொள்ள அந்த இலக்கும் வழி செய்கிறது என்கிற சுயவெற்றி எண்ணத்துக்காக மட்டுமே ஆராய்ச்சி செய்கிறது. உண்மையில் வெற்றறிவு என்கிற அஞ்ஞானத்தால் ஞான ஆராய்ச்சி செய்வதே ஞானத்தைத் தாக்குவதாகத்தான்

இருக்கிறது. அஞ்ஞான மகிஷன் ஞானாம்பிகையை எதிர்த்துத் தாக்குதல்தான் செய்ய இயலுமேயன்றி, அவளிடமிருந்து இன்பத்தை எதிர்பார்க்க மாட்டான். பேரின்பம் மட்டும் அல்ல; இன்பத்தின் ஆபாசமாகிய இந்திரிய சுகத்தையும் கூட எதிர்பார்க்க மாட்டான். ஏனென்றால் இது தன் ஆதீனத்திலேயே இருப்பதாக நினைத்துக் கொண்டிருப்பான்.

இன்பம் துன்பத்துக்கு நேர்மாறானது. ஒன்று இருக்கிற இடத்திலேயே இன்னொன்று இருக்க முடியாது. ஆனால் அஞ்ஞானத்துக்கும் அடியில் ஞானம் இருக்கிறது. 'அஞ்ஞானம்' என்பது ஏதுமே தெரியாத நிலையல்ல. ஏதுமறியா நிலை ஜடத் தன்மை எனப்படும். அஞ்ஞானம் என்பது ஆத்மனை அறியாமல், இந்திரியங்களால் அறிகிற புலனறிவைக் குறிப்பதாகும். ஆனால் இப்படிப் புலன்கள் ஒரே உண்மையை வேறு வேறாக எண்ணிப் பேதங்களாக அறிகிறதும் கூட ஞானம் அல்லது சைதன்யத்தின் ஒரு திவலையால்தான். நாம் மண்ணையும், கல்லையும், உலோகத்தையும் போலல்லாமல், தவறுதலாகவாவது பொருட்களை அறிகிறோம் அல்லவா? மண்ணும், கல்லும், உலோகங்களும் ஜட வஸ்துக்கள். அவற்றில் ஞானத்தின் பிரதிபலிப்பே சிறிதுகூட இல்லை. நாம் ஜடவஸ்து அல்ல. அஞ்ஞான தசையில் உள்ளவர்கள். நம் அஞ்ஞானம் என்கிற குறைந்த (அல்லது தப்பிதமான) அறிவு எப்படி ஏற்பட்டதெனில் பூரண ஞானத்துடைய சிறுதுளியின் பிரதிபலிப்பினால்தான். இது சமுத்திரத்தில் விழுந்த துளியைப் போல் ஞானத்தில் தன் உருவை இழக்கத்தான் முடியுமே அன்றி, அதை எந்தத் தசையிலும் தனக்கு ஈடுசேர்த்துக் கொள்ள முடியாது — அதாவது, அதனிடம் காதல் கொண்டு கலியாணம் செய்து கொள்ள முடியாது. கடலில் விழுகிற துளி என்பது கூட பொருந்தாது; ஏனெனில், அத்துளி கடலுக்குள் வற்றி மறைந்து விடவில்லை. ஆனால் ஞான உதயத்திலோ அஞ்ஞானம் அழிந்தே போகிறது. அஞ்ஞான தசையில், இந்த அஞ்ஞானத்துக்கும் ஆதாரமாக இருந்தது ஞானம் தான்; ஆனால் இந்தத் தொடர்பை அப்போது அஞ்ஞானம் அறிந்து கொள்ளவில்லை. ஆதலின்தான் அஞ்ஞானமாக இருக்க முடிந்தது. ஞான நிலையிலோ அஞ்ஞானம் அடியோடு இல்லை. ஆகவே, என்றுமே அஞ்ஞானம் ஞானத்திடம் தொடர்பு — காதல் — கொள்வதற்கில்லை.

எனவே ஆனந்த காளியிடமும், ஞான லக்ஷ்மியிடமும் துன்ப, அஞ்ஞான அசுரர்கள் காதல் கொள்வது பொருத்தமல்ல.

பிரம்ம **ஆனந்தத்தை** இவ்வுலகில் நாம் நிச்சயம் காணவில்லை! பிரம்ம **ஞானத்தை** அநுபவிக்காவிட்டாலும் அதைப் பற்றி நிறையக் கேட்கிறோம், எழுதுகிறோம், படிக்கிறோம், விவாதிக்கிறோம் — இந்த அளவோடு அதனுடன் நம் 'தொடர்பு' நிற்கிறது. ஆனால் பிரம்ம **சத்தியம்** — அது நிச்சயமாக நம்மில் நாமாகவே எப்போதுமே இருக்கிறது. அதை நாம் அறிகிறபோது ஞானம் என்கிறோம்; அறிவதில் மகிழுகிறபோது ஆனந்தம் என்கிறோம். ஆனால் நாம் அறியாவிட்டாலும், மகிழாவிட்டாலும் கூட அது என்னவோ இப்போதே, இங்கேயே இருந்து கொண்டுதான் இருக்கிறது. எப்போதும், எங்கெங்கும் இருக்கத்தான் செய்தது; இருக்கவும் போகிறது!

இந்த சத்தியம்தான் மகா சரஸ்வதி! அசத்தியத்தில் இரண்டு விதம் உண்டு. ஒருபோதும் இல்லாதது ஒரு வகை. 'முயல் கொம்பு' என்று சொன்னால் அது எப்போதாவது இருந்திருக்கிறதோ, அல்லது இருக்கப்போகிறதோ? இப்படிப் பட்ட 'அத்யந்த அஸத்' ஒன்று. அசத்தியத்தில் இன்னொரு வகை தாற்காலிகமாக சத்தியம்போல் தெரிந்து, பிறகு மறைவது. வெயிலில் மின்னும் கிளிஞ்சல் வெள்ளி போலத் தாற்காலிகமாகத் தெரிகிறது. ஆனால் அது உண்மையா? கனவுகூட இப்படித்தான்! இதைப் 'ப்ராதிபாஸிக ஸத்யம்' என்கிறார்கள். நாம் நம்மைப் பரம்பொருளிடமிருந்து வேறான ஜீவர்களாக எண்ணி வாழ்கிற வாழ்வே பிராதிபாஸிக சத்தியம் தான். இதை 'வ்யாவஹாரிக ஸத்யம்' என்று நடைமுறையை வைத்துச் சொன்னாலும் ஞான நிலையிலிருந்து பார்த்தால், இந்த 'விவகார'மும் கனவு போன்றதே! இந்த அரைகுறை சத்திய வாழ்வில் நாம் பொய்யும் மோசடியும் செய்து அத்தியந்த அஸத்தை வேறு செய்கிறோம்! பிராதிபாசிக சத்தியம்தான் சும்பன் என்ற அசுரன். பிராதிபாஸிகம் என்றால் பிரதிபலிக்கிற ஒளியை மூல ஒளியாக எண்ணுகிற நிலை. 'சும்ப்' என்றாலே ஒளிவிடுவதுதான். தாற்காலிகமே நிரந்தரம் போல மினுமினுக்குகிறதைத்தான் 'சும்பன்' என்கிறோம். 'நி' என்பது குறைவைக் காட்டும், 'நிர்' என்பதோ எதிர்மறையைக் குறிக்கும். 'தாற்காலிகம்' கூட இல்லாமல் சத்தியத்தில் அடியோடு குறைந்தவன், அல்லது அப்பட்டப் பொய்யாக இருப்பவனே 'நிசும்பன்' அவன் அத்யந்த அஸத்.

ஆனால் வேடிக்கை, இந்தப் பொய்யனைக்கூடப் 'பொய்யாக **இருப்பவனே**' என்கிறோம்! பொய்க்கும், இல்லாததற்குங்கூட ஓர் 'இருப்பு', அதாவது சத்தியத்துவம் இருக்கிறது!

முயல் கொம்பு இல்லாதிருக்கலாம். ஆனால் அதுவும் கற்பனையில் இருக்கவே செய்கிறது. முயல் கொம்பு இல்லாவிட்டாலும், இக்கற்பனைக்கு அடிப்படையான முயல் இருக்கிறது, கொம்பு இருக்கிறது. இருப்புதான், சத்தியம். ஆக விவகாரிக சத்தியம், அத்தியந்த அசத் இவற்றுக்கும் கூட ஒரு விசித்திரமான முறையில் சத்திய ஆதாரம் இருக்கிறது! துன்பத்துக்கும் இன்பத்துக்கும் தொடர்பே இல்லை. ஞானமோ அஞ்ஞானத்துக்கும் தெரியாமலே அதனுடன் ஆதாரத் தொடர்பு கொண்டு, பிறகு ஞான நிலையில் அஞ்ஞானத்தை அறவே அழித்து, தொடர்புக்கு ஏதுமில்லாமல் செய்கிறது. ஆனால் அசத்தியத்துக்கோ தொடர்பு என்பதையும் விட நெருக்கமான ஓர் ஆதாரமாக சத்தியமே இருக்கிறது.

சத்தியம் அசத்தியத்துக்கு முற்றிலும் மாறானது. ஆனால் இந்த அசத்தியத்துக்கும் அதைத் தாங்க ஓர் ஆதார சத்தியம் இருக்கத்தான் செய்கிறது. இதனால்தான் தாற்காலிக சத்தியம் தன்னையே சத்தியம் என்று நிலைநாட்டுகிறது; பொய்யும் தன்னைப் பிறர் சத்தியம் என்று நினைக்கும்படி மோசடி செய்கிறது. மெய் செய்யக்கூடியதை எல்லாம் பொய் செய்து விடுகிறது. ஓர் உதாரணம் சொல்வார்கள்: ராமன், கிருஷ்ணன் என்று இரு நண்பர்கள் காசியாத்திரை சென்றார்கள். அவர்களில் ராமன் யாத்திரையின்போது காலமாகிவிட்டான். ஆனால் கிருஷ்ணன் மாண்டதாகச் செய்தி தவறுதலாக வந்துவிட்டது. உடனே கிருஷ்ணன் வீட்டில் ஒரே துயரமாயிற்று. அவனுடைய வயோதிகத் தாயார் புத்திர சோகம் தாளாமல் மாண்டே போனாள். கிருஷ்ணனுடைய இளம் மனைவிக்குக் கைம்மைக் கோலம் போடப்பட்டது. பல்லாண்டுகள் சென்றன. கிருஷ்ணன் ஊருக்குத் திரும்பி வந்தான். அப்போதுதான் முதலில் கேட்ட செய்தி பொய்யானது என்று தெரிய வந்தது. ஆனாலும் அந்தப் பொய், மெய்யாக கிருஷ்ணன் மரித்திருந்தால் நடந்திருக்கக் கூடியதை எல்லாம் செய்து விட்டது! ஆம், அந்தப் பொய்யே மாற்ற முடியாத பல 'மெய்'களைச் செய்து விட்டது. இன்று கிருஷ்ணனுடைய மனைவியின் கோலத்தை வேண்டுமாயின் மாற்றி அவளை சுமங்கலி ஆக்கலாம். ஆனால் இடைக் காலத்தில் அவள் உற்ற இன்னல், அவளைக் குறித்து அப்போது உண்டான அமங்கலம் இவை மாற்றவொண்ணாத மெய்யான விஷயங்கள் தாமே! அதை விட, கிருஷ்ணனின் தாயார் பிராணத் தியாகம் செய்து விட்டாளே, அதை இப்போது எப்படி மாற்ற முடியும்? இதே

சமயத்தில் ராமன் இருப்பதாகப் பொய்யாக எண்ணி அவன் வீட்டார் நிச்சிந்தையாக இருந்ததையும் பொய் என்று சொல்ல முடியாதல்லவா?

ஆக, இன்ப துன்பங்களையும் ஞான அஞ்ஞானங்களையும் போலன்றி, பொய்யும் மெய்யும் வெகு விசித்திரமான சாசுவதத் தொடர்பு கொண்டிருக்கின்றன. பொய் என்று ஒன்று இருக்கிறது என்பதாலேயே அதற்கும் ஒரு சத்தியத்துவம் ஏற்படத்தானே செய்கிறது? அஞ்ஞானத்துக்குத் தான் அஞ்ஞானம் என்று தெரியாது. அது தன்னையே ஞானமாக எண்ணி ஏமாறிப் போவதால்தான், தனது ஆதாரமான ஞானத்தைத் தேடுவதில்லை. ஆனால் பொய்க்குத் தான் பொய் என்று எப்போதுமே நன்றாகத் தெரியும். தெரிந்தேதான் மெய் போல வேஷம் போடுகிறது. 'தான் இருக்கிறோம்' என்ற அளவில் தனக்கு ஒரு சத்யத்வத்தை உணருகிற போது பொய்யானது சத்தியத்தைக் காதலிக்கிறது எனலாம். தனக்கு மாறாக 'சத்தியமான சத்தியம்' இருக்கிறது என்று எண்ணும் போது, அதன் முன் தன் வேஷம் கலைந்து விடும் என்கிற துவேஷத்தில் பொய்யானது சத்தியத்துக்கு எதிரியாகப் போராட முற்படும். சும்பன் முதலில் அம்பிகையின் மீது மையல் கொண்டதாகவும் பிறகு அவளுடன் போர் புரிந்ததாகவும் இதையே 'தேவீ மாஹாத்மியம்' கூறும். சத்தியம் என ஒன்று இருக்கிறது என்று அறிந்த மாத்திரத்தில் — பொய்க்கும் ஒரு சத்திய இருப்பு உள்ளதால் — அது போர் செய்யப் புறப்படவில்லை. தான் இருக்கிறோம், அதுவும் அழகுமயமாக இருக்கிறது என்றவுடன் அந்த அழகிய இருப்பைத் தன் இழுப்பில் கொண்டு வரவே பார்க்கிறது — காதல் தூது அனுப்புகிறது. ஆனால் மெய் எங்கேனும் பொய்க்கு ஆட்படுமா? மறுத்தவுடன் போர் வருகிறது! இதுவே மிகப் பொருத்தம்.

அவ்விதப் பொருத்தம் பாகவதக் கதையில் இல்லா விட்டாலும் அதிலுள்ள வேறு சிறப்புக்களுக்காவே அதையும் இங்கு சிறிது பார்க்கிறோம். இக் கதைப்படி அஞ்ஞான மகிஷன் ஞானதேவியைக் குறித்துக் கேள்வியுற்றதும் மையல் கொள்கிறான். ''இந்த மகிஷனுக்கு அவள் பட்டமகிஷியாகிறாளா என்றறிந்து வா'' என மந்திரியைத் தூது அனுப்புகிறான்.

விபரீதமான தூது மொழி கேட்ட தேவி, ''சிருஷ்டி அனைத்துக்கும் நான் மாதா. என்னுள்ளேயே உறையும் என் நாயகன் அனைத்துக்கும் பிதா. நான் வெளிப்படும் காலத்தில் அவன் என்னுள்ளேயே திகழ்கிறான். அவன் வெளிப்படும் போது ஆண்-பெண் என்று இருபாதி உருவாக வருவோம்'' என்கிறாள்.

மீண்டும் பன்முறை இந்த முறைகெட்ட தூது மொழி கொண்டு வந்தோரிடமும் அம்பிகை இதே ரீதியில் பரம தாத்பரியங்களைச் செப்புகிறாள். ''நான் ரூபத்தால் ஸ்திரீயாகவும், குணத்தால் புருஷனாகவும் இருப்பவள். எனது ஸ்திரீ உருவத்தின் தாய்த்தன்மை வேதவழி நிற்போருக்கும், தேவருக்கும் பயனாவது; என்னுடைய புருஷ குணத்தின் வீரம் வேத-தேவ விரோதியான அசுரருக்குப் பயனாவது'' என்கிறாள். பிறிதொரு சமயத்திலோ, ''நான் சரீரம் படைத்து வந்து விட்டதால் ஞானசூனியர் என்னைக் காம ஆஸ்பதமாக எண்ணி மதி மயங்கினாலும் காமம் என்பது என்னைப் பற்றுமா? அப்படியாயின், நான் நாயகன் இல்லாதவளா? அதுவும் இல்லை. என் நாயகன் எப்படிப்பட்டவன் தெரியுமா?'' என்று தொடங்கிப் பராசக்தியானவள் தன் 'கணவனான' பிரம்மத்தைப் பற்றிய வேதாந்த லக்ஷணங்களைக் கூறுகிறாள். ''இப்படிப்பட்ட பதியைக் கொண்ட என்னிடம் பக்தி ஒன்றை மட்டுமே வைத்து மகிஷனை உய்வு பெறச் சொல். இல்லாவிடில் இந்த எருமையை யமதர்ம ராஜனுக்கு இரண்டாவது வாகனமாக அனுப்பி வைக்கிறேன்'' என்று மிகவும் ஹாஸ்யமாகச் சொல்லுகிறாள். மஹிஷனுக்கு மஹிஷியாக மறுத்து, சங்கரர் வாக்குப்படி தன்னை 'பரப்பிரம்ம மஹிஷி'யாகவே பிரகடனம் செய்து கொள்கிறாள்!

வேதவழியை வாழ்விக்கவே தேவி ஆவிர்பவித்தாள் என்பது பாகவதத்தில் வற்புறுத்தப்படுகிறது. தூதுவன் மூலம் மகிஷனுக்கு அம்பாள் தந்த உத்தரத்தில், ''ஒரு பெண்ணா நம்மை வெல்ல முடியும் என்று அலட்சியமாக எண்ணாதே! 'பெண்ணால் தான் எனக்கு மரணம் சம்பவிக்க முடியும்' என்று வரம் பெற்றாயே, அதை இப்போது நான் வந்திருப்பதோடு பொருத்திப்பார். உன் அழிவு வந்து விட்டது என்று உணர்வு பெறுவாயாக! நீ எத்தனைக் காலம் தான் பெருவாழ்வு வாழ்ந்தாலும் இது நில்லாதொழிய வேண்டியதுதான். வேத மார்க்கத்தின் படி வாழ்பவரே இப்புவியில் நிறைவாக வாழ இயலும்; மற்றவர் எவ்வளவு வாழ்ந்தாலும் பிறகு தாழ வேண்டியவரே! நீ பாதாளத்துக்கோ, அல்லது உனக்கு விருப்பமான குறிப்பிட்ட வேறு ஏதாவதோர் இடத்துக்கோ சென்று அடங்கி வாழ்வாயாக!'' என்று மிகவும் தயையுடன், தாராளத்துடன் கூறுகிறாள்.

காம வெறி கொண்ட மகிஷன் சொன்ன மொழிகளைத் தூதுவன் பிதற்ற, காமகோடியான மாதாவோ நெருப்புக் கங்குகளாக வார்த்தைகளை வீசுகிறாள். அப்போது மகிஷன்,

''நான் இனிய மொழிகளையே சொல்லிச் சொல்லியும், நீ வன்சொற்களையே திருப்பிக் கொண்டிருக்கிறாயே! என் பௌருஷத்துக்குரிய வன்சொற்களை நான் முதலிலேயே மொழிந்திருந்தால், நீ உன் பெண்மைக்குரிய இன் வசனங்களைக் கூறியிருப்பாயோ என்னவோ?'' என்று பிரதிவசனம் சொல்லியனுப்புகிறான். மிகவும் புத்திசாலித்தனமான பேச்சு என்று எண்ணிக் கொண்டு அப்பட்டமான அறிவீனத்தை வெளிக்காட்டி விட முடியும் என்பதற்குப் பௌராணிகர் தருகிற அழகிய எடுத்துக்காட்டு!

கடைசியில் தேவி தீர்மானமாக, ''காரிய ஸித்திக்காக மிருக பலி தருவதுண்டல்லவா? தேவ காரிய ஸித்திக்காக நான் இந்த மகிஷத்தைப் பலி கொடுக்க உறுதி பூண்டேன்'' என்கிறாள்.

இருப்பினும் அவளோடு போர் புரியாமல் அவளை எப்படியேனும் வசப்படுத்திக் கொள்ள முடியுமா என்பதிலேயே நாட்டம் வைத்த மகிஷன் மந்திராலோசனை நடத்தினான். அப்போது மந்திரிமார்கள், 'முதலில் கேட்கப் பிரியமாக இல்லாததே பிறகு நன்மை பயக்கிறது; முதலில் கேட்கப் பிரியமானதோ பிறகு தீமை பயக்கிறது — மருந்து முதலில் வாய்க்குக் கசந்து பிறகு உள்ளுக்கு நல்லது செய்வது போலும், கள் முதலியன முதலில் களிப்புத் தந்து பிறகு கெடுதல் விளைவிப்பது போலும்' என்று எண்ணுகின்றனர். 'மகிஷனுக்கு எப்படி நல்லதைச் சொல்வது?' என்று பலப்பல யோசித்து விதவிதமான யோசனைகள் சொல்கின்றனர். அவர்களில் ஞானத்துக்கும் அஞ்ஞானத்துக்கும் இடையேயுள்ள எல்லைக் கோட்டின் அருகே நிற்கிற ஆலோசகரும் உள்ளனர். ஆனால் கடைசியில் எல்லோரும் அஞ்ஞான மகிஷனுக்குத் தாளம் போட வேண்டியே ஆகிறது. மந்திரா லோசனை என்ற பெயரில் கூட்டம் நடந்தாலும் கடைசியில் மகிஷன் மனப்படி காரியத்தை நடத்த என்ன உபாயம் மேற்கொள்ளலாம் என்று ஆராய்வதோடு முடிகிறது! மகிஷனுக்குப் போரில் ஈடுபாடு இல்லை. வனிதையைத் தனக்கு வசமாக்கிக் கொள்வதற்கு தண்டோபாயம் பலிக்காது என்பதால் திரும்பத் திரும்பத் தூது அனுப்புகிறான் — அசம்பாவித வேண்டுகோள் விடுகிறான். அவன் தேவியை மணப்பந்தலுக்கு அழைக்க, தேவியோ அவனைப் போர்க்களத்துக்கே அழைக்கிறாள்.

தூது முயற்சிகள் தோற்றுப் போன போதிலும் காமாதுரன் சளைக்கவில்லை. மீண்டும் மீண்டும் வியர்த்தமான முயற்சி செய்வதற்காக மந்திரி பிரதானிகள் ஆட்சேபணை தெரிவிக்கப்

போகிறார்களே என்ற எண்ணத்தில் அவன் விடாமுயற்சி குறித்து ஒரு சொற்பொழிவே நிகழ்த்தி விடுகிறான்! அஞ்ஞானம் கூடத் தற்காப்பு முயற்சியில் தன்னை ஞானத்துக்கு எத்துணை நெருக்கமாகக் காட்டிக் கொள்ளும் என்பதற்கு இந்தப் பிரசங்கம் ஓர் எடுத்துக்காட்டு. மகிஷனா பேசுகிறான் என்று வியக்கும் வண்ணம் அவன் சொல்வதைக் கேளுங்கள்: ''முயற்சி திருவினையாக்கும் என்று பெரியோர் கூறுகின்றனர். எல்லாம் தெய்வத்தின் ஆதீனம் என்றும் கூறுகின்றனர். இது ஏன் எனில் ஜீவனுக்குச் சுதந்திரம் இருக்கிறது என்பதாலேயே அவனை முயற்சி செய்ய வேண்டும் என்கின்றனர். செயல்படச் சுதந்திரம் இருந்தாலும், அதன் விளைவை உண்டாக்கிக் கொள்ளும் சுதந்திரம் இவனுக்கில்லை. செயலுக்குப் பலன் தருவது கடவுள் கையிலேயே உள்ளது. இந்தத் தெய்வ பலத்தை மறுப்பதற்கில்லை. இதனைத்தான் 'யாவும் அவன் ஆதீனம்' என்று கூறினர். ஜீவன் என்ன பலனைத் தர முடியும்? எனவே ஜீவப் பிரயத்தனம், தெய்வ பலம் தரும் பலன் இரண்டும் சேர்ந்தாலே இவனுக்கு அநுகூலமான அநுபவங்கள் உண்டாகின்றன. முயற்சியில் இறங்கியவன் தெய்வ பலத்தையும் அபேட்சிக்க வேண்டும். தெய்வ பலம் வேண்டும் என்பவன் வெறுமே இராமல் முயற்சியை அபேட்சிக்கவும் வேண்டும்.''

இத்தனை சாமர்த்தியமாகப் பேசினாலும் மகிஷன் பல விஷயங்களை மறந்து விட்டான். முயற்சியே மேற்கொள்ளாவிடில் கடவுள் பலனும் தரமுடியாது என்பதால் அது எவ்வித அநுபவமுமில்லாத ஜடமான சவநிலைக்குச் சமமாகிவிடும் என்பது இவன் கருத்து. ஆனால் சரணாகதி செய்து, சுயமாக எம்முயற்சியும் செய்யாதவர்கள் எந்தப் பலனையுமே வாழ்வில் எதிர்பார்ப்பதும் இல்லை — ஏனெனில் அவர்களுக்குத் தெரியும், இப்படிப்பட்ட 'பலனற்ற' வாழ்வுதான் உண்மையில் முற்றிப் பலித்த (பழுத்த) வாழ்வு என்று! இவர்களுக்கு எந்த முயற்சியும், கர்மமும் இல்லாத போது இவர்கள் தம்மைப் பொறுத்த மட்டில் ஞானமயமாகின்றனர். உலகைப் பொறுத்த மட்டில் இவர்கள் மூலம் பராசக்தியே கருணைச் செயல்களில் இயங்கத் தொடங்கி விடுகிறது. இந்தப் பூரண காரண நிலையை, காருண்ய காரிய நிலையை ஜடவாழ்வாக நினைத்து விட்டான் மகிஷன். அஞ்ஞானம் அவனேயன்றோ?

ஒரு பலனை எதிர்பார்க்கிற வரையில் மனித யத்தனமும் அவசியம் என்ற அளவில் இவன் கூறுவதை ஒப்ப வேண்டியதே.

முன்பு இந்திரனுக்கு பிருஹஸ்பதி உபதேசித்ததும் இதுதானே? ஆனால் அந்தப் பலன் எத்தகையது என்பதைப் பொறுத்தே முயற்சிக்கு கடவுள் கூலி கொடுப்பான் என்பதை இவன் மறந்து விட்டான்! தீயநோக்கத்திற்காகவே விடாமுயற்சி செய்தால் கடவுள் பலன் தரமாட்டான்; அதையும் பாராட்டிப் பலனே தந்தாலும் கூட, அதனால் ஒருவன் ஈட்டும் பாபத்துக்காகத் தண்டனையும் பிறகு தருவான் என்பதை மறந்து விட்டான்! விடாமுயற்சி செய்வதொன்றுக்காகவே பலனை மட்டும் கடவுள் கொடுத்து விட வேண்டும் என்று இவன் எண்ணி விட்டான்! 'கடவுள்', 'கடவுள்' என்று தன் அசுர வாயால் அதிசயமாகக் கூறிய இவன் தன் விடாமுயற்சித் தவத்துக்காக பிரம்மன் வரம் தந்தது போலவே, பிரம்மனை விட சுதந்திரம் வாய்ந்த பெரும் தெய்வங்களும் செய்வர் என்றெண்ணினான் போலும்! இவன் குறிப்பிட்ட அந்தக் கடவுளின் பூரண சக்தியையே இவன் நாயகியாக்கிக் கொள்ள வேண்டும் என்று படுபாதகமான பலனை உத்தேசித்த விடாமுயற்சி செய்தாலும் அதற்குத் தெய்வ பலம் கிட்டும் என்று எண்ணினானே — இது மகிஷமூளை அன்றி வேறென்ன? அதி புத்திசாலித்தனமும் வடிகட்டிய மடமையும் கலந்திருக்கும் விசித்திரத்தை இங்கு பௌராணிகர் சித்தரித்துக் காட்டி விடுகிறார்.

மீளவும் மகிஷன் வெட்கமின்றி தூதுவிடப் போகிறான் என்று மந்திராலோசனை சபையினர் புரிந்து கொள்கின்றனர். பிடாலன் மனம் விட்டுப் பேசிவிடுகிறான். ''அந்தப் பெண் நிச்சயமாகத் திருமண உத்தேசத்துக்குச் சம்மதிக்கப் போவதில்லை. போர் செய்வதே அவளது உறுதியான தீர்மானம். நாமும் போருக்குத்தான் செல்ல வேண்டும். ஆனால் யுத்த பூமியில் அவளைக் கண்டு நீ போரா செய்வாய்? காமாந்தகனாகிய நீ அவள் மீது ஆயுதம் விடுக்க மனம் கொள்ள மாட்டாய். அவளும் எந்த ஆயுதமும் பிரயோகிக்க மாட்டாள். அவளது வில் போன்ற புருவத்தின் அடியில் கண்ணிலிருந்து புறப்படுகிற பார்வை அம்பு ஒன்றே உன்னை வதைக்கப் போதுமானது! உன் காம மோகத்தை அறிந்தேதான் அவள் தன்னந்தனியாகக்கூட இவனை அழித்துவிட முடியும் என்கிற தைரியத்தில் ஏகாங்கியாக வந்திருக்கிறாள். ஆக உன் காமத்தால் அவளை வெற்றி கொள்ள முடியவில்லை என்பது பல தூதுகளுக்குப் பின் நிதரிசனமாகி விட்ட இப்போதேனும், இவ்வீணாசையை விட்டாலன்றி யுத்தத்திலும் நமக்கு வெற்றி இல்லை என்பதை உணருவாய்'' என்கிறான்.

மன்னனின் பலவீனம் நன்றாக அம்பலமாகிறது என்றவுடன் பாஷ்கலன் அதை அடியோடு மறைத்துப்

பேசுகிறான். ''மன்னனே! நாம் யுத்தத்தில் எவராலும் வெல்லப்படாத பலம் கொண்டவர் என்பதில் சந்தேகம் என்ன? நாம் ஆவல் கொண்டுள்ள போர் வருகிற சமயத்தில் ஏன் தயங்க வேண்டும்? இதோ நானே போய் அந்தச் சண்டிகையைக் கொன்று வருகிறேன்'' என்று ஆயத்தமாகிறான்.

மகிஷன் ஏதுமே பேச முடியாத நிலையில் இருக்கிறான். அவனைத் தடுத்தால் இவன் வீரத்தைக் கோட்டைவிட்ட காமாதுரன் என்பது உறுதிப்பட்டுவிடும். அவனைப் போ என்று சொல்லவும் வாய் வரவில்லை. சண்டிகையை வதைப்பதாலோ சிறை வைப்பதாலோ இவனது உள் நோக்கம் நிறைவேறாதே!

இச்சமயத்தில் துர்த்தரன் இவனுக்குக் கை கொடுக்கிறான். ஜீவன் அஞ்ஞானத்திலிருந்து விடுபட வொண்ணாமல் அதன் பரிவாரங்கள் அநுகூல சத்ருக்களாக இருந்து அதைப் பாழுங்குழியில் தள்ளியே தீரும் என்று காட்டுகிறார் வியாஸர். ''பிடாலனும் பாஷ்கலனும் அரசனின் (சிற்றின்ப) லாபத்தைக் கருதாமல் தங்களுடைய (யுத்த) லாபத்தை மட்டுமே கருதும் தாமஸ மந்திரிமார்கள்'' என்று இடித்துரைத்த துர்தரன், அவர்களைத் தடுத்து, தானே அம்பிகையிடம் மீண்டும் காதல் தூது செல்லப் புறப்படுகிறான். 'அரசனைத் தங்கள் வழிக்குத் திருப்ப முடியாமல் இவன் செய்கிறான். இனி தங்களுக்கு ஆபத்து உண்டாக்கி விடுவான்' என்று பயந்த பிடாலனும் பாஷ்கலனும் உடனேயே சுருதியை மாற்றிக் கொண்டு விடுகிறார்கள். என்ன இருந்தாலும் அஞ்ஞானப் பட்டாளத்தைச் சேர்ந்தவர் தாமே! பாஷ்கலனே முந்திக் கொண்டு அம்பிகையிடம் தூது செல்கிறான் — துன்முகனையும் அழைத்துக் கொண்டு.

ஆனாலும் இப்போது மந்திராலோசனையில் பல விஷயங்கள் பகிரங்கமாக அலசப்பட்டு விட்டதால் மகிஷன் ஒரு படி இறங்க வேண்டியதாகிறது. தூது பலிக்காவிடில் அவளோடு போர் புரியலாம் என்று உத்தரவிடுகிறான்.

''மணமா, மரணமா?'' என்று கேட்கிற அசுரப் பதர்களைப் பார்த்து அம்பிகை மகிஷனைப் போருக்கு விரையுமாறு வேகத்துடன் கூறுகிறாள். ''மகிஷன் விண்ணுலகு மண்ணுலகு இவற்றை விட்டுப் பாதாளம் சென்றாலே அவனை விடுவேன். எப்படியும் தேவர்களையும் வேதங்களையும் வாழ்விப்பதெனத் தீர்மானித்து விட்டேன். அதற்காகவே அவதரித்திருக்கிறேன். நான் எப்போதோ சித்தமாகி விட்டேன்.

அவன்தான் யுத்தத்துக்கு சித்தமாக வரவேண்டும். என் ஆணையைக் கேட்காத வரையில், அவன் பிரம்மாண்டத்தில் எங்கு சென்றாலும், எங்கு மறைந்தாலும் அவனை விடவே மாட்டேன் என்று சொல்லுங்கள்'' என்கிறாள்.

மகாஞானிகள் இவளை விடவே மாட்டேன் என்று பிடித்துக் கொள்ள எண்ணித் தேடினால் இவள் விலகி விலகி ஓடுவாள்; ஆனால் அரக்கனை விடவே மாட்டேன் என்கிறாள்! என்ன லீலையம்மா!

போர்த் தினவெடுத்த அசுரர்கள் இவளது பதிலை அரசனிடம் சென்று தெரிவிக்காமல், தூது பலிக்காவிடில் யுத்தம் செய்யலாம் என்ற உத்தரவுப்படி அப்போதே போர் தொடங்குகின்றனர். பாஷ்கலன், துர்முகன் ஆகிய இருவருமே முதல் களப்பலி ஆகின்றனர்.

பிறகு சிக்ஷுரன், தாமிரன் இருவரும் அவர்களைத் தொடருகிறார்கள் — யமபுரிக்கு அல்ல, சண்டியின் பிரசண்ட யுத்தத்தில் மரணம் கண்டவர்கள் யமபுரத்துக்கு ஏன் போக வேண்டும்? பிரம்மபுரமாகிய அவளிடமே தான் ஐக்கியமாகி இருப்பர்.

அடுத்து வந்த அஸிலோமன், தேவி தன் கோமள சரீரத்தைப் போரில் ஈடுபடுத்துவதைவிட அதற்குரிய இன்பங்களைப் பெற்று பிரியம் காட்டுவதே தர்மம் என்றும், பெண்களுக்குரிய தயையை அவள் அசுரேந்திரன் பால் கைவிடலாகாது என்றும் சதுரம்பேசிப் பார்க்கிறான். ''தானவர் உனக்கென்ன தீங்கு செய்தனர்? நீ என்ன காரணத்துக்காக அவர்களைக் கொல்ல இங்கு வந்திருக்கிறாய்?'' என்று வினவுகிறான்.

அம்பிகை நகைக்கிறாள். ''நீ கேட்ட இரண்டுமே பொருளற்றவை. 'என்ன காரணம்?' என்கிறாய்! என்னைக் காரணம் கேட்க எவருமில்லை. நானே ஆதி காரணி. 'ஏன் இங்கு வந்தாய்?' என்றாய். நான் இங்கு வரவும் இல்லை. எப்போதும் எங்கும் உள்ளவள் வருவதேது, போவதுதான் ஏது? ஆனாலும் ஒரு காரணத்தை உத்தேசித்துத்தானே உங்கள் கண்ணுக்கு இப்போது புலனாகிறேன்? அந்த அளவுக்கு உனக்கு நான் காரணம் காட்டுகிறேன். ஒரு நிலையில் நான் சகல ஜீவராசிகளின் பாப புண்ணியங்களையும் நடு நிலையில் நின்று வெறுமே பார்த்துக் கொண்டிருக்கும் ஸாக்ஷிரூபிணியாக மாத்திரம் இருக்கிறேன். அப்போது எனக்கு வேண்டியவர் வேண்டாதார்

என்ற வேறுபாடுகளே இல்லை. ஆனால் இப்படிப்பட்டவளே அதர்மம் எல்லை மீறி ஓங்கும்போது தர்மத்தின் பொருட்டு ஓர் உருக் கொண்டு வெளிப்படுகிறேன். ஆம், என்றும் மாறா விரதம் ஒன்றை நான் அநுஷ்டித்து வருகிறேன் — சாதுக்களை ரட்சிக்கும் பொருட்டுக் கொடியவர்களைச் சிட்சிப்பதே என்னுடைய அந்த ஜன்ம விரதம்; பிறவி நோன்பு. கொடியோரைத் தண்டிப்பதை நான் நோக்கமாகக் கொள்ளவில்லை. ஆனால் இதைச் செய்யாவிடில் நல்லோரைக் காப்பது எங்ஙனம்? இந்த விரதத்தைப் பரிபாலிக்கவே எங்குமுள்ள நான் பலப் பல முறை ஒவ்வோரிடங்களில் வெளிப்பட்டிருக்கிறேன். யுகங்கள் தோறும் எந்தெந்த உத்தமர்கள் கொடியோரைக் கண்டித்து நல்லோரைக் காக்கின்றனரோ அவர்களெல்லாம் என்னையன்றி வேறல்ல.''

இப்படியெல்லாம் அம்பிகை பேசப் பேச அசிலோமனுக்கு மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியவில்லை. பிடாலன் குறுக்கிட்டு அம்பாளுடன் போர் புரிகிறான். முடிவைச் சொல்லவே வேண்டாம். பிடாலனின் படலம் முடிந்தது!

அம்பிகையின் சொல்லும் செயலும் அஸிலோமனிடம் ஆழப்பதிந்து, ஓர் அசுரனா இப்படிப் பேசுகிறான் என்று நாம் வியக்கும் வண்ணம் அவன் தனது இடது கையை மேலே தூக்கி மொழியலானான்: ''துர்புத்தி வாய்ந்தவர்கள் உன்னிடம் நாசமுற்றேயாக வேண்டும் — இதனை நன்கு அறிகிறேன். எனினும் நான் மகிஷனுக்கு சுவாதீனனாகையால் செஞ்சோற்றுக் கடனுக்காக, ராஜ விசுவாசத்துக்காகப் போர் புரிய வேண்டியவனாக இருக்கிறேன். மகிஷனுக்கு நல்லது, கெட்டது புரியாது. அதை அவனுக்கு என்னால் புரிய வைக்கவும் ஒண்ணாது. அவனுக்கு நான் இதம் உரைப்பதே விரோதமாகப் படும். எனவே வீர தர்மத்தை அநுசரித்து இதோ போர் முகம் புகுந்து, அபஜயத்தையும் ஏற்க முற்பட்டேன். அம்மா, இதுவரை மாவீரர் பலர் உன் பாணத்துக்கு ஈடுதர முடியாமல் மாண்டனர். அவர்களது 'வீரம்' உன் முன் எங்கே எடுபட்டது? இப்படிப்பட்ட 'வீர'த்தைப் போற்றுவதை விடப் பஸ்மமே ஆக்க வேண்டும். தெய்வ வலிமையின் முன் வீரம் செய்வது யாதுமில்லை எனக் கண்டேன். இருப்பினும் கடமைக்காகப் போர் புரிகிறேன் அம்மா'' என்று கூறி வில்லில் அம்புகளைப் பூட்டினான்.

கடனே என்றில்லாமல் அந்தரங்க சுத்தமாகவே கடும் போர் புரிந்தான். தேவி வாள் வீச்சினால் அவனுயிரைத் தன்னுள் அணைந்து கொண்டாள்.

★ ★ ★

மகிஷனே வருகிறான் யுத்த முகத்துக்கு, சாரதி தாருகன் செலுத்தி வரும் ஆயிரம் கோவேறு கழுதை பூட்டிய தேரில் ஆரோகணித்து! மஹிஷனாகவா வருகிறான்? அல்ல. மன்மதனாக வருகிறான்! மதனனை எரித்த மகா சக்தியும், பிறகு மதனனை மீளுவித்த மாதாவும் இவளே என்றறியாமல், அவளை மதனாவஸ்தைக்கு ஆட்படுத்த எண்ணி எருமையரசன் அருமையான யுவ வேஷத்தில் வருகிறான்!

ரஸாபாஸத்தின் எல்லையாக, அன்னையிடம் சிருங்கார மொழிகளை வீசுகிறான் பாபி. ''எந்தப் பாணமும் தொடாத என்னை மன்மத பாணம் துளைத்துவிட்டது. என்னைக் கை விடாதே. நான் ஆயுதபாணியாக இங்கு வந்தாலும் உன் அழகைக் கண்டு, அது என் அநுபோகத்துக்கு வரவேண்டும் என்று அவாக் கொண்டு, உன்னிடம் சரணாகதி செய்கிறேன். காமரூபிணி! பிரம்மாதி தேவரிடம் நான் இது போன்ற தீன வாசகம் புகன்றதில்லை. உன்னிடமே தயக்கமின்றிச் செப்பினேன். காமன் கணையிலிருந்து என்னைக் காப்பாற்று. ஆஹா! நான் எத்தனை சொல்லியும் நீ அருவருத்து நிற்கிறாயே! என் சுந்தர ரூபத்தில் உன் மனம் ஏன் சொக்கவில்லை? என்னை வாட்டி வதைக்கும் காமவேள் உன் மீது ஏன் தன் சர வரிசையைச் செலுத்தவில்லை? ஒரு கால் அவனும் உன்னைக் கண்ட மாத்திரத்தில் மோகத்தால் ஸ்தம்பித்து நின்றுவிட்டானா? அல்லது தேவர்கள் சூழ்ச்சிப்படி அவன் உன்னை விட்டு என் மீது மட்டும் மலர்க் கணைகளை வீசுகிறானா?'' காமப் பேய் எப்படி எல்லாம் ஒருவனை ஆட்டி வைத்து அவலமாக்கிவிடும் என்று பளிச்சிட்டுக் காட்டுவதற்காகவே வியாஸாசாரியர், திரிலோகாதிபத்தியம் பெற்ற மாவீர மகிஷனை இங்கு சொத்தைப் பதராக்கிக் காட்டுகிறார்!

சாக்ஷாத் தாயிடம் நேரிலேயே மானக் கேடான விருப்பத்தைத் தெரிவித்துத் தனது பிரபாவங்களைக் கூறத் தொடங்குகிறான் மகிஷாசுரன்.

அப்போது அம்பிகை, ''நீ ஒன்றுமே சொல்லிக் கொள்ள வேண்டாம். எல்லாம் அறிந்த நான் உன் விஷயம் முற்றும் அறிந்தவளாவேன். நீதான் என்னைச் சுற்றும் அறிந்து கொள்ளாதவன். என்னை அறிய உன்னால் ஆகாது. சர்வ இந்திரியங்களுக்கும் ஆதாரமாக வியாபித்திருக்கிற ஒருத்தர் தான் என்னை அறிவார். அவருடைய ஆக்ஞா சக்தியாக இருந்து, அவரைப் பரம கலியாணராகச் செய்பவளே நான். அவரது சாந்நித்திய விசேஷத்தால் என் ஞான பூரணத்தை நான்

உணர்ந்திருக்கிறேன். இப்படிப்பட்ட சிவ சக்தியான நான் சம்ஸார பந்தத்தை நீக்குபவள் என்றறியாமல், என்னுடனேயே சம்ஸார வாழ்க்கை நடத்த நினைக்கும் மதிகேடனே! இந்த அபசாரத்தையும் பொறுத்தேன். மோக மயக்கத்தில் நீ என்னிடம், 'நான் உன் அடிமை; உன்னை சரண் அடைந்தேன்' என்று கூறியதையே பக்தியில் சொன்னதாக ஏற்று மன்னிக்கிறேன். தேவலோகத்தையும் மானுட லோகத்தையும் பீடிப்பதை விட்டு, நீயும் உனது அசுர கணங்களும் உங்களுக்குரிய பாதாளம் சென்று வசிக்க ஒப்பினால், இப்போதே உங்களை அநுக்கிரகித்து, விட்டு விடுகிறேன். உயிர் வாழ வேண்டும் என்ற விருப்பம் உள்ள உன்னைக் கொன்றே தீர வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை'' என்கிறாள், தாயாக.

மகிஷன் மீளவும் போதை தலைக்கேறிப் பிதற்ற, அம்பிகை நிர்தாக்ஷிண்யத்தின் சிகரத்தில் ஏறி, ''இனியும் வீண் பேச்சுக்கு இடமில்லை. இரண்டிலொன்று செய் — ஒன்று, பரிவாரத்துடன் பாதாளம் சென்று பிழைத்துப்போ; அல்லது ஆயுதம் எடுத்துப் போர் புரிந்து வீர சொர்க்கம் செல்'' என்கிறாள்.

அதற்கு மேல் அவன் செய்வதற்கேதுமில்லை. தன் காதல் தோற்று தாங்கொணா அவமானத்துடன் மேலும் அவமானமாக சுந்தர ரூபத்தை விட்டு (இந்த வேஷங்கள் சில முகூர்த்த காலமே நிற்பதல்லவா?) எருமை வடிவு கொண்டு போரைத் தொடங்கினான் அவுணன். அவமானத்தை மறைக்குமுகமாக அவன் பேசுவதில் எப்பேர்ப்பட்ட மனோதத்துவ மர்மத்தை முனிக் கவிஞர் காட்டி விடுகிறார்? ''அடி துஷ்டே! நீ இப்போது நிற்கிற நிலையைப் பார்த்தால் சிருங்கார பாவமாக இருக்கிறது. என்னிடம் மோகித்த நீ, நான் உன்னிடம் மோகிக்குமாறு செய்ய முயலுகிறாய் என்பது நீ நிற்கிற பாணியிலேயே தெரிகிறது. ஆனால் நானா உன்னிடம் மயங்குவேன்? உன்னைக் கொல்வதும், உன்னை ஏவியுள்ள தேவர்களைக் கொல்வதுமே என் தீர்மானம். அதை உன்னால் மாற்ற வொண்ணாது'' என்கிறானாம்!

பிறகு கோர யுத்தம் நடக்கிறது. இறுதியில் இறைவி சக்கராயுதத்தால் அசுரன் சிரத்தை அறுத்துத் தள்ளுவதாக பாகவதம் கூறுகிறது. இவள் மகாலக்ஷ்மி என்பதால் இங்கு மகாவிஷ்ணுவின் ஆயுதமான சக்கரம் கூறப்படுகிறது போலும்!

மகிஷன் மாண்டதும் இந்திராதிதேவர் இயம்பவொணா ஒறும்பூது எய்தி அம்பிகையைத் துதிக்கிறார்கள். 'தேவீ மாஹாத்மியத்'திலும் இவ்விடத்தில் பரமோத்தமமான ஒரு துதி உள்ளது. அதை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம். பாகவதத் துதி அம்பாளின் விளக்கவொண்ணா வைபவங்களைக் கூறும் போது கற்கண்டாக இனித்தாலும், பரதெய்வ நிந்தனையில் இறங்கும்போது கற்குண்டாகக் கனக்கத்தான் செய்கிறது. எல்லாத் தெய்வ வடிவங்களுக்குள்ளிருந்தும் ஒரே மகாசக்தி இயங்குகிறது என்று சொல்வது சரிதான். ஆனால் அந்த மகாசக்தியை இங்கு தாங்கள் போற்றும் வடிவமாக மட்டுமே வழிபட வேண்டும் என்றும், மற்ற வடிவங்களில் வழிபடுவது அறிவீனம், அதமம், அபசாரம், அபராதம், அதிபாபம் என்றும் இங்கு தேவர்கள் கூறுவது ஏற்கத்தக்கதாக இல்லை. சிவனாகவும் விஷ்ணுவாகவும் பிரம்மாவாகவும் கணேசாதி இதர மூர்த்திகளாகவும் உள்ளனவற்றுக்கு ஒன்றே ஆதாரம் என்று அறிந்து அவற்றை வழிபட்டால் அதில் என்ன தவறு? இந்த ரூபங்களை வழிபட்டவர்களுக்கும் மகாசக்தி அருள்பாலித்துத் தானே வருகிறது? இந்த உண்மையையும் இந்தத் துதியைக் கூறும் அமரர், அல்லது வியாசர் அல்லது இந்த சுலோகங்களை இடைச் செருகலாக சேர்த்திருக்கக்கூடிய எவரோ ஒருவர் உணர்ந்துதான் இருக்கிறார். அதனால் தான், ''நீ இருக்க பிற தெய்வங்களைப் பூஜிக்கும் மூடர்களும் இருக்கிறார்களே!'' என்று சொன்ன கையோடு இத் துதி, ''இப்படிச் செய்வோரையும் நீ பிரசித்தி பெறச் செய்கிறாயேயன்றித் தாழ்வுபடுத்துவதில்லையே!'' என்றும் கூறுகிறது. அந்த மட்டும் விசேஷம் தான்!

இத்துதியின் முடிவில் ஓர் அரிய, நுட்பமான விஷயம் உள்ளது. ஒரே விருட்சத்தில் இரு பறவைகள் வசிப்பதாகவும், அவற்றில் ஒன்று மட்டும் அம் மரத்தின் கனிகளை உண்டு அல்லற்படுவதாகவும், மற்றது கனியை உண்ணாது வெறுமே பார்த்துக் கொண்டு வீற்றிருப்பதாகவும், கனியை உண்ட பட்சி இந்த உண்ணாத பட்சியைக் கண்ட பின்னரே தனது உள் மகிமையை உணர்ந்து அல்லலிலிருந்து விடுபடுவதாகவும் 'முண்டக உபநிஷத'த்தில் ஓர் ஒப்புயர்வற்ற மந்திரம் உண்டு. சரீரம்தான் அந்த விருட்சம்; சரீர சௌக்கியங்களைப் பழமாக எண்ணிப் புசித்து அவதிப்படும் வெற்றுப் புலன் வாழ்வினனான ஜீவன் ஒரு பட்சி; இந்தப் புலன்களுக்கு ஆதார சக்தியாக இருந்தும், புலன் வாழ்வில் சிக்கிக் கொள்ளாமல் இவனுக்குள்ளேயே செயலற்று மௌனமாக இலங்கும் பிரம்மம் (என்கிற ஆத்மா) தான் இன்னொரு பட்சி. ஆத்ம

நாட்டம் வந்து விட்டால், புலன் மட்டுமின்றி, அவற்றால் உண்ணப்படும் பழங்களும்கூட அந்த ஆத்மாவிடமிருந்தே வந்தவை என்பதாக அதன் மகிமை உணரப்படுகிறது. உண்பவன், உணவு, உண்கை அனைத்துமே அதுதான் என்றாகிறது. அதன்றி, உணவு என்றோ, உண்கை என்றோ, உண்பவன் என்றோ ஒன்று இல்லவே இல்லை என்றும் தெரிகிறது. உண்பவனும் அதுவேதான் எனில், அதன் மகிமையே தன் மகிமையும் ஆகிறது!

அது சரி! ஆனால் வெளிமுகமாகவே பார்க்கப் பழக்கப்பட்ட மனசு பழங்களையே பார்த்துக் கொண்டிராமல் எப்படி உள் முகமாகத் திரும்பி அந்த இன்னொரு பட்சியைப் பார்க்கத் தொடங்கியது? இந்தக் கேள்விக்கு உபநிஷதத்தில் நேராக விடை இல்லை. இங்கே பாகவதத் துதி இட்டு நிரப்புகிறது. ''அம்மா! செயலற்ற சாக்ஷி மாத்திரமான ஆத்ம பக்ஷி, செயலில் சிக்குண்ட மன-இந்திரியப் பக்ஷி இவை இரண்டுமான நீ, அவற்றோடு கூட அன்பே உருவான மித்திரம் என்கிற மூன்றாவது பக்ஷியாகவும் இருக்கிறாய்! இந்த மித்திரமாக இருக்கிற போது நீ மனமும் புலனும் செய்கிற சகல அபராதங்களையும் பொறுத்து மன்னிக்கிறாய்'' என்கிறது. செயலற்ற பிரம்மம் லோக காரியங்களை நடத்திக் கொண்டு — குறிப்பாக மாயையில் சிக்கியோரைக் கைதூக்கி விட்டுக் கொண்டு — கருணாமூர்த்தியாகவும் இருக்கிறது. அது நினைத்தால்தான் இவன் இக வாழ்விலிருந்து அக வாழ்வுக்குப் பார்வையைத் திருப்பிக் கொள்ள முடியும். தனக்குத் தானே சத்துருவாகிக் கொண்ட ஜீவனுக்கும், சத்துரு-மித்திரர் என்ற பேதமறியா பிரம்மத்துக்கும் இடையே இப்படியாக ஜீவனைப் பிரம்ம நாட்டம் கொள்ளும்படித் திருப்பி விடுகிற ஒரு மித்திர பட்சியாக அம்பாள் இருக்கிறாளாம்!

அத்வைத சாஸ்திரங்களில் அம்பாளின் ஸ்தானத்திலுள்ள காரியப் பிரம்மத்தை ஈசுவரன் என்பார்கள். முண்டகோப நிஷதத்தில், மேற்சொன்னவாறு எதிலுமே பட்டுக் கொள்ளாமல் வீற்றிருக்கும் புட்சியை 'ஈச' என்றே சொல்லியிருக்கிறது. ஆனால் 'ஈசன்' அல்லது 'அம்பாள்' அல்லது 'பிரம்மத்தின் கருணை' வெறுமே பார்த்துக் கொண்டு மாத்திரம் இராதே, வழுக்கி விழும் குழந்தையை வாரி எடுத்தணைக்க வருமே என்ற கேள்வி எழும்பத்தான் செய்யும். மூன்றாவது பட்சியைக் கொண்டு வந்து 'தேவீ பாகவதம்' ஐயங்களைப் பூரணமாகப் போக்கி விடுகிறது. குணாதீதமான பிரம்மம், கருணைக் குணம் நிரம்பிய ஈசன் (அம்பாள்), அவகுணமயமான ஜீவன் மூன்றும் ஒன்றுதான். இவற்றில் நம்

உள்ளேயே நம் ஹிதத்திற்காக வாழும் சிநேகிதப் பறவையாக, மித்திர பக்ஷியாக ஜகன் மாதாவை பாவிப்பதில் அன்பு வெள்ளம் பொங்கத்தானே செய்கிறது?

துதி செய்த தேவர்களுக்கு வரமருள அம்பாள் திருவுளம் கொள்கிறாள். அவர்களோ, ''எங்களது எல்லா வேண்டுகோளும் உன்னால் தன்னால் நிறைவேறும். நாங்கள் என்ன வரம் கேட்க இருக்கிறது? தற்போது நாங்கள் வேண்டிய மஹிஷாஸுர வதத்தை நிறைவேற்றி, முன்பு நாங்கள் உன்னை மறந்து செய்த அபராதங்களைப் பொறுத்த மித்திரமே! இனியும் நாங்கள் அபராதம் செய்யக் கூடும்தான். அப்படிச் செய்கையிலும் இது போலவே எங்களை க்ஷமித்து ரக்ஷித்து அருள்வாயாக! அதோடு இன்னொரு வரம் — உனது சரண கமலங்களில் நீங்காத மெய்யன்பை வழங்குவாயாக!'' என்கிறார்கள்.

மீளவும் இவர்கள் அபராதம் செய்ததின் விளைவாகவே சும்ப-நிசும்பாஸுரர்களிடம் மறுபடி தங்களது ராஜ்யத்தை இழக்கப் போகிறார்கள். அப்போது விமோசனம் பெறுவதற்கு இப்போதே மிகுந்த தீர்க்கதிருஷ்டியோடு அவளிடம் பக்தி வரத்தைக் கேட்டு விட்டார்கள்! 'அப்போதைக்கிப்போதே' என்று ஆழ்வார் சொன்னபடி!

அந்த உபாக்யானத்துக்குச் செல்லுமுன் இவ்விடத்தில் 'சண்டீ' என்றும் 'துர்கா ஸப்தசதீ' என்றும் கூறப்படும் மாஹாத்மியம் விரிக்கும் அமிருதத் துதியைச் சுவைத்து விடலாம்!

6. நன்றி நெஞ்சம் நவின்ற செஞ்சொல்

எவராலும் எதிர்க்கவொண்ணாமல் மூவுலகாண்ட மகிஷாசுரன் மடிந்தே விட்டான். அவனது மகா சைனியமும் மிச்சம் மீதி என்பதே இன்றி, இருந்த இடம் தெரியாமல் அழிந்து விட்டது. இத்தனையும் செய்தவள் ஒருத்தியே ஒருத்தி. தன் மூச்சிலிருந்தே வேடிக்கையாகத் தனக்கு ஒரு சைனியத்தை உண்டாக்கிக் கொண்டு இந்த அற்புத ஸாஹஸத்தை, அதிசய சாதனையைச் செய்து விட்டாள். எதற்காக? தேவரிடம் உள்ள கருணையால் தான். மற்றபடி அவளுக்கு எதனாலும் லாபமோ, நஷ்டமோ உண்டா? கருணை ஒன்றே காரணமாகக் கொண்டு யுத்த லீலையை நடத்தி விட்டாள்.

இதை எண்ணி அமரர்களின் இதயங்கள் நன்றியில் நனைந்தன; அன்பில் கரைந்தன; வணக்கத்தில் ஒடுங்கின.

அரக்கனிடம் ஏதுமே செய்து கொள்ள முடியாமல் கையாலாகாமல் கிடந்த தங்களைக் கை தூக்கிவிட்ட அம்மாவின் மகாசக்தியை எண்ணியவுடன், அவர்கள் கை தூக்கி வணக்கம் செலுத்துவது என்பதை வலிந்து செய்ய அவசியமிருக்கவில்லை. கனிகள் குலுங்கும் மரக்கிளை தானே வணங்கிக் குனிவது போல நன்றியுணர்வில் கனத்து அவர்களது தேகம் தானாகவே குனிந்து வணங்கியது.

அதே போதில் ஒரு பெருமிதப் பூரிப்பு! 'பெருமிதம்' என்பது சுயமாக ஏதோ சாதித்தால்தான் ஏற்படவேண்டும் என்பதில்லை. சுயமாக ஏதும் சாதிப்பதற்கே இல்லை என்று உணர்ந்து, அனைத்தையும் சாதிக்கும் அம்மாவின் அன்பில் அரவணைக்கப்பட்டு நிற்பதிலேயே தேவர்க்குப் பொல்லெனப் புளகாங்கிதம் ஏற்பட்டது. கழுத்து வணங்கும்போதே தோளும் தேகமும் சிலிர்த்தெழுந்தன. புத்தம் புது அழகொன்று இதுகாறும் சாம்பிக் கிடந்த தேவாதியரின் மேனியை

மெருகிட்டது. அந்த வணக்கமும், பூரிப்பும், மெருகுமே ஒன்றிழைந்து தோத்திர வாசகங்களாக வெளிப்பட்டன :

''மிகுதியின்றி சகல தேவகணங்களின் சக்தி சமூகமும் முறுகி மூர்த்திகரித்து உண்டாகி இதோ நிற்கிறாளே, இந்த தேவி, இவள் இப்போதுதானா உண்டானாள்? அல்ல. எந்நாளும் மாதேவரும், மாதவ முனிவோரும் எந்தப் பராசக்தியை வழிபட்டு வந்திருக்கிறார்களோ, எந்தப் பராசக்தியின் ஆற்றலாலேயே இப் பிரபஞ்சமனைத்தும் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, அவளே இப்போது இப்படி இங்கு வந்திருக்கிறவள். அவளுக்குப் பக்தி புஞ்சிதமாக அஞ்சலி செலுத்துகிறோம். அவள் எக்காலும் நமக்கு நல்லவே செய்வாளாக!

''இப்போது தெளிந்து நிற்கிற நாங்கள் எப்படிக் குழம்பிக் கிடந்தோம்? அசுரனா எங்களைக் குழப்பினான்? அவனிடம் உண்டான எங்களுடைய அச்சமே அல்லவா குழப்பியது? இந்த அச்சத்தை விட ஓர் அமங்கல வஸ்து உண்டோ? ஆஹா, உலகம் முழுவதும் எத்தனை விதமான பயங்களில் ஆழ்ந்து அசுபமயமாகி உள்ளது? இந்தச் சண்டிகை அபய ஸ்வரூபிணியாகப் பயத்தைப் போக்க திருஉளம் கொளவேணும்; இந்த மங்கள மாதா அகில உலகிலும் சுபம் பொலிவிக்கச் சிந்தை கொளவேணும். அப்படிச் செய்யும் மகிமையும் ஆற்றலும் வாய்ந்தவள் அவள் என இதோ கண்டோம். அம் மகிமையை, ஆற்றலை முற்றிலும் அறிந்தோத மும்மூர்த்தியர் முயன்றாலும் முடியாது.

''மாறுபட்டதை எல்லாம் வீறுகொண்டு ஒன்றுபடுத்தும் மகிமை அது. நற்செயலே புரிவோரிடம் சாக்ஷாத் லக்ஷ்மியாகப் பொலிவது அதுவே. அப்படிப்பட்டவர்களுக்குப் பொருட் செல்வம் பொருட்டல்ல. ஆனால் இவள் மனம் கொண்டால் அங்கு பொருளையும் பொழிவாள். ஆனால் அதனிலும் பெரும் செல்வம், அவர்கள் இப்படி நற்செயலிலேயே ஈடுபட்டிருப்பது தான்! இதுதான் சாக்ஷாத் லக்ஷ்மி — '**ஸ்ரீ ஸ்வயம்**'! அந்த இவளே துராத்மாக்களிடம் துர்நடத்தை எனும் தரித்திரமாக இருப்பவள். திருந்திய சித்தம் உடையவர்களின் இதயத்தில், அதாவது மனத்தில், புத்தியாக இருக்கிறாள். (பெரும்பாலும் மனம் வேறு, புத்தி வேறு என்றுதான் கூறப்படும். சரி-தப்பு பாராமல் வெறும் உணர்ச்சி உந்தலில் மனம் எதையும் நினைத்து விடுகிறது; பிறகு புத்தியைப் பிரயோகித்து சரி-தப்பைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியதாகிறது. அப்படியும் புத்தி வெல்லாமல், மனமே தன் போக்கில் போவதுதான்

பெரும்பாலும் உலக நடப்பு. ஆனால் அம்பிகையிடம் அடைக்கலம் புகுந்து சித்தத்தை சுத்தம் செய்து கொள்கிறவர்களின் மனத்திலேயே புத்தியாக அந்த ரஸவாதி எழுந்தருளி, நினைக்கும்போதே மனம் நியாயத்தில் நிலைநிற்குமாறு செய்கிறாள்.) நல்லவர்களுக்கு அகந்தை உண்டாகி அவர்கள் வழுவிவிடாமல், நல்லதிலேயே அவர்களுக்கு மேன்மேலும் சிரத்தையை அநுக்கிரகிக்கிறாள். நற்குலத்து உதித்த அடியார்க்கு குடிப் பெருமையால் செருக்கு ஏற்படா வண்ணம், 'அம்பாளின் முன் நாம் எம்மாத்திரம்?' என்கிற நாணத்தை, தவறான செயல் என்றாலே நடுங்கி ஓடுகிற நாணத்தை அருள்கிறாள்.''

இப்படிப் போற்றிய தேவர்கள், ''அம்மா, நீயே எதிர் நிற்க, 'அவள் அவள்' என்று படர்க்கையில் சொல்வானேன்? நாங்கள் என்னவெல்லாம் சொன்னோமோ, அத்தனை மகிமையுமான நின்னை நமஸ்கரிக்கிறோம். எங்களை மட்டுமின்றி விசுவம் முழுவதையும் பாலிப்பாய் தேவீ!'' எனக் கூறித் தொடர்கிறார்கள்:

''தேவீ! இதோ திகழும் நின் திருவுருவை எப்படி வருணிப்போம்? வருணிப்பது கிடக்கட்டும். இதனை உள்ளபடி சிந்திக்கவும் அறிந்திலம். உனது அதிவீர பராக்கிரமத்தையும், உன்னிடமிருந்தே வந்த தேவிகணங்களும் நீயுமாக அசுர கணங்களோடு செய்த யுத்த விசித்திரத்தையும் நாங்கள் எப்படி வர்ணிப்போம்? எப்படிச் சிந்தித்துப் பார்ப்போம்?

''சகல ஜகத்துக்களுக்கும் மூலம் நீ. இவ்வுலக வியாபாரம் அனைத்தும் முக்குணங்களாலே நடக்கின்றன. அந்த முக்குணங்களின் மூலமும் நீதான். ஆயினும் முக்குணங்களின் தோஷங்கள் உன்னைப் பற்றாவண்ணம் அவற்றைக் கடந்தும் நிற்கிறாய். ஹரி-ஹரர்களின் சிந்தனையையும் கடந்து அப்பாற்பட்டு இலங்குகிறாய். உன்னை ஆராய்ந்து எவரும் அறிய முடியாது. ஆனால் சரண் என்று வந்தால் அரண் தந்து அனைவருக்கும் புகலிடமாக விளங்குகிறாய். உலகெலாம் எதன் ஓர் அம்சத்திலேயே தோன்றியுள்ளதோ அந்த ஆதி நீயே! அதிலிருந்து வந்த இயற்கை நீயே! இயற்கையில் இத்தனை மாறுபாடிருப்பினும் மாறாத ஒன்றாக நிற்பவளும் நீ! நீயே உயர்வுக்கெல்லாம் உயர்வு!

''வேள்விகளில் வானவர் திருப்தியுறும் 'ஸ்வாஹா' என்ற உச்சாரணமும், பிதிரர் நிறைவுறும் 'ஸ்வதா' என்ற

உச்சாரணமும் நீதான் தேவி! உனையன்றி தெய்வங்கள் யார்? தாதையர், மூதாதையர் யார்?

''ஆளும் திறன், தர்மம், கீர்த்தி, செல்வம், வைராக்கியம், மோக்ஷம் ஆகிய ஆறு 'பக'ங்களின் உறைவிடமாம் பகவதி நீயே. சிருஷ்டி அனைத்துடையவும் தோற்றம், நீக்கம், வளர்ச்சி, தேய்வு, அறிவு, அறியாமை இவற்றை ஆக்கும் பகவதி நீதான். எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த சகல மக்களுக்காகவும் முக்திக்கு வித்தாக விதிக்கப்பட்டவை அஹிம்ஸை, சத்தியம், பிறர் பொருள் நயவாமை, புலனடக்கம், அத்தியாவசியத் தேவைக்கு அதிகமாக இம்மியும் கொள்ளாமை ஆகிய தர்மங்கள். இவை 'சாமானிய' தர்மம் எனப்பட்டாலும் சிந்திப்பதற்கே அரியனவா யுள்ளன. அங்ஙனமிருக்க இவற்றை அநுஷ்டிப்பது எங்ஙனம்? அநுஷ்டித்துவிட்டாலோ, இதுவே 'மஹா விரதம்' என்று ஏற்றம் தந்து போற்றப்படுகிறது. தர்மமயமான இந்த மஹாவிரதங்களே ஞான-பக்தி சாதனங்களுமாகும். இவ் விரதங்களும், பரஞான-பராபக்திகளும் நீயேதான்!

''மோக்ஷத்தில் ஒரே நாட்டத்தோடு இந்திரியங்களை அடக்கி, தத்துவங்களின் சாரங்களில் திளைத்து ஞானவழி செல்வோரில் பலர் தெய்வத்தை — அதன் கருணையை — நாடாமலும் இருப்பார்கள்: அதை ரசிக்க அறியாமல் இருப்பார்கள்! அவர்கள் தாமாக மோக்ஷம் பெறுவதாகத்தான் ஒருவித மயக்கத்தில், செருக்கில், அறியாமையில் இருப்பார்கள்! அவர்களுக்கு நிர்குண ஆத்மாவைத் தவிர, கருணைக்காகவே குணமாக ஆன தெய்வமும் அஞ்ஞான அவித்யைதான்! அவர்களுக்கும் ஞான மோக்ஷம் தருவது தெய்வம். ஞான மார்க்கிகளிலும் இவ்வாறு மயக்கம், அல்லது செருக்குத் தோஷம் இல்லாமல், 'தனது வழி' என்கிற அகங்காரப் பிடிப்பு அற்று) எல்லாக் குறைபாடுகளும் அறவே அற்றுப்போனோராக விளங்கும் முனிவர்கள்* சிலர் இருக்கவே செய்கிறார்கள். இவர்கள், (தானாக நடப்பது ஏதுமில்லை; இத்தனை ஒழுங்கோடு நடக்கும் உலகனைத்தும் உன் லீலையின் பிரகாசம். இதில் ஜீவர்கள் சம்சார வாய்ப்பட்டதும் உன் மாய லீலை. இதிலிருந்து அவர்கள் விடுபட்டு மோக்ஷம் எய்துவதும் உன் கருணாலீலையே! ஒழுங்கு தப்பாமல் இருந்தால் உலகில் உள்ளபோதே அதை சம்ஸார பந்தமாக எண்ணாமல் அழகையும் அன்பையும்

* ''முனிபிரஸ்த ஸமஸ்த தோஷை:'' என்று இவர்களை மூலநூல் கூறும். இந்நூலாசிரியருக்கு ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் நினைவுதான் அழுத்தமாக வருகிறது.

அநுபவித்துக் கொண்டு ஆனந்தமா யிருக்கலாம். இந்த ஒழுங்கும் அன்பும் ஆனந்தமும் அவித்யை அல்ல; இதுவே உன் ஞான விளக்கமாம் வித்யை.) நீயே வித்யா என உணர்ந்து, உன்னையே இடைவிடாமல் நாடுகிறார்கள்.

''அம்மா, கண்ணால் காணும் உரு மட்டும் தானா உனக்கு? காதால் கேட்கும் சப்தமும் நீ தான். சப்தங்களின் ஆன்மாவாகக் காதுக்கெட்டாமல், அகத்துக்குள் மட்டுமே தானாக ஒலிக்கும் கீதமாம் உத்கீத ஓங்காரமும் நீதான். சப்தமாக வரும்போது குறிப்பாக நிர்மல வாக்குகளான ரிக், யஜுஸ், ஸாம மந்திரங்களாகத் திகழ்கின்றாய்! மூன்று வேதங்களாக இருப்பதால் 'த்ரயீ' எனப்படுகிறாய்.

''பவம் என்னும் சம்ஸாரம் நடக்க வேண்டும் என்பதற்காகப் பலவித ஜீவனோபாயங்களாகி யிருப்பவளும் நீயே! பிழைப்பு என்று எண்ணி சம்ஸாரிகள் பிழை செய்து துன்பத்தை அடைகையில் அதை நீக்க வரும் அருட்தேவதையும் நீ தான்.

''மேதாவிலாஸம் அனைத்தும் நீ! சகல சாஸ்திர சாரத்தையும் அறிந்த அறிவு உனதே! ஆனால் இதல்ல உன் விசேஷப் பெருமை; கடத்தற்கரிய சம்ஸார சாகரத்திலிருந்து ஜீவரைக் கடத்துவிக்கும் நாவாயாக நீ இருக்கிறாயே — அதனால்தான் நீ துர்காதேவி எனச் சிறப்பாகப் பெருமை பெற்றிருக்கிறாய்! விஷயப்பற்றினால் இந்தப் பிறவிக்கடலில் முழுகிக் கொண்டிருப்பவர்களுக்குப் பற்றின்மை என்ற படகாக வந்து அக்கரை சேர்க்கிறாய்! கைடபனைக் கொன்ற ஸ்ரீமானின் இதயகமலத்தில் இருக்கை கொண்ட ஸ்ரீ நீதான்! அவனது இதயம் முதலிய அங்கங்களிலிருந்தே நீ தாமஸீ தேவியாக, மகாகாளியாக வெளி வந்து இதனை நிரூபித்தனையே! விஷ்ணுசக்தி மட்டும்தானா? சகலரின் சக்தியும் நீ தான். பிறை சூடிய பெம்மானின் இடம் முழுவதையும் வௌவிக் கொண்ட ஸத்வ கௌரியும் நீ.

''இந்த ஸத்வத்தின் வெண்மலர்ச்சியினையே உன் பரிசுத்தப் புன்முறுவலில் பொங்கவிட்டனை! ஆஹா, அந்த தூய நகை திகழ்ந்த போது உன் பொன் முகம் பூரணசந்திரனாகவே காந்தி பிலிற்றியது. இந்த அன்பு முகத்தை மகிஷனும்தான் கண்டான். கண்ட பின்னும் அவன் வெஞ்சினத்துடன் அதைத் தாக்க வந்தானே! அதியற்புதம் அம்மா உன் மாயப்பிரபாவம்!

''பிறகு இந்த அன்பின் வெண்மையை மாற்றிக் கொண்டு நீ கோபத்தில் சிவந்தனை. அப்போது உதயசந்திரனெனச் செவ்விய பூச்சுக் கொண்டு அச்சம் விளைவிப்பதாயிற்று உன் திருமுகம். உன் புருவ நெருப்பில் கொடுமை கொந்தளித்தது. முன்பு அன்பில் ஆகர்ஷிக்கப்படாத அவுணன், இப்போது உன் அணுக்கத்தில் நேருக்கு நேர் நின்றும் இந்தப் பயங்கரத்தில் உடனே உயிரிழக்காமலிருந்தானே! இது முன்னிலும் விந்தையடி தாயே! கோபித்து வந்த யமனைக் கண்டபின்னுமா ஒருவன் உயிர் பிழைத்திருக்க முடியும்!

''அம்மா! அச்சமூட்டும் அந்த உன் ஆத்திரவேகத்தை இப்போது நாங்கள் நினைவு கொள்ள வேண்டாம். அதை நினைக்க வொட்டாமல் உன் பிரஸன்ன ரூபத்தை நினைப்பதையே பிரஸாதமாக அருள்வாய்! உன் கோபத்தை நாங்கள் தவறாக எடை போட விடாதே! எங்களைப் போலச் சொந்த துவேஷத்தாலோ, ஆசாபங்கத்தாலோ உண்டாவ தல்லவே உனது கோபம்? லோக க்ஷேமார்த்தமாகவே உண்டாவதல்லவா உன்னுடைய கோபம்! உடனே லோகத்துக்கு க்ஷாமம் விளைத்த குலத்தையே சம்ஹரித்து விடுகிறாய். மகிஷசேனையைவிட இதற்கு எடுத்துக்காட்டு வேண்டுமா?

''உன் கோபத்துக்கு ஆளானவர் கதி இதுவெனில், உன் பிரீதிக்குப் பாத்திரமானவர்களையோ எப்போதும் பேரின்ப எழுச்சி தந்து பலவிதத்தில் அநுக்கிரகிக்கிறாய். அவர்களை ஜன சமூகம் முழுதும் மெச்சச் செய்கிறாய். அவர்களுக்குச் செல்வமும் கீர்த்தியும் சேர்க்கிறாய். அவர்களது தர்மபலம் என்றும் குறையாமல் பார்த்துக் கொள்கிறாய். மனைவி, மக்கள், பணியாட்களுடன் அவர்கள் தன்யர்களாக வாழ்கிறார்கள். (தேவர்கள் போகப்பிரியர்களாக ஸ்வர்க்க வாசத்தையே விரும்பியபடியால் இங்கு அம்பாளின் அருள் பெற்றவர்கள் அடையும் லௌகிக சம்பத்துக்களை விசேஷித்துப் பேசுகிறார்கள். இவற்றுக்கு மிக மிக மேலாக, ஞானமே அம்பாள் தரும் மகாப் பிரஸாதம்.)

''உன்னருளால் நல்வாழ்வு அடைந்தவன், தர்ம வழியிலேயே மிகுந்த ஈடுபாடு கொண்டு இடைவிடாமல் நாள்தோறும் அறப்பணிகளை ஆற்றுகிறான். அதனால் ஸ்வர்க்கத்தை அடைகிறான். மூவுலகிலும் இவ்விதமாகப் பலன் தருபவள் நீயே.

(சுவர்க்கமும் போக்கிய பூமிதான். தேவர்கள் அதைப் பெரிதாகக் கருதினாலும் பக்தரும் ஞானியரும் இந்த இந்திரிய போகங்களைக் குப்பை என ஒதுக்கவே செய்வர். பக்தனைப் பொருத்தமட்டில் இந்திரிய போகங்கள் இறைவனின் லீலையை ரசிக்கவொட்டாமல் தடுக்கும் கறுப்புத் திரையே. ஞானிக்கோ, அது ஆத்ம சாக்ஷாத்காரத்தைத் தடுக்கும் மாயப்படுதா போலாகும்.)

''அம்மா! கடக்கவே இயலாது என்று கருதப்படும் கஷ்ட நிலையில், உன்னை ஸ்மரித்து விட்டால் போதும், உடனுக்குடன் அந்தக் கலக்கத்தை விரட்டி விடுகிறாய்; பிறகு கஷ்டத்தையும் கடிந்து விடுகிறாய். நல்ல நிலை வந்தபோது ஸ்மரித்தாலோ, எந்நாளும் இந்நிலை தக்குவதற்குப் பாத்திரமாக உத்தமமான மங்கள சித்தத்தை அவர்களுக்கு அளிக்கிறாய். சகலருக்கும் உபகாரம் புரிவதற்கென்றே சதா சர்வகாலமும் கருணையில் ஊறி நனைந்து உருகிய நெஞ்சோடு கனிந்து நின்று வறுமை, துயரம், அச்சம் இவற்றைக் களைந்தெறிகிறவர் உன்னையன்றி எவருண்டு தாயே?

''இன்று இந்த சம்ஹாரத்தால் உலகு இன்புற்றது. சம்ஹரிக்கப் பெற்ற அஸுரரும் இன்புற்றனர். அவர்கள் தாங்களாக மரித்திருந்தாலோ, வேறு விதத்தில் மாண்டிருந்தாலோ தங்களது பாபத்துக்குப் பலனாக நரகுக்கே சென்று இடர்ப்பட்டிருப்பர். ஆனால், 'நரகவாசத்துக்கே உரியராகுமாறு இவர்கள் பாபம் செய்திருந்தாலும் பரவாயில்லை; இவர்கள் என்னால் உயிரை இழந்து திவ்விய லோகமே செல்லட்டும்' என்று நீ எதிரிகளிடமும் கிருபை கொண்டு அவர்களை சம்ஹரித்திருக்கிறாய்!

(இங்கு திவ்விய லோகம் என்பதை தேவலோகம் எனக் கொள்வதற்கில்லை. வானவர்க்கு தேவருலகை மீட்டுத் தந்த தேவி அங்கேயே அசுரருக்கும் இடம் தந்தாள் என்பது பொருந்தாது. தேவ லோகத்துக்கும் மேம்பட்ட சத்தியலோகம், வைகுந்தம், கைலாயம் போல் அம்பாளுக்குரிய லோகமான அமிருதசாகர மணித்தீவை 'திவ்விய லோகம்' என்று கருதலாம். ஒரு ஜீவனானவன் தானாகத் திருந்துவதற்கு வாய்ப்பின்றி பகவதியோ பகவானோ அவனை வதைக்கும்போது, இதற்கு ஈடுசெய்வதற்கு அதிகமாக அவனுக்குத் துவைத ரீதியில் தன் சொந்த லோகத்தையோ, அல்லது அத்வைத மோக்ஷலோகத்தையோ தந்து விடுவதாகக் கொள்ளலாம்.)

''தாயே! நீ பார்த்த மாத்திரத்திலேயே அசுரரை புஸ்மமாகப் பொசுக்கியிருக்க முடியுமே! அப்படியிருந்தும் ஆயுதம் கொண்டு போர் செய்தனையே, ஏன்? உனக்கு அந்த ஆயுதங்களைத் தந்த அடியேங்களைப் பெருமைப்படுத்தும் உதார எண்ணத்தால் தானே? 'உன் கைபட்ட அந்த தேவப் படைக்கலங்கள் அசுரர் உடலில் படுவதே அந்த நீசர்களைச் சுத்தீகரிப்பதாகும்; அந்த சஸ்திரவிசேஷத்தால் அவுணரும் நற்கதி அடைவர்' எனப் பரம காருண்யசாலியான நீ எண்ணினாய். ஆயின், அக் கலங்களுக்கு அப்படியொரு மகிமை இருந்ததெனில் அதுவும் உன்னால் வழங்கப்பட்டதே அல்லவா?

''உன் வாளிலிருந்து எழுந்த ஒளிக்கற்றையும், சூலத்திலிருந்து எழுந்த காந்திப் பெருக்கும் அசுரர் கண்களைப் பறிக்கவில்லை என்பதற்குக் காரணம், சீத கிரணம் கொண்ட உன் மதிவதனத்தை அவர்கள் இடையிடையே கண்டதுதானே?

''தேவீ! நீ செய்த அஸுர ஸம்ஹாரத்தை நாங்கள் வேண்டுமாயின் அருஞ்சாதனையாக எண்ணிப் போற்றலாம். ஆனால் உனக்கோ தீயோரின் போக்கை ஒடுக்குவதே இயற்கையாக அமைந்து விட்டது. ஏனையோருக்கு எண்ணவும் ஒண்ணாததாய் ஒப்பற்றதாய் விளங்கும் உன் ரூப சம்பத்தும் அவ்விதமே உனக்கு சகஜமாக உண்டானது. தேவரின் வலிமையை நலிவிப்போரை அழிக்கிற வீர்யமும் அவ்வாறே உன் சுபாவம். ஆனால் இதில் நாங்கள் புதிதாகத் தெரிந்து கொண்டது சத்துருக்களிடமும் உனது தயை பிரகடனமானதே ஆகும்! ஆம், ''கொல்லப்படுவோர்க்கும் உயர்கதி அளிக்கும் உன் அருட் பராக்கிரமத்துக்கு சமதை எங்கும் இல்லை. அடியாரை வசீகரிக்கும்போதே கொடியோரை அச்சுறுத்தும் உன் திருஉருவ விசேஷத்துக்கும் ஈடு இணையில்லைதான். தேவர் தரப்பிடம் மட்டுமின்றி, எதிரியின் தரப்பிடத்தும் கிருபாமயமாக இருந்து கொண்டே நீ கடும்போர் செய்த அற்புதத்தை மூவுலகிலும் உன்னையன்றி எவரிடமும் காண்பதற்கில்லை. (ராம லீலா, சூரஸம்ஹாரம் முதலிய விழாக்களில் இன்றும் ராவணன், சூரபத்மன் முதலான அசுரரை வதைத்து மகிழ்கிறோம். ஆனால் அம்பாள் ஸம்ஹரித்த மஹிஷனையோ அவளுடனேயே வைத்து அவனுக்கும் அல்லவா பூஜை செய்கிறோம்? இவ்வாறு விதி செய்ததும் அவளது அபார கருணை தானே?)

''சத்துரு நாசத்தால் மண்ணுலகையும் பொன்னுலகையும் காத்ததோடின்றி அசுரர்க்குரிய பாதாள உலகையும் காத்து

விட்டாய். எவ்வாறெனில் பாதாளத்தை அவர்களிடமிருந்து விடுவித்து, அவர்களையும் உனது திவ்விய லோகத்துக்கு அல்லவா அனுப்பி வைத்திருக்கிறாய்?

''அம்மா, எங்கள் நன்றியைக் குறிப்பாகச் சொல்லிக் கொள்கிறோம்! கனத்த எங்கள் நெஞ்சை லேசாக்கினாய்! அஞ்சித் தவித்த எங்களை ஆறுதல் கொள்ளச் செய்துவிட்டாய்! உனக்கு வணக்கம், வணக்கம்.

''அம்மா, இன்று போல் என்றும் எமைக் காப்பாய்! உன் கையில் தாங்கிய சூலாயுதத்தால் காப்பாய்! நாற்றிசையும் அந்தத் திரிசூலத்தைச் சுழற்றிச் சுழற்றி எங்கிருந்தும் எமைத் தீமை தீண்டாத வண்ணம் ரக்ஷிப்பாய்! உன் வாள் எமைக் காக்கட்டும்! உன் கண்டாமணியின் கணகண நாதத்தால் எங்களை உற்சாகப்படுத்திக் காப்பாற்றுவாய்! உனது வில் நாணை ஜங்காரம் செய்து எழுப்பும் கர்ஜனை ஒலி எங்களை வீறு கொள்ளச் செய்து காக்கட்டும். சண்டிகே! திரிலோகங்களிலும் எத்தனை எத்தனை அழகுகளாக நீ உருக் கொண்டிருக்கிறாயோ அத்தனையாலும், எத்தனை அதிகோர வடிவங்கள் கொண்டுள்ளாயோ அவற்றினாலும் எங்களைக் காப்பாற்று! உலகையும் காப்பாற்று!

''தேவி, உன் தளிர்க்கரங்கள், அவற்றுக்குப் பொருத்தமில்லாமல் அவை தாங்கும் வாள், சூலம், கதை ஆகியன அழகும் கோரமுமாகப் பொருந்தி எமை எவ்விடத்தும் காக்க அருள் புரிவாய்!''

அம்பிகை அசுரரைப் பார்த்த மாத்திரத்திலேயே பொசுக்கியிருக்கலாம்; ஆயுத பிரயோகமே அவளுக்கு அவசியமில்லை என்று முன்பு இதே தேவர்கள் பாடினர். பார்வைகூட எதற்கு? சங்கல்ப மாத்திரத்திலேயே எதையும் சாதிக்கவல்லவள் அவள் என்பதில் சம்சயம் இல்லை. ஆயினும் இங்கோ அதே அமரர்கள் விதவிதமான ஆயுதங்களைச் சொல்லி அவற்றால் ரட்சணை தர வேண்டுமெனக் கோருகின்றனர். காரணம் இதுதான்: ஜீவராசிகளுக்குச் சங்கற்ப மாத்திரத்தில் காரியம் சாதிக்கிற திறன் இல்லை. அவை உயிர் வாழ எத்தனையோ உபகரணங்கள் தேவையாக உள்ளன. வயிறு நிறைவதற்குப் பலவித உணவு உபகரணங்கள்; மனம் நிறைவதற்குப் பலவிதக் கலை உபகரணங்கள்; ரட்சணைக்கு ஆயுத உபகரணங்கள் — என்றிப்படி வேண்டியிருக்கின்றன. இவை ஜீவனுக்கு அத்தியாவசியமாக இருப்பதால் இவன்

தன்னையும் அறியாமலே இறைவனுக்கும் இவற்றை அத்தியாவசியமாக எண்ணி விடுகிறான். தன்னுடைய சரீரம் என்ற உபகரணத்தையே தானாக எண்ணுகிற இவன், இறைவனுக்கும் சரீரம் இருக்க வேண்டும் என்று எண்ணுவதிலிருந்து இது தொடங்குகிறது. பிறகு, அந்த உடல் படைத்த கடவுளுக்கும் கைகளில் காப்பு ஆயுதம் தருவது, தனக்குச் செய்து கொள்வது போலவே நிவேதனமாக ஆகாரம் படைப்பது, என்றுமே நிறைந்த அந்த மஹா மனத்தை இவன் புதிதாக நிறைவிப்பதாக நினைத்து ஏனைய கலைகளை எல்லாம் கலந்து பூஜை செய்வது என்றிப்படி வெகு விரிவாகச் செல்கிறது இந்த பாவனை. இதை வேடிக்கை என்று சொல்லலாம் என்றால் இதைவிடப் பெரிய வேடிக்கை, எதற்கும் கட்டுப்படாத கடவுளோ, கருணையால் இவனது பாவனைக்குக் கட்டுப்பட்டு மெய்யாகவே உருவம் தரிக்கிறார்; ஆயுதம் தரிக்கிறார்; இவன் செய்கிற வழிபாட்டை ஏற்கிறார்; தானும் இவனைப் போலவே பல காரியங்களை உபகரணங்கொண்டு செய்கிறார். தன்னைப் போல இவனை ஆக்குவதற்காக முதற்படியில் தானே இவனைப் போல ஆகிறார்!

ஆயுதங்களுக்கு இன்னொரு விசேஷமும் உண்டு. அவை தத்வச் சின்னங்களாக உள்ளன. சக்கரம் என்பது காலதத்வம், சங்கம் என்பது நாதம், கதையே இச்சா சக்தி, மலர் புலனைக் குறிப்பது, வில் மனத்தின் சின்னம், வாள் ஞானத்தின் உருவம் — இப்படியே ஒவ்வோர் ஆயுதமும் உருவகமாக உள்ளது. அதோடு கூட, தளிர்க்கையில் குரூரச் செயல்புரியும் கடினமான படைக் கலங்கள் இருப்பது பொருத்தமல்ல என்றாலும், இவ்வாயுதங்கள் செய்யப்பட்டுள்ள செய்நேர்த்தியையும் அவற்றின் பளபளக்கும் மெருகையும் பார்க்கும்போதோ இவையே கலைப் பண்டங்களாகி, தாங்கும் தளிர்க்கரத்துக்கு அலங்காரமும் ஆகின்றன. உலகம் முழுதையும் தெய்வம் வியாபித்திருக்கிறது என்று காட்டப் பல கரங்களை வட்டமாக வளைத்து வைத்துக் கொண்டுள்ள சிற்பங்கள் எத்துணை உதவி புரிகின்றன? இந்தக் கரங்களை வெறுமே விட்டு வைக்காமல் அங்கே தத்வ சின்னங்களாகவும் எழில் அணிகளாகவும் ஆயுதங்கள் ஏறி வீற்றுவிடுகின்றன. இல்லாவிடில் இவ் வரலாற்றுப் பிரதம சரித்திரத்தில் தோன்றிய மகாகாளி ஒரு செயலுமே புரியாமல், விஷ்ணுவிடமிருந்து விலகியதோடு நின்றுவிட்ட போதிலும் அவளுக்கு ஏன் பத்துக் கரங்களும் அவற்றில் படைக்கலங்களும் இருக்க வேண்டும்?

★ ★ ★

வானவர் வாக்குமலரால் அம்பாளை அர்ச்சித்ததோடு நின்றுவிடவில்லை. வானுலக நந்தனவனத்தில் புஷ்பித்த மலர்களைக் கொண்டுவந்தும் அர்ச்சனை புரிந்தனர்.

சூரபத்மன், ராவணன் முதலியவர்கள் தங்கள் நகரான வீரமகேந்திரம், லங்கை முதலியவற்றில் வதைக்கப்பட்டாற் போலின்றி மகிஷன் தேவலோகத்திலேயே வதைக்கப்பட்டான் என்றுதான் தோன்றுகிறது. 'மகிஷன் இந்திர பதவி எய்தான். அப்போது தேவர்கள் சிவனும் திருமாலும் உள்ள இடத்திற்கு(ச் சென்று) பிரார்த்தித்தனர். அங்கேயே அம்பிகை ஆவிர்பவித்தாள். அவள் சிம்மத்தின் மீது ஆரோகணித்துச் சென்று போர் கர்ஜனை புரிந்தாள். உடன் அங்கு மகிஷன் படையுடன் வந்தான்' என்றே மான்மியம் கூறுகிறது. இந்திரப் பதவி எய்த மகிஷன் தேவலோகத்திலேயே அசுரருடன் இருந்தான் என்றே தோன்றுகிறது. சிவனாரும் திருமாலும் சேர்ந்து இருந்த இடம் எது என மான்மியம் தெரிவிக்கவில்லை.

பாகவதப்படி, வைகுண்டத்துக்குப் பரமேசுவரன் வந்ததாகவும், அங்கேயே சகலதேவ தேஜோராசியான அம்பிகை ஆவிர்பவித்ததாகவும் கூறப்படுகிறது. மகிஷனைக் கடைசியில் அவள் விஷ்ணுவின் படைக்கலமாகிய சக்கரத்தால் வதைத்தாள் என்று இது கூறுவதற்குப் பொருத்தமாக, மகாலக்ஷ்மியான அவளது அவதாரமும் விஷ்ணு லோகத்தில் தான் நடந்திருக்கிறது. இங்கிருந்து அவள் வீரகர்ஜனை புரிய உடனுக்குடன் அதைக் கேட்டு அசுரர் அங்கு முதலில் தூது வருகின்றனர்; பிறகு போர் புரிகின்றனர். விண்ணிலேயே தேவலோகத்தை ஒட்டி வைகுந்தம் இருந்ததாகவும், தேவலோகத்தில் வாசம் செய்த அசுரர் தேவியின் உறுமலைக் கேட்டு உடன் அங்கு வந்தனர் என்றும் கொள்ளலாம்.

அசுரர் மாய்ந்தவுடனேயே தேவர்கள் தம் நாடு திரும்ப முடிந்தது. ஆனால் அவர்கள் அங்கு செய்த முதற்காரியம் தேவேந்திர பட்டாபிஷேகம் அல்ல. இந்தப் பட்டாபிஷேகத்தைச் சாத்தியமாக்கிய ஜகன்மாதாவுக்காகத் தங்கள் நந்தனவன மலர்களைத் திரட்டுவதே அமரர்கள் மீளப் பெற்ற பொன்னாட்டில் செய்த முதல் காரியம் — பொன்னான காரியம்! நன்றியைவிடப் பொன்னான பண்பும் உண்டா?

முன்பு ஒருமுறை இவர்கள் வெற்றி விழா என்ற பெயரில் வெறி விழாக் கொண்டாடி, பிறகு அந்த இறுமாப்புக்குத் தண்டனையாகப் பதரினும் அசக்தரானதையும் அப்போது

ஞானாம்பிகை இவர்களைக் கைதூக்கி விட்டதையும் ஸாமவேத உபநிஷதம் சொல்கிறது. இப்போது நல்லறிவு பெற்றுவிட்டனர். வெற்றி விழாவுக்குப் பதில் நன்றி விழா எடுத்து விஜயலக்ஷ்மி யான பராம்பிகையை ஆராதிக்கின்றனர்.

''ஸப்தசதீ'' மேற்கொண்டு சொல்கிற விரிவான அம்பிகை பூஜையைப் பார்த்தால் தேவர்கள் அவளை இந்திர சபையான சுதர்மையிலேயே எழுந்தருளச் செய்து வழிபட்டனர் என்று தோன்றுகிறது. இரண்யனின் அரியணையில் நரஹரியே முதலில் வீற்று புனிதப்படுத்திவிட்டுப் பிறகு பிரஹ்லாதனுக்கு அதை அருளியதாகக் கூறுவதுபோல், சிம்மத்தை ஆசனமாகக் கொண்ட ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேச்வரி, மகிஷன் நடுவே களங்கப் படுத்தியிருந்த இந்திர சிம்மாசனத்தில் தானே வீற்று தேவாதியரின் பூஜையை ஏற்றுப் பின்னர் அதை வாசவனுக்கு நல்கினாள் என்று நாம் கொண்டாலும் அம்பிகை ஏற்பாள்.

வாசவாதி தேவர் அம்பிகைக்கு வாசனைத் திரவியங்கள் பூசியும், தூப தீபாதிகள் காட்டியும் பாங்குறப் பூஜை செய்தனர்.

அவளுக்கு யார் என்ன செய்து என்னாக வேண்டும்? ஆயினும் குழந்தைகளுக்கு நன்றி, அன்பு என்ற நல்லுணர்வுகள் இருக்கின்றன; அவர்கள் சமர்த்தாகி இருக்கிறார்கள் என்பதில் அவளுடைய இயல்பான ஆனந்தம் இன்னும் அதிகமாயிற்று. இயல்பாகவே அவள் சுமுகி. இப்போது 'பிரஸாத ஸுமுகி' யானாள். ஆனந்தத்தில் தெளிந்து அலர்ந்து பிரசன்னமாக இருப்பதே பிரசாதம். இந்தக் காட்சியே அடியார்க்கும் மகாப் பிரசாதம்.

தன் திவ்விய நேத்திரங்களால் அத்தனை தேவர்களையும் துழாவித் துழாவிக் கடாட்சித்தாள்.

பிறகு செப்புவாய் திறந்து செப்பினாள்: ''தேவ கணங்காள்! உங்களது விருப்பம் எதுவாயினும் அதை என்னிடம் வரமாகக் கேட்டுப் பெறுங்கள்.''

எப்பேர்ப்பட்ட கருணை!

வரம் வேண்டும் என்று இவர்கள் கேட்கவில்லை. மகிஷனை வதைத்ததே மகா பெரிய வரம்தான். அதுவும் போதாது என்று தானாகவே மேலும் வரம் தர முன்வருகிறாள்!

அல்லது மகாமாயை பரீட்சை பார்க்கிறாளோ? அவர்கள் எப்பேர்ப்பட்ட வரம் கேட்கிறார்கள் என்பதிலிருந்து உள்ளூர

அவர்கள் 'எப்படியிருக்கிறார்கள் என்று வெளிப்படுத்தி விடலாம் அல்லவா? அவர்களுக்குள் என்னென்ன ஆசைகள், பேராசைகள், துராசைகள் ஒண்டிக் கொண்டிருக்கின்றன என்று உலகம் காணச் செய்து விடலாம் அல்லவா?

தேவர்கள் இப்போது மெய்யாக, உள்ளூரவே சமர்த்தாகி விட்டனர். ''அம்மா, பகவதீ! மகிஷவதை மூலம் எங்களுக்கு வேண்டுவதெல்லாம் ஏற்கனவே நீ செய்து முடித்துவிட்டாய்! இனி நாங்கள் வேண்டிப் பெற ஏதுமில்லை. ஆயினும் நீயாக வரம் தரக் கிருபை கூர்ந்தபடியால் இப்படி வேண்டுகிறோம்: இப்போது எங்களுக்கு ஏற்பட்ட பேராபத்தைத் துடைத்தெறிந்தாய் அல்லவா? இனியும் எங்களுக்குப் பேரபாயங்கள் ஏற்படும்போதெல்லாம் உன்னையே நாங்கள் ஆழந்து நினைக்குமாறு அருளவேண்டும். அவ்விதம் ஆழ, ஆழ ஸ்மரிக்கும் போதெல்லாம் நீ தோன்றி இடர் களைந்திட வேண்டும்.''

அம்பாளையே நினைத்துக் கொண்டிருந்தால் ஆபத்தே தெரியாது. ஆனால் தேவருக்குத் தெரியும், சதாகாலமும் அத்தகைய பக்குவமானது உல்லாச ஜீவிகளான தங்களுக்கு சித்திக்காது என்று. 'அவளை மறந்தும் விடுவோம்; அதனால் அபாயமும் வரும்; ஆனால் அந்த இன்னல் காலத்திலாவது அவளது நினைவு கன்னலாக வர வேண்டும்' என்று அந்தரங்க சுத்தத்தோடு பிரார்த்திக்கிறார்கள். சாமானிய மக்கள் ஆபத்தில்தான் தெய்வத்திடம் ஆழந்த பற்று வைக்க முடிகிறது. அதை அகற்றுவதிலேயே தெய்வத்தின் அருள் வேகத்தையும் நன்கு அநுபவிக்க இயலுகிறது. இதனால்தான் குந்திதேவி கண்ண பெருமானிடம், 'எனக்கு விபத்துக்கள் உண்டாகிக் கொண்டேயிருக்க அருள்வாய்' என்றாள். ஆபத்துக் காலத்தில் பகவானை நினைக்கிற அளவுக்கு ஆபத்து தீர்ந்தபின் அதனைத் தீர்த்து வைத்த அவனை நன்றியோடு நினைக்க முடியவில்லைதான். இந்தப் பொதுவழக்குக்கு விரோதமாக, தேவர்கள் இப்போது இடர் களைந்த பரஞ்சுடரை நன்றியோடு நினைந்து உருகுகிறார்கள். என்றாலும், இதே பக்குவம் நீடிக்காதோ என்ற நியாயமான ஐயத்தால் இப்போதே பின்வரக்கூடிய இன்னலையும் நினைத்து இப்படி வரம் வேண்டுகிறார்கள். இங்கே ''இனியும் இடர்களைய வேண்டும்'' என்பதல்ல முக்கியமான வரம் — அதைப் பிரார்த்தித்தோர் பொருட்டு அவளாகவே செய்துவிடுவாள். இடரில் அவளை ஆழந்து நினைக்கவேண்டும் என்று வேண்டியதே முக்கியமான

வரம். இதனால்தான் வெறுமே 'ஸ்மரித்து' என்று சொல்லாமல் மேத முனிவர் 'ஆழ்ந்து ஸ்மரித்து' என்கிறார்! அதுவும் ஒருமுறை போதாது என்று இரு முறை கூறுகிறார் — **''ஸம்ஸ்ம்ருதா, ஸம்ஸ்ம்ருதா''.**

சமர்த்தாகியிருந்த தேவர்களுக்கு இவ்வாறு தங்களுக்காக மட்டும் வரம் கேட்டுக் கொண்டது நிறைவு தரவில்லை. அகிலாண்ட ஜனனியின் அருளில் திளைத்திருந்ததால் அவர்களுக்கு தேவஜாதியிடம் மட்டுமின்றி அகில ஜீவராசிகளிடமுமே ஓர் ஒட்டுதல் உண்டாகியிருந்தது. இதனால்தான் முன்பு அவளைத் துதித்தபோது தொடக்கத்திலேயே, 'இந்த மங்கல மாதா அகில உலகிலும் சுபம் பொலிவிக்கச் சிந்தை கொள்ள வேணும்' எனப்பாடினர். பிற்பாடு தங்களது பரம சத்துருக்களான அவுணர்களை அவள் திவ்வியலோகத்தில் சேர்ப்பித்ததையும் மனமாரப் பாராட்டித் துதித்தனர்.

அந்தத் துதியில் திகழும் அகிலம் தழுவும் அன்பு அவளது அருட்கொடையே என்று உணர்ந்தனர். அத்துதியின் பொருள் மட்டும்தானா? சொல்லும் அவள் தந்ததே, இல்லாவிடின் இத்தகைய உத்தம சுலோகங்களைத் தாங்கள் எப்படி யாத்திருக்க முடியும் என உணர்ந்தனர். தாங்கள் செய்தது போன்ற, ஆனால் ''அவள் உரை தமது உரையான'' அந்தத் துதிக்கே உலகம் தழுவுகிற அருளை வருவிக்கும் ஆற்றல் இருக்க வேண்டும் என இரண்டாவது வரம் கேட்டனர்:

''அம்மா! நாங்கள் செப்பிய இத் தோத்திரத்தால் எந்த மனிதன். உன்னைத் துதித்தாலும் அவனுக்கும் எமக்கு அருள் சுரந்தாற்போலவே கருணை பாலித்துச் செல்வம், சுபிட்சம், புகழ், மனை, மக்களாதி சம்பத்துக்களை வளர்ந்தோங்கச் செய்வாயாக!''

தங்கள் நலனை மட்டுமின்றி, உலக நலனையும் முன்னிட்டு அவர்கள் வேண்டியதில் விசுவமாதா பரமப் பிரீதி அடைந்தாள். தனக்குச் செய்கிற பூஜைகளில் எல்லாம் மகாபூஜையாக அவள் கருதுவது பரோபகாரச் சிந்தனையைத்தானே?

''அப்படியே ஆகட்டும்'' என்று உளம் நிறைந்து வாயாரக் கூறினாள்.

அந்தர்தானமும் ஆகிவிட்டாள்!

அவதார காரியம் ஆயிற்று. அதோடு இனிமேல் பல அவதாரங்கள் எடுப்பதற்கும் வரம் தந்தாகிவிட்டது. ஆபத்து வந்த காலமெல்லாம் வருவதாக வரம் கொடுத்து விட்டாளே! அவதாரப் பணி முடிந்தது என்ற உடனேயே பரம மங்கள ஜோதி ஸ்வரூபமான திருஉருவினை அநாயாசமாகக் கரந்து விட்டாள்.

மகிஷமர்த்தினி அவதார காரியம் முடித்த பின் எங்குற்றாள் என்று ஜனமேஜய மன்னன் வியாஸமுனிவரை வினவுகிறான் — தேவீ பாகவதத்திலே. அமிருதக் கடலின் நடுவே உள்ள மணித்தீவே தேவியின் திருநாடென்றும், ஆங்கு சென்றனள் என்றும் வியாசர் கூறுகிறார். மேதமுனிவரோ அந்தர்தானமாயினள் என்றே சொல்வார். சகலத்துக்கும் உள்ளும் புறம்புமானவள் ஒருவடிவம் தாங்கி வெளிப்பட்டுப் பணியை முடித்த பின் புறத்தே அறிய முடியாதபடி அனைத்துக்கும் உள்ளுக்குள்ளேயே கரைந்து விடுவதுதான் அந்தர்தானம் என்று இங்கு பொருள்கொள்ளலாம்.

இவள் மறுபடி வெளிவந்த புண்ய சரிதத்தை இனி பார்ப்போம். உள்ளது உள்ளபடி இவ்வரலாற்றை உரைக்கப் போகிறாராம் மேத முனி!

லயம்:

ஸரஸ்வதி என்னும் ஸர்வ ஸத்தியம்

1. வெண்மை வடிவாம் உண்மை நாயகி

காலச் சகடம் சுற்றிக் கொண்டேயிருந்தது. அதில் துயரங்கள் இன்பங்கள் எல்லாம் தலைகீழாக மாறின. தெளிந்த அறிவுகள் மீண்டும் தடுமாற்றத்துக்கு ஆளாயின. உல்லாச போக வாழ்வில் ஈடுபட்ட தேவர்கள் எத்தனைக் காலம் மிகையான சபலத்துக்கு ஆட்படாமல், தர்மத்துக்குக் கட்டுப்பட்டே இன்பம் துய்க்க முடியும்? கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் தறிகெடலாயினர்.

ஆபத்தே வராமல் காக்க வேண்டும் என்று இவர்கள் அன்னையைப் பிரார்த்திக்கவில்லை! 'ஆபத்து நேரிடும்போது உனை நினைக்கச் செய்; நீயே வந்து துயர் துடை' என்றுதான் வேண்டினர். எக்காலமும் — ஆபத்து இல்லாதபோதிலும் — அவளை ஸ்மரிக்கும் பேற்றை இவர்கள் கோரவில்லை. லீலா விநோதினியும் மாயா விலாஸினியுமான பரதேவதை இவர்கள் கேட்காத வரத்தைத் தானாக இவர்களுக்கு நல்கவும் இல்லை. 'கேட்டதற்கு அதிகமாக நீ ஏன் வரம் தரவில்லை?' என்று அவளைக் கேட்க நமக்கு ஏது தகுதி? கேட்டதையே தரக்கூட அவள் பிகு செய்யலாம். அது அவள் இஷ்டம். எப்படி வேண்டுமாயின் நாடகம் இயற்றிப் பார்க்க அவளுக்குப் பூரண உரிமையும் உண்டு. நடிப்பவர் அனைவரும் அவளுடைய திவலைகளேதான் என்னும்போது அவர்களை அவள் எப்படியும் ஆட்டிப்படைக்கலாம்தானே?

ஆயினும்கூட அவள் தாறுமாறாக ஆட்டி வைப்பதில்லை. ஜீவன் தனித்தனி சுயேச்சையால் தாறுமாறுகள் செய்யவும் அவள் அனுமதிக்கிறாள் என்பது தவிர அவளது செயலில் நேராகத் தாறுமாறு ஏதும் இல்லை. இப்படித் தாறுமாறாகச் செல்வோரையும் ஒரளவு விட்டு வைத்திருந்து, உரிய காலம் வந்தபோது (எது உரிய காலம் என்று அவளே அறிவாள்!) அதற்குத் தண்டனை தந்து, பிறகு தாறுமாற்றையும் செப்பம்

செய்து சீராக்கிவிடுகிறாள். இந்தச் சுழல் - ஜீவன் தவறுவது, தண்டனை பெறுவது, திருந்துவது, மீண்டும் தவறுவது - தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

தேவர்கள் தவற்றில் சென்றுவிட்டனர். தண்டனை தர வேண்டியதே. தேவர் விஷயத்தில் அம்பிகை இதை நேராகத் தருவதில்லை. அசுரருக்குத்தான் நேரே தானாக தண்டனை தந்து, அவர்களைத் தன்னில் ஐக்கியம் செய்துகொள்வாள். வாழும் போது உலகெலாம் வழிபடப் பெறுகிறவர்களும், மிக உயர்ந்த இன்பங்களை அநுபவிக்கிறவர்களுமான தேவர்களுக்கு வீழும்போது தானே தண்டனை தந்து உய்விக்க அந்த தர்மசாலினி எண்ணுவதில்லை. தமக்குக் கிடைத்த பாக்கியங்களை மறந்து, தவறு செய்யும் அமரர்களை அசுரர் மூலமே தண்டித்து அவமானகரமாகத் தோல்வியுறச் செய்வாள்.

இப்போது அப்படித்தான் நடந்தது.

* * *

சும்பன் என்ற அசுரனும், அவனது தம்பியான நிசும்பனும் தேவரை வென்று வானுலகைக் கைப்பற்றினர்.

இந்திரனுடைய ஆட்சி வீழ்ந்தது! சகல வானவரும் பெற்று வந்த யக்ஞ பாகங்கள் தானவர் வசமாயின.

சூரியன், சந்திரன், குபேரன், யமன், வருணன், வாயு, அக்கினி முதலிய தேவர்களின் அதிகாரங்கள் பறிமுதலாயின. அவற்றைத் துஷ்டர்களும் மகாபலிஷ்டர்களுமான சும்ப-நிசும்ப சகோதரரே கைப்பற்றினர். அப்புறம் 'யதேச்சாதிகாரம்தான். சர்வாதிகாரம்தான்.

நிசும்பனே குறிப்பாக தேவர்கள் அனைவரையும் வென்றவன். இந்தக் காரியத்துக்காகத் தமையனார் சிரமப்பட வேண்டாம் என்று கருதி, சகோதர வாஞ்சை மிக்க இளையோன் நிசும்பனே தேவருலகை முற்றுகையிட்டு அவர்களை வெளுத்துக் கட்டினான். தேவர்களைக் கொல்ல முடியாதாகையால் அவர்களைச் சிறைப் பிடித்தான். இங்குதான் அவுணன் சும்பனின் கோர கிருத்யம் தொடங்கியது. சிறைப் பிடித்து இத்தனை தேவர்களைக் கட்டி மாரடிப்பானேன் என்ற எண்ணம் அவனுக்கு

வந்ததால் அவன் அவர்களைத் தேவலோகத்திலிருந்து துரத்தித் துரத்தி வெருட்டி விரட்டி கண்காணாமல் வெளியேறச் செய்தான்.*

பிறகு எக்காரணத்தாலோ அசுர சகோதரர் இமாலயத்தில் தலைநகர் அமைத்துக் கொண்டு தங்களது கொடுங்கோலாட்சியைத் தொடங்கினர். பரமேச்வரரின் கைலாசம் ஹிமாசலத்தில் இருப்பதால், தங்களையே பரமேச்வரர்களாக நினைத்த அரக்க சோதரரும் அங்கு ராஜதானி அமைத்துக் கொண்டனர் போலும்! இது தேவீ பாகவதம் கூறும் விவரம். ஸப்த சதீயின்படியும் பிற்பாடு அம்பாள் இமாசலத்திலேயே ஆவிர்பவித்ததாகவும், அது அவுணர்க்கு அணித்தான இடம் என்று தோன்றுவதாலும் இதுவே பொருத்தமாக உள்ளது. எதிரி சைன்யத்துக்குச் சிரமமின்றி அவர்கள் அருகேயே எதிர் கொண்டு போர் புரிய அருள் பாலிக்கிறாள், பகைவனுக்கருளும் பகவதி!

⋆ ⋆ ⋆

நாடிழந்து பீடிழந்து நலிந்து தவித்த தேவருக்கு அம்பாளின் நினைவு வந்தது. அவள் தந்த வர மகிமை! அவளருளால் தானே அவள் தாள் வணங்க முடியும்?

'சுகம் வந்தால் சுதந்திரம் மிஞ்சிப் போகும்; உடனே தர்மக் கட்டுப்பாடு கெட்டுப் போகும். தொடர்ந்து கால நியதிப்படி தண்டனை வரும். அதாவது சுகமே துக்கத்துக்கு வழியாகும்' என்று தேவரின் பரிபவத்தைத் திருஷ்டாந்தம் காட்டிப் பேசுவார் வியாஸ பகவான். அவரது பாகவத விருத்தாந்தப்படி, தேவர்கள் முன்போலவே குருவான பிருஹஸ்பதியிடம் செல்கின்றனர். இப்போதுகூட அவர்களுக்கு அம்பாள் நினைவு வரவில்லை. செல்வத்தில் செம்மாந்து செருக்குற்றதன் விபரீதம் தான்! போர் புரிந்து சும்ப நிசும்பரை வெல்கிற நம்பிக்கையும் இல்லை. எனவே ஆபிசாரம் என்கிற தீய வேள்வி செய்து அசுரரைத் தொலைக்க வழி கேட்கின்றனராம். அறிவுக் கடலான பிருஹஸ்பதி இவர்களது அறிவீனத்தை எண்ணிப் பரிதாபப்படுகிறார். ''அட

---

* இக் கூற்றுக்கு ஆதாரம், 'துர்கா ஸப்தசதீ'யில் பிற்பாடு (அத். – 5 சுலோ. 86) ''சும்ப தைத்ய நிராக்ருதை: தேவை: ஸமேதை: ஸமரே நிசும்பேன பராஜிதை:'' என்று காணப்படுவதே யாகும். இங்கு நிசும்பன் அமரரை அமரில் வென்றதாகவும், சும்பன் அவர்களை உருக்கரந்து ஓடி ஒளியுமாறு செய்ததாகவும் தொனிக்கிறது.

பிருஹஸ்பதிகளா! யாகங்கள் தேவர்களான உங்களைக் குறித்தே செய்யப்படுபவை. அவிர்பாகத்தால் மகிழ்ந்த நீங்கள், வேத மந்திரங்களின் சக்தியால் உங்கள் ஆற்றலை வெளியிட்டு வேள்வி செய்வோனுக்கு நலன் செய்கிறீர்கள். அவர்கள் ஆபிசாரம் என்கிற கொடிய பலனை எதிர்பார்த்தாலும் அவர்கள் செப்பிய மந்திர வீர்யத்தால் அதைச் செய்ய நீங்கள் கட்டுப்பட்டு விடுகிறீர்கள். அது சரி, இப்போது நீங்கள் யாரைக் குறித்து யாகம் செய்ய முடியும்? உங்களைக் குறித்தேயா? இப்படிக் கேள்விபட்டதேயில்லையே? பசு, தானே பாலைக் குடித்துக் கொள்ளுமா? யாகம் செய்யும் யஜமானன் திரவியங்களைத் தீயிலிட்டு ஒரு விதத்தில் தியாகம் செய்கிறான் என்றால் நீங்களும் ஒரு தியாகமாகவே பலன் தருகிறீர்கள். தனக்குத் தானே தியாகம் செய்து கொள்ள முடியுமா? 'தனக்கு' என்பதே தியாகத்துக்கு நேர்மாறான தருக்கு அல்லவா? தியாகமின்றி பலன் எப்படி உண்டாகும்? அப்படியே நீங்கள் உங்களைக் குறித்தே கேள்விப்பட்டிரா வேள்வி செய்து கொள்வதாக இருந்தாலும், உங்களுக்குத்தான் இப்போது சக்தி ஏதும் இல்லையே! ஆற்றல் அனைத்தும் மழுங்கி அவலமாகியுள்ள நீங்கள் எந்தச் சக்தி கொண்டு ஆபிசாரத்திற்குரிய வீரியத்தை உங்களுக்கே அருளிக் கொள்ள முடியும்? குழந்தைகாள், துயரத்தினால் புத்தி பேதலித்துப் பேசுகிறீர்கள். சக்தி இழந்தோரனைவருக்கும் கதி பராசக்திதான். நீங்கள் முன்பு உங்களது தேஜஸ் முழுவதையும் கக்கித் தியாகம் செய்தபோது, அந்தத் தியாக ரூபமாகவே அவள் வந்து அருள் மழை பொழிந்ததை மறந்தே விட்டீர்களா? அதோடு, அவளிடம் முன்னரே கோரிப் பெற்ற வரத்தை மறந்தீர்களா? தற்போது ஹிமாசலத்தில் கொட்டமிடும் அசுரர்களின் ராஜதானிக்கு அருகிலேயே அவள் ஓர் உருவம் தாங்கி வருகிறாள். அசுரரை எண்ணி அஞ்சாமல், அவளது அருட்துணையை நம்பி அங்கு சென்று அவளைப் பிரார்த்தியுங்கள்'' என்கிறார்.

தேவர்கள் இவ்விதமே பனிமலை சென்று நனிமலர் வாக்கால் தேவியைத் துதிக்கிறார்கள். 'தேவ பாகவத'த் துதியில் நெஞ்சையள்ளும் பல கருத்துக்கள் மிளிர்கின்றன. ''எங்களுக்கு அன்னை நீ அல்லவா? அன்னை குழந்தைகளைக் காவாதிருந்தாலே விந்தையாகுமேயன்றி காப்பது விந்தை யாகுமா?'' என்கிறார்கள். அம்பிகையின் ஆயுதங்களைப் பற்றி முன்பு 'ஸப்தசதீ' துதியில் தேவர் கூறுவதைப் பார்த்தோம் அல்லவா? அதற்கு ஒரு மாற்றுப் போலவே பாகவதத்தில்

கூறுகிறார்கள்: ''நீ ஆயுதங்களைத் தரிப்பது நாங்கள் கண்டு களிக்கும் அலங்கார நிமித்தமேயாகும். கருவிகளின் துணை கொண்டு நீ கருமம் முடிப்பது என்பது ஒரு விளையாட்டுத்தான். உண்மையில் உன் காரியத்தை முடிக்கப் படைக்கலமும் வேண்டுமா?''

பின்னர் இத்துதியில் ஏனைய தெய்வங்களை இவர்கள் இழித்துப் பேசுவது ரசிக்க முடியாமலிருந்தாலும், இங்கு பிற கடவுளரைப் பற்றிக் கூறுவதை ஜீவப் பிரபஞ்சத்துக்குப் பொருத்திப் பார்த்தால் சாரமான வாதம் கிடைக்கிறது. அதாவது, ஜீவர்கள் தாமாக, தம்மிச்சையாகத் தோன்றாததால் தாமாக, தம்மிச்சையாக ஒடுங்க முடியாது என்ற வாதம் கிடைக்கிறது. கடவுட் பிரசாதமே மோக்ஷத்துக்கு நேரடி உபாயம் என்று சொல்லாமல், ஞானம் அடைந்த மாத்திரத்தில் தானாகவே முக்தி சித்திக்கிறது என்று அத்வைதிகளில் பலர் கருதுவதற்கு இங்கு ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது. ஜீவர்கள் கடவுளால் தோற்றுவிக்கப்பட்டவர்கள் என்று இவர்கள் அப்பட்டமாக ஒப்புவதில்லையாதலால் ஜீவர்களை மூலத்தில் ஒடுக்கவும் இவர்களுக்குக் கடவுள் தேவைப்படவில்லை. ஆனால் சகல ஜீவர்களுகட்கும் ஒரேவிதமான தேக அமைப்பு, மன அமைப்பு, புலன்களின் தொழில்கள் ஆகியன இருப்பதால் ஒரு பொதுவான மகாசக்தியே இவற்றைச் செய்திருக்கிறது அல்லது கற்பித்திருக்கிறது என்றும், சொந்த ஹோதாவில் அநாதியாக பல ஜீவர்கள் இப்படி ஒரே மாதிரி உண்டாகியிருக்க முடியாது என்றும் ஆகிறது. வேறொரு மகாசக்தியால்தான் ஜீவன் சம்ஸாரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறான். அப்படியிருக்க இவன் தானாகவே எப்படி அதிலிருந்து விடுபட்டு மூலப் பிரம்மத்தில் இரண்டற ஒடுங்க இயலும்? இவனுக்கு அத்வைத ஞானம் உண்டாவதும் அந்த மகாசக்தியின் அருளால்தான், சிரவண, மனன, நிதித்யாஸனங்கள் தாமாக ஞானத்தை அளித்துவிடா. கர்ம மீமாம்சகர்களிடம், 'கர்மம் தானாகப் பலன் தராது, பலதாதாவாக–அதாவது பலன் தருகிற சக்தியாக–கடவுள் இருக்கிறார்' என்று அத்வைதிகளும் வாதிக்கிறார்கள். ஆனால் ஏனோ அவர்களில் பலர் லௌகிக காரியங்களோடு அந்தக் கடவுளின் எல்லைக்கு வரம்பு கட்டி விடுகிறார்கள்! பரம சாக்தர்களோ எனில் சிரவண, மனன, நிதித்யாஸனாதி ஞான சாதனைகளும்கூடத் தாமாக லட்சிய சித்தியைத் தரமாட்டா என்றும், இச்சாதனைகளில் சாதகனின் ஈடுபாட்டினை மெச்சிப்

பராசக்தியே பலனாக ஞான சித்தியை, அதாவது அத்வைத முக்தியை அருளுகிறாள் என்றும் கூறுவர். ''அம்மா அநுக்கிரகித்தாலன்றி மோக்ஷமில்லை. அவளிடம் தான் திறவுகோல் இருக்கிறது'' என்று பரம அத்வைதியான பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் இதைத்தான் அழுத்தந் திருத்தமாகக் கூறினார். 'கடவுளருளால் தான் ஒருவனுக்கு அத்வைதத்தில் ஓர் ஆரம்பப் பிடிப்பே உண்டாகிறது' என்று பூர்விக அத்வைதிகள் கூறியுள்ளனரெனில் பகவான் ராமகிருஷ்ணரோ ஆரம்பத்தில் பிடிப்பு உண்டாவது மட்டுமின்றி முடிந்த முடிவாக முக்தி நிலை கைகூடுவதும் அவளது கிருபையால்தான் என்று ஸ்பஷ்டமாகவே இயம்பியிருக்கிறார். மதிப்புக்குகந்த மகா அத்வைதிகளில் சிலரும் இதற்கு மாறாகக் கடவுட் கருணையாலேயே ஞானம் சித்திப்பதை உணராது போனதற்கு ஒரு காரணம் வேண்டுமானால் சொ லலாம். இந்தக் கருணையை உணர்ந்தால் அதனிடம் பக்தியும், நன்றியும் பொங்கத்தான் செய்யும். ஆனால் இவற்றில் திளைத்துக் கொண்டிருந்தால் அது த்வைதம்தான். பக்தி செலுத்துபவன் என்றும், பக்திக்கு இலக்கானவர் என்றும் இருவராகப் பிரிந்துதானே இருக்கவேண்டி வரும்? இதுவே அத்வைதத்துக்கு வழி அடைத்தாற் போலாகுமே! திறவுகோலை வைத்திருப்பவளை நினைப்பதே தாழ்ப்பாளாகி வழியை அடைத்தாற் போலாகி விடுமே! அதனால்தான் பராசக்தி மறைந்திருந்தே சகல காரியமும் செய்வதுபோல் முக்தி நல்கும் பரம அநுக்கிரகத்தையும் மறைந்திருந்தே செய்யும் மகாத் தியாகியாகி விடுகிறது போலும்! ராமகிருஷ்ணருக்கு இருமைகளற்ற அகண்ட ஏக அநுபூதி அணுகி அணுகி வந்தபோது, இந்த அணுக்கத்தை ஆக்குவிக்கும் அம்பாளின் திருக்காட்சி ஏற்பட்டது! காட்சியைக் கண்டால் காண்பவன் வேறாகத் தானே நிற்கவேண்டும்? அத்வைதம் எப்படி லபிக்கும்? எனவே அந்த நிலையில் அம்பாளையும் கூசாமல் வெட்டி எறிந்ததாகக் கூறுகிறார் அஹிம்ஸா மூர்த்தமாகிய பரமஹம்ஸர். அதாவது அம்பாள் என்று பிரிந்திருந்து ஒருத்தி ஏதோ செய்கிறாள் என்ற எண்ணத்தை வெட்டிவிட்டார். இதையும் அவளேதான் செய்வித்திருக்கிறாள்! பிற்பாடு அதே குருமஹராஜ் அம்மாவின் அருளின்றி மோக்ஷ வாசல் திறவாது என்றார்! அம்பிகையே அத்வைத மோட்சம் தர வேண்டுமென சாதகன் நினைத்து அன்பு செய்தானானால், அவள் த்வைத நிலையோடு அவனை நிறுத்தி விட மாட்டாளென்று

காட்டியவர், நாட்டியவர் அவர். இவனாக வெட்டாவிடினும் அவளே விலகி விடுவாள்; அத்வைத வெட்ட வெளியாகி விடுவாள். இம்மாதிரி அத்வைதிகள் கூற்றைக் கண்டிக்குமிடத்து, இனிமையையே பொழிய வந்த பாகவதப் பாற்பசு, தன் கொம்பை நீட்டிக் காட்டுவதும் தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது! ''தானாகவே நடந்தது என்பதோ, தாமாகவே ஒன்றை நடத்தினார்கள் என்பதோ, இப்பிரபஞ்சத்தில் கிடையவே கிடையாது'' என்று இங்கு தேவரின் துதி கூறுகிறது. மேலும் கூறும்: ''மகாசக்தியான நீயொருத்தியே பற்பல சக்தி பேதங்களாக பற்பல பூதத்திடத்தும், ஜீவரிடத்தும் நிறைந்து நின்று அததை, அவரவரை அந்தந்தச் சக்தியுக்தராக்கி அவ்வத் தொழில்களை நடத்தி வருகிறாய். எல்லா ஆசைகளையும் நிறைவேற்றும் நீதான் ஞான மோக்ஷத்தை இச்சிப்போருக்கு அதனை அளிக்கிறாய். நீயே பிரம்மஞான ஸ்வரூபமாக விளங்குகிறாய். அவ்வாறிருக்க, உன்னை எந்த ஞான யோகிகள் ஜகன்மாதாவாக உபாஸிக்கவில்லையோ, அவர்கள் உண்மையில் யோகிகளாயினும் ஞான சூனியர்கள்தாம்.''

ஒருவர் அவளை உணராமலே அத்வைத ஸித்தி பெற்றாலும் பெறலாம். ஆனால் அப்போதும்கூட அப்படிப்பட்டவரைப் பூரண ஞானி என்று சொல்ல முடியாது. ஏனெனில் அத்வைத ஞானத்தை அநுபவத்தில் தந்தவளைப் பற்றிய ஞானமே அவர்களுக்கு இல்லாதபோது அது எப்படிப் பூரணமாக முடியும்? 'பூரணஞானமடையாதவர்கள்' என்று சொல்வதற்குப் பதில் பக்தியின் ஆத்திரத்தில் அதியாகச் சென்றுவிட்ட தேவர்கள் 'ஞான சூனியர்கள்' என்றே சொல்லி விடுகிறார்கள்!

கதைக்கு வருவோம். தேவர்கள் அசுரரிடம் சண்டை போடவே அசக்தராக இருக்கையில் ஞானிகளுடன் ஏன் சண்டை வளர்த்தப் போகிறார்கள்? ஒரு பரிவின் மீதே, பரிதாபத்தின் மீதே கோப வார்த்தைகளை வீசினார்கள். ஆனால் அம்பிகையிடம் அன்புடன் துதித்ததால் உள்ளூர அவர்களது மனம் எல்லாரையும் அன்பில் தழுவலாயிற்று. துதியின் முடிவில், ''சும்ப நிசும்பாதியரால் துன்புறுவது நாங்கள் மட்டுமல்ல. சகல லோகங்களும் அவர்களால் வதையும் வாதையும் அநுபவிக்கிறது. எனவே பிரபஞ்சம் முழுவதையும் நீ ரட்சித்தருள வேண்டும்'' என்கின்றனர்.

★ ★ ★

மான்மியத்தில் இப்பகுதியைப் பார்க்கலாம்.

தேவர்கள் பர்வதராஜமாகிய இமாசலத்தை அடைந்து விஷ்ணு மாயையான தேவியைத் துதித்தனர் என்கிறார் மேத முனிவர். 'விஷ்ணு மாயை' என்றால் சர்வ வியாபகமாக உள்ள மாயை என்று பொருள். கல்பாந்த காலமாக ஜீவகோடிகள் அனைவரும் தாங்கள் பிரம்மத்துக்கு வேறானவர்கள் என்று எண்ணி வந்திருப்பதற்கு இந்த சர்வ வியாபக மாயைதான் காரணம்! உலக விளையாட்டு நடப்பதற்காக பிரம்ம சக்தி இந்த மாயா விநோதம் செய்கிறது. பிரம்மத்தோடு ஒன்றிவிடும் மாறாத சத்திய நிலையில் இந்த மாயை அடிபட்டுப்போகிறது.

சும்பனும் நிசும்பனும் அசத்திய வடிவினர்; உண்மை போல் தோன்றும் மோசடிப் பொய் சும்பன்; அப்பட்டப் பொய் நிசும்பன். இவர்களை வெல்ல சத்தியத்தைத் துணை கூப்பிடவில்லை தேவர்கள். விஷ்ணு மாயையை அழைக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் பிரம்ம சத்தியத்தில் பிறிதற மூழ்க விரும்பவில்லை. அவர்களுக்கு இனியும் விண்ணுலக இன்பங்களே வேண்டும்; காமதேனுவும் கற்பகக் காவும் கந்தர்வ கானமும் அப்ஸரர் ஆடலும் வேண்டும். ஒழுங்கு தப்பாத அழகுகளை விஷ்ணு மாயையாக பாவித்து வழிபடுகிறார்கள். மேலும் பெண் யானையைக் காட்டி ஆண் யானையைப் பிடிப்பது போல், பிரம்ம சக்தியின் மயக்கு ஆற்றலாகிய இவளைக்கொண்டே மோசடியும் பொய்யும் வடிவான அசுரரைப் பிடிக்க எண்ணினர் போலும்! பூரண பிரம்ம சக்தியில் விஷ்ணு மாயையையும், விஷ்ணு மாயையில் பூரண பிரம்ம சக்தியையும் வைத்துத் துதித்தனர்.

''தேவீ வணக்கம்; மகாதேவீ வணக்கம்! சிவையே எப்போதும் வணக்கம். பிரகிருதியாக மங்கள வடிவு கொண்ட உன்னை அடங்கி ஒடுங்கி வணங்குகிறோம்.

''ரௌத்திர வடிவும் உனதே. அதற்கும் வணக்கம். எந்நாளும் உள்ள சாந்த கௌரிக்கு வணக்கம். அனைத்தையும் தாங்கித் தரிப்பவளுக்கு மீண்டும் மீண்டும் வணக்கம். நிலவாகவும், நிலா மதியாகவும், நிர்மல சௌக்கியமாகவும் உள்ளவளுக்கு நித்தமும் நமஸ்காரம்.

''கல்யாணிக்கு, வணங்கியோரை வாழ்த்தி வளர்ப்பவளுக்கு, லட்சிய நிறைவேற்றமாக யிருப்பவளுக்கு

மீண்டும் மீண்டும் நமஸ்காரம். இப்போது எங்களுக்கு ஏற்பட்டுள்ள அமங்கலமும் நீதான். உன்னையே இனி எங்கள் மன்னருக்கு வர வேண்டிய லக்ஷ்மியாக வணங்குகிறோம். இதன் பொருட்டு அவுணரை அழிக்க வேண்டி சம்ஹார மூர்த்தியாம் சர்வனின் சக்தியாகவும் உனைப் பன்முறை பணிந்தோம்.

''துர்கம் எனும் கடத்தற்கரிய துக்கத்தைத் தாண்டிக் கரையேற்றுவிக்கும் துர்கை நீயே. அனைத்தின் சாரமும் நீ. அனைத்துச் செயல்களும் ஆவது உன் சக்தியாலேயே. எத்துணை புகழுக்கும் உரியவள் நீ. அதே போதில் கருமைகளாகவும், புகை மூட்டங்களாகவும் இருப்பதும் நீதான். இவற்றுக்கு எக்காலத்தும் எமது வணக்கம்.

''மிக மிக இனியவளும் நீ; மிக மிகக் கொடியவளும் நீ. பெண்ணுருக் கொண்ட சக்தியே, உனக்கு நமோ நம:! உலகம் எதில் நிலைபெற்றுள்ளதோ அதுவாக உள்ள தேவிக்கு, எல்லா கிருதிகளாகவும் உள்ளவளுக்கு நமோ நம:!'' ('கிருதி' என்றால் 'செயல்'. தீயன செய்யும் துர்த் தேவதையையும் 'கிருதி' என்பர். அதுவும்கூட அவள்தானே? எதுவுமே அவள் என்னும் போது விலக்கு ஏது? 'ஆபிசார' எண்ணம் இங்கு தொனிக்கிறதோ?)

இனி, 'நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை நமோ நம:' என்று ச்லோகம் தோறும் முடியும் அலை வரிசை பெருகுகிறது. அனைத்துயிருள்ளும் உள்ள ஏகப் பேரறிவின் கிரணங்களாகவே ஜீவர்களின் சகலத்தையும் காணும் ஒப்பற்ற ஸ்துதி.

'எல்லா உயிர்களிடத்தும் விஷ்ணு மாயையாக வியாபித்திருப்பதாக எவள் கூறப்படுகிறாளோ ,அவளுக்கு இந்த வாக்கால் துதி நமஸ்காரம், சரீரத்தால் தண்ட நமஸ்காரம், மனத்தால் அன்பு நமஸ்காரம்.

''எல்லா உயிர்களிடத்தும் அறியும் திறன் என்பதாக எவள் குடிகொண்டு போற்றப்படுகிறாளோ, அவளுக்கு உரையால் வணக்கம், உடலால் வணக்கம், உள்ளத்தால் வணக்கம்.

''எல்லா உயிர்களிடத்தும் எவள் அறிந்ததை சீர்தூக்கிப் பார்க்கும் புத்தியாக உள்ளாளோ, அவளுக்குச் சொல்லாலும், சரீரத்தாலும், சிந்தையாலும் வணக்கம்.

''எல்லா உயிர்களிடத்தும் எவள் ஏதும் அறியா நித்திரா நிலையாக உள்ளாளோ, அவளுக்கு மூவகையிலும் நமஸ்காரம்.

''எல்லா உயிர்களிடத்தும் எவள் அறிந்தவற்றை அநுபவித்துப் பார்க்கவேண்டும் என்ற பற்பல பசிகளாக உள்ளாளோ, அந்த தேவிக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமோ நமஸ்காரம்.

''எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி உயிருக்குயிரான ஆத்ம ஒளி இருக்க அதன் பிரதிபலிப்பேயான இந்த உடலாக இருக்கிறாளோ, அவளுக்கு நம: நம: நமோ நம:.

''எல்லா உயிர்களிடத்தும் உள்ள எல்லாவித சக்திகளாகவும் எந்த தேவி ஒருத்தியே உறைந்திருக்கிறாளோ, அவளுக்கு நம: நம: நமோ நம:.

''எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி பற்பல ஆசைகளாக, வேட்கைகளாகக் குடிகொண்டுள்ளாளோ, அவளுக்கு மூவகையிலும் வணக்கம்.

''எல்லா உயிர்களிடத்தும் எத்துணை ஆசாபங்கங்கள் விளைந்தாலும் அவற்றைத் தாங்கும் பொறுமையாக எவள் இருக்கிறாளோ, அத்தேவிக்கு முவ்விதத்திலும் வந்தனம் தந்தனம்.

''எல்லா உயிர்களிடத்தும் அவற்றை வேறு வேறாக, மனிதர், மிருகம், தாவரம், இனம், குலம், கோத்திரம் என்றெல்லாம் பிரிவுபடுத்தும் ஜாதி ரூபமாக எவள் உறைகிறாளோ, அவளுக்கு மன மொழி மெய்களால் பிரணாமங்கள்.

''எல்லா உயிர்களிடத்தும் தவற்றில் சென்றால் உள்ளூர ஏற்காத நாணமாக எவள் உள்ளாளோ, அத்தேவிக்கு மனோ-வாக்-காயங்களால் வந்தனம்.

''எல்லா உயிர்களிடத்தும் எவள் அடி மூலத்தில் சாந்தி மயமாக இலங்கிக்கொண்டிருக்கிறாளோ, அப்படிப்பட்ட அந்த தேவிக்கு திரிகரணங்களாலும் நமஸ்காரம்.

''எல்லா உயிர்களிடத்தும், அவற்றின் பற்பல நாட்டங்களில் சிரத்தை உருவாக இருக்கும் அத்தேவிக்கு, முக்கரணங்களாலும் வணக்கம் செலுத்துகிறோம்.

''எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி ஆகர்ஷண சக்தியாகிய காந்தியாக இருக்கிறாளோ, அவளுக்கு முவ்வாற்றாலும் வந்தனம்.

''எல்லா உயிர்களிடத்தும் எத் தேவி அழகும் அன்பும் செழிப்புமான லக்ஷ்மியாக உறைகிறாளோ, அவளுக்கு நம: நம: நமோ நம:!

''எல்லா உயிர்களிடத்தும் எவள் அவரவருக்கான ஜீவனோபாயத் தொழிலாக இருக்கிறாளோ, அவளுக்கு மூன்று வகையிலும் நமஸ்காரம்.

''எல்லா உயிர்களிடத்தும் எவள் ஞாபக சக்தி என்னும் ரூபத்தில் உறைகிறாளோ, அவளுக்கு வணக்கம், வணக்கம், வணக்கமே.

''எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி தயை வடிவமாக உறைகிறாளோ அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், மீளவும் நமஸ்காரம்.

''எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி திருப்தியின் இன்பமாக இலங்குகிறாளோ, அவளுக்கு வந்தனம், வந்தனம், வந்தனமே.

''எல்லா உயிர்களிடத்தும் எத்தேவி தாய்மை யன்பாகத் திகழ்கிறாளோ, அவளுக்குத் திரிகரண நமஸ்காரம்.

''எல்லா உயிர்களும் அடிப்படையில் ஒரே வஸ்துவாயிருப்பதால் தாயன்பில் ஒன்றையொன்று ஈர்த்துக்கொண்டாலும்கூட, எவள் எவ்வாறோ எல்லா உயிர்களிடத்தும் பேத உணர்ச்சியால் ஏற்படும் தடுமாற்ற பிராந்தியாகவும் இருக்கிறாளோ, அப்படிப்பட்ட தேவிக்கு வணக்கம், வணக்கம், மீள மீள வணக்கம்.

(எல்லா உயிர்களும் இப்படி பிராந்தியின் பேத மயக்கத்தில் இருப்பதற்குக் காரணம் வெவ்வேறு இந்திரியங்கள் ஒன்றையே வெவ்வேறாகப் பிரிந்து அனுபவிப்பதுதான்.) ''எல்லா உயிர்களிடத்தும் அந்த இந்திரியங்களாகி ஆள்கிறவளும், அந்த இந்திரியங்களின் அடிப்படையாக இருந்து அவற்றையும் ஆள்கிறவளும் தேவிதான். அவளுக்கு நம: நம: நமோ நம:.

''இந்திரியங்கள் பலவாகவும் இந்திரியங்களால் நுகரப்படுவன பலவாகவும் இருந்தாலும் இந்தப் பலப் பலவும் எந்த ஒரே பேரறிவிலிருந்து தோன்றினவோ, அந்த சைதன்ய

வடிவத்தில் அண்டசராசரங்கள் அனைத்தையும் அனவரதமும் அணைத்து வியாபித்து நிற்கும் அன்னை எவளோ, அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

''சகலத்தின் மீதும் ஆட்சி செலுத்தும் அந்த ஈசுவரியைத் தான் முன்பு நாங்கள் இஷ்டஸித்திக்காக வேண்டிப் பலன் பெற்றோம். அவளே எங்கள் அதிபதியான தேவேந்திரனால் தினமும் சேவிக்கப்படுகிறாள்*. அவளே நம்மை நல்ல காரணங்களுக்காக நல்ல காரியங்களைச் செய்யுமாறு இயக்கி வைத்து, அவற்றுக்கான நற்பயனையும் அநுக்கிரகிக்க வேண்டும். தற்போது கெடுதலின் விளைவாக அநுபவிக்கும் ஆபத்தை அழிப்பவளாகவும் அவளே ஆக வேண்டும்.

''இப்போது எழுச்சிகொண்ட தைத்தியரால் தவிப்புண்ட நாங்கள் எங்களை ஆளும் நாயகியான அவளை வணங்கினோம். பக்தியால் அடங்கி ஒடுங்கிப் பணிந்தவரின் சகல ஆபத்துக்களையும் நினைத்த மாத்திரத்தில் போக்குபவள் அவளே.''

இமயத்தில் பெருகும் கங்கை நதிக் கரையில் கூடி அமரர்கள் இந்த அமிருதத் துதியை நவின்றனர் - வாக்கும் கங்கையாக வெண்மையும் தூய்மையும் கூடிப் பெருகிற்று.

உடனே கருணைக் கங்கையான அம்பிகை அங்கு வந்தாள். விஷ்ணுமாயையாக அவளை பாவித்தார்கள் அன்றோ? அதற்கேற்ப இப்போது இவர்களிடமே ஒரு மாயம் செய்தாள்; துதிக்கிரங்கி வந்தாற்போலின்றி, தன் போக்கில் கங்கையில் நீராட வந்தது போல் வந்தாள்!

இங்கே பார்வதி வந்தாள் என்கிறார் மேதஸ். பர்வதராஜன் புத்திரியாக அவள் வந்ததை இங்கு சேர்த்துப் பேசுவதற்கில்லை. அந்தப் பார்வதி தனது ஆற்றலையெல்லாம் அடக்கிக்கொண்டு சிவனுக்காகத் தவமிருந்து, பிறகு அவனை மணாளனாகப் பெற்று, அவனுக்கு அடங்கிய ஸதியாகவே இருந்தாள். அவள் பச்சைப் பசேலென்று இருப்பாள். இங்கே வந்த பார்வதியோ

---

* இந்திரன் அவளை தினமும் சேவித்து வந்திருந்தால் தேவருக்கு இந்த உற்பாதம் வந்தே இராது. இதனால்தான் இங்கு 'தினேஷு' என்ற பதத்துக்கு வியாக்கியாதா, '(சரஸ்வதி பூஜா தினமாகிய) ஐப்பசி சுக்கில நவமி, செவ்வாய் முதலிய சிறப்பான கிழமைகள், அல்லது தினந்தோறும்' என்று பொருள் கொள்கிறார். முதலில் நாள்தோறும் பூஜித்த வாசவன் பிறகு கழுதை தேய்ந்து கட்டெறும்பாக வாரத்தில் ஒரு நாள் வருடத்தில் ஒரு நாள் எனப் பூசிக்கலானான் போலும். ஆராதனம் குறைந்தபின் ரோதனம் வந்தது.

ஆற்றலனைத்துக்கும் நிலைக்களனான பூரண பிரம்ம சக்தியாவாள். பர்வதத்தை உறைவிடமாகக் கொண்டதாலேயே 'பார்வதி' எனப்பட்டாள் இவள். இமயபர்வதப் பனி முடிகளின் வெண்மையும், கங்கையின் வெண்மையும், தேவர் வாக்கின் வெண்மையும் வெட்கிச் சிவக்கும்படியான பிரம்ம சத்தியத்தின் வெள்ளை வெள்ளப் பெரும் ஜோதி இவள். அதனாலேயே 'கௌரி' எனப் பெயர் கொண்டவள். சத்தியமும் சத்துவமும் நெருங்கிய தத்துவங்கள். சத்துவத்தை வெண்மை நிறமாக உருவகிப்பர். இதற்கு ஆதாரமான சத்தியமோ வெள்ளையினும் வெள்ளையானது — நிறம் என்றே சொல்ல வொண்ணாத ஸ்படிக வெண்மை.

ஸ்படிகத்துக்குப் பின்னணியில் மாற்று வண்ணங்கள் இருந்தாலோ அல்லது அது பல கோணத்தில் செதுக்கப்பட்டு ஒளியை வெவ்வேறு விதங்களில் பிரதிபலித்தாலோதான் கட்புலனாகும். இல்லாவிட்டால் தெரியவே தெரியாது. அல்லது வெகு இலேசாகவே தெரியும் — தெரிகிறதா என்ற சந்தேகமும் உடன் உண்டாகும். சகல ஆதாரமான பிரம்ம சத்தியமும் இவ்வாறே கிரகிக்க வொண்ணாதது. பொய்க்கும் ஆதாரமானது அது. நாம் உறங்கும்போதும் விழித்திருப்பது அது. பலவான பொய்த்தோற்றங்கள் நமக்குத் தெரிகின்றனவே அன்றி, அவற்றின் ஆதாரமான சத்தியம் தெரியவில்லை. ஆழ்ந்து உறங்குகையில் நாம் புலன்களின் வியாபாரமே இன்றியும் உயிரோடிருப்பது அதனால்தான். ஆனால் பொய்த் தோற்றங்களில் நம் புலன்கள் பாயாத அந்த உறக்க வேளையிலும் நமக்கு நம்முள் உள்ள அந்த சத்தியம் தெரியவில்லையே! அதைவிட்டு நாம் நீங்கி நொடிப் பொழுதும் இருப்பதில்லை. என்றாலும் அதை நாம் தெரிந்து கொள்ளவில்லை!

தெரியப்படாத கௌரி இப்போது வந்தாள் – தன் நிஷ்கபடப் பளிங்கில் (transparent) சிறிதே விஷ்ணுமாயாக் கபடத்தைக் கலந்து வெள்ளை (opaque) யாகி வந்தாள். இந்த மாயைக்கலப்பு இல்லாவிட்டால் தெரியவே மாட்டாள்!

ஆனால் அவளைத் தேவர் தெரிந்து கொள்ளத்தான் இல்லை. நம் பிரார்த்தனைக்கிரங்கி வந்த பரதேவதையே இவள் என்றறிந்து அவளை ஆர்த்து வரவேற்று நெடுஞ்சாண்கிடையாக நமஸ்கரிக்க அவர்களுக்குத் தெரியவில்லை. சத்தியத்தை அதுவாகவே ஆகி அநுபவிக்கலாமே ஒழியத் தெரிந்து கொள்ள முடியாது. விஷ்ணுமாயையும் தன் மயக்கு வேகத்தால் தன்னை இன்னார் என்று எவரும் தெரிந்துகொள்ள இயலாததாகத்தான் இருக்கிறது.

''எங்கள் துதிக்கிரங்கி வந்தனையா? இதோ வந்தனை செய்தோம்'' என்று சொல்லத்தெரியாத அமரரைப் பார்த்து அம்பிகை, ''இப்போது இங்கு யாரைத் துதித்துக் கொண்டிருந்தீர்கள்?'' என்று பவளவாய் திறந்து கேட்டாள். சத்தியத்தின் கபடத்தைப் பாருங்கள்!

அதற்கும் தேவர்களால் விடையளிக்கத் தெரியவில்லை.

ஏக சத்தியம் எதிர்வந்து வாய்திறந்து பேசியவுடன், அது இன்னதென்று அவர்களுக்குப் புத்தி பூர்வமாக அல்லது அநுபவ பூர்வமாகத் தெரியாவிட்டாலும், ஒளியின் முன் இருள் தன்னையறியாமலே அழிவதுபோல், அந்த ஒன்றே ஒன்றின் முன் இவர்களது பேதபுத்தி தானாக ஸ்தம்பித்து நின்றுவிட்டது. வாயடைத்து நின்றனர்.

இவர்களை அபேத நிலையில் சேர்த்து விட்டால் லீலா நாடகம் என்னாவது? எனவே அந்த தேவியின் சரீர கோசத்திலிருந்து ஒரு பரம மங்கள ஸ்வரூபிணி வெளிப்பட்டு வந்து, ''தேவர்கள் துதித்தது என்னைக் குறித்துத்தான்!'' என்றாள்.

கொழுந்து விட்டெறியும் விறகிலிருந்து தீயை அப்படியே உறிஞ்சி எடுக்க முடியுமாயின் மீதம் என்ன இருக்கும்? கன்னங்கரேல் என்ற கரிக்கட்டைதானே? பார்வதியின் வெண்மைத் தேஜோ வெள்ளம் அவளது உடலுள் உள்ள உயிர்சாரம் முழுவதையும் இழுத்துக்கொண்டு வெளிவந்து விட்டபின், மூலபார்வதி 'கரியவள்' எனப் பொருள்படும் காளியாகி விட்டாள். அவள் இமாலயத்தின் உட்சென்று மறைந்தும் விட்டாள். அவளைத் தேவர் கவனிக்கவே இல்லை. அவளுக்கும் தேவரிடம் காரியம் இல்லை.

காளி விலகியபின் தேவர்களுக்கு வெளி உணர்வு வந்து விட்டது. அவளது சரீர கோசத்திலிருந்து வெளிப் போந்த தேவியையே தேவர்கள் தம்மை ரக்ஷிக்க வந்த தெய்வமாகக் கொண்டனர்.

தேவர்களின் காரிய நிமித்தமாக மூலத்திலிருந்து இன்னொரு தேவி பிரிகிறபோதே மெல்ல மெல்லத் தேவருக்கு உணர்வு வரலாயிற்று. இப்போது முற்றிலும் வந்து விட்டது. உடற் கோசத்திலிருந்து வெளிவந்ததால் இவளை 'கௌசிகீ' என்று பெயரிட்டுப் போற்றினர்.

எந்தக் காரியமும் அற்ற ஆனந்த நிலையே காளியன்றோ? பார்வதி தேவி காரியமற்ற ஆனந்தமாகப் பிரிந்து சென்று விட்டாள் — காரியம் செய்வதற்காக இந்தக் கௌசிகியைத் தன்னிடமிருந்து உமிழ்ந்துவிட்டு, அல்லது உருவி விட்டு, அல்லது உரித்தெறிந்து விட்டு. அந்தப் பார்வதி ரூபத்தை விடவும் அதிகமாக விஷ்ணுமாயை கலந்த சத்தியமே இந்தக் கௌசிகீ. தங்கத்தில் செம்பு கலந்தாலே நகை செய்யப் பயன்படுவதுபோல் மகான்களின் ஞானத்திலும் சிறிது மாயை கலந்திருந்தாலே அவர்கள் லோகோபகாரமாகச் செயற்பட முடியும் என்பார் ராமகிருஷ்ணர். நன்மைபோல் தீமைக்கும் ஆதாரமாக இருந்துகொண்டு, நன்மை தீமை இரண்டுக்கும் அப்பாற்பட்டிருக்கும் சுத்த சத்தியம் எப்படி துஷ்டசிட்சணம், சிஷ்ட ரட்சணம் முதலிய காரியங்களைச் செய்ய இயலும்? இந்தக் காரியங்களைச் செய்யவே கௌசிகீ தேவியாகிற சத்தியத்தில் விஷ்ணுமாயா விலாசமும் கூடியிருந்தது. ஆனாலும் அது வெளிக்காரியத்துக்குத்தான். உள்ளூர அவள் அதனால் பாதிக்கப்படவில்லை; அவள் சத்தியமாகவே இருந்தாள். அந்த சத்தியத்தைத்தான் சரஸ்வதி என்பது. கலை ஞானத் தெய்வமான சரஸ்வதியிடமிருந்து வித்தியாசம் தெரிவதற்காக இவளை மஹா சரஸ்வதி என்று அடைமொழி சேர்த்துச் சொல்கிறோம்.

உலகையும், ஜீவராசிகளையும் பிரம்மன் படைப்பதாகச் சொல்கிறோம். அவனை சிருஷ்டிக்கு அதிதேவதை என்கிறோம். ஜீவராசிகள் அறிவின் மூலம், உணர்வின் மூலம், அநுபவத்தின் மூலம் படைக்கும் சாஸ்திரங்களையும் அறிவு நூல்களையும் காவிய நாடக இலக்கியங்களையும் கான வித்தையையும் ஆடலையும் சிற்ப சித்திரங்களையும் சரஸ்வதியின் அநுக்கிரகமாகக் கருதுகிறோம். சிருஷ்டிக்கு அதிதேவதை பிரம்மா எனில், சிருஷ்டிக்கப்பட்ட ஜீவனின் சிந்தனா சிருஷ்டிக்கு சரஸ்வதி அதிதேவதையாக இருக்கிறாள்.

இவ்விரு சிருஷ்டிகளுக்கும் அற்புதமான அடிப்படைத் தொடர்பு உள்ளது. விளக்கவொண்ணாத விதத்தில் பிரபஞ்ச சிருஷ்டிக்கு இணையாகவும், அதன் எதிரொலியாகவும். அதனை நிறைவிப்பதாகவும் இருக்கிறது ஜீவனின் கலா சிருஷ்டி. இந்த அற்புதத் தொடர்புக்குக் காரணம் இவ்விரு சிருஷ்டிகளுக்கும் மூலமாக ஒரே சத்தியம் இருப்பதுதான். அது இயற்கை என்ற பெயரில் வெளி உலகத் தோற்றத்தை உண்டாக்குகிறது. அதுவே

கலை என்ற பெயரில் ஜீவனின் உள்ளுலகத் தோற்றத்தையும் நுந்தி விடுகிறது. பிரம்மா சரஸ்வதி இருவருமே அதன் சிருஷ்டி தான். அந்த சத்தியம்தான் மகா சரஸ்வதி.

அவளைக் குறித்த தியான சுலோகம் அவளை கௌரியின் தேகத்திலிருந்து உற்பவித்தவள் என்றும், மூவுலக ஆதாரமானவள் இவளே என்றும், மிகவும் அபூர்வமானவள் என்றும், கருங் கொண்டலிடைக் காணும் சீதமதியத்தின் வெண்மை எப்படித் தூக்கலாகத் தெரியுமோ, அது போன்ற சீதள சுவேத வர்ணத்தவள் என்றும் சொல்கிறது.

மூவுலக ஆதாரம் என்ற இடத்தில் மூவுலகம் என்பது பாதாளம், மண்ணுலகம், விண்ணுலகம் இவற்றை மட்டும் அல்ல. ஜீவனின் விழிப்பு நிலையில் அவன் ஓர் உலகில் இருக்கிறான். கனவு நிலையில் வெளி உலகம் இல்லாமல் தன் மனமே ஓர் உலகாக விரிய, அவ்வுலகில் இருக்கிறான். ஆழ்ந்த உறக்கத்திலோ எவ்வுலகிலும் இருப்பதாகத் தெரியவில்லை. அமைதி உலகில் இருக்கிறான் எனலாமோ, என்னவோ? வெளி உலகு, மனம் என்ற உலகு, மனமும் இல்லாத ஆத்ம சாந்தி உலகு மூன்றுக்கும் ஆதாரமான சத்தியமே மஹா ஸரஸ்வதி.

ஸ்தூல சரீரம், அது போன பின்னும் கர்மாக்களை அநுபவிக்க வேறு உடல் எடுக்கும் சூக்ஷ்மசரீரம், இவ்விரண்டுக்கும் அடிப்படையான காரண சரீரம் இவை ஒவ்வொன்றும் ஓர் உலகுதான். இம் மூன்றுக்கும் அடிப்படையான சத்தியமே மகாசரஸ்வதி.

மனம் இல்லாத வெறும் ஸ்தூலம், ஜடப்பிரபஞ்சம். சூக்ஷ்மம் என்பது மனோமயமானது. பல ஜீவ மனங்களுக்கு அடிப்படையாக உள்ள ஒரே பெருமனம் 'காரணம்' எனப்படுகிறது. ஜடப் பிரபஞ்சம், ஜீவப் பிரபஞ்சம், இவ்விரண்டையும் தோற்றுவித்த காரண மனமான ஈசுவரன் (அல்லது சக்தி, அல்லது மாயை) — ஆகிய மூன்றுக்கும் இருப்பு ஒரே சத்தியத்தில்தான். அதுவே சரஸ்வதி.

இப்படியாக எல்லாவற்றுக்கும் ஆதார உண்மையாக உள்ள சரஸ்வதி என்பதே சர்வ சத்தியம். ஸ–ரஸ–வதியே ஸரஸ்வதி. ரசத்தோடு கூடியவள் அவள். அதாவது சகலத்துக்கும் உட்சாரமாக, சாறாக இருக்கிற சத்தியத்தின் வடிவம் அவள்.

இவளை மிகவும் அபூர்வமானவள் என்பதற்குக் காரணம் சத்தியமாக இருந்தும் இவள் விஷ்ணுமாயையில் தோய்ந்து வந்ததால்தான். இவளுக்குப் பூர்வமாக (முன்னதாக) ஏதுமற்ற ஆதி இவளே என்பதாலும் அபூர்வம்.

தியான சுலோகத்தில் இவளது வண்ணம் சந்திர ஒளியாகக் கூறப்படுவதன் காரணம் உண்மையின் வண்ணம் வெண்மை என்பதாலேயே என முன்பே கண்டோம்.

கௌரியின் தேகத்திலிருந்து ஏன் இவள் உற்பவிக்க வேண்டும்? 'தேவர்கள் தங்கள் துயர் தீர அம்பாளைப் பிரார்த்தித்தார்கள்; உடனே மகா சரஸ்வதி ஆவிர்பவித்தாள்' என்றால் போதாதோ? முதலில் ஒரு கௌரி வருவானேன்? பிறகு அவளுள்ளிருந்து இவள் உற்பவிப்பானேன்?

முன்பு மது-கைடபர் வதத்தின்போது பராசக்தியானவள் திருமாலின் திருமேனியுள்ளிருந்து ஆனந்த ரஸத்தை வடித்தெடுத்து மகா காளியாக அனுப்பினாள். தனது ஆத்மானந்த நித்திரை யோகம் விட்டே நாராயணமூர்த்தி மது-கைடப வதம் செய்தருளினார். ஆனால் இந்த உத்தம சீலத்தை உலகம் உணரவில்லை. அவர் சமாதி நிலையிலிருந்ததை உறங்கி வழிந்ததாகக் கருதிற்று. அவர் அந்த ஆனந்தத்தை அநாயாசமாகத் துறந்ததை, அவருக்கு அம்பிகையே அறிவு வெளிச்சம் தந்து காரியத்தில் தூண்டியதாகவும் கூறலாயிற்று. நாராயணனுக்கு நேர்ந்த அபகீர்த்திக்கு அம்பாள் தானே கழுவாய் தேடிக் கொண்டாள் போலிருக்கிறது, கௌசிகீ உற்பவத்தின் மூலம்! இவளை மேட்டிமைப்படுத்தவே மாலவனுக்குத் தாழ்வு கற்பிக்கப்பட்டதால் இவளே பிராயச்சித்தம் செய்துகொள்ள முற்பட்டிருக்கக்கூடும். தெய்வநீதி, பராசக்தியின் தர்மம் அப்படிப்பட்டது. இப்போது என்ன செய்தாள்? தன்னிலிருந்தே தன் சத்தியத்தைத் திரட்டி வெளிப்படச் செய்தாள். தான் ஆனந்த மய காளி ஆனாள். ஆனால் மது-கைடப வரலாற்றுக் காளிக்கும் இவளுக்கும் உலகப் பார்வையில் எத்தனை வித்தியாசம்? திருமாலிடமிருந்து வந்த காளியையே பராசக்தியாக லோகம் தொழுகிறது. அவள் எக்காரியமும் செய்யாதிருக்க அவளையே ''மதுகைடபக்நி'' என்று கொண்டாடி, காரியம் செய்த கார் வண்ணனை அக்காளிகையின் கருவி மாத்திரமே என்கிறது. அதற்குப் பரிகாரமாகவே இப்போது இவள் கௌசிகீயை வெளிப்படுத்தி விட்டு ஆனந்த காளியாக நின்றபோது இக்காளியை எவரும் பொருட்படுத்தவேயில்லை. இவளுடைய சத்திய சக்தியாக வந்த சரஸ்வதிக்குத்தான் எல்லாப் பெருமைகளும் சேர்ந்தன. இதற்கும் முன்பே, எடுத்த எடுப்பிலேயே, இவள் அலட்சியத்துக்குத்தான் தன்னை ஆளாக்கிக் கொண்டாள். இவளை தேவர் இன்னார் என்றே புரிந்து கொள்ளவில்லையே? அவர்களைப் பார்த்து இவளாக 'யாரைக் குறித்துத் துதி செய்கிறீர்கள்?' என்று

கேட்கும்படி அல்லவோ ஆயிற்று? அப்போதும்கூட 'உன்னைக் குறித்துத் தான்' என்று அவர்கள் கூறவில்லையே! பிரதம சரிதத்தில் விஷ்ணுவுக்கு ஏற்பட்ட அவமதிப்பு தீரவே உத்தம சரிதத்தில் தேவர்கள் விஷ்ணு மாயையைத் துதிக்குமாறும், தன்னை அறியாதவாறும் செய்து பிராயச்சித்தம் செய்தனளா?

இன்னொரு காரணமும் சொல்லலாம் :

சத்தியம் அப்படியே நேராகத் தோன்றினால் அது தாங்கொணாததாக, புரிந்துகொள்ள இயலாததாக இருக்கிறது; எனவே அதை முதலில் ஒருவரும் புரிந்துகொள்ள முடியாததோர் உருவாகக் காட்டி, பிறகு அதனுடன் விஷ்ணு மாயையைக் கூட்டி வடித்தெடுத்து ஓரளவு நீர்க்கச்செய்ய வேண்டியதாகிறது. அப்போதுதான் அது தாங்கக் கூடியதாக, புரிந்து கொள்ளக் கூடியதாக ஆகிறது. முதலில் அடர்ந்த சத்தியமாக ஒரு கௌரியைக் காட்டி, பின்னர் அதிலிருந்து சற்றே நீர்த்த சத்தியமாக ஒரு கௌசிகீ உற்பவிக்க வேண்டியதாகிறது.

பொதுவாகவே பராசக்திக்குத் தன்னையே காட்டிக் கொள்வதைவிட தன்னிலிருந்து ஒன்றைக் காட்டுவதே லீலா விநோதமாக இருக்கிறது. அதற்குப் பிறகு, தன்னிலிருந்து வந்ததிலிருந்தும் மேலும் பலவற்றை வெளிப்படுத்தி மகிழ்கிறாள். தன்னை மறைத்துக்கொண்டு தன்னிலிருந்து வந்த உலகைக் காட்டுகிறாள். அதற்குப்பின் தன்னிலிருந்து வந்த மனிதர்களின் சிந்தனையிலிருந்து அருங்கலைகளை வெளிப்படுத்தி மகிழ்கிறாள். அந்தச் சிந்தனைக்கும் இவள்தான் மூலம். ஆனால் தன்னிடமிருந்து வந்ததாகக் காட்டிக்கொள்ளாமல், ஏதோ சர்வ சுதந்திர ஜீவமனம் ஒன்றிருப்பது போலவும் அதிலிருந்து இக் கலா சுந்தரங்கள் பிறந்தாற் போலவும் காட்டுகிறாள். எதிலிருந்தும் அவள் ஒதுங்கவே ஒரு காலும் முடியாது என்றாலும், இப்படித் தன்னைத் தானே ஒதுக்கி வைத்துக் கொள்வது போன்றதொரு எளிமை, விநயம், தியாகம், அல்லது மாயா லீலை அவளுக்கு இருக்கிறது! இதனால்தான் முன்பு மத்திம சரிதத்தில் மகாலக்ஷ்மியாக ஆவிர்பவித்தபோது தன்னைச் சிறியவளாக ஆக்கிக்கொண்டு, ஏனைய தேவர்களின் சக்தியிலிருந்தே தான் உண்டானது போலவும் அவர்களது ஆயுதங்களாலேயே தனக்கு வெற்றி கிடைத்தது போலவும் நாடகம் ஆடினாள். இங்கும் தான் ஸ்வயம்பு எனக்காட்டாமல், இன்னொன்றில் பிறந்ததாக கௌரியில் பிறந்த கௌசிகீ காட்டுகிறாள். பிறப்பற்று என்றும்

உள்ளது வேறொன்றில் பிறந்ததாகக் காட்டுவது தன்னையே குறைத்துக் கொள்வதுதான். அதிலே ஓர் அடக்கம், பணிவு உள்ளடங்கியிருக்கிறது.

அதோடுகூட ஒரு புது உருவில் உற்பவித்தால்தான் அடியார்களுக்கு, 'நம் பொருட்டே, நம் காரியத்துக்கென்றே இதோ ஒன்று ஆவிர்பவித்துவிட்டது. நமக்கு இஷ்டசித்தி நிச்சயம்' என்ற உறுதி உண்டாகும். தெய்வங்கள் கூட ஜீவர்களுக்குப் 'பழசாகி' விடுகின்றன! 'புதிசாக' அவர்களுக்கென்றே வந்தால்தான் பூரண ஆற்றலோடு காரியம் செய்யும் என்று எண்ணுகிறார்கள்! இதற்கும் மகா பெருந்தெய்வம் வளைந்து கொடுக்கிறது, தழைந்து கொடுக்கிறது. அதனால்தானே அவ்வப்போது வேறு வேறு அவதாரங்களை எடுக்கிறது?

இங்கு ஸப்தசதீ அவதாரங்களில் திருமாலின் உடலினின்று காளியாகவும், ஸர்வ தேவர் உடலினின்றும் லக்ஷ்மியாகவும், தன்னுடலிலிருந்தே சரஸ்வதியாகவும் வெளிவந்திருக்கிறாள். சிவதூதி என்பவள் இக் 'கௌசிகீ சரஸ்வதி'யிடமிருந்தே வெளிவரப் போவதைப் பின்னால் பார்ப்போம். கர்ப்பத்தில் அடைபட்டுக் கிடக்கும் அவதி ஜீவருக்கு மாத்திரம் இருக்கவேண்டாம் என்பதால் தானும் இன்னொரு சரீரத்தில் அடைபட்டிருப்பது போல் காட்டி வெளிப்படுவாள் போலும்!

அநுதாப மயமான பரசிவை அன்று விஷ்ணுவை மாயையில் ஆழ்த்தி உறங்கச் செய்து, பிறகு அவரது மாய நீக்கத்துக்காக காளி என ஆவிர்பவித்ததாக உலகை எண்ணச் செய்து விட்டாள்! அதற்குப் பிரதியாக இப்போது தன்னிலிருந்தே விஷ்ணுமாயை கலந்த சத்திய சரஸ்வதியை [illegible]ங்கிவிட்டாள்.

கௌ[illegible]ன் ஆவிர்பாவத்துக்கு 'தேவீ பாகவதம்', 'மாகாத்மிய[illegible] இரண்டிலும் காணாத ஓர் அருமையான காரணத்தை 'சிவபுராண[illegible]ம்' நவில்கிறது. இதன்படி பூர்வத்தில் சும்ப - நிசும்பர்கள் பிரம்மனைக் குறித்துத் தவமியற்றி அவனைப் பிரஸன்னமாகச் செய்தனர். அசுரரின் வழக்கப்படி அவர்கள் மரணமின்மையை வரமாகக் கோர, வழக்கம்போல் பிரம்மாவும் நிபந்தனையின்றி இப்படி வரம் வழங்குவதற்கில்லை என்கிறார். அப்போது அவர்கள் தங்களை ஒரு ஸ்திரீயால் கொல்லவே இயலாது எனக் கருதி ஒரு பெண்ணினால் வதைக்கப்படலாம் எனக் கோருகின்றனர். உடனே மகாலக்ஷ்மி முன்பு மகிஷனை மாய்த்தது நினைவு வந்ததோ என்னவோ? அந்தப் பெண் ஆண்மகளின் சம்பந்தமின்றியே

ஒருத்திக்குப் பிறந்திருக்க வேண்டும் என்றும் ஒரு விசித்திர விதியைச் சேர்த்துக்கொள்கின்றனர். எந்த விசித்திரமும் பராம்பிகைக்குச் சமாளிக்கக் கூடியதுதானே? ஈசன் தொடர்பின்றி, தானே கௌசிகீயைப் பெற்றுத் தந்தாள் – தேவியின் தேக சம்பந்தமின்றி ஈசனே முருகனைப் பெற்றதுபோல.

கௌசிகீயே இனி அம்பிகை என்ற பிரம்ம மாசக்தியாக தொழப்படுபவளானாள். பிரம்மத்தின் உண்மை, இருப்பு அல்லது சத்திய அம்சம் (வேறு சரியான பதம் இல்லாததால் 'அம்சம்' என்று சொல்லவேண்டியிருக்கிறது) விசேஷமாக இவளில் பொலிய அதற்கு முரணாகத் தோன்றும் விஷ்ணுமாயையையும் அதோடு சற்றும் இடராமல், உறுத்தாமல் கலந்திருந்தது! எந்த விசித்திரமும்தான் அவளுக்கு சாதிக்கவல்லதாயிற்றே!

மகாசரஸ்வதி எனப்படும் இக் கௌசிகீ தேவிக்கு எட்டுக் கரங்கள். இவளை இதனால் அஷ்டபுஜை என்று சொல்வதுண்டு. அஷ்டாங்க யோகத்தால் அடையக்கூடியது சத்தியம். அதை வெறும் சத்தியம், வெறிச்சென்ற சத்தியம், ஞான ஆனந்தக் கலப்பற்ற கேவல சத்தியம் என்றுகூடச் சொல்வர். சுவாச மூலத்தையே ஆராய்ந்து மூச்சுக்காற்றைப் பிறப்பிக்கும் சத்திய ஆகாசத்தை அடைகிற யோகிக்கு அதை அடைவதில் ஞானபுஷ்டியும் ஆனந்த ஈரமும் ஏற்படாமல் அமைதி அமைதி அமைதியே வெற்றாக, வரட்டாகக் கிட்டுமென ஞானிகளும் பக்தர்களும் குறை கூறுவர். அதெப்படியாயினும் சத்–சித்–ஆனந்தமாகக் கூறப்படும் பிரம்மத்தில் சத்தான சத்தியத்தையே குறிப்பாக அஷ்டாங்கயோகி எய்துகிறான். (இம்மூன்றும் பிரிவற்றவை என்றாலும்கூட பரிபூரணமாக ஐக்கியம் ஏற்படும் வரை சாதனா மார்க்கங்களில் மூன்றில் ஒன்றே தலைதூக்கியிருக்கும்.) இதற்குப் பொருத்தமாகவே யோகத்தின் அஷ்டாங்கங்களும் அஷ்டகரமாக வந்தது போல் பொலிபவள் சத்திய சரஸ்வதி. இவள் உருவகிப்பதால் யோகத்துக்கே யோகதசை தான்!

எண்குணத்தான் என்றே இறைவன் சிறப்பிக்கப்படுகிறான். தயை, மன்னித்துத் தாங்குவது, அசூயையின்மை, தூய்மை, பிரயாசையின்றிச் செயலாற்றும் திறன், சுபசிந்தனை, அற்பத்தனமின்மை, பற்றின்மை ஆகியனவே அஷ்ட குணங்கள். இவற்றைக் குறிப்பிடவே அன்னை எண்கரம் கொண்டனள். எட்டுத் திக்கும் வியாபித்தவள் என்பதற்கும் இதுவே அடையாளமாம். ஈசுவரன் அஷ்ட மூர்த்திகளாக உருக்கொண்டிருக்கிறான். இவள் ஒரே

மூர்த்தியில் அஷ்டகரத்தால் அனைத்துருவமுமானவள். எண்கைகளை எண்கையில் பல தத்துவார்த்தங்கள் தோன்றும்.

பண்டைய சிற்பங்கள் பலவற்றில் எட்டுக்கை கொண்ட துர்க்கையைக் காண்கிறோம். ஆனால் இச் சிற்பக் கரத்திலுள்ள கருவிகள் மகா சரஸ்வதியுடையவையாக இல்லை. இச்சிற்பங்களில் அமைந்துள்ள ஆயுதங்களையே கைக்கொண்ட இன்னொரு தேவி உண்டு. அவள் நவதுர்க்கை என்ற ஒன்பதில் ஒருத்தியான ஜாதவேதோ துர்க்கா. அவளது தியான ச்லோகத்தை ('வித்யுத்தாம ஸமப்ரபாம்') நவராத்ரி நாயகியரான காளி, லக்ஷ்மி, சரஸ்வதி மூவரும் சேர்ந்த சமஷ்டி மூர்த்தியின் மந்திரமான நவாக்ஷரிக்கு அதிதேவதையான பராசக்தியின் தியான சுலோகத்துடனேயே சேர்த்துச் சொல்லும் ஒரு மரபும் உண்டு. அச் சுலோகம் இந்த எட்டு ஆயுதங்களைக் கூறும்: சக்கரம், கதை, கத்தி, கேடயம், அம்பு, வில், பாசக்கயிறு, 'ஜாக்கிரதை' என அச்சுறுத்தும் வகையில் நாலாவது விரலை நீட்டிய தர்ஜனி முத்திரை ஆகியனவாக. சிம்மத்தின் கழுத்தில் நிற்கும் இந்த ஸமஷ்டி தேவி மின்னொளிபோல் திகழ்பவள், தீ என தகிப்பவள். பயங்கரி, சந்திரசேகரி, முக்கண்ணி. இவளே துர்கை. இவளைச் சுற்றிலும் வாளேந்திய வீராங்கனைகள் சூழ்ந்திருப்பர் என்கிறது இத்தியான சுலோகம். மகாகாளி -மகாலக்ஷ்மி- மகாசரஸ்வதி - மகா சரஸ்வதியின் ஆவிர்பவமான சாமுண்டேசுவரி ஆகிய நால்வரையும் நவாக்ஷரி ஒருங்கே கூறும். இம்மந்திரத்தில் சகலமுமான பிரணவம் முதலில் வரும். இவ்வனைத்துத் தேவியரும் சேர்ந்தவளே மஹா துர்க்கை என்றும் எண்கரத்தாள் என்றும் கருதப்படுகிறது.

சமஷ்டிப் பராசக்தியுடனே இணைத்துக் கூறப்படும் ஜாதவேதோ துர்க்கையை விட்டு கௌசிகியான சரஸ்வதிக்கு வருவோம். இவள் வலது மேற்கரத்திலிருந்து தொடங்கி வலது கீழ்க்கரம் வரையிலும், பின்னர் இடது கீழ்க்கரத்திலிருந்து தொடங்கி இடது மேற்கரம் வரையிலும் வரிசைவாரியாக வைத்துள்ள ஆயுதங்கள் அம்பு, உலக்கை, சூலம், சக்கரம், சங்கம், மணி, கலப்பை, வில்.

விஷ்ணுவுக்குரிய சங்க சக்கரத்தால் ஜகத் பரிபாலனத்தையும்; உழுவதற்கான கலப்பையும் உழுததைத் தானியமாகக்

குற்றும் உலக்கையும் கைக்கொண்டதால் சிருஷ்டியையும்; சூலத்தால் சம்ஹாரத்தையும்; தநுர்பாணத்தால் இறுதி சம்ஹாரமான அஞ்ஞான நீக்கத்தையும்; ஓம்கார கண்டாமணியால் ஞான மோக்ஷத்தையும் காட்டுகிறாள்.

தர்மம் அதர்மம் இரண்டும் அவளாயினும் அவள் லோகாநுக்கிரக மூர்த்தியாகிற போதெல்லாம் தர்மம்தான் அவளைத் தாங்குகிறது. துர்க்கையாயினும், லலிதாம்பிகை யாயினும், புவனேசியாயினும், பார்வதியாயினும் எப்போதும் தர்மமாகிற சிம்மமே அவளுக்கு வாகனமாக அமைகிறது. முன்பு மகாலக்ஷ்மியை வகித்த சிம்மம்தான் மாகாளிக்கும் வாகன-ஆசனமாகக் கொள்ளப்படுகிறது. அதுவே இப்போது மகா சரஸ்வதியைத் தாங்கவும் வந்து விட்டது. மகா சரஸ்வதி இமயவாசினியாதலால் இவளுக்கு இயல்பாகவே சிம்மம் வாகனமாகிறது. அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மிக்கு இமவான்தான் சிங்கத்தை அளித்தனன் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

மகிஷனுடன் போரில் அமித பராக்கிரமம் காட்டியதால் 'ரணசண்டி' எனப்பட்ட அம்பிகை, இப்போது சாந்தமாக இமயகிரியில் அமர்ந்து துதியைக்கேட்டு 'கிரிசண்டி' எனக் கியாதி பெற்றாள். 'அயிகிரிநந்தினி' என்று இவளை மகிஷமர்த்தனித் துதி தொடக்கத்திலேயே போற்றுகிறது. 'கிரம்' என்றால் வாக்கு என்றும் பொருள். வானவரின் வாக்குமாலையை ஏற்று வாக்தேவியாம் சரஸ்வதிக்கும் ஆதாரமான மகா சரஸ்வதியாக ஆனந்தமுடன் அமர்ந்திருந்தாள்.

பனிமலைக் கொடிமுடியில் சிம்மத்தின்மீது ஒயிலாக வீற்றிருந்த வெண்மயிலை மன அரங்கில் மனனம் செய்வோம்! இப்போது அவள் அமைதியாக உள்ள நிலையிலேயே நாமும் அமைதியாக அவளைத் தியானிக்கலாம். விரைவிலேயே கிரிசண்டி அமைதியைக் கலைத்து ரணசண்டியாகப் புறப்படப் போகிறாளாக்கும்!

2. புகைந்தனன் புகைக் கண்ணன்!

சண்டனும் முண்டனும் சும்ப-நிசும்பரின் அணுக்கத் தொண்டர்களாவர். முண்டம் என்பது தலையற்ற உடம்பைக் குறிக்கும். தலை புத்திக்கு இருப்பிடம். புத்தியின்றி வெறும் மிருகபலம் மட்டும் கொண்டு, மனம் ஆடுகிறபடி எல்லாம் ஆடிக் கொண்டிருப்பவனே முண்டன். அறிவற்றவனை 'அட முண்டமே' என்கிற வழக்கம் இப்போதும் உள்ளதே!

இதற்கு மற்றொரு புறத்தில், மனத்துக்குரிய உணர்ச்சிகள் இல்லாமல் வெறும் மூளை மட்டும் படைத்திருந்தால் அப்போது அன்பும் அறமும் அற்ற வெற்று சாதுர்யத்தைத்தான் பார்க்கிறோம். சாதுர்யத்தோடு எல்லையில்லாத செருக்கும் திமிரும் அறிவினால் ஏற்படுகிறது. இந்தக் கொழுப்பைத்தான் 'சண்டன்' என்பது. சண்டிகை தனக்கு உண்மையாகவே உள்ள மகிமையால் மதர்த்திருப்பாள். சண்டனோ மனத்தின் மாண்புகள் ஏதும் இல்லாமலே மதம் பிடித்திருக்கிற வெற்று மூளைக்காரன்.

மனமும் புத்தியும் இணைகிறபடி இணைந்தாலே ஜீவன் சத்திய வாழ்வுக்குத் திரும்ப முடியும். இரண்டும் தனித் தனியாக இருந்தால் அசத்தியத்துக்கே துணை நிற்கும். அசத்திய மயமான சும்ப-நிசும்பருக்குத் துணைவராக நின்றனர் சண்ட-முண்டர்கள். இருவரும் எப்போதும் ஒன்று சேர்ந்தே காணப்படுவார்கள்– ஆனாலும் ஒருவரில் இன்னொருவரின் தன்மை துளிக்கூட உள்ளூர இல்லாமலேதான்! மிருக பலத்துக்கு ஒருவிதமான கொழுப்பு; மூளை பலத்துக்கும் இன்னொருவிதமான கொழுப்பு; இருவருக்கும் ஒரே போல் இருந்த இந்தக் கொழுப்பு என்கிற அம்சம்தான் அவர்களை ஒன்று சேர்த்து வைத்தது — ஒருவரில் இன்னொருவரின் இழைப்பு அல்ல.

சண்டனும் முண்டனும் தமது அசுர அதிபனின் ராஜதானியான பனிமலையில் இஷ்டப்படி திரிந்து கொண்டிருந்தனர். அப்போது சாக்ஷாத் கௌசிகீ தேவீ சிம்மம் மீது திகழ்ந்த திவ்வியக் கோலத்தை அகஸ்மாத்தாகக் கண்டுவிட்டனர்!

தேவர்கள் இவளைத் துதித்த பின் உருக்கரந்து விட்டனர். இவள் அவர்களுக்கு அபயமும் அஞ்சலும் வாய் திறந்து சொல்லவேயில்லை; சரஸ்வதி என்று வாக்தேவியின் பெயர் பூண்டிருந்தும் மௌனமே சாதித்தாள். ஆனால், எந்த வாக்கிலும் தரவொண்ணாத ஆறுதலை, நிம்மதியை வானவரின் மதியில் உண்டாக்கிவிட்டாள். எனவே அவர்கள் தங்கள் காரியம் முடிந்தேவிடும் என்ற உறுதியுடன் தாற்காலிகமாக அந்தர்தானமாயினர்.

அந்தக் காரியத்தைத் தொடங்குவதற்காகவே அவள் சண்ட-முண்டரை இங்கு தருவித்து, அவர்கள் தன்னைப் பார்க்குமாறு செய்தாள்.*

லாவண்யப் பிரவாகமாக இருந்த அம்பிகையைக் கண்ட மாத்திரத்தில் சண்ட-முண்டர்களுக்கு தங்களது மன்னனான சும்பனின் நினைவுதான் வந்தது. இவளை நம் அரசன் பெண் கொண்டால் எத்துணை நன்றாக இருக்கும் என எண்ணினர்.

அவர்களுக்கு அத்தனை ராஜ விசுவாசம்! தங்களது ராஜனிடம் கட்டுப்பாடு! அழகியைத் தாங்களே அநுபவிக்கிற ஆசை உண்டாகவில்லை. இப்படித்தான் நாமும் தவறான போக்குகளுக்கு ஸ்வதாவாகக் கட்டுப்பட்டிருக்கிறோம். நல்லனவற்றுக்கு அந்த அளவு இயற்கையாகக் கட்டுப்படக் காணோம். தீமைக்கு இப்படி ஒரு ஈர்ப்புச் சக்தி!

சும்பனிடம் விரைந்தனர் சண்ட-முண்டர். ஒரே குரலில் எடுத்தோதினர்:

''மகராஜன்! இந்த இமாலயத்துக்கே புத்தொளி ஊட்டும் பேரழகி ஒருத்தியை இன்று கண்டோம். அவள் பார்த்தோர் மனத்தை அப்படியே அபகரித்து விடுகிறாள். இப்படிப்பட்ட உத்தமமான ஓர் உருவம் இதுகாறும் எவராலும் காணப்பட்டதில்லை எனலாம். அவள் யார் என்று தாங்கள்

* பாகவதப்படி, பார்வதியின் கோசத்திலிருந்து வெளிவந்த கௌசிகீயே கரிய காளி எனப்படுகிறாள். இவள் வெளிவந்த பின் பார்வதி இவளைத் தன் சேடியைப் போல உடன் வைத்துக் கொள்கிறாள். பிறகு இவளையும் அழைத்துக் கொண்டு சத்துரு நகரின் எல்லையில் உள்ள பூங்காவை அடைந்து, இன்னிசை படைக்கிறாள். அது கேட்டு அங்கு சண்ட-முண்டர்கள் ஈர்க்கப் படுகின்றனர்.

விசாரித்து அறிய வேண்டும். அவளை அறிந்தால் மட்டும் போதுமா? அவளைத் தாங்கள் அடைந்தும் ஆகவேண்டும்.''

இவர்கள் அவள் யார் என்று கேட்டறியாமலே அரசனிடம் வந்துவிட்டனர். ஏனெனில் கண்ட மாத்திரத்தில் அந்த ராஜராஜேசுவரி ஓர் அரசர்க்கரசியாக உன்னத ஸ்தானத்தில் இவர்களுக்குத் தெரிந்திருக்கிறாள். அப்படிப்பட்டவளைச் சாமானியர், ''நீ யார்?'' எனக் கேட்கலாகுமா? இப்படிப்பட்ட வளை ஒரு மன்னன்தானே இன்னார் என்றறியத் தூது அனுப்பலாம்?

'நீ அவளை அறிய வேண்டும்' என்றும் 'அடைய வேண்டும்' என்றும் இவர்கள் சொல்கிறார்கள். அம்பாளை மட்டும் உள்ளபடி அறிந்து, அடைந்துவிட்டால் அதுதானே சத்திய சாக்ஷாத்காரம், அதுதானே பிரம்ம ஞானம், அதுதானே மோக்ஷ ஆனந்தம்? ஒன்றை உள்ளபடி செய்வதற்கும், திரித்துச்செய்வதற்குமிடையே எத்தனை வேறுபாடு? அம்பாளின் அன்பை அன்றி அந்தஸ்தை அறியவும், அவளை அன்னையாக அன்றி மனைவியாக அடையவும் முயற்சி செய்தால், அதுவே மோக்ஷத்துக்கு நேரெதிராக நரகத்தில் சேர்ப்பதாக அல்லவோ ஆகிறது? ஆனாலும் க்ருபாகரியான அம்பிகையோ இவர்கள் 'அறியவேண்டும், அடைய வேண்டும்' என்ற வார்த்தைகளைச் சொன்னதற்காகவே அதை உத்தமப் பொருள் கொண்டு அங்கீகரித்தாற்போல், கடைசியில் சம்ஹாரத்தால் அசுரருக்கும் தன்னை அறிவித்து, அடைவித்து மோக்ஷத்திலேயே அல்லவோ அணைத்துக் கொள்ளப்போகிறாள்? மனத்தை அபகரிப்பவள் என்று இவர்கள் சொன்னார்கள். மனம் அடியோடு மகாசக்தியிடம் இழக்கப்பட்டால்தான் ஆத்ம தரிசனம் உண்டாகும். கடைசியில் இந்த அசுரவாக்கையும் அம்பிகை காப்பாற்றத்தான்போகிறாள்! பித்ருவாக்கிய பரிபாலனம், மாத்ரு வாக்கிய பரிபாலனம் இவைபோல 'சத்ரு வாக்கிய பரிபால்னம்,' என்றே அம்பாள் விஷயமாக ஒன்றைச் சேர்த்துவிடலாம் போல் இருக்கிறது! பாகவதப்படி, முன்பு மகிஷன் இவளிடம் அசம்பாவிதமாகக் காமவார்த்தைகளை மொழிந்தபோது இவளே வெளிப்பட, ''நீ என்னிடம் 'சரணாகதி' என்றும், 'உன் அடிமை' என்றும் மோக மயக்கத்தில் சொன்னதையே பக்தியில் கூறியதாகக் கொண்டு க்ஷமிக்கிறேன்'' என்றனள் அல்லவா? பக்த வாக்கிய பரிபாலனம் செய்த பகவர் பலர் உண்டு; ஆனால் பகைவர் வாக்கிய பரிபாலனத்தை பகவதி ஒருத்தியே செய்ததாகத் தெரிகிறது!

சண்ட-முண்டர்கள் பேசுகிறார்கள். அரக்கர்களே யாயினும் மிகுந்த காவியச் சுவையுடன் பேசுகிறார்கள். மாற்றான் வீட்டு மல்லி என்பதால் மணம் இல்லை என்பானேன்?

''அரசே! இவள் பெண்மணி என்றாலும் சாதாரண மணியில்லை; பெண் குலத்தின் ரத்தின மணி இவள். இம்மணியின் அங்கங்களிலிருந்து எழுந்த காந்தி வெள்ளத்தில் திசைகள் யாவும் முழுகியுள்ளன. தைத்யேந்திர! அவளை நேரில் கண்டால்தான் தங்களுக்கு நாங்கள் சொல்வது புரியும்.

''ஒவ்வோர் இனத்திலும் உயர்ந்ததாக எது இருக்கிறதோ அதை அந்த இனத்தின் ரத்தினம் என்று சொல்கிறோம். 'ராஜா ரத்னஹாரி' என்றபடி திரிலோகத்தில் பல இனங்களில் ரத்தினமாக இருக்கும் தலையாய வஸ்துக்கள் தங்கள் இல்லத்திலேயே உள்ளன. ஆம் பிரபு! இந்திரனின் ஐராவதத்தை கஜரத்தினம் என்பர். அது தங்களால் தேவலோகத்திலிருந்து பறித்து வரப்பட்டது. அவ்வாறே அசுவ ரத்தினமான அவனது உச்சைசிரவமும் அந்த உச்சி லோகத்திலிருந்து தங்கள் இடத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பிரம்மனின் வாகனத்தை ஹம்ஸரத்தினம் என்பர். தங்களுக்கு வரம் தந்த பிரம்மனிடமிருந்தே அந்த ரத்தினத்தையும் கவர்ந்து வந்தீர்கள். இதோ அங்கணத்திலேயே நம் கண்முன் அது காணப்படுகிறது. குபேரனிடமிருந்த பத்ம நிதி என்பது செல்வக் கிழிகளுள் ரத்தினமாகக் கருதப்படுவது. யக்ஷலோகத்தை வெற்றிகொண்ட தாங்கள் அதனையும் ஸ்வீகரித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆபரணங்களுள் ரத்தினமாகக் கருதப்படுவது கடலரசனுக்குரிய வாடாத்தாமரை மாலையாகும். 'கிஞ்ஜல்கினீ' என்ற அந்த ரத்தினத்தை உம்மிடம் கப்பமாகச் செலுத்தினான் தோல்வி கண்ட சமுத்திர ராஜன்.''

முன்பு மத்திய சரிதத்தில் மகாலக்ஷ்மிக்கும் இவன் வாடாத தாமரை மாலைகள் இரண்டினை அர்ப்பணித்ததாகப் பார்த்தோம். மஹிஷ வதம் ஆனபின் அம்பாள் தேவரை யதாஸ்தானத்தில் நிலைநிறுத்தியபோது, அவர்கள் தனக்குத் தந்த ஆயுதங்களையும் ஆபரணங்களையும் மீளவும் அவர்களிடமிருந்த ஆயுத ஆபரணங்களில் ஐக்கியமாக்கிவிட்டே அந்தர்தானமாகியிருப்பாள் போலும். அவற்றில் ஒன்று இந்த கிஞ்ஜல்கினியாக இருக்கலாம். ஏனைய தேவர் ஓர் ஆயுதத்திலிருந்து இன்னோர் ஆயுதத்தைப்

படைத்துத் தந்தது போலன்றி, மூல மாலையையே சமுத்திர ராஜன் அம்பாளுக்குத் தந்ததாகத்தான் மூலநூலிலிருந்து ஏற்படுகிறது. அவ்வாறிருப்பினும், தேவி அந்தர்தானமாகுமுன் அதைக் கடலரசனுக்கே மீண்டும் தனது பிரஸாதமாகத் தந்தாள் என்று கொள்ளலாம்.

''அரசே! மன்னர்களுக்கெல்லாம் வெண்கொற்றக் குடை உண்டு. ஆயினும் வருணனுடைய தகதகக்கும் தங்கக் குடைக்கு இணையில்லைதான். மழைக்குப் பிடித்துக் கொள்ளும் எந்தக் குடையையும் விட மழையதிபனே கொண்ட குடைதான் அழகில் விஞ்சியது. அந்த சத்ர ரத்தினம் அவனால் தங்களுக்கு அளிக்கப்பட்டது. தேர்களில் பரம உத்தமமானது பிரஜாபதியுடையது என்பர். அது பழைய கதை. இப்போது அந்த ரதரத்னம் எங்களைப் பிரஜையாக்கிக்கொண்ட பதியான தங்கள் வசம்தான் உள்ளது. ஆயுத ரத்தினமாம் யமனுடைய சக்தி ஆயுதம் — யார் மீது ஏவப்படுகிறதோ, அவரது உயிரையே தப்பாமல் வெளியே கிளப்புவதால் 'உத்க்ராந்திகா' என்று பெயர் பெற்ற சக்தி ஆயுதம் — அதுவும் யமனுக்கு யமனான தங்களிடமே உள்ளது. அக்னியில் இட்டால் பொசுங்குவதற்குப் பதிலாக, அக்னியில் காய்ச்சியே பொன்னெனப் புடமிடப்பட்ட இரு வஸ்திர ரத்தினங்களைத் தீக்கடவுள் தங்களுக்குத் தந்திருக்கிறான்.

''தங்களிடம் இல்லாத மற்ற 'ரத்தினங்கள்' யுவராஜ ஸ்தானத்தில் உள்ள தங்களது தம்பியார் நிசும்பரிடத்தில் உள்ளன. வருணனின் குடை உம்மிடம் இருக்க, வருண பாசமானது நிசும்பராஜனிடம் உள்ளது. இவ்வாறே கடலரசின் கிஞ்ஜல்கினீ மாலையைத் தாங்கள் ஏற்றிருக்க, ஆழ்கடலில் விளைந்த எல்லாவித ரத்தினக் கற்களையும் நிசும்பர் உடைமையாக்கிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவரும் தம்மை உங்களுடைய உடைமையாகத்தான் கருதுகிறார். எனவே எல்லா ரத்னங்களையும் அநுபவிப்பவர், அநுபவிக்க வேண்டியவர் தாங்களே என்றாயிற்று.

''அவ்வாறிருக்க, ஹிமாலய சிகரத்தே அழகுச் சிகரமாக நாங்கள் கண்ட இந்த ஸ்திரீ ரத்னம் மட்டும் ஏன் தங்களது அநுபோகத்தில் இல்லாதிருக்கவேண்டும்? இப்படியொரு நாரீமணியிருப்பதைத் தாங்கள் முன்னர் அறியவில்லையா? அறிந்திருந்தால் இந்தக் கல்யாணியைத் தாங்கள் எப்படிக் கல்யாணம்

செய்துகொள்ளாதிருக்க முடியும்? இப்போதேனும் இவளைக் கிரகித்து வர முனையுங்கள் பிரபோ!'' என்று முடித்தான்.

'அநுக்கிரகிக்க வேணுமம்மா!' என்று பிரார்த்திக்க வேண்டியவளை கிரகிக்க வேண்டும் என்று கோளாறாக எண்ணினார்கள். அவளை யாரே கிரகிக்க முடியும்? அறிவாலோ, ஆற்றலாலோ, மனத்தாலோ, தனத்தாலோ கிரகிக்க ஒண்ணாதவள் அல்லவா அவள்? வெறுமே அவளை கிரகிக்கச் சொல்லவில்லை இவ்வசுரர்; ராஜக் கிருகத்துக்கு அழைத்து வந்து பாணிக்கிரகணம் செய்து கொள்ளுமாறு மன்னனுக்குத் தூபம் போடுகிறார்கள். அவளோ பாணிக் கிரகணத்துக்கா வந்திருக்கிறாள்? இவர்களது பிராணக் கிரகணத்துக்காகவே அல்லவா ஆவிர்பவித்திருக்கிறாள்?

ஊழ்வினை பலனளிக்கத் தொடங்கிவிட்டது. சண்ட-முண்டர் தூபம் போட்டது சும்பனுக்கு நன்கு தலைக்கேறித் தாபத்தை உண்டாக்கி விட்டது. முன்னரே சொன்னதுபோல் அசத்தியமானது சத்தியத்தைத் தன் இழுப்புக்குக் கொண்டுவர, தன்து ஆளுகைக்குள் அடக்கிக் கொண்டுவர, மிகவும் ஆர்வம் காட்டும். அதேபோதில் அதற்கும் சத்தியமே ஒரு விதத்தில் ஆதாரமானதால் அதனிடம் இதற்கு ஓர் ஈர்ப்பும் இருக்கும். இது அசத்தியமானபடியால் அந்த ஈர்ப்பு தன்னைப் படைத்த ஒன்றைத் தாயெனக் கொள்ளும் தூய அன்பாக இல்லாமல் அதைப் பெண்டாள எண்ணும் சண்டாள வேட்கையாக இருக்கும்.

எண்ணவும் எழுதவும் தகாத உறவை லோக ஜனனியிடம் ஏற்படுத்திக்கொள்ள வெறிகொண்டான் அசுரேந்திரன்.

உடனே, அழகான குரலெழுப்பிப் பேசும் கண்டத்தைப் பெற்றதால் 'ஸுக்கிரீவன்' என்றே பெயர் பெற்ற அசுரனை அழைத்தான் சும்பன். தன் சார்பில் அதிசாதுர்யமாக அம்பாளிடம் தூது பேசும்படி ஸுக்ரீவனுக்குக் கட்டளையிட்டான்.

இந்த ரஸாபாசத்தில் கூட ரத்தபாச அழகும் இழைவிடுகிறது. தன்னிடம் பல ரத்தினங்கள் இருப்பதுபோல் நிசும்பனிடமும் சில ரத்தினங்களைவிட்டு வைத்திருக்கும் அன்பு அண்ணன் அல்லவா சும்பன்? இப்போது அதை எண்ணிப் பார்க்கிறான் சும்பன். உலகின் உயர்ந்த ரத்தினங்களில் இதுவரை தன்னைச் சேராமல் ஏதாவது இருக்குமாயின் அது இனிமேல் ஒன்று, தன்னைச்சேர வேண்டும்; அல்லது ஏற்கனவே

ரத்தினாதிபதியாக உள்ள தம்பியைச் சேரவேண்டும் என்று எண்ணுகிறான். எனவே, விட்டுக்கொடுக்க முடியாத காதலிலும் விட்டுக் கொடுத்து, அம்பிகை தனக்கோ அல்லது தன் தம்பிக்கோ தாரமாக வரவேண்டும் என்று தூது விடுக்கிறான்.

மூளைக் கொழுப்பும் (சண்டன்) மிருக பலக் கொழுப்பும் (முண்டன்) மெய்போல் மோசடி செய்யும் அசத்தியத்தின் (சும்பன்) பொருட்டு சத்தியத்தை (அம்பிகையை) 'தியாகம்' செய்தன. இந்த மோசடியும், மெய்யைப்போல வேஷம்கூடப்போடாத கலப்படமற்ற பொய்க்கு (நிசும்பன்) அவளைத் 'தியாகம்' செய்யத் தயங்கவில்லை. தீய சக்திகளுக்குள் இப்படி ஒரு நேசபாவம்! ஒன்று இன்னொன்றுக்காக விட்டுக்கொடுக்க முன்வருகிறது. ஒரு நோய் அதைவிடக் கொடிய இன்னொரு நோய்க்குத் தான் பற்றியவரைக் காட்டிக்கொடுத்துவிட்டுத் தான் விலகுவதுபோல் இருக்கிறது!

சும்பன் முற்றிலும் நிசும்பனுக்குத் தியாகம் செய்யவில்லை தான். தனக்குக் கிட்டினால் கிட்டட்டும், இல்லாவிடில் அவனுக்குச் சேரட்டும் என்றே எண்ணினான். சண்ட-முண்டருக்கு இவன் அதிபதி என்பதுபோல், நிசும்பன் இவனுக்கு அதிபன் அல்லவே! இவனுடைய ஆதீனத்திலே உள்ள இளையோன்தான் அவன். அடியோடு இல்லாததையே சொல்லும் அசல் பொய்யர்களின் காரியம் எடுபடாது. ஆனால் இருப்பதை மாற்றிச் சொல்லும் மோசடிக்காரர்களே தலைவர்களாவும் தலையெடுக்கமுடிகிறது. அப்போது இயல்பான உள்ளொற்றுமையால் அசல் பொய்யர்கள் அவர்களை ஆசிரயிக்கிறார்கள். அவர்களும் இவர்களைப் போற்றுகிறார்கள். சில சமயங்களில் இவர்களுக்கு வாய்க்கரிசியாக சிலவற்றை விட்டும் கொடுக்கிறார்கள். இதெல்லாம் பிரத்தியட்சத்தில் பார்ப்பவை தாமே!

சுக்ரீவனிடம் சும்பன், ''என்னுடைய காதல் மொழிகள் அவள் காதில் ஏறுகிற வகையில் வகைதொகையாக, பக்குவமாக, பார்த்துப் பார்த்துப் பேச வேண்டும். இனிக்க இனிக்க எடுத்துரைக்க வேண்டும். எப்படிப் பேசினால் அவள் அப்போதே என் மீது ஆராக் காதல் கொண்டு ஆர்வமுடன் ஓடி வந்து சேருவாளோ, அப்படிப் பேசவேண்டும்! என் காரியத்தை எத்தனைக்கெத்தனை எளிதில் ஈடேற்ற முடியுமோ அப்படிச் செய்வது இனி உன் சாமர்த்தியம்'' என்றான்.

★ ★ ★

சுக்ரீவன் கிரிசண்டியை அணுகினான். இயல்பாகவே தனக்குள்ள புத்தி சாதுர்யத்தையும், வாக்கு சாதுர்யத்தையும்

மன்னனின் உத்தரவினால் மேலும் மெருகிட்டுக்கொண்டு லட்சணமாக, — 'ச்லக்ஷ்ணமாக' என்பார் மேதஸ். 'ச்லக்ஷ்ணம்' என்றால் வழுவழுப்பாகவும் பளபளப்பாகவும் இருப்பது — அம்பிகையிடம் தூது மொழிந்தான்.

ஆனால் அத்தனையும் இந்த சத்திய சந்நிதானத்தில் கேலிக்கிடமாகத்தான் ஆயிற்று. தொடக்கத்தையே பாருங்கள். ''திரிலோகங்களுக்கும் பரமேசுவரனும், திதி குலத்தோரான அசுரர்களின் நாயகனுமாகிய சும்ப மகாராஜனால் உத்தரவிடப்பட்டு உன்னருகே வந்துள்ளேன், தேவீ'' என ஆரம்பித்தான்.

தன் மன்னன் மகிமையைப் பரக்கப் பிரகடனம் செய்துவிட்டால் அந்த மலைமங்கை மலைத்துப்போய் மாலையிடுவாள் என இவனுக்கு எண்ணம்.

ஆனால் சும்பனை 'திரிலோக பரமேசுவரன்' என்பதே சும்பனின் பிரதிநிதியாக, இல்லாததை இருப்பதாகச் சொல்லும் மோசடிதானே? வாஸ்தவத்திலேயே திரிலோக பரமேசுவரனாக உள்ள பரமசிவத்தைத்தான் அவள் தன்னின் சாரமாக நித்ய கலியாணம் செய்து கொண்டிருக்கிறாளே! இல்லாததை இருப்பதாகச் சொல்லும் சாமர்த்தியமானது, என்றும் உள்ள அந்த சத்தியதேவனை மணந்த சத்திய சக்திமுன் பரிஹாஸத்துக்குரிய அசட்டுப் பேச்சே ஆயிற்று.

அந்த சத்தியதேவியில் கனிந்திருப்பவளோ விஷ்ணுமாயை! அவள் செய்கிற 'மோசடி'க்கு முன்பு வேறு எவரது மோசடியும் எடுபடாது! இல்லாததை இருப்பதாகத் திரித்து இவன் மோசடி செய்கிறான். நிலைத்து இல்லாத உலகை உள்ளதாகக் காட்டும் அவளோ, அதோடு உள்ளதை இல்லாததாகத் திரித்தும் மோசடி செய்கிறவள். ஒன்றாக உள்ள பிரம்மத்தை ஒரு நாள் ஒன்றும் இல்லாமற் போகிற இத்தனை பிரபஞ்சங்களாக, ஜீவர்களாகக் காட்டுகிறவள் அன்றோ மாயாதேவி? உள்ளதை இல்லாததாகக் — உள இலவாக — காட்டுபவள் அவள். இன்றைக்கும் குழந்தைகள் தங்களுக்குள் சண்டை வந்தால் சமாதானம் செய்துகொள்ளும்போது, ''நான் சொன்னது சும்மாவுக்காக, உள உளாக் கட்டைக்குச் சொன்னேன். நீ அதை மறந்துவிடு'' என்று எதிராளியிடம் சொல்வதைக் கேட்கிறோம். 'உள இலவாகக் காட்டு'வதைத் தான் 'உளஉளாக்கட்டை' என்கின்றன! குழந்தைகள் வாக்கில் நீண்ட காலமாக வருவது பரம சத்தியமே என்பார் நம் காமகோடி யதீசுவரர். அழியாத ஒரே பிரம்மத்தைத்தான் ஒரு மகாசத்தியானது அழியும் பல போலக் காட்டுகிறது என்பதற்கு இதுவே பிரமாணமாகிறது.

இந்த 'மகா மோசக்காரி'யின் முன் ஸுக்கிரீவனின் மோசடி எம்மாத்திரம்? ஆக, அவளை சத்தியம் என்று வைத்தாலும் அங்கே மோசடி எடுபடாது! மோசக்காரி என்று வைத்தாலும் அவளுடைய பெரும் மோசடியின் முன் மற்ற எந்த மோசடியும் துச்சமாகத்தான் ஆகிறது! இந்த சும்பனும் தூதனும்கூட அவளிடமிருந்தே தோன்றியவர்கள் தாம். அதுவே தெரியாதபடி மோசடி செய்து கொண்டிருக்கிற மகா சாமர்த்தியக்காரியிடம் இவன் சாமர்த்தியம் செய்து அசடாகிறான்!

இவனை மேலும் பேசவிட்டு வேடிக்கை பார்க்கிறாள் மாதா.

''என் பிரபுவின் கட்டளை தேவர்களிடமும் தடையின்றிச் செல்கிற மகாசாஸனமாகும். திதி குலத்தாரிலும் இவருடன் பொருதவர் உண்டு. அவர்களையும் வென்று வாகை சூடியவர் அவர். அவர் உனக்குச் சொல்லியனுப்பியிருப்பதைச் செவிமடுப்பாய்'' என்று பீடிகை போட்டான் சுக்ரீவன்.

உள்ளர்த்தம் என்னவெனில் 'வானவர் தானவர் அனைவரும் இவன் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தே ஆவதால், நீயும் அதற்கு அடிபணியத்தான் வேண்டும்' என்பது.

இதில் ஒரு புது சமாசாரம், அமரரோடு மட்டுமின்றி அசுரரோடும் சும்பன் யுத்தம் புரிந்து வென்றிருக்கிறான் என்பதேயாகும். அவுணரை அவுணரே எதிர்த்ததாக அபூர்வமாகவே நாம் புராணங்களில் காண்கிறோம். அவர்கள் ஒன்று கூடியே தேவரை எதிர்ப்பர். சும்பன் தைத்யருடனும் சண்டையிட்டான் என்றால் இவனை அவர்கள் எவரும் பகைவனாக எதிர்த்துத் தாமாகப் போர் தொடுத்திருக்க மாட்டார்கள். ஆனால் வானவரையும், மானவரையும் வென்றபின் சண்டைக்குத் தினவு எடுத்த இவனே தானவரிலும் சிலரைப் பகைவராக்கிக் கொண்டு போர் செய்திருப்பான் போலிருக்கிறது!

''இனி நான் கொண்டு வந்துள்ள சும்ப மகாராஜனின் தூதுமொழியினைக் காது கொடுத்துக் கேளம்மே! அவர் சொல்கிறார்: 'மூவுலகு முற்றிலும் என்னுடையதாகும். தேவரும் எனக்கு வசப்பட்டவரேயாவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிய அவிர்பாகம் அத்தனையையும் சேர்த்து நான் ஒருத்தனே பெற்று வருகிறேன். மூவுலகிலும் ரத்தினமாக மதிக்கப் பெறும்

உத்தம வஸ்துக்கள் என்னிடமே உள்ளன. தேவ, கந்தர்வ, யக்ஷ, நாகர்களிடமிருந்த உத்கிருஷ்டமான செல்வங்கள் யாவும் இன்று எனதாகவே உள்ளன. சோபனே! பிரபஞ்சத்தில் நீயே ஸ்திரீ ரத்தினம் என நாம் கருதுகிறோம். (ராஜரீகப் பன்மை போட்டுப் பேசுகிறான்!) ரத்தினங்களை எல்லாம் அநுபவிக்க முழு உரிமையும் யோக்கியத்தையும் பெற்ற எம்மையே நீயும் வந்தடைய வேண்டும். என்னையோ, அல்லது என் தம்பி நிசும்பனையோ வரிப்பதற்கு நீ வரவேண்டும். ரத்தினங்கள் யாவும் குவிந்த இடத்துக்கு நீ வந்து சேரவில்லை எனில் நீ ரத்தினம் இல்லை என்றல்லவா ஆகிவிடும். நீ ரத்தின மில்லையா? (அம்பிகைக்குக் 'குல்லா' போடுகிறானாம்!) என்னை நீ அப்படியே பறித்துக் கொள்வதுபோல் வரித்துக்கொள். ('பரிக்கிரஹம்' என்பது மூலம். அவள் இவன் உயிரைப் பறிக்கவேதான் வந்திருக்கிறாள். இவன் வாய் மொழியாகவே அதை வரவழைந்து 'சத்ருவாக்கிய பரிபாலனம்' செய்ய நினைக்கிறாள் போலிருக்கிறது!) இதனால் உனக்கு ஈடிணையற்ற பரம ஐசுவரியம் உண்டாகும். (பரமேசுவரனின் ஐசுவரியம் இவள். **'ஐச்வர்யம் இந்துமௌலே:'** என்பர் மூகர். அப்படிப்பட்டவளுக்கு இவன் பரம ஐசுவரியம் ஏற்படச் செய்வானாம்!) இதை நன்றாகப் புத்தியில் ஆலோசித்து என்னை வரிப்பதில் மனம் கொள்வாயாக' — இதுவே என் ஆண்டையின் தூது மொழி'' என்று முடித்தான்.

உலகம் முழுவதையும் தாங்கும் தேவி இதைக் கேட்டுக் கொண்டாள் என்கிறார் முனிவர். உலகில் நடக்கும் எத்தனை எத்தனையோ அபத்தங்களையும் அவலங்களையும் தாங்கிக் கொண்டிருக்கிற அவளை அன்றி இந்தப் பிதற்றலை எவர் இடைமறிக்காமல் காதுகொடுத்துக் கேட்க இயலும்? கேட்டுக் கொண்டதோடு ஆயிற்றா? இந்த மகா அநுசிதமான வார்த்தையைக் கேட்டு அவளுக்குச் சிறிதளவேனும் சினம் மூளவேண்டுமே! சினத்துக்குப் பதில் சிரிப்பே வந்ததாம். கம்பீரமான சிரிப்பு. உள்ளுக்குள்ளேயே அலர்ந்து கொள்ளும் ஆழ்சிரிப்பு! **'கம்பீர அந்தஸ்மிதா'** என்று அற்புதமாகச் சொல்லும் மூலநூல். பரம மங்களையான துர்கா பகவதி உள்நகை பூத்துக் கொண்டாள்.

விஷ்ணு மாயையாக இவளைத் தேவர் பாவித்ததற்கேற்ப மாயவன் போலவே குறும்பு வந்துவிட்டது! குறும்பை மறைக்கும் அரும்புக் குறுநகையோடு மணி பவள வாய்

நிறந்தாள். தேவருக்கும் கிட்டாத தன் வசன பாக்கியத்தை அசுரனுக்கு அளித்தாள்.

''சத்தியமே சொன்னாய் அப்பா!'' என்று தொடங்குகிறாள். அப்படி இவள் சொல்வதே ஒரு மோசடிதான். மோசடியை வெல்ல மோசடிதான் வேண்டும்! எனவே அவனது மோச வார்த்தையை சத்தியமாக நம்பியது போல் பேசி மோசம் செய்கிறாள்! அம்மாவே அம்மா!

சொல்வாள் : ''சத்தியமே சொன்னாய் அப்பா! நீ கூறியதில் கொஞ்சம்கூடப் பொய்யே இல்லை. (எப்படித் துணிந்து மோசம் செய்கிறாள் மோட்ச தாயகி! குறும்பு, குறும்பு, அத்தனையும் குறும்பு!) சும்பன்தான் திரிலோக பரமேசுவரன். அதில் சந்தேகம் இல்லை. நிசும்பன் மட்டும் என்ன அவருக்குத் தாழ்ந்தவனா? அவன் வெல்லுவதற்கு இன்னொரு திரிலோகம் இல்லாத குறையால்தான் தமையனார் மட்டும் மூவுலக நாயகராக விளங்குகிறார். இவர்களில் ஒருவரை வரிப்பது எந்த வனிதைக்கும் பெரும் பாக்கியம்தான். ஆனாலும் அப்பனே, என் துர்பாக்கியத்தை என்ன சொல்வேன்? இப்படி சும்ப -நிசும்பர்கள் இருப்பதை முன்பு நான் ஏனோ அறிந்திருக்கவில்லை. அச்சமயத்தில் அற்ப புத்தியால் என் விவாகம் குறித்து ஒரு பிரதிக்ஞை செய்துவிட்டேன். ஏற்கெனவே செய்துள்ள அந்தப் பிரதிக்ஞையை இப்போது நான் எப்படிப் பொய்யாக்கக்கூடும்? அது மகாபாவம் அல்லவா? (செய்யாத பொய்ப் பிரதிக்ஞையைப் பொய்யாக்க எத்தனை பயப்படுகிறாள் மாயாம்பிகை!)

''என்ன பிரதிக்ஞை என்கிறாயா? எனக்குப் போர்ப் பயிற்சி நிறைய உண்டு. எனவே வீராங்கனை என்பதாக எனக்கு ஒரு கர்வம் உண்டு. கர்வம் வந்தால் கஷ்டம்தானப்பா! என்னுடைய புஜபல பராக்கிரமத்தில் ஏற்பட்ட இறுமாப்பினால்தான் நானே இன்னலைத் தேடிக் கொண்டேன். 'எனக்கு நிகரான பலம் படைத்தவர் எவரோ, என்னிடம் போருக்கு வந்து வென்று செருக்கைச் செறுப்பவர் எவரோ அவரையே மணாளனாக வரிப்பேன்' என்று பிரதிக்ஞை செய்துவிட்டேன். எனவே இப்போது கிடைத்தற்கரிய பேறாக சும்ப மகாராஜனின் அழைப்பு வந்திருந்தும்கூட, நான் உடனுக்குடன் அவரது மேலான உத்தரவுப்படியே செய்ய இயலாமலிருக்கிறது. மாமன்னரின் விருப்பத்தை உடனே ஈடேற்றாமல் நிறுத்தி வைக்க வேண்டியதாகிறது. தாற்காலிகமாக நிறுத்தி வைக்கிறேனேயன்றி மறுத்து மறுக்கவில்லை என்பதைக் கவனிப்பாய் அப்பனே! இப்போதே

நான் உன்னோடு வந்து அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும், என் பிரதிக்ஞைப்படி அவர் வந்து என்னைப் போரில் வென்று விட்டால் போதும். யுத்தத்தில் தோற்றபின் அவரது ஆணையை ஏற்பதில் தடையேயில்லை. எனவே நீ அவர்கள் என்னைத் தவறாக எண்ணிக் கோபிக்காத முறையில் என் சார்பில் இதமாக எடுத்துச் சொல்லி இருவரில் ஒருவரை அனுப்பிவை. சும்பனோ, நிசும்பனோ வரட்டும். என்னோடு யுத்தம் செய்து வெல்லட்டும். பிறகு என் கரம் பற்றட்டும். இது அவர்களுக்கு எளிதே இயலுகிற காரியம்தான். என் வார்த்தையை இவ்விதம் அவர் காத்துப் பிறகு பாணிக்கிரகணம் செய்து கொள்ளட்டும். (இவள் சத்ருவாக்கிய பாலனம் செய்யவில்லையா? அதுபோல் அவனும்தான் செய்யட்டுமே!) இதில் துளிக்கூட தாமதம் வேண்டாம். ஆம், நீ ஏன் இன்னும் இச்செய்தியுடன் சென்று அவர்களை விரைவுபடுத்தாமல் தாமதிக்கிறாய்? கிளம்பு...உம்..''

தாயான தன்னிடம் தீயான தகா விருப்பத்தை அவன் சொல்ல, பதிவிரதைகளின் சிரோமணியான நம் பாவன மாதா, அந்தத் தீக்கங்குகளை அப்படியே விழுங்கிச் செரித்து விட்டு, தேன் பிந்துக்களாக இப்படிப் பேசியதை என்னென்பது? ஆண் மரத்தைக் கூடத் தோஹனம் என்ற சடங்கில் தீண்ட மாட்டாத கற்புத் தெய்வம் என ஆசார்யாள் போற்றிய ஸதி தேவி, இரு அசுரரில் ஒருவர் தன் கரம் பற்றலாம் எனக் கூறியது, ஈசுவரன் விஷத்தை உண்டதற்கும் மேலான தியாகம்! இவளது பாதிவ்ரத்திய மகிமையை நம்பியே ஈசன் ஆலம் உண்டான். தன் மகிமையிலேயே நின்ற பரதேவதை சொல்லொணாத ஆலகாலச் சொல்லையும் ஜாலமாகச் செப்பிவிட்டாள்.

கொடுமைக்குக் கொடுமையை அழகுக்கு அழகு செய்தாற்போல் பாகவதத்தில் மேலும் சில (உள்ளூறிய விரசத்தையே ரசமாக்கிய) விஷயங்கள் காண்கின்றன. அதற்குக் கொஞ்சம் தாளித்துப் பார்ப்போம். அம்பாள் தூதனிடம் சொல்கிறாள்: ''என்னை ரத்தினம் ரத்தினம் என்றாய்! தனியே இருந்து ரத்தினத்தால் என்ன பயன்? பொன்னில் வைத்திழைத்தால் தானே அது ஆபரணமாகும்? அப்படி ஆபரணமாவதற்கே — பொன்னான சும்ப மகாராஜனால் வரிக்கப்பட்டு திரிலோகங்களிலும் ஒளி வீச வேண்டுமென்றே — தொலை தூரத்திலிருந்து இங்கு வந்திருக்கிறேன். அவரது கியாதியைக் கேட்ட நாளாக இப்படி ஆசை கொண்டேன். ஆனால் அவர் கியாதியை நான்

அறியாத ஒரு காலமும் இருந்தது. அது என் துர்பாக்கியம். அப்போது ஒரு நாள் என் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருக்கையில், நானே அவர்களைவிட அதிக பலசாலி என வெளியாயிற்று, 'எங்களை எல்லாம் அதிர அடிக்கிற உன்னை எந்த பலிஷ்டன் ஆட்டி வைக்கிறானோ, பார்க்கிறோம்!' என்று சகிகள் ஹாஸ்யம் செய்தனர். அப்போது விளையாட்டு வினையாகும் என்பதறியாமல், 'என்னை ஒருத்தன் ஆட்டி வைப்பதாவது? எவருக்கும் நான் அடிபணிய மாட்டேன்' என்றேன். 'அதெப்படி சாத்தியம்? ஒருவனைத் திருமணம் செய்து கொண்டுவிட்டால் அவனுக்கு அடங்கி அடிபணியத்தானே வேண்டும்? அதுதானே ஸ்திரீ தர்மம்? அதுதானே பாதிவ்ரத்யம்? விளையாட்டுக்குக்கூட இதை மறுத்துப் பேச முடியுமா?' என்று அவர்கள் மடக்கினர். இது என்னைச் சீண்டிவிட்டதுபோல் ஆயிற்று. அந்த வேகத்தில், 'வாஸ்தவம். ஒருத்தனை மணந்துவிட்டால் அவனுக்கு அடங்கித்தான் நடக்க வேண்டும். நானோ சண்டி! என்னால் அது முடியாது. அதனால் முதலுக்கே ஒரு நிபந்தனை போட்டு திருமணத்தையே முறிக்கப் பார்க்கிறேன். ஆம், இதோ சபதமாகச் செய்கிறேன்: என்னிடம் எவனொருவன் வந்து போரிட்டு என்னை வெல்லுகிறானோ அவனைத்தான் மணப்பேன்' என்று சூள் உரைத்து விட்டேன். அப்படி ஒருவன் இருக்கவே முடியாது என்பது என் தீர்மானம். சும்ப-நிசும் பாதியர் இருப்பது தெரிந்திருந்தால் இப்படிப் பிரதிக்ஞை செய்தே இருக்கமாட்டேனப்பா! முதலாவதாக அவர்களில் ஒருவரை மனமார மணந்து அடங்கி நடப்பதில் மகிழ்ச்சியே கொண்டிருப்பேன். இரண்டாவதாக, அவர்கள் போர் செய்தால் நிச்சயம் நான் தோற்றுப் போவேன் என்பதால் என்னை நானே அபஜயசாலியாக்கிக் கொள்கிற ஒரு சபதத்தை — என்னை நானே தோழிகளின் கேலிக்கு ஆளாக்கிக் கொள்ள வைக்கும் பிரதிக்ஞையை — செய்திருக்கமாட்டேன்.

''ஹூம், அதை எல்லாம் சொல்லி இப்போது பயன் என்ன? பிரதிக்ஞை செய்த பின்னரே சும்ப மகாராஜனின் வீரப் பிரதாபத்தையும், குணகண விசேஷங்களையும் அறிந்தேன். அவரை அடையும் பொருட்டே தனியாக இந்த ராஜதானிக்கு வந்துள்ளேன். ஆயினும் சத்தியப் பிரதிக்ஞையை முறிப்பது படு பாதகமாதலால் இப்போது அவர் வந்து என்னோடு போர் புரிய வேண்டும் என்ற அசட்டு வார்த்தையைச் சொல்ல வேண்டியதாகிறது. 'யுத்தத்துக்கு

வா' என்ற உளறலை ராஜசபையிலோ, நாலுபேரை முன் வைத்துக்கொண்டோ அவரிடம் சொல்லாதே. நீயே சிரிப்புக்கிடமாகி விடுவாய். அவரைத் தனியே அழைத்துச் சென்று காதோடு காதாகச் சொல்வாயாக'' என்கிறாள்.

எரிமலையாகச் சீறவேண்டிய இடத்தில் உள்ளூர ஹாஸ்யமாகவும் வெளிப்பட நேயமும் நயமும் பயமும் கலந்தும் அம்பிகை இப்படிப் பேசினாள். கற்புத் தெய்வம் அசுரருக்கு அநுகூலமாக இப்படிப் பேசியது எதற்காக? அவர்களுடைய கொடூரத்தை நமக்கு நன்கு வெளிப்படுத்துவதற்காகத்தான்! சும்பன் ஒரு பெண்ணை விரும்புகிறான்; அவளும் அவனை விரும்புகிறாள் என வைத்துக் கொள்வோம். அது உடனே ஈடேறமுடியாதபடி ஒரு தடை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக முழுக் குற்றப் பொறுப்பையும் தன் மீதே அப்பெண் சுமத்திக் கொள்கிறாள். காதும் காதும் வைத்தாற்போல் அத் தடையை அவன் நீக்கிவிடவேண்டும் என்றும் தழைந்து வேண்டுகிறாள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தேவ-மனித ஜாதியினர் என்ன செய்வர்? 'நீ சொல்வது மிகவும் வாஸ்தவம். அதன்படியே செய்வோம்' என்றுதானே அநுதாபத்துடன் சொல்லுவர்? ஆனால் அசுர ஜாதி அப்படிச் சொல்லாது. சும்பன் இவளை விரும்பிவிட்டானா? உடனே இவள் அவனை விரும்பாவிட்டால் கூட அவனிடம் வந்து விடத்தான் வேண்டும். அதற்கிடையூறாக சத்தியப் பிரதிக்ஞை இருந்தாலும் பாதகமில்லை. அதைக் கூசாமல் முறித்துவிட வேண்டியதுதான். எதிரொளியின் விருப்பம் - விருப்பமின்மை, பாவம்-புண்ணியம் எதைப்பற்றியும் அவர்களுக்குக் கவலையில்லை. தாங்கள் நினைத்தது நினைத்தபடி உடனேயே நடக்கவேண்டும். அதற்கு லவலேசம் கூட எதிராளி நிபந்தனை போடக்கூடாது. புதிதாக நிபந்தனை போடாததோடு, பழைய நிபந்தனையைக் கூடச் சொல்லக்கூடாது. இப்படி, வைத்ததே சட்டம் என்று அகம்பாவத் திமிர் கொள்வதே அசுர சுபாவம். 'தேவர்களும் எத்தனையோ தவறு செய்திருக்க, நிஷ்பட்சபாதி எனப்படும் தெய்வம் பல சந்தர்ப்பத்தில் அசுரரையே வஞ்சித்திருக்கிறது' என்று எண்ணுகிறவர்களுக்கு, அசுரர்கள் தேவரைவிட எத்தனை மடங்கு கொடியவர்கள் என்று காட்டவே அம்பிகை இப்படிப் பட்ட சந்தர்ப்பங்களைப் புனைந்திருக்கிறாள். எதற்கும் கட்டுப்புடாதவர்கள் அவுணர். நயத்துக்கும் பயத்துக்கும் ஒருபோல் கட்டுப்படாதவர்கள். பயத்துக்குக் கட்டுப்படாதவர் என்பதைக் காட்டப் போர் செய்தாக வேண்டியிருக்கிறது. எனவே எடுத்த எடுப்பில் போர் என்று பயம்

காட்டாமல், நயத்தைக் காட்டுவோம் என இங்கு திருஉளம் கொள்கிறாள் தேவி. தர்மத்துக்குக் கட்டுப்படாதவர்களிடம் எங்கே எப்படி சமரஸம் செய்து கொள்ள முடியும்? எவ்விஷயத்தில் நயமாகப் போக முடியும்? எனவேதான் ஸ்திரீ தர்மத்துக்கு விரோதம் என்று தோன்றுகிற அளவுக்குக் குற்றவாளியாக, அல்லது தியாகியாக, அம்பாள் பேச வேண்டியதாகிறது. தர்மத்துக்கு அசுரர்கள் சற்றும் கட்டுப்படாத முரடர்கள் என்று நன்றாகக் காட்டவே சத்தியப் பிரதிக்ஞை என்ற ஒரு தர்மத்தை மதித்து நடக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறாள் — அதையும் வெகு நயமாக, விநயமாகச் சொல்கிறாள்.

ஆனால் அசுர ரத்தத்தின் தன்மையைப் பாருங்கள். அவர்களாகப் பல்லை இளித்தும், பசப்பியும் பொய்ப் பணிவு காட்டியும் காரிய சித்திக்காக வேஷம் போட்டுப் பேசுவார்கள். அப்போது எதிராளிக்கு நிரம்ப விட்டுக் கொடுக்கிறமாதிரி இருக்கும். ஆனால் மறுதரப்பிலிருந்து துளித்துளி மாற்று அபிப்பிராயம் வந்துவிட்டால் போதும், இவர்களுடைய வேஷம் கலைந்துவிடும். தங்களுடைய மூர்த்தன்யப் பிடிவாதத்தைக் கக்க ஆரம்பித்துவிடுவர்.

இந்த அவகுணத்துக்கு அவுணர்த் தலைவர் வரை போக வேண்டியதில்லை. தூது வந்தவனைப் பார்த்தாலே போதும்!

அம்பாள் இப்படிச் சொன்னாளோ இல்லையோ, இதுவரை லக்ஷணமாக, ச்லக்ஷ்ணமாகப் பேசிய ஸுக்ரீவன் துர்-க்ரீவனாகி அபஸ்வர மயமாகத் தாக்கிப் பேச ஆரம்பித்துவிட்டாள்!

''ஏ குட்டி! நீ மகா திமிர் பிடித்தவள். என் முன்னாலா இப்படிப் பேசினாய்? இனி இந்த சுக்ரீவன் முன் இதுபோல் கனவிலும் பேசாதே, ஆமாம்! மூவுலகிலும் மாவீர புருஷர்களும் கூட சும்ப-நிசும்பருக்கு எதிரே தலைகாட்ட மாட்டார்கள். அவ்விருவர் மட்டுமின்றி என்னைப்போல் அவர்களைச் சார்ந்துள்ள ஓர் அசுரன் எதிரிலுமே அத்தனை தேவர்களும் ஒன்றுசேர்ந்துகூட நிற்க முடியாது. அப்படியிருக்க, கேவலம் நீ ஒரு பெண், அதுவும் தன்னந்தனியாய் இருப்பவள், எம்மாத்திரம்? இந்திராதி தேவர்கள் எவரை எதிர்க்கவொண்ணாமல் புறமுதுகிட்டோடினரோ, அவருடன் போரா செய்யப் போகிறாய், போர்? அதை நினைத்துப் பார்க்க உனக்குத் தகுதி உண்டா? நான் சொன்னதற்கு மறுவார்த்தையில்லாமல் என் பின் வா. சும்ப-நிசும்பரில் ஒருத்தரைச் சேர்ந்துவிடு. மரியாதையாக வராவிட்டால், கூந்தல்

பற்றியிழுத்துத் தள்ளப்படுவாய்! ஜாக்கிரதை! அந்த மானக் கேட்டுக்கு ஆளாகாதே, சொல்லிவிட்டேன்'' என்றான்.

அம்பாள் அதிசயப் பொறுமையுடன், ''சும்ப -நிசும்பாதியரின் பலம், வீர்யம் பற்றி நீ சொல்வதெல்லாம் நூற்றுக்கு நூறு வாஸ்தவம்தான். உம்பரையும் நடுநடுங்க வைத்தவர் சும்ப-நிசும்பர். அவர்களைப் போருக்கு வருமாறு நான் அழைக்கக் கூடாதுதான். ஆனாலும் அப்பா, என்ன செய்வேன்? எனக்கு இப்படி இவர்கள் இருப்பார்கள் என்று தெரிந்திருக்காதபோது போதிய முன்னாலோசனையில்லாமல் பிரதிக்ஞை செய்துவிட்டேனே! அதை விட்டுவிட மனம் இடம் கொடாததால்தான் உன் பிரபுவை நான் பேருக்குப் போருக்கு அழைக்கிறேன். அவரோடு மெய்யாலுமே பலப்பரீட்சை செய்யவா அழைக்கிறேன்? அப்பனே! இதை நீயே யோசித்துத் தெளிவடைவாய்! பிறகு நான் இப்போது சொன்னதை எல்லாம் ஆதரவோடு அசுரேந்திரருக்கு எடுத்துச் சொல். அதைக் கேட்டபின் எது யுக்தமானதோ அதை அவரே செய்வார்'' என்றாள்.

'ஏதடா ஒரு பெண் சர்வ சகஜமாக பயங்கர சிங்கத்தின் முதுகில் வீற்று வந்திருக்கிறாளே, தன்னந்தனியாக இருந்து கொண்டு அசுரேசுவரனைப் போருக்கு அழைக்கிறாளே! இவள் சங்கதி சாமானியமாக இருக்க முடியாது' என்று புரிந்து கொள்கிற புத்தியில்லாதவனுக்கு அவன் எண்ணுவதையும்விட சாமானியமாக இருந்து காட்டுகிறாள்!

''போதும் உன் பேச்சு! தூதனாக வந்தவன் பிரபுவின் ஆக்ஞையின்றி நேரடி நடவடிக்கையில் இறங்கக்கூடாது என்பதாலேயே உன்னைச் சும்மாவிட்டேன். நான் போய் உன் பிதற்றலை என் மன்னருக்குத் தெரிவிக்கிறேன். அப்புறம் உனக்கு நேர்கிற கதியைப் பார்'' என்று கூறிப் புறப்பட்டான் ஸுக்ரீவன்.

* * *

படு கோபத்துடன் ராஜசபைக்குச் சென்று நடந்ததை விஸ்தாரமாகக் கூறினான் சுக்ரீவன்.

அதைக் கேட்டதுதான் தாமதம், துளிக்கூட நியாய உணர்வே தெரியாமல் தான்தோன்றித்தனத்தையே நீதி சாஸ்திரமாகக் கொண்ட சும்பாசுரன் வெகுண்டெழுந்தான்.

''ஸுக்ரீவா! அவளுடைய தலைமயிரை பிடித்திழுந்து வருவோம் என்றுதானே சொன்னாய்? பேஷ் பேஷ்!

அப்படித்தான் செய்ய வேண்டும். அதைக் கொஞ்சம் கூட ஈவிரக்கமில்லாமல் செய்யக்கூடிய சிறப்பு நம் சேனாதிபதி தூம்ரலோசனனுக்கே உண்டு! எங்கே அவன்? ஹே தூம்ரலோசனா! வந்தாயா, சரி! உடனே நீ ஸுக்ரீவன் கூறின இடத்துக்குப் போ. தனியாகப் போகாதே. சைனியத்தோடு போ. அந்த ஆரவாரம் கேட்டே அந்த மூர்க்கப் பெண் குலை நடுங்கிக் கொண்டிருக்கட்டும். விரைந்து சென்று அந்தத் துஷ்டை விலவிலத்துப் போகுமாறு அவளுடைய கேசத்தைப் பற்றி இழுத்து, அவளைக் கதறக் கதறக் கடத்திவந்து, இங்கே கொண்டு சேர்ப்பாய். தனி ஒருத்தி சிம்மத்தின் மீது ஏறி வந்து என்னை யுத்தத்துக்கு அழைத்தாள் என்றால் அதில் ஏதோ சூது இருக்கிறது. தேவர்களே இவள் பின்னாலிருந்து இவளை முடுக்கிவிட்டு வஞ்சகச் சூழ்ச்சி செய்வதாக எண்ணுகிறேன். நீ படையுடன் சென்றதும், இப்போது மறைந்துள்ள தேவர்கள் அந்தக் கொடியவளுக்கு சகாயம் செய்ய வரக்கூடும். தேவரோ, யட்சரோ, கந்தர்வரோ, வேறு எவரோ, அவளுக்குத் துணையாக யார் வந்தாலும் அவர்களை அடியோடு துவம்சம் செய்து, அப்பெண்ணை நொக்கி, நொறுக்கித் தள்ளிக் கொண்டு வா'' என்று கோஷமிட்டான் சும்பன்.

'அத்தனை தேவர்களும் எங்களில் ஒருவர்முன் நிற்பானா?' என்று அம்பாளிடம் கேட்டான் சுக்ரீவன். இப்போதோ அதற்கு நேர்மாறாய், பெண்ணாய்ப் பிறந்த ஒருத்தியை எதிர்க்க வெட்கமில்லாமல் அறுபதினாயிரம் வீரர்கள் புடைசூழப் புறப்பட்டான் தூம்ரலோசனன்.

இமய சிகரத்தில் அழகு சிகரமாக, அமைதி சிகரமாக அமர்ந்திருந்த அம்பாளை அடைந்தது அவுணப் படை. படையைப் பார்த்ததால் அவள் பதைத்துவிடவில்லை. அதே அழகு, அதே அமைதி, அதே அம்மா!

''ஏட்டி, கிளம்பு, உம்! நீயாக வருகிறாயா, நான் உன் தலைமயிரைப் பிடித்திழுத்துக் கொண்டு போகட்டுமா? இப்போது ஏதோ வெளிப்பார்வைக்கு அஞ்சாதது போல் நீ நடித்தாலும் அப்போது சாயம் வெளுத்துவிடும். நான் உன் கேசத்தைக் குலுக்கிக் குலுக்கி, உன்னை நொறுக்கித் தள்ளியபடி இழுத்துப் போகிறபோது விலவிலத்து நடுங்குவாய், பார்த்து ரசிக்கட்டுமா?'' என்றான் இரக்கமறியாப் பாபி தூம்ரலோசனன்.

திரிலோக மாதாவிடம் எத்தனை தகாத முறையில் பேசுவதற்கு இந்த அசுரர்களால் முடிகிறது?

இப்போதுகூட அம்பிகை கோபம் காட்டவில்லை. அதென்ன பொறுமையோ? அதென்ன லீலையோ? சில்லெனப் பேசினாள்:

''உன்னை அனுப்பியிருப்பவர் மகாபட்ட தைத்யேசுவரர். உன்னைச் சூழந்திருப்பவரோ மாவீரர்கள். நீயும் பரம பராக்கிரமசாலி. அவ்வாறிருக்கப் போயும் போயும் நான் சொல்வதற்கென்ன இருக்கிறது? இருந்தாலும் நானாக வந்தால் பிரதிக்ஞையை முறித்த தோஷம் தீண்டுமே என்பதால், நீயே என்னை இழுத்துச் செல்லுமாறு விடுகிறேன். அதோடு நானாக வருவதைவிட நீ பலாத்காரமாகச் சித்திர ஹிம்சை செய்து இழுத்துப் போவதிலேயே உனக்கு அதிக திருப்தியிருப்பதாகத் தெரிகிறது. உன் ஆசையை நான் ஏன் கெடுக்கவேண்டும்? உன் இஷ்டப்படியே செய்வாயப்பா! நான் எதிர்த்தால்தான் உன்னிடம் அது பலிக்குமா, என்ன? உன் முன் நான் என்ன செய்ய முடியும்.?'' என்றாள்.

தயையிலும், க்ஷமையிலும், பணிவிலும் கொஞ்சம்கூட அலுக்காமல் கடைசி கடைசியாகப் பரீட்சை வைக்கிறாள். இப்போதாவது ஓர் அசுரன் பிரதிக்ஞை என்ற தர்மத்தைப் புரிந்துகொண்டு அரசனுக்கு எடுத்துச் சொல்லுவானா என்று வாய்ப்புத் தந்து பார்க்கிறாள். 'நீ என்னைச் சித்திரவதை செய்' என்று ஒரு பெண் மனமாரச் சொல்கிற போதாவது, அப்படிச் செய்யலாகாது என்ற கனிவு அவ்விதயத்தில் தோன்றாதா என்று பார்க்கிறாள்.

இறுதிப் பரீட்சையிலும் அசுரர்க்குத் தோல்விதான். சிறிதும் வெட்கம் நாணமின்றி, தயா தாட்சிண்யமின்றி அம்பிகையின் கேசத்தைப் பிடிக்க எழும்பிப் பாய்ந்தான் தூம்ரலோசனன்.

இனியும் தேவி பொறுக்கலாமா? அப்படிச் செய்தால் தேவர்கள் வானகமும் போனகமும் இழந்து, நீயே கதி என்று இவளிடமும் நுதியும் துதியும் செய்ததை எல்லாம் இவள் மறந்து அசுரரிடம் அதிகமான பட்சம் காட்டுகிறாள் என்ற விசித்திரமான குற்றச்சாட்டே உண்டாகிவிடும்! முன்பு தெய்வமும் பட்சபாதமுள்ளதுதானோ என்று ஒருவிதத்தில் எண்ணியவர்கள், இன்னமும் அம்பிகை பொறுத்திருந்தால் அதற்கு நேர் எதிர்த் தரப்பில் தெய்வம் பட்சபாதமுடையதுதான் என்று தீர்மானிக்க வேண்டியதாகும். அதோடுகூட அசுரரை இவள் பொறுத்துக் கொள்கிற ஒவ்வொரு வினாடியும் அவர்கள் மேலும் மேலும் அல்லவா அபசாரப்பட்டனர்? அந்த அசுரரிடம்

உண்மையான கருணை இவளுக்கு உண்டாதலின், அவர்களை மேலும் பாவியராக்காதிருக்கவே பொறுமையை இவள் உதறத்தான் வேண்டும்.

அந்த உச்சிக்கட்டம், கொதிநிலை வெப்பம் வந்து விட்டது.

பொறையின் பொழிலாக இருந்த பரதேவதை தழலாகப் பொங்கிவிட்டாள்.

''ஹூம்!'' என்றாள்!

ஒரே ஒரு 'ஹூம்'காரம்தான்!

அம்பாளை நோக்கிப் பாய்ந்த தூம்ரன் அந்த சப்தத்திலேயே சாம்பராகிவிட்டான்!

அம்பாளது அடியையே வேதங்களாலும் தொடமுடியவில்லை — அவை அடங்கிப் பணிந்து அவளைத் தேடியும்கூட. அப்படியிருக்க இறுமாப்புக் கொண்ட அசுரன் அவள் முடியைத் தீண்ட முடியுமா? முடியைப் பிடிக்க யத்தனித்து தன் முடிவையே தேடிக்கொண்டான் தூம்ரன்.

தூம்ரம் (அல்லது தமிழ் வடிவில் தூம்பரம்) என்றால் புகை என்று பொருள். கண்களிலிருந்து புகையைக் கக்குபவன் தூம்ரலோசனன். பொய் உருவாம் சும்பனின் படைபதியான இவனே மெய்யைத் தெரியாமற் செய்யும் புகைமூட்டமாவான். இவன் முழு அசத்திய இருள் அல்ல. புகை இருக்கிறதென்றால் இங்கு சிறிதேனும் தீ இருக்க வேண்டும். சத்திய ஒளியின் லேசத்துடன் சேர்ந்த புகை இவன். இவன் புகைக்கண்ணன் என்றால் சிவசக்தி எப்படிப்பட்டவள்? அவள் ஒளிக்கண்ணி! நெற்றிக் கண்ணிலிருந்து தீ யொளியும், வலக் கண்ணிலிருந்து சூரிய ஒளியும், இடக் கண்ணிலிருந்து சந்திர ஒளியும் சிந்துபவள் அவள். ,தீக்கண்ணால் மதனனைச் சாம்பராக எரித்த சிவசக்தி அவள். இப்போது திருஷ்டியால் தூம்ரனை அவள் பஸ்மீகரமாக்கவில்லை. புகையை எப்படித் தீ எரிக்க முடியும்? எனவே ஒளியால் எரிக்காமல், ஹூம் என்ற ஒலியாலேயே அவனை நீற்றுப்போகச் செய்துவிட்டாள். அவளது இச்சாமாத்திரத்தில் அகிலாண்ட சிருஷ்டி முழுவதும் ஏற்படுகையில் ஒரு ஹூங்காரத்தால் அசுரன் அற்றுப்போனதில் அதிசயம் என்ன?

புகையே புகைந்து சாம்பல்தான் மிஞ்சிற்று!

தேவ காரியம் என்ற பூஜையில் தூபம் காட்டுவதுபோல் தூம்ரன் தூம்ரமானான்!

3. சாமுண்டேசுவரி

தூம்ரலோசனன் மாண்டதும் அசுரசேனை அம்பாளின் மீது ஆயுதப் பிரயோகம் செய்யத் தொடங்கியது.

அம்பிகைமேல் அம்புகளும் வேல்களும் கோடரிகளும் வருஷிக்கப்பட்டன.

தேவி நிம்மதியாக, நிலைகுலையாமல் இருந்தாள். இமயம் ஒரு மலை; அதன் மேல் இவள் ஒரு மலை.

சிம்மத்துக்குத்தான் பொங்கி வந்தது சீற்றம். யஜமானிக்கு வேலை தராமல், தானே அரக்கப் படையைத் தீர்த்துக் கட்டிவிடத் தீர்மானித்தது. நேராகச் சொற்பொருள் கொண்டால், யக்ஞம் செய்பவளே யஜமானி. இங்கே தர்மத்துக்காக யக்ஞம் நடந்தது. அசுரர் எல்லாம் அதில் ஆஹுதியாயினர்.

சிலு சிலு எனப் பிடரியைச் சிலிர்த்துக்கொண்டு, மலைப்பாறைகள் எதிரொலிக்கக் கம்பீரமாக கர்ஜித்தவாறு சிம்மம் வீர ஸாஹஸத்தில் இறங்கியது.

தனது முன்னிரு கால்களைக் கரங்கள்போல் உபயோகித்துச் சில அசுரரோடு 'கைகலந்து' அவர்களைக் கொன்றது; சில அசுரரைப் பின்வங்கால்களால் துவைத்துத் துவம்சமாக்கிற்று; சிலரைப் பல்லால் கடித்துக் குதறி சமாப்தியாக்கிற்று; சிலரது உதரங்களை நகத்தால் கிழித்தது (நரசிம்மமூர்த்தியின் பாணி); சிலரை உள்ளங்காலால் உதைத்துச் சிதைத்தது; அவர்களது சிரங்களை உதிர வைத்தது; சிலரது புஜங்களைத் துணித்து வீழ்த்தியது; சிலரது உதரத்தை அறைந்து பிளந்து உதிரத்தை உறிஞ்சிக் குடித்துப் பிடரியை மேலும் சிலிர்த்து ஆரவாரித்தது.

'கோபமுற்ற தேவீ வாகனமான அந்த சிம்ம மகாத்மாவினால் க்ஷண காலத்தில் அசுரப்படை முழுவதும் அழிந்தது' என்கிறார் மேதஸ்.

* * *

சில அசுரர் தப்பினோம் பிழைத்தோம் என்று அலறிப் புடைத்துக்கொண்டு அசுரேசனிடம் சென்று ஓலமிட்டதாக 'தேவீ பாகவதம்' கூறும். சாந்தமுடன் தனியாக இருந்த கிரிசண்டி ரணசண்டியாக யுத்தத்தில் இறங்கியதும் நிக்கிரக மூலம் அவளது அநுக்கிரக வெறியை வெளிப்படுத்தும் திருக்காட்சி காண ஹரிஹராதியரும், தேவ கந்தர்வ கின்னர கிம்புருஷர்களும் அவளுக்கு மேலே வானத்தில் சூழ்ந்திருப்பதாக இவ்வசுரர்கள் அரசனிடம் கூறுகிறார்கள். ''அவளுக்குப் பக்கபலமாக இவர்கள் வரவில்லை. அவளுக்குத் துணையே தேவையில்லாமலிருக்கிறது. இவள் அவர்களைப் பக்கபலமாக எண்ணவில்லை. ஏன், இந்த மகாயுத்தத்தையே ஒரு காரியமாக அவள் கருதவில்லை. நினைத்த மாத்திரத்தில் சராசரம் முழுவதையும் சம்ஹாரம் செய்யும் சதுரம் வாய்ந்த ஒருத்தியாக அவள் தோன்றுகிறாள்'' என்றெல்லாம் ஓடிவந்த அசுரர்கள் தங்கள் அரசனிடம் கூறுகிறார்கள்.

'அப்படியாயின் அவளுடன் யுத்தம் செய்வது யுக்தமாகாதோ? முற்றிலும் நிஷ்பலனான காரியமாகவே இது ஆகுமோ?' என்று உள்ளூரக் கலங்குகிறான் சும்பன். ஆனால் இதைச் சேனா வீரருக்கு முன் வெளிக்காட்டிக் கொள்ளாமல் தம்பியை மட்டும் தனியிடத்தே அழைத்துச் சென்று ஆலோசனை கலக்கிறான்.

''நிசும்பா! இது ஏன் இப்படி நடக்கிறது என்று விளங்கிக் கொள்ளவே இயலவில்லை. ஏகாங்கியான ஒரு கன்னியாவது, நம் அசுர சேனையை வெல்லவாவது? மகத்தான நம் படை அழியவாவது? கால தர்மப்படி உரிய சமயம் வந்தபோது வஜ்ராயுதமும் புல்லாகும் என்பார்களே, அது இதுதானா? இப்போது செய்வகை அறியாது குழம்பியிருக்கிறேன். நம் அநுபோகத்துக்கு அந்தப் பெண் கிடைக்கமாட்டாள் என்றே தெரிகிறது. போர் புரிந்து அவளைக் கைப்பற்ற முடியும் என்றும் தோன்றவில்லை. தோல்வியே காண்போம் எனத் தெரிகிறது. வீர சுவர்க்கம் அடைய இப்போது எனக்கு அவசரமில்லை. ஏனெனில், அந்தப் பெண்ணை என்றோ ஒரு நாள் எதிர்காலத்தில் அநுபவிக்க வாய்ப்பு ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும் என்ற நைப்பாசை எனக்கு இன்னமும் இருக்கிறது. இப்போது காலதர்மம் ஓர் எதிர்பாராத நிலையை, உண்டாக்கினாற்போல் வரவிருக்கும் காலத்திலும் ஒரு தலைகீழ்த் திருப்பம் ஏற்பட்டு அவள் என் வசப்பட்டாலும் படலாம். அந்த

வாய்ப்பின் வாயில் மண்ணைப் போட்டுவிட்டு இப்போதே நான் மரணவாயில் விழ முற்படவில்லை. இன்று நான் ரணகளம் சென்று மரணத்தைத் தழுவாவிடில் அவள் என்னை வரணம் செய்கிற சந்தர்ப்பம் வந்தாலும் வரக்கூடும். எனினும், சரணம் என்று அவளிடம் விழுந்து தோல்வியை ஒப்புக் கொள்ளவும் என் ஆண்மை இடம் தரவில்லை. ரணமும் இல்லை, மரணமும் இல்லை, சரணமும் இல்லை என்று தீர்மானித்துக்கொண்டு வரணத்தை எதிர்பார்க்கிற நான் செய்யக்கூடியது என்ன? இங்கிருந்து எங்கேனும் தப்பியோடித் தலைமறைவாக வாழ்ந்து, உரிய காலம் வரையில் பொறுத்திருக்கட்டுமா?''

ஆண்மையைப் பற்றிச் சொன்ன அண்ணன் காம மயக்கத்தால் அடியோடு அதை இழந்து பேடி போல் ஓடி பேதைபோல் பதுங்கி வாழ்வதாகச் சொன்னது நிசும்பனைக் கிளர்ந்தெழச் செய்தது.

''அண்ணா! ஒருகாலும் அந்த அவக்கேட்டைச் செய்ய வேண்டா! ஒரு பெண் யுத்த ஸந்நத்தமாக நிற்க, நாம் மாற்று வழிகளைச் சிந்திப்பதாவது? சேனாதிபதியும் சேனாவீரர் ஆயிரமாயிரவரும் நாசமான நிலையில் நாம் மட்டும் நீசமான சொந்த ஆசைக்காக அவமானகரமாக உயிரைக் காத்துக் கொள்வதா? காளிகையாகத் தோன்றுகிற அந்தக் காரிகையிடம் இன்னமும் காதல் எண்ணமா? அண்ணா, நீங்கள் வேண்டுமாயின் போர்முனை புக முனையாதிருக்கலாம், என்னால் அது இயலாது. இதோ நான் சென்று அவளோடு யுத்தம் புரிகிறேன். உங்களுக்கு அவளைக் காதற் கிழத்தியாகக் கொண்டு வந்து தருவதற்கல்ல; அவளைக் கண்ட துண்டமாக வெட்டிப் போடவே செல்கிறேன். என்னால் அவளை வதைக்க முடியாவிடில் அவளால் நான் வதைக்கப்படுவேன். நான் செத்தபின் நீங்கள் உங்கள் யோசனைப்படி எப்படி வேண்டுமாயினும் செய்துகொள்ளுங்கள்'' என்றான் நிசும்பன்.

பித்தலாட்ட மோசடியைவிட அசல் பொய்யே உயர்வாக இருக்கிறது. மெய் மாதிரி நடிக்கிற மோசடிப் பொய்க்கு மெய்யிடம் போதை உண்டாவது போல் அசல் பொய்க்கு உண்டாகவில்லை. மோசடி என்பது இப்படியும் சேராமல் அப்படியும் சேராமல் இரட்டுற ஏமாற்றுவது; தன்னையும் ஏமாற்றிக்கொள்கிறது. அப்பட்டப் பொய்யிடம் இவை இல்லை. அதனால்தான் சும்பனின் அளவுக்கு நிசும்பன் தாழ்ந்தவன் அல்ல எனக் காண்கிறோம்.

தம்பி இப்படிப் பேசியவுடன் தமையனின் மனம் மாறுகிறது.

''நல்லது தம்பி! யுத்தத்தையே தொடர்ந்து செய்வோம். ஆனால் நீ ஏன் செல்லவேண்டும்? முதல் முதலில் அந்தத் துஷ்டையைக் கண்டு வந்த சண்ட-முண்டரையே போர் முனைக்கு அனுப்பிவைக்கிறேன். அந்த சண்டியிடம் சண்டையிட்டுக் கண்ட துண்டமாக்க இந்த சண்ட-முண்டர் ஏற்றவர்தாம்'' என்றான் சும்பன்.

அதன்படியே அவ்விரு அரக்கரை யுத்த பூமிக்கு உற்சாகப்படுத்தி அனுப்புகிறான்.

⋆ ⋆ ⋆

மான்மியப்படி, 'யுத்தம் இப்படி நடந்தது' என்று திரும்பி வந்து சொல்லக் கூட ஒரு ஜீவன் மீதமின்றி தூம்ரனின் தலைமையில் சென்ற அசுர சேனை நசித்தபின், இவ்விஷயம் சும்பன் செவி எட்டுகிறது.

ஆசை முறிந்ததில் ஆராச்சினம் மூள்கிறது. இதயம் பட படக்க அதரம் துடி துடிக்கக் குரல் குழறிக் கூறுகிறான் சும்பன். 'ஹே சண்டா! ஹே முண்டா! ஏராளமான சைனியங்களைச் சேர்த்துக் கொள்ளுங்களடா! அந்த துஷ்டையிருக்கிற இடத்துக்குப் படையெடுத்துச் செல்லுங்கள். அவளை... அவளை...''

காம நசை அவனைவிட்டு இன்னும் நீங்கவில்லை, அவளைக் கொன்று போடச்சொல்ல இன்னமும் கூட அவனுக்கு வாய் வரவில்லை. ''அவளை விரைவில் இங்கு கவர்ந்து வாருங்கள்'' என்கிறான்.

இருந்தாலும் தன் மோக வெறியைத் தெரிந்துகொண்டால் பணியாட்கள் தன்னிடம் உள்ளூர அவமதிப்புக் கொள்வரே என்பதால், அவர்களிடமே கூசாமல் மோசடி செய்கிறான் : ''கொல்வதைவிட மானபங்கப் படுத்துவதே அவளுக்குரிய தண்டனை. செத்தால் அதோடு தீர்ந்தது; பிறகு நிம்மதி. உயிரோடு வைத்து வாட்டி எடுக்க வேண்டும். எனவே கொடு முடியில் செம்மாந்து நிற்கும் அந்தக் கொடியாளின் முடியைப் பற்றி இழுத்து வாருங்கள். அல்லது அவளை குண்டுக்கட்டாகத் தூக்கி வருகிற மானபங்கத்தைச் செய்யுங்கள். இப்படி எல்லாம் இழுத்த இழுப்புக்கு அவள் வராவிட்டால்... வராவிட்டால்.......''

தனக்கு உகப்பில்லாததையும் அவன் சொல்லியாக வேண்டியிருக்கிறது: ''வராவிட்டால், அப்போது அவளைக் கொன்று தொலைத்துவிடுங்கள்.''

அவள் நிச்சயம் கட்டுப்பட்டு வரமாட்டாள் என்றே சும்பனுக்குப் படுகிறது. தன் காமம் ஒருகாலும் நிறைவேறப்போவதில்லை என்றதும் மானசிகமாகவேனும் அவளைக் கொலை செய்து மகிழ்கிறான். மானசிகமாகச் செய்கிற கொலையில் அசுரக் கொடுமைக்கு மிச்சம் மீதி வைப்பானேன்? படு ராட்சஸத்தனமாகத்தான் அவளைக் கொன்று பார்ப்போமே என்று தோன்றுகிறது. அந்த வேகத்தில் இரக்கம் அறியாத மாபாதக அரக்கருக்கே உரிய வார்த்தைகள் வெளிவருகின்றன. ''அவளை யாரோ ஒருவர் ஏதோ ஓர் ஆயுதத்தால் கொன்றால் மட்டும் போதாது. அத்தனை அசுரர்களுமாகத் தங்களிடமுள்ள சகல ஆயுதங்களையும் அவள் மீது பிரயோகித்து அவளைக் கொன்று தீருங்கள். அந்த துஷ்டப் பெண்ணையும் அவளுக்கு இஷ்டமான அந்த சிங்கத்தையும் வீழ்த்திவிட்டு விரைவில் திரும்பி வாருங்கள்'' என்கிறான்.

'ஆகா, மானஸிகமாக எண்ணியது வாசிகமாக, வாசகமாக வந்து விட்டதே. இவர்களால் காயிகமான காரியமாகவும் உருவாகி விட்டால் என் செய்வது? அவளைக் குறித்த என் வேட்கை பலிக்காமலே அல்லவா போகும்?' என்று துணுக்குறுகிறான். எனவே பழைய குருடி என்ற பாணியில், ''எதற்கும் கூடுமான வரை அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு வரவே முயலுங்கள்'' என்கிறான்.

காமப் பேய் செய்கிற சூதினை தேவீ மாஹாத்மியம் அதி அற்புதமாகச் சித்தரித்து விடுகிறது!

சதுரங்க சேனை சூழ யுத்த சதுரரான சண்ட முண்டர் தேவி இருந்த இடத்துக்கு விரைந்தனர்.

தூம்ரலோசனாதி சேனைகள் அழிந்த பின் அம்பிகை மறுபடி பழைய அழகாக, அமைதியாக, அம்மாவாக அமர்ந்துவிட்டாள்.

பனிச் சிகரங்களில் சூரியஒளி பட்டு அது தகதகாமயமாக ஜொலிக்கிறது. அப் பொன்னொளியில் நெய்த்த கசிவு கொண்ட கேசர வண்ணச் சிம்மம் ராஜசுந்தரமாக நிற்கிறது — அதன் மீது வெள்ளை வெள்ளமான தாய்த் தெய்வம்.

ஊனும் உள்ளமும் உருகும் காட்சி

அரக்கருக்கு இந்த ரஸம் எட்டாது. அவர்கள் பயங்கர யுத்தத்துக்கே ஆயத்தமாயினர்.

★ ★ ★

இனி சிறிது தூரம் பாகவத்தைத் தழுவிக் கதையைக் கொண்டுபோவோம்.

சண்ட-முண்டர் புத்திசாலிகள். அதாவது பொய்யசுரனுக்குச் சளைக்காத அவனது தாசானுதாசர்கள். இந்த வஞ்சகர்களிடமே அவன் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசினால் அந்த மோசடி எடுபடுமா? சண்ட-முண்டருக்கு நன்றாகத் தெரிந்து விட்டது, சும்பனுக்கு அம்பிகையை மணக்க வேண்டும் என்ற ஆசையே இன்னமும் வலுவாக உள்ளது என்று. ராஜ விசுவாசமிக்க இவர்கள் அவனது ஆசையை நிறைவேற்ற முனைகிறார்கள். ஆசைக்குத் தூபமிட்டதே இவர்கள்தானே? எனவே போருக்கு முனைந்த படைகளைச் சற்று பொறுத்திருக்கச் செய்து, மறுபடியும் அவளிடம் சமாதான தூதுமொழிகளையே விளம்புகிறார்கள்.

''மங்கையே! நீ போர்ச் சிந்தனையிலிருந்து விடுபடுவாய்! அது நிச்சயம் தோல்விதான் அடையும். போருக்காக ஆயுதம் ஏந்திய யானைத் துதிக்கை போன்ற உனது கரங்களைக் காணும் போது சும்பாசுரர் ஐராவதத்தின் துதிக்கையை அறுத்தெறிந்ததுதான் நினைவு வருகிறது. அதுபோல் மீண்டும் நிகழ வேண்டாம் பெண்ணே! அவர் உன்னை ரணகளத்தில் காண எண்ணவில்லை; மணப்பந்தலில் காணவே விரும்புகிறார். நீ அதை விபரீதமாக்கிவிடாதே! உன் பாக்கியம், அவர் உன்னைக் கொல்ல எண்ணாமல் கொள்ள எண்ணுகிறார். இதைப் புரிந்து கொள். நீ தேவரின் பொருட்டே வந்திருப்பது இப்போது இந்த வெள்ளியங்கிரி போலவே வெள்ளிடை மலையாயிற்று. தேவர்கள் வானவீதியில் குழுமியிருப்பதைக் காண்கிறோம். அவர்கள் படுவஞ்சகத்தால் உன்னை இப்போரில் தூண்டி விட்டிருக்கிறார்கள். உன் பிரதிக்ஞைப்படி உன்னை வென்று மணாட்டியாக்கிக் கொள்ளுகிற பௌருஷம் தேவப் பதர்களில் எவருக்குமில்லை. இதனால் ஏற்பட்ட மனக்கொதிப்பில், ஆற்றாமையில், நயவஞ்சகமாக ஏவி விட்டிருக்கிறார்கள். சும்ப-நிசும்பரை உன்னால் வெல்லமுடியாதது என்று கூறி வீராங்கனையான உன்னை உற்சாகப்படுத்தி இக்காரியத்தில்

ஈடுபடுத்தியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் விரும்பி எதிர்பார்ப்பது அசுரேசரால் நீ வதைக்கப்படுவதைத்தான். சும்ப- நிசும்பரே உன்னைக் கொல்லக் கூடிய வீராதி வீரர் என்பதறிந்து அமரர் இப்படி சூழ்ச்சி செய்துள்ளனர். வெளிப்பார்வைக்கு நீ வெள்ளையாக இருப்பது போலவே உன் உள்ளமும் வெள்ளையானபடியால் தேவர்களது கள்ளத்தை அறியாமல் இங்கு வந்து யுத்தத்தை வரவேற்று நிற்கிறாய். தேவர்களின் வஞ்சனை எண்ணம் சாமானியமானதல்ல. ஒருகால் சும்ப-நிசும்பரால் வெல்லப்படாமல், நீ அவர்களை வென்றாலும் வெல்லக் கூடும் என்கிற ஒரு சாத்தியக் கூற்றையும் தேவர்கள் எண்ணியிருக்கிறார்கள். அவ்விதமாயின் அதுவும் அவர்களுக்குப் பெரிய லாபம்தானே? அவர்களால் முகம் கொடுக்க முடியாத மாவேந்தரை நீ வென்றால் பிறகு அவர்கள் எந்த ஆயாசமுமின்றியே மறுபடி தங்கள் பழைய ஸ்தானத்தைப் பெற்றுவிடலாமன்றோ? ஆக, யுத்தத்தில் எந்தத் தரப்பு மடிந்தாலும் தங்களுக்குத் திருப்தி உண்டாகிற விதத்தில் மிகவும் தந்திரமாகச் சூழ்ச்சி செய்து உன்னை இப்போரில் அவர்கள் பிடித்துத் தள்ளியிருக்கிறார்கள். தங்கள் காரியம் நடப்பதற்காக இப்போது உன்னைப் புகழ்கிறார்கள். இவற்றில் ஏமாந்துவிடாதே பெண்ணே!

''காரிய மித்திரர் என்றும் தர்ம மித்திரர் என்றும் இரு வகை உண்டு. தங்கள் காரியம் நடக்கவேண்டும் என்பதற்காக மிகவும் பிரியமானவர்கள் போல நடிப்பவர்கள் காரிய மித்திரர்கள். தங்களுக்கு எந்த லாபமும் எதிர்பாராமல் நல்லதையே எடுத்துச் சொல்பவர்கள் தர்மமித்திரர்கள். தேவர்கள் உனக்குக் காரியமித்திரர்தான்; நாங்களே உனக்குத் தர்மமித்திரராவோம். உன்னால் எங்கள் சொந்த லாபமாக நடக்கவேண்டிய காரியம் ஏதுமில்லை. தேவர்கள், தங்கள் காரியத்தை உத்தேசித்தே உன்னைச் சண்டையில் தள்ளியிருக்கிறார்கள். நாங்களோ, உன் காரியத்தை உத்தேசித்தே இத மொழிகளைக் கூறுகிறோம். உன் காரியம் என்ன? காரிகை ஒருத்திக்கான பரம புருஷார்த்தமான காரியம் என்ன? தகுந்த புருஷனை மணந்து மகிழ்வது தானே? பரம புருஷனே ஆன எங்கள் நாயகனுக்கு நீ நாயகியாக வரவேண்டும் என்பதே தர்ம மித்திரர்களான எங்களது ஆசை. அன்பு மூண்ட நாயகியாக வேண்டியவளை அம்பு பூண்ட ஸாயகியாக ஆக்கியிருக்கும் தேவர் சூதை அறிந்து தெளிவடைவாய். மகாப் பிரபுவும், விஜய மாமேதையும், சுந்தராங்கரும், சிருங்கார கோலாகலருமான எங்கள்

சும்பமகாராஜனை இப்போதேனும் வரித்து, மேன்மையைத் தேடிக் கொள்வாய்'' என்று கூறுகிறார்கள் முண்ட-சண்டர்.

அவர்கள் பேசியதில் அவர்களது போற்றத்தக்க ராஜ விசுவாசம் ஒன்றினையே அம்பாள் முக்கியமாகக் கருதினாள் போலும்! எனவே அவர்களுக்குத் தன் உள்ளார்ந்த மகிமையைத் தானே எடுத்துரைத்தாள். ''சும்ப-நிசும்பரைப் பற்றியோ அல்லது தேவாதியரைப் பற்றியோ நீங்கள் சொல்லித்தானா நான் தெரிந்து கொள்ள வேண்டும்? சர்வபூதங்களுக்கும் ஈச்வரி நானே. அகிலாண்டமனைத்திலும் அனைவரும் தம் காரியத்தை முடித்துக் கொள்வது என் சக்தி கொண்டுதான். எனவே தன் காரியம் என்றும், என் காரியம் என்றும் எவரும் என்னை ஏமாற்ற முடியாது. சும்பாதியர் தங்கள் கோர கிருத்யத்தை நிறைவேற்றிக் கொண்டதும் என் சக்தியின் துணைகொண்டுதான். இவர்களைப் போல் எத்தனை எத்தனையோ சும்பர்களைக் கண்டவள் நான். உரிய காலம் வருகிறபோது அந்த வல்லசுரரின் கிருத்யங்களை முடித்து, அவர்களையும் முடித்து, மிருத்யுவாக நிருத்யம் செய்திருக்கிறேன். வல்லசுரருக்கு எதிரான நல்ல சுரர்களை மகிழ்வித்திருக்கிறேன். அந்தச் சுரரும் ஸர்வப் பிரளயத்தில் என்னிடமே முடிந்து போகிறவர்கள்தாம். பிரளய பரியந்தம் அவர்களை விட்டு வைத்திருக்கும் நான் அசுரனின் அக்கிரமம் மிதமிஞ்சிப் போனவுடனேயே அசுரரை முடித்துவிடுகிறேன். இப்போதும் அந்த உத்தேசத்துடன் தான் வந்திருக்கிறேன். வானுலகுக்கும் உயர்ந்த மேலுலக வழியை உங்களுக்கெல்லாம் இதோ திறந்து வைத்திருக்கிறேன். எனவே நீங்கள் சொல்லை விடுத்து வில்லை எடுங்கள்'' என்றாள்.

இனி 'தேவீ மான்மிய'த்துக்குத் திரும்புவோம்.

★ ★ ★

கௌசிகி தேவியைச் சூழ்ந்து போரைத் தொடங்கின தைத்ய சேனைகள். மகாராஜனின் அந்தரங்க விருப்பப்படி அவளை உயிருடன் பிடிக்கிற முயற்சியில் சில அசுரர் இறங்கினர். ஏனையோர் வில்லை வளைத்தனர்; வாளை உருவினர்..

எதுவுமே அவளிடம் பலிக்கவில்லை.

சும்பன் சொன்ன வண்ணம் சகல வீரரும் சர்வ ஆயுதம் கொண்டு தாக்கத் தொடங்கினர். யுத்த தர்மத்தை அடியோடு கைவிட்ட அப்பட்டக் கொலை முயற்சி!

முன்பு மகிஷன் படுத்தும் பாட்டை ஹரி-ஹரரிடம் தேவர்கள் முறையிட்டபோது அவ்விருவரும் கோபத்தை உண்டாக்கிக் கொண்டதாகவே மேதஸ் மொழிந்தார். இப்போதும் அப்படியே சொல்கிறார்: 'தத: கோபம் சகார உச்சை:'.

கோபத்தின் உச்சஸ்தானமான நிலையை அம்பிகை உண்டாக்கிக் கொண்டாள். அதாவது சினம் இவளுக்கு இயல்பானதல்ல; வலிந்து அதை வரவழைக்க வேண்டியிருந்தது!

வெஞ்சினத்தால் வெண்முகத்தில் ரத்தமேறியது. சினம் இவளுக்கு இயல்பற்றதாகையால் ஒரு வியாதிபோல் ரத்தமும் விஷமாகி நீலம் பாய்ந்து கருத்தது. திருமுகம் கருமுகமாயிற்று. புருவம் நெரிந்து கறுப்பு கடுப்பாயிற்று.

தனக்குச் செயற்கையாக உண்டான இந்தச் சீற்றத்தை அவள் தன்னிடமிருந்து அதி விசையுடன் உதறினாள்!

கோப சிந்தனையும், கருமையும் நெரிப்பும் ஒருமுகப்பட்டு கௌசிகியுடைய குவிந்த புருவத்தின் மத்தியிலிருந்து சினமே ஓர் உருவெடுத்துக் காளியாக ஆவிர்பவித்தது!

கௌசிகியின் நெற்றித் தலத்திலிருந்து காளி வந்தனள் என்று மூலத்தில் கூறியிருப்பதற்கு, எண்ணம் ஒருமுனைப்படும் புருவநடுவிலிருந்து வந்தாள் என்று பொருள் கொள்வதே பொருத்தம். ஈசுவரனின் நெற்றிக் கண்களிலிருந்து அக்கினிப் பொறியாக முருகன் தோன்றினான் என்பதும் இதே கருத்தில்தான்.

காளி வந்து குதித்தாள்!

இவள் பிரதம சரிதத்தில் நாம் கண்ட மகா காளி அல்ல. சாதாரண (!) காளிதான்! அவள் பிரம்மாநந்த ஸ்வரூபிணி. இவளோ பிரம்மானந்தம், பிரம்மஞானம், பிரம்மசத்தியம் என்ற எதுவாகவும் கூறவொண்ணாதவள். இவள் உருவகித்ததெல்லாம் ஒரே உணர்வினைத்தான்; அதாவது அதர்மத்தை அழிக்கிற ஆராச் சினம் என்ற ஒன்றினைத்தான்.

சத்-சித்-ஆனந்தத்தை அநுபவிப்பதற்கு அத்தியாவசியமாக அதற்கு எதிரிடையான சத்துருக்களை அழித்தேயாக வேண்டியிருக்கிறது. இந்த அழிவு அன்றி அந்த அநுக்ரஹம் இல்லை. அழிவின் வேராகிய கோப உணர்ச்சியே காளி. தனிப்பட அது பயங்கரமாக இருக்கும். ஆனாலும், அது

அதர்மத்துக்கே பயமூட்டுவது. நம்மீது படை எடுத்துள்ள உட்பகைகளை இவள் துணைகொண்டு நாம் அழித்தாலன்றிப் பேரின்பமில்லை, இல்லவே இல்லை.

தெற்றுப் பற்களோடு கூடிய அதிகோர முகமும், தலைவிரி கோலமான செம்பட்டைச் சடையும், கன்னங்கரேல் என்ற நிறமுமாகத் தோன்றினாள் காளி. அவ்வளது கரங்களில் பட்டாக்கத்தியும், எதிராளியின் கழுத்தை நெரித்துச் சுருக்கிடும் பாசமும், கட்வாங்கம் என்கிற கபாலம் சொருகிய குண்டாந்தடியும் காணப்பட்டன. அந்த ஒரு கபாலத்தை மட்டும் கண்டு நாம் பயந்து பிரயோஜனமில்லை. அனேக கபாலங்களைக் கோத்து மாலையாகப் போட்டுக் கொண்டிருக்கிறாள்; தலைபோன முண்டங்களை நெய்து இடையில் கட்டியிருக்கிறாள்! அது போதாதென்று வரிப்புலியின் தோலையும் உடுத்தியிருக்கிறாள் — புலியின் திறந்த வாயுடன் கூடிய முகத்தோடு! உடல் முழுவதும் ஊன் குழம்பைக் களப கஸ்தூரியாகப் பூசியிருக்கிறாள். அது வற்றி உலர்ந்து சகிக்கவொண்ணாத வாடை வீசுகிறது. கோரைப் பற்கள் மிகுந்த வாயை அகலத் திறந்து, உலகம் முழுதையும் துழாவிப் புசிக்க ஆசை கொண்டதுபோல் நாவைச் சுழற்றியபடி இருக்கிறாள். கண்கள் தணல் துண்டங்களெனச் செக்கச் செவேலென்று குரோதத்தை உமிழ்கின்றன. கர்ஜிக்கிறாள் — அதிகோரமாக, ரத்தமே உறைந்து போகும்படி.

என்ன பீபத்ஸம், என்ன கொடூரம் என்று தோன்றலாம்.

அணுவைப் பிளக்கிறார்கள். அணுவைப் பிளந்து வெளியான சக்தியால் மலைகள் நொறுங்குகின்றன; மேடு சுனையாகிறது; சுனை குன்றாகிறது; இவற்றைவிடக் குரூரமாக உண்டாகிறது நெருப்பு வெள்ளம். அதில் நிலம் எரிந்து பசுமை எல்லாம் பாழாகிறது. இத்தனையும் அழிவுக்காக. கருவிலுள்ள குழந்தைகூட அதனால் விகாரமான உருவமும், விபரீதமான புத்தியும் பெற்றதாக உருவாகிறது. பீபத்ஸம்தான்! ஆக்கத்துக்காகவே அணுச் சக்தியை வெளியிட்டுக் காரியம் செய்யும் போதுகூட அஞ்சத்தக்க, அருவருக்கத்தக்க விளைவுகளைத் தவிர்க்கத்தானே முடியவில்லை? ஆக்கத்துக்காக அணுவைப் பிளந்தாலும் கதிரியக்கம் உண்டாகிறதே! நன்மை தரும் அணுப் பிளப்பிலேயே சில நல்லவற்றுக்கு அழிவுதர வேண்டியிருக்கிறது. அணு பிளந்தாற்போல் ஒரு மகாசக்தியின் தர்ம கோபமே அவளிடமிருந்து பிளந்து வெளிவந்து

உருவானபோது அதில் அஞ்சத்தக்க, அருவருக்கத்தக்க அம்சங்கள் நிறைந்து செறிந்துவிட்டன. ஆனால் கோர காளி நல்லோர் ஒருவரிடமும் அழிவுச் சக்தியைக் காட்டவே மாட்டாள். லட்சோபலட்சமாகத் தீயோரை அழித்தாலும் ஓர் உத்தமப் பிறவியின் மீதுகூட சம்ஹார ஆற்றலைப் பிரயோகிக்கமாட்டாள். காளியின் பிறிதோர் அவஸரமாகிய 'ரக்த தந்திகா' என்னும் ரத்த சாமுண்டியாகிய பயங்கர ரூபிணியைப் பற்றி மான்மியத்தில் பிற்பாடு 'மூர்த்தி ரஹஸ்ய'த்தில் சொல்கிறபோது, இந்தப் பயங்கரியே பக்த ஜனங்களிடம் பரிவு கொண்டு பணிந்து சேவிக்கிறாள் என்று கூறப்படுகிறது. எதைப்போல் என்றால், 'கற்பரசி ஒருத்தி எப்படிப் பதிக்கு சுசுரூஷை செய்வாளோ, அதைப்போல்' என்கிறது. இந்த உவமை விரசமாகச் சிற்றின்பத்தை நினைத்து கூறப்படவில்லை. தன்னை அப்படியே அடக்கி ஒடுக்கி அழித்துக் கொண்டு இன்னொருத்தருக்கு நலன் புரிவதற்குச் சிகரமான எடுத்துக்காட்டு பதிவிரதா தர்மம்தான். அதனாலேயே இது பக்தரிடம் காளி காட்டும் ஈடுபாட்டுக்கு உவமிக்கப்படுகிறது. பயங்கரியாயினும் பக்தர்களுக்கு நலமே செய்யும் சிவங்கரியாகவும், அதுமட்டுமின்றி, அவர்களுக்குப் பணியும் புரிகின்ற கிங்கரியாகவும் இருக்கிறாள் காளி — வசங்கரியாக அவர்களைத் தன்பாற்படுத்திக் கொள்ளவே இத்தனை விளையாட்டு! அதனால்தான் அவளை பத்ர(மங்கள) காளி என்றே சொல்கிறோம். அவளது நேரடி நோக்கம் இவ்வாறு அடியார்க்கு அநுகூலமாயிருப்பினும், ஆக்க அணுப்பிளப்பிலும் அருவருக்கத்தக்க கதிரியக்கம் இருப்பது போல, அவளது தோற்றத்திலும், செயலிலும் அருவருக்கத்தக்க அம்சங்கள் உள்ளன. கதிரியக்கத்தை எவராலும் தடுக்கமுடியாது. ஆனால் காளியிடம் உள்ளன்பு வைத்துவிட்டாலோ அவளது அருவருப்பு அம்சம் அடியோடு தெரியாமலே போய்விடும். அல்லாமலா ராமகிருஷ்ணரும் சாரதாமணியும் அவளைக் கொஞ்சிக் கொஞ்சி வழிபட்டனர்?

கௌசிகிக்குள்ளிருந்து வெளிப்பட்ட காளி சத்துரு சைனியத்திடை புயல் வேகமாகப் புகுந்து சிட்சிக்கத் தொடங்கினாள். சிட்சணம் என்பது இவள் விஷயத்தில் பட்சணமாகவே இருந்தது! ஆம், எதிரிகளை ஆயுதமெடுத்துக் கொல்கிற சிரமத்தை இவள் வைத்துக்கொள்ளவில்லை. அவர்களை வாரி வாரி வாயில் போட்டுக் கொண்டு பட்சித்தாள்! வெகு சீக்கிரத்தில் இவ்விதமாக எதிரிப் படையின் எண்ணிக் கையை ஒன்றுமில்லாததாகச் செய்தாள்.

இந்த பட்சண விருந்து சாஸ்திரோக்தமாகப் பின்னணிப் படையில் தொடங்கியது. முதலில் பாயசம் உண்பதுபோல் ஆயாசமின்றி பின்னணியை முடித்துக் கட்டிவிட்டு பருப்பு அன்னத்தின் ஸ்தானத்தில் யானைப்படைகளை விழுங்கலானாள். யானைகள், அவற்றின் பாகர்கள், அம்பாரி மீதிருந்து யுத்தம் செய்யும் வீரர்கள் எல்லாரையும் ஒரே கையால் ஒரு வழிப்பு வழித்து வாரி வாயிலிட்டுக் கொண்டாள். ரசம் சாதமாக குதிரைப் படைகளுக்கும் இதே 'அநுக்கிரக'த்தைச் செய்தாள். இனிப்புக்களுக்குப் பதில் ரதங்களையும், சாரதிகளையும், ரதிகர்களையும், மகாரதர்களையும் கபளீகரம் செய்தாள். அன்னத்தை உள்ளே தள்ளுவதுபோல் அத்தனை லகுவாகப் பணியாரங்களைப் புசிக்க முடியாதல்லவா? பல அடுக்குகளும், விதானமும், விமானமும் கொண்ட தேர்களைக் காளியும் கூடச் சற்றுக் கடித்து மென்றுதான் விழுங்க வேண்டியதாயிற்று. அப்புறம் தயிரன்னத்தைப் போல் காலாட் படையினர் வந்தனர். விளையாட்டை இவ்வளவு சீக்கிரத்தில் முடித்துவிடக் காளிக்கு மனமில்லையாதலால் காலாட்களை ஒட்டு மொத்தமாக விழுங்கிவிடாமல் கொஞ்சம் அசல் யுத்தமே செய்து களித்தாள். கேசத்தைப் பற்றிக் கௌசிகியை இழுத்துச் செல்ல இவர்கள் எண்ணினர் அல்லவா? பழிக்குப் பழியாகக் காளியானவள் பல அசுரரின் கேசத்தைப் பிடித்திழுத்தே கொன்றாள். சிலரின் குரல் வளையை அமுக்கி வதைத்தாள். சிலரைக் காலால் மிதித்துச் சம்ஹரித்தாள். சிலர் மீது உராய்ந்து கீழே தள்ளிக் கொன்றாள். ஆயுதங்களைக் கொண்டும் யதோக்தமான யுத்தம் செய்யலானாள். அவளது வாளும் கட்வாங்கமும் ஒவ்வொன்றுமே கோடியானதுபோல் ரணபூமி முழுதிலும் மின்னி வீசின.

பகைவர்கள் இவள் மீது அஸ்திர சஸ்திரங்களைப் பொழிந்தபடி இருந்தனர். அவற்றை எல்லாம் இவள் வாயைத் திறந்து கொண்டு வாயார வரவேற்று வயிறார வயிற்றுக்குள் அனுப்பிவைத்தாள். அனைத்தையும் ஜீரணம் செய்து கொள்வாள் இந்த ரணபத்திர காளி.

படபடவென்று அசுர சேனை விழுந்து பொடித்துப் போயிற்று. மீதமிருந்தவர்களை அடித்தும், பல்நுனியால் கடித்தும் பரலோகத்துக்கு, பரதேவதையின் லோகத்துக்கு அனுப்பிவைத்தாள்.

சேனை முழுவதும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டது கண்டு சண்டன் கடுங்கோபம் கொண்டு சண்ட மாருதமாகக் காளியை நோக்கிச் சென்றான். கணைகளை மழை எனத் தொடுத்து எய்தான். இவன் விடுக்கும் வேகம் பெரிதா,

அவள் விழுங்கும் வேகம் பெரிதா என்று சொல்லவொண்ணாமல் போட்டா போட்டி நடந்தது.

முண்டனும் இவனது உதவிக்கு வந்து சேர்ந்தான்.

ஆயிரமாயிரமாகச் சக்கராயுதங்களைச் செலுத்தினான் முண்டன். சண்டனின் சரங்களை அவள் விழுங்கிக் கொண்டே இந்தச் சக்கரங்களை ஆயுதங்களால் தடுத்தாள். அவை அவளைச் சூழ்ந்து மறைத்துவிட்டன. தன்னை உசுப்பிக் கொண்டு சர-சக்கரங்களைச் சரசரவென உறிஞ்சினாள் காளி. கருத்த அவளது முகத்துள் அநேக சக்கரங்கள் புகுந்து மறைந்தது, அநேக சூரியர்கள் கனத்த கருமேகங்களில் புகுந்து மறைந்தாற் போலிருந்தது!

ஏற்கனவே கூரிய அவளது பற்கள் இச்சக்கராயுதங்களை மென்றதால் மேலும் சாணை பிடித்தது போல் ஜொலித்தன, காணும் கண் கூசிக் குருடாகிற அளவுக்கு!

சண்ட-முண்டரை சம்ஹரித்துவிட வேண்டியதே என்று தீர்மானித்தாள்.

''ஹஹ்ஹா...ஹஹ்ஹஹ்ஹா''

பயப் பிராந்தி உண்டாக்கும் அட்டஹாஸ கர்ஜனை செய்தாள்.

அவள் பணியைத் தலைக்கட்டுகிற அத்தருணத்தில் அவளது போர்த்திறனைப் பாராட்டுமுகமாக கௌசிகியானவள் தனக்கே உரித்தான சிம்ம வாகனத்தைக் காளிக்கு உவந்து அளித்தாள். என்ன பெருந்தன்மை? சூழ இருப்பவரை உயர்த்துவதில் எத்தனை உதார குணம்?

காளிக்குப் பெருமை பிடிபடவில்லை, மகிமை வாய்ந்த மகாசிம்மத்தின் மீது கம்பீரமாக ஏறிக் கொண்டு, சண்டனிடம் விரைந்தாள்.

ஒரே விநாடிதான். அலாக்காக அவனது முடியைப் பிடித்திழுத்தாள். அவன் கண்டத்தில் பாய்ந்தது காளியின் வாள். தலை வேறு உடல் வேறாகத் துண்டாகி விழுந்தான் சண்டன்!

அருமைத் தோழன் மாண்டதில் பீறிடும் கோபத்துடன் முண்டன் ஒரே பாய்ச்சலாகக் காளிகையின் மீது பாய்ந்தான். சண்டனுக்குச் செய்ததில் இம்மியும் இவனுக்குக் குறைக்கக்

கூடாது என்ற சமந்நிதியோடு காளி அதே வாளை இவன் கழுத்தில் வீசினாள்.

முண்டன் சிரமும் முண்டமும் வேறாகச் செத்து வீழ்ந்தான்.

யுத்தத்தில் கலந்து கொள்வதற்காகப் புதிதாகச் சும்பனால் அனுப்பப்பட்ட படைகள், அண்டத்தைக் கலக்கிய சண்டனும், உத்தண்டனான முண்டனும் கண்ட துண்டமானதைக் கண்டதும் திகைத்து நடுங்கித் திக்கெட்டும் ஓடின.

மூளைக் கொழுப்புப் பிடித்த சண்டனின் சிரத்தையும், இந்திரியக் கொழுப்புக் கொண்ட முண்டனின் முண்டத்தையும் கைகளில் எடுத்துக் கொண்டாள் காளியன்னை. இவர்களைக் கொல்லப் போவதற்குப் பொருத்தமாகத்தான் இவள் முன்கூட்டியே மேனியில் சிரமாலையும் இடையில் முண்டங்களை வேய்ந்த சேலையும் உடுத்தியிருந்தாளோ?

உற்சாகத்தோடு கௌகிகி தேவியைச் சென்றடைந்தாள் காளி. காணிக்கை செலுத்துவதுபோல் பரமபக்தியுடன் அந்தத் தலையையும் உடலையும் அந்த மகா சரஸ்வதியின் திருமுன்னர் வைத்தாள்.

சந்தோஷம் பிடிபடவில்லை அவளுக்கு. எதை எதிர்பார்த்து அம்மா தன்னைப் படைத்தாளோ அதை ஈடேற்றி விட்டோம் என்ற திருப்தி துளும்ப 'ஹஹ்ஹா' என்று அட்டஹாஸம் செய்தாள்.

''தேவீ! தர்மத்துக்காகச் செய்யப்படும் பெரிய வேள்வியாக்கும் இந்தப் போர். இதில் பலியாக சண்டன், முண்டன் என்ற இரு மகா பசுக்களை (மிருகங்களை) நான் உனக்கு இதோ அர்ப்பணிக்கிறேன். இனி நீயே சும்பனையும், நிசும்பனையும் பலிகொள்ளப் போகிறாய்'' என்றாள் காளி.

காளி போர்வெறி மிக்கவள் எனினும், தர்மத்துக்கு எப்படிக் கட்டுப்பட்டிருக்கிறாள்? சும்ப-நிசும்பரை சம்ஹரித்த பெருமை சிறியவளான தனக்குச் சேரலாகாது; அது அம்மாவுக்கே உரித்தாக வேண்டும் என்று கருதுகிறாள்.

'தேவி பாகவதத்'தில் இங்கு ஒரு பெரிய மாறுபாடு:

காளி சண்ட-முண்டரைப் பாசத்தால் கட்டி இரு முயல்களைத் தூக்கி வருவது போல் கௌசிகியிடம் கொணர்ந்து, ''யக்ஞத்தில் பசு பந்தம் செய்தேன். ஏற்றுக் கொள்'' என்கிறாள். அம் மாவீரர் செயலற்றுக் கிடப்பது கண்ட

அம்மா ''காளி! நீ இவர்களைக் கொல்லவும் வேண்டாம்; உயிரோடு விட்டுவிடவும் வேண்டாம். சமர்த்தையான உனக்கு இதற்குமேல் சொல்ல வேண்டுமா?'' என்கிறாள். அவளது குறிப்புணர்ந்த காளி, ''இந்த யாக சாலையில் யூபஸ்தம்பம் இக் கத்திதான்'' என்று கூறி, கத்தியால் அவர்களை வெட்டி ரத்தபானம் செய்து, புசித்து விடுகிறாள்.

'கொல்ல வேண்டாம்' என்று அன்னை சொன்னதை இவள் கேட்கவில்லையே எனத் தோன்றலாம். 'கொல்லவும் வேண்டாம்! விட்டுவிடவும் வேண்டாம்' என்று அன்னை சொன்னாளே, இரண்டில் ஒன்றின்றி வேறென்ன செய்யக்கிடக்கிறது என்ற ஐயமும் எழும். இப்புதிர்களுக்கு ஒருவாறு இவ்விதம் விடை கூறலாம்: கொல்வது என்றால் வெறுமே சாக அடிப்பது. அதன் பின் அசுரரின் உயிரானது நரகு செல்லும்; மீளவும் பிறப்பெடுக்கும். இதனால் மறுபடி அனர்த்த பரம்பரை உண்டாகும். கொல்லாமல் இப்போதே அவர்களை விட்டு வைப்பது அனர்த்தம். இரண்டும் இல்லாமல் அவர்களுக்கு முக்தி தந்துவிடலாம். காளிக்கு நேராக ஆயுதப் பிரயோகத்தாலேயே முக்தி தருகிற சக்தி இல்லை போலிருக்கிறது. முதலில் மூலப் பிரம்ம பராசக்தி, அவளிடமிருந்து கௌசிகி, அந்தக் கௌசிகியிடமிருந்து இவள் என்று வந்ததால் படிப்படியாக அநுக்கிரக ஆற்றலின் அடர்த்தி குறைந்திருக்கலாம். பூரண பிரம்ம சக்தி வெறும் சங்கற்பத்தாலேயே எதற்கும் முக்தி தரமுடியும். கௌசிகியோ ஆயுதப் பிரயோகம் அல்லது ஹுங்காரமாவது செய்தால் தான் முக்தி வழங்க இயலும் போலிருக்கிறது. அதற்கும் அடுத்த நிலையிலுள்ள காளி எதிராளியை விழுங்கித் தன்னிலேயே கரைத்துக் கொண்டால்தான் முக்தி தரமுடியும் எனத் தோன்றுகிறது. இதனால் தான் காளி அவர்களைப் புசிக்கிறாள். பகைவருக்கும் கைவல்யம் தரும் கருணையே கருணை!

'மான்மிய'த்துக்குத் திரும்புவோம்.

காளியின் வெற்றியில் பூரித்தாள் மஹா ஸரஸ்வதியான சண்டிகை.

''தேவீ!'' என்று தன் குழந்தை ஸ்தானத்திலிருந்த காளியைத் தூக்கி வைத்து விளித்தாள். ''சண்டனையும் முண்டனையும் வதைத்தெடுத்து வந்ததால் இனி நீ சாமுண்டா என்றே பெயர் பெற்று லோகப் பிரசித்தி பெறுவாய்'' என்று உளம் குளிர்ந்து மதுரமாக வாழ்த்தினாள்.

ஆகா, அந்த வாழ்த்துத்தான் எத்தனை அற்புதமாகப் பலித்து விட்டது? துர்க்கை என்றாலே இன்று பெரும்பாலோர் சாமுண்டேசுவரியைத் தானே எண்ணுகிறார்கள்? அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி, மகா சரஸ்வதி என்ற பெயர்கள்கூட அநேகருக்குத் தெரிந்திருக்கவில்லையே! மகா காளி என்ற பெயர் தெரிந்திருந்தாலும் அதுவும் சாமுண்டி என்றுதானே எண்ணுகிறார்கள்? கர்நாடகத்திலும் மற்றும் தேசத்தின் பல பாகங்களிலும் சாமுண்டேசுவரியாகவும், ரத்த சாமுண்டியாகவும் இவள்தான் கியாதி பெற்றிருக்கிறாள். மகிஷன் பேரில் அமைந்த மஹிஷுர்தான் மைசூர். ஆனால் அங்கு மகிஷமர்த்தினிக்குப் பதில் சாமுண்டி அல்லவோ இருக்கிறாள்?

எல்லாவற்றையும்விடப் பெரிய பிரசித்தி, நவாக்ஷரி மகா மந்திரத்தில் நவராத்திரி நாயகியரில் மற்ற எவரது திருநாமமும் வெளிப்படக் கூறப்படாமல், சாமுண்டாவின் திவ்விய நாமம் மட்டுமே ஸ்பஷ்டமாகக் கூறப்படுவதேயாகும். மற்ற மூர்த்தியர் உருவகிக்கும் சத் - சித் - ஆனந்தத்தின் பீஜங்கள் மட்டுமே நவாக்ஷரியில் வரும். சத் - சித் - ஆனந்தம் கைகூடுவதற்கு அத்தியாவசியப் பூர்வாங்கம், அதர்மம் அழிவது. இந்த அழிப்புச்சக்தியே சாமுண்டி. தீய சக்திகள் பெரும்படையாக (சமூ) நம்மைத் தாக்கும்போது அதனைத் தகர்ப்பவளே சாமுண்டி. பிறகு தன்னால் சத்-சித்-ஆனந்தம் எய்துகிறோம்.

காளி, லக்ஷ்மி, சரஸ்வதி என்கிற பெயர்களோடு 'ஈசுவரி' என்பதைச் சேர்ப்பதில்லை. துர்க்கையையும் துர்க்காம்பா என்றுதான் சொல்கிறோம். சண்டிகைக்கு 'ஈசுவரி' பட்டம் சேர்த்து சண்டிகேசுவரி என்றாலோ, அது (சிவனுக்குச் சண்டிகேசுவரரின் ஸ்தானத்தில்) அம்பாளுக்குக காவலாளியான பரிவார தேவதையைத்தான் குறிக்கும். ராஜேசுவரியையும், புவனேசுவரி யையும் போல் நவராத்திரி நாயகியரில் 'ஈசுவரி'யாக இருக்கிறவள் ஸ்ரீ சாமுண்டேசுவரிதான்.

மற்ற தேவியருக்குத் தேவரும் முனிவரும் பெயர் வைத்தனர். சாமுண்டேசுவரிக்கோ நாமகரணம் செய்தது சாக்ஷாத் அம்பிகையே அல்லவா? அந்த விசேஷம்தான் அது ஜகப்பிரசித்தி பெற்றிருக்கிறது!

4. சொட்டு ரத்தமும் ஒட்டுமொத்தமும்

சண்ட-முண்டரைக் காளி உண்டனள் என்றறிந்ததும் அசுரபுரியில் ஒரே அமளி ஆயிற்று என்கிறது பாகவதம்.

இங்கு அமரர் ஆனந்தத்தில் அல்லோலகல்லோலம் செய்ய, அசுரரோ அரசவைக்கு சென்று ஓலமிட்டனர்.

''சண்டிகைக்கும் சாமுண்டிகைக்கும் முன் இனி நாம் சென்று பயனேயில்லை, மன்னா! மீதமிருப்போரையும் மாய்த்துக் கட்டுவதற்கு ரத்த வெறிகொண்ட காளி தூக்கிய கத்தியுடன் நிற்கிறாள். 'வாருங்கள் என் வயிற்றுக்குள்ளே!' என்பதுபோல் அந்த சிம்மேந்திரனும் கர்ஜித்து நிற்கிறது, ராஜன்! பெண்ணாசை எத்தனை விபரீதம் புரியும் என்று பிரத்தியட்சமாகிவிட்டது. ஒரு ஸ்திரீயிடம் உனக்குள்ள ஆசையின் நிமித்தமாக ஆயிரம் வெள்ளம் அசுரர் மாண்டுவிட்டனர். அவர்களது உதிரம் காளி பருகியபின்னும் எஞ்சி வெள்ளமாக ஓடுகிறது. அந்த வெள்ளத்தில் குன்றுகள் போல உடல்களும், நீர்ச்சுரைக்காய்கள் போல் தலைகளும், பாசிபோல் தலைமுடிகளும், சேறுபோல் நிணமும், மீன்கள்போல் அறுபட்ட கைகளும், மரம் மட்டை போல் முறிபட்ட ரதங்களும் மிதக்கின்றன. அசுரராகிய எங்களுக்கே பீதியூட்டுகிறது ரணகளம். அவ்வாறிருந்தும் அது உன்னை வாவென்று அழைத்தால் நாங்கள் என்ன செய்வோம்? பூர்வத்தில் புஷ்பகரத்தீவில் நீ செய்த ஆர்வத் தவமும், அதில் அயனார் அகமகிழ்ந்து அருவரம் தந்ததும், அதன் பலத்தால் நீ அகிலாண்ட ஆட்சி பெற்றதும் – இவை எல்லாமே கடைசியில் ஒரு சிறு பெண்ணுக்காக அடிநாசமாக வேண்டும் என்றால் அதை என் சொல்வோம்? இதுவரை ஆகு ஊழ் உனக்கு உதவியது என்றும் இப்போது போகு ஊழ் உன்னை உபத்திரவிக்கிறது என்றும் ஊழ்வினையை நம்பிப் பேசுவதன்றி வேறென்ன சொல்லக் கிடக்கிறது? ஊழ் அல்லது விதி அல்லது தெய்வம் விட்ட வழி என்று முயற்சியற்றுக் கிடக்க வேண்டியதே!''

அசுரர்கள் இப்படி மறைமுகமாகவும், நேர்முகமாகவும் அரசனை இடித்துரைக்க அவன் இடிமுழக்கக் குரலில் கூவினான்: ''முட்டாள்களே! உங்களுக்குப் போரில் ஆசை போய், உயிரில் ஆசை வந்துவிட்டது. என்னையும் இந்தப் பேடித்தனத்தில் ஆழ்த்த முயல்கிறீர்கள். இது நடக்காத காரியம். ஊழ்வினைப்படிதான் நடக்கும் என்பதை நான் அறிவேன். நமது குரு சுக்கிரரிடம் நான் பாடம் படித்தது மட்டுமல்ல, தேவகுரு பிருகஸ்பதியிடமிருந்தும் வஞ்சகமாகக் கற்றவன் நான். அதனால் எனக்கு நீங்கள் புத்தி போதிக்க வேண்டியதில்லை, கபோதிகளா! அவரவர் கர்மத்துக்காகப் பிற்பாடு அநுபவிக்க வேண்டியிருப்பதையே ஊழ்வினை என்கிறார்கள். இதிலிருந்து நமக்கு சுதந்திரமே இல்லை என்று எப்படி அர்த்தமாகும்? இப்போது நாம் அநுபவிப்பதற்கு காரணமான காரியங்களை முன் ஒரு காலத்தில் நாம் சுதந்திரமாகச் செய்துதானே இருக்கிறோம்? அப்போதும் நமக்குச் சுயேச்சை இல்லை எனில் தெய்வமே அந்தச் செயல்களைப் புரிந்துவிட்டு, அதற்காக நம்மை இப்போது தண்டிக்கிறதா? இச்சா சுதந்திரமும், கிரியா சுதந்திரமும் இருப்பதாலேயே கர்மம் செய்கிறோம். இவை நல்லனவாக இருந்தால் பிற்பாடு நல்லதையும், தீயனவாகயிருந்தால் தீங்குகளையும் அநுபவிப்போம். அப்படி அநுபவிக்கிறபோதும் சுதந்திர சக்தி கொண்டு மேலும் நல்லதோ கெட்டதோ செய்கிறோம். அறிவு இருந்தால் கெட்டதைச் செய்யாமல் நல்லதை மட்டுமே செய்ய முனைவோம். இதனால் பழம்பாக்கியான தீமையை, போகு ஊழ் என்று நீங்கள் சொன்னதை, போக்கிக்கொண்டு விடலாம். செயலே இல்லாமல் விதி விட்ட வழி என்று மூடத்தனமாக, ஜடத்தனமாகக் கிடப்பது உங்களுடைய உலக்கைக் கொழுந்தான மூளைக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால் இந்தச் சும்பன் அப்படிக் கிடக்க மாட்டான். இறுதிமூச்சு உள்ள வரையில் நற்செயல் செய்வதில் தனது சுதந்திர முயற்சியைக் காட்டி முடிந்த மட்டும் பொல்லா விதியை நல்லதாக்கிக் கொண்டே தீருவான். இப்போது செய்யவேண்டிய நற்செயல் என்ன? தேவருக்கு உதவவே அந்த மாயப் பெண் வந்திருக்கிறாள் என்று நிதர்சனமாகிவிட்டது. அவளால் நம் அருமை வீரர்கள் எண்ணிறந்தோர் இறந்தே விட்டனர். இப்போது தர்மம் என்ன? நம் உயிரைக் காத்துக் கொள்வதற்காகப் பாதாளத்துக்கு ஓடிப் பதுங்குவதுதானா? அப்படிச் செய்தால் மட்டும் உங்கள் சித்தாந்தப்படியே ஊழை மாற்ற முடியாது என்பதால், நாம் மரணத்திலிருந்து தப்பிவிட

முடியுமா? ஆனபடியால் வருகிற மரணம் தர்மத்தின் பொருட்டே வரட்டும். அசுர ஜாதியரான நாம் நம் இனத்தைத் தேவரிடமிருந்து ரட்சித்துக் கொள்வதே நம் தர்மம். நமக்காகப் பிராணத் தியாகம் புரிந்தோர் தொடங்கிய செயலை நாம் தொடருவதே நம் தர்மம். உயிரை ரட்சித்துக் கொள்வதைவிட தர்மத்தை ரட்சிப்பதே எனக்கு முக்கியம். எனவே நான் போருக்குச் செல்லவே தீர்மானித்து விட்டேன்!'' என்றான் சும்பன்; கிளம்பியும் விட்டான்!

முன்னொரு சமயம் இவனே காம மயக்கத்தால் ஓடி உயிர் தப்ப எண்ணியவன்தான். அன்று தம்பி படித்த பாடத்தையே இன்று திரும்பிப் படிக்கிறான்! தர்மத்தைப் பற்றியும், நன்முயற்சி பற்றியும் அதியற்புதமாகப் பேசுகிறான். மோசடி என்பது சத்தியம் மாதிரியே நடித்துவிட முடியும்! சண்டிகை ஒருகாலும் தன்னை நேசிக்கப் போவதில்லை என்று உறுதியாகி விட்ட நிலையில் இவன் தலைமறைவாக வாழ்கிற எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டான். என்ன இருந்தாலும் அவன் மகாவீர பராக்கிரமசாலி என்பதை மறுப்பதற்கில்லை. ஏதோ ஒரு காமவெறியில் அஞ்ஞாத வாசத்தை முன்பு எண்ணினான். எனினும், இன்று காமம் பலிக்காது என்று கண்டபோது, வெற்று வாழ்வுக்காகப் பாதாளத்தில் ஒளிந்து கொள்வதற்கு இவன் விரும்பவில்லை.

இது ஒருபுறமிருக்க, இனி இவர்களாகப் போருக்குச் செல்லாவிட்டாலும் காளியே படை எடுத்து வந்து யமாலயம் அனுப்பி விடுவாள் என்ற நிலையில் இமாலயத்தில் இவன் அரண்மனை வாழ்வு நடத்துவதெப்படி? எனவே போரைத் தேடிப் புறப்பட முடிவு செய்தான் என்றும் சொல்லலாம். அதோடு மெய்யாலுமே தனக்காக உயிர் துறந்த வீரர்களிடம் இவனுக்கு அன்பும் நன்றியும் உண்டாதலால், அவர்கள் எடுத்த பணியை மனமறிந்து வியர்த்தமாக்கிவிட இவன் விரும்பவில்லை எனலாம். அசுர மன்னர்கள் பிறரை இம்சித்தாலும் தங்களது மாவீரர்களிடம் நன்மதிப்பு வைத்ததாகவே புராணங்களில் பார்க்கிறோம்.

இந்தப் பாசம் காரணமாக, மன்னர் புறப்பட்டார் என்றதும் படைகள் பதறின. ''தாங்கள் இப்போது செல்ல வேண்டாம், நாங்களே இறுதி முயற்சி செய்வோம்'' என்று தடுத்தன. தங்களைப் போருக்குச் சித்தம் செய்து கொண்டன.

இனி பாகவதத்தோடு மான்மியமும் கலந்து படைக்கும் கதை.

சும்பன் சகலலோகங்களிலும் உள்ள அத்தனை அசுரப்படைகளையும் வரவழைத்து விட்டான். இன்றைய ஒயர்லெஸ், ராடார் இவற்றைவிட விரைவில் மற்ற நாடுகளுக்கும், லோகங்களுக்கும் கூட, செய்தி அனுப்புகிற மந்திரசக்தி அவனுக்கு இருந்தது. இன்றைய ஸூபர்ஸானிக் விமானங்கள், ஐ.ஸி.பி.எம்.கள், ராக்கெட்டுகளை விட விரைந்து மனோவேகத்தில் வரக்கூடிய மந்திரசக்தியாகிற விமானம் பிற லோக அசுரர்க்கும் இருந்தது. எனவே வெகு விரைவில் இமயமலையில் இட நெருக்கடி உண்டாகிற அளவுக்குச் சகல தேசங்களிலிருந்தும், சர்வ லோகங்களில் இருந்தும் அசுரப்படைகளும், அவர்களுடைய நேசப்படைகளும் வந்து குழுமின.

தைத்ய தளபதியர் எண்பத்தறுவரும் ஆயுதங்களை ஓங்கிப் பிடித்தவாறு குதித்தனர். இன்னும் கம்பு குலத்தினர், கோடி வீரர்கள், காலகர்கள், தௌம்ரர்கள், தௌர்ஹிருதர்கள், காலகேயர்கள், மௌரியர்கள் முதலியோரும் திரண்டு வந்தனர்.

இத்தனை சேனைக்கும் தான் அதிபன் என்றதும் சும்பனுக்கு இயல்பான அசுரச் செருக்கு தலைக்கேறியது.

''செல்லுங்கள், வெல்லுங்கள், கொல்லுங்கள்! எவரேனும் அபஜயத்துடன் திரும்பி வந்தால் காலில் வைத்துத் தேய்த்து விடுவேன், ஜாக்கிரதை!'' என்றான்.

★ ★ ★

சேனா சமுத்திரத்துக்குத் தலைமை தாங்கியவன் ரக்தபீஜன்.

இத்தனை சேனைக்கும் சமமான பலம் அவன் ஒருத்தனுக்கே உண்டு. சமபலம் என்றாலும் போதாது; கொள்ளக் கொள்ளக் குறையாதது அவனது சக்தி. ஆம், அவன் ஒருத்தன் தன்னிலிருந்தே இத்தனை சேனா சமுத்திரத்தை, அதற்கும் அதிகமாகவும், படைத்துவிட முடியும்.

என்ன, பார்வதியிலிருந்து கௌசிகியும், கௌசிகியிலிருந்து சாமுண்டியும் ஆவிர்பவித்ததுபோல் இவன் தன்னிலிருந்தே வேறு ஆவிர்பாவங்களை உண்டாக்குவானா? இவனாக உண்டாக்க மாட்டான். இவனது சத்துருவே இவனிடமிருந்து உண்டாக்கி விடுவான்! சத்துருவா உண்டாக்குவான்? இவனது சத்துரு ஏன் இவனுக்கு உதவி செய்கிறவர்களை இவனிடமிருந்தே உண்டாக்க வேண்டும்? மனமறிந்து எந்த சத்துருவும் இப்படிச் செய்யத்தான்

மாட்டான். ஆனால் இந்த வஞ்சமாபாதகன் பெற்றிருந்த ஒரு வர பலத்தால் இப்படி நடக்கும். சும்பன் என்ற மோசத்துக்கும், நிசும்பன் என்ற பொய்க்கும் இவன் உயிர்த்துணையானதால் வஞ்சக வரம் பெற்றிருந்தான். என்ன வரம்? எதிரி இவனிடமிருந்து ஒரு சொட்டு ரத்தத்தைச் சிந்தச் செய்து விட்டால் போதும்; இவனது சொட்டு ரத்தம் பூமியில் விழுந்த மாத்திரத்தில் இன்னொரு ரக்தபீஜனாகி உருவெடுத்து விடும்! நல்ல வேளை, இப்படி உருவான ரக்தபீஜர்களின் ரத்தத்திலிருந்தும் சொட்டுக்கு ஓர் அசுரன் தோன்ற வேண்டும் என்று வரம் பெறாதிருந்தான்! எதிராளியே இப்படி சுயங்கிருத அனர்த்தமாக அசுரப் பட்டாளத்தை சிருஷ்டித்துக்கொள்ள வேண்டும் என்று இவன் வரம் பெற்றானே, அது அசுர மூளைக்கே உரிய வஞ்ச மாபாதகம்தான்! இவனது ரத்தச்சொட்டு ஒவ்வொன்றும் ஓர் அசுரனுக்கு வித்தாக(பீஜமாக) இருந்ததாலேயே இவனுக்கு 'ரக்தபீஜன்' என்ற பெயர் உண்டாயிற்று. வரம் பெறுமுன் இப்பிறவியில் இவனது இயற்பெயர் என்னவோ, தெரியவில்லை.

'இப்பிறவியில்' என்று சொன்னதற்குக் காரணம், இதற்கு முற்பிறவியில் இவன் பெயர் என்ன என்று நமக்குத் தெரியும். ஆம், மகிஷாசுரனின் தந்தையான ரம்பனைப் பற்றியும் சிற்றப்பனான கரம்பனைப் பற்றியும் முன்பு மத்திய சரிதத்தில் படித்திருக்கிறோம் அல்லவா? பூர்வஜன்மத்தில் அந்தக் கரம்பனாக இருந்த மகாநுபவன்தான் இப்போது ரக்தபீஜனாகத் திருவவதரித்து, சேரிடம் அறிந்து சேர் என்றபடி சும்பநிசும்பரைச் சேர்ந்திருக்கிறான்! கரம்பனே மறுபிறவி எடுக்கும்போது ரம்பனின் தன்மையையும் தன்னில் கலந்துகொண்டு விட்டான்! இது பாகவதம் பகரும் கதை.

இந்திரிய இன்பத்துக்குச் சாதனங்களாக மனிதன் படைத்துக் கொண்ட போகப் பண்டங்களில் நாட்டமே கரம்பன் என்று படித்த நினைவிருக்கலாம். தாற்காலிகமாக இந்திரியங்கள் இவற்றை விடுமாறு பழக்கலாம். இதனால் போக இச்சை போயே விட்டது என்று கூடத் தோன்றிவிடும். இந்திரியங்கள் உயிர் வாழ்வதற்கான காரியங்களை மட்டும் தற்செயலாக செய்து இந்த அநாவசிய போகங்களை விடுமாறு அப்பியாசத்தினால் செய்யலாம். இந்திரிய அதிதேவதையான இந்திரன் கரம்பனைக் கொன்றதற்கு இதுவே தாத்பரியம். ஆனால் அது கொலையேதானா? மெய்யாலுமே போக்கிய நாட்டம் அவ்வளவு எளிதில் அடியோடு போய்விடுகிறதா? இந்திரியங்கள் விழிப்பு நிலையில், காரிய ரீதியில் இந்த போக்கியங்களை விட்டாலும், மனத்தின் அடிவாரத்தில் இவற்றிலுள்ள பற்று அடியோடு போவது லேசா?

ஜபமும், பூஜையும், தியானமும், சேவையும் செய்கிறபோதில் போக்ய உணர்வு போயேவிட்டது என்றுதான் எண்ணியிருப் போம். பிறகு லௌகிகத்துக்குத் திரும்புகிறபோது போக வஸ்துக்கள் கண்களில் பட்டால் தவிர்க்க முடியாமல் ஜீவனை இழுத்துக் கொண்டேதான் இருக்கும். என்றாலும் காரியத்தில் அவற்றை நுகராமல் கட்டுப்படுத்திக் கொள்வோம். மனத்தில் இந்த ஆசை எழுந்தாலும் அடக்கிப்போடுவோம். ஆனால் உறக்கத்தில் அடிமனம் திறந்து கனவு உருவாகும்போது, இந்த துராசைகள் தலைதூக்கிப் பார்ப்பதைத் தெரிந்துகொள்வோம். 'இன்னின்ன பாவங்களை நான் செய்யக்கூடாது' என்று எண்ணுகிற போதே அந்தப் பாவங்களை நினைத்துத்தான் விடுகிறோம். ஏற்கனவே அந்தப் பாவங்களில் ஓர் இன்பம் இருந்ததால்தானே அவற்றைச் செய்தோம்? இப்போது பாபத்தை எண்ணியதும், அது தந்த பழைய இன்பமும் நினைவுவந்து மனத்தைத் தன்பால் இழுக்கிறது. 'சீ இவற்றை நினைக்கவே கூடாது' என்று ஓயாமல் நினைக்கிறோம். விந்தையிலும் விந்தை! ஒன்றை நினைக்கக்கூடாது என்று முயலும்போதே அதை நினைத்துத் தானே தீரவேண்டியிருக்கிறது? ''இந்த மருந்து குரங்கின் வீரியத்திலிருந்து செய்தது. அதை நினைத்தால் உனக்குக் குமட்டும். குமட்டினால் மருந்து வெளியே வந்துவிடும். அதனால் இந்த மருந்தை உண்ணுமுன் குரங்கைமட்டும் நினைக்கவே நினைக்காதே'' என ஒரு 'புத்திசாலி' வைத்தியர் நோயாளியிடம் சொன்னாராம். அதிலிருந்து நோயாளியால் குரங்கை நினைக்காமல் மருந்தை உண்ணவே முடியவில்லையாம்! இந்த ஹாஸ்யம் உணர்த்தும் தத்துவம் யாதெனில் நினைப்புக்களை மனமறிந்து அடக்க முடியாது என்பதுதான். அடக்குகிற முயற்சியினாலேயே அதற்கு எதிர்த்தாக்குதலாக, பதுங்கியுள்ள பழைய அநுபவ வேகம் – இதை வாசனை என்பார்கள் – மேலும் உக்கிரமாகிறது. அதற்கு மனம் அடிபணிகிறது. அது மட்டுமல்ல; புலனின்பத்தை எதிர்த்துப் போராடிச் சளைத்ததற்கு மாறாக, மாற்றாக, அதையே மேலும் பற்பல ரூபங்களில் கற்பித்துப் பார்த்துக் கொண்டும் மகிழ்கிறது. பிறகு இதற்காகச் சேர்த்து வைத்துப் பச்சாதாபப்படுகிறது. பாபத்தின் பாரம் ஒருபுறம் அழுத்திப் பலவீனமடைந்த நிலையில் இந்தத் தாபமும் சேர்ந்து ஜீவனைப் புயலில் உடைந்த படகாக ஆக்கிவிடுகிறது. கரைசேருவது எப்படி?

எந்த ஒன்றை அழிக்கப்போய் அதுவே பல ரூபமாகப் பெருகுகிறதோ, அந்த இந்திரிய போக வாசனைதான் இந்த ரக்தபீஜன். இவனை அழிக்க முற்பட்டால் இவன் ஒரு

கோடியாக உருவம் கொள்வான்! உணர்ச்சியின் இருப்பிடமான ரத்தத்திலேயே இந்த வாசனை வித்திட்டுக்கொள்வதாலும் இவனை ரக்தபீஜன் எனலாம். வெளி வஸ்துவின் வெளி அநுபோகமான கரம்பனைக் கொன்றபின் அந்த அநுபோகத்தில் பிறந்த நெடி உள்ளுக்குள் ரம்பனாகப் பரிணமித்து ஓயாமல் வதைக்கிறதே! இந்த ரம்ப-கரம்பர்கள் ரக்தபீஜனாக ஒன்று சேர்ந்து உள்ளும் புறமுமிருந்து வாட்டினால் விமோசனம் பெறுவது எப்படி?

தாக்கத் தாக்க மேலும் பல ரூபத்தில் கிளைத்து வளரும் இவனை வெல்லுவது எப்படி? அதாவது, பழைய வாசனைகளிலிருந்து ஜீவனுக்கு விடுதலை கிடைப்பது எப்படி? அதையும் பிறகு பார்க்கத்தான் போகிறோம்! பொறுத்திருங்கள்! பொறுத்திருங்கள் என்று சொன்னதாலேயே பொறுக்கமுடியாத ஆர்வம் உண்டாகிறதல்லவா? இதுவும் ரக்தபீஜன் மகிமைதான்!

★ ★ ★

ரக்தபீஜன் தலைமையில் விண்ணெட்டப் புழுதியைக் கிளப்பிக்கொண்டு பொங்குமா கடலாக அவுணப்படை வருவது கண்டாள் சண்டிகை. வில்லின் நாணை கம்பீரத்துடனும் கலை எழிலுடனும் சுண்டி விட்டாள். 'டங்காரம்' எழுந்தது; அதன் அதிர்விலேயே புழுதி எல்லாம் அடங்கியது. விண்ணெட்டியது, வில்லென்ற வீணையின் சுநாதம்!

சிம்மம் வீர கர்ஜனை புரிந்தது. அதற்குத் துணைஇசையாக சண்டிகை கண்டாமணிய்ய ஒலித்தாள்.

சிம்மம் மேலும் மகிழ்ந்து முன்னிலும் உற்சாகமாக முழக்கம் செய்தது.

சாமுண்டிக் காளி தன் பங்கைச் செய்யாதிருப்பாளா? அகன்ற வாயை முழுதுமாகத் திறந்து பயங்கர சப்தம் எழுப்பினாள். அந்த சப்தத்தில் திசை யாவும் முழுகின. நாணொலியும், சிம்ம கர்ஜனையும், மணி நாதமுங்கூட முழுகின.

அசுரர்கள் ஆக்ரோசமுற்று யுத்த பூமியை அடைந்தனர்.

ரக்தபீஜன் கௌசிகியான சண்டிகையைக் கண்டான்.

விந்தை! சிருங்கார சௌந்தரியமே ஓர் உருவமாக வடிந்ததுபோல் காண்கிறான். "ஆனால் இந்த சிருங்காரி இத்தனை வைராக்கியசாலினியாக இருக்கிறாளே! கிடைக்கத் தகாத நமது அசுரேந்திரரிடம் துளிக்கூட அநுராகம் கொள்ளாமல் விராகியாக இருக்கிறாளே!'' என்று வியந்தான்.

சராசர பிரபஞ்சம் அனைத்திலுமுள்ள அசுரர்கள் மீதமின்றி வந்துவிட்டனர் என்றதும் அம்பாளைச் சூழ்ந்து ஆகாயத்தில் நின்ற தேவர்களுக்கு ஒரு பரபரப்பு உண்டாயிற்று. அவளுக்குத் தங்கள் உதவி தேவையே இல்லை என்று அவர்கள் அறிந்திருந்தாலும்கூட, தங்கள் பொருட்டே ஆவிர்பவித்த அந்த தயாமூர்த்தியான தாயைத் தானவர் அவ்வளவு பேரும் சூழ்ந்து கொண்டனர் என்றபோது, தாங்களும் ஏதோ செய்தேயாக வேண்டும் என்ற துடிப்பு அமரருக்கு உண்டாயிற்று. அன்பிலே செய்கிற அபசாரத்தைக்கூட ஆதரவுடன் அங்கீகரித்து உற்சாகப் படுத்தும் அம்பிகை, தேவரின் விருப்பத்தை மதிக்கு முகமாக, தன் திருமுகத்தை அவர்கள்பால் திருப்பித் திவ்விய கடாக்ஷம் பாலித்தாள்.

அவ்வளவே! அந்த தேவர்கள் ஒவ்வொருவரின் சக்தியும் ஒரு பெண் உருக் கொண்டு ('சக்தி' என்பதே பெண்பால் சொல்தானே?) வெளிப்பட்டு வந்தது, அம்பிகையின் படைவீரராகிப் போர் புரிவதற்காக!

சாதாரணமாக ஒன்றிலிருந்து தோன்றுகிற இன்னொன்று மூலத்தைவிட ஆற்றலில் குறைந்தேயிருக்கும். அம்பிகை தன்னிலிருந்தே வேறு மூர்த்திகளை உற்பவிக்கச் செய்த போதுகூட இப்படித்தான் நடந்திருக்கிறது. ஆனால் மற்றவர் மீது இவள் கடாக்ஷம் செலுத்திய விசேஷத்தாலோ, அவர்களையும்விட ஆற்றல் பெற்ற அதிசய சக்திகள் அவர்களிடமிருந்தே ஆவிர்பவித்தனர்!

ஒவ்வொரு தேவனுக்குரிய வடிவ விசேஷம், வண்ணம், வாகனம், ஆயுதம், ஆபரணம் இவற்றுடனேயே அவனது சக்தியும் தோன்றினாள்.

அந்தரங்கத்தில் தியானித்து 'வணங்க வேண்டிய அநேக 'தேவீ மான்மிய' கட்டங்களில் இந்த தேவிகளின் தோற்றம் ஒன்றாகும்.

பிரம்மனிடமிருந்து அவனது சக்தியான பிரம்மாணி வெளிப்பட்டாள். இவள் ஹம்ஸ விமானத்தில் ஆரோகணித்திருந்தாள். அட்சமாலையும் கமண்டலுவும் தாங்கியிருந்தாள்.

கம்பீரக் காளையின் மீதமர்ந்து வந்தாள் மகேச்வரனின் சக்தியான மாகேச்வரி. கையிலே உத்தமமான திரிசூலம். வளையலாக அணி செய்கிறது அரவம். திருமுடியில் சந்திரகலை திகழுகிறது.

இதோ கோலமயில் வாகனத்தில் எழுந்தருளும் இவள் குமரப் பெருமானின் சக்தியான கௌமாரிதான் — ஐயமில்லை. ஆம், கோலாகலனுக்கே உரிய சக்தியாம் வேலாயுதத்தை ஏந்தி வேகமுடன் வருகிறாளே!

கருடன் மீதேறி, சங்கமும் சக்கரமும் கதையும் சார்ங்க வில்லும், நந்தகீ வாளும் ஏந்தி வரும் இந்த நீலநிறநாயகி விஷ்ணு சக்தியாம் வைஷ்ணவி என்று கூறத் தேவையில்லை.

இதே திருமால் யக்ஞ வராகமாகவும் அவதரித்தான் அல்லவோ? அவுணர்கள் வேத-வேள்விகளை அழித்து அதருமப் பிரளயத்தில் முழுக்கியிருந்த உலகைத் தன் தூயவெண்கொம்புப் பல்லால் தூக்கி, மீண்டும் வேத-யக்ஞங்களால் அதைக் காத்தவன் அவனே அல்லவா? தர்மத்துக்கான யக்ஞமாக அம்பாள் இப்போது மேற்கொண்டுள்ள அந்த யுத்தத்தில், யக்ஞ வராக சக்தியும் வாராஹியாக ஆவிர்பவித்தாள். சங்கம், சக்கரம் கலப்பை, உலக்கை முதலியவற்றைத் தாங்கியவள் இவள். சிருஷ்டித் திறனையும், சுபிட்சத்தையும் காட்டவே கலப்பையும் உலக்கையும் தாங்கியுள்ளாள். மகாசரஸ்வதியான கௌசிகி தேவியின் எட்டு ஆயுதங்களிலும் இந்த நான்கு ஆயுதங்கள் உள்ளன என்பதிலிருந்து இவர்களது நெருக்கத்தை ஊகிக்கலாம். பிரம்ம சக்தியே லலிதாம்பிகையாக உள்ளபோது அவளது சேனா நாயகியாக இருப்பவள் இந்த வாராஹிதான். இவளை அந்த அவஸரத்தில் 'தண்டினீ' என்றும் கூறுவர். ஆனைக்கா அகிலாண்டேசுவரி வராஹமுகம் படைத்திராவிடிலும் இவளது சாரமே ஆவள்.

வராஹ அவதாரத்தின் சக்தி வந்ததுபோல் நரஸிம்ஹ சக்தி நாரஸிம்ஹியாக வந்தது. ஆண் சிம்மமான தேவியின் வாகனம் முன்னரே இருக்க இந்தப் பெண் சிம்மமும் வந்து சேர்ந்தாள். பெண்ணாயினும் வீர பௌருஷத்தில் நரசிம்மனுக்குச் சளைக்காத இவளுக்கும் செழிப்பான பிடரி மயிர் இருந்தது! இவள் குதித்தெழும்பி பிடரியைச் சிலிர்த்துக் கொண்டபோது உடுகணங்களையும் உலுக்கினாள். நகங்களிருக்க நாரசிம்ஹிக்கு வேறு ஆயுதம் தேவைப்படவில்லை.

வெள்ளை யானை மீது வஜ்ரப் படை தாங்கி, ஆயிர நேத்திரங்களுடன் எழுந்தருளும் இவள்தான் இந்திர சக்தியான ஐந்த்ரீ.

பிரம்மாணி, மாஹேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, நாரஸிம்ஹி, ஐந்த்ரீ ஆகிய இந்த எழுவரையே ஸப்த மாதாக்கள் என்று தொழுகிறோம்.

இவர்களோடு மேலும் மூவரை பாகவதம் கூறுகிறது. கையில் கால தண்டத்தோடு மகிஷம் ஏறி வந்த யம சக்தியாம் யாமி; மகரவாகனத்தில் பாசக் கயிற்றோடு வந்த வருண சக்தியாகிற வாருணி; நர வாகனத்தின் மீது வயிறு புடைத்த வக்கிர ரூபிணியாக மூன்று கால்களோடும், எட்டே பற்களுடனும், ஒரு கண்ணில் மஞ்சள் புள்ளியோடும் வந்த குபேரசக்தியான கௌபேரி ஆகியோரே இம்மூவர்.

குபேரனை நம் புராணங்கள் சித்திரிக்கும் பொருத்தமே பொருத்தம்! மற்ற மூர்த்திகளுக்கு மிருகங்கள் வாகனமாயிருக்க இவனுக்கோ மனிதனே வாகனமாகிறான். மனிதன்தானே பணத்தின் அடிமை? விலங்கினங்களுக்குப் பணம் ஏது? காமாலைக்காரன் போல் பணம் படைத்தவன் பார்ப்பதில் பாதி அவனது பண ஆசையின் பிரதிபலிப்பாகவே ஆகிறது. அதனாலேயே ஒரு கண்ணில் காமாலை மஞ்சள் படிந்திருக்கிறது. முப்பத்திரண்டு பல்லிருந்தால் முற்றிலும் ருசித்து அநுபவிக்கலாம். பணக்காரன் லௌகிக சுகங்களையாவது பூராவாக ருசித்துத் தொலைக்கிறானா? பூதம் காப்பதுபோல் பணத்தையே சேர்த்து வைத்துக் கொண்டு உணவு, உடை போன்றவற்றில்கூட கால்பாகம்தான் இன்பம் நுகர்கிறான். எனவே இவனுக்கு எட்டுப் பல் போதுமானதுதான். தேகத்தைப் போஷிக்க மட்டுமே பணம் உதவுகிறது, ஆத்மனுக்கு அல்ல என்பதற்காகவே தொப்பை உள்ளது. இரண்டு காலால் இயங்குவது எல்லாக் காரியங்களுக்கும் போதுமானதாகவும் சௌகரியமாகவும் இருக்க மூன்றாவதாக ஒரு காலைப் பெற்றால் எத்தனை இடைஞ்சலாக இருக்கும்? இன்பத்தைப் பெருக்கிக்கொள்வதாக எண்ணிப் பணத்தைச் சேர்க்கும் காரியம் இப்படித்தான் தர்ம வழி செல்ல இடைஞ்சலாகவே ஆகிறது. பணத்தால் ஒருவனது தன்மையே மாறி விடுவதால்தான் வக்கிர ரூபமாக இருக்கிறான் குபேரன். ஆனால் சர்வ ஜாக்கிரதையாகப் பயன் படுத்துகிறபடி பயனாக்கிக் கொண்டால் பணத்தாலும் நன்மை பல புரியலாம். அதனால்தான் இவனை அசல் அசுரனாக வைக்கவில்லை. ஆனால் தேவனாகவும் வைக்கவில்லை.

மனிதனாகவும் வைக்கவில்லை. மனிதன் இவனது அடிமையாக அல்லவா இருக்கிறான்? எனவே திட்டவட்டமாகப் புரிந்துகொள்ள முடியாத யட்ச இனத்தில் இவனை வைத்திருக்கிறார்கள். யட்சரைத் தமிழ் மொழியில் இயக்கர் என்பர். குபேரனை இயக்க அதிபதி என்னும் போது மனித குலத்தையே தன்னிச்சைப்படி இயக்கி வைப்பவன் என்று சொல்வது போலவும் ஆகிறது!

இத் தேவியரில் விநாயகரின் சக்தியில்லாதது வியப்பாயிருக்கலாம். ஆனால் பண்டைக் காலத்தில் காஞ்சி கைலாசநாதர் போன்ற கோவில்களில் விநாயகரே சப்த மாத்ரு கணங்களின் அதிபதியான கணபதியாகக் காண்கிறார். 'மஹா கணபதி ஸஹஸ்ர நாம'த்திலும் 55-61 நாமங்கள் அவரை சப்தமாதாக்களின் தலைவராகக் கூறுகிறது. இதிலிருந்து இனி நாம் காண இருக்கும் ஸதாசிவ-சண்டிகா சக்தியே விநாயகி எனக் கொள்ளலாம். ஸதாசிவம் சண்டிகையை நோக்கியவுடன் இச் சக்தி ஜனித்தாள் என்பது பிரணவத்தைப் பராசக்தி நோக்கியவுடன் கணேசர் பிறந்தார் என்ற ஸ்காந்த வரலாற்றின் எதிர்வெட்டு எனலாம்.

சகல தேவ சக்திகளும் கூடியவுடன் சகலதேவ நாயகரான, மகேசுவரருக்கும் மேம்பட்ட மூலப் பரம்பொருள் வடிவனான ஸதாசிவன் எழுந்தருளினான்.*

மகாகாளி, மகாலக்ஷ்மி, மகாசரஸ்வதி முதலியோருக்குப் பதி என்று எவரையும் சொல்லக் காணோம். பிரம்மத்தோடு பிரித்தே சொல்ல முடியாமல் இவர்கள் ஒன்றியிருப்பதால் இவர்களையே 'சக்தி' என்று மட்டும் சொல்ல முடியாமல் சக்திக்கு ஆசிரயமான சிவமயமாகவும் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படி ஒரு பதியை இவர்களுக்குச் சொல்ல முடியுமாயின் அது பிரம்மமாகவேதான் இருக்கவேண்டும். ஐந்தொழிலில் அநுக்கிரகம் புரிகிற சதாசிவனே தேவதாமூர்த்தியருள் கைவல்யப் பிரம்மத்துக்கு மிக மிக அண்மையில் உள்ளவன். ஆனால் லலிதை காமேசுவரனை மணந்ததுபோல், சண்டிகை இவளை மணந்ததாக மான்மியத்திலோ, பாகவதத்திலோ, வேறெந்தப் புராணத்திலுமோ

* 'ஈசானன்' வந்ததாக மான்மியம் புகல்கிறது. இவன் சிவமூர்த்தங்களில் ஒன்றாகச் சொல்லப்படும் வடகிழக்குத் திக்குப் பாலகன்தானோ என எண்ண வேண்டாம். தொடர்ந்து அவன் சண்டிகையிடம் ஸ்வாதீனத்தோடு பேசுவதிலிருந்து ஸதாசிவனாகவே கொள்ள வேண்டியதாகிறது. மகிமை வாய்ந்த பஞ்சமுக சிவ மந்திரத்திலும் 'ஸதாசிவோம்' எனும்போது அவனை 'ஈசான: ஸர்வ வித்யானாம்', என்றே கூறியிருப்பது கருத்திற்குரியது. ஆக்ஞையிடுபவனே 'ஈசானன்' என்றுதான் இங்கு கொள்ளவேண்டும். நம் அம்பாளுக்கே ஆக்ஞை செய்பவன் ஸதாசிவன்.

கூறப்படவில்லை. ஆவிர்பவித்ததிலிருந்தே அவள் பிரம்மத்துடன் பிறிதற இருப்பவள். அவள் புதிதாக ஸதாசிவனை மணப்பதாகச் சொல்வது அசம்பாவிதம் அல்லவா! ஆயினும் இங்கு மற்ற சக்திகளும் சக்தர்களும் ஜோடி ஜோடியாக தரிசனம் தரும்போது கலைக்கண் நோக்கில் ஒரு குறை இருக்கவேண்டாம் என்று ஸதாசிவமும் அம்பிகையின் பதியாகத் தனிப்பட எழுந்தருளியது போலும்!

ஸதாசிவன் 'சிவனே' என்று நிர்குணமாகக் காரியமற்றுக் கிடக்கிறவர்தாம். காரியம் முழுதும் சாக்ஷாத் சண்டிகா பரமேசுவரியுடையதே. ஸதாசிவம் ஏதாவது செய்வதாகத் தெரிந்தால்கூட அது இவளது சூத்திர தாரணத்தால்தான். இப்போது அவன் வந்ததுகூட இவள் காரியம்தான். தனக்கு மேல் ஒரு சக்தியும் இல்லாத பரமேச்வரி உலகுக்குப் பெண்மையின் பணிவையும், பதிபக்தியின் மகிமையையும் எடுத்துக்காட்ட எண்ணி ஸதாசிவனை வரவழைக்கிறாள்! அவனை இப்படிப் பேச வைக்கிறாள்:

''பிரியே, சண்டிகே! இனி காலதாமதம் வேண்டாம். அசுர ஸம்ஹாரத்தை விரைவிலேயே பூர்த்தியாக்கி எனக்குப் பிரீதி உண்டாக்குவாய்'' என்றான் ஸதாசிவப் பெருமான்.

'பதியின் கட்டளையில்லாமல் காரியத்தைத் தானாக முடித்துவிடக்கூடாது' என்று காட்டுகிறாள்! தேவர்களைக் காக்கவோ, தர்மத்தைக் காக்கவோ இந்த ஸம்ஹாரத்தில் ஈடுபடவில்லை போலவும், எதிர்க் கேள்வி கேட்காமல் தன் நாயகனுக்குப் பிரீதி உண்டாக்கவே இந்தப் போரில் இறங்கியது போலவும் காட்டுகிறாள்! எக் காரியத்தையும் 'பரமேச்வர ப்ரீத்யர்த்தம்' செய்வதாகத்தானே ஜீவர்களான நாம் சங்கற்பம் செய்து கொள்கிறோம்? நம் மாதா இதற்கு வழிகாட்டியாகவே, தானும் பரமேசுவரரின் பிரீதிக்காகத் தொழிலாற்றுவதாகக் காட்டிக் கொள்கிறாள்.

சக்தி சமுத்திரமான சண்டிகாதேவிக்கு ஒருத்தர் ஆக்ஞையிட்டார் என்றால் எத்தனை விந்தை?

ஸதாசிவன் வாக்கில் கட்டளையின் கம்பீரமும் இருந்தது. இவளிடம் அவனுக்குள்ள பிரேமையின் மதுரமும் இருந்தது. சகல உயிரினத்திடமும் இந்த ஆதிதம்பதிக்கு உள்ள கருணைக் கனிவும் இருந்தது. அவன் மங்களமாக, ஆசிமயமாகக் கூறுவான். ''தேவி! தேவ காரிய ஸித்தியே எனக்குப் பிரீதி. அசுரப் பரிவாரங்களை ஒழித்து, சும்ப-நிசும்பரை வதைத்து தேவரை வாழ்விப்பாய். தேவரை மட்டுமல்ல. சகல உயிர்களையும்

நிர்ப்பயமாக வாழவைப்பாய். தேவர் யக்ஞபாகம் பெறட்டும். அந்தணர் யக்ஞம் முதலான நற்கருமங்களை அச்சமும் இடையூறும் இன்றி ஆற்றட்டும். சகல ஜீவராசிகளும், தாவரங்களும்கூடத் தழைத்து இன்புறட்டும். உற்பாதங்கள் யாவும் விலகட்டும். ஈதிபாதைகள் யாவும் நலியட்டும். காலம் தப்பாமல் மழை பொழியட்டும். பயிர்கள் வளமுற வளரட்டும்.''

பிரபஞ்சம் முழுவதையும் தழுவும் அன்பு இதுதான்! சங்கரனால்தான் இப்படி ஆசீர்வாதம் செய்ய முடியும்!

ஏனைய தேவாதியர் புதிதாகத் தங்கள் சக்திகளை இப்போது வெளிப்படுத்தினர். ஸதாசிவத்தின் சக்தியோ முன்னரே சண்டிகையாக வந்துவிட்டாள்.

ஆயினும் தன் பிரீதிக்காக தன் கட்டளைப்படி அவள் அசுர சம்ஹாரம் செய்கிறாள் என்று காட்டியதால் இதற்கு உதவியாகத் தானும் புதிதாக ஒரு சக்தியைத் தோற்றுவித்து அவளுக்குத் தந்தால் தேவர்கள் மேலும் மகிழ்வர் என எண்ணினன் போலும். அவன் வெறுமே ஆக்ஞை இட்டான் என்றால் அவனது அதிகாரத்தை மட்டும் காட்டியதாகும். உத்தரவோடு நில்லாமல் இவளுக்கு உதவியாக, சகாயம் புரிய ஒரு சகியையும் தரச்செய்து தனது அன்பையும் உலகுக்குக் காட்ட எண்ணினான் போலிருக்கிறது!

சண்டிகையின்மீது அவனது திருக்கண்ணோக்கம் பதிந்தது! முன்பு இவளது நோக்கால் தேவசக்தியர் வெளிவந்ததுபோல் இப்போது அண்ணல் நோக்க அன்னையுள்ளிலிருந்து ஒரு சிவசக்தி வெளிப்பட்டது. ('சிவசக்தி' என்றே பாகவதம் கூறும்.) தம்மிடையுள்ள பிரிவற்ற தன்மையைக் காட்டவே தனது சரீரத்திலிருந்து அல்லாமல் அவளிடமிருந்து இந்தச் சக்தியைத் தோற்றுவித்தான். ஆயினும் தன் தொடர்பு மந்தமதியினருக்குப் புரியவே திருஷ்டி விலாசத்தை அவளுள் வீசினான். அவனிடமிருந்தே நேராக ஒரு சக்தி வந்திருந்தால் (இப்போது மற்ற தேவர்கள் மனைவியின் ஸ்தானத்திலேயே தமது சக்திகளை வெளியிட்டிருந்ததால்) அது அவனது பத்தினி ஸ்தானம் என்றாகிவிடும். அவனோ ஏகபத்தினி விரதன். எனவே இப்போது தனது ஒரே பத்தினிக்குள் வீட்சண்ய தேஜஸைச் செலுத்தி, அவளிடமிருந்தே சிவசக்தியை வெளிக்கொண்டு வந்தபோது அது இவனுக்குப் பத்தினியாகாமல் புத்திரி ஸ்தானம் பெற்றது.

மற்ற தேவர்களுக்கெல்லாம் இவன் மேம்பட்டவன் என்பதற்கேற்ப, இந்த சிவசக்தியும் ஏனையோரைவிட அதிக ஆற்றல் பெற்றிருந்தாள். முக்கியமாக இப்போது சம்ஹாரமே

நோக்கமாக இருந்ததால் இவளும் மகா சம்ஹாரிணியாக, கோர பயங்கரமாக இருக்க வேண்டியதாயிற்று. முன்பு, அம்மாவே தன்னிலிருந்து தோற்றுவித்த சாமுண்டிக்காளியும் கோர ரூபிணியாகத்தானே இருந்தாள்?

குருதி சில்லிட்டுப் போகும் விதத்தில், பெரிய நரிக்கூட்டமொன்று ஊளையிடுவது போல் கூக்குரலிட்டுக் கொண்டு குதித்தாள் இவள். (இவளுக்குப் பரிவாரமும் நரிகளே ஆகும். நரி வடமொழியில் 'சிவா' என்றே சொல்லப்படும். இவள் நரிக்கூட்ட நாயகி என்பதில் சிவகணங்களுக்கு யஜமானி என்றும் தொனிக்கிறது!)

இத்தனை பயங்கரி ஆயினும் இவள் சித்தத்திலோ கருணைக்குக் குறைவில்லை. சிவசக்தியருக்கு மகளாகப் பிறந்து விட்டு கருணையின்றி எப்படி இருக்க முடியும்? தான் எல்லையற்ற அழிப்புச் சக்தி பெற்றிருந்தாலும் அதைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் வந்ததே என்று இவள் பூரித்து விடவில்லை. அசுரனிடம் இறுதியாக ஒரு சமாதான முயற்சி செய்து பார்க்க வேண்டும் என்றே எண்ணுகிறாள்.

இதுவரையில் சும்பன்தான் மீளமீளக் காதல் தூது அனுப்பினானே ஒழிய, அம்பிகையின் தரப்பிலிருந்து அவனுக்குச் சமாதான தூது அனுப்பப்படவேயில்லை. இந்தக் குறையை சதாசிவ-சண்டிகா, புத்திரியான கோர ரூபிணியே உணர்ந்ததாகச் சொல்வது எத்தனை அருமை! வெளி அழகில்லாததைத் தள்ளிவிடக் கூடாது என்பதற்கு இதெல்லாம் சான்று; அகத்து அழகே அழகு என்று காட்டுவதற்கு அத்தாட்சி. கடைசியில் பார்த்தால் நமக்குக் கோரமாகத் தெரிகிற அனைத்தின் 'அக'மும் அழகேயான ஆத்மன்தானே?

சமாதான தூது அனுப்ப எண்ணம் கொள்கிறாள் சம்ஹார ரூபிணி. யாரை அனுப்புவது என்று யோசிக்கவில்லை. பரம ஸ்வாதீனமாகத் தனது பிதாவான ஸதாசிவத்தையே அனுப்ப முடிவு செய்கிறாள்!

தேவாதியரில் மற்ற எவருக்கும் சிறிதளவாவது சொந்தப் பாச துவேஷங்கள் இருக்கத்தான் செய்யும். எனவே, 'இப்பேர்ப்பட்ட சண்டிகாதேவி தோன்றியுள்ள இதுவே நம்மை வாட்டிய சும்பனைப் பழிவாங்க வாய்ந்த சமயம். இப்போது அவன் சமாதானம் என்று வந்து தொலைத்துவிட்டால்?

அவனிடம் சமரசம் பேசிப் பாதாளத்துக்கு அனுப்பினால் போதாது. நம்மை இம்சித்த அவனைக் கொல்லவே வேண்டும்' என்ற ரீதியில்தான் அவர்கள் எண்ணுவர். அந்தரங்க சுத்தமாக அன்புத் தூதில் ஈடுபடாமல் எதிரியை மேலும் சீண்டிவிட்டே வருவர். இந்தப் பாசத் துவேஷங்களுக்குப் பூரணமாக அப்பாற்பட்டவன் ஸதாசிவன்தான் எனக் கருதுகிறாள் அவள்.

பாண்டவருக்காகப் பரமாத்மா தூது போனது அவனது எளிமையைக் காட்டுகிறது. பரசிவத்தின் எளிமைக்கு என்ன குறைச்சல்? பிள்ளையிடமே சீடனாகத் தழைந்து உபதேசம் வாங்கிக்கொள்கிற அளவுக்கு எளியன் அன்றோ அவன்? இப்போது மகள் ஸ்தானத்திலிருந்த இவள் ஒரு நல்ல காரியத்தில் ஏவினால், பெருமிதத்துடனேயே அதனை ஏற்பான். இந்த நம்பிக்கையின் உறுதியுடன் பயங்கரியானவள் சிவனாரிடம் தயக்கமில்லாமல் பளிச்சென்று கூறுகிறாள்:

''பகவானே! சும்ப-நிசும்பரிடம், நீ தூது போக வேண்டும். அவ்விருவர் தனியேயிருந்தால், சொந்த கௌரவத்தையே நினைத்து சமாதானத்தை மறுத்து சர்வநாசத்துக்கு வழி செய்வர்! எனவே எல்லா அசுரர்களும் அவர்களோடு சேர்ந்திருக்கிற சதஸுக்கு நீ போக வேண்டும். அந்த கர்விகளிடம் என்னுடைய இம் மொழிகளைக் கூற வேண்டும். 'அசுர நாயகர்காள்! நீங்கள் உங்கள் பரிவாரங்களுடன் அசுரருக்குரிய பாதாள உலகுக்குச் சென்றுவிட வேண்டும். தேவர்கள் தமது ஸ்தானத்தையும், யக்ஞ பாகத்தையும் இழந்து காலம் மிக ஆயிற்று. அவர்கள் அதை மீளப் பெற வேண்டும். நீங்களாக அதற்கு வகை செய்து, பாதாளம் புக்கு வாழ்வீர். அசுரர் யாவரும் உயிர்வாழ இதுவே வழி. உயிர் வாழ்வதில் உங்களுக்கு நாட்டம் இல்லாவிடில் தாராளமாகப் போருக்கு வரலாம். கொழுப்பு இருந்தால் இப்படித்தான் செய்யத் தோன்றும். நல்லது என்னுடைய நரிப் பட்டாளமும் கொழுப்புணவுக்காகத்தான் ஆவலுடன் நாக்கைத் தொங்கப்போட்டு கொண்டிருக்கின்றன' — இந்தத் தூது மொழியை மொழிந்து வருக, பெம்மானே!''

தோன்றிய மாத்திரத்தில் யுத்தத்தின் முழுப் பொறுப்பையும் சர்வ சகஜமாக ஏற்றுக் கொண்ட இவளது பெருமையே பெருமை! யுத்தப் பொறுப்பை மட்டுமின்றி சமரஸம் செய்து கொள்கிற அதிகார உரிமையையும் அநாயாசமாகத் தனதாக்கிக் கொண்ட ராஜகுமாரியின் மகிமையே மகிமை! லலிதோ பாக்யனத்தில் பாலா திரிபுரசுந்தரி போல நம் புராணத்தில் இவள்!

அவளது மகிமைக்கு விநய மயமான மகாதேவனும் அடிபணிந்தான்.

''அம்மா! உன்னை அம்மா என்பேனா, குழந்தாய் என்பேனா? எதுவாயினும் சரி, நீ சொன்ன வண்ணமே செய்கிறேன்'' என்று கூறி சொன்ன வண்ணம் செய்யும் யதோக்த காரியாக சும்பனிடம் தூது புறப்பட்டான் பரமேசுவரன்.

புதிதே உதித்த பயங்கரியின் அதிசயச் சிறப்பைக் கண்டு அமரர் வியந்தனர். சாட்சாத் ஸதாசிவத்தை அல்லவா தூதனாக அனுப்பிவிட்டாள்? பெயரிடப்படாத இவளுக்கு இப்போது பெயர் கண்டனர் அவ்வமரர். ''சிவதூதி போற்றி! போற்றி!'' என்று துதித்தனர்.

★ ★ ★

ரக்தபீஜன் தலைமையில் சகலலோக நிசாசரரும் சென்றபின் சும்ப-நிசும்பருக்கு இருப்பாக இல்லை. அவர்களும் யுத்தபூமிக்குப் புறப்பட்டுப் பின்னணிப் படையில் கலந்து கொண்டனர். உடனே முன்னணிப் படைத்தலைவரும் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

இந்த அயனான சந்தர்ப்பத்தில் ஸதாசிவன் அவர்களைச் சென்றடைந்தார்.

சாமானிய தூதுவன் போலவே தமது பணியைச் செய்தார் மகாதேவப் பிரபு. சிவதூதி கூறியதில் ஒரு வார்த்தை கூடக் கூடுதல் குறைதல் இன்றி அப்படியே ஒப்பித்தார்.

நோயாளிக்குப் பத்தியமும் மருந்தும் பிடிக்குமா?

''பாதாளத்துக்காவது, போவதாவது?'' என வேதாளமாக வீறிட்டான் சும்பன். ''நரிக்கா பசி எடுத்ததாம்? அதைவிட எங்கள் ஈட்டிகளுக்கும், அம்புகளுக்கும், வாட்களுக்கும், வேல்களுக்கும் ரத்த தாகம் எடுத்திருக்கிறது. ஒருநாளும் சமாதானத்துக்கு இடமில்லை'' என்று முடிவாகக் கூறினான்.

''ஆமாம் ஆமாம், அதுவே சரி'' என்று நிசும்பனும் ஏனைய மந்திரி பிரதானிகளும், சேனாதிபதிகளும் ஒத்துப்பாடினர்.

அதுமட்டுமல்ல! உடனேயே அணிவகுப்பு முறைமைகளை மறந்தனர். திபு திபு என்று முன்னேறி எடுத்த எடுப்பிலேயே காத்யாயனியாகிய மகா சரஸ்வதி இருந்த இடத்துக்குப் பாய்ந்தனர் தளபதிகள்.

அசுரர்களைப்போலவே அம்பிகைக்கும் இப்போது ஏராளமான தேவியர் படை உண்டாகியிருந்தது. இது போன்ற சந்தர்ப்பத்தில், பலவேறு அந்தஸ்தினர் பல வியூகங்களாகப் பிரிவதும், அதற்குச் சமதையான எதிர்தரப்பு வியூகத்தினரே அவர்களுடன் யுத்தம் புரிவதும்தான் போர்த்தருமம். சாதாரணமாக அரச ஸ்தானத்திலிருப்பவர்களைக் கடைசியில்தான் போர் செய்ய விடுவார்கள். இங்கோ, சும்பன் தர்மத்தைப் பற்றிப் பெரிய உபந்நியாஸம் புரிந்துவிட்டு போர்க்களத்துக்கு வந்திருந்தபோதிலும், அசுர சேனாபதிகள் அவனையும் அவனது இளையோனையும் மட்டும் தர்மப்படி பாதுகாக்க, எதிர்த்தரப்புக்கு அந்தத் தர்மத்தைப் பொருத்தாமல், தொடக்கத்திலேயே கௌசிகியைத் தாக்கினர். அதோடு எடுத்த எடுப்பிலேயே பல வீரர்களும் அம்பு, வேல், இருபுறம் கூர் தீட்டிய ரிஷ்டி என்ற வாள், சூலம், கோடரி ஆகிய அனைத்து ஆயுதங்களையும் அவள் மீது மழையாகப் பொழிந்தனர்.

இதனால் தேவி கலங்குவாளா என்ன? விளையாடுவது போல் தன் வில்லை வளைத்துக் கணை பூட்டினாள். அம்புகள் அடுக்கடுக்காகப் பறந்தன. அவை எதிரே வருகிற ஆயுதங்களை உடைத்துச் சாய்த்துவிட்டு அவற்றை எய்தோரையும் கொன்று தள்ளின!

அவுணர் யுத்த விதிகளைக் கைவிட்டதால் தேவியின் சேனாநாயகிகளும் பாய்ந்து பாய்ந்து போர் செய்யலாயினர்.

சாமுண்டேசுவரிக்குக் கட்டுக்கடங்காத கோபம் வந்தது. சும்பன் இருக்கும் இடத்துக்கே போய்விட்டாள். இருப்பினும் சும்ப-நிசும்பரை அம்மாவுக்கென்றே விட்டதை மாற்ற அவளுடைய தர்ம மனம் இடம் தரவில்லைதான். 'வந்தது வந்தோம். இவனை வேறு விதத்திலாவது வருத்தி எடுக்க வேண்டும்' என்று எண்ணினாள். அவன் கண் முன்னரே பிரளயக் கூத்தாடி அவுணர் பலரைச் சூலாயுதத்தால் பிளந்தாள். அது போதாது என்று பிளவு பட்டுப் புவியில் விழுந்தோரைக் கட்வாங்கத்தால் மண்ணோடு மண்ணாகத் தேய்த்தாள்.

ஸப்த மாதாக்களும் சந்நாகம் செய்து யுத்தத்தில் பிரவேசித்தனர்.

பிரம்மாணி கையில் கமண்டலமும் அக்ஷ மாலையுமே வைத்திருப்பவள். மகா அஹிம்சை ஆயுதங்கள். அவள் வாகனமோ

ஹம்சம். ஆனால் செய்த சம்ஹாரத்தை என் சொல்ல? மந்திரிக்கப்பட்ட கமண்டலு தீர்த்தத்தை இவள் வாரித்தெளிக்க வேண்டியதுதான், அந்தத் துளிகள் பட்ட மாத்திரத்தில் வெள்ளம் வெள்ளமாக அசுரர்கள் செயலிழந்து விழுந்தனர்!

மகேசுவரி தனது திரிசூலத்தை நன்றாகப் பிரயோஜனப்படுத்தினாள். கூட்டம் கூட்டமாக அசுரர் அதன் 'ஸ்பரிச தீக்ஷை'யில் 'அமைதி' எய்தினர்.

வைஷ்ணவியின் சக்கரம் யுத்தரங்கம் எங்கிலும் ஜொலித்துச் சுழன்று, பனங் குலைகளெனத் தலைகளை அரிந்து தள்ளியது.

கௌமாரி வேலாயுதத்துக்குச் செம்மையாக வேலை வைத்தாள். அது பூசிக்கொண்ட 'செஞ்சாந்து'க்கு அளவேயில்லை.

ஐந்திரிக்கு வந்த கோபம் அபாரமானது. இந்திர சக்தி அல்லவா இவள்? அசுரரால் மிகவும் பாதிக்கப்பட்டவன் இந்திரனே அல்லவா? எனவே ஐந்திரிக்கு வந்த ஆத்திரம் ஐயம் திரிபற்றதாக இருந்தது. நூறு நூறாக அவுணர்கள் அவளது வஜ்ராயுதத்தால் பிளவுண்டு ரத்தத்தைப் பிரவகித்தபடிச் சாய்ந்தனர். அவள் மனத்தில் அப்படி வஜ்ரம் பாய்ந்திருந்தது!

வாராஹி மூக்கால் எற்றி எறிந்தே பல அசுரரை மாய்ந்தாள். தெற்றிப் பல்லாலும் பல்லாயிரவரைக் குதறிக் கொன்றாள். வைஷ்ணவியின் சக்கரத்துக்குத் துணையாக இவளது திகிரியும் திக்குகள் எல்லாம் திரிந்தது; அசுரரை அழித்தது.

நாரஸிம்ஹி சிலரை நகத்தால் கிழித்துப் போட்டாள்; சிலரை உண்டாள்; வானந்தம் மண்ணினந்தம் எதிரொலிக்கும் கர்ஜனையாலேயே சிலரை கதிகலங்கிச் சாக வைத்தாள்.

இந்த கர்ஜனையை மீறி எழுந்தது சிவதூதியின் அட்டஹாஸம். சிரித்துப் புரமெரித்தான் சிவபெருமான். சிவசக்தியாம் இவள் சிரிப்பில் இன்று ஜீவனை இழந்த அவுணர் எத்தனை எத்தனை எத்தனையோ? எத்தனை என்று கணக்கிட முடியாமல் வீழ்ந்தோரை உடனுக்குடனே புசித்தல்லவா விட்டாள்? பசியினாலா? ஆம், அருட்பசிதான். அப்படிப்

புசிக்கப்பட்டால் அவர்கள் உயர்கதி பெற்றுவிடுவர் அல்லவா? சமாதானம் செய்து கொள்ள தான் தூதுவிடுத்தும் கேளாதோருக்கு இப்படிப் பிடிவாதமாக நிரந்தர சாந்தியை அநுக்கிரகித்தாள். தன்னையே தலைவியின் ஸ்தானத்தில் இவள் நியமித்துக் கொண்ட மிடுக்கு ஒரு விதத்தில் நம்மைக் கவர்கிறது எனில், மற்றவர் அனைவரும் செய்ததைவிட அதிக சம்ஹாரத்தைத் தானே செய்ததாகத் தெரியக்கூடாது என்பதையும் ஒரு காரணமாகக் கொண்டு இவள் கொன்றவர்களை எல்லாம் விழுங்கிவிட்ட உயர் பண்போ நம்மை இவளிடம் மேலும் ஈர்க்கிறது.

மாத்ரு கணங்களின் போர் ஆவேசத்தில் அசுர சைன்யம் சின்ன பின்னமாயிற்று. சாகாதவர்கள் தெறிகெட்டு ஓடலானார்கள்.

ரக்தபீஜன் இது கண்டு மிகுந்த ரோஷம் கொண்டான். மாத்ருகண நாயகிகளைப் பேயாகத் தாக்கலானான்.

ஐந்திரி வஜ்ராயுதத்தால் எதிரடி கொடுத்தாள். எதிரடியா? தங்கள் தரப்புக்கேதான் அபாயத்தை உண்டாக்கிக் கொண்டாள்! ஏனெனில் வஜ்ராயுதம் பட்டு இவன் ரத்தம் வெளியாகி, அது கீழே சிந்த, ஒவ்வொரு சொட்டிலிருந்தும் ஓர் அசுரன் பிறந்துவிட்டானே! ரக்தபீஜனைப் போலவே உருவும், உடல் வலிவும் பெற்றவர்களான இவ்வசுரரும் கொடும்போர் தொடங்கிவிட்டனர். இந்த அசுரர்கள் எப்படித் திடீரென்று முளைத்தனர் என்று இந்திர சக்திக்குப் புரியவில்லை. எனவே அவள் முன்னிலும் சினத்தோடு ரக்தபீஜன் தலையில் வஜ்ராயுதத்தால் தாக்கினாள். மீண்டும் ரத்தம் பெருகிற்று. மீண்டும் பொட்டு ரத்தத்துக்கு ஒரு பொல்லா அரக்கனாகச் சேனை பெருகியது!

ஆனால் உதிரம் புவியில் விழுவதோ, அதிலிருந்து அவுணர் பிறப்பதோ எவர் கண்ணுக்கும் தெரியாத மாயமாக இருந்தது!

எனவே ஐந்த்ரி செய்த தவற்றை வைஷ்ணவி, வாராஹி, கௌமாரி, மாஹேசுவரி முதலியோரும் செய்தனர். அவர்களது ஆயுதங்கள் ரக்தபீஜனுக்குக் கொடுத்த அடிகளும் அசுர சிருஷ்டியைக் கோலாகலமாக விருத்தி செய்துவிட்டன.

ஒவ்வொரு கோபிகைக்கும் ஒரு கண்ணன் தோன்றினான் என்பார்கள். இங்கு சண்டிகையின் படையிலிருந்த தேவியர் ஒவ்வொருவருக்கும் ஒரு ரக்தபீஜன் வீதம் தோன்றிவிட்டான். அதற்கும் அதிகமாகக்கூடத் தோன்றியிருப்பார்கள்!

பூரண ஞானத்தைத் தவிர வேறெதனாலும் பூர்வவாசனைகள் கிளைத்துப் படருவதற்கு மூலமான ஆசை என்ன என்று புரிந்து கொள்ள முடியாது; அதைக் கிள்ளி எறியும் உபாயமும் தெரியாது. சாக்ஷாத் பரப்பிரம்ம மகிஷியான கௌசிகி தேவி ஒருத்தியே இப்போது இத்தனை அசுரர்கள் முளைத்ததற்கு வேர் எது என்று கண்டு கொண்டாள். ரக்த பீஜனின் உதிரம் கீழே விழுவதாலேயே அதில் ஒவ்வொரு சொட்டும் ஓர் அசுரனாவதைக் கண்டுகொண்டாள்.

அந்த மூலத் தீமையை நிர்மூலமாக்க உபாயம் என்ன?

ரக்தபீஜனின் ரத்தம் நிலத்தில் சிந்தக்கூடாது. அதற்கு என்ன செய்யலாம்?

அறிவு மயமான அம்பிகை உபாயம் காண யோசிக்கக்கூட வேண்டுமா, என்ன?

''சாமுண்டேசுவரி! சண்ட-முண்டருக்கு மங்களம் பாடிய நீதான் இப்போது ரக்தபீஜனுக்கும் ரத்த ஆரத்தி எடுத்தாக வேண்டும்! ஆம்! எங்கணும் வியாபித்துள்ள அத்தனை மாய அசுரர்களையும் நான் எளிதே வதைப்பேன். அவர்களை நீ உண்டு களிக்கலாம். ஆனால் அது முக்கியமான விஷயம் அல்ல. அவர்கள் அழிந்தாலும் மறுபடி மறுபடி இவன் இருக்கிற வரையில் அதே போல் கோடாநுகோடி அசுரர் தோன்றிக்கொண்டேதான் இருப்பார்கள். இப்படித் தோன்றுவதன் மர்மம் என்னவெனில் இவனது துளி ரத்தம் கீழே விழுந்தால் அது ஓர் அசுரனாகி விடுகிறது. இவ்வாறு ரத்த விந்துக்கள் விழாதிருக்க நீதான் வழி. அதாவது உன் வாயை அகலத் திறந்து வைத்துக்கொள். நான் இவனது ரத்தம் உன் வாய்க்குள் பீறிடும்படியாகச் சரியாகக் கோணங்கள் பார்த்து இவனைத் தாக்குகிறேன். நீ அந்த ரத்தத்தைப் பருகிவிடவேண்டும். ரத்த பானம் செய்ய உனக்குச் சொல்லித் தரவேண்டியதேயில்லைதான். உன் உதரத்தில் இவன் உதிரம் சென்றால் அங்கு மறுபடி அசுரர் தோன்றமாட்டார். உன் உதரத்தில் ஜீவனுக்கு உதயமில்லை. நிரந்தர ஒடுக்கம்தான். தப்பித் தவறி சிறிது ரத்தம் உன் வாயிற் புகாமல் வெளியே சிந்தினாலும் பாதகமில்லை. அதிலிருந்து உண்டானோரை நீ உண்டு விடலாம். இப்படியே தன் ரத்தத்தை எல்லாம் இழந்த பின் ரக்தபீஜன் செத்துவிழுவான்'' என்றாள்.

விஷய நுகர்ச்சியால் உண்டான பண்டைவாசனை வேகத்தை எதிர்த்துப் போரிட்டால் அது மேலும் பலவாகக் கவடு விடத்தான் செய்கிறது. பின் அதை இல்லாமற் செய்கிற வழி என்ன? இந்த வாசனைகளுக்குக் காரணம் நம் மனம். மனங்களுக்கெல்லாம் மூலமாக ஒரு மகாமனம் இருக்கிறது. அந்த மகாமனத்தை மட்டுமே நாம் அன்போடு நினைத்துக் கொண்டிருந்தால் போதும். அது நம் மனத்தின் மூலமானதால் இயல்பாகவே நம் மனத்துக்கு அதனிடம் சொல்லொணா அன்பு பிறக்கும். இந்த அன்பைப் பொழிந்து கொண்டேயிருப்பதுதான் நாம் செய்யவேண்டியதெல்லாம். அதாவது ஏதோ ஓர் உருவத்திலோ அல்லது அருபமாகவோ கடவுளிடம் பக்தி செலுத்தி அந்த ஆனந்தத்தை அநுபவித்துக்கொண்டேயிருக்க வேண்டும். அப்போது நாம் ஒருவித சண்டையும் போடாமலேயே வாசனைகள் அந்த மகாமனத்தால் உறிஞ்சி உட்கொள்ளப் பட்டுவிடும். பழைய நுகர்ச்சி நெடியுடன் நாம் சண்டை போடுவதற்குப் பதில் கடவுளின் கிருபையே அதனிடம் சண்டைபோடும். நம் மனஸை நாம் இந்த மாமனத்திடம் அர்ப்பணிக்கிறோம் அல்லவா? அந்த மாமனம் நம் சிறுமனத்தை முற்றிலும் வசப்படுத்திக் கொள்ளுமுன்பே இதனிடமிருந்த அவலட்சணங்களை-விஷய வாசனைகளை-உட்கொண்டுவிடுகிறது. இதன்பின் நம் மனம் அறவே உறிஞ்சப்பட்டு அத்வைதம் சித்திக்க வேண்டுமா, அல்லது சிறு மனமானது அவலட்சணமற்ற சுத்தப் பிரேமை மனமாகி மூல மனத்திடம் பக்தி செய்துகொண்டே இருக்க வேண்டுமா, அல்லது ஞானமும் பக்தியும் மாறி மாறிப் பொலிய வேண்டுமா என்பது அவரவர் தன்மையை, அல்லது மகா மனத்தின் சங்கற்பத்தைப் பொறுத்தது.

பிரம்மத்திடமிருந்து பிரிந்திருக்கிறாள் என்றே சொல்ல முடியாதவள் சண்டிகை. பிரம்மமே அனைத்துக்கும் ஆதாரம் என்றாலும் அது எந்த வாசனையிலும் பட்டுக்கொள்ளாது. பிரம்மத்தில் தோன்றிய முதல் எண்ணம் கிருபை. யாரைக் குறித்து, எதைக் குறித்து என்று சொல்லத் தெரியாத ஸ்வச்சமான கிருபை! தன்னைத் தவிர யாரும், எதுவும் இல்லாதபோது எவ்விடத்தில் கிருபையைச் செலுத்துவது? என்றாலும் கிருபை தோன்றிவிட்டது. அப்புறம் அதற்குப் பாத்திரர்களைப் படைக்க வேண்டும் என்பதற்காக, கிருபையானது வேறு பல உணர்ச்சிகளுக்கும் ஆதாரமான ஒரு மகாமனத்தைப் படைக்கிறது. அந்த மகாமனம் எண்ணிறந்த வேறு பல சிறிய மனங்களை, அதாவது ஜீவர்களைப் படைக்கிறது.

இந்த மனங்கள் விஷய நுகர்ச்சிகளில் சிக்கித் தவித்துப் போராடி அவற்றைப் பன்மடங்காகப் பெருக்கிக்கொண்டு பரிதவிக்கிறபோது, அந்த மூலமான கிருபை தன் வேலையைத் தொடங்குகிறது. சின்ன மனங்களிடம் அது பரிவு கொள்கிறது. மகாமனத்திடம் சின்ன மனம் திரும்புவதற்குக் காரணம் அந்தக் கிருபைதான். பிறகு மகா மனம் வாசனைகளை உறிஞ்சி உட்கொண்டு விடுகிறது.

பிரம்மத்தின் முதல் எண்ணமாகிற கிருபையே சண்டிகையான கௌசிகி. சண்டிகையிலிருந்து தோன்றிய சாமுண்டி, பல விதமான உயிரினங்களுக்கெல்லாம் மூலமான பெரு மனத்துக்கு ரூபகமாகிறாள். கிருபா மயமான சண்டிகை, ஜீவர்களின் நுகர்ச்சி நெடியான ரத்த பிந்து அசுரர்களை மகாமனமான சாமுண்டியிடம் சேர்ப்பிக்கிறாள்.

தன்னையன்றி ஏதுமற்ற பிரம்மம், அந்த ஒன்றைப் பலவாகக் காட்டுகிற பராசக்தி (அல்லது மாயை என்கிற மகாமனம்) இவற்றைப் பற்றித்தான் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்த மகாமனத்தில் இடம் பெறும் அநேக குணங்களில் ஒன்றே கிருபை என்றுதான் பொதுவில் எண்ணப்படுகிறது. இதன்படி மகாமனத்திலிருந்து கிளைத்த ஜீவ மனங்கள் தறிகெட்ட பிறகுதான் அதைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை முன்னிட்டு கிருபை உண்டாயிற்று என்று தோன்றும். ஆனால் மற்ற எல்லா சக்திகளையும் விட மிகவும் தீவிர வேகம் கொண்ட கிருபா சக்தி இயல்பாகச் சுரக்காமல், ஓர் அவசியத்தின் பேரிலோ அகஸ்மாத்தாகவோ பிறந்ததாகச் சொல்வது கிருபா வேகத்தை அநுபவித்தவர்கள் ஏற்க முடியாத விஷயம். கடவுளின் பரிவுக்கு உள்ள ஆற்றலை, அது துரத்தித் துரத்தி வந்து ரட்சிக்கிற பெருமையை உணர்ந்தவர்களால் இதை மகாமனத்தின் பல குணங்களில் ஒன்றாக மட்டும் ஏற்க முடியாது. குறி தப்பாமல் அது ஒரே பாய்ச்சலில் ஜீவனைத் தாவிக் கவ்விப் பிடிக்கலாம் என்றாலும் லீலைக்காகவே துரத்தி வருவதாகக் காட்டுகிறது. இந்த லீலையே அந்தக் கிருபையை விதவிதமாக வெளிப்படுவதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டதெனத் தெரிகிறது. இதையே 'முதலில் கிருபை உண்டாகிவிட்டது. பிறகு அதைச் செலுத்தவே மற்ற குணங்கள் கொண்ட மாமனத்தையும், ஜீவ மனங்களையும் படைத்தது' என இங்கு சொல்லியிருக்கிறது. சிவத்தின் சக்தியே கருணைதான். — 'அருளது சக்தியாகும்' என்று சைவ சித்தாந்தம் அற்புதமாகக் கூறுவது!

சண்டிகை ரக்தபீஜனின் உதிரம் வெளிப்படுமாறு வெளுத்துக்கட்ட — சிவப்பு வெளியேறி வெளிறிப் போகுமாறு செய்ய — சாமுண்டி அந்தக் குருதியைப் பருகி, மீளவும் அசுரர் உதிக்காவண்ணம் செய்தாள்.

ஒரு வாசனையிலிருந்து பல வாசனைகள் கிளம்பாதவண்ணம் மகா மனம் அவற்றை உறிஞ்சி உட்கொள்ள, கிருபையானது அந்த வாசனைகளின் தோற்றுவாய் இற்று விழுகிற வரையில் விட மாட்டேன் என்று அதை வீழ்த்துகிறது!

ஆசையை அடக்க வழி அது எங்கே முளைக்கிறதென்று பார்ப்பதே என்பர் ஞானியர். இப்படி ஒன்றையே தேடுவதும் அதனிடம் பக்தி செலுத்துவது அன்றி வேறில்லை. இந்த ஞானவழியும் நேராக ஆசையுடன் போரிட்டுப் பயனில்லை என்பதைத்தான் உணர்த்துகிறது. மனோவேகங்களை எதிர்த்துப் பொருதாமல் அலட்சியம் செய்யவேண்டும் என்பதே எல்லா வழிக்கும் சாரம். அவ்விதம் செய்வதற்கு, இதைவிட நம்மை ஈர்க்கிற ஒன்று இருக்க வேண்டும். பக்தருக்கு அது 'கடவுள்' என்ற பெயரில் இருக்கும். ஞானியர்க்கு 'மூலம் எது?' என்கிற தேட்டமாக இருக்கும். கடவுள்தான் அவர்கள் தேடும் மூலமும். வாஸ்தவத்தில் அது எப்படி இருக்கும் என்று அறிய முயலாமல் தாங்கள் எப்படி பாவிக்க முடிகிறதோ அப்படியோ, அது எப்படியிருந்தாலும் சரி என்றோ அன்பு பண்ணுவது பக்தி. அது எப்படியிருக்கும் என்று தேடுவதில் ஈடுபட்டு, தேட்டத்தில் பக்தி வைப்பது ஞான வழி. இரண்டுக்கும் அதே கடவுள்தான் பலன் தருகிறது. ஒரு வழியினருக்கு அன்பு செலுத்துகிற ஸகுணமாக அருள் புரிகிறது. இன்னொரு வழியினருக்கு அமைதி மய ஆத்மனாக நிர்குண அநுபவம் தருகிறது. 'விஷயங்களிலிருந்து புலன்களைத் திருப்பிய பின்னும் மனத்தில் அதன் சுவை தேங்கி நிற்கிறது. இது பரத்தைப் பார்த்தாலே விலகும்' என்று பார்த்தசாரதி புகன்றான். மூலம் என்ன என்று தேடிப் பார்ப்பது (ஞானம்), அதை பகவானாக அன்போடு பாவித்துப் பார்ப்பது (பக்தி) இரண்டையுமே அற்புதமான சொற்செட்டோடு — **''பரம் த்ருஷ்ட்வா''** என்று — கூறிவிட்டான்! பக்தி என்று பொதுவாகச் சொல்கிற முறையிலோ அல்லது மேலே சொன்ன வண்ணம் ஞான பக்தி செய்தாலோ, விஷய நுகர்ச்சியின் ருசியிலிருந்து கிருபா வேகத்தின் துணைகொண்டு விடுபட முடியும்.

* * *

ரத்தபீஜனைச் சூலத்தால் தீவிரமாகத் தாக்கினாள் சண்டிகா பரமேசுவரி. குருதி கொப்புளித்தது. அதனை உண்டாள் வெகுண்ட சாமுண்டி.

அவன் சமாளித்துக் கொண்டு சண்டிகையை கதையால் புடைத்தான். அதனால் அவள் சிறிதும் நோவுறவில்லை. மீண்டும் அவனைப் பல இடங்களில் தாக்கி, பல பகுதிகளிலிருந்தும் ரத்தம் வெளிப்படுமாறு செய்தாள். சற்றும் தப்பாமல் சாமுண்டேசுவரி, சொட்டு ரத்தம்கூடக் கீழே சிந்தாமல் முழுவதையும் தன் வாயில் ஏந்திப் பருகினாள். தமனி, சிரை முதலிய ரத்தக் குழாய்களின் உள்ளிருந்தும் சொட்டு ரத்தம் கூட மீதமின்றி வெளியாக வேண்டும் என்பதால் வஜ்ரம், அம்பு, கத்தி முதலிய எல்லா ஆயுதங்களாலும் அவனை நன்றாகக் குத்தித் துளைத்தாள் பராம்பிகை. ஜீவனால் அடியோடு முடியாத கர்ம எதிர்ப்புக் காரியத்தைக் கடவுளே ஏற்கிறபோதுகூட இத்தனை முயற்சி! புலநுகர்ச்சியின் நெடி எத்துணை கொடியது என்பதைக் காட்டவே இத்தனை பிரயாசைப்பட்டதாக நடிக்கிறாள். எங்கே அவனது சொட்டு ரத்தம் வெளியில் வந்து விடுமோ என்று மற்றவர்களுக்காகக் கவலைப்படுவதற்குப் பதில், எங்கே சொட்டு ரத்தம் உள்ளேயிருந்துவிடுமோ என்று அவனுக்காகவே கவலை கொண்ட நிலை உண்டாயிருக்கிறது! இதுதான் ஜீவனுக்கும் கடவுளுக்கும் உள்ள வித்தியாசம்!

இவ்வாறாக ஒரு பிந்துகூட ரத்தம் இல்லாதவரையில் அவனைச் சண்டிகை தாக்க, ஒரு பிந்துகூடச் சிந்திவிடாமல் பருகினாள் கருணாசிந்துவான சாமுண்டி. சொட்டு ரத்தம் மீதமின்றி ஒட்டுமொத்தத்தையும் உவந்து ஏற்றுத் தன்னுள் அடக்கம் செய்து கொண்டாள்!

கடைசியில் உதிரம் முழுவதையும் இழந்து, அடியோடு வெளிறிப் போய்ப் பிரேதமாக மண்ணில் சாய்ந்தான் மகா அசுரனான ரக்தபீஜன்.

மற்ற அசுரரைவிட இவனே மிகவும் பெரிய எதிரியாக இருந்தவன். ஏனெனில் தன்னிடமிருந்தே, தான் எதிர்க்கப்படும் பொழுதே, புற்றீசலாகப் புதிய அரக்கர்களை உண்டாக்கியவன் இவன் ஒருவன்தானே?

இவன் தலை சாய்ந்ததில் தேவரின் மகிழ்ச்சியை வருணிக்க முடியுமா?

அம்பாளுக்காகப் போர் புரிந்த மாத்ரு கணங்களோ ஆனந்தக் கூத்தாடின!

நுகர்ச்சியின்பம் அழிக்கப்பட்டுவிட்டது. இதை ஆசையின் அழிவே எனலாம். வஞ்சகப் பொய்யும், அப்பட்டப் பொய்யும் மீதம் நின்றன. அவற்றின் உறுதுணையான ஆசை அழிந்த பின் அவை மட்டும் எத்தனைக் காலம் ஜீவித்துவிட முடியும்?

5. பொய் பொய்யாயிற்று; மோசம் மோட்சமுற்றது!

ஆதார ஸ்தம்பமாக நின்ற ரக்தபீஜன் பதராக விழுந்தவுடன் அசுரப் படைகள் பதறிவிட்டன. ''இனி வெற்றி நமக்கு ஒருகாலும் இல்லை'' எனப் புலம்பின.

''வெற்றியோ, தோல்வியோ யுத்தத்தை நிறுத்துவதற்கில்லை. பிராணன் எப்படியும் போகத்தான் போகிறது. கீர்த்தியாவது போகாதிருக்கட்டும்'' என்று வீர வசனம் கூறினான் சும்பாசுரன்.

படைகள் தம்மை ஊக்கிக் கொண்டன.

நிசும்பனும் சும்பனும் அம்பிகையை எதிர்க்கப் புறப்பட்டனர். படைவீரர் கோபத்தில் உதட்டைக் கடித்துக் கொண்டு இயல்பான கோரம் இன்னமும் கோரமாக, அவர்களுடன் சென்றனர்.

சாட்சாத் சும்பாசுரரே யுத்தம் தொடங்கிவிட்டார்! சப்தமாதாக்களை முதலில் சமாப்தியாக்கத் திருஉளம் கொண்டார்! ஆனால் மகா பலசாலினிகளாக அவர்களோடு போர் நீடித்ததால் பொறுமையிழந்தான் சும்பன். இந்தப் பணிப் பெண்களின் பொருட்டு யஜமானியை விட்டு வைக்க வேண்டாம் என்று மனத்தை மாற்றிக்கொண்டான். பணிப் பெண்களே இப்படி எனில் யஜமானி எப்படியிருப்பாள் என்பதை மறந்து பராம்பிகையை நோக்கிச் சென்றான்.

அம்பாளுக்கு நேரே நின்றான் சும்பாசுரன்.

சத்தியமும் வஞ்சப் பொய்யும் நேருக்கு நேர் பார்த்துக் கொள்கின்றன!

அம்பிகை நகைத்துக் கொண்டாள். இல்லாத வஸ்து இருக்கிற வஸ்துவை இல்லாமற் செய்வதற்காக சர்வாயுத

தாரியாக வந்தால் நகைப்பது தவிர வேறென்ன செய்யக் கிடக்கிறது? ஆனால் கருணையைப் பாருங்கள்! இந்த நகைப்புக்குரிய முட்டாள்தனத்தையும் தன் மீதே சுமத்திக்கொள்வதுபோல், அருகிலிருந்த அருமைச் சாமுண்டியிடம் கூறுகிறாள்: ''திரும்பத் திரும்பத் தோல்வி கண்டும், பக்கபலத்தில் முக்காலே மூன்று வீசத்தை இழந்த பின்னும் இவன் என்னைச் சரண் புகுவது தனக்கு அவமானம், அபகீர்த்தி என்று மோகத்தினால் எண்ணி யுத்தத்துக்கு வருவதைப் பார். அடடா, இந்த மோகத்தைத்தானே என் மாயாசக்தி என்கிறார்கள்!''

சும்பாசுரன் தேவியை நெருங்கி ஆயுதம் எடுக்கு முன்னரே நிசும்பன் விழுந்தடித்துக்கொண்டு இடையே வந்தான். அவனைத் தடுத்து, தானே போரைத் தொடங்கினான். தம்பி தானிருக்க, தமையனார் முதலில் போர் புரிவதா என்கிற பிராத்ரு வாத்ஸல்யம்! தானே அவளை வென்று தமையனாருக்கு ஆயாசம் உண்டாக்காதிருக்கலாம் என்று எண்ணினானா? அல்லது அவளால் அண்ணன் வதைக்கப்படுவதைக் காணாமல் தானே முதலில் உயிரைத் துறக்கலாம் என்று எண்ணினானா?

சூறாவளியென வீராவேசத்துடன் வந்த நிசும்பனின் வாளும் கேடயமும் பளபளத்தன. அம்பிகைக்கு வெகு நெருக்கத்தே வந்துவிட்டாள்.

அவளது உத்தம ஊர்தியான சிம்மத்தின் சிரத்தில் கத்தியால் குத்தினான்.

அம்பிகை ஆத்திரமுற்று அம்பைப் பொழிந்தாள். நிசும்பனின் வாள் விழுந்தது; சந்திரப் பிரபையுடன் கூடிய கேடயம் எட்டுத் துண்டாகித் தெறித்தது.

சக்தியாயுதத்தை எய்தான். பராசக்தி ஆழிப் படையால் அதை இரண்டாக்கினாள்.

சூலத்தைச் சுற்றி எறிந்தான். அதற்கு எதிராக ஆயுதம் எய்யாமல், அவள் தன் முஷ்டியாலேயே குத்தினாள். சூலம் சூர்ணமாயிற்று.

கதையை வீசினான். அதன் மீது தேவி திரிசூலத்தைச் செலுத்தியதும் அது உடைந்தது மட்டுமின்றி பஸ்மமும் ஆகிவிட்டது.

சூலப்பொடி, கதைப்பொடி என்றிப்படி தன் ஆயுதங்கள் கோலப்பொடியானது கண்டு மனம் ஒடிந்த நிசும்பன் கோடரியால் அவளைப் பிளந்து வீழ்த்திவிட யத்தனித்தான். ஆனால் அவளது அம்பு அந்தக் கோடரியைப் பிடித்தவனையே வீழ்த்திவிட்டது!

டடாலென்று சாய்ந்துவிட்டான் நிசும்பன்.

இறந்து விட்டானா? அல்ல, பொய் இத்தனை சீக்கிரத்தில் சாகாது. மூர்ச்சித்திருக்கிறான், அவ்வளவுதான்!

பயங்கர பராக்கிரமம் கொண்ட நிசும்பன் மயங்கி வீழ்ந்தான் என்றதும் சும்பனின் நெஞ்சு பாசத்திலும் கோபத்திலுமாகத் துடித்தது.

அம்பாளைத் தொலைத்தே விடுவது என்று உக்கிர வெறி கொண்டான்.

அவளே மீள மீள வெல்பவள் என்ற அவமானத்தைச் சகிக்க முடியாமல், அவளை நிகர்த்த பலசாலியாகத் தன்னைத் தானே பிரகடனம் செய்து கொள்ள எண்ணினான். உடனே காம ரூபியான அவன் அஷ்ட புஜையான கௌசிகி போலவே, தானும் எட்டுக் கைகள் கொண்டவனாகி, நெடிதுயர்ந்த உருவத்தை எடுத்துக் கொண்டான். தூக்கிப் பிடித்த எண்கரங்களில் ஆயுதங்கள் மின்ன, அவன் ரதத்தின் மீதேறி நின்ற போது அவன் ஆகாயத்தையும் வியாபித்து விட்டானோ என்று தோன்றியது! சத்திய ஸ்வரூபிணி போலவே தோன்றுவதற்கு மாயாசுரன் முயன்றான்!

அம்பிகை பயந்து விடுவாளா என்ன?

தன் மணி வாக்கினால் அவனிடம் பேசினாள். சத்தியம் பொய்யிடம் திருவாய் மலர்ந்ததை பாகவதம் பகர்கிறது.

"சும்பா! எத்தனை ஞான சூனியமாயிருக்கிறாய் அப்பா! உருவ வேஷத்தைக் காட்டி என்னைப் பயமுறுத்தப் பார்க்கிறாயே! நான் அபய ஸ்வரூபிணி அல்லவா? பக்தருக்குப் பயமே இல்லாத நிலையைத் தருகிற நானே ஒன்றிடம் பயப்படுவதும் உண்டா? உன்னுடைய வீரமும் சூரமும் ராஜ்யமும் நிலைத்திராதவை அப்பனே! என் அபயம் ஒன்றே எந்நாளும் நிலைத்திருக்கும். இப்போதும் கூடத் தலைக்குமேல் வெள்ளம் போய் விடவில்லை. நீ சரண் புகுந்தால் அந்த அபய

நிலையைத் தருகிறேன். படைக்கலங்களைப் போட்டு வா; அடைக்கலம் தருகிறேன்.''

இப்படிச் சொன்ன தேவி சிரித்துக் கொண்டு தனக்குள் தானே மொழிவாள்: 'சரண் புகுந்தால்தானா அபய நிலை? சரண் புகுந்தால் பாதாளத்தில் நிர்ப்பயமாக வாழலாம். புகாவிட்டால் சம்ஹரிக்கப்பட்டு என்னுள் அதைவிட நிர்ப்பயமாக வாழலாம். அந்த அத்வைத அபயநிலை வேண்டாம் என்றாலும் என்னுடைய உத்கிருஷ்டமான விண்ணுலக வீட்டுக்கு அனுப்பி வைப்பேன். ஹே சும்பாசுரா, சரணாகதி இல்லை, வீர சுவர்க்கம்தான் வேண்டும் என்று தானே தீர்மானித்துவிட்டாய்! நீ நினைக்கிற வீரசுவர்க்கத்தை எல்லாம் விடப் பரம உத்தமமான என் நிஜலோகத்துக்கே உன்னை அனுப்பி வைக்கிறேன், வா' என்றாள்.

சும்பன் அவள் வெளிப்படக் கூறிய வாக்கை மட்டுமே கேட்டான்; ரூபத்தைப் பார்த்தான்; அவளைத் தான் காதலித்ததை நினைத்தான். அவனுக்கே வெட்கம் உடம்பைப் பிடுங்கித் தின்றது. 'ஆகா, இவளா எனக்கு உடன்படுகிறவள்! ஒருகாலும் இல்லை. 'யுத்தத்தில் என்னை வென்று கரம் பிடிக்கட்டும்' என்று இவள் சொல்லியனுப்பியது வேடிக்கை வார்த்தையே. இவளுக்குத் திரும்பத் திரும்பத் தூது விட்டேனே! என்ன பேதைமை! எனக்குக் காதல் வெற்றியும் கிடையாது, போர் வெற்றியும் கிடையாது. அடைக்கலம் புகுகிற எண்ணம் என் அசுர சித்தத்தில் ஒருநாளும் வராது. எனவே மரணமொன்றுதான் எனக்கு விட்ட ஒரே வழி. என் வீர ஆற்றலையாவது திருப்தியுடன் வெளிக் காட்டித் தீர்த்துக் கொண்டு மாள்கிறேன்' என எண்ணினான்.

எட்டுக் கைகளின் ஆயுதங்களையும் திக்கெட்டும் எட்ட ஆட்டி ஆரவரித்தான்.

சிங்கம் கர்ஜித்தது.

சிங்கநாதத்துக்குத் துணையாகச் சண்டிகை சங்கநாதம் செய்தாள். வில் நாணையும் மீட்டி விட்டாள். அது சம்ஹார சங்கீதத்துக்கு ஆதார சுருதியை கம்பீரமாக ரீங்கரித்தது.

அதுவும் போதாதென்று கண்டாமணியை முழக்கினாள். கண கண என்ற அதன் அதிர்விலேயே மகத்தான ஒளி பிறந்தது. அந்த தேஜோ மயத்தில் அசுரரின் தேசு மங்கியது. பயங்கர மணி ஒலியில் நடுநடுங்கித் தங்கள் வீரியத்தை இழந்தனர்.

சிம்மம் உற்சாகமாக கர்ஜிக்க, அசுரரின் யானைப் படைகள் நடுநடுங்கித் தங்களது மதநீரைப் பெருகவிட்டன.

சாமுண்டேசுவரி ஒரு குதி குதித்துக் கைத்தலத்தால் விண்ணையும் மண்ணையும் அறைந்தாள். அவ்வொலியில் முந்தைய ஒலிகள் யாவும் ஒளிந்துகொண்டன.

சிவதூதி பார்த்தாள்! யுத்த நாயகியாகத் தன்னை நியமித்துக் கொண்ட அவள் உள் நாடி நரம்புகள் வரை குடைந்து செல்லுகிற மாதிரிப் பிளிறினாள். பகபகவென அட்டஹாஸம் செய்தாள். அதுவே அவளது மஹா ஆயுதம்! அசுரர்கள் பொறி கலங்கி விட்டனர்.

சும்பன் கலங்கினானில்லை. அம்பிலிருந்து விடுபட்ட பாணமென அம்பிகையை நோக்கி விரைந்தான்.

''துராத்மனே! நில் நில்!'' என்றாள் அம்பிகை.

''வா வா'' என்று எதிரியை வீரத்தோடு வரவேற்காமல் ஏன் 'நில்' என்றாள்? பயந்தா விட்டாள்? அபயாம்பிகை எங்கேனும் அஞ்சுவாளா?

'அவன் நிற்கட்டும்; தன்னை நன்கு பார்க்கட்டும்; நன்றாக யோசித்துப் பார்க்கட்டும்; இப்போதும் தானாக புத்தி வந்து பிழைத்துப் போனால் போகட்டும்' என்ற கருணையினாலேயே நிற்கச் சொன்னாள்.

மகிஷனுக்குக் காட்டிய கருணை இன்றும் வற்றவில்லை. அது என்றும் வற்றாது ஜீவரைக் காக்கும் ஜீவநதி!

அந்தக் கருணையின் வேகத்தைக் கண்டு, அது தங்களது ஜன்ம சத்துருவைக் குறித்துக் காட்டப்படுகிறது என்பதையும் மறந்து, தேவர்களே ஜயகோஷம் எழுப்பினர்! தேவருக்கும் அசுரருக்கும் உள்ள மாறுபாட்டை என்னென்பது?

சும்பன் கருணைக்கு அசைந்து கொடுக்கவில்லை. நிலைத்துவிட்ட அவனது ஆத்திரம், க்ஷாத்திரம் இம்மியும் அசையவில்லை. ஆனால் இதென்ன ஆச்சரியம்! அவனால் ஸ்தூலமாக அசைய முடியவில்லையே! சத்தியமானது ''நில்'' என்று நேர் கட்டளையாகக் கூறினால் அக் கட்டளை அசத்தியமாக முடியுமா? அந்த வாக்குச் சக்தியினாலே அவன் நின்ற இடத்தில் நின்று விட்டான்.

ஆனாலும் இருந்த இடத்திலிருந்தே ஆயுதப் பிரயோகம் செய்யலானான். தன் வெஞ்சினம் அனைத்தும் உருவெடுத்தாற் போன்ற ஒரு செந்தணல் சக்தியாயுதத்தை ஏவினான். கொடிய ஜ்வாலையோடு அது தேவியை நோக்கி விரைகையில்,

ஆஹா, இது என்ன அற்புத ஆயுதம் இவளிடமிருந்து புறப்படுகிறது? எரிநட்சத்திரத்தையே இவள் படைக்கலமாக எறிகிறாளா என்ன? இன்ன ஆயுதம் என்றே அடையாளம் கண்டு கொள்ள முடியாத ஒரு ஜோதிப் பிழம்பை அம்பிகை வீசினாள் — சும்பனின் வீரத்தை மெச்சிப் பிரத்தியேகமாக அவனுக்கென்றே சிருஷ்டித்தாள் போலும்! இது அவன் ஏவிய சக்தியாயுதத்தைப் பொசுக்கி விட்டுத் தானும் அணைந்தது.

ஆயுதத்தை எரித்ததோடு நில்லாமல் அது மேற்கொண்டு வந்து தன்னையும் கொளுத்திவிடும் என்றே எதிர்பார்த்தான் சும்பன். அம்பிகை இவனது வீர சாகஸங்களை இன்னும் சிறிது வெளிப்படுத்தி, இவனைப் புகழுக்குரியவனாக்க எண்ணி இப்போதைக்கு விட்டு வைத்தாள். இவனுக்கு அசையும் சக்தியும் தந்தாள். ஆனால் இவனோ, 'சரிதான், எரி நட்சத்திரத்தின் வீரமும் என்னிடம் சாயவில்லை' என்றே எண்ணினான்.

மகிழ்ச்சியில் சிங்கநாதம் செய்தான். மூவுலகங்களிலும் அது நிறைந்தது.

''சும்பனுடைய சிங்கநாதம்'' என்றே 'மான்மியத்தில் காண்கிறது (ஸிம்ஹநாதேன சும்பஸ்ய). 'இதற்குச் சும்பனுக்குரிய சிம்மம் எழுப்பிய நாதத்தால்' என்றும் பொருள் கொள்ளலாம். அவ்வாறாயின், இவன் எட்டுக்கை எடுத்துக் கொண்டது போதாதென்று, அம்பிகை போலவே தானும் சிம்மத்தின் மீது ஆரோகணித்திருந்தான் என்றும் ஆகும்.

சிம்மநாதத்தை மீறி அம்பிகை இடி முழக்குவது போல் உருமினாள்.

நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் இருவரும் சரமாரிகளைப் பரிமாறிக் கொண்டனர்.

விதவிதமாக விளையாடிப் பார்க்கும் விஷ்ணுமாயைக்குத் தாற்காலிகமாகச் சும்ப யுத்தம் போதும் போலிருந்தது. சூலத்தால் அவனைத் தாக்கி, பிரக்ஞையற்றுப் பூமியில் விழச் செய்தாள்.

போர் நடக்கும்போது நிலத்தில் எண்சாண் தோய விழுவது பெருத்த அவமானமாகும். முன்பு நிசும்பனுக்கு இந்த மானபங்கம் நேர்ந்தது; இப்போது சும்பனுக்கும் கிட்டியது. 'பின்னவன் பெற்ற செல்வம்' முன்னவனும் பெற்றான்!

நிசும்பனின் அறிவு கலங்கிய மயக்க நிலையிலும் அவனது உள்ளுணர்ச்சியின் மெல்லிய இழையோட்டத்துக்குத் தமையனார் விழுந்தார் என்று தெரிந்து விட்டது! அவனது சகோதர பாசம் அப்படிப்பட்டது! அதன் வேகத்திலேயே அவன் மயக்கம் கலைந்து மகா ஆத்திரத்துடன் எழுந்தான்.

சும்பன் எண்கரம் கொண்டான் எனில், நிசும்பனோ பதினாயிரம் கரங்களைப் படைத்துக் கொண்டான்! அம்பிகைக்கு ஈடாகி விடுகிற அதி புத்திசாலி முயற்சி! கிணற்றுத் தவளை, 'மகாசமுத்திரம் இத்தனை அளவு இருக்குமா?' என்று உப்பி உப்பிக் காட்டிய கதைதான்!

எனினும் தச ஸஹஸ்ரபுஜனாக அவன் திசைகளை நிறைத்து நின்றதும் ஓர் அற்புதக் காட்சியாகத்தான் இருந்தது! அத்தனை கைகளிலும் ஒளி காந்தும் திகிரிகள்! தநுஜேசுவரன் —அசுரர்களின் இறைவன் — என்றே இங்கு அவனை வர்ணிக்கிறார் முனிவர் மேதஸ். சும்பனுக்குக் கிட்டத்தட்ட சரிசமதையாகவே, யுவராஜ ஸ்தானத்துக்கும் மேம்பட்ட அந்தஸ்தில் நிசும்பன் இருந்திருக்கிறான் என்று இதிலிருந்து தெரிகிறது! பதினாயிரம் சக்கரங்களையும் அம்பிகை மீது ஏவி, அவள் இருந்த இடத்தையே பிரகாசப் பிரவாகத்தில் மறைத்தான்.

அவள் அவற்றைப் பத்து ஸஹஸ்ரநாம அர்ச்சனையில் தூவிய பூக்களாகவே மதித்தாள். அவளது சர வருஷம் சக்கர வருஷத்தை எளிதே அழித்தது.

கதை கொண்டு அம்பிகையை மொத்திக் கொல்லப் பாய்ந்தான் நிசும்பன். அம்பாளின் கூர்வாள் கதையை வெட்டி வீழ்த்தியது.

அமரகண்டகனான நிசும்பன் உசும்பி எழுந்தான். சூலாயுதத்தைச் சுழற்றிக் கொண்டு தேவியை அணுகினான்.

சூலத்தைப் பிளந்தால் போதாது; சூலியையே பிளந்துவிட வேண்டும் எனத் திருஉளம் கொண்டாள் லோக பாலினியான சூலினி.

தனது புகழ்கொண்ட திரிசூலத்தை நேராக அந்த அரக்கனின் இதயத்தில் புதைத்தாள்.

நிசும்பனின் இதயம் பிளந்தது. சாகிற சந்தர்ப்பத்தில் தன் முழு மனோசக்தியையும் திரட்டிக் கொண்டான். மனோசக்தி விம்மி இறுகிய போதிலும், இதயம் பிளந்த அந்தச் சரீரம் சற்றும் பயனற்றதாகி விட்டது. இந்த உடல் எந்தக் காரியத்துக்கும் உதவாது. இதை உணர்ந்து அந்த மனோசக்தியே தனக்கு இன்னொரு உருவத்தை எடுத்துக்கொண்டது.

பிளந்த இதயத்தின் வெடிப்பிலிருந்து மகா பலமும், மகாவீர்யமும் கொண்ட இன்னோர் அசுரனாக நிசும்பனின் மனோசக்தி வெளி வந்தது.

அப்பட்டப் பொய் நேராகச் சத்தியத்துள் சேர்ந்து விட முடியாது. தாற்காலிகமாக மெய்யாகத் தோன்றுகிற மாயை, அல்லது வஞ்சகம், அல்லது மோசடியைவிட இது சத்தியத்துக்கு அப்பாற்பட்டு நிற்பது. சும்பன் மாயை எனில், நிசும்பன் முழுப்பொய் — வேதாந்த பாஷையில் முன்னவன் பிராதிபாஸிக சத்தியம், பின்னவன் அத்யந்த அஸத். இந்தப் பொய்யும் மாயரூபம் ஒன்று கொண்டே பின்னரே மெய்யில் இரண்டறக் கலக்க முடிகிறது. இதனால்தான் நிசும்பன் மாய்ந்து நேரே தேவியுடன் லயமாகாமல், அவனிடமிருந்து ஒரு மாயா நிசும்பன் வெளிப்பட்டான்!

சத்திய சரஸ்வதியான அவளில் விஷ்ணு மாயையும் சற்றே கலந்திருந்ததால், அப்பட்டப் பொய்யாம் நிசும்பனும் மாயரூபம் கொண்டு அவளில் கலக்க முடிகிறது.

''நான் செத்தேன் என்றெண்ணிப் போய் விடாதே! நில் நின்று பார்! இதோ நான் இருக்கவே செய்கிறேன்'' என்று புதிதாக வந்த 'நிசும்பன்' தேவியிடம் கெக்கலித்துக் கூறினான்.

அவள் ஒரே சமயத்தில் சத்தியமாகவும் விஷ்ணுமாயையாகவும் இருந்தாள் எனில் இவனும் இப்போது அத்யந்த அசத், மாயை இரண்டின் கலவையாக இருக்கிறான்! எதிரிகளிடை நல்ல பொருத்தம்தான்!

தேவி வாய்விட்டுச் சிரித்துவிட்டாள். சாதாரணமாக சாமுண்டி, சிவதூதி போன்ற காளிகா தேவிகள்தாம் கடகடவென்று சிரித்து அட்டஹாஸம் செய்வர். பராம்பிகை

மந்தஹாஸம் எனும் குமிண் நகையே புரிவாள். ஆனால் இப்போது வழக்கத்துக்கு விரோதமாக அவளே பெரிதாகச் சப்தமிட்டு நகைத்து விட்டாள் என்கிறது மான்மியம்.

காரணம் என்ன? இவள் மகாமாயை. சத்தியத்திலேயே தோன்றிய மகா மாயை. அப்படியிருக்க அசத்தியத்தில் தோன்றிய ஓர் அல்ப மாயாவி இவளிடம் அறைகூவல் விடுகிறானே! இவள் அவனை 'நில்' எனக்கூறி நிற்கச் செய்தாளென்றால் அவனும் அவ்வாறே செய்ய முடியுமா என்ன? அறைகூவுகிறானே! மாயையாக இருந்து இந்த விசித்திரத்தையும் அநுமதித்துள்ள இவள் மட்டும் சத்திய ஆவேசம் கொண்டால், அதற்குப் பின் மற்றவரின் மாயாவித்தனம் எதிர் நிற்க முடியுமா? சூரியனுக்கு முன் இருட்டு நிற்கப் பார்க்கிற முயற்சிதான்! இப்போது இருட்டே, 'ஹே சூரியா! நில், என்னைப் பார், நான் இருக்கவே செய்கிறேன்' என்கிறது! இதுவும் இவள் லீலையே! தேவி கடகடவெனச் சிரிக்காமலிருக்க முடியுமா?

''இல்லாத பொய்யே! நீ இருக்கவா செய்கிறாய்?'' என்று அவள் வாய் விட்டுக் கேட்கவில்லை.

வாய் பேசுவதற்குப் பதில் வாள் பேசி விட்டது.

தேவியின் திருவாளால் தலை அறுபட்டுத் தடுகுட்டமாகத் தரணியில் விழுந்தான் நிசும்பன்.

நிசும்ப சம்ஹாரமாகி விட்டது!

பொய் பொய்யாகிவிட்டது! இரண்டு எதிர் மறைகள் உண்மையை உண்டாக்குமல்லவா? பொய் பொய்யாயிற்று என்றால் அது சத்தியாம்பிகையிடம் ஒன்றிவிட்டது என்றுதான் அர்த்தம்.

★ ★ ★

அம்பிகை விடாயாற்றி போலப் போரை நிறுத்தினாள். தன் சைனியங்களை யுத்தம் செய்யவிட்டு, அவர்களது சாகஸங்களை ரசிக்கலானாள் – இதுதான் விடாயாற்றிக்கு இசைவிநிகை!

சிம்மேந்திரருக்கு குஷி பிறந்து விட்டது. அவரது பற்கள் முதலில் எதிரிகள் கழுத்துக்களைப் பதம் பார்த்தன. பிறகு அவர்கள் பூரணமாக அவரது திருவயிற்றில் அடக்கமாயினர்.

கௌமாரியின் சக்திப் படையும், பிரம்மாணியின் கமண்டலு மந்திர தீர்த்தமும், மாகேசுவரியின் திரிசூலமும், வாராஹி

யின் நாசிமுனையும், நாரசிம்ஹியின் நக முனையும், வைணவியின் திகிரியும், ஐந்த்ரியின் வஜ்ரப் படையும் ஜாம் ஜாம் என்று தங்களது சக்தியைக் காட்டின. இவர்கள் கொன்றதோடு சரி, கொன்றதோடு தின்றும் மகிழ்ந்த மூவர் சாமுண்டேசுவரியும், சிவதூதியும், சிம்மேந்திரனும் ஆவர்.

அசுர வீரர்கள் அனைவரும் அழிந்தாயிற்று. விருத்தர்கள், நோயாளிகள் என்பது போன்ற காரணங்களுக்காகப் போரில் புகாத அசுரரே மீதம் இருந்தனர். இப்படிப்பட்டவரில் போரில் புகுந்தும் தேவியின் சைனியத்தால் தாக்கப்படாமல் ஓடிப்பிழைத்து வாழ்ந்த சில கோழை அசுரர்களும் இருந்தனர். இது பாகவத விவரம்.

வீர தீர சூரனாக மீதமிருந்த ஒரே ஒருவன் சும்பன்தான். அம்பிகையின் மாயையால் பிறந்த உலகில் மனிதன் செய்கிற மாயை லேசில் மாய்வதில்லைதான்!

இந்த மற்ற அசுரர்கள் தங்கள் அரசனைப் பறிகொடுக்க இப்போதும் மனம் கொள்ளவில்லை. அனைவரும் பாதாளம் போய் விடலாம் என இவர்கள் சும்பனிடம் முறையிடுகின்றனர்: ''இதை உங்களது தோல்வி என்று எண்ணவேண்டா; காலத்தின் கொடுமை என்றே கொள்ளுங்கள், பிரபு! எல்லாவற்றிலும் காலமே வலியது எனத்தெரிகிறது ஐயனே! முன் ஒருகால் மாவலி பொருந்திய தேவாதியரைத் தாங்கள் வெல்லவில்லையா? அப்படிப்பட்டவரின் படை முழுவதும் இப்போது ஒரு பலவீனையால் வெல்லப்பட்டது என்றால், அன்றைக்கு இன்று தங்கள் சக்தி குறைந்து விட்டது என்றா அர்த்தம்? இது காலத்தின் கொடுமை என்றே சொல்லவேண்டும். இன்று பாதகமாகியுள்ள இதே காலம் மீண்டும் எதிர்காலத்தே நமக்குச் சாதகமாகவும் ஆகக் கூடும். எனவே அந்நாளை எதிர்பார்த்து, இப்போதைக்கு நாம் சண்டிகை விரும்பியபடி, பாதாளம் செல்வதே சரியானதாகும் என்று சிறியேங்களாகிய நாங்கள் எண்ணுகிறோம். தாங்கள் பெரும் புத்தியால் ஆராய்ந்து முடிவு எடுக்க வேணும்''

சும்பன் துயரைக் கருவில் கொண்ட ஓர் அவலச் சிரிப்பு சிரித்தான். அதில் ஆத்திரமும் உள்ளே குமுறியது. ''காலத்தின் கொடுமைதான், வாஸ்தவம். ஆனால் போரில் தோற்றதல்ல காலத்தின் கொடுமை. காளிக்கு அஞ்சிப் பாதாளத்துக்கு ஓடிப் பயங்காளிகளாக வாழலாம் என்று யோசனை சொல்கிறீர்களே, இதுதான் காலத்தின் மகா கொடுமை! வீரர்காள்! உயிரைத் திருணமாக மதித்து எத்தனையோ யுத்தங்களைச் செய்தவர்கள்

தாம் நீங்கள். அப்படிப்பட்டவர்களில் இன்று சிலர் போரில் புகாமல், அல்லது புகுந்தும் எதிராளியால் தாக்கப்படாமல் வாழ்கிறீர்கள்; ஏனெனில் வியாதியினாலும் வயதினாலும் பயத்தினாலும் உடல் குன்றி விட்டீர்கள். இதுவே காலத்தின் தவிர்க்க முடியாத கொடுமை. ஆனால் உங்களது உள்ளமும் குன்றி, ஊரை விட்டு, உலகை விட்டே கீழுலகுக்கு ஓட்டம்பிடிக்க வேண்டும் என்கிறீர்களே, இந்த எண்ணம் உங்களுக்கு எப்படி உண்டாயிற்று என்பதே விந்தை! நீங்கள் யாவரும் தாராளமாகக் கீழுலகு சென்று கீழான வாழ்வு வாழலாம்; நான் போர் முனைக்கே சென்று செத்தாலும் மேலான வாழ்வை எய்துவேன். எல்லாவற்றிலும் வலிது காலமே என்றீர்கள் அல்லவா! அப்படியாயின் அது இப்போது என்னைத் தடுத்து நிறுத்தித் தன் கடத்தற்கரிய வலியைக் காட்டட்டுமே! என்னை அது தடுக்கவில்லை என்பதாலேயே, நான் யுத்தத்துக்குச் சென்று அழிவதுதான் உங்களது காலதத்துவத்தின் திட்டம் என்று புரிந்து கொள்ளுங்கள். நீங்களே சொன்னபடி அதை நீங்கள் தடுக்கப் பார்த்துப் பயன் இராதல்லவா?

''பலப்பலச் சொல்லிப் பயன் என்? ரக்தபீஜனும் நிசும்பனும் போனபின் எனக்கு உயிரில் ஆசை அடியோடு போய்விட்டது. எனவே இப்போது வெற்றி நைப்பாசைக்காக நான் ரணம் புகவில்லை; சாகவே செல்கிறேன். ஆகையால் வெற்றி வராது என்பதையும் மரண பயங்கரத்தையும் எடுத்துக் காட்டி நீங்கள் என்னைத் திருப்புவது நடக்காத காரியம். உயிர் என்றோ ஒருநாள் போக வேண்டியதே. மகாப் பிரளயத்தில் சூரிய சந்திரரும், இந்த இந்திராதி தேவரும், ஏன் பிரம, விஷ்ணு, ருத்ராதியரும்கூட அழியத்தான் செய்கிறார்கள். எனவே உயிரை நிறுத்திக் கொள்கிற முயற்சி நிஷ்பலனேயாம். கீர்த்தியே உலகுள்ள அளவு நிற்பது. அதையே நான் வரித்தேன்'' என்ற ஒப்பற்ற வாசகங்களைக் கூறிப் புறப்பட்டான் சும்பன் – யுத்த வேள்வியில் இறுதியான வஸோர்த்தாரை அவியாகத் தன் ஆவியைச் சொறிந்து கொள்வதற்காக.

அசுரன் கதையேயாயினும், உயர் பண்பு மிளிரும் கட்டம் என்பதில் ஆட்சேபணை என்ன? தீயன அழியு முன், அதற்குள் கூட ஏதோ ஒரு நல்ல பண்பை தலைத் தூக்கவைத்து, தனது அந்த அசுரக் குழந்தையை மற்ற எல்லாக் குழந்தைகளும் புகழுமாறு ஒன்று செய்ய வைத்து, அந்த ஒன்றுக்குப் பலன் தருவதேபோல் அதைத் தன் கையாலேயே அழித்து முக்தியும் தருகிறது பிரபஞ்ச மகா சக்தி என்று பாகவதம் காட்டுகிறது.

தன்னில் விழ வருகிற விட்டில் பூச்சியைப் பார்த்தது விளக்கு. மேலும் கொழுந்து விட்டெரிந்தது. கடைசி கடைசியாக சம்ஹாரத்தை வரித்து வந்த அவுணனைப் பார்த்து ஆர்த்து வரவேற்றாள் சண்டிகை.

ஜொலிக்கும் மணியைக் கண கணவென்று ஒலித்தாள். பள்ளியிலும் ஆலையிலும் வேலை தொடங்கு முன்னும், முடிகிற முன்னும் மணி அடிக்கிறார்கள் அல்லவா? இன்றைய யுத்தத்துக்கு ஆரம்ப மணியாகவும் சும்பனுக்கு முடிவான சாவு மணியாகவும் சண்டிகை கண்டாமணியை ஒலித்து விட்டாள்.

அம்பாளின் நேருக்கு நேர் எதிரே நின்றான் சும்பன். எதிர்க்க முடியவில்லை! அணைகிற தீபத்தில் சுடர் தெறிப்பது போல் பழைய காமம் மறுபடி இறுதியாக மூண்டு எழுந்தது. தன் வசமிழந்து பிதற்றினான்.

''பெண்கள் நாயகமே, வீணா நாதம் செய்து என்னைக் கேளிக்கைக்கு அழைக்காமல் கண்டாநாதம் செய்கிறாயே, இது தகுமா, தருமமா? நீ போருக்கு அழைத்தாலும் நான் எப்படி மனம் உவந்து உன்னோடு சமர் புரிவேன்? ஐயோ, எனக்கு உன்னை வசியம் செய்கிற மந்திரசக்தி இல்லையே! சர்வ மந்திரங்களுமே உன் வசத்தில் இருப்பதாகத் தெரிவதால் (அவளைப்பற்றி எத்தனை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறான்! இருந்தும் அசுர புத்தி போகிற போக்கைப் பாருங்கள்!) என்னால் வசியம் செய்ய முடியவில்லை. ஆகா, ஒன்று எனக்காவது இந்த வசிய சக்தி எப்படியோ வாய்த்தாக வேண்டும்; அல்லது நீயாவது இந்த மனமோஹனாங்கிக் கோலத்தில் இல்லாமல் குரூபியாக மாறிவிட வேண்டும். அப்போது எத்தனை வேகத்தோடு உன்னை எதிர்த்துப் போர் செய்வேன்? வீராதி வீரனான என்னைப் போர் செய்யவொட்டாமல் தடுத்து வைத்திருக்கிறாயே, இதுவேதான் என் தோல்வி'' என்று கூறினான் சும்பன்.

பெற்ற தாயிடம் எத்தனை குற்ற எண்ணம் வைத்திருக்கிறான்! அவன் பொய்யின் உருவம் என்று அவனை இகழ்வதை விட, இந்த மகாபாதகத்துக்காகவே அவனை இன்றளவும், உலகம் பழித்து வருகிறது. அதனால் இன்றும் சும்பனின் தன்மை என்பது வெறும் பொய்யைக் குறிக்காமல், காமத்தின் படுமட்டமான நிலைக்கு இறங்கிவிட்ட

நிலையைக் குறிப்பதாக வழங்குகிறது. மெய் போல் மாயவேஷம் போட்டு உலவி வந்த மோசடிப் பொய், மெய்யையே தன் ஸ்வாதீனத்துக்குள் கொண்டு வந்துவிட நினைக்கிறது. யுத்தம் செய்து ஒன்றை ஸ்வாதீனப்படுத்தலாம். அல்லது அன்பின் சக்தியால் ஒன்றைத் தனது ஆதீனமாக்கிக் கொள்ளலாம். அசுரப் பிறவிக்குத் தூய அன்பு வராது. வெறும் அசுரனாயின்றி மாயாசுரனாக இருப்பவனுக்கு யுத்தம் செய்யவும் லேசில் மனம்வரவில்லை. ஏன் தெரியுமா? யுத்தம் என்பதும் ஒரு நேரடியான, நேர்மையான நடவடிக்கையே ஆகும். யுத்தத்துக்கான நோக்கம் வேண்டுமானால் தவறாக இருக்கலாம். ஆனால் யுத்தம் என்கிற நடவடிக்கை வெளிப்படையானது; நேரியது. சும்பனோ மோசத்தின் உருவம். அதனால் இவனுக்கு நேரடியான, வெளிப்படையான யுத்த காரியத்தில் பூரணமாக மனம் ஈடுபட மறுக்கிறது. இச் சந்தர்ப்பத்தில் அன்புக்குத் திரும்பப் பார்க்கிறான். ஆனால் மெய்களைத் திரிக்கும் மோசமான இவனிடம் அந்த அன்பும், பால் திரிவதுபோல் பாழாகத் திரிந்து போகிறது–குழந்தையன்பு என்பது காமுகனின் வேகமாக மாறுகிறது! அது பலிக்காதபோது வேறு வழியின்றி யுத்தத்தில் பிரவேசிக்கிறான்.

வஞ்சகமும், போலியும், பித்தலாட்டத்தனமும், மோசடியும் எத்தனை எத்தனை சிக்கல்களை உண்டாக்குகின்றன என்று ஆணி அறைந்தாற்போல் எடுத்துக்காட்டுகிறது இந்த விருத்தாந்தம்.

அம்பிகை நகைத்தாள். ''நீ யுத்தத்தில் மனம் கொள்ள வேண்டுமானால் நான் குரூபியாக வேண்டும், அவ்வளவுதானே? நீ பிரார்த்திக்கு முன்பே உன் வேண்டுகோளை நான் நிறைவேற்றியாகி விட்டது. முன்னரே நான் சாமுண்டியாகவும், சிவதூதியாகவும் கோர ரூபம் கொண்டிருக்கிறேன். இதோ இந்த யுத்தரங்கத்தில் அவர்களும் இருக்கிறார்கள். உன் சௌரிய பராக்கிரமங்களை தைரியமாக அவர்களிடம் காட்டு'' என்றாள் தேவி.

பக்தர்கள் வேண்டுமுன்பே தருவாள் என்பர்; இங்கு விரோதிக்கும் அந்த வரத்தை நல்கியிருக்கிறாள். அவனுக்குத் தேவைப்படும் கோரதேவியரை முன்பே படைத்து வைத்திருக்கிறாளே!

சடேரென்று சும்பனின் புத்தி திசை திரும்பியது. மோசக்காரனுக்குத்தான் மற்றவற்றிலும் மோசங்களைப்

பளீரென்று கல்பிக்கத் தோன்றும். அம்பாள் இப்படிச் சொன்னவுடன் சும்பனுக்கு அவளிலிருந்தும் மற்ற தேவர்களிலிருந்தும் உற்பவித்து வந்து அவளுக்கு உதவுகிற படைகளைப் பற்றிப் புதிதாக ஓர் எண்ணம் வந்தது. இவன் போருக்குச் சாஸ்திரப்படித் தகுதி பெற்றிராத கிழடுகளையும், நோயாளிகளையும், கோழைகளையும் விட்டுத் தனியனாக வந்திருக்கிறான் — நமது அந்திமப் பயணத்தின்போது உற்றார் உறவினர் எவரும் நமக்குத் துணை வருவதில்லை என்பதை உணர்த்துகிற மாதிரி! ஆனால் அவளோ ஒரு பெரும் படையை உடன் வைத்திருக்கிறாள். தன்னந் தனியனை ஒரு படை முழுதும் தாக்குவது யுத்த தர்மமாகுமா என்று எண்ணுகிறான்.

முதலில் அவளும் தன்னந் தனியாகத்தான் இருந்தாள். அப்போது இவன் ஆயிரம் கோடி வெள்ள அசுரரைக் கொண்டு அவளைத் தாக்கினான். அப்போது தர்மம் எங்கே போயிருந்ததோ? அவள் பதிலுக்கு அதர்மம் செய்யவில்லை. இப்போது தேவிக்கு துணைப்படைகள் இருப்பினும் அவை இவனைத் தாக்கவேயில்லை. இவன் நேரே அம்பாளிடம் போய் நின்று, அவளோடு மட்டுமே யுத்தம் செய்ய அநுமதித்து அவை விலகி வழி விடத்தான் செய்தன. அப்படியிருந்தும் மோசமில்லாத இடத்தில் மோசத்தைக் கல்பித்துப் பார்க்கிறான்! தன் மோகத்தை அந்த மோகனாங்கி நகைத்து நையாண்டி செய்ததில் வெகுண்டு, அவளைக் குற்றம் சாட்டினான்.

"துர்கே! துஷ்டே! உனக்கு எத்தனை கர்வம்? ஆனால் கர்வப்பட உனக்கு ஏது யோக்கியதை? பிறரது பலத்தைக் கொண்டு போர் செய்கிற உனக்கு ஏது யோக்கியதை? பிறரது பலத்தைக் கொண்டு போர் செய்கிற உனக்கு இறுமாப்பு ஒரு கேடா?" என்றான்.

"பிறர்? பிறர்?" — அம்பிகை இதைவிடப் பெரிய ஹாஸ்யமே இல்லை என்பதுபோல் ஒரே சிரிப்பாகச் சிரித்துவிட்டாள். "அப்பனே, நான் சிரித்தால் உன்னைக் கேலி செய்வதாக எண்ணுகிறாய்! திமிரினால் உன்னைக் கேலி செய்வதாகவும், திமிர் கொள்ள எனக்குத் தகுதியில்லை என்றும் சொல்கிறாய்! ஆனாலும் சிரிக்காமல் என்ன செய்வேன்? எனக்குப் 'பிறர்' யாருமே கிடையாதே. அப்பா! நீகூட எனக்குப் 'பிறன்' இல்லை தான். நல்லது-அல்லது அத்தனையும் ஆகியுள்ள ஒரே சக்தி நான்தான். நான்தான் ஆதி சக்தி என்பதால் அனைத்தின் சக்தியும், ஆற்றலும், வீரியமும், பலமும்

என்னிடமிருந்து உண்டான திவலைகள்தாம். அப்படியிருக்க, பிறர் பலத்தினால் நான் வாழ்கிறேன் என்கிறாயே! இந்த ஜகத்தில் ஏகமாக இருக்கிறவள் நான். எனக்கு இரண்டாவதாக எது உள்ளது? (அத்விதீய பரப்பிரம்மம் தன்னைத் தானே சொல்லிக்கொள்கிற அற்புத வாக்குகள்!) என் மகிமைக் கதிரவனே இத்தனை தேவியர்கள் என்ற கதிர்களாக வெளிப்பட்டன. அவற்றை என்னுள்ளேயே சுருக்கிக் கொள்கிறேன், அதையும் பார்!''

கருணாம்பிகை பாபிக்கு அற்புத மாகாட்சியை அருளினாள்!

பிரம்மாணி முதலிய ஸப்த மாதாக்களும், அவர்களின் தலைமையில் போர் புரிந்த மற்ற தேவியர் கணங்களும், சிவதூதியும், சாமுண்டேசுவரியும் பராம்பிகையின் வெண் திருமேனியுள் ஈர்த்து இழுக்கப்பட்டு, மறைந்தே போயினர்! மறைவல்ல, நிறைவு! அத்தனை வண்ணங்களும் இந்த ஏக வெண்மையில் கரைந்து போயின!

கீதையின் இடையில் கண்ணன் விசுவரூப தரிசனம் காட்டிய போது அதிலும் தேவசக்திகள்கூட ஒடுங்கத்தான் செய்தன. ('அமீ ஹி த்வாம் ஸுரஸங்கா விசந்தி'.) ஆனால் அதில் சம்ஹார பயங்கரமே தூக்கி நிற்கிறது. ஜகன் மோஹன வேணுகானன் சம்ஹார லயத்தைக் காட்ட, பயங்கரமாகவே பொதுவில் எண்ணப்படும் சண்டியோ மகா மதுரமான திருக்காட்சியாக பிரம்மாணியும், வைஷ்ணவியும், மஹேசுவரியும், நாரஸிம்ஹியும், வாராஹியும், கௌமாரியும், ஐந்த்ரியும், காளியும், சிவதூதியும், மற்ற தேவியர் கணங்களும் தன்னில் தானாக இழைந்து குழைந்து கரைவதைக் காட்டி அருளினாள்! இவனும் அன்போடு சரணாகதி செய்து,தன் மனத்தை அவளிடம் தானாகவே உவந்து கரைக்கச் செய்ய வேண்டும் என்பதற்கு இறுதி முயற்சியாகவே அவளுடைய காருண்யம் இக் காட்சியைப் பாபிக்கு அநுக்கிரகித்தது. அந்த அநுக்கிரகம் அவனுக்குப் புரியா விட்டால் இவள் உக்ர சண்டியாகி, கண்ணன் செய்தாற்போல் சம்ஹாரத் தத்வமாகி அவனை உட்கொள்ள – தன் உள்ளே கொள்ள – வேண்டியதுதான்!

அசுரன் காணற்கரிய தரிசனம் பெற்றும் அன்பைப் புரிந்து கொள்ளவில்லை; ஆற்றலைத் தெரிந்து கொள்ளவில்லை; அனைத்துக்கும் ஆதாரமான ஒரே சத்தியத்தை அறிந்து கொள்ளவில்லை!

அப்போதும் விடாப்பிடியான கருணையோடு தேவி கூறினாள்: ''அப்பனே, கண்ணுக்கு முன்னால் பிரத்தியட்சமாகப் பார்த்ததைப் புத்தியில் உறுதிப்படுத்திக் கொள். என் மகிமையாலேயே அகிலத்தின் அத்தனை வடிவங்களையும் உண்டாக்கினேன். அதில் தேவ வடிவங்கள் தங்களுள் இருந்த என் சக்தித் திவலைகளையே எனக்குத் 'துணை'யாக வடித்துத் தந்தார்கள். இப்போது அவை எல்லாம் அந்தத் தேவர்களின் இடையீடு இன்றி நேராக என்னிடமே புகுந்து உறைந்ததை நிதரிசனமாகப் பார்த்தாய் அல்லவா? இதோ, உன் விருப்பப்படி ஒருத்தியாகவே நிற்கிறேன். இப்போதும் என்னைப் புரிந்து கொள்ள மாட்டாயா?...சரி, அப்படியாயின் இனி யுத்தத்தில் உறுதியாக நிற்பாயாக!''

அவன் யுத்தம்தான் செய்வான் என்று நிச்சயமாகி விட்டது. அப்போதுகூட, தன் அன்புக்கு அடிபணியாத அவன் எங்கேனும் தன் வீரத்துக்கு அடி பணிந்து, சுத்த வீரன் என்ற கீர்த்தியை இழந்துவிடப் போகிறானே என்ற சொல்லொணாப் பரிவு கொள்கிறாள்! 'யுத்தத்தில் உறுதியாக நிற்பாய்' என்கிறாள்!

யுத்தம் தொடங்கியது.

இறுதியாகச் சத்தியமும் வஞ்சகமும் தரப்புக்கு ஒரே ஒருவராக நின்று செய்கிற யுத்தம்!

எப்போதும் அம்பிகைக்குத் துணையாகப் போர் புரியும் சிம்மம் கூட இப்போது தன் வாலை ஆட்டவில்லை!. சத்தியமான அம்பிகையைப் போல் எவர் சத்தியத்தைப் பாலிக்க முடியும்? ஏகாங்கியான எதிரியுடன் ஏகாங்கியான தான் மட்டுமே போர் புரிய வேண்டும் என்பதில் அத்தனை நீதியோடு நடந்து கொண்டாள்! துவந்த யுத்தம் தொடங்கியது!

அதற்குச் சமதையாக இன்னொன்றைக் கூறவொண்ணாத சமர்!

லோகங்களை எல்லாம் நடுக்குறச் செய்யும் பயங்கர அஸ்திர சஸ்திரங்கள் வருஷிக்கப்பட்டன.

இவள் எய்த ஆயுதங்களை அவன் தகர்த்தான். அவன் வீசிய கலங்களை இவள் தவிடு பொடியாக்கினாள் — எதிர்க் கலங்களை எய்வதால் மட்டுமின்றி, ஹுங்கார சப்தத்தாலேயே பல மகாஸ்திரங்களை லீலையாக வீழ்த்தினாள்.

விற்போரில் அவனைச் சளைக்கச் செய்தாள். வேற்போர் தொடங்கினான். அதிலும் அயர்வுறச் செய்தாள். வாளையும் ஒளி காந்தும் சதசந்திர கேடயத்தையும் உருவிக் கொண்டு தேவியை நோக்கித் தாவினான். அவன் துள்ளும்போதே சண்டிகை விடுத்த சரமாரி கத்தியையும் கேடயத்தையும் துண்டித்தது.

ரதத்தின் மீதிருந்து யுத்தத்தை அவன் தொடர, அவனது தேர்க்குதிரைகளையும் சாரதியையும் சம்ஹரித்தாள் தேவி.

இப்போது அவன் முற்றிலும் தன்னந் தனியனாகிவிட்டான்.

ஒரு காலத்தில் திரைலோக்ய ஆதிபத்தியம் பெற்றிருந்த தீரன், துணைக்கு ஒரு ஜீவனும் இல்லாத ஈன நிலையில் நிற்கிறான். தன்னை இந்த நிலைக்குத் தள்ளியவளைச் சம்மட்டியால் சுக்கு நூறாக நொறுக்கிப் புடைக்க ஆத்திரம் கொள்கிறான்! முத்கரத்தை வீசுகிறான் அவளது முக கமலம் நோக்கி.

முத்துச்சரமாக முறுவலிக்கும் அவளது மெத்துக் கரம் அநாயாசமாக வீசும் சரத்தில் முத்கரம் சுக்கல் சுக்கலாகிறது.

இனி இவனிடம் ஆயுதம் ஏதுமில்லை! பிற ஜீவர்களின் சகாயமில்லாததோடு, பிற கருவிகளின் பலமும் இல்லை!. சைதன்ய உலகம், ஜட உலகம் இரண்டிலும் வெளியேயிருந்து இவனுக்கு இம்மி உதவி இல்லை!

அப்போதும் அடங்கவில்லை அசுரத்தனம்.

முன்னிலும் ஆக்ரோசம் கொண்டு, உருமிப் பாய்ந்து, சர்வலோக-சர்வ ஜீவ ஆதார ஸ்தானமான அம்பிகையின் இதயத்தின் மீதே தன் முஷ்டியால் குத்தினான்! எப்படித்தான் முடிந்ததோ? எப்படித்தான் முடியவைத்தாளோ? இதய ஸ்தானத்தில் அவனால் அடியுண்ணும் அளவுக்குத் தன்னைத் தாழ்த்திக் கொண்டு அவனை உயர்த்தி விட்டாள்! அவனுடைய வீரத்துக்கு உலகில் எவ்வளவு புகழ் சேர்த்துத் தர முடியுமோ, அவ்வளவும் செய்யக் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டாள் போலிருக்கிறது!

அதற்கு 'சபாஷ்' போட்டுத் தட்டிக் கொடுப்பதுபோல், பதிலுக்கு இவள் அவனது நடு மார்பில் கரச்சாத்து அருளினாள். அவனுக்கு ஆயுதமில்லாததால் நியாயநாயகியும் ஆயுதத்தைச் செலுத்தாமல் கைப்போரே செய்தாள்.

அவன் தாக்கியதில் அவள் அசைந்து கொடுக்கவில்லை. அவள் தாக்கியதிலோ அவன் நிலை தடுமாறித் தரைமிசை வீழ்ந்தான். உடனே தடுமாற்றத்தைச் சமாளித்துக் கொண்டு மீண்டும் எழுந்தான்.

அடேயப்பா! எப்படிப்பட்ட எழுச்சி! அலாக்காக அம்பாளைத் தூக்கிக் கொண்டு நட்ட நடுவானில் நின்றான்! தர்ம சிம்மம் பெற்ற பாக்கியத்தை இந்த அதர்ம சும்பனுக்கு கணநேரம் தருகிறாளே! அவனுக்கும் தாயல்லவா?

இவனிடமிருந்து அவள் க்ஷணத்தே விடுபட்டாள்.

இருவரும் ஆகாய வெளியில் நின்று அதிசயப்போர் புரிந்தனர்.

ஆயுதமின்றி, கைகலந்து போர் செய்தனர்.

அதில்தான் எத்தனை எத்தனை சாகஸங்களைச் செய்தனர்! புதிது புதிதான இந்த யுத்த சதுரங்களைக் கண்டு தேவரும் சித்தரும் முனிவரும் விதிர்விதிர்த்தனர்.

அம்பிகை அவனை அள்ளிப்பிடித்தாள். அண்டகோளங்களை விண்வெளியில் சுழற்றுச் சுழற்று என்று பம்பரமாகச் சுழற்றி வரும் பராம்பிகை, சும்பனையும் தட்டாமாலை சுற்றிப் புவியில் வீசி எறிந்தாள்.

என்ன ஆச்சரியம்! அவன் இன்னமும் சாகாமல், முஷ்டியை உயர்த்திக்கொண்டே வேகமாகப் பாய்ந்தான், ''இதோடு சண்டிகையை சமாப்தியாக்கினேன்!''என்று கறுவியபடி.

அம்பிகை பார்த்தாள். இனியும் அறக்கருணை பிலிற்றுவது உகாது என உவந்தாள். தன் மனத்தை மரக்கட்டையாக — அல்ல, மரத்திலும் ஈரசாரம் இருக்கிறதே! உலோகமாக ஆக்கிக்கொள்ள முடிவு செய்தாள். கருணா சரீரமான தனது கரத்தின் நேர் ஸ்பரிசத்தில் ஈரம் போகாது என்பதால் கைகலந்து யுத்தம் செய்வதை மாற்றிக்கொண்டு, உலோகத்தில் செய்ததும், லோகத்திலுள்ள கோரத்தை எல்லாம் தாக்ஷிண்யமின்றி ஒழிப்பதுமான தீக்ஷ்ண்ய சூலத்தைத் தூக்கி நின்றாள்.

அவளுக்கு சமாப்தி என நினைத்தவனுக்கு இதோ சமாப்தி என்று தீர்மானித்தாள். ஸம்ஹாரம் என்பது போலவே ஸமாப்தி என்பதும் எத்தனை உயர்ந்த சொல்! அனைத்தும் 'ஸம'மாகி விடும் பிரம்ம நிலையை அடைவது ('ஆப்தம்') தான் ஸமாப்தி. முனிவர்கள் விஷயத்தில் எது ஸமாதியோ அதையே அசுரருக்கு ஸமாப்தியாக அருளுவாள், அனைவருக்கும் சமமாகத் தாயாயிருக்கும் தயாபரி.

பாய்ந்து வந்த பாபியின் அகன்ற மார்பில் மூவிலைச் சூலத்தைப் பாய்ச்சினாள் மூலமாசக்தி.

வீழ்ந்தே விட்டான் சும்பாசுரன்!

மோசப்பொய்க்கு மோட்ச பதவி கிட்டிவிட்டது!

அம்ருதத்துள் ஐக்கியமாயிற்று அந்ருதம்!*

அந்ருதம் என்பதே மாயை. அம்ருத சைதன்ய ஸ்வரூபிணி விஷ்ணுமாயையைக் கலந்து கொண்டு வந்து அந்ருதத்தை உட்கொண்டுவிட்டாள்!

இமாசலத்தில் சும்பாசுரன் மற்றொரு மாமலை என விழுந்தான். அப்பர்வதம் முழுவதும் அதிர்ந்தது! ஏன், இந்த பாரதத் துவீபமே நடுங்கியது! ஒன்றிலிருந்து ஒன்றுக்கு அதிர்வு பரவ, ஆழ்கடலும் கொந்தளித்தது, புவி முழுவதும் பதைத்தது!

அம்பாளின் கருணையால், அவளது வெற்றியிலேயே அசுர சக்திக்கும் ஒரு வெற்றியாக இந்த உற்பாதம் ஒரு முகூர்த்த காலம் சம்பவித்தது.

அது முடிந்தவுடன் சொல்லி சாத்தியமில்லாத சாந்தமும் சௌக்கியமும் சராசரம் முழுவதும் சாந்நித்தியம் கொண்டன.

தேவர், மனிதர், யக்ஷர், பசு, பட்சி, கிருமி, தாவரம் உள்பட சகல ஜீவராசிகளுக்கும் இனம் தெரியாத இன்ப அமைதி உண்டாயிற்று.

முன்பு காணப்பட்ட வால் நட்சத்திரம் போன்ற அப சகுனச் சின்னங்கள் யாவும் மறைந்தன.

---

* 'ருதம்' என்பது சத்தியம் என்றே பொதுவாக வழங்கப்பட்டாலும், குறிப்பாக அது சத்தியத்தின் அழகு என்னும் ஒழுங்கை, அல்லது ஒழுங்கு எனும் அழகையே காட்டுவது. அந்ருதம் என்பது இந்த ஒழுங்குக்கு, தர்மத்துக்கு விரோதமானது. அதாவது இதை அப்பட்ட பொய் என்பதைவிட மோசம், வஞ்சனை, போலி என்றே சொல்லலாம்.

ஆகாயமானது தெள்ளிய நீலநிர்மலமாக நெஞ்சை அள்ளிக் கொண்டு விரிந்து கிடந்தது.

ஆறுகள் யாவும் சீற்றம் தணிந்து அடங்கிப் பாய்ந்தன.

வேள்விக்கூடங்களில் புனித அக்னி 'தானாகவே ஜொலித்துக் கொண்டு வலம் சுழித்து வளர்ந்தது.

தேவர்களின் ஆனந்தம் பொங்கிப் பொங்கி ஊற்றெடுத்துக் கொண்டேயிருந்தது. அந்த ஆனந்தத்தில் ஆர்ப்பைவிட அடக்க அமைதியே உள்நின்று இலகியது.

சாந்தத்தோடு கந்தர்வகணங்கள் மிருது மிருதுவாக கானம் செய்தனர். சிலர் குரலிசையாகப் பாடினர். சிலர் வாத்திய இசை எழுப்பினர்.

அப்சரஸ்கள் அந்த கான இன்பத்தைக் கண் கொண்டு காண நாட்டியமாக்கித் தந்தனர்.

மந்த மாருதம் வீசிற்று.

கதிரவனும் மதியம் போலாக, குளிர்ந்த ஒளி குவலயத்தைச் சூழ்ந்தது.

திசை அனைத்தையும் பிரணவநாதம் சாந்த அணைப்பில் தழுவிக் கொண்டது!

6. திரும்பத் திரும்பத் திரு அவதாரம்!

மது-கைடப வதத்தில் பிரமர் மகிழ்ந்தார் என்றோம்; மஹிஷசம்ஹாரத்தில் தேவர் மனம் குளிர்ந்தனர் என்று பார்த்தோம்; அதற்கெல்லாம் மேலாக இப்போது சும்பன் அழிந்ததில் அவர்கள் அடைந்த ஆனந்தமோ கரை முட்டி, நகர இடமில்லாமல் நிறைந்த நிறைவாக இருந்தது. மது-கைடபர் இருவர் மட்டும் இம்சை செய்தனர். மகிஷன் பெரும் படையோடு வாதை தந்தான் என்றாலும் அவனது சேனாபதி, தளபதி ஆகியோரை அவனுக்கு ஈடாகச் சொல்ல முடியாது. சும்பன் சமாசாரம் இப்படி இல்லை. நிசும்பன், ரக்தபீஜன், சண்டன், முண்டன் போல் அவன் 'ஜமா' சேர்த்துக்கொண்டிருந்த ஒவ்வொருவரும் மகா கோர வீரம் படைத்தவர். தனித்து நின்றே ஒவ்வொருவரும் முவ்வுலகாட்சி எய்தக்கூடியவர். இத்தனை கோரக் கும்பலும் 'கோரஸாக' தேவரை வாட்டி வறுத்து வருத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். இப்போது இத்தனை பேரும் கூண்டோடு கைலாசம் — அல்லது அம்பாளின் திவ்விய லோகமான மணித்வீபத்துக்கு; அல்லது அவளின் உள்ளான ஆத்மசாந்திக்குள் — சென்று விட்டதால் தேவருக்கு ஏற்பட்ட நிம்மதி ஈடிணையில்லாததாக இருந்தது. இம்முறை காளி போலவும், மகாலக்ஷ்மி போலவும் இன்றி மகா சரஸ்வதியானவள் சாமுண்டேசுவரி, சிவதூதி, ஸப்த மாதாக்கள் ஆகியோரை 'ஜமா' சேர்த்துக்கொண்டே காரியத்தை முடித்திருக்கிறாள்.

இதன் தத்வார்த்தம் என்ன? துக்கமும், அஞ்ஞானமும் ஓரளவேனும் 'அசல்' வஸ்துக்கள். அதாவது தாங்கள் உள்ளளவும் அவை தங்களை மெய்யாகவே எண்ணிவரும். பொய்யின் விஷயம் இப்படி இல்லை. அதாவது அதற்கே நன்றாகத் தெரியும், தான் இல்லாத வஸ்து என்று. ஆனால் இருக்கிறது போல பலவற்றை அது படைத்துத் தன்னைக் காத்துக் கொள்கிறது. போல இருப்பது போலி. அசலாக ஒன்றுதான் இருக்கமுடியும். போலிகளோ எத்தனை வேண்டுமானாலும் இருக்கலாம். இதனால்தான் சும்பப்பிரபஞ்சம் இத்தனை பக்கபலம் கொண்டதாக இருந்தது.

விதவிதமான போலிகளை வதைக்க விதவிதமான ரூபங்களை சத்தியமும் எடுத்தது. இவை ஒன்றே என்று இறுதியில் உறுதியாய் காட்டிற்று.

தேவர்கள் சண்டிகா பரமேசுவரிக்கு நன்றியஞ்சலி செலுத்தத் திரண்டனர். இப்போது ஆனந்தம் கட்டுக் கடங்காவிட்டாலும் அவர்கள் பக்தியில் கட்டுப்பட்டுக் கிடந்தார்கள். சென்ற அத்தியாய முடிவில் கூறியபடி அவர்களது ஆனந்த உற்சாகத்திலும் அமைதி உள்நிறைந்திருந்தது. இவ்வடக்கம் காரணமாகவே இப்போது அவர்கள் தேவிக்குக் கிருதக்ஞதை தெரிவிக்க முற்பட்டபோதுகூட, முந்திரிக்கொட்டை மாதிரி வரிசையில் முன் நிற்க எவரும் துணியவில்லை.

'தேவி பராசக்தியின் முன்னால் நிற்க நமக்கு என்ன தகுதி?' என்று ஒவ்வொருத்தருக்கும் ஒரு கௌரவமான ஒதுக்க புத்தி வந்தது. 'நீ முன் போ, நீ முன் போ' என்று ஒருத்தரை யொருத்தர் உந்தினர். முடிவாகச் சீட்டு அக்கினிக்குத்தான் விழுந்தது. ''அக்கினியே! எங்கள் அத்தனைபேருக்கும் யாகங்களில் அவிர்பாகம் வாங்கி வருகிறவன் நீதானே? இப்போது அம்பாள் சும்பாதியரை சம்ஹரித்ததால் செய்த ஆசீர்வாதம் போதாது என்று போர்க்கோலம்' ஒழித்த ஸௌம்ய தரிசன ஆசீர்வாதம், வாக்கினாலே வெளிவரும் ஆசீர்வாதம் இவற்றையும் வழங்கத் திருஉளம் பற்றியிருக்கிறாள். அவிர்பாகத்தை ஏற்று வரும் நீயே, ஆசீர்வாதத்தையும் முன் நின்று ஏற்றுப் பின்னே நிற்கும் எங்களுக்குப் பாய்ச்சுவாயாக!'' என்று இதர தேவர்கள் கூற அக்னி மறுக்க வொண்ணாமல் முன் நிற்க வேண்டியதாயிற்று.

தேவர்கள் அம்பாளிடம் சென்றபோது அவர்கள் இருந்த அழகை முனிவர் மேதஸ், ''விகாசி-வக்த்ராப்ஜ-விகாசிதாசா:'' என்றதாக மான்மியம் கூறும். இத்தனை சுருக்கமாக வேறு ஒரு மொழியில் அதன் முழுப்பொருள் தொனிக்குமாறு பெயர்த்துச் சொல்வது முடியாத காரியம்தான். சும்பன் வாட்டிய வாதையில் கூம்பியிருந்த அமரர்களின் முக கமலங்கள் இப்போதுதான் அம்மாவின் அநுக்கிரக ஒளியில் மலர்ந்தன. மலர்ச்சியிலேயே ஓர் ஒளி உண்டாகிவிட்டது. அந்த முக ஒளியால், இதுகாறும் இருள் மூடிக்கிடந்த எண்டிசைகளையும் அமரர்கள் ஒளியுறச் செய்தனராம்!

அருள் சொட்டச் சொட்ட அமர்ந்திருந்த அம்பிகையை அன்பு சொட்டச் சொட்டத் துதித்தனர்.

''தேவீ! அன்று சரண் என்று வந்தோம். அரணாய் இருந்து இன்னல் கடிந்து இன்னருள் சுரந்தாய். இன்று நீ மலர்ந்திருப்பது போல் என்றும் மலர்ந்தருள்வாய். அகில ஜகத்துக்கும் அன்னையே! அன்பைத் தவிர வேறெதுவும் அற்ற தெளிவு நிலையாம் உன் பிரஸன்ன கோலத்தை எந்நாளும் பிரஸாதமாக வழங்குவாய்! விசுவம் முழுவதையும் இப்படிக் காப்பாற்றுவாய்! அதன் அன்னையாகவும், அதனை ஆட்சிபுரியும் ஈசுவரியாகவும் உள்ள உனக்கு நாங்கள் சொல்ல வேண்டுமா, என்ன?

''அனைத்தையும் நிலம் தாங்குகிறது. நிலத்தையும் தாங்கும் நலமாக, ஸர்வ ஆதாரமாக இருப்பவள் நீயே! அழுத்தமான நிலத்துள் மென்மையாகப் பொசிகிறது நீர். அந்த நீரே தாவரவர்க்கம், உயிர்வர்க்கம் அனைத்துள்ளும் ஜீவசாரமாக இருக்கிறது. வாழ்வுக்கு உயிர்நாடியாக இருக்கிற நீராக ஒவ்வொருவருக்குள்ளும் புகுந்து திருப்தி தருகிறவள் நீயேதான்.

''எங்குமாகப் பரந்து விரிந்திருக்கும் வைஷ்ணவீ சக்தி நீ. எல்லையற்ற ஆற்றல் பெற்ற இவ்வைஷ்ணவீ சக்தியாக உள்ள நீ, மேலான மாயையும் ஆகி விசுவமனைத்துக்கும் வித்தாயினை. உன்னையன்றி அந்த விசுவம் வேறு என்ற பொய் மயக்கத்தில் அனைவரையும் ஆழ்த்தி விளையாடுகிறாய். இதிலிருந்து விடுபட்டு முக்தி அடைவதும் உன் அருள் பெற்றாலே கைகூடுவதாகும்.

''மாய உலகிலும் தெய்விக அழகுகளாக விசேஷப் பரிணாமம் கொள்கிறாய். அனைத்து அறிவுகளையும் கலைகளையும் உன் அம்சத்திலிருந்து தோற்றுவிக்கிறாய். எல்லாமாக உள்ள நீ விசேஷமாகப் பெண் குலத்தின் பொலிவாக இலகுகிறாய். அன்னையே! உன்னை அன்னை யென்றும் உலகைக் குழந்தையென்றும் சொன்னால் மட்டும் போதுமா? உலகு முழுவதும் உன்னாலேயே அல்லவா பூரித்துத் துளும்புகிறது? இங்கும் அங்குமாக, இங்கிலேயே அங்காக உள்ள உன் விசித்திரத்தை எப்படி வாக்கால் துதிப்போம்?

''எல்லாமாக உள்ள ஒன்றை, தன்னிலேயே இம்மை மறுமை என்கிற பேதங்களிருப்பதாகக் காட்டிக் கொள்கிற ஒன்றை, இம்மையின்பம் மறுமையின்பம் இரண்டும் தருகிற ஒன்றை, இப்படியாக இன்னதென்று இனம் வகுக்க முடியாமல் இருக்கிற உன்னை உள்ளபடித் துதிக்க எத்தனை உத்தமச் சொல்லும் போதுமானதாகுமா?

''எல்லா மக்களின் இதயத்துள்ளும், அறிவுள்ளும் நிலை கொண்டவள் நீயே. இன்ப சொர்க்கத்தையும் பேரின்ப மோக்ஷத்தையும் தந்தருளும் தேவீ! ஜீவராசிகள் யாவும் இறுதியில் அடையும் இருப்பிடமான நாராயண சக்தியாம் நாராயணீ! உனக்கு நமஸ்காரம்.

''கலை, காஷ்டை* முதலிய கால அளவைகளாக இருந்து கொண்டு, சகல வஸ்துக்களையும் காலப்போக்கில் மாற்றிக் கொண்டிருப்பவள் நீ. உரு மாற்றத்தோடு நில்லாமல் ஒருநாள் அந்த உருவமேயில்லாமற் போய்விடுவதைக் காலன் செயல் என்பர். ஆனால் நீயேதான் உண்மையில் காலனைக் கருவியாகக் கொண்டு இதையும் செய்யும் காலி (காளி). உலகனைத்தையும் அழிக்கும் சக்தியாம் நாராயணீ, உனக்கு வந்தனம்.

''மங்கள வஸ்து அனைத்தினும் மங்களமாக விளங்கும் சுமங்கலியே! அன்பே வடிவாம் சிவையே! விரும்பிய பொருள் எதுவாயினும் அதனை — அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருஷார்த்தங்களை அடைவித்துத் தரும் அருளே! சரண்புகுவதற்குரியவளே! திரிமூர்த்தியருக்கும் தாயான, திரயீ எனப்படும் மூன்று வேதங்களுக்கும் **தாயான, திரிநேத்ர தாரிணியே! உண்மையின் வெண்மையாம் கௌரியே! நாரணியே, உனக்கு நமஸ்காரம்.

''ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகியவற்றில் பூரண ஆறறல் படைத்தவளே! என்றும் உள்ளவளே! சகல குணங்களும் சாரும் ஸகுண பிரம்மமே! நாராயணீ! உனக்கு நமஸ்காரம்.

''சரணாகதி செய்த எளியோரையும், துன்புற்றோரையும் வாழ்விப்பதையே தொழிலாகக் கொண்டவளே! அனைவர் துயரும் துடைக்கும் நாரணீ, நினக்கு நமஸ்காரம்!.

'ப்ரம்மாணி ரூபம் தரித்து ஹம்ஸம் பூட்டிய விமானத்தே வீற்றிருந்து தர்ப்பைப் புல்லால் நீரைத் தெளிப்பவளே! தேவி நாராயணி, உனக்கு வந்தனம்.

''மாஹேசுவரி சொரூபம் கொண்டு திரிசூலமும், பிறை மதியும், அரவமும் தரித்து, ரிஷப வாகனத்தில் எழுந்தருளும் நாராயணி, உனக்கு அஞ்சலி.

---

* க்ஷணம் என்பது ஸெகன்டில் 4/5 பங்காகும். 2 க்ஷணம் -1 லவம்; 2 லவம் = 1 நிமிஷம். (மினிட் வேறு, நிமிஷம் வேறு. கண் கொட்டும் நாழியே நிமிஷம்) 30 நிமிஷம் = 1 கலா; 18 நிமிஷம் = 1 காஷ்டா.

** அதர்வத்தை நீக்கி ரிக், யஜுஸ், ஸாமவேதங்களைத் 'திரயி' என்பர்.

''மயில் வாஹனமீது கோழிக் கொடி சூழ, மகா சக்தியாயுத்தைத் தாங்கி, குமாரஸ்வாமியின் சக்தியான பாபமற்ற கௌமாரியாக விளங்குகிற நாரணீ! உனக்கு வணக்கம்.

''வைஷ்ணவி ரூபிணியாக சங்கும், சக்கரமும், கதையும், சார்ங்க வில்லும் பரம ஆயுதங்களாகக் கொண்ட நாராயணீ! உனக்கு நமஸ்காரம்! அருள் புரிவாயாக!

''வராஹ வடிவு கொண்டு பெரிய சக்கரத்தைத் தாங்கியவளும், பூதலத்தைத் தெற்றிப் பல்லால் எற்றித் தூக்கியவளுமான மங்களமய நாரணீ! நினக்கு நமஸ்காரம்.

''நரஸிம்ம ரூபத்தின் உக்கிரத்தினால் அசுரர்களை மாய்க்க முயற்சி மேற்கொண்டு, மூவுலகையும் புரக்கத் திரு உளம் கொண்ட நாராயணி! உனக்கு வந்தனம்.

''விருத்திரனைக் கொன்ற இந்திர சக்தியாகிக் கிரீடமும், வஜ்ராயுதமும், ஜொலிக்கும் நயனம் ஆயிரமும் கொண்ட நாராயணி! உனக்கு அஞ்சலி.

''சிவதூதியாகி தைத்யர்களின் மகாபலத்தை ஹதாஹதம் செய்து, கோர ரூபம் கொண்டு, கொடூர சப்தம் எழுப்பிய நாராயணி! உனக்கு நமஸ்காரம்.

''தெற்றிப் பல் திருவாயும் தலைமாலைத் திருவாபரணமும் கொண்ட சாமுண்டேசுவரியாகி முண்டனை சம்ஹரித்த நாராயணி! நினக்கு நமஸ்காரம்.

''லக்ஷ்மியாக அழகுகளில் வெளிப்படுபவளே! ஹ்ரீ எனும் லஜ்ஜையாக ஒளிந்திருப்பவளே! மஹாவித்யா ஸ்வரூபிணி! சிரத்தை வடிவினளே! ஊட்டமளிக்கும் ஸ்வதே! நிலைத்து நிற்பவளே! யாவும் ஒடுங்கியபின் எஞ்சி நிற்கும் இரவே! மாயமாகிய மஹா அவித்யா ஸ்வரூபிணி! நாராயணி! நினக்கு நமஸ்காரம்.

''மேதையே! ஸத்வகுண ஸரஸ்வதி! செம்மஞ்சட் சிவமாம் பப்ருவின் சக்தியான ராஜஸகுண பாப்ரவியே! தமோ ரூபிணியான மாகாளியாம் தாமஸியே! இயற்கை விதிகளாம் நியதியின் வடிவே! ஈசுவரியே! நாரணீ! நலம் புரிவை! நமஸ்காரம்.

''பலப் பலவாக உன் வடிவங்களை வருணித்தாலும் முடிவுண்டா? சுருங்கச் சொன்னோம்: சகலமாகவும் இருப்பவளே, சகலத்தையும் அடக்கி ஆள்பவளே, சகல

சக்திகளும் ஒன்றாய்த் திரண்டவளே! தேவி துர்கே! உன்னை நமஸ்கரித்தோம். எம்மை எந்நாளும் பயங்களினின்று காப்பாய்.

''சாந்தக் கனிவோடு திகழும் இந்த உன் ஸௌம்யத் திருமுகமும், அதில் ஒளிரும் மூன்று திருநயனங்களும் எப்போதும் எங்கள் நினைவிலிருக்கட்டும்! எங்களை எல்லாவித அச்சங்களினின்றும் ரக்ஷிக்கட்டும்! அம்மா அருள்வாய், காத்தருளும் காத்யாயனீ! உனக்கு அஞ்சலி.

''அச்சமூட்டும் உக்ர ஜ்வாலையுடையதும், மீதமின்றி அசுரரை அழிப்பதுமான உனது மூவிலைச் சூலம் எங்களை அச்சத்தினின்று காக்குமாக! மங்களமயமான பத்ரகாளி! உனக்கு நமஸ்காரம்.

''தன் ஒலியால் உலகை நிரப்பி அசுர வீரியத்தை அழிக்கும் உன் மணியானது, குழந்தைகளைத் தாய் காப்பது போல் எங்களைப் பாபத்தில் விழாமல் பரிந்து காக்கட்டும்!

''அவுணரின் ரத்தமும் கொழுப்பும் சேறாக மெழுகியும் ஒளி குன்றாது ஜொலிக்கின்ற உனது ச்க்தியாயுதம் எமக்குச் சுபமே செய்வதாக! சண்டிகே, உனை வணங்கினோம்.

''நீ திருப்தியுற்றால் உடல், உள்ளம் இவற்றைப் பற்றிய சகல ரோகங்களையும் அறவே அழிக்கிறாய்; விரும்பிக் கேட்கிற எல்லா இச்சைகளையும் வாரி வழங்குகிறாய். உனை அண்டியோருக்கு இடர்ப்பாடே இல்லை. உனை எவர் அண்டுகின்றனரோ, அவர்களே பிறர் தம்மை அண்டுதற்கு உரியராகி விடுகின்றனரே!

''தேவீ! உன் ஓர் உருவையே பல்லுருவாக்கி இப்போது நீ அறத்தினை மறந்த அரக்கரை வேரறுத்தனையே, ஆஹா! இதுபோல் வேறு யார்தான் அற்புதம் இயற்ற இயலும்?

''சகல வித்தைகளிலும், சாஸ்திரங்களிலும், விவேக விளக்காம் வேதமெனும் ஆதி வாக்கிலும் லட்சியமாகக் கூறப்படுவது உனையன்றி யாரை? ஞான லட்சியமாம் அந்த உனையன்றி வேறு யார்தான் இவ்வுலகை மமதைப் படுகுழியிலும் தள்ளி அஞ்ஞான அந்தகாரத்தில் சுழற்றிச் சுழற்றிச் சூது செய்வது?

''ஞானப் பெரு நலனாகவும், அஞ்ஞானப் பெருந்தீமை யாகவும் உள்ள நீயேதான் இந்த அஞ்ஞானத்திலும் அன்பின்

அருட் பொழிவைக் காட்டுகிறாய்! அரக்கரும், அரவமும், மற்றும் எல்லாவித சத்துருக்களும், கொள்ளையரும் உள்ள இடங்களில் காப்புச் சக்தியாக வந்து நிற்கிறாய். நாற்புறமும் காட்டுத் தீ பரவியபோது வழி காட்டுகிறாய். எப்புறமும் கொந்தளிக்கும் நடுக்கடலிடை வந்து காப்பளிக்கிறாய்!

''விசுவநாதரும் வணங்கும் விசுவநாயகி! விசுவபாலகி! விசுவத்தின் உள்ளுயிர் நீயே! அதை வெளியிருந்து தாங்கும் சக்தியும் நீயே! உன்னை பக்தியால் உள்ளும் புறமும் தழைந்து குழைந்து வணங்குவோரை விசுவமே ஆசிரயிக்கும் உயர்நிலைக்கு உய்விக்கிறாய்.

''தேவீ! கருணை கூர்வாய்! இப்போது வெகு விரைவில் அசுரரை வதைத்து எமைக் காத்த இவ்வண்ணமே இனி எப்போதும் சத்ரு பயத்தினின்று ரட்சிப்பாயாக! உள்சத்ருவான பாபத்தைப் பறக்கடிப்பாய்! அப் பாபம் வெளியே தீய செயல்களாக வர, இத் தீமைகளின் விளைவாக இயற்கையும் சீறி உலகங்களில் உற்பாதங்கள் தோன்றுகின்றன. தேவீ, தீமைகளையும் உற்பாதங்களையும் தீய்த்தொழிப்பாயாக! உலகெங்கிலும் பாபம் அடங்கட்டும், தீமை தணியட்டும்.

''சகலப் பிரபஞ்சங்களின் இன்னல்களையும் நீக்கும் தேவீ! மூவுலகவாசிகளாலும் வணங்கப்படுபவளே! இன்று வந்து வணங்கிய எம்மிடம் அன்பில் தெளிந்து அலர்வாயாக! உலகம் யாவற்றுக்கும் அருள் கூரும் வரதாயகியாக ஆவாயாக!''

தங்களுக்காக மட்டும் வேண்டிக்கொள்ளும் தன்மை மாறி, லோகக்ஷேமத்தைக் கோரும் பாங்கு தேவருக்கு உறுதிப்பட்டு விட்டது. இதில் ஸர்வேசுவரி உளம் குளிர்ந்தாள்.

''வரதாயகியாகவே நான் இருக்கிறேன்'' என்று சத்தியம் செய்து தருவதுபோல் பளிச்சென்று கூறினாள் பரமேசுவரி.

''சுர கணங்களே! லோகத்துக்கு உபகாரமாக நீங்கள் எந்த வரத்தை மனமார சிந்தித்துக் கோரினாலும் அதனைத் தந்தருளுகிறேன்'' என்று மகிழ்வுடன் நிறைந்த வாக்கைக் கூறியருளினாள் வரத சோதரி.

சாக்ஷாத் பரப்பிரம்மசக்தி இப்படி வாக்குப் பிரமாணம் தந்தவுடன் வானவரின் பண்பு வானளாவ வளர்ந்தது.

''அகிலாண்டேசுவரி! மூவுலகினரும் உறும் எல்லா வாதைகளையும் முன்னின்று அழித்தருள்வாய். இப்போது

எங்கள் துன்பத்தை எப்படித் துடித்து வந்து தீர்த்தனையோ, அப்படியே அனைவர் துன்பத்தையும் துடைப்பாயாக! எங்களுக்கு சத்துருக்கள் தோன்றுங்கால் அவர்களைச் சம்ஹரித்திடுவாயாக!'' என்று வரம் கேட்டனர்.

அம்பாள் ''ஆஹா'' என்று சிரக்கம்பம் செய்து ஆமோதித்தாள்.

முன்னரும் கூடத்தான் இப்படியே மகிஷவதத்துக்குப் பின் தேவர்கள் வேண்ட எப்போது பேராபத்து ஏற்பட்டாலும் அப்போது அதனை அகற்றுவதாக அருளினாள். மறுபடியும் அப்படியே ஏதோ நாக்கு நுனியால் சொன்னது போல் விட்டு விடக் கூடாது என்று அம்பிகை எண்ணினாள் போலும். அன்பு நிரம்பி வழியும் அமரக் குழந்தைகளுக்குத் தன்னிடம் பிடிப்பு குறையவே கூடாது என்று ஒரு தாய்மை வெறியே அம்பாளுக்கு உண்டாயிற்றோ என்னவோ?

''துயர்வரும் போதெல்லாம் வந்து இடர் கடிந்து உயிர் காப்பேன், உயர்வு அளிப்பேன்'' என்று பொதுவாகச் சொல்வதோடு திருப்தியுறாமல், இனி எப்போதெப் போதெல்லாம் தான் லோக க்ஷேமார்த்தம் திருவவதரிக்கப் போகிறோம் என்பதையும் இப்போதே விவரித்துக் கூறத்தொடங்கி விட்டாள். ஒளிந்திருந்து விளையாடுவதே அவளது இயற்கை. அவள் அநுக்கிரகம் செய்கிற போதே கூடத் தன் அருள் என்று வெளிப்படுத்தாமல், இயற்கையாக நடந்ததோ என்று எண்ணச் செய்வதே பெரும்பாலும் அவள் வழக்கம். இதனால்தான் முன்பு அவளை, 'ஹ்ரீ' என்றும், 'லஜ்ஜை' என்றும் பார்த்தோம். ஆனால் இப்போதோ பல யுகங்களுக்கு, பல மன்வந்தரங்களுக்குப் பிற்பாடு, தான்செய்யப் போகிற அவதாரங்களைக்கூட மிகமிக முன்கூட்டியே சொல்லிவிடுகிறாள்! தற்பெருமையில் பறைசாற்றினாள் என்றா அர்த்தம்? அல்ல. அருள் வெறியின் ஆவேசத்தில், 'சொந்தக் குழந்தைகளிடம் என்ன லஜ்ஜை?' என்ற தாய்மைக் கனிவில் தான் எப்படியெல்லாம் அவர்களை ரக்ஷிக்கப் போகிறோம் என்ற எதிர்கால லீலா மர்மத்தையும் இப்போதே அவிழ்த்து விட்டாள்.

நாடகத்தின் முடிவு முன்னரே தெரிந்துவிட்டால் அது ருசிக்காது. மகாகவியான அம்பாள் உலக நாடகத்தை ருசி குன்றாமல் மூடி மறைத்தே நடத்துகிறவள்தான். அந்தக் காவிய எழிலைக்கூட இங்கே தாய்மை அன்பில் தியாகம் செய்து விட்டுப் பேசுகிறாள்.

''அமரர்காள்! உங்களையும் உலகையும் கொடுமைப்படுத்தும் அசுரர் தோன்றி, அவர்கள் கை மிகவும் வலுத்து ஓங்கும் போதெல்லாம் நான் உற்பவித்து அந்த உற்பாதத்தை நிபாதம் செய்வேன்.

''வைவஸ்வத மன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் சும்பன், நிசும்பன் என்ற இதே பெயர்களைக் கொண்ட வேறு இரு மகா அசுரர்கள் தோன்றப்போகிறார்கள். அப்போது நான் நந்தகோபர் கிருகத்தில் யசோதையின் கர்ப்பத்தில் உற்பவித்து இவ்விரு அசுரரை ஹதம் செய்வேன். பிறகு விந்தியாசல க்ஷேத்திரத்தில் குடிகொண்டு விந்தியவாஸினி எனப் பெயர் பெறுவேன்.''

தற்போது நாம் இருப்பது வைவஸ்வத மன்வந்தரத்தின் இருபத்தெட்டாவது சதுர்யுகம்தான். எனவே இதில் நந்தகோபர் வீட்டில் யசோதை கர்ப்பத்தில் பிறந்தவள் என்றால் ஸ்ரீமத் விஷ்ணு பாகவதம் கூறுவதுபோல் தேவகிக்குப் பிறந்த ஸ்ரீ பரமாத்மாவின் இடத்தில் வசுதேவரால் மாற்றி வைக்கப்பட்ட யசோதாபுத்திரிதான் இவள். இக் குழந்தையைக் கம்சன் புவியில் அறைந்து கொல்ல யத்தனித்தபோது அவள் நடுவானில் விஷ்ணுமாயையாகத் திரு உருவம் தாங்கி அவனை எச்சரித்து மறைந்தாள் என்பது ஸ்ரீமத் விஷ்ணு பாகவத வரலாறு. விஷ்ணுமாயையான அவள் வேறெங்கோ மறையவில்லை; விஷ்ணுவேயான கண்ண பெருமானுள்தான் கரைந்தாள் என்று மேற்காணும் சண்டீ வாக்கியத்திலிருந்து பெறுகிறோம். சும்ப, நிசும்பர் என்பது கம்சனையும், துரியோதனனையும் குறிப்பதாக இருக்கலாம். வைகுண்ட துவாரபாலகரான ஜய விஜயர்களே மீள மீள இரண்யாக்ஷ-இரண்யகசிபுவாகவும், ராவண-கும்பகர்ணராகவும், சிசுபால-தந்த வக்த்ரராகவும் பிறந்ததுபோல் மகாசரஸ்வதியால் வதையுண்ட சும்ப-நிசும்பரே கம்ஸ-துரியோதனராகப் பிறந்தனர் என்று கொள்வதற்கு இடமில்லை. ஏனெனில் அம்பிகையால் வதையுண்ட அசுரருக்கு அப்போதே ஸாயுஜ்யம் கிட்டியதால் அவர்கள் மீண்டும் ஜன்மம் எடுப்பதற்கில்லை. இதற்கு இசைவாக இங்கு தேவி 'வேறு (அன்யா:) சும்ப-நிசும்பர்' என்றே தெளிவாகச் சொல்கிறாள். கம்ஸ, துரியோதனருக்கு இப்படிப் பெயர் வழங்கியதாக எங்கும் வியக்தமாகத் தெரியவில்லை. என்றாலும் கண்ணனின் மூலம் அவர்களை ஆதிபராசக்தி மாய்த்த மாகருணை அனைவரும் அறிந்ததே. கண்ணன் கம்ஸனையே நேரடியாகக் கொன்றான் எனினும், பாண்டவரால் கொல்லப்பட்ட துரியோதனாதியரையும் உண்மையில் வதைத்தது தானே (''மயைவைதே நிஹதா: பூர்வம்

ஏவ''-கீதை) என்றான். அர்ஜுனனும் பிரத்தியட்சமாகத் துரியோதனாதியர் பகவானுடைய சம்ஹார மூர்த்தத்தின் திருவாயிற் புகுந்து அரைபட்டு அழிந்ததாகக் கண்டான். பாண்டவரைக் கருவி மாத்திரமாகக் கண்ணன் ஆ பக்கினான் எனில், கண்ணனையும் இயக்கிய ஆதாரசக்தியாக இருந்தவள் அவனது மாயா விலாஸினிதானே? எனவே அம்பிகைக்கு இந்தப் புகழைத் தருவதில் பிழை சிறிதும் இல்லை. கண்ணன் தன்னை 'காலோஸ்மி' என்று சொல்லிக் கொண்டது, தானே காளி என்பதைத்தான்.

கண்ணனாகப் பிறக்கு முன்பே நாராயணர் தம்முடைய யோக மாயையாகிய இவளை அழைத்து அவதரிக்கச் சொல்வதை அவரது சரிதமான விஷ்ணு பாகவதமே அழகுறக் கூறும். முதலில் அவளைக் கண்ணனின் அண்ணனாகப் பிறக்கவிருந்த பலராம கர்ப்பத்தைத் தேவகியின் வயிற்றிலிருந்து எடுத்துச் சென்று அவளது சக்களத்தியான ரோஹிணியின் வயிற்றில் சேர்க்கும் மாயையைப் புரியச் சொல்கிறார். பிறகு, தான் பிறக்கையில் அவளும் யசோதா வயிற்றில் நந்தகோபர் மகளாகப் பிறந்து, சிறையில் பிறந்த தன் இடத்திற்கு மாறி, தன்னைக் கம்ஸன் கொல்லாமற் தப்புவிக்க உதவுமாறு சொல்கிறார். ஆக, திருமாலின் இரு அவதாரங்களையே இவள் ஒரு விதத்தில் காத்துக் கொடுத்தவளாகிறாள்! அவளை, ''வரங்களுக்கு ஈச்வரி, வரங்களை வழங்குபவளும்'' எனத் திருமால் புகழ்கிறார். ''உன்னை மக்கள் பலவித உபசாரங்களுடனும் காணிக்கைகளுடனும் பூஜிப்பர். துர்க்கா, பத்ரகாளி, விஜயா, வைஷ்ணவி, குமுதா, சண்டிகா, கிருஷ்ணா, மாதவி, கன்யகா (கன்யாகுமரி), மாயா, நாராயணி, ஈசானி, சாரதா, அம்பிகா என்றெல்லாம் கூறி ஆராதிப்பர்'' என்கிறார். நவராத்திரி தேவியரான அனைவரையும், வேறு பல தேவியரையுங்கூட நாம் காணும் நந்தபுத்திரியிலேயே திருமால் அவரது சரித பாகவதத் திலேயே இழைத்துவிடுகிறார்!

அம்பாள் தொடருகிறாள்: ''மற்றுமொரு சமயத்தில் பிருதிவியில் வைப்ரசித்தர்கள் என்ற தானவர்கள் தோன்றிக் கொடுங்கோல் புரிவர். அப்போது நான் மிகவும் ரௌத்ராகாரமான உருவம் கொண்டு உற்பவிப்பேன். அவ்வரக்கர்களை மென்று தின்றே மகிழ்வேன். அப்போது ரத்தக்கறை படிந்து என் பற்கள் மாதுளம் பூக்கள் போலாகும். சம்ஹார அநுக்கிரகத்தை உலகுக்கு எப்போதும் நினைவூட்டும் பொருட்டு இவ்வாறு சிவந்த பற்களுடன் விளங்கப்போகும் என்னை வானவரும், மானவரும் 'ரக்ததந்திகா' என்றே அழைப்பார்கள்.''

கொடுமையிலும் கொடுமையாக மாமிசபட்சணம் செய்வதை மிருதுவிலும் மிருதுவான மாதுளம் பூவுடன் இணைத்துப்

பேசுகிறாள்! ரத்தபானமே தாம்பூல தாரணமாகிறது! அவளது பயங்கரமும் ஸௌம்யமும் நமக்குப் புரியாத விந்தைகள்தாம்!

விப்ரசித்தி என்பவனுக்கும் ஸிம்ஹிகை என்பாளுக்கும் பதின் மூன்று அரக்கர்கள் பிறந்தனர். இவர்களைத் தந்தையின் பெயர் கொண்டு வைப்ரசித்தர் என்றும், தாயின் பெயர் கொண்டு ஸைம்ஹிகேயர் என்றும் இருவிதத்தில் குறிப்பிடுவதுண்டு. விப்ரசித்தி என்றால் பிராம்மணப் பண்பு என்றும், ஸிம்ஹிகை என்றால் ஹிம்ஸை அல்லது வீரத்தைக் கொண்ட க்ஷத்திரியத் தன்மை என்றும் கொள்ளலாம். பிராம்மணர் ஹிம்ஸையறியாமல், செந்தண்மை பூண்ட அந்தணராகவே ஒழுக வேண்டும். உலக நடப்பில் கொடுமை தவிர்க்க முடியாமல் இருப்பதால் ஹிம்சையையும் ஒரு தியாகமாக, தர்மமாகச் செய்ய வீரக்ஷத்திரியர் தனியாக இருக்க வேண்டும். இந்த உத்தமமான பிரிவினை அழிந்து அந்தணரே க்ஷத்திரிய தர்மத்தை எடுத்துக்கொண்டால் அதர்மப் பிரபஞ்சமே உருவாகி விடும் என்பதைத்தான் விப்ரசித்திக்கும் ஸிம்ஹிகைக்கும் பிறந்த பதின்மூன்று அரக்கர் காட்டுகின்றனர். வ்யங்கன், சல்யன், பலி, நபன், மஹாபலன், வாதாபி, நமுசி, இல்வலன், கஸ்ருமன், ஆஞ்ஜிகன், நரகன், காலநாபன், ராஹு என்போரே அவர். அவர்களில் மூத்தவனான ராஹு பாம்புத்தலை பெற்று நவக்கிரகத்தில் ஒன்றாகிவிட்டான். இல்வலனையும் வாதாபியையும் அகஸ்திய மாமுனி இல்லாமற் செய்து விட்டார். நமுசியைத் தேவேந்திரன் வதம் செய்துவிட்டான். மிச்சமிருந்த ஒன்பதின்மரை ரக்த தந்திகை சம்ஹாரம் செய்தாள். வாமன புராணத்தின்படி விந்த்யவாஸினியேதான் வைப்ர சித்தரை வதம் செய்தவளும் ஆவாள். ஆனால் 'மான்மிய'த்திலோ யசோதா கர்ப்பத்தில் தோன்றி அவ்வவதாரம் முடித்து விந்த்யவாஸினியானபின் மீண்டும் (புனரபி) அவள் ரக்த தந்திகையாக அவதரித்ததாகவே தெளிவுறக் கூறியிருக்கிறது.

அம்பிகை மேலும் கூறுவாள்: ''மற்றொருக்கால் உலகில் பல்லாண்டுகள் மழையின்றிச் சொல்லொணா வறட்சியாகும். உலக மக்களின் பாபத்தினால் இவ்விதம் நேரும். பாபமே அறியாத முனிவர்கள் இந்தப் பாபிகளுக்காக உருகி என்னைப் பிரார்த்திப்பார்கள். அவர்களது கருணையை எண்ணி வியப்பேன். இப்படிப் பட்ட அருளாளர்களை இரண்டு கண்களால் பார்த்தால் போதாது என்று எண்ணிறந்த கண் கொண்டு அவர்களை நோக்குவேன். ('சத' நேத்திரம் கொண்டு என்பாள் அவள். சதம் என்பதை 'நூறு' என்று பொதுவில் சொன்னாலும் அது 'அனந்தம்' என்றும் ஆகும்.) அதனால்

என்னை உலகம் 'சதாக்ஷி'* என்றே போற்றும். முனிவர்களின் அருளை மெச்சும் என் அருள் இப்படித் தோன்றிய மாத்திரத்திலேயே உலகின் போற்றுதலைப் பெற்றுவிடும். பிறகுதான் என் அவதார காரியத்தைச் செய்வேன். அதாவது என் தேகத்திலிருந்தே உயிரூட்டும் பயிர் பச்சைகளையும், தாவரங்களையும், மூலிகைகளையும் தோற்றுவித்து உலகம் முழுவதற்கும் ஊட்டம் அளிப்பேன். இவ்வாறு சாக வகைகளைத் தரித்துத் தருவதால், எனக்கு 'சாகம்பரீ' என்றும் ஒரு கியாதிப் பெயர் உண்டாகும். மழை பொழிந்து பூமியில் பச்சை உயிர்ப்புத் தோன்றும் வரையில் இவ்விதம் என் திருமேனியிலிருந்தே உணவு படைத்துத் தருவேன். . . . ''

'மழை பொழியும் வரையில்' என்று ஏன் இவள் விட்டு வைக்க வேண்டும்? இவள் சங்கற்பித்தால் உடனே மழை பொழிந்து விடாதோ? உடனுக்குடன் வருஷித்து, உலகில் இயற்கையாகச் சுபிட்சம் ஏற்படுத்தாமல், முதலில் தன் சரீரத்திலிருந்து பயிர் பச்சைகளைத் தோற்றுவிப்பானேன், பிறகு மழையை வரவழைப்பானேன்? அநுக்கிரகத்தையே இயற்கையாக நடந்தது என எண்ணச் செய்து மாயம் காட்டுகிற பராசக்திக்கே ஒரு சில சமயங்களில் தன் குழந்தைகள் தன் அன்பைத் தெரிந்து கொள்ளவில்லையே என்ற தவிப்பு உண்டாகி விடுகிறது. அப்போது இயற்கைக்கு மேம்பட்ட அற்புதங்ளை அவள் வெளிப்படக் காட்டித் தன் 'ஹ்ரீ'யை உதறித் தள்ளுகிறாள். பிறகு மறுபடி கண்ணாமூச்சி காட்டுகிற ஆசை தோன்றி விடுகிறது. தாயாக இருந்தவள் மாயையாகி, 'இயற்கை'யாகி விடுகிறாள். மறுபடி மாந்தருக்கு மயக்கம் உண்டாகி விடுகிறது!

சதாக்ஷியாகவும் சாகம்பரியாகவும் தாங்கள் போற்றிய தேவியை மக்கள் மறக்க ஆரம்பித்து விட்டனர். நன்றாக மழை பொழிந்து, வளம் பெருகி, இன்ப வாழ்வு ஏற்பட்டு விட்டால் அப்புறம் அம்பாளை மறக்க வேண்டியதுதானே? பிறகு பாபத்தில் ஈடுபட வேண்டியதுதானே? முன்பு செய்த பாவம் பஞ்சமாக உருவெடுத்தது. இப்போது செய்த பாபம் துர்கமன் என்ற அரக்கனாகப் பிறந்தது. எவராலும் கடத்தற்கரிய ஆணை படைத்தவன் என்று தன்னைக் கருதி 'துர்கமன்' என்று இவன் பெயர் சூட்டிக்கொண்டான். எந்தப் பெருந்துயரிலிருந்தும் அநாயாசமாகக் கடத்துவிக்கும் துர்கையை உலகம் மீண்டும் நினைவு கூர்ந்து பிரார்த்தித்தது. அவள் கொடுத்த வாக்கு மறக்காமல் பிரசன்னமானாள். சதாக்ஷியாக, சாகம்பரியாக வந்த அந்த

---

* எண்ணிலடங்கா நட்சத்திரக் கண் கொண்டு உலகைநோக்கும் இரவுத் தேவிக்கு 'சதாக்ஷி' என்ற பெயர் உண்டு. அவளேதான் இவள்.

ரூபத்திலேயே துர்க்கமனைத் துவம்சம் செய்து 'துர்கை' என்ற பெயரை இரட்டிப்புப் பொருத்தத்தோடு சூட்டிக்கொண்டாள்.

ஹரிச்சந்திரன் இறுதியில் சதாக்ஷியையே வேண்டியதாகவும் உடனே சகல தேவர்களும் பிரசன்னமாகி லோகிதாக்ஷனை உயிர்ப்பித்து, ஹரிச்சந்திரனுக்கு இழந்த பெரு வாழ்வை மீட்டுத் தந்ததாகவும் தேவி பாகவதத்தின் ஏழாவது ஸ்கந்தம் கூறும். இங்கே சதாக்ஷியை, அன்னமய-பிராணமய-மனோமய-விஞ்ஞானமய-ஆனந்தமய கோசங்களின் உட்கருவாக விளங்கும் புச்சப் பிரம்ம ஸ்வரூபிணி என்றே கூறியிருக்கிறது. பிரம்ம சக்தியே அன்புக் கண்கள் அனந்தம் கொண்டு அன்பை ரசித்துப் பார்க்க அவதரித்தாள். அக்கண்கள் சுரக்கும் ஆனந்தத் துளிகளையே மழையாகக் கொண்டு பயிர் பச்சைகளைத் தன்னில் தோற்றுவித்தாள். சிருஷ்டி தத்வமாக இப்படித் தன்னைக் காட்டிக் கொண்டதோடன்றி, துர்கமனை அழித்து சம்ஹாரத் தத்வமாகவும் காட்டிக்கொண்டாள்.

தேவி திருவாய் மலர்கிறாள்: ''மீளவும் அரக்கர்கள் தோன்றி இமாலய முனிவர்களை இம்சிப்பார்கள். முன்பு பிறருக்காக வேண்டிக்கொண்ட முனிவர்கள் தங்களுக்காகப் பிரார்த்திக்க மாட்டார்கள். 'இதுவும் அவள் விளையாட்டு' என்றே பொறுத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் எனக்கு விளையாட்டுப் பார்க்கப் பொறுக்காமல் போகும். நலமே எண்ணும் மகான்களுக்கும் இப்படி இடைவிடாது இன்னல் செய்கிறார்களே என்கிற வெஞ்சினத்தில் கொடூர ரூபம் தாங்கி ஆவிர்பவிப்பேன். அசுரரை அழித்துத் தொலைப்பேன். ''நாங்கள் வேண்டாமலே வந்தாயா அம்மா?'' என்று முனிவர்கள் நெஞ்சு நெகிழ்ந்து, தலை சாய்த்து என்னைத் துதிப்பார்கள். ''கருணைக்காக ஏற்பட்ட உன் கடுமை வாழி! அந்தக் கடுமையின் நினைவாக நின்னை அச்சத்தின் உருவாம் 'பீமாதேவி' என்றே பெயரிட்டுப்போற்றுகிறோம்'' என்பார்கள்.

''பின்னொரு சமயம் அருணன் என்று ஓர் அவுணன் தோன்றி திரிலோகங்களையும் வருணிக்க வொண்ணாக் கொடுமையில் ஆழ்த்துவான். அவன் இருகால் பிராணி, நாற்கால் பிராணி, சிலந்தி முதலிய எண்கால் பிராணி, ஜலமண்டலி முதலிய ஆயிரம்கால் பிராணி, அனந்தம் கால் பெற்ற கம்பளிப்புழு போன்ற பிராணிகள், காலே இல்லாத பாம்பு போன்ற பிராணி ஆகிய இவை எதனாலும் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என்று வரம் பெற்றிருப்பான். அவன் தன்னையறியாமல் விட்டு வைத்தது ஆறுகால் படைத்த பிராணியைத்தான். அந்த ஆறுகால் பிராணி வண்டுதான். ஐம்புலன்களும் மனமும் தோன்றிய பரமபதமான நானும் ஒரு

விதத்தில் 'ஷட்பத'மான வண்டுதானே? எனவே உலகைப் பிரமிக்கச் செய்த அருணனை வதைக்க நான் வண்டுருவம் கொண்டு 'ப்ரமராம்பிகை' யாவேன். பரப்பிரம்மன் மல்லிகையாக இருக்கிறதென்றால் அதனைச் சுற்றிச் சுற்றி வரும் பிரமரம் (வண்டு) நான்தானே? (ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ஜுனரின் ஸதி பிரமராம்பிகை.) வண்டுக் கூட்டமாக உருவெடுத்து அசுரக் கூட்டங்களைத் துரத்துவேன். மக்களை வாட்டித் துளைத்த அருணாதி வல்லசுரரை வண்டுகளாகித் துளைத்துக் கொட்டியே மாய்ப்பேன். என் ரீங்காரமான ஹ்ரீங்காரத்தில் அவர்களை இசைத்துக் கொள்வேன். மூவுலகுக்கும் நன்மை கூட்டுவேன். உலகம் என்னை 'ப்ராமரீ' என்று துதிக்கும்.

தேவீபாகவதம் பத்தாம் ஸ்கந்தம், பதின்மூன்றாம் அதிகாரத்தில் பிராமரீ அவதாரம் விரித்துக் கூறப்படுகிறது: அருணாசுரன் முக்கியமாக காயத்ரீ ஜபத்தினாலேயே அளவற்ற சக்தி பெற்றிருந்தான். இவனது ஜபத்தின் உக்கிரத்தால் தேகம் முழுவதும் பொத்தலாகி பிராணன் மட்டுமே எவ்விதமோ சஞ்சரித்ததாம். காயத்ரீ சமேதனாக வந்த பிரம்மாவிடம் இவன் வரம் பெற்றான். ஆறுகால் வண்டு இவனைக் கொல்லலாமாயினும் காயத்ரீ ஜப பலன் உள்ள வரையில் அது சாத்தியமில்லை. அம் மாமந்திரத்தின் மகிமை அப்படிப்பட்டது. பராசக்தியே வண்டாக வந்தாலும்கூட, இவன் காயத்ரீ சக்தியை இழந்தால்தான் சம்ஹரிக்க முடியும் என்ற நிலைமை ஏற்படுகிறது. உடனே தேவர்களின் சூழ்ச்சிப்படி பிருகஸ்பதி அருணனை அணுகுகிறார். அருணன் அவரிடம், ''இதென்ன விந்தை! தேவரை விட்டு நீர் எப்படி இங்கு வந்தீர்?'' என்கிறான். பிருகஸ்பதி, ''நான் காயத்ரீ உபாசகன்; நீயோ மகா உபாசகன். அந்த உன் உபாசனா சக்திதான் என்னை இங்கு இழுத்து வந்துவிட்டது'' என்கிறார். ''பார்த்தீரா, என் மந்திர சக்தியை!'' எனச் செருக்கடைகிறான் வருணன். மந்திரம் இவனுக்குச் சக்தியைத் தந்திருக்க, இவனோ தனக்கே சக்தி இருப்பதுபோல அகந்தையுற்றுப் பேசிவிட்டான். ''சாதித்த சித்திகளும் தமதென்று சங்கிப்பர்'' என்று அடிகள் சொன்ன கதைதான்! இவனுக்கு அகந்தை வந்ததோ இல்லையோ, அகன்றனள் காயத்ரீ. உடனே பிராமரீ இவனை சம்ஹரித்தாள்.

மந்திர ஜபம் செய்கிறவர்கள் எத்தனை அடக்கத்துடன் இருக்க வேண்டும் என்பதை இது உணர்த்துகிறது.

★ ★ ★

'துர்காஸப்தசதி' பாராயணத்தின் முடிவில் ஓதப்படும் 'மூர்த்தி ரஹஸ்ய'த்தில் மேற்சொன்ன அவதாரங்களைப் பற்றி நெஞ்சையள்ளும் விவரங்கள் உள்ளன.

இதன்படி யசோதைக்கும் நந்தகோபருக்கும் திருமகளாகத் தோன்றிய தேவிக்கு 'நந்தா' என்று பெயர். இவள் பொன் நிறத்தவள். பொன்னாடை பூண்டவள். பொன்னாபரணங்கள் தரித்தவள். பொற்றாமரையே இவளது ஆதனம். இவளுக்கு நான்கு திருக்கரங்கள் உண்டு. அவற்றில் கமலமும், அங்குச-பாசமும், சங்கமும் தரித்திருப்பாள். இந்திரா, கமலா, லக்ஷ்மி, ஸ்ரீ என்ற இனிக்கும் பெயர்களெல்லாம் இவளது திருநாமங்களேயாம். இவளை பக்தியுடன் துதித்துப் பூஜிப்போருக்கு மூவுலகங்களையும் வசப்படுத்தித் தருவாளாம். வழிபடுகிற ஒவ்வொருவருக்கும் இப்படி திரிலோகாதிபத்தியம் தர முடியுமா என்ற கேள்வி எழும். தாத்பரியம் யாதெனில் அடியாருக்கு ஸ்தூல-சூக்ஷ்ம-காரண தேகங்கள் என்ற மூவுலகங்களை வசப்படுத்தித் தந்து ஆத்ம ஜயம் பெற்றுத் தருவாள் என்பதே.

இனி ரக்ததந்திகா வர்ணனை: பயமனைத்தையும் போக்குகிற பயங்கர உருவம் இவளுடையது. ஆம் அந்த மகா பயங்கரியிடம் நமக்கு இயல்பாக அன்பு சுரக்கிறது! இந்தப் பயங்கரத்தில் அன்பினால் பழகிவிட்ட நமக்குப் பிற்பாடு எந்த பயங்கரமும் பயம் தராதுதான். பயத்துக்கான காரணம் தோன்றும்போதெல்லாம் பயத்தையும் பயமுறுத்தும் இவளது நினைவு வந்து ரட்சிக்கும். நந்தாவுக்கு எல்லாம் பொன் என்றால், இவளுக்கோ எல்லாம் சிவப்பு! வர்ணம் சிவப்பு; வஸ்திரம் சிவப்பு; அணிபணிகள் சிவப்பு; ஆயுதமும் சிவப்பு. அந்தக் கண்களின் சிவப்போ செந்தணல்தான்; கேசத்தின் செம்பட்டை தீ ஜ்வாலையே! நகங்கள் இயற்கையிலேயே சிவப்பா, எதிரிகளைக் கிழித்து அவர்களது குருதியால் சிவந்தனவா என்று சொல்ல இயலாது. இவ்வனைத்தையும்விட ஜொலிக்கும் பற்களின் சிவப்பால் ரக்த தந்திகா என்றே பெயர் பெற்றிருக்கிறாள். தனது நான்கு கரங்களில் கத்தி, மது பாத்திரம், உலக்கை, கலப்பை இவற்றை தரித்திருப்பாள். ரக்த சாமுண்டா என்பதும் இவளைத்தான். கோர வடிவினளாயினும் ஞான மயமான யோகீசுவரி இவள். ஞானம் மட்டும் தானா? பரமகருணாமயீயும் ஆவாள்; புவி எனப்பரந்து விரிந்த அன்புத் தாய் வடிவம் இவளுடையது. செவ்வாடை மூடிய இவளது நகில்கள் செம்முகில் மூடிய மேருவென விம்மிப் புடைத்தவை. அகில உலகுக்கும் பால் ஊட்டும் அன்னையல்லவா?

சச்சிதானந்தப் பாலால் நிரம்பிய அவ்வமுத கலசங்களினின்றும் பக்தக் குழந்தைகளுக்குக் காமதேனுவென வேண்டிய இன்பங்களை எல்லாம் சுரப்பாள். தாயாக மட்டும் தான் இருப்பாளா? பணிப் பெண்ணாகவும் இருப்பாள். பதிவிரதை ஒருத்தி புருஷனின் மனமறிந்து எப்படியெல்லாம் தொழும்பு செய்வாளோ, அவ்விதமே தன்னைத் தொழுவாருக்குத் தொழும்பு செய்வாள். பகைவருக்கு ஊழி என விளங்கும் ரக்த சாமுண்டி தாவர ஜங்கமப் பிரபஞ்சம் முழுவதிலும் ஊடுருவி நின்று பக்தருக்கு ஊழியம் புரிவாள்! இவளை உள்ளன்போடு உபாசிப்பவன் சராசரத்தை வியாபித்து விளங்குகிறான் — அதாவது பிரம்ம ஞானியாகத் திகழ்கிறான். இங்கு கூறியுள்ள இவ்வருணனையைப் பிரதி தினமும் படித்து தியானிப்பவனுக்கும்கூட தேவி ரக்ததந்திகை பணிவிடை புரிகிறாள்.

தன்னிலிருந்தே தானியங்களைத் தோற்றுவித்த சாகம்பரீ பச்சை நீலப் பொழிலென விளங்குபவள். பொழிலில் நடனம் புரியும் நீலோத்பலம்போல் நயனம். உலகுக்கெல்லாம் உணவிட்ட இவளது உதரமோ உள்ளடங்கிக் குழைந்து மூன்று மடிப்புகளுடன் விளங்கும். திருநீற்றின் முப்பட்டைகளிடைத் திகழும் திலகம் போல் மும்மடிப்புகளிடைத் திகழும் இவளது ஆழ்ந்த கொப்பூழ் பிரபஞ்சக் குழந்தைக்கு உணவு செலுத்தும் நாபிக்கொடியாகவும் நினைக்கத் தகுந்தது. இவள் பொங்கிப் பூரித்த திருமார்பகத்தினள். கமலாஸனத்தில் வீற்றிருப்பவள். இவளது நாற்கரங்களில் ஒன்று கமலத்தைத் தரித்திருக்கும்; ஒன்றில் அம்புகள் காணப்படும்; அதற்கு நேர் எதிர்க் கரத்தில் வில் ஒளிரும்; மீதமுள்ள கரத்தில் 'சாகம்பரீ' என்பதற்குப் பொருத்தமாகக் காய் கனிகள், தளிர், வேர், மலர் அனைத்தையும் கதம்பமாகக் கட்டித் தாங்கியிருப்பாள். அவை ரஸம் பூரித்தவை. பார்த்த மாத்திரத்திலேயே பசி, தாகம், சாவு, காய்ச்சல் முதலியவற்றை நீக்குபவை. துர்கமாசுரனை அடக்கிய இவள் எல்லாக் கொடியோரையும் கடிபவள். ஆயினும் ஸௌம்ய ரூபத்தினள். சோகம் அணுகாத இன்பமே வடிவாகிடப் பெற்றவள். பாபத்தையும், ஆபத்தையும் அகற்றும் இவளுக்கு சதாக்ஷீ, துர்கை என்ற சிறப்புப் பெயர்களைக் கூறினாலும் இவளே தேவீப் பிரணவத்தின் வடிவமான உமாவும் ஆவள். இவளே கௌரி; இவளே ஸதீ; இவளே சண்டீ; இவளே காளிகை; இவளே பார்வதியும்!

அம்பாளின் திருஉருவம் எதனையுமே ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக வந்த, அல்லது ஒரு குறிப்பிட்ட பலனை

மட்டும் தருகிற குறுகிய சக்தியாக எண்ணிவிடக்கூடாது. ஒவ்வொன்றையும் பரப்பிரம்ம சக்தியாகவே உணர வேண்டும். எனினும் குறிப்பாக ஒரு பலன் தேவைப்படும்போது அதற்கு அநுசரணையாக ஒரு மூர்த்தியை உபாசித்தால் மனிதமனத்துக்கு ஒரு தனித்த ஈடுபாடு உண்டாகிறது. அவ்விதத்தில் அன்ன பானங்கள் குறைவின்றிக் கிடைப்பதற்கு சாகம்பரீ தேவியைத் துதிப்பதும், தியானிப்பதும், ஜபிப்பதும், பூஜித்து வணங்குவதும் சிறப்பான உபாயமாகிறது. ஆனால் அவள் உடலை வளர்ப்பவள் மட்டுமல்ல; இறுதியில் பக்தனை அக்ஷயமான அமர நிலையிலேயே சேர்க்கிறாள்.

முனிவரைக் காக்க ஹிமாசலத்தில் தோன்றினாளே, பீமாதேவி! இவளும் நீலநிறத்தவளே. இவளது பயங்கரத்தைத் தெற்றிப் பற்கள் தூக்கிக் காட்டும். பரந்த கண்ணும், பருத்த மார்பகமும் கொண்ட பீமாதேவி சந்திரஹாஸம் என்ற கத்தியையும், கபாலம், உடுக்கை, மதுபாத்திரம் இவற்றையும் கரங்களில் தரிக்கிறாள். பீமாதேவிக்கு ஏக வீரா, காலராத்ரீ, காமதா என்ற பிரக்யாதி பெற்ற திருப் பெயர்கள் உண்டு. ஒருமுகப்பட்ட ஏகாக்ர மனத்தோடு தங்களையே பலி தந்து கொள்கிற வீரபக்தர்களுக்கெல்லாம் நாயகி இவளொருத்தியே. உலகில் சம்ஹாரம் அனைத்தும் செய்யும் சக்தியாக 'ஏக வீரா' எனப்படுகிறாள். ஔவை வாக்குப்படி ஏகமாகக் காண்பதேதான் வீரத்தின் பயன்: **'புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரம்; ஒன்றாகக் காண்பதே காட்சி'!** காலம் என்ற இரவைக் காட்டி அமரதத்துவத்தின் ஒளியை மறைப்பாள். அன்றன்றும் இரவாக வருவாள். ஒவ்வொரு பிறப்பிலும் மரண இரவாக ஆவாள். உலகங்களுக்கும் தேவர்களுக்கும் பலவிதமான பிரளய இரவுகளாக இருக்கிற காலராத்ரி இவள். இச்சித்தவை எல்லாம் மெச்சித் தருவதால் காமதா.

வண்டாக வந்த ப்ராமரீயைப் பார்த்தோமல்லவா? இவள் கருவண்டல்ல. கண்ணைக் கூசச் செய்யும் பொன்வண்டு. நம் பிரமராம்பிகை வண்டைச் சூழ்ந்து ஒளிப் பிரபை இலகும். அப்பொன்வண்டின் தங்க நிறத்தூடே மற்ற வண்ண விசித்திரங்களும் மினுக்கிடும். வண்டாக இன்றி ஸ்த்ரீ தேவதா ரூபத்திலும் பொன் மேனியில் பொன்னும் நானாவண்ண நவரத்னங்களும் அணிந்து, சந்தனக் களபம் பூசிக் கொண்டு தரிசனம் தருவாள். இந்த அவஸரத்தில் இவளது கரத்தில் வண்டு காணப்படும். மகாமாரீ என்று துதித்து இசைப்பது இவளையே.(மகமாயி என்று பொது வழக்கில் கூறப்படுவது இதன் திரிபாகவே இருக்கலாம்; அல்லது மகாமாயை என்பதன் வழுவாகவும் இருக்கலாம்.)

'மஹா மாரி' என்றால் 'பெருவாரி மரணம் உண்டாக்குபவள்'. ஆயின் 'இவளைத் துதித்து இசை பாடுகின்றனர்' என்பதால் இவள் தீமைகளுக்கே பெருவாரி மரணம் தருபவள் என்றாகிறதன்றோ?

சண்டிகா ஜகன்மாதாவின் மேற்சொன்ன வடிவம் ஒவ்வொன்றும் ஸர்வாபீஷ்டம் நல்கும் காமதேனுவாகும்.

இவ்வாறு 'மூர்த்திரஹஸ்யம்' கூறுகிறது.

★ ★ ★

அனைத்தையும் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளும் ஆதார சத்தியமே மகாசரஸ்வதி. இந்நூலில் ஆனந்தக் கிளர்ச்சியைக் கூறும் காளி லீலையாம் முதற் பகுதிக்கு 'உதயம்' என்றும் அறிவின் மலர்ச்சியைக் கூறும் லக்ஷ்மி லீலையாம் இரண்டாம் பகுதிக்கு 'உச்சி' என்றும் பெயர் தந்து விட்டு, உண்மையில் உள்ளார்ந்து நிற்கச் செய்யும் சரஸ்வதியின் லீலையான இறுதிப் பகுதிக்கு 'லயம்' என்று தலைப்பிடப்பட்டிருக்கிறது. ஒன்றி ஒடுங்குகிறபோது, தனியாக அறிவு என்றும் ஆனந்தம் என்றும் கூட எதுவும் தெரியாது. ஆனால் அனைத்தையும் லயமாக்கிக் கொள்ளும் அவளோ அவற்றை அப்படியே வைத்திராமல் பிரித்து மறுபடி, பிறவி பிறவிகளாகத் தந்து நாடகம் நடத்துகிறாள். நாடகத்தை அவ்வப்போது நிறுத்தி லய இன்பம் தருவதற்காகத் தானுமே பலப்பல அவதாரங்களை எடுக்கிறாள். கடைசியில் பார்த்தால், 'இது நாமாக நடித்த நாடகம் அல்ல. அவள்தான் நாடகாசிரியை. நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் அவள் முன்பே எழுதி வைத்திருக்கிறாள். நாமாக ஆகி இவற்றைச் செய்வதும் அவளேதான். வரப்போகிற அவதாரங்களை அம்பாள் முன் கூட்டியே சொன்னாள் என்பதிலிருந்து தேவர்கள் அவளை மறந்து பாபம் செய்தது, அதனால் மீளவும் அசுரர் கை ஓங்கியது, அப்போது முனிவர்கள் நெஞ்சில் அன்பு சுரந்து அவர்கள் அவளைப் பிரார்த்தித்தது எல்லாம் கூட அவளது காரியமேதான்' என்று தெரிகிறது. 'மாயக் கூத்து, 'மாயக் கூத்து!' என்று தெரிகிறது. ஏன் கூத்தாடுகிறாள் என்று அவளை யார் கேட்பது? யாருக்கு அதற்கு அருகதை உண்டு? அவளுக்கு ஓயாமல் நமஸ்காரம் செய்து கொண்டு அன்பிலே இன்புற்றுக் கொண்டிருப்பதைத் தவிர நாம் என்ன செய்யக் கிடக்கிறது? இப்படி நமஸ்கரித்து அன்பில் இன்புறும் காஞ்சிப் பெரியவர்களாக மட்டும்தானா அவள் இருக்கிறாள்? நாஸ்திகம் பேசும் ஈரோட்டுப் பெரியவர்களாகவும்தான் இருக்கிறாள்! நம்மை எப்படி வைப்பாளோ? இதைக் கேட்கக் கூட நமக்கு ஏது அருகதை? 'நல்லறிவுவேண்டும்' என்று

அவளை நாம் பிரார்த்திக்கிற சுதந்திரம் கூட நமக்கு உள்ளதோ, இல்லையோ, யாரே திட்டவட்டமாகச் சொல்ல முடியும்? தாயுமானவர் சொன்னதற்கு மேல் ஏதுமில்லை:

எல்லாம் உன் அடிமையே;
எல்லாம் உன் உடைமையே;
எல்லாம் உன்னுடைய செயலே.

★ ★ ★

பொய் மெய் இதம் அஹிதம் வருநன்மை தீமையொடு
பொறை பொறாமையும் எவ்விடம்?
எவர் சிறியர்? எவர் பெரியர்? எவர் உறவர்? எவர்
பகைஞர்?
யாதுமுனை யன்றி யுண்டோ?

அவளைப் பற்றி ஏதுமே நமக்குத் தெரியாது, தெரியவும் முடியாது — அவளாகத் தெரிவித்தாலன்றி! அவளது அன்பின் வேகம் தெரிவதற்கே துன்ப நாடகம், பாப நாடகம் ஆடுகிறாள் என்று மட்டும் சொல்லலாம்போல் இருக்கிறது! பாபம் புரிய வைத்துத் தண்டனையாக துன்பத்தில் ஆழ்த்துவது ஏனெனில், அத்துன்பத்துக்கு ஈடு செய்வதற்கும் வெகு அதிகமாக இன்பத்தைத் தரத் தானே அவ்வப்போது அவதரிக்க வேண்டும் என்பதால்தான் எனத் தோன்றுகிறது!

தான் எடுக்கப்போகும் பல அவதாரங்களைக் கூறிய அம்பிகை ஒரேயடியாக எல்லாவற்றையும் சொல்லி எதிர்கால நாடகத்தின் சுவையைக் குறைத்துவிடக்கூடாது என்று ஒரு கட்டத்தில் நிறுத்திக்கொள்கிறாள். ஆனாலும் அமர வாக்கியமாக அன்புப் பிரதிக்ஞை செய்து கொடுக்கிறாள்:

''எப்பொழுது எப்பொழுது தீய சக்திகள் விழுமி எழுந்து வாதை செய்கின்றவோ, அப்பொழுது அப் பொழுதும் நான் அவதரிப்பேன்; பகை களைவேன்.''

கீதாசாரியனின் மொழியிலேயே பதுமநாப சோதரி பேசுகிறாள். 'புனரபி ஜனனம்' மனிதருக்கு இழியது; அதுவே தெய்வத்துக்கு மகிமையாகிறது! கருணை செய்கிற விந்தை!

7. பலன்கள் பலப்பல

நவராத்திரி நாயகியரின் வரலாறு இதோடு பூர்த்தியாகிவிட்டது. இது போன்ற திவ்ய வரலாறுகளைப் படிப்பதாலும், கேட்பதாலும், பிறர்க்குச் சொல்வதாலும் ஏற்படும் நல்விளைவுகளை ''பல ச்ருதி'' அல்லது ''பல ஸ்துதி'' என்பதாக நமது புராண இதிஹாஸங்கள் எடுத்துரைக்கும். தேவீமாஹாத்மியத்தின் தனிச் சிறப்பு என்னவெனில், அதன் கதாநாயகியான சாக்ஷாத் பராசக்தியே இப்புண்ய சரித்திரத்தைப் பாராயணம் செய்வதால் ஏற்படும் நற்பலன்களைத் தன் கனிவாயால் தேவர்களிடம் புகல்கிறாள்.

தீமை வலுத்தபோதெல்லாம் அவதரிப்பதாக அருள்மொழி கூறிய அம்பாள், அதைத் தொடர்ந்து தேவீ மாஹாத்ம்ய படன (படிப்பது), சிரவண (கேட்பது) பலன்களை வெகுவாக அடுக்கிக்கொண்டு போகிறாள்.

அம்மா அல்லவா? குழந்தைகள் கொஞ்சம் திருந்தினாலே போதும், எடுத்த எடுப்பில் நிரம்பவும் அவர்களிடம் எதிர்பார்க்க வேண்டாம் என்று திருஉளம் கொள்கிறாள். எனவே தொடங்கும் போதே தேவி மாஹாத்மியம் முழுவதையும் பாராயணம் செய்யவேண்டும் என அவள் விதிக்கவில்லை. பார்க்கப் போனால் அதுவும்கூடப் பெரிய காரியமில்லை. எழுநூறே மந்திரங்கள் கொண்ட 'துர்கா ஸப்தசதீ'யாம் தேவீ மாஹாத்மியத்தில் மொத்தமுள்ள சுலோகங்கள் எழுநூற்றுக்கும் மிகக் குறைவேயாகும். ஏனெனில் அரை வரிகளும், 'நமஸ்தஸ்யை' போன்ற ஒரு சிறு சொற்றொடரும்கூட ஒரு மந்திரமாகக் கணக்கெடுக்கப்படுகிறது. பழக்கப்பட்டால் தினமும் சுமார் இரண்டு மணி நேரத்தில் தேவி மாஹாத்மியம் முழுவதும் பாராயணம் செய்து விடலாம். ஆனாலும் அம்மா இவ்வளவு எதிர்பாராமல் மிகவும் எளிதாகவே தொடங்குகிறாள்.

சும்ப வதம் முடிந்தவுடன் தேவர்கள் அவளைத் துதித்தார்கள் அல்லவா? அந்தத் துதிகளால் அவளை ஒருவன்

நாள் தோறும் வழிபட்டாலே போதுமாம்! ''அப்படிப்பட்டவனுடைய சகல வாதைகளையும் நான் சந்தேகமில்லாமல் நாசம் செய்கிறேன்'' என்கிறாள். ஆனால் ஒரு நிபந்தனை: மனத்தை இத்துதிகளிலேயே முற்றிலும் ஒருமுகப்படுத்தி (''ஸமாஹித''னாக)ச் சொல்ல வேண்டுமாம்!

''துதிகள்'' என்று இங்கு அம்பாள் பன்மையில் சொல்வதால் முதலில் மது-கைடப வதத்துக்கு முன் பிரம்மன் தாமஸியைக் குறித்துச் செய்த தோத்திரம், பிறகு மகிஷவதம் முடிந்த உடன் தேவர் செய்த ஸ்துதி, அதன் பின் சும்ப-நிசும்பரின் இம்சை தாளாது அமரர்கள் இமாலயத்தில் விஷ்ணு மாயையைக் குறித்துச் செய்த துதி, முடிவாக சும்ப சம்ஹாரத்துக்குப் பின் அவர்கள் அளித்த அஞ்சலி மொழிகள் அனைத்தையும் சேர்த்துச் சொன்னதாகவும் கொள்ளலாம். துர்கா ஸப்த சதீ மூலத்தில் இந்தத் துதிகள் தனித்ததொரு கனிவும், கம்பீரமும், காவிய நயமும் படைத்தனவாகும். அது மட்டுமின்றி இத்துதிகளின் ஒவ்வோர் அக்ஷரமும் மகா மந்திர வீரியமும் பொருந்தியதாகும். எனவே இவை இந்நூலில் அநுபந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தினம் தினமும் மாஹாத்மிய பாராயணத்தைப் பூரணமாகச் செய்ய இயலாதோ என்பதால் அஷ்டமி, நவமி, சதுர்த்தசிகளில் பூரணமாக பக்தியோடு படிக்குமாறு அல்லது கேட்குமாறு பணிக்கிறாள். மாளய அமாவசைக்கு முதல் நாளான சதுர்த்தசியன்றே மகாலக்ஷ்மி அவதாரம்; தொடர்ந்து வரும் அஷ்டமியில் மகிஷ வதம்; மறு திதியாம் நவமியில் தேவரின் நன்றி வழிபாடு — என்பதைக் கவனித்தால் வருடத்துக்கொரு முறை நவராத்திரிக்கு முற்பட்ட சதுர்த்தசியையும், நவராத்திரியின்போதே நிகழும் அஷ்டமி-நவமிகளையும் மட்டுமே தேவி குறிப்பிடுகிறாளோ என்றும் தோன்றலாம். நாமே இப்படிப் புண்ய கதா சிரவணத்தைக் குறைத்துக் கொண்டு விட வேண்டியதில்லை. பிரதி தினமும் தேவீ மான்மியம் பாராயணம் செய்வதாக நாம் உத்தேசித்தால்தான் ஒவ்வோர் அஷ்டமி, நவமி, சதுர்த்தசிகளிலாவது அது தொடர்ந்து நடக்கும்! மேற்சொன்ன திதிகளில், ''மது-கைடப வதத்தையும் மகிஷாசுர சம்ஹாரத்தையும், சும்ப-நிசும்பர் அழிவையும் ஒருமைப்பட்ட உள்ளத்தோடு பக்தி ததும்பப் படிப்போரும் கேட்போரும் சிறிதும் கெட்ட காரியத்தில் ஈடுபடமாட்டார்கள். எனவே கெட்டதிலிருந்து தண்டனையாக விளையும் பாவம்

அவர்களுக்கு இல்லை; அவர்களுக்கு வறுமை இல்லை; அன்புக்குரியவற்றை அவர்கள் இழப்பதில்லை'' என்கிறாள் ஸர்வேசுவரி.

மேலும் சொல்வாள்: ''விரோதிகள், கள்வர், அரசர், ஆயுதம், நெருப்பு, வெள்ளம் எதனாலும் இதைப் படிப்போருக்குப் பயம் ஏற்படாது. உயர் நலனுக்கு உத்தமமான வழி இக்கதையைக் கேட்பதே. மகாமாரியம்மனின் விளையாடல் எனப்படும் கொள்ளை நோய்போல் கூட்டம் கூட்டமாக மக்களை மாய்க்கும் உற்பாதங்களையும் இப் பாராயணம் தணிக்கும். நாமாக உண்டாக்கிக் கொள்பவை, பஞ்சபூதங்கள் எனும் இயற்கையின் சீற்றத்தால் உண்டானவை, தேவசக்திகளின் கோபத்தால் உண்டானவை என மூவகைப்பட்ட இன்னல்களையும் களைவது என் மாஹாத்மியம். தினந்தோறும் இம்மான்மியம் முறைப்படி ஓதப்பெறும் எனது ஆலயங்களில் என் சாந்நித்தியம் விசேஷமாக நிலைபெறுகிறது. பலிப்பிரதானம், அக்னி காரியம் முதலிய வேத கர்மங்களிலும், பூஜை, மஹோத்ஸவம் முதலான ஆகம கர்மங்களிலும் இச் சரித படனமும் சிரவணமும் நடக்க வேண்டும். இவ்விதம் செய்தால் அந்த வைதிக அல்லது ஆகமக் கிரியையை உவந்து ஏற்று பலன் வழங்குவேன். ஞானத்துடன் செய்தால் மட்டுமின்றி, ஞானமின்றிச் செய்தாலும்கூட இதனை நான் ப்ரீதியுடன் அங்கீகரிக்கிறேன்.''

ஞானமின்றிச் செய்தாலும் அம்பாள் ஏற்கிறாள் என்பது விசித்திரமாகப் படலாம். இங்கு ஞானம் என்று சொல்வது மூல நூலின் சொற்பொருளை அறிந்திருப்பதையே குறிக்கும் எனலாம். வேறொரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் கூறியது இங்கு மிகவும் பொருந்தும். ''வேத மந்திரங்களுக்கு அர்த்தம் தெரிந்து சொன்னாலே பூரண பலன் உண்டு என்கிறார்கள். எனக்கென்னவோ அர்த்தம் தெரியாமல் சொன்னால் கூட அதே பலன், ஒருகால் அதிக பலன்கூட உண்டு என்று தோன்றுகிறது. பக்தி சிரத்தை, நம்பிக்கைதான் முக்கியம். 'ரிஷிகள் கொடுத்த மந்திரம் இது, இதைச் சொன்னாலே போதும், பரமாத்மா அநுக்கிரகிப்பார் 'என்ற நம்பிக்கை இருந்து விட்டால் போதும். அர்த்தமே தெரியாமல் சொன்னால்கூடப் பரமாத்மா அநுக்கிரகம் பண்ணிவிடுவார். கலெக்டரிடம் ஒரு எழுதப் படிக்கத் தெரியாத விவசாயிக்கு மனு கொடுக்க வேண்டியிருக்கிறது. அவனுக்காக யாரோ படித்தவர்கள் எழுதித் தந்திருக்கிறார்கள். அவர்கள் நமக்கு நல்லதைத்தான் செய்திருப்பார்கள் என்று பூரணமாக நம்பி விவசாயி அதை துரையிடம் கொடுக்கிறான். இவனுடைய எளிமையையும், விநயத்தையும் பார்த்த கலெக்டருக்கு இவனிடம்

ரொம்பவும் பரிவு உண்டாகிக் காரியத்தை முடித்துத் தந்து விடுகிறார். தாங்களாகவே மனு எழுதி வந்து 'தாட்பூட்' என்று பேசுகிறவர்களைவிட இந்த எழுதப் படிக்கத் தெரியாத விவசாயிக்கே துரை அதிகச் சலுகை கொடுத்தாலும் கொடுப்பார்'' என்பார் ஸ்ரீ பெரியவர்கள். ஒரு சாகரமே இதனுட்பொருளாக உள்ளது.

பக்தி வேண்டும், பக்தி வேண்டும் என்று அம்பிகை முன்னரே வலியுறுத்தி விட்டாள். மனசு ஈடுபட வேண்டும் என்றும் சொல்லி விட்டாள். மனசு நானா திசை திரும்பாமலிருக்க ஏதாவது ஒரு பிடிப்பு வேண்டும். தேவீ மாஹாத்மிய சுலோகங்களை அந்தப் பிடிப்பாக்கிக் கொண்டுவிட்டால் போதும். பொருள் தெரியாவிட்டாலும் கூட, அம்பாளைப் பற்றியது, அநுக்கிரக சக்தி வாய்ந்தது என்ற நம்பிக்கையுடன் வெறும் சொல்லைப் பற்றிக்கொண்டாலே போதுமானது. சில சமயங்களில் அர்த்தம் தெரிகிறபோதுதான் வேண்டாத சந்தேகங்கள், அறிவுவாதங்கள் எல்லாம் உண்டாகி பக்திக்கே ஊறு உண்டாக்குகிறது. இதைவிட அர்த்தம் அறியாமலே, பக்திக்கு பங்கம் இல்லாமல் பாராயணம் செய்வதே ஒருகால் சிலாக்கியமாக இருக்கலாம். அதோடு கூட மற்ற புராண இதிஹாஸங்களைப் போலன்றி, தேவீ மாஹாத்மிய வாசகம் முழுதும் மந்திரங்களாக இருக்கின்றன. அதாவது அவற்றின் அர்த்தம் ஒருபுறமிருக்க, அவற்றின் சப்த அதிர்வுகளே இக-பர நலன்களை நல்கும் சக்தி பெற்றிருக்கின்றன. இதனால்தான் போலும், அம்பாள் 'அறிந்து செய்தாலும் அறியாமல் செய்தாலும் அன்புடன் ஏற்கிறேன்' என்கிறாள்!

தேவி தொடருகிறாள்: ''சரத் காலத்தில் செய்யும் பெரு வழிபாடான நவராத்திரியில் மாஹாத்மியத்தைப் பக்தியுடன் செவி மடுப்பது விசேஷம். அப்படிக் கேட்பவன் என்னருளால் சகல இன்னல்களின்றும் விடுபட்டு தன-தானிய-புத்ர-பௌத்ராதி களுடன் களிப்புற வாழ்வான். இதில் சம்சயமில்லை. என் மகிமையைப் படிப்போருக்கு பயம் என்பது அற்றுப் போகிறது. சகல கல்யாணங்களும் கூடுகின்றன. அவர்களது குலம் முழுவதும் உய்வு பெறுகிறது. பூதப் பிரேத பைசாச சேஷ்டைகளினின்று விடுபடுவதற்கான சாந்தி கர்மங்களிலும், நவக்கிரக சாந்தியிலும், துர்சொப்பனம் கண்டவிடத்தும் இம்மாஹாத்மிய பாராயணம் செய்யப்படவேண்டும். இது எல்லா உத்பாதங்களையும் ஒழித்துக் கட்டுவதாகும். தோஷம் கண்ட பாலர்களுக்கு இதுவே சாந்தி செய்விக்கிறது. ஜனங்களுக்குள் விரோதம் ஏற்படுகையில் இப்பாராயணம் மீண்டும் நட்பை உண்டாக்குகிறது. நடத்தை

கெட்டவர்களின் கொழுப்பை நீக்க இதுவே உபாயம். அரக்கரும், பூதரும், ஆவிகளும் இதைப் படிக்கக் கேட்ட மாத்திரத்தில் ஓடிப்போவர்.

''இதில் ஏதோ சில குறிப்பிட்ட கட்டங்கள் விசேஷமானவை என்றில்லாமல், இது முழுவதுமே என் சாந்நித்தியத்தை வெளிப்படுத்துகிறது.

''நிவேதனம், மலர் வழிபாடு, அர்க்கியம், கந்தம், தீபாராதனை, பிராம்மண போஜனம், ஹோமம், புரோட்சணம், இன்னும் வேறு பலவிதத்தில் எனக்குக் கைங்கரியம் செய்து காணிக்கைகள் செலுத்துவது — இவற்றை எல்லாம் சேர்த்து ஒரு விரதமாக ஓராண்டு முழுவதும் அநுஷ்டித்தால் எனக்கு எவ்வளவு ப்ரீதி உண்டாகுமோ, அவ்வளவு மகிழ்ச்சி இச் சரிதத்தை ஒரு முறை ஒருவர் பாராயணம் செய்தாலே உண்டாகும். பாபமும் ரோகமும் போக இப் பாராயண சிரவணமே கண்கண்ட மருந்து.

''குறிப்பாக நான் உற்பவித்த கட்டங்கள் பூதங்களிடமிருந்து ரட்சை தரும். அசுரரை அழித்த கட்டங்கள் சத்துரு பயத்தை நீக்கும். நீங்கள் (தேவர்) பல சந்தர்ப்பங்களில் செய்த துதிகளையும், பிரம்மரிஷிகள் செய்த துதிகளையும், மது-கைடப வதத்துக்கு முன் பிரம்மன் செய்த தோத்திரத்தையும் பாராயணம் செய்தால் உத்தமமான மதி உண்டாகும். (பிரம்மரிஷிகள் செய்த துதி எது என்று தெரிய வில்லை. பாகவதம், மான்மியம் இரண்டிலுமே இது காணப்படவில்லை. இதற்குக் கலியுக மாந்தர் பாத்திரர் அல்ல என்று கருதி வியாஸ பகவானும், மேத முனிவரும் கூறாமலே விட்டுவிட்டார்களோ என்னவோ?)

''நடுக்காட்டிலே, காட்டுத் தீயின் நடுவிலே, தனியிடத்தில் கொள்ளையர் சூழ்கையிலே, சத்துருக்களிடம் சிக்கிய போதிலே, சிங்கம், புலி, யானை போன்ற கொடிய மிருகங்கள் துரத்துகையிலே, அரசாங்க கோபத்துக்கு ஆளாகி மரண தண்டனையோ சிறைவாசமோ விதிக்கப் பெறுகையிலே, புயலில் கொந்தளிக்கும் கடலிடைப் படகில் பரிதவிக்கையிலே, கோரயுத்தத்தில் ஆயுதங்கள் மேலே விழ இருக்கும் போதிலே — இன்னும் இது போன்ற எல்லாக் கொடிய சங்கடங்களிலும் மனவேதனைகளிலும் என் சரிதத்தை ஸ்மரித்தாலே போதும், இக்கட்டிலிருந்து விடுபட்டு விடலாம்.

(எத்தனை விதமான ஆபத்துக்கள் உண்டு என்பதற்கு ஒரு ஜாபிதாவே தந்து விடுகிறாள் ஜகதம்பிகை. இப்படிப்பட்ட சமயங்களில் நிதானமாக மாஹாத்மிய பாராயணம் செய்வது எப்படிச்

சாத்தியம்? அதனால்தான் 'என் சரிதத்தைப் பாராயணம் செய்யவேண்டும்' என்று கூறாமல், 'என் சரிதத்தை ஸ்மரிக்க வேண்டும்' என்கிறாளா? 'எத்தனை இடரையும் உடைத்தெறியும் தேவிமாஹாத்மியம் உள்ளதல்லவா?' என்று இந்நூலையே ஒரு தேவதையாக பாவித்தாலும் போதுமோ?)

'கனி பலித்த ஆனந்தக் கட்டிப்பேறா'கிய அம்பிகை இப்படியாகக் கனிவாயால் மாகாத்மிய பாராயணத்தின் பலனை விளக்கிக் கூறிவிட்டு அந்தர்தானமாகி விட்டாள்.

பக்தியின்பமும் ஞானானந்தமும்தான் நூலின் பெரும் பலன் என்பதைச் சொல்லாமலே மறைந்தாள்! மஹா மாயைதான்! யாருக்கு அவள் இதைக் கூறினாளோ, அந்த தேவலோக வாசிகளுக்கு இந்த இரண்டும் முக்கிய இலக்கு அல்லவே! அதனாலோ என்னவோ?

தேவர்கள் பார்த்துக்கொண்டேயிருக்க, எங்கே எப்படிச் சென்றாள் என்று தெரியாமல் உருக்கரந்துவிட்டாள்! யுத்தரங்கத்தில் எங்கெங்கும் தானேயாகி நிறைந்து அதிவீர பராக்கிரமம் காட்டிய சண்டிகை இப்போது எங்குற்றாள்?

அவள் வேறெங்கோ போய் மறைந்தாள் என்பதில்லை. இருந்த இடத்திலேயே (தத்ரைவ) மறைந்தாள் என்பார் முனிவர். எல்லாமே அவள் இருப்பிடம்தான்; எங்கு நினைத்தாலும் அங்கு தனியான உருவம் கொள்வாள்.

* * *

தேவர்கள் அம்பாள் மறைந்ததற்காக வருந்தவில்லை. ஏனென்றால் அவர்கள் சாயுஜ்யம் கேட்கவில்லை; சாம்ராஜ்யம் தான் கேட்டனர். லீலை நடக்கவேண்டுமே!

இப்போது அசுரர் நாசமானதில் பரம திருப்தி அடைந்து அவர்கள் பொன்னாடு புகுந்தனர். இடைக்காலத்தில் சும்ப-நிசும்பர் கவர்ந்திருந்த ஹவிர்பாகங்களை தேவர்கள் மீளவும் பெற்று மகிழலாயினர். பதவிகளை இழந்திருந்த அவர்கள் மறுபடியும் தத்தம் அதிகாரங்களைப் பெற்று அவற்றைச் செலுத்தி இயற்கைச் சக்திகளால் உலகங்களுக்கு இன்பம் ஊட்டி, தாமும் இன்புற்று வாழலாயினர்.

இக் கதையின் விசேஷம் கதாநாயகரான நல்லவரின் மேன்மையோடு இது முடிவுறவில்லை; அவர்களுடைய எதிரிகளின் இன்பவாழ்வைச் சொல்லி முடிவடைகிறது! ஆம், அம்பாளின் லீலையில் அவர்களது கொடுமையும் தவிர்க்க முடியாததுதானே?

அவர்கள் இல்லாவிடில் அன்னை இத்தனை அன்பு மழை பொழிய இடமேது? விருத்தர், வியாதியஸ்தர், கோழைகள் போன்ற அவுணர்கள் யுத்தத்திலிருந்து நீங்கி உயிர் வாழ்ந்ததை முன்னரே பார்த்தோம் அல்லவா? அவர்கள் சும்பாசுரனிடம் தங்களுக்கு உரிய பாதாளத்துக்குப் போகலாம் என்று கூறியும் அவன் செவி சாய்க்கவில்லை என்பதும் நினைவிருக்கலாம். இப்போது அந்த அசுரர்கள் யாவரும் தங்களது சொந்த நாடான பாதாளத்துக்கு விச்ராந்தியாகப் போய்ச் சேர்ந்தார்கள். எதுவும் இருக்கிற இடத்தில் இருந்தால் தீமை இல்லை என்பதை உணர்த்துவதேபோல், அவுணர் கீழுலகம் புகுந்ததைச் சொல்லித் தலைக்கட்டுகிறார் மேதமுனிவர்.

★ ★ ★

சுரத மகாராஜனும் வைசியனான சமாதியும் சண்டிகா பரமேசுவரியின் அற்புத சரிதாம்ருதத்தை மொண்டு மொண்டுப் பருகிப் பரவசராக அமர்ந்திருந்தனர்.

மேதமுனிவர் மெல்லக் கூறலானார் : ''மன்னா! உனக்கும் இந்த வைசிய சிரேஷ்டனுக்கும் நல்லறிவு இருந்தும் மனத் தடுமாற்றம் உண்டானதற்குக் காரணம் கேட்டாய்! மகாமாயையின் மகாநாடகமே இது என்பதற்காக இத்தனை கதை சொன்னேன். உன்னையும் இவனையும் போலவே தேவாதிதேவரும் நாடிழந்து, பீடிழந்து தடுமாறித் தவித்த சந்தர்ப்பங்களைக் கூறினேன். இதற்கு எந்த மகாமாயை காரணமோ, அவளே அவ்வப்போதும் அவர்களைக் காத்தெடுத்துக் கருணை பொழிந்ததையும் கூறினேன். அவள்தான் உங்களுக்கும் கதி.

''நான் சொன்னதனைத்தும் அவள் பிரபாவத்தில் துளியினும் துளியே. இன்னும் இதுபோல் எத்தனையோ பிறப்பெடுத்தவள், பிறப்பற்ற நம் பிரம்ம சக்தி. தான் பிறப்பித்த லோகத்தைப் பரிபாலிக்கத் தானுமே சளைக்காமல் பிறப்புகள் எடுக்கிறாள். தன்னிலிருந்தே லோக சிருஷ்டி செய்கிறாள். அந்த லோகம் அவளையறியாது மயங்குவதும் அவள் காரியமே. அதனால் இடர் உறுவது, பிறகு அது தீர அவளைப் பிரார்த்திப்பது இவையும்கூட அவளுடைய திட்டம்தான். அண்டி விட்டால் போதும், மகாமாயையே ஞானம்பாளாகி ஞானம் நல்குகிறாள். இந்த ஞானத்தைக் கேட்கவொட்டாமல் சிலரைச் செய்து, அவர்கள் ஐசுவரியத்தையே கோருமாறு செய்து, அவர்கள் விரும்பிய வண்ணமே சகல சம்பத்துக்களையும் தருகிறாள்.''

ஞானிகளைவிட இவர்களே அவளது லீலா நாடகம் நடக்க உதவுகிறவர்கள்; அவளது காவிய சாமர்த்தியம் வெளியாவதற்கு உபகாரம் செய்கிறவர்கள்!

சுரத மன்னனும் இவ்விதம் அம்பிகையின் லீலை தொடருவதற்கு உபகாரம் புரிகிறவனே ஆவான். அவன் எத்தனைதான் ஞான வைராக்கியங்களில் திரும்ப யத்தனித்தாலும், உள்ளூரத் தான் இழந்த ராஜபோகத்தைத்தான் விரும்புகிறான், மோக்ஷ யோகத்தை நாடவில்லை என்பது முற்றுமுணர்ந்த முனிவர் பிரானுக்குத் தெற்றெனத் தெரிந்து விட்டது. ராஜ்யாதிகாரத்தின் நிலையாமையையும் பந்துமித்திராதிகளின் துரோகத்தையும் வன்மையாக அநுபவித்த பின்னரும்கூட உள்ளூர அவனுக்குச் சக்கரவர்த்தி போகத்தில் ஆசை போகவில்லை எனக் கண்டு கொண்டார், உள் மனத்தையும் உள்ளங்கை நெல்லியாகக் காணவல்லை மேதஸ். 'இதுவும் தேவியின் லீலை; அதற்கு மாறாக நாம் செய்வதற்கில்லை' என்று தெளிந்து லௌகிக சௌக்கியத்துக்காகவே அவனை அம்பாளிடம் ஈடுபடுத்துகிறார். லோகத்தில் தர்மராஜ்யம் தழைக்கவும் ஸுரதன் அரச பதவியில் அமர்வது உதவும் என்பதையும் மேதஸ் புரிந்து கொண்டிருப்பார் அல்லவா?

மனோ விசித்திரங்களை என்னென்பது? சாதாரண வாணிபனான சமாதியை விடச் சக்கரவர்த்தியான சுரதன் பட்ட அவமானமே மிகப் பெரியது. 'உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தால் உபத்திரவமும் அதிகம். திண்ணையிலிருந்து விழுந்தால் சுளுக்கோடு, சிராய்ப்போடு போகும்; மாடியிலிருந்து விழுந்தால் எலும்பே நொறுங்கி விடும்' என்று ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் சொல்வதற்கு இவ்விருவரும் திருஷ்டாந்தம் எனலாம். அதிகம் அடிபட்டவனுக்கே ஞான நாட்டம் தீவிரமாக உண்டாகியிருக்க வேண்டும். அதோடுகூட சமாதியைவிட சாஸ்திர ஞானம் அதிகம் உள்ளவனும் சுரத மன்னன்தான்! ஆனாலும் நடந்ததோ இதற்கு முற்றிலும் வேறு! போக்கியங்களை மிகவும் அதிகமாக அநுபவித்த மன்னனுக்கு அவற்றின் வாஸனை போகத்தான் இல்லை. ரக்தபீஜன் சிறிதளவு உள்ளேயிருந்து வேலை செய்து கொண்டே இருந்தான்! எளிய ஸமாதிக்கோ தேவி மகிமையைக் கேட்டதன் நற்பயனாக மறுபடி வீட்டு வாழ்க்கையும், வியாபாரமும் லபிக்க வேண்டும் என்ற ஆசை லவலேசமும் உண்டாகாமல், பரிபூரண ஞான வைராக்கியத்திலேயே பிடிப்பு உண்டாகி விட்டது. வைதிகமான வர்ணதர்மம் ஒருபோதும் மனநிலையில் உயர்வு தாழ்வுகளைக் கற்பிக்கவில்லை என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று தேவையில்லை.

முனிவர் கூறுவார்: ''அரசே! போகு ஊழ் என்பதாக சம்பத்தையும் சாம்ராஜ்யத்தையும் அபகரித்த அலக்ஷ்மி அவள்தான். பழைய பாபவினையின் பலன் இது. அவளிடம் பக்தி செலுத்திச் செலுத்திப் பாபத்தைக் கரைத்துக் கொண்டால் அவளே ஆகு ஊழ் ஆவாள். லக்ஷ்மியாக வந்து சகல ஐசுவரியங்களையும் வாரி வழங்குவாள். விஷ்ணுமாயையான அவளே ஞானத்தையும் அளிப்பாள். இப்போது அவளது மயக்குப் படலத்தில் நீ இருக்கிறாய்; இந்த வைசிய நல்லோனும் இருந்தான். நம்மை ஏன் மயக்கினாள் என்று கேட்டுப் பயனில்லை. இன்னும் எத்தனை எத்தனையோ விவேகிகளை இப்படியே மயக்கியிருக்கிறாள்; மயக்கி வருகிறாள்; மயக்கவும் போகிறாள்! அது அவள் தொழில்! விவேகிகள் விஷயமே இப்படி எனில் மற்றவரைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். நாடகம் முடிவுறாமல் நடந்து கொண்டேயிருக்கும்.

''பல பல பலுக்குவானேன்? பக்தி பண்ணியவருக்கு இக உலக போகமும், பிறகு சொர்க்கலோகமும், அல்லது இவையன்றி இங்கேயே இப்போதே ஞான மோக்ஷமும் அருளும் அந்தப் பரமேசுவரியை சரணடைவாயாக!''

சமாதி ஞான நிலைக்கு அவாவும்போது, அரசனோ ராஜபோகத்துக்கே ஏங்குகிறான். ஆனாலும் மேத முனிவர் குத்திக்காட்டிப் பேச மாட்டார். இருவரிடை உயர்வு தாழ்வு தொனிக்குமாறு அவர் பேசமாட்டார். அவருடைய பெருமை அது. அரசனின் உள்ளூறிய ராஜஸத்தையும், சமாதியின் எளிமையையும் நன்கு உணர்ந்தவராதலால், பின்னவனைக் கவனிக்காததுபோல் அரசனிடமே பேசுகிறார். ஆயினும் பின்னவனுக்கு வேண்டிய ஞானம் அவள் கருணையாலேயே சித்திக்கிறது என்பதையும் வலியுறுத்துகிறார்.

மன்னன் ஞானத்துக்கு மாறாக, இழந்த அரசையே மீண்டும் விரும்புகிறான் என்பதைத் தாம் தெரிந்து கொண்டதாகப் பகிரங்கமாகக் காட்டாமலே பேசுகிறார் சொல்லின் செல்வரான மேதஸ். அரசனுடைய குண விசித்திரத்தைப் பாருங்கள். அவனும் தன் விருப்பம் இன்னவென்றே அவரிடம் வெளியிடவில்லை.*

---

* இனி வரும் கதைப்பகுதி மான்மியத்தையும் பாகவதத்தையும் ஒருங்கிணைத்து எழுதப்பட்டிருக்கிறது.

''ஐயனே! அன்னையின் அளப்பரிய ஆற்றலையும், அபரிமித அருளையும் பற்றிக் கேட்டுக் கேட்டு அவளையே உள்ளம் பற்றி நிற்கிறது. தேவர்கள் தம் விருப்பம் ஈடேற அவளைத் தஞ்சம் புகுந்ததுபோல், நானும் எனது மனோரத பூர்த்திக்காக அவளையே அடைக்கலம் புகுகிறேன். அவளை என் கண்ணாரத் தரிசிக்கவும் அவளது கனிவாய்ச் சொல் கேட்கவும் பேரார்வம் கொள்கிறேன். அவளைத் தரிசித்து வரம் பெற உபாயம் கூறி அருள வேணும்'' என்று ஸுரதன் கேட்டுக் கொண்டான்.

தேவி மாஹாத்மிய படனமும் சிரவணமுமே அம்பாளை நேருக்கு நேராகப் பெறுவதற்குப் போதுமானதுதான். ஆனாலும் அதிலேயே மனம் முற்றிலும் கரைந்திருந்தால்தான் இப்பலன் கிட்டும். அம்பிகையே இப்பாராயணத்தின் பலன்களை விஸ்தாரமாகக் கூறியிருந்தும் கூட, ஸுரதன் அவளது திருவருள் பெற வழி கேட்பதிலிருந்தே அவனால் மான்மிய பாராயணத்தையே பூரணமாக நம்பிப் பலன் பெற முடியாது என்றாகிவிட்டது. ஏனெனில் சாதகனின் சிரத்தையும் பலன் தருவதில் ஒரு முக்கிய காரணமாகிறது. பாராயணம் போன்றதொரு சுலபமான சாதனத்தால் நாம் விரும்பும் அரிய பலனைப் பெற முடியுமா என்றே நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் நினைப்பர். இந்த அவநம்பிக்கையே பலனைக் குறைத்துவிடும். அது மட்டுமின்றி, ராஜஸ தாமஸ குணங்கள் மிகுந்த பெரும்பாலோரால் வெறும் சுலோக பாராயணத்தில் பூரணமாக உள்ளத்தைக் கரைக்க இயலாமல், சிந்தனை இழைகள் வெளியிலும் ஓடிக்கொண்டுதான் இருக்கும். பாராயண விஷயம் மட்டுந்தான் இப்படி என்றில்லை. பூஜை, ஜபம், தியானம் என்று எதை எடுத்துக்கொண்டாலுமே எதுவொன்றிலும் நீண்ட நேரம் பெரும்பான்மையினரின் மனம் ஈடுபட்டு நில்லாது. எனவே ஒன்றன்பின் ஒன்றாக இவை அனைத்தையும் மேற்கொண்டாலே எப்பொழுதும் அம்பிகையின் நினைவில் தோய்ந்திருக்க முடியும்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு மேதையான மேத முனிவர், ''மன்னா, வைசிய சிரேஷ்டா! நீங்கள் இருவரும் தேவீ மாஹாத்மிய பாராயணம் செய்யுங்கள். அதோடு கூட உங்களுக்குப் பரம உத்கிருஷ்டமான நவாக்ஷரீ மகாமந்திரம் உபதேசிக்கிறேன். அதையும் முடிந்த மட்டும் ஜபித்து வாருங்கள். தேவியைக் குறித்த வேள்விகளைக் கற்பிக்கிறேன். ஹோமம் செய்து வாருங்கள். மூர்த்தி வைத்துப் பூஜையும் செய்யுங்கள். தனிமையில் தியானம் செய்து பழகுங்கள். ஆரம்பத்தில் எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம்

செய்து நேரத்தை எல்லாம் தேவி நினைவில் செலுத்துங்கள். பிறகு தானாகவே இவற்றுள் எந்த மார்க்கம் உங்கள் மனத்தை விசேஷமாக வசீகரிக்கிறது என்று கண்டு கொள்வீர்கள். அப்போது அப்பியாச பலத்தினால் மற்ற சாதனங்களை விட்டு இது ஒன்றிலேயே அலுக்காமல் சலிக்காமல் ஆழ்ந்து ஈடுபடும் பக்குவம் உங்களுக்கு வந்திருக்கும். அந்த ஒரு சாதனையிலேயே பரிபூரணமாக ஈடுபடுங்கள். பலன் தரவேண்டிய வேளையில் தேவி பிரசன்னமாவாள்'' என்றார்.

மான்மியத்தை ஒரு முறை பாராயணம் செய்துவிட்டாலே இக-பர நலன் அனைத்தும் கிட்டிவிடும் என்று அம்பாளின் வாக்கிலேயே சொல்லிச் சிறிது சென்றபின் இத்தனை பெரிய சாதனா மார்க்கத்தைக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. அம்பாள் சொன்னதுபோல் பொறி புலன்கள் சற்றும் சிதறாமல் 'ஸமாஹிதனாக' ஒரே முறை பாராயணம் செய்துவிட்டால் போதுமானதுதான் . ஆனால் இந்த மன ஒருமைப்பாடு உண்டாவது லேசல்ல. எளிதாகவே பலன் வந்துவிடும் போல் ஆசை காட்டியது அம்பாளின் தவறல்ல. எந்தப் புண்ணிய நூலிலுமே இப்படிப் பலனை மிகவும் உயர்த்தித்தான் முனிவர்கள் கூறுவர். மிகைபடக் கூறி அவர்கள் விசேஷமாகச் சொன்னால்தான் ஒன்றிடம் பற்று உண்டாகிறது. பற்று உண்டாகி ஒரு முறை பாராயணம் செய்துவிட்டாலோ, அந்தப் பற்று இன்னும் அதிகமாகிறது! எனவே ஒருமுறை படித்தும் பயனில்லை என்று குறையே கூறாமல், மறுமுறையும் விரும்பிப் படிக்கிற ஆர்வம் உண்டாகிறது. நமக்கு இத்தனை பற்று இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தாலும்கூட, நம் உள்ளம் இதிலேயே ஈடுபடாமல் சித்தம் எப்படி எல்லாம் சிதறுகிறது என்பதையும் உணருகிறோம். நாம் பூர்வத்தில் செய்த தவற்றையும் ஏதோ ஒரு விதத்தில் உணருகிறோம். இப்படியாகப் போகப்போக ஏதோ ஒரு விதத்தில் அம்பாளின் அன்பையும் உணரத் தொடங்குகிறோம். நமது குறையுடைய ஈடுபாட்டையும் பண்டைய கர்மத்தையும் கவனிக்குமிடத்து அவளிடமிருந்து இத்தனை விரைவில் பலன் கோர உரிமையில்லை என்றும் நன்றாகத் தெரிந்து கொள்கிறோம். எனவே 'ஒரே முறை' என்று சொன்னதைப் பெரிதாக எண்ணாமல் பலமுறை பாராயணம் செய்கிறோம். 'ஒரே முறை' என்று சொன்னாலன்றி இதில் நாம் பிரவேசித்திருக்கவே மாட்டோம். பிரவேசித்தபின் எத்தனை முறையாயினும் சரி என்கிற அறிவை அவளே மெல்ல மெல்ல உண்டாக்கிவிடுகிறாள்.

இன்னொரு விஷயமும் கவனிக்க வேண்டும். நாம் உத்தேசிக்கிற பலன் அநேகமாக அம்பிகையின் பிரத்தியக்ஷ தரிசனம் அல்ல. வேறு ஏதேதோ பலன்களைத்தான் விரும்புகிறோம். தேவிமாஹாத்மியத்தில் அம்பாள் பலஸ்துதி கூறுகையிலும் ''இதன்பலனாக நான் நேரில் தோன்றுவேன்; முகமுகமாக உரையாடுவேன்'' என்று சொல்லக் காணோம். பலவிதமான இடர்களின் நீக்கத்தைத்தான் அவள் விசேஷித்துச் சொல்கிறாள். நமது அரைகுறை ஈடுபாட்டுடன் நாம் ஓரிரு முறை பாராயணம் செய்தாலே இவ்விதமான இடர்களில் பல ஓடித்தான் விடுகின்றன. ஆனாலும் மிகவும் பெரிய பலனை — மன்னனைப் போல் ராஜ்யாதிகாரம் கிடைக்க வேண்டும், ஸமாதியைப் போல் பரம ஞானம் ஸித்திக்க வேண்டும் என்பது போன்ற பலன்களை — நாடும்போது சாதனை இன்னும் கடுமையாகத்தான் இருக்க வேண்டும். மன்னன் தேவி பிரத்யக்ஷமாகி வரம் தர வேண்டும் என்று வேறு விரும்புகிறான். எனவே அவனுக்கு முனிவர் விரிவான உபாஸனாக் கிரமத்தை உபாயமாக விதித்தது பொருத்தம்தானே?

''குழந்தைகாள்! இந்தக் காட்டினுள்ளேயே சிறிது தூரத்தில் ஓர் ஆறு ஓடுகிறது. அதனுள் ரமணீயமான மணல் திட்டுக்கள் உள்ளன. அமைதி பூத்த அந்த ஏகாந்தச் சூழலில் நீங்கள் ஏகாக்ர சித்தத்தோடு தேவியை ஆராதித்து வாருங்கள். மணலாலேயே அம்பிகைக்கு பிரதிமை செய்து வைத்துப் பூஜித்து வாருங்கள். உங்களது உணவுத் தேவைகளை என் ஆசிரம வாசிகள் பூர்த்தி செய்து வைப்பார்கள். ஹோமத் திரவியங்களையும் குறையாமல் அளிப்பார்கள்'' என்று பேத முனிவர் கூறினார்.

துர்க்கா-லக்ஷ்மி-சரஸ்வதி-சாமுண்டா வடிவினளான சண்டிகா பரமேசுவரி எனும் மூலப் பிரம்ம சக்தியை ஒலியால் காட்டித் தரும், கட்டிப் பிடித்துத் தரும் நவாக்ஷரீ என்ற புனித மந்திரத்தை அன்பும் தூய்மையும் உருவான முனிவர் அவ்விருவருக்கும் உபதேசித்தார் — பசு கன்றுக்குப் பால் ஈவது போல். துர்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, சாமுண்டாதேவி என்று இங்கு நால்வரைச் சொன்னோம். இன்னும் சிவதூதி, ஸப்த மாதாக்களான் எழுவர் ஆகியோரையும் உள்ளே சந்தித்திருக்கிறோம். இந்த நூலைப் படிப்பவர்கள் ஒரு பெரிய தப்பைச் செய்துவிடக் கூடாது! அதாவது இந்தத் தேவியர்கள் முற்றிலும் வேறு வேறானவர் என்று ஒரு போதும் எண்ணிவிடக் கூடாது. சகலமும் ஒரே சக்தியின் தோற்றங்களே. இந்தப் பேருணர்வை இந்தப் புராணம் உண்டாக்குவதே முடிவான பலன்.

அந்த அளவுக்கு நாம் போகாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அவளுடைய ஆவிர்பாவ ரூப பேதங்களுக்குள்ளேயே சாரத்திலும் பேதமிருப்பதாக நினைத்துவிடக் கூடாது. ஒரொரு சந்தர்ப்பத்தில் ஒரொரு அம்சம் விசேஷமாகப் பூரித்து நிற்கும் வண்ணம் ஆவிர்பவித்தாலும், ஒவ்வொரு ஆவிர்பாவமும் சகல அம்சங்களும் நிறைந்த ஏக பூரணமேயாகும். காளி-ஆனந்தம்; லக்ஷ்மி-ஞானம்; சரஸ்வதி-சத்தியம்; சத்திய ஞான ஆனந்த கனத்துடன் நம்மைச் சேர்ப்பதற்காக நம் பாபப் படையை அழிக்கும் கோபமென்ற அருள் வடிவே சாமுண்டி என்றெல்லாம் சொன்னாலும், இவர்கள் ஒவ்வொருத்தருமே பூரணப் பிரம்ம சக்திதான். இவர்கள் ஒருவரில் ஒருவர் பின்னிப் பிணைந்து பின்னமற்றிப்பவர்கள்.

இந்த உண்மையை தேவீ மாஹாத்மியத்தின் அத்தியாயக் கிரமமே நமக்கு உணர்த்துகிறது. ஸத்-சித்-ஆனந்தம் என்றே சொல்கிறோம். இச்சரிதையில் சரஸ்வதி-ஸத், லக்ஷ்மி-சித், காளி-ஆனந்தம் என்று பார்த்தோம். நவாக்ஷரீ மந்திரமும் முதலில் ஸத், பிறகு சித், பின்பு ஆனந்தத்துக்கான அக்ஷரங்களைக் கொண்டுள்ளது. ஆனால் விருந்தாந்தமோ இதற்கு நேர் எதிராக ஆனந்தம்-சித்-ஸத் என்று இருக்கிறது. முதலில் காளி சரிதம், இடையில் லக்ஷ்மி சரிதம், முடிவில் சரஸ்வதி சரிதம் என்றிருக்கிறது. இவற்றைத்தான் 'உதயம்', 'உச்சி', 'லயம்' என்ற மூன்று பகுதிகளாக இந்நூலில் கண்டோம். ஸத்-சித்-ஆனந்தம் அல்லது ஆனந்தம்-சித்-ஸத் என்று எப்படிப் பார்த்தாலும் 'சித்' தான லக்ஷ்மி நடுவிலேயே வந்து விடுகிறாள். ஆனால் இதிலும்கூட ஒரு முரண்பாடு. முதலில் நமக்கு ஏற்பட வேண்டியது ஞானத் தேட்டம்தான். 'ஞான மார்க்கம்', 'ஞானி' என்றுதான் சொல்கிறோமேயொழிய 'சத்திய மார்க்கம்', 'சத்தியன்' என்றோ, 'ஆனந்த மார்க்கம்', 'ஆனந்தன்' என்றோ சொல்வதில்லை. நாம் நமது அஞ்ஞானத்திலிருந்து ஞானத்தைத் தேட ஆரம்பித்தால் அதுவே நம்மைச் சத்தியத்திலும் ஆனந்தத்திலும் சேர்த்து விடும். எனவே, நம் அஞ்ஞான இருளில் ஞானத் தேட்டம்தான் அருணோதயமாக செங்கிற்று பரப்பவேண்டும். அதாவது சிவந்த ஞானலக்ஷ்மிதான் இப்பகுதியில் உதயசூரியனாகத் தொடக்கத்தில் வரவேண்டும். அதிலிருந்து இருப்பது ஒரே சத்தியம் என்று தெளிந்து அதன் வெள்ளொளி உச்சிசூரியனாக எங்கும் பொழிவதை அறிய வேண்டும். அதாவது வெண்சரஸ்வதி இச்சரிதத்தின் மத்திமப் பகுதியில் வரவேண்டும். ஒரே சத்தியத்தை அறிந்து அதில் லயம் அடைந்து ஆனந்திப்பது — மறுபடி பிரிகிற சாதாரண லயமாகக் கூட இல்லாமல்

சாசுவத லயமான பிரளயமாக ஒடுங்கி ஆனந்திப்பது — சூரியன் மலைவாயில் விழுந்தபின் ஏற்படும் இருள் இன்பம். அது கரிய காளியின் சரிதையாக முடிவுப் பகுதியில் வர வேண்டும். ஆனால் இந்நூலில் நாம் காண்பதோ லய காளி உதயமாகவும், உதய லக்ஷ்மி உச்சியாகவும், உச்சி சரஸ்வதி லயமாகவும் இருப்பதையே. இவர்களை அடியோடு பேதமாக எண்ணிவிடக் கூடாது; இவர்கள் ஒவ்வொரு காரியநிமித்தம் பிரம்மசக்தியின் ஒவ்வோர் அம்சம்போல் காட்டிக்கொண்டாலும் ஒவ்வொருத்தியும் பூரண சக்தியே, ஒருத்தியில் இன்னொருத்தி இன்னுயிராக இழைபவளே என்று உணர்த்தத்தான் 'மான்மிய'த்தின் அத்தியாயக் கிரமம் இப்படிக் கிரமம் மாறினாற்போல் அமைந்திருக்கிறது எனத் தெளிய வேண்டும்.

ரிக் வேதத்தில் காணப்படும் தேவீ ஸூக்தத்தையும் ஸுரத ஸமாதியருக்கு முனிவர் உபதேசித்தார்.

''சக்தி அத்வைதம்'' என்று ஒன்று இருக்குமாயின் அதன் கொடுமுடி இந்த ''தேவீ ஸூக்தம்''தான். சாதாரணமாகச் சொல்லப்படும் அத்வைதம் 'பிரம்ம அத்வைத'மேயாகும். அதாவது காரியமற்ற பிரம்மத்தில் ஒன்றியிருப்பதாகும். ஆனால் தேவி சூக்தத்தை அருளிய அம்ப்ருண முனிவரின் குமாரியான வாக் என்பவள் இந்த அத்வைதத்தைப் பகரவில்லை. பகருவதே காரியமாகி விடுகிறபோது, அது எப்படி காரியமற்ற பிரம்மாத்வைதமாக இருக்க முடியும்? ஏதோ ஓர் அற்புத அநுக்கிர விசேஷத்தால் அவள் சகல காரிய காரணியான பரப்பிரம்ம சக்தியுடன் இரண்டற ஒன்றியிருக்கிறாள். அந்த நிலையில் இருந்து கொண்டு. ''இந்தப் பிரம்மாண்டங்களில் மாபெரும் இயக்கங்களை எல்லாம் நானே செய்கிறேன்'' என்று உள்ளத்தை ஆட்கொள்ளும் உத்தம வேத வாக்குகளால் நவில்கிறாள். காரியமற்ற நிலையில் பிரம்மத்தோடு பிரம்மமாக ஓங்கி நிற்பதையும், காரியமுள்ள நிலையில் பிரம்ம சக்தியின் முன் துரும்பாக அடங்கிக் கிடப்பதையும் நமக்கு ராமகிருஷ்ணர் காட்டினார். இப்படி அடங்கிக் கிடப்பவர்களை அச்சக்தி தானாகவே ஆக்கி, தன் அபரிமிதச் செயல்களையெல்லாம் அவர்களுடையதாக உணர்விக்கிற அத்வைதத்தையும் செய்துவிடும் போலும்!

இப்படிப்பட்ட ஸூக்தத்தை உபதேசித்ததோடு, தேவீ ஹோமங்களையும் அவர்களுக்குக் கற்பித்தார் மேதஸ்.

★ ★ ★

ஸுரதனும் ஸமாதியும் ஆற்றுப் படுகையை அடைந்தனர். அடங்கி ஓடிய ஆற்றைக் கண்டதுமே மனமும் கொஞ்சம் அடங்கிற்று. வெண் மணலை எடுத்து அம்பிகைக்குப் பிரதிமை செய்தனர். பாகவத காலத்தில் கோபிகைகள் இவ்விதமே காத்யாயனிக்கு ஆற்றங் கரையில் ஆற்று மணலால் உருவம் எடுத்ததாக அறிகிறோம். சங்க காலத் தமிழ்ப் பெண்டிரும் அம்பாவாடல் என்ற பெயரில் நீராடி, நதிக் கரையிலேயே 'பாவை' என்கிற மண் பதுமை வைத்து அவளை வழிபட்டனர் என்று அறிகிறோம். ஆதார சக்தியான மண்ணாயும், உயிர்ச் சக்தி-கருணைச் சக்தி இரண்டுக்கும் உருவகமான நீராயும் உள்ள பராசக்தியை ஐம்பூதங்களில் முதலான இவ்விரண்டுடன் தொடர்புறுத்தி வழிபடுவதில் விசேஷம் இருக்கத்தான் வேண்டும்.

சுரத சமாதியர் சர்வேசுவரிக்கு அர்ச்சனையுடன் பூஜை செய்தனர். அக்னி வளர்த்து ஹோமம் செய்தனர். நவாக்ஷரியை ஆயிரக்கணக்கான ஆவிருத்திகள் உருவேற்றினர். தேவியின் புனித மான்மியத்தைப் பாராயணம் செய்தனர். தேவீ சூக்தத்தைத் தவறாமல் ஓதினர். சிறுகச் சிறுக ஆகாரங்களையும் இதர சௌக்கியங்களையும் குறைத்துக்கொண்டு, வழிபாட்டின் பல வழிகளிலேயே சிரத்தையுடன் முழுகினர். அதுவும் அவள் அருள்தான்! அவளருளாலேதான் அவள் தாள் வணங்க முடியும்!

ஒரு மாதம் இப்படி ஆனதும் பலன் இல்லையே என்று சோர்வு பிறப்பதற்குப் பதில் அவர்களுக்குள் ஒரு தெளிவு உண்டாயிற்று, திருப்தி உண்டாயிற்று, நிச்சயம் உண்டாயிற்று, நம்பிக்கை உண்டாயிற்று. இனம் தெரியா ஓர் இன்பக்கிளர்ச்சி உள்ளத்திலே அவ்வப்போது மூளுவதை உணர்ந்தனர். அம்பாளின் கிருபையால், இப்போது அவர்களுக்குச் சாதகர்களுக்கு ஏற்படக்கூடிய மிகப் பெரிய விபத்தான அகங்காரம் உண்டாகாமல், அடக்கமே உண்டாயிற்று.

சஞ்சல சித்தத்துடன் பித்தராக இருந்த நமக்கு இந்த சாந்த சௌக்கியம் தந்தவர் மேதஸ் அன்றோ என்ற நன்றி ஊற்றெடுத்தது. முனிவரிடம் வந்து தங்களது அபிவிருத்தியைத் தெரிவித்தார்கள். அவரும் தாம் விதைத்த வித்து புவியைப் பிளந்து கொண்டு பசிய முளையாக வந்தது கண்டு நிறைவு பெற்று அவர்களை வாழ்த்தி அனுப்பினார். அந்த வாழ்த்து மூலமாக மேலும் பக்தி சக்தியை அவர்களுக்குள் பாய்ச்சினார்.

நாளுக்கு நாள் சாதனையின் உக்கிரம் வலுத்தது. மனம் மேலும் மேலும் ஒருமுகப்பட்டது. மனம் வளர வளர சரீர போஷணையில் நாட்டம் நலிந்தது. சமைத்த அன்னத்தை நீத்துக் கனிவகைகளை உண்ணலாயினர். பிறகு அதையும் விட்டு, இலைகளை உண்டனர். அதுவும் மாறியது; தானாக உதிர்ந்த சருகைத் தின்றால் போதும் என்ற நிலை உண்டாயிற்று.

என்னே ஆச்சரியம்! அம்பாள் சாதகன் விரும்புவதற்கும் மேல் தருவதற்கு விரும்புகிறாள்! அவனது விருப்பத்தையே மாற்றி உயர்த்துகிறாள். ஸுரதனுக்கு ராஜ்யம் கிடைக்க வேண்டும் என்ற ஆசையும் குறையலாயிற்று. ஸமாதிக்கோ ஞானம் வேண்டும் என்ற ஆசைகூடக் குறைந்தது. அம்பாளுக்காகவே அம்பாளை வேண்டுகிற பாவம் ஒன்றே வளர்ந்தது. இருவருக்கும் அவளைத் தரிசித்தேயாக வேண்டும் என்ற ஆர்வம் ஒன்றே நின்றது. சரீரமே சருகாகி விழுந்தாலும் சரி, சிரத்தை குன்றாமல் அவளை உபாசித்துக் கண்ணுக்கு மெய்யாகக் கண்டு விட வேண்டும் என்ற வெறி மிகுந்தது. சரீரம் போனபின் தரிசிப்பது எப்படி என்று நாம் கேட்போம். ஆனால் அவர்களுக்கோ அந்த உன்னத பக்தி நிலையில் அம்பாளின் தரிசனம் என்பது சரீர சம்பந்தமானதல்ல என்பது அவளருளால் தெரிந்திருந்தது.

ஆனால் இவர்களுடைய பழைய கருமத்தை அம்பிகை எத்தனைதான் நெருக்கி நெருக்கித் தீர்த்தும்கூட அது தீர்ந்த பாடாக இல்லை. மாதம் மாதமாக உருண்டு இரண்டாண்டுகள் ஓடின. கர்மக் கணக்குப் பார்த்த அம்பிகை உவகை பூத்தாள்.

கனவில் வந்து நின்று கனிவுக் கோலத்தை அவர்களுக்குக் காட்டியருளினாள்.

'நமக்குமா தரிசனம்!' எனப் பரவசமாயினர்.

பதுமையில் வழிபட்ட பராசக்தி பதுமபாதத்தைக் காட்டினாளே என்று புளகித்து அதை இறுகப் பிடித்துக்கொள்ள வேண்டுமென, '' அம்மா, அம்மா'' என்று ஆர்த்தனர்.

விழிப்புற்றனர்.

தரிசனத்தின் ஆனந்தம் பெரிதா, வெறும் கனவாயிற்றே என்ற தாபம் பெரிதா என்று புரியாத நிலை உண்டாயிற்று.

மேதஸிடம் கனவைக் கூறினர். சந்துஷ்டராகச் சிரித்தார் முனிவர். ''கனவே நனவாகும். நனவு என்று நினைப்பதெல்லாமும் கனவுதான். விடாமுயற்சியுடன் உபாஸனையைத் தொடருங்கள்'' என்று ஆசி கூறித் திரும்பவும் அனுப்பினர்.

அந்த ஆசியின் சக்தியில் அவர்கள் மேலும் ஓர் ஆண்டு தவமிருந்தனர்.

ஹோமம், ஹோமம் என்று நெய்யை வார்த்து, மற்ற பலிகளைத் தந்தால் போதுமா? தம் சரீரத்தையே பலிகொடுத்து விடவேண்டியதுதான் என்கிற துடிப்பு உண்டாயிற்று.

ஹிம்சை -அஹிம்சை என்கிற பாகுபாடுகளைத் தாண்டி ஸர்வ ஸமர்ப்பணத்தின் உருவகம் சரீர பலிதான் என்கிற ஒரே உணர்வில் செயற்கரியதைச் செய்யலாயினர் சுரதனும், சமாதியும்.

ஆம்! தங்களது அங்கங்களையே கண்டம் கண்டமாகச் சேதித்து குருதியில் தோய்ந்த ஊனைச் செக்கச் சிவந்த தீயில் ஆஹுதி செலுத்தினர்.

சரீர ஆசை, வலி, துன்பம் அருவருப்பு, பயங்கரம் அத்தனையையும் தூரத் தள்ளி, ''தேவியைக் காணாத தேகம் எதற்கு?'' என்ற தீவிரத்துடன் தங்கள் ஊனையே அரிந்து பலிகொடுத்தனர்.

அதன் பின்னும் அம்பாளால் பொறுக்க முடியுமா?

ஒரு நூற்றாண்டுக்கு முன்கூட, ராமகிருஷ்ணர் கழுத்தை வெட்டிக்கொள்ள முற்பட்டபோது, கட்டிக் கரும்பாகத் தரிசனம் தந்து, கட்டிக் காத்தவளல்லவா?

⋆ ⋆ ⋆

மகாமகா பாக்கியசாலிகளுக்கே கிட்டக்கூடிய தனது திவ்விய தரிசனத்தை சுரத-சமாதியருக்கு அளித்தே விட்டாள் ஜகத்தாத்ரியான சண்டிகா பரமேசுவரி!

கண்ட கண் நிலைக் குத்திட்டு நிற்க, உடலெல்லாம் புளகித்து, உள்ளமெல்லாம் சிலும்பி நின்றனர் சுரதனும் சமாதியும்.

அகிலாண்டங்களை ஆக்கி, காத்து, அழிக்கும் மகா பராசக்தி மெய்யாகவே அன்னையாக இன்னுருவம் கொண்டு கண்களுக்கெதிரே நிற்கிறது!

மலர் வாயைத் திறந்து அருள்தேனைப் பொழியவும் செய்கிறது.

இவர்கள் வரம் கேட்கவில்லை.

வாயடைத்து விதிர்விதிர்த்து நின்றனர்.

அவளே வாய் திறந்து செப்பினாள்.

''பூபதியே! நீ என்னிடம் எதையெல்லாம் பிரார்த்திக்கிறாயோ அதனைத்தையும் மிகுந்த பிரீதியுடன் அடைவிக்கிறேன். குலநந்தனா! உனக்கும் எது வேண்டுமோ அதனை விருப்போடு வழங்குகிறேன்'' என்றாள் வரதாயகி.

சுரதனை 'பூபதி' என்றும் சமாதியை 'குலநந்தனன்' என்றும் அழைக்கிறாள்! பூமிக்குப் பதியாக இருந்து ஆள வேண்டும் என்கிற ஆசையினால்தான் இவன் தவமிருந்தான். தவத்தின் உக்கிரத்தில் தரிசனமே இறுதிப் பலன் என்று தோன்றி, அதற்காகத் தன் தேகத்தையே தியாகம் செய்கிற உத்தம பக்தி இவனுக்குத் தோன்றிய போதிலும், இவள் பழையபடி பூபாலனத்தில்தான் அவனது மனத்தைத் திருப்பப் போகிறாள். அவளது லீலை அப்படி! ஒரு முறை பாராயணம் செய்தாலே சகல பலனும் சித்திக்கும் என்று ஆசைகாட்டி, அதன் மூலமே பன்முறை படிக்கவைக்கிறவள் அல்லவா? அதேபோல் பெரும்பாலான அடியார்களுக்கு சம்பத்தைத் தருவதன் மூலம், நம்மையும் இம்மை இன்பத்துக்காக அவளை நாடவைப்பாள். தொடக்கத்திலேயே மறுமை இன்பத்தைக் கோரப் பக்குவப்படாத நமக்கு அந்த ஆரம்ப தசையில் ஒரு பிடிப்பு ஏற்படுத்தித் தரவே இப்படிச் செய்வாள். இகலோக சம்பத்துக்களை அநுபவித்த பிறகுதான் அவற்றில் சாரமில்லை என்று நாம் தெரிந்து கொள்வோம். அநுபவிக்காத வரையில் அவற்றில் ஏதோ சாசுவதமான ஆன்ம நிறைவு இருப்பதாகத்தான் எண்ணிக்கொண்டிருப்போம். எனவே அதனிடம் நமக்குப் பற்று போவதற்காகவே அதை நமக்குக் கூட்டிவைப்பாள். பிறகே, ''ஆகா, இதனால் மனம் நிறைந்து விடவில்லையே! வாழ்க்கை முழுமை பெற்றதாகத் தெரியவில்லையே!'' என்று உணர்வோம். அதன் பின்தான் உண்மைத் தாபத்துடன் ஞானத்தை நாடுவோம். அவள் நமக்கு உண்மையாகத் தர விரும்புவதும் அதைத்தான். ''உனக்குப் பிடித்ததை நான் தருவதற்குக் காரணம், படிப்படியாக எனக்குப் பிடித்ததையே நீ பிடித்தமுடன் பிரார்த்திக்குமாறு செய்வதற்காகத்தான்'' என்று இதைத்தான் ஷீர்டி ஸாயி பாபா கூறினார்.

நமக்கு ஏதாவது லௌகிகத் தேட்டங்கள் இருந்துகொண்டேயிருக்கின்றன. இதுபோன்ற சந்தர்ப்பத்தில் 'ராஜ்யத்தை இழந்த ஓர் அரசனுக்கு அம்பிகை ஞானம் தந்தாள்' என்று ஒரு கதையைப் படித்தால் அதனால் நமக்கு எந்தப் பிரயோஜனமும் உண்டாவதில்லை. ஆனால் 'அரசனுக்கு மறுபடி ராஜ்யம் கிடைத்தது' என்றால் நாமும் நமது லௌகிகக் குறை நீங்க அவளை அணுகுவோம். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக அவள் நம்மை ஞானத்தின் திசைக்குத் திருப்புவாள். எல்லாவற்றையும் வெகு நாசூக்காக, நாணத்துடன், இயல்பாக நடப்பது போல் நடத்திக் காட்டுகிற 'ஹ்ரீ' அல்லவா அவள்?

நம் போன்ற லௌகிகரின் மனம் அவளிடம் திரும்புவதற்காகவே இப்போது சுரதனின் மனத்தை லௌகிகத்தில் திருப்பி விட்டாள். 'பூபதி' என்ற சொல்லாலேயே அவன் கேட்கப் போகிற வரத்தை அவள் சங்கற்பித்து விட்டாள்!

லௌகிகரை மேன்மேலும் பக்குவப்படுத்துகிற தேவி, ஆழ்ந்த ஆசையை வீழ்த்திக்கொண்டு அவளுக்காகவே அவளை வேண்டுமளவுக்கு உயர்ந்த ஸுரதனை மீண்டும் லௌகிகத்தில் தள்ளலாமா என்ற கேள்வி எழும். ஸுரதனை அவள் தள்ளியது துச்சமான லௌகிகத்தில் அல்ல. லௌகிகம் என்றே சொல்ல முடியாத ஓர் அற்புத நிலைக்கு அவனை உயர்வித்தாள். ''லோகமும் அம்பாள்; அதில் தர்மம் அதர்மம் இரண்டும் அவளே என்றாலும், தர்மத்தை வளர்க்கிற லீலையால் மனித நெஞ்சங்களை நிறைவிக்கிறாள். இந்த லீலைக்கு அவளது கருவியாக இருப்பவன் அரசன். அவள் இயக்குகிறபடி இவன் உலகைத் தர்ம மார்க்கத்தில் ஓட்டிச் சென்றால் இவனுக்கும் களிப்பு, உலகுக்கும் களிப்பு, அவளுக்கும் களிப்பு. இப்படி ஒரு பெரிய விளையாட்டை அம்மாவுடன் குழந்தை விளையாடுவது போல் நாம் விளையாட வேண்டும். அனைத்தும் ஒனறே என்ற ஞானத்துடன் ஜனகன் ராஜ்ய பரிபாலனம் செய்தது போலவே, நாமும், 'அனைத்தும் ஒன்றாக ஞான நிலையில் இருக்கிற அவள், பிரேமை நிலையில் பலவாகி, தர்மத்தால் அந்தப் பிரேமையை அனுபவிக்கும் ஆனந்தத்தைத் தருகிறாள்' என்று உணர்ந்து நாடாளவேண்டும். பாரில் தர்மம் தழைப்பதற்காகவே பாலனம் செய்யவேண்டும். அவளது அற்புதக் கற்பனையான லோகத்தை ஒதுக்காமல் இதிலேயே அவளை வேதரிஷிகள் கண்டாற்போல நாமும் காண வேண்டும். கர்மங்களை ஒதுக்காமல், ஆனால் தன்னலனின்றி லோக க்ஷேமத்துக்காக அவளுக்கு

அர்ப்பணமாகச் செய்து தர்ம மார்க்கத்தில் ரதமாக வாழ்க்கையை ஓட்ட வேண்டும். ஆம், நான் ஸு-ரதன். நான் நல்ல ரதம் உடையவன் மட்டும் அல்ல; நானே அவளுடைய நல்ல ரதம்! நானிலத்தை நல்லதில் அழைத்துச் செல்லும் அவளுடைய ரதம்'' என்று அவனை எண்ணச் செய்தாள். அதற்கேற்பவே சுரதனும் பேசினான்.

''தேவீ பராசக்தி! உன் தரிசனத்தால் என்னைப் பரமானந்த பரிதனாக்கி விட்டாய். நான் வேண்டவேண்டுவது நீ அறிந்ததே! கோலாவித்வம்ஸிகள் என் நாட்டைக் கைபற்றியுள்ளனர். எனது மந்திரி பிரதானிகளும் பத்தினி புத்திரர்களும் எனக்கு மாறுபட்டனர். நான் இழந்த ராஜ்யத்தை மீளவும் பெற வேண்டும் .என் ராஜசபையும், மனைவி மக்களும் என்னிடம் மீண்டும் பற்றுதல் கொள்ளவேண்டும். உன்னை மறவாமல், உன் அழகு சிருஷ்டியாகவே சிநேக பாசங்கள், பக்தி விசுவாசங்களைக் குற்றமில்லாமல் அநுபவிப்பதில் எனக்குத் தோஷமெதுவும் தோன்றவில்லையம்மா! இப்படி இப்பிறவி முடிந்தபின், எந்த எதிரியும் பறிக்கவொண்ணா ஆத்ம சாம்ராஜ்யம் நல்குவாய். வேண்ட வைத்த நீயே அதன் நிறைவேற்றத்துக்கும் அருள் புரிவாய்'' என்று வேண்டினான்.

''அப்படியே ஆகுக!'' என அநுக்கிரகித்தாள் அம்பிகை.

பந்த விமோசனி இவனுக்கு பந்தங்களை உண்டாக்குகிறாள்! பந்தமும் அவளே என்று உணர்ந்தால் நெரித்துக் கட்டாது!

''நரபதி! இன்னும் சில நாட்களில் நீ எதிரிகளை வெற்றி கொண்டு, அரசை மீளவும் அடைவாய், உன் ஆயுள் உள்ளளவும் அது உன்னை விட்டு நீங்காதிருக்கும். இவ்வாயுள் முடிந்தபின் விவஸ்வான் எனப்படும் சூரிய தேவனுக்கும் ஸவர்ணிதேவிக்கும் புத்திரனாகப் பிறப்பாய். இதனால் வைவஸ்வத ஸாவர்ணி என்று பெயர் பெறுவாய். பின்னொருக்கால் மனிதகுலம் முற்றும் மாறி, புதிதாக மனித இனம் தோன்றும் போது அதனைத் தொடங்கி வைக்கும் 'மனு'வாக நீயே விளங்கப்போகிறாய்! ஸாவர்ணி மனு என்று உன்னை உலகம் கொண்டாடப்போகிறது!'' என்று வரம் தந்தாள் அம்பாள்.

மறுபிறவியில் இவன் மோக்ஷமே கேட்க, அவளோ அடுத்த பிறவிக்கும் இன்றைய அரசைவிடப் பெரிய பதவியைத் தந்து விட்டாள்! ஆனால் இந்த வெளிப் பதவி வித்தியாசங்கள் அவனைத் தொடாமல், அவளது லீலானந்தத்தில் நிலைத்திருக்கிற பதவியைத் தந்தாளே, அது இதனினும் பெரிய அநுக்கிரகம்.

மனு-ஜர், மனு-ஷ்யர், மனிதர் என்பவரெல்லாமே 'மனு'விலிருந்து வந்தவர்கள்தாம். பிரம்மனின் ஒரு தினத்தில் பதினாலு மனுக்கள் ஆட்சி செய்கின்றனர். இப்பதவிக்காலம் மன்வந்தரம் எனப்படும். வரிசைக் கிரமப்படிப் பதினாலு மனுக்களின் பெயர்கள்: ஸ்வாயம்புவர், ஸ்வாரோசிஷர், ஔத்தமி, தாமஸர், ரைவதர், சாக்ஷுஷர், வைவஸ்தர், ஸாவர்ணி, தக்ஷஸாவர்ணி, ப்ரம்ம ஸாவர்ணி, தர்ம ஸாவர்ணி, ருத்ர ஸாவர்ணி, ரௌச்ய தேவ ஸாவர்ணி, இந்த்ர ஸாவர்ணி. தற்போது வைவஸ்வத மன்வந்தரத்தில் இருக்கிறோம். மறுமுறை மக்கட்குலம் தோன்றும் போது அதற்கு மூல புருஷராக இருக்கப் போகிற 'ஸாவர்ணி மனு'வாக சுரத மகாராஜன் விளங்கப் போகிறான். ஸுரதன் மனுப் போடாமலே, இந்த மகாபெரிய மனுப் பதவியை அம்பாள் அநுக்கிரகித்து விட்டிருக்கிறாள்! மனித குல முதற் தோன்றல்களாகிய மனுக்கள் அகத்தே மகா ஞானிகளாவர். வெளியிலே மன்வந்தர அதிபர் என்ற பெருமை இருக்க, உள்ளேயோ அதனினும் பெரிய மோக்ஷ ஆனந்தத்தை எப்போதும் துய்த்த பெரியார் அவர்கள். மனுக்கள் ஜனகர் போல நிஷ்காம கர்ம யோகிகளாக விளங்குபவர்கள். இந்தப் பரம பதத்தை பகவதி சுரத மன்னனுக்குப் பக்குவமூட்டிப் பிறகு அநுக்கிரகித்து விட்டாள்!

அவளைப்போல ஆசீர்வாதம் செய்பவர் அவனியில் இல்லைதான்.

ஆசிக்குள்ளும் தன் மறைப்பு லீலையை மறக்கவில்லை. ஸுரதன் 'ஸ்வாரோசிஷம்' என்ற இரண்டாம் மனுவின் காலத்தவன். ஸாவர்ணியாக எட்டாம் மன்வந்தரத்தில் வரப் போகிறான். இடையுள்ள நீண்ட ஐந்து மனுவாயுட்களில் அவனைத் தன்னிடமே வைத்துக்கொண்டு அவள் அன்புக் கூத்தடிக்கப் போவதைச் சொல்லாமல் மறைத்தாள்!

''குலநந்தனா'' என்று குழைந்தழைத்து சமாதிக் குழந்தையைக் குளிர நோக்கினாள் தேவி.

புலன் குதிரைகள் தெறிகெட்டு ஓடாமல் நன்கு ஒழுங்கு செய்த ரதம் ஸுரதன். இது காரியம் செய்ய வேண்டும். கர்ம யோகமே அது. சமாதி நிலை ஞானயோகமாகும். காரியமின்றி வெறுமே இருந்துகொண்டிருக்கிற நிலை அது. இந்த ஞானத்தை ஒருவன்

எய்திவிட்டால் அவனது முன்னேழு, இடையேழு, பின்னேழு தலைமுறைகளும் கடைத்தேறுவர் என்பது சாஸ்திரம். இதைக் கருத்திற் கொண்டாற்போலவே சமாதியை, ''குலநந்தனா'' என்று இன்பு சொட்ட அழைத்தாள் தேவி.

''வைசியவர்யனே! வரம் கேட்பாய்'' என்று ஊக்கினாள்.

கேட்காமலே கொடுக்கிற மகா அம்மாவுக்கு, கேட்க வைத்துக் கொடுப்பதில் என்னதான் ஆசையோ?

''தாயே! உலக இன்பம் அனைத்தும் கட்டுக்களை இறுக்கிக் கழுத்தைச் சுருக்குபவையே என்று காண்கிறேன். உன் கிருபையால் இப்படிக் காட்டுவித்தாய். கட்டறுந்த மோக்ஷமாகிய ஞான நிலைக்கே அவாவுகிறேன், அம்பிகே! இந்த சம்ஸார பந்தத்தில் சிறிதும் சாரமில்லை என்று தெளிந்தேன். பந்தத்தை அழித்து பரஞானம் தருவாய் அம்மா!'' என்று உள்ளமுருகிப் பிரார்த்தித்தான் சமாதி.

''தந்தேன்!'' என்று தேன்மொழி புகன்றாள் துர்க்கா பரமேசுவரி.

ஒரே சமயத்தில் இகம், பரம் ஆகிய இரு துருவங்களிலும் உச்சத்தில் உச்சமான உயர்வுகளைக் காட்டி அசாதாரணமாக முடிகிறது ''தேவி மாகாத்மியம்.'' ஒரு புறம் பூலோக சாம்ராஜ்யம், மறுபுறம் ஞான பக்தி சாம்ராஜ்யம்!

சமாதிக்கு உதித்த தூய நாட்டத்தை என்னென்பது! மனைவி, மக்கள், வியாபாரம் எல்லாவற்றிலிருந்தும் அவனது மனம் அடியோடு கழன்று விட்டதை எப்படிப் பாராட்டினாலும் போதாதுதான். அரசனைவிட இவனை ஒருபடி உயர்த்திக் காட்டவே பாகவதம், மான்மியம் இரண்டும் முதலில் சுரதனை வரம் கேட்க வைத்தபின் இவனை வரம் கோரச் செய்கிறது. சாதாரணமாகப் புராணங்களில் அந்தணர், அரசர் பெருமைகள் கூறப்படும் அளவுக்கு ஏனையோர் மகிமை காண்பதில்லை என்று குறை சொல்வதுண்டு. மாறாக இங்கு சமாதி என்ற வைசியச் செம்மல் ஒப்பற்ற ஞானத்தை வரம் கேட்டுப் புராண புருஷருள் உன்னத ஸ்தானம் பெறுகிறான்.

வரம் அருளிய பகவதியை சுரத சமாதியர் துதித்து மகிழ்ந்தனர். அவளும் துதி கேட்டு மகிழ்ந்தனள். சொந்த அம்மா, சொந்தக் குழந்தைகள் என்ற பேரின்பக் கொண்டாட்டம்!

சண்டிகை பின்னர் அந்தர்தானமாயினாள்.

★ ★ ★

அம்பாள் தந்த வரம் பலிக்கக் கேட்பானேன்! சுரதனின் அரசைக் கைப்பற்றியிருந்த எதிரி அரசன் மாண்டு போனான். அவனுக்குப் பின் அரசாட்சி உருவாவதில் பலவிதமான கட்சிப் பிரதி கட்சிகளும், உட்பூசல்களும் விளைந்தன. மக்கள் அலுப்படைந்தனர். புதிதாகப் புகுந்தவர்கள் இந்நாட்டைத் தம் நாடாகக் கொள்ளாமல் சுரண்டி உண்டு வந்ததால் பழைய மந்திரி பிரதானிகளும் காலக்கிரமத்தில் அவர்களிடம் படாத பாடு படவேண்டியதாயிற்று. அதன் விளைவாக அவர்களுக்கு நற்புத்தி உதயமாகத் தொடங்கியது. சைனியமும் புதிய ஆட்சிக்கு எதிராக உள்ளூரக் குமுறத் தொடங்கியது. அனைவரும் சுரதனின் ஆட்சிக்கு ஏங்கத் தொடங்கினர்.

மக்கட் பிரதிநிதிகளுடன் ராஜசபையினர் சுரதனைத் தேடிக் காட்டுக்கு வந்தனர்.

அவன் மேதஸின் ஆசிரமத்தில் இருப்பதைச் சாரணர் மூலம் அறிந்து, அழைத்துப் போக வந்தனர்.

ரதத்துடன் வந்தனர்.

அதில் இரு குதிரைகளில் ஒன்றாக உச்சைசிரவஸ் பூட்டப்பட்டிருந்தது!

அன்று தோற்றுப்போய் வெற்று ஆளாக இவன் அதன் மீதேறி வந்ததென்ன? இன்று அம்பாளைக் கண்டு வாழ்க்கைப் போராட்டத்திலேயே வெற்றி கண்ட ஜயசாலியாக இவன் ஆளுகைக்குத் திரும்புவதென்ன?

உச்சைசிரவம் நாசியைச் சுருக்கி ''ஹ்ர்...ஹ்ர்'' என்று ஆனந்த சப்தம் எழுப்பியது.

''நீயும் அம்மாவின் ஹ்ரீங்கார மந்திரத்தைத்தான் சொல்கிறாய்'' என்று அதை அணைத்துக் கொண்டான் சுரதன்.

மந்திரிமாரும், பிரதானிகளும், சுரதனின் மனைவி மக்களும் மனமார மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர்.

''உங்களுக்கு இந்த மன்னிப்புக் கோரும் மனப்பாங்கைத் தந்த அம்மா ஒருத்தியே மன்னிக்க அதிகாரம் கொண்டவள். நான் ராஜஸம் என்கிற பெரிய குற்றத்தைச் செய்ததைத் துளிக்கூட உணராதபோதே

என்னையும் மன்னித்து தரிசனம் தந்த கருணாஸாகரி அவள்தான்'' என்றான் சுரதன் நாத்தழுதழுத்து. 'அம்பாளா எனக்குமா தரிசனம் தந்தாள்?'

மேதஸை அனைவரும் வணங்கினர்.

பேசவே முடியாதபடி நன்றி பூரித்து அவர் முன் நின்றான் ஸுரதன்.

மெல்லச் சுதாரித்துக்கொண்டு, ''அம்பாள் எனக்கு ராஜ்யம், ஞானம், பக்தி ஆகியனதான் தந்திருக்கிறாள். நீங்களோ எனக்கு அம்பாளையே தந்துவிட்டீர்கள்!'' என்று ஊறிச் சொன்னான்.

'இந்தக் குழந்தையை அம்மா அற்புதமாகக் கடைத்தேற்றி விட்டாள். என்னை நீர் தெளிக்கச் செய்து, கருகிய செடியைப் பொல பொலவென மலர்வித்து விட்டாள் மாதா' என்ற உணர்வில் கண்மல்கி நின்றார் அருளாளர் மேதஸ் — அன்று நோஞ்சையாக வந்தவனை வாஞ்சையாகப் பாலித்து இன்று தளதளவென வளப்படுத்திவிட்ட வள்ளல் மேதஸ். இருளில் மருண்டு வந்தவனுக்கு நிரந்தர வைகறை தந்துவிட்ட வரமுனிவர்.

''வத்ஸா! இவர்களோடு செல்; வெல்; ராஜாதி ராஜனாக நில்'' என்று பரிபூரணமாக ஆசி தந்தார்.

⋆ ⋆ ⋆

அம்பாளின் ஆசி பலித்ததை நிறுத்திவைத்து அதிகம் வளர்த்த வேண்டாம். அவர்கள் கேட்டுக் கொண்டபடி சுரதன் அவர்களோடு திரும்பிச் சென்றான். நாட்டு எல்லையிலே பழைய ராணுவம் அவனது தலைமையை எதிர்பார்த்து நின்றது. தேவியின் கிருபையில் புது மலர்ச்சியும், எழுச்சியும், பலமும் பெற்றிருந்த சுரதன் செய்த வீரப் போரில் கோலாவித்வம்ஸிகள் பதராகி, உமியாகி, தவிடாகி அடிபணிந்து விட்டனர்.

சுரதன் மீண்டும் சிம்மாதனம் ஏறினான். மனைவி மக்களும் மந்திரி பிரதானியரும் அவனுக்குப் பரம அநுகூலமாயினர். இழந்த வாழ்வு முன்னிலும் இன்பமாக மலர்ந்தது. ஏனெனில் முன்பு அவன் அறிந்திராத தேவியின் ஸ்மரணம் இப்போது உலகவின்பத்துள்ளும் பொன்னிழையாக மிளிர்ந்தது!

அவனது தேசமெங்கும் தேவி மயமாயிற்று. எங்கு பார்த்தாலும் அம்பிகை பூஜை, அம்பாள் கதை, அவள் தியானம்தான். அப்புறம் அறமும், அன்பும், அளப்பரிய வளமும் நாடெங்கும் செழிக்கக்

கேட்பானேன்? என்றைக்கு அவனுக்குப் பட்டாபிஷேகமாகி, அருமை ஐராவத்தின்மீது அம்பாரியில் பவனி வந்தானோ, அன்றிலிருந்து அம்பாளின் அருளே அம்பாரியேறி ராஜ்யமெங்கும் நலன் பொலிவித்தது!

சுரதன் நாடு திரும்பினான். சமாதியோ மேதஸின் ஆச்ரமத்துக்குத் திரும்பினான். அதுவே அவனது வீடாயிற்று. மாமுனிவரின் அருள் கண்ணோட்டத்தின் கீழ் அனவரத சாதனையை மேற்கொண்டான். ஸத்ஸங்கம், ஸத்காரியம் இவற்றிலேயே திளைத்திருந்தான். காலக்கிரமத்தில் ஸங்கமற்ற, காரியமற்ற அத்வைத ஞானத்திலே நிலைத்த நிஷ்டை எய்தினான். அதனினும் பெரும்பேறு இல்லை என்பார்கள். ஆனால் இவனோ அத்வைத அநுபூதியோடு மற்றொரு பெரிய பேறாக அது அம்பாளின் அருட்கொடையாகவே கிடைத்தது என்பதையும் உணர்ந்தான். நிர்குணத்தை அநுபவத்தில் அறிந்தபின்னும் அதைத் தந்த அம்பிகையின் குணாநுபவங்களைப் புகழ்ந்து பாடலானான். இப்போது நம் சமாதிக்கு காரியமற்ற நிலைதான் சமாதி என்பதில்லை. அம்பாளின் காரியத்தைச் செய்வதால் காரியமும் சமாதியாயிற்று. ஆச்ரமம்தான் ஏகாந்தம் என்றில்லாமல் எங்குமே ஏக அந்தமான அம்பிகையாயிற்று. கருணை என்கிற காரியத்தை 'தான் கர்த்தா ' என்ற எண்ணமே இல்லாமல் நாடெங்கிலும் பரப்புவதற்காக க்ஷேத்திரம் க்ஷேத்திரமாக, தீர்த்தம் தீர்த்தமாகச் சென்று தேவியைத் தோத்திரம் செய்து, மக்களனைவரும் துதி செய்ய வைத்தான். அவளது மான்மிய சரிதையைக் கூறி மக்களைக் கேட்க வைத்து மகிழ்வித்தான். அவளது மகிமைகளை கானம் செய்து அவர்களும் பாடிப் பேரானந்தம் கொள்ளுமாறு செய்தான். பழைய புராணக் கதையின்றி, தனக்கே நவீனமாகக் கிடைத்த அருட்கொடையை அவன் சொன்னதால் அவனி முழுவதும் அதில் உருகி அம்பிகையிடம் ஆழத் தோய்ந்தது.

பிரம்மசக்தியின் பரம உத்தமமான சிருஷ்டியான அன்பு என்பதை அனைத்திடமும் அனவரதமும் பொழிந்து கொண்டு பிரம்மானந்தனாக, ஜீவன்முக்தனாக வாழ்ந்தான் ஸமாதி. அதாவது என்றும் உள்ள ஒரே வாழ்வான பராசக்தியாகவே வாழ்ந்தான்! ஆயிரம் கோடி அம்மாக்களுக்கும் மூலமான அம்மா என்கிற அன்பேயாகி நிலத்தை நலம் செய்தான்!

சக்தி ஓம் தத்ஸத்!

பின்னுரையாக இரு பொன்னுரைகள்

ஜகன்மாதாவின் பரம கிருபையால் 'நவராத்திரி நாயகி' எழுதிப் பூர்த்தியாகி இருக்கிறது. எதற்கும் மூலம் அவள்தான் என்றாலும், இதைப் புரிந்து கொள்ளவிடாமல் ஒளிந்து விளையாடுவாள், பரம குழந்தையாக இருக்கிற மகாமாதா! அப்படிப்பட்டவள் நிரம்பிய கருணையோடு இந்நூலுக்கு மூலச் சரக்கு அவளது காரணமில்லாத கிருபையே என்று சிற்றறிவுக்குக் கூடத் தெற்றெனவே புரியவைத்திருக்கிறாள். இந்தச் சிற்றறிவாகியிருப்பதும் அவள்தான். அதைப் பல தினுசாக அழுக்குப் படுத்திக் கொண்டிருக்கிறாள். பிறகு தன் அருளாள் கொஞ்சம் அலசிச் சிறிது சுத்தமும் செய்திருக்கிறாள். அந்தச் சுத்த பாகத்தினால் எழுதிய சத்திய எழுத்து, அசுத்த பாகத்தினால் எழுதிய தவறான எழுத்து இரண்டுமே இதில் கலந்துதான் கிடக்கும். மகா கருணையால் அங்கங்கே இந்தச் சிற்றறிவுக்குச் சுயமாகத் தெரிந்தேயிருக்க முடியாத விஷயங்களையும் பிரகாசப்படுத்தி எழுதுவித்திருக்கிறாள் என்றும் அந்தச் சிற்றறிவுக்குத் தெரிகிறது. அவளுடைய அன்பு எல்லையில்லாதது. புத்தகம் எழுதுவிப்பதிலோ பெருமை சேர்த்துக் கொடுப்பதிலோ மட்டும் அது நின்று விடுவதில்லை. வெறும் அன்பாகவே அது வந்து ஆனந்த வெள்ளத்தைக் கொட்டும். அதுதான் விசேஷம்! அதுவே உண்மையில் ஆத்ம லாபம். எழுதுவதால் பிறர் வேண்டுமானால் ஆத்ம லாபம் அடையலாம். ஆனால் எழுதுகிறவனுக்கு 'இது நாம் செய்தது' என்ற அகங்காரம் உண்டானால், அதுவே அவனை அவளிடமிருந்து அப்பால் தள்ளிவிடும்; ஆத்ம லாபத்துக்குப் பதில் ஆத்ம ஹானிதான் உண்டாகும். சகல சக்தியும் அவளிடமிருந்தே வந்தது என்ற அடக்கத்தை அவள் கையோடு கையாக அநுக்கிரகிப்பதே ஆத்ம லாபம்.

புராணங்களில் 'அம்பிகை பரம கிருபா நிதி' என்று சொல்லியிருக்கிறது என்பதால் அதைக் கிளிப்பிள்ளை போல் நம்பியோ நம்பாமலோ, பெரிதாகப் புத்தகம் எழுதிக் கதைக்காமல்,

சுயமாக நெஞ்சு நனைந்து உயிராழத்திலிருந்து, ''ஆமாம், ஆமாம், அம்பாள் வாஸ்தவமாகப் பரம கிருபாநிதி. மகா உதவாக்கரையையும் அணைத்தெடுத்துச் சிறிது உய்விக்கிறவள்'' என்று சத்தியம் செய்ய வைத்திருக்கிறாளே, இதிலே அவள் பெருமைதான் தெரிகிறது! வறண்டு கட்டாந்தரையான பூமியில் 'திபு திபு' என்று மழை கொட்டிப் பச்சென்று புல்லை உண்டாக்கினால், ''என் பெருமை பார்த்தீர்களா? என்மேல்தானே மழை கொட்டிற்று!'' என்று கட்டாந்தரை தன் 'யோக்கியதாம்ச'த்தைப் பற்றிப் பெருமைப்பட முடியுமா என்ன? பாத்திரமா, அபாத்திரமா என்று பாராமல் அவள் எங்கு வேண்டுமானாலும் கருணா வர்ஷத்தைப் பொழிகிறாள். இதைச் சொல்லாவிடில் கைம்மாறு மறந்த துரோகமாகவே ஆகும். கைம்மாறும் செய்கிறவனுக்குத் தான் ஆனந்தத்தைத் தருகிறது. அவளுக்கு அதனால் ஆவதென்ன?

சங்கரராகவும், ராமகிருஷ்ணராகவும், சாரதையாகவும், மீராவாகவும், இன்னும் அநேக பக்தர்களாகவும் ஞானிகளாகவும் வந்தது அவள்தான். மனுஷ்ய ரூபத்தில் வந்த அவர்களைப் பற்றி எழுதத் திருவருள் பாலித்தாள். இங்கே தேவ ரூபங்களில் அவளே அவளாக வந்த விருத்தாந்தங்களையும் எழுதுவதற்கு அவளுடைய கிருபையே கூட்டுவித்தது! இது சர்வதேசப் பெண்டிர் ஆண்டு என்பதாலோ என்னவோ*, அசுரப் படையை மட்டும் ஆண்களாகக் காட்டி, தேவசக்தி சேனை முழுதையும் பெண்களாகவே விரிக்கும் சரிதையை எழுதுவித்திருக்கிறாள்! அவளுக்கு நன்றியும் கூறவேண்டும். மன்னிப்பும் கோர வேண்டும். அல்லது இரண்டும் வேண்டாம், அவளது செங்கமலத் திருவடிகளில் மானசிகமாகச் சிரசை அழுத்திக் கொண்டு அவளது அருள் வெள்ளத்தில் மனத்தை அமிழ்த்திக் கொண்டிருந்தாலே போதும்!

★ ★ ★

பராசக்தியின் அநுக்கிரகத்தினாலேயே அத்வைத முக்தி ஸித்திக்கிறது என்று முகவுரையிலும், இடையிடையே பல சந்தர்ப்பங்களிலும், முடியும் கட்டத்தில் ஸமாதியின் கதையிலும் பார்த்தோம். முகவுரையில், 'என்ன இருந்தாலும், சம்பிரதாய அத்வைத சாஸ்திரங்களை வலியுறுத்தும் குருவாயிற்றே' என்பதால், நம் கண்கண்ட காமாக்ஷியான காஞ்சிப் பெரியவர்களை இவ்விஷயத்தில் அதிகம் கொண்டுவரத் தயங்கினேன். ஆனால் இந்நூலை எழுதி முடித்தபின், இவ்விஷயத்தை அவர் போல் படு

---

* முதற் பதிப்பின் ஆண்டைக் குறிப்பது.

அழுத்தமாக, ஆணித்தரமாக வேறு எவருமே சொல்லவில்லை என்று உறுதியாகக் கருத வைத்த பழைய உபந்நியாசங்களைக் கேட்கிற பாக்கியம் கிடைத்தது. 'காஞ்சிக் காஞ்சனம்' என்ற தலைப்பில் அந்த பாக்கியத்தை இங்கே உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். காஞ்சனம் என்றால் பொன். பின்னுரையாக வரும் பொன்னுரை இது.

கமல மலருக்குள் மகரந்தப் பையைத் தாங்கி நிற்கும் மெல்லிய தண்டுக்கும் காஞ்சனம் என்றே பெயர். எல்லாம் போய் நிறைகிற இடம் அம்பாளுடைய பாத கமலம்தான். இந்த நூல் முடிகிறபோது அந்தக் கமலத்தில் காஞ்சனமாகப் பெரியவாளின் அருள்வாக்கு மணக்கிறது.

'நவராத்திரி நாயகி'யை சரணாகதி சாஸ்திரம் என்றே சொல்லலாம். தேவர்கள் காரணத்துக்காக ஓரளவு சரணாகதி செய்தார்கள். தேவர்களைவிட ஸுரதன் பல படி உயர்ந்து சென்றான். ஸமாதியோ கடைசிப் படிக்கே சென்று காரணமேயில்லாமல் பூரண சரணாகதி செய்தான். இப்படிப் படிப்படியாக சரணாகதி செய்வது பற்றிப் பராசக்தி வெள்ளத்திலேயே திளைத்துக் கிடந்த ஸ்ரீ அரவிந்த முனிவர் அருளிய வாக்குகளைத் தேவியின் திருவடிக் கமலத்திலிருந்து பொசியும் தேனாகவே சொல்லலாம். இதை 'அரவிந்த மகரந்தம்' என்ற தலைப்பிட்டு அடியில் தந்திருக்கிறேன். மகரந்தம் என்றால் தேன். நூலின் அமுத நிறைவாக தேவியின் பாதாரவிந்தத்திலிருந்து பெருகும் இந்த மகரந்தம் நம் அனைவர் சித்தத்திலும் தித்தித்துக் கொண்டிருக்க இனிமையே உருவான ஸர்வேச்வரி அருள்வாளாக!

காஞ்சிக் காஞ்சனம்

ஜலத்துக்கு நிறைவு சமுத்திரம். டம்ளரில், செம்பில், குடத்தில், அண்டாவில், கிணற்றில், குளத்தில், நதியில் என்று ஒன்றை விட ஒன்று ஜாஸ்தியாக இருக்கிற ஜலம் கடைசியில் சமுத்திரம் என்று முடிகிறது. இப்படியே ஞானத்துக்கும் கிருபைக்கும் நிறைவான சமுத்திரம் பராசக்தி. நமக்குக் கொஞ்சம் அறிவு, கொஞ்சம் அன்பு இருக்கிறது. பிராணிகளுக்கு நம்மை விடக் குறைவு. நம்மைவிட ஜாஸ்தி அறிவுள்ள, ஜாஸ்தி கிருபா சக்தி உள்ள தேவ ஜாதிகள் இருக்கின்றன. நம்மிலேயே மகான்களானவர்கள் மகாஞானிகளாக, பரம காருண்யத்தோடு இருக்கிறார்கள். இந்த ஞானம், கிருபை பூரணமாக நிறைந்த இடத்தைத்தான் ஸ்வாமி, பரமாத்மா, பராசக்தி என்று சொல்வது.

எல்லாவற்றையும் அறிகிற ஞானம் அது! அறிகிறது மட்டுமில்லை; எல்லாமுமே அதுதான். அதற்கு வேறாக

இன்னொன்று இருந்து அதை இது அறிகிறது என்றில்லை. அப்படி இன்னொன்று இருப்பதற்கு இடம் இருந்துவிட்டால் இது எங்கேயும் நிறைந்த பூரணம் ஆகாது. இன்னொன்று துளித் துளி இருந்துவிட்டால்கூடச் சரி, இதற்குக் குறைதான் — இது அந்தத் துளியில் இல்லாததால் இது பூரணமில்லை, நிறைந்த ஒரே நிறைவில்லை என்றுதானே அர்த்தம்? இதனால் என்ன முடிவாகிறது என்றால், பரமாத்மாவைத் தவிர அறியப்படுகிற வஸ்து என்று இரண்டாவது பதார்த்தமே கிடையாது என்பதுதான்.

அப்படியானால் இத்தனை ஜீவாத்மாக்கள் வேறு வேறாக இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோமே, இது என்ன? இது ஒரு பெரிய வேஷம்தான். மாயா வேஷம்தான். வேஷம் கலைந்து விட்டால் நிறைந்த நிறைவான ஒன்றே ஒன்றுதான், அதுவே அறிவாக நிற்கும். **'சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே'** என்று தாயுமான ஸ்வாமிகள் சொல்கிற அறிவு! அது பூரணமானதால், அதனால் அறியப்பட வேண்டிய வஸ்து என்று வேறு எதுவுமே இல்லை. தன்னையே அறிந்து கொண்டிருக்கிற அறிவு அது.

இப்படி இரண்டாவதாக வேறே இல்லாமல் ஜீவாத்மாவை அந்தப் பரமாத்ம சமுத்திரத்தில் கொண்டுபோய் கரைப்பதுதான் வாஸ்தவமான நிறைவு. இன்னொன்று கொஞ்சம் இருந்தாலும் குறைவுதானே? இன்னொன்றாக வேஷம் போட்டுக் கொண்டிருப்பதும் அதுவேதான் . எல்லாம் அதுதான். **''இதம் ஸர்வம் புருஷ ஏவ''** என்று வேதம் சொல்கிறது. இபபடி வாஸ்தவமாக நிறைவதுதான் அத்வைதம், அத்வைதம் என்பது.

ஜீவாத்மாவானவன் அத்வைதமாக, பூரணமாக, நிறைந்த நிறைவாக ஆகிவிடுவதைப் பற்றி உபநிஷத்துக்கள் சொல்கின்றன. உபநிஷத்துக்கள் சொல்வதை ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாள் பல தினுசான பிரமாணங்களோடு, தம்முடைய அநுபவத்தைச் சேர்த்து, லோகமெல்லாம் கொண்டாடுகிற சாஸ்திரமாக அநுக்கிரகம் செய்திருக்கிறார். இதைப் புத்தி ஆராய்ச்சியால் (intellectualஆக) அலசிப் பார்த்தால் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும் என்று தெரிகிறது. ஸயன்ஸிலும் இப்போது, 'வேறு வேறு எலிமெண்ட்ஸ் இல்லை. எல்லாம் ஒரே எனர்ஜி தான். மாட்டரும் எனர்ஜியும் கூட வேறு வேறு இல்லை' என்று அத்வைதத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள்.

எல்லாம் சரி. ஒன்றுதான் இருக்க முடியும் என்பது intellectual -ஆகத் தீர்மானமாகித்தான் விட்டது. ஆனால் — இது ரொம்பப் பெரிய

'ஆனால்' — காரியத்தில் இது துளிக்கூடத் தெரியவில்லையே! இத்தனை வித்தியாசங்கள் லோகத்தில் பிரத்தியக்ஷமாகத் தெரிந்து கொண்டுதானே இருக்கின்றன. ஒன்றுக்கொன்று இருக்கிற வித்தியாசங்களைப் பாராட்டினால் தானே வாழ்க்கையே நடக்கிறது? ஒவ்வொரு காரியத்திலும் ஒன்றைச் சேர்க்க வேண்டும், இன்னொன்றைத் தள்ள வேண்டும் என்று தான் இருக்கிறது. 'வித்தியாஸமே இல்லை, எல்லாம் ஒன்று' என்று சொல்லிக் கொண்டு சேர்க்கக் கூடாததைச் சேர்த்தால் காரியமே கெட்டல்லவா போகிறது?

இதனால் என்ன தெரிகிறது? காரியம் என்று இருக்கிற வரையில் 'அத்வைதம், அத்வைதம்' என்று சொல்லிப் பிரயோஜனமில்லை என்றுதான் தெரிகிறது. ''காரியம் இருக்கிற வரையில் வித்தியாசம் பார்த்துத்தான் ஆக வேண்டும். காரியமேயில்லாத நிலையில் எல்லாம் ஒன்றாகவே பிரகாசிக்கும். காரியத்தில் வித்தியாசம் பார்க்கும்போதுகூட மனசுக்குள் 'எல்லாம் ஒன்றே. அந்த ஒன்றுதான் நாமும்; அதனால் நாம் தான் எல்லாமும்' என்று எல்லாவற்றையும் ஆத்மஸ்வரூபமாகப் பார். அதாவது மற்ற வித்தியாசங்களைப் பாராட்டினாலும் எல்லாவற்றிடம் அன்பில் மட்டும் கொஞ்சம்கூட வித்தியாசமில்லாமல், சகல ஜீவராசிகளிடமும் ஒரே மாதிரி அன்போடு பிரேம ஸ்வரூபமாக இருந்து கொண்டிரு'' என்றுதான் அத்வைத ஞானிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகக் கூடி காரியத்தில் அத்வைதம் இல்லை என்றாகிறது.

காரியம் என்றால், நினைப்பது கூடக் காரியம் தான். நினைப்பது மனசின் காரியம். மனசு ஒரு க்ஷணம் கூட நிற்காமல் எதையாவது நினைத்துக் கொண்டே இருக்கிறது. இது நடக்கிற வரை காரியம்தான். அத்வைதம் இல்லை. 'நினைக்கிறது' என்றால் 'நினைக்கப்படுகிற வஸ்து', 'நினைக்கிற வஸ்து' என்று இரண்டு வித்தியாசமான வஸ்துக்கள் இருக்கத்தானே செய்கின்றன? நினைப்பே போய்விட வேண்டும். மனசு அப்படியே நின்றுவிட வேண்டும். அப்படி ஆனால்தான் அத்வைதம் அநுபவமாக ஸித்திக்கும்.

சரி, ஆனால் மனசு நிற்கமாட்டேன் என்கிறதே! என்ன பிரம்மப் பிரயத்தனம் பண்ணினாலும் அதுபாட்டுக்கு ஓடிக் கொண்டேயிருக்கிறதே! அது ஏகப்பட்ட வித்தியாஸங்களைத் தானே பார்த்துக் கொண்டிருக்கிறது? வெளிக் காரியத்தை நிறுத்திவிடுவது,

மனசின் காரியத்தையும் நிறுத்திவிடுவது, நிறுத்தா விட்டால்கூட பிரேம ஸ்வரூபமாகிவிடுவது என்றால் இதெல்லாம் நடைமுறையில் (practical-ஆக) கொஞ்சம்கூட சாத்தியமில்லாமல் இருக்கிறதே! என்ன பண்ணலாம்?

என்ன பண்ணுவது? எது சாத்தியமோ அதைத்தானே பண்ண முடியும்? அத்வைதம்தான் பரம தாத்பரியமாக இருக்க முடியும் என்று புத்தியால் ஒத்துக்கொண்டது, அப்படியே இருக்கட்டும். அந்த நினைப்பே, conviction-ஏ உள்ளுக்குள்ளே கொஞ்சம் இருந்து கொண்டிருந்தால் இத்தனை காரியம், இத்தனை ஓயாத எண்ணத்துக்கும் நடுவே ஏதோ லவலேசம் ஒரு தெளிவு, சாந்தம் இருக்கும்.

ஆனால் இந்த அல்ப சாந்தி திருப்தி தரமாட்டேன் என்கிறதே! நமக்கு நிறைவில்லாமல் இருக்கிறதே! நிறைந்துவிட வேண்டும் என்று தாபமாகவும் இருக்கிறது; ஆனால் மனசையும் காரியத்தையுமோ விட முடியவில்லையே! அன்புருவாகவும் முடியவில்லை! இப்படி இரண்டுங் கெட்டானாகத்தான் நம்மில் நுற்றுக்குத் தொணணூற்றொன்பது பேர் இருக்கிறோம். இப்போது என்ன பண்ணலாம்? ஒன்றுமே பண்ணாமலிருக்கிற அத்வைதம் அநுபவமாகிற வரைக்கும் ஏதாவது பண்ணத்தானே வேண்டும்?

அதனால் மனசினால் எது சாத்தியமோ அதையே பண்ணலாம். இப்போது லோகம் என்று வேறாகத்தானே ஒன்று தெரிகிறது? அதிலே இருக்கிற பெரிய ஒழுங்கை (order)ப் பார்க்கிறபோது இதை எல்லாம் ஒரு பேரறிவுதான் உண்டாக்கி, நடத்திவருகிறது என்று தெரிகிறது. உண்டாக்குவது, நடத்துவது எல்லாம் மாயை என்ற சமாசாரம் இப்போது நமக்கு வேண்டாம். அதைச் சொல்லிக் கொண்டேயிருப்பதால் நமக்குதான் ஒரு பிரயோஜனமும் இல்லையே! 'லோகத்தை நடத்துகிற ஒரு மகா சக்தி இருக்கிறது; நமக்கு வேறாக இருக்கிறது; நாம் அல்ப சக்தர், அது மகா சக்தி; நாம் சிற்றறிவு படைத்த கிஞ்சித்ஞர், அது பேரறிவான ஸர்வக்ஞன்' என்றே வைத்துக் கொள்வோம். 'வைத்துக் கொள்வது' என்ன? நாம் இருக்கிற நிலையில் இப்படித்தானே ஸ்பஷ்டமாகத் தெரிகிறது? இப்போது அந்தப் பேரறிவைத் தவிர அறியப்படுகிற வஸ்து இல்லை என்ற சமாசாரமெல்லாம் நமக்கு வேண்டாம். அது நமக்கு வேறாக இருந்தாலும் நம்முடைய சகல சமாசாரங்களையும் தெரிந்து கொள்கிறது, நம்முடைய கஷ்டங்கள் எல்லாம் அதற்குத் தெரியும்

என்ற அளவோடு நிறுத்திக் கொள்வோம். ஈ, எறும்பிலிருந்து யானை வரைக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒரு விதமான புத்தியைக் கொடுத்து, ஆகாரத்தைக் கொடுத்து ரட்சித்துக் கொண்டிருக்கிற பராசக்திக்கு சகல ஜீவராசிகளின் கஷ்டமும் தெரியத்தானே வேண்டும்? எல்லாம் தெரிந்து கொண்டிருக்கிற ஞானசமுத்திரமாக மட்டும் அது இல்லை; கிருபா சமுத்திரமாகவும் இருக்கிறது. நம் ஒவ்வொருத்தருக்கும் ஒன்றிடம் அன்பு, பிரியம் இருக்கிறதென்றால் இந்த அன்பு அத்தனைக்கும் மூலம் அந்தப் பராசக்தியிடமிருந்துதானே வந்திருக்கிறது? அதனால் அது கிருபா சமுத்திரமாகத்தான் இருந்தாக வேண்டும். அப்பேர்ப்பட்ட கிருபா சமுத்திரத்திடம் நாம் நம் கஷ்டத்தைச் சொல்லி, குறையைச் சொல்லி, 'ஐயோ, நிறைந்த நிறைவாக நான் இல்லாமல் இப்படி ரொம்பக் குறைந்து நிற்கிறேனே, என்னை நிறைந்து போகும்படிப் பண்ணு; குறையே இல்லாதபடிப் பண்ணு' என்று **பிரார்த்தித்துக்கொண்டே இருப்போம். இப்படிச் செய்து கொண்டே இருந்தால் அந்தப் பராசக்தி, அல்லது பரமாத்மாவே நமக்கு நிறைவான அத்வைதத்தை அநுக்கிரகம் பண்ணிவிடும்.**

இப்படிப் பிரார்த்திப்பதும்கூட இரண்டாம் பட்சம்தான். நம் குறையை யெல்லாம் தானாகவே அறிந்திருக்கிற ஞான ஸமுத்திரமாகவும், நாம் பிரார்த்திக்காமலே நம் குறையைப் போக்கக்கூடிய கருணா ஸமுத்ரமாகவும் இருக்கிற பரமாத்மாவிடம் இப்படி நாம், 'அத்வைதத்தைக் கொடு, ஞானத்தைக் கொடு, நிறைவைக்கொடு' என்று கூடப் பிரார்த்திக்க வேண்டியதில்லைதான். இப்படியெல்லாம் குறைப்பட்டு அழாமல், சந்தோஷமாக பக்தி பண்ணிக் கொண்டிருந்தாலே போதும். 'நம்மைப்போல் இப்படி ஓயாமல் சஞ்சலித்துக்கொண்டிருக்காமல் நிச்சலமாக, பரம சாந்தமாக ஒரு பரமாத்மா இருக்கிறார். அவர் கருணா சமுத்திரமாக இருக்கிறார்' என்று நினைத்துக் கொள்ளும்போதே நமக்கு ஆனந்தமாக இருக்கிறதல்லவா? அதனால், அவரை நினைத்துக்கொண்டு இப்படி ஆனந்தப்பட்டுக் கொண்டேயிருந்தால் போதும்! இந்த ஆனந்தத்தைக் கெடுத்துக் கொண்டு 'இதைக்கொடு, அதைக் கொடு' என்று அழவேண்டாம். அவரே நமக்கு எதைக் கொடுக்க வேண்டுமோ, அதைக் கொடுத்து விட்டுப்போகிறார்!

இப்போது நமக்கு அவருடைய ஆக்ஞையாக வேதங்கள் போட்டிருக்கிற கடமைகள் இருக்கின்றன. இந்தக் கடமைகளை சந்தோஷமாகச் செய்து கொண்டிருப்போம். கடமை எல்லாம்

காரியம்தான். காரியம் துவைதம்தான். அதற்காக அழவேண்டாம். 'இதுவும் ஸ்வாமி ஆக்ஞைதானே?' என்று சந்தோஷமாகச் செய்வோம். மனசு ஒடுங்கமாட்டேன் என்கிறதா? பரவாயில்லை. அதற்காக அழ வேண்டாம். ஆனால் எதையாவது, கண்ட கண்டதுகளை நினைத்துக் கொண்டிருக்காமல் பராசக்தியுடைய கிருபையை நினைத்துக் கொண்டிருப்போம். அவளுடைய எல்லையில்லாத அழகை நினைத்துக் கொண்டிருப்போம். இம்மாதிரி காரணமேயில்லாத பக்தியைப் பண்ணிக் கொண்டு, கடமையைச் சுத்தமாக நடத்திக் கொண்டிருந்தால் அதுவே மனசுக்கு நிறைவாகத்தான் இருக்கும்.

மனஸே இல்லாமற் போய்விட்ட பெரிய நிறைவு — நிறைந்த நிறைவு — இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். அதுதான் நம் கைக்கு வராத வஸ்துவாக யிருக்கிறதே! அதை நினைத்து இப்போது ஏன் அழவேண்டும்? ஏற்கனவே இருக்கிற குறைகள் போதாது என்று இந்த அழுகையும் ஒரு குறைதான். எனவே நம்மைப் பரமாத்மா இப்போது வைத்திருக்கிற ஸ்திதியிலேயே நமக்கு நிறைவாக, ஆனந்தமாக இருக்கிற வேதகர்மாநுஷ்டானம், பக்தி இவை நமக்குப் போதும். வேதத்தில் சொன்னபடி காரியங்களைப் பண்ணி, அவற்றை ஈசுவரார்ப்பணம் பண்ணிக் கொண்டு, அவரை அன்போடு நினைத்து, பக்தி பண்ணி ஆனந்தமாக இருந்தோமானால், நமக்குக் குறைப்பட்டுக் கொள்ளவே தோன்றாது.

இப்படி நாம் ஈசுவராக்ஞையாகக் கர்மாக்களைப் பண்ணிக் கொண்டு, அவரிடம் காரணமே யில்லாத பக்தியை— இது வேண்டும், அது வேண்டும் என்று அழாமல் ஆனந்தமாகச் செய்கிற பக்தியை— பூரணமாக வளர்த்துக் கொண்டே போவோம். அப்புறம் அவரே, 'இவனை நமக்கு வேறே மாதிரி தனியாக விட்டு வைத்தது போதும். நமக்குள்ளேயே கொஞ்சம் கூட பேதமில்லாமல் கரைத்துக்கொண்டு விடுவோம்' என்று கருணை கொண்டு அத்வைத மோக்ஷம் கொடுத்து விடுவார். அது அவருடைய காரியம். அவருடைய காரியம்தான். அதிலே நாம் செய்கிறதற்கு எதுவும் இல்லை. நம்மால் முடியாத காரியத்தில் நாம் உபத்திரவப்படுத்திக் கொண்டு ஒரு பிரயோஜனமும் இல்லை. இப்போது நமக்குத் தெரிவது, நம்மை அவர் வேறு மாதிரி விட்டிருக்கிறார் என்பதுதான். இருக்கட்டுமே! அவர் இஷ்டப்பட்டுத்தானே இப்படி விட்டிருக்கிறார்? இப்படியிருக்க வேண்டும் என்று நாமாக உத்தேசம் பண்ணியா இந்த மாதிரி ஆகியிருக்கிறோம்? அவர் தமக்கு வேறு

மாதிரி நம்மை விட்டிருந்தால், அப்படியே தான் வைத்துக்கொள்வோமே! இந்த ஸ்திதியிலும் நம்மால் முடிகிற காரியம் ஒரே அன்போடு அவரைக் கிருபா சமுத்திரமாக, ஸகல கல்யாண குண நிலயமாக நினைத்து நினைத்து அதிலேயே உருகி உருகி பக்தி செய்து ஆனந்தமாகயிருப்பது. இந்த ஆனந்தம் போதுமே!

ஒரு குணமும், ரூபமும் இல்லாத அத்விதீய நிர்குண பிரம்மத்தை மனசினால் பிடிக்க முடியாது. ஸகுணமான மூர்த்தி தான் மனசுக்கு விஷயம். அதனிடம் செலுத்துவதுதான் பக்தி. இது த்வைதம்தான். இருக்கட்டுமே! அணுவுக்குள் அணுவாக இருக்கிறவர் நாம் பக்தி செலுத்துகிற மூர்த்திக்குள் மட்டும் இல்லையா என்ன? அவர் அணுவுக்குள் அணுவாய் இருப்பது நமக்கு அநுபவத்தில் ஸித்திக்க வேண்டுமென்றால் அவரே அப்படிப் பண்ணி விட்டுப் போகட்டும். அவர் ஸர்வ வியாபகர், நீக்கமற நிறைந்தவர் என்றால், நாம் அன்போடு பூஜிக்கிற ரூபத்திலும் இருக்கத்தானே வேண்டும்? 'அவரே எல்லாமும்' என்று நாம் அநுபவித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், இதை அவரே தெரிவித்து விட்டுப் போகிறார்! தெரிவிக்கிறார், தெரிவிக்காமல் போகிறார் — அது அவர் காரியம். அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. நமக்கு இப்போது அவரை பக்தியோடு ஸ்மரித்துக் கொண்டிருக்கிற ஆனந்தமே போதும். இதில் உண்டாகிற நிறைவே போதும்.

அவர் வாஸ்தவத்தில் நிறைந்த நிறைவாக இருக்கட்டும், நிர்குணமாக இருக்கட்டும், அத்வைதமாகத்தான் இருக்கட்டும். அதைப் பற்றி நமக்கு என்ன வந்தது? நம்மால்தான் அதைத் தெரிந்து கொள்ள முடியவில்லையே! வாஸ்தவத்தில் அவர் எப்படியிருந்தாலும், நமக்கு த்வைதமாகத் தெரிகிற இத்தனை அழகு, இத்தனை அன்பு, இத்தனை அறிவு எல்லாமும் அவரிடமிருந்து வந்திருப்பதால் அவரை அத்தனை ஸௌந்தர்யமும், கருணையும், ஞானமும் உள்ள மூர்த்தியாக வைத்துக்கொண்டு பக்தி செலுத்துவோம். பிறகு அவரே அவருடைய வாஸ்தவ ஸ்வரூபத்தைக் காட்டி விட்டுப் போகிறார்! அவருடைய வாஸ்தவ ஸ்வரூபத்தை அவரேதான் காட்ட முடியும். நாம் செய்யக் கூடியது, நம் மனசுக்கு அந்த ஸ்வரூபம் எப்படி வந்தால் ஆனந்தமாக இருக்கிறதோ அப்படி நினைத்து பக்தி செலுத்துவது தான். அதைச் செய்ய ஆரம்பிப்போம்.

பகவானே கீதையில் இப்படித்தான் சொல்லியிருக்கிறார்:

பக்த்யா மாம் அபிஜானாதி யாவான் யச்சாஸ்மி தத்வத: |
ததோ மாம் தத்வதோ ஜ்ஞாத்வா விசதே தத் அனந்தரம் ||

''ஒருத்தன் என்னிடம் பக்தி செலுத்திக் கொண்டேயிருந்தால் நான் யார், எப்படிப் பட்டவன் என்று உள்ளபடி தெரிந்து கொள்கிறான். அம்மாதிரி என்னை உள்ளபடி தெரிந்து கொண்ட பின் எனக்கு வேறாக இல்லாமல் என்னுள்ளேயே புகுந்து விடுகிறான்'' என்கிறார்.

வெளியிலே இருக்கிற மட்டும்தான் அவரைப் பார்த்து பக்தி பண்ணலாம். உள்ளேயே புகுந்து விட்டால்? அப்போது அவர் வேறு, நாம் வேறு இல்லை. ஒன்றாக — அத்வைதமாக — ஆகிவிடுவோம். ஆனால் இப்படி ஆவது எப்போது சாத்தியம் என்றால் 'என்னிடம் பக்தி செய்து, உள்ளபடி என்னைத் தெரிந்து கொண்ட பின்தான்' என்கிறார். 'ததோ மாம்' என்பதில் உள்ள 'ததோ', 'தத:' என்பதற்கு 'பின்னால்', 'அப்புறம்' என்று அர்த்தம். இப்போது பண்ணக் கூடியது பக்தி. அப்புறம் நடக்கவேண்டியது அந்தச் சமயத்தில் நடக்கட்டும். 'பக்தி பண்ணிக்கொண்டேயிரு. நான் உள்ளபடி எப்படியிருக்கிறேன் என்பதை நானே காட்டி, உன்னை அத்வைதமாகக் கரைத்துக்கொள்கிறேன்' என்பதையே இப்படிச் சொல்கிறார்.

'தத்வத:', 'தத்வத:' என்று இரண்டு தடவை சொல்கிறார். அதாவது, 'பக்தியினால் என்னை உள்ளபடி தெரிந்து கொள்கிறான்; உள்ளபடி தெரிந்து கொண்டபின் நானே ஆகிவிடுகிறான்' என்கிறார்.

பக்தியினால் அவரை உள்ளபடி தெரிந்து கொள்கிறோம் என்றால், பக்தி செய்கிறபோது அவரை உள்ளபடி தெரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தமாகிறது.

''தெரியாதவரிடம் எப்படிப் பக்தி செலுத்துவது?'' என்றால் பக்தியை ஆரம்பிக்கிற சமயத்திலும் அவர் அடியோடு தெரியாதவரல்ல; உள்ளபடி, அதாவது அவரது பூரண ஸ்வரூபம்தான் இப்போது நமக்குத் தெரியவில்லை. அந்தப் பூரணம்தான் அத்வைதமாக, ஒரே நிறைவாக, மனசுக்கு எட்டாமல் இருப்பது. அந்த வாஸ்தவ ஸ்வரூபம் நமக்குத் தெரியாவிட்டால் போகட்டும். அதனால் பாதகமில்லை. அது தெரிந்து விட்டால் தான் பகவான், பக்தன் என்ற பேதமேயில்லையே! அப்புறம்

பக்திக்கு இடம் ஏது? பக்திக்கு விஷயம் அபூர்ணமாகத்தான் இருக்க முடியும். இருந்து விட்டுப் போகட்டும். நம்மையும் அதற்குள்ளேயே கரைத்துக் கொண்டுவிட்ட பூரணத்தை நாம் நினைக்காததால் பரவாயில்லை. நினைக்க முடியாததை எப்படி நினைப்பது? ஆனாலும் அந்தப் பூர்ணத்தையே கொஞ்சம் அபூர்ணமாக்கி அனந்த கல்யாண குண நிலயனாக, ஒரே அழகும், கிருபையுமாக ஒரு ஸ்வரூபத்தை பக்தி பண்ணி நெக்குருகி நெக்குருகி ஆனந்திக்க முடிகிறதல்லவா? இம்மாதிரி பக்தி பண்ணினால் இப்படியே அவர் பரம அழகோடு, கிருபையோடு வருகிறார். பிறகு வாஸ்தவ ஸ்வரூபத்தைத் தானே பிரகாசித்து விட்டுப் போகிறார்; அவரோடு நம்மை அபேதமாக ஆக்கிக் கொள்கிறார். **அதெல்லாம் அவர் வேலை.**

பக்தி செய்கிறபோது நாம் நினைப்பது அவருடைய வாஸ்தவ ஸ்வரூபத்தை இல்லைதான். ஆனால் அந்த யதார்த்த ஸ்வரூபத்தை அறிய இந்த பக்தியை விட்டால் வேறு வழியில்லை. 'பக்த்யா மாம் அபிஜானாதி' — ''பக்தியினால் என்னை அறிந்துவிடுகிறான்; ஏதோ கொஞ்சம் தெரிந்துகொள்ளும் 'ஜானாதி' மட்டுமில்லை; 'அபிஜானாதி' — நன்றாக, முழுக்க அதாவது வாஸ்தவ ஸ்வரூபத்தையே அறிந்துகொண்டுவிடுகிறான். பிறகு ஒன்றாகி விடுகிறான்.''

அது பிற்பாடு நடக்க வேண்டிய கதை. இப்போது பரமாத்மாவை வேறாகவே வைத்து பக்தி செய்வோம். நிறைந்த நிறைவான முழு ஸ்வரூபமாக இல்லாமல், ஸகுணமாகவே பக்தி செய்வோம். இதில் நமக்குக் கிடைக்கிற நிறைவிலேயே திருப்தியாக இருப்போம்.

அத்வைத சாஸ்திரங்களில் கூட, **'ஈச்வர அநுக்ரஹாத் ஏவ பும்ஸாம் அத்வைத வாஸனா'** என்று சொல்லியிருக்கிறது. ஈசுவர அநுக்கிரகத்தால்தான் ஒருத்தனுக்கு அத்வைத வாஸனை, அத்வைதத்தில் ஒரு ருசி, ஒரு பிடிமானமே உண்டாகும் என்று அர்த்தம். இப்படி ஈச்வரன்தான் ஒரு ஜீவனுக்கு அத்வைதத்தில் ருசியை உண்டாக்குகிறான் என்றாலே, அப்படி ஒருத்தன் அந்த ஜீவனுக்கு வேறாக உட்கார்ந்திருக்கிறான் என்று ஆகிவிடுகிறது. 'இந்த ஜீவன் தானாக அத்வைதத்துக்கு ஆசைப்படவில்லை: ஈசுவரன்தான் அந்த ஆசையை உண்டாக்குகிறான்' என்றால் ஜீவனுக்கு வேறு மாதிரி அவன் இருக்கிறான், அப்புறம் வேறாக

இருக்க வேண்டாமே என்ற ஆசையை ஜீவனுக்கு அநுக்கிரகம் பண்ணுகிறான் என்றுதானே அர்த்தம்? அநுக்கிரகம் பண்ணுகிறவன், அநுக்கிரகத்தைப் பெற்றுக் கொள்கிறவன் என்று இரண்டு பேர்வழிகள் இருந்துவிட்டால் த்வைதம் தான். 'அநுக்கிரகம் பெறுவதற்காக ஒருத்தன் இருக்கிறான், அவனுக்கு அதைச் செய்கிறேன்' என்று ஈசுவரனே வேறு மாதிரி இருக்கிறபோது, நாமும் அவனை வேறாகவே நினைத்து பக்தி செய்வதில் பிசகே இல்லை.

அநுக்கிரகம் செய்வதற்காக அவன் வேறே மாதிரி இருக்கிறான், அத்வைத வாஸனையையும் அவனே ஏற்படுத்துகிறான் என்றபின், அந்த அநுக்கிரகமூர்த்தியே அத்வைத அநுபவத்தையும் கொடுத்து விட்டுப் போகட்டுமே! வாசனையை உண்டாக்கியவன் தான் அதைப் பூர்த்தி பண்ண முடியும். பூர்த்தி பண்ணுவதற்காகத்தானே வாசனையை உண்டாக்குகிறான்? இப்படி ஒரு நல்ல ஆசையை உண்டாக்கினவன் அப்புறம் கைவிட்டு விடுவானா? தான் ஆரம்பித்த காரியத்தை அவனே செய்து முடித்துக்கொள்கிறான். முடிக்கிறான், முடிக்கவில்லை, **அது அவன் சமாசாரம்.**

நம் காரியம் அவனை ஸகுணமாக உபாசிப்பது. இதனால் அவனுக்குக் குறை உண்டாக்கி விட்டோமே என்று துக்கப்பட வேண்டாம். அவனேதான் சொல்கிறானே, ''முதலில் நீ என்னை என்னவென்று நினைத்து பக்தி பண்ணினாலும் அப்படியே ஒரு மாதிரி இருப்பேன். அப்புறம் வாஸ்தவத்தில் நான் என்னவோ அதுவாக நானே பிரகாசித்து விடுவேன்'' என்கிறானே!

பிரகாசிப்பது அவர் காரியம். அவரை நாம் பிரகாசிக்கப் பண்ண முடியாது. முடியாததற்கு நாம் பிரயத்தனப்படுவது வியர்த்தம்தான். இருக்கிற குறையை ஜாஸ்தியாக்கிக் கொள்வதுதான்.

அவனைத் தவிர வேறு எதுவும் அடியோடு இல்லை என்பது அத்வைதம். உயிர் என்று, ஜீவாத்மா என்று ஒன்று இருந்தாலும் உயிருக்குயிராக, அந்தர்யாமியாக அவன் ஒருத்தனே இருக்கிறான் என்பது விசிஷ்டாத்வைதம். அவன் வேறு, நாம் வேறு தான்; ஆனால் அவன்தான் ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறான் என்பது த்வைதம். த்வைதம்தான் நமக்கு நன்றாகத் தெரிகிறது. தெரிந்ததைப் பிடித்துக்கொண்டோமானால், மேலே மேலே தெரிந்து கொள்ள வேண்டியதை அவனே தெரியப்படுத்துவான். அப்போது

அணுவுக்குள் அணுவாக, உயிருக்கு உயிராக அவனை அநுபவிப்போம். அப்புறம் நாம் அநுபவிக்கிறோம், அவனை அநுபவிக்கிறோம் என்ற வித்தியாசம் கூட இல்லாமல் அத்வைதமாகி விடுவோம். இதெல்லாம் பரமாத்மாவின் அநுக்கிரகத்தினால் நடக்க வேண்டியவை. நம்மால் நடத்திக் கொள்ள முடிவதாகத் தெரிவது, கடமையைப் பண்ணுவது; கூடிய மட்டும் நம்முடைய ஆசைக்காக இல்லாமல், ஈசுவர ஆக்ஞை இப்படி என்று காரியம் பண்ணுவது; அவனிடம் பக்தியோடு இருப்பது இதுதான்.

ஸ்வாமியை நினைக்காமல் வெறுமே 'அன்புருவமாக இரு' என்றால் நம்மால் முடியவேயில்லை. காரியம் உள்ள மட்டும் கோபமும் துவேஷமும் வரத்தான் செய்கின்றன. ஆனால் அன்புருவான ஸ்வாமியிடம் நாம் அன்பு வைத்து, காரியங்களை அவருக்கே அர்ப்பணம் செய்யத் தொடங்கினால், தானாகவே எல்லோரிடமும் அன்புமயமாகிறோம். இந்த அன்பே பெரிய ஆனந்தம், நிறைவு.

'நீ வேறு, நான் வேறு' என்றே த்வைதமாக பக்தி பண்ணி, அந்த சந்தோஷத்தில் திருப்தியாக இருப்போம். அப்புறம் அவனே விசிஷ்டாத்வைதமாக உயிருக்குயிராகப் பிரகாசிக்கட்டும்; அல்லது அத்வைதமாக ஆக்கிக் கொள்ளட்டும்.

முக்கியமாக ஒரு சரீரம்தான் நம்மை அவனுக்கு வேறு மாதிரி ஆக்கியிருக்கிறது. இந்தச் சரீரத்துக்குள் அந்தர்யாமி என்றுகூட அவனை வைத்துக்கொள்ளாமல் சரீரத்தோடு நின்று, வேறு வேறாகவே இருந்து விட்டால் த்வைதம். அப்படி த்வைதமாக இருந்தால்கூட அழகுப் பிரவாகமாக, கருணா சமுத்திரமாக ஒரு பராசக்தியை நினைத்து பக்தி செய்ய முடியும்; அதிலிருந்து கிடைக்கிற ஆனந்தத்தைப் பெற முடியும். ஆகையினால், உயிர்-உயிருக்குயிர் என்ற பேதமும் அடிபட்டுப்போன அத்வைதத்துக்கோ, 'உயிர் நாம், உயிருக்குயிர் அவர்' என்ற விசிஷ்டாத்வைதத்துக்கோ தவிக்காமல், த்வைதமாகவே, "நாம் இப்படி உடல் எடுத்திருக்கிறோம். இந்த உடம்புதான் நாம். இதை வைத்துக் கொண்டும் அவனை நினைத்து ஆனந்திக்க முடிகிறதோ இல்லையோ? இப்படியேதான் இருப்போமே! இந்த உடம்பு என்ன, இன்னும் புழு உடம்பு வந்தாலும் வந்து விட்டுப் போகட்டுமே! அந்தப் புழு அவனுக்கு வேறாகவே இருந்தாலும்கூட அவனை நினைக்க முடியுமானால், அவன் அதை வைகுண்டத்தில், கைலாசத்தில் சேர்த்துக் கொள்வானானால், அப்படித்தான் வேறாகவே ஆனந்தமாக இருந்து விட்டுப்

போவோமே!'' என்று நம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும்.

> **புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே**
> **வழுவாதிருக்க வரம் தரவேண்டும்**

என்று அப்பர் ஸ்வாமிகள் சொன்னமாதிரி, பகவத் ஸ்மரணம் இருக்க வேண்டும் என்பதுதான் விஷயம். அது இருப்பதே அலாதி ஆனந்தம். இந்த ஆனந்தம் நம் நிலையிலேயே காரிய சாத்தியமாயிருக்கும்போது, 'உடம்பு இருக்கிறதே, மனது இருக்கிறதே! இதெல்லாம் தொலைந்து ஆத்மா மட்டும் பிரகாசிக்க வேண்டும்' என்று துக்கப்பட வேண்டாம்.

அப்பர் ஸ்வாமிகள் பக்தர்; அவர் இப்படிச் சொன்னது பெரிசில்லை. ஞான மார்க்கத்துக்கு, அத்வைதத்துக்குப் பரமாசாரியாளாக இருக்கிற நம் சங்கர பகவத் பாதர்களே சிவாநந்த லஹரியில், ''நான் புழுவாகத்தான் பிறந்துவிட்டுப் போகிறேன்! இல்லை கொசுவாகத்தான் பிறந்துவிட்டுப் போகிறேனே! அதனாலெல்லாம் என்ன மோசம் போய்விட்டது? இல்லை, ஒரு மாடாகத்தான் ஜன்மா எடுத்தால் என்ன? உன்னுடைய பாதத்தை ஸ்மரிக்கிற பரமானந்த வெள்ளத்தில் மட்டும் ஹ்ருதயம் தோய்ந்து கிடக்குமானால், அப்போது எந்த உடல் வாய்த்தால் தான் என்ன?'' என்கிறார்.

> **நரத்வம்தேவத்வம் நகவன ம்ருகத்வம் மசகதா**
> **பசுத்வம் கீடத்வம்...**

கீடம்-புழு; 'கீடத்வம்' தான் அப்பர் சொன்ன 'புழுவாய்ப் பிறக்கினும்'. மசகதா-கொசு, mosquito இதிலிருந்து வந்தது தான். கொசுவாக இருந்துகூட பக்தி பண்ணமுடியுமானால், அந்த ஜன்மா எடுக்கக்கூட பயப்படவேண்டாம்.

மனுஷ்ய உடம்பாக இருந்தாலும் அதை வைத்துக் கொண்டே ஆனந்தமாக பக்தி பண்ணிக்கொண்டு, சமஸ்த பிராணிகளிடமும் நிறைந்த அன்போடு கர்மாவைச் செய்ய முடிகிறபோது, 'உடம்பு வேண்டாம், புனர்ஜன்மா வேண்டாம்' என்றெல்லாம்கூடப் பிரார்த்திக்க வேண்டியதில்லை.

எந்த உடம்பு வந்தாலும், எப்படிப்பட்ட ஜன்மா வாய்த்தாலும் அந்தப் பரமாத்மாவை அன்பே உருவான தாயாக பாவித்து ஸாக்ஷாத் அந்தப் பரதேவதையின் சரணாரவிந்தத்தில் நீங்காத நினைவு இருந்துவிட்டால் போதும். அவள் ஞானாம்பிகை. ஞானப்பால்

கொடுக்கிறவள். கர்மாவினாலும் பக்தியினாலும் நம் மனசிலிருக்கிற அழுக்கை எல்லாம் துடைத்து விடுவாள். அது பளிச்சென்று ஸ்வச்சமாகக் கண்ணாடி மாதிரி ஆகி, அதன் ஆட்டமெல்லாம் நின்று போனால் பூர்ண ஸ்வரூபம் தானே அதில் பிரகாசித்துவிடும். அந்த நிலையை அவளே அநுக்கிரகிப்பாள். இப்படித்தான் அநுக்கிரகிக்கவேண்டும் என்று நாம் சொல்ல வேண்டாம். வைகுண்டம், கைலாசம் மாதிரி தன்லோகம் என்பதாக ஏதோ ஒன்றில் நம்மைப் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு சேவா பாக்கியம்தான் தரட்டும்; உயிருக்குயிராக அநுபவிக்கிற பாக்கியத்தைத் தரட்டும்; அவள் வேறு நாம் வேறு இல்லை என்று, பூரணமாக நிறைந்து விடுகிற நிலையைத்தான் தரட்டும். எதுவானாலும் சரி.

அந்த நிலை நமக்குத் தெரியாதது; அதைத் தரப்போகிறதும் இன்னொருத்தர்! நமக்குத் தெரிந்தது த்வைதம். ஏன் த்வைதம் தான் தெரிகிறது என்றால் மனசு நிற்கவில்லை. மனசு ஏன் நிற்கவில்லை என்றால் ஆசாபாசம், துவேஷம், பயம், சோகம் எல்லாம் நமக்கு இருக்கின்றன. இவற்றிலேயே அலைந்து கொண்டு மனசு அசுத்தமாகி விட்டதால் நிற்கமாட்டேன் என்கிறது. அதனால் முதலில் நமக்குச் சித்த சுத்தி வரவேண்டும். அதற்குக் கடமையைச் செய்து கொண்டு பரமாத்மாவை பக்தியோடு நினைத்துக் கொண்டிருப்பதுதான் வழி. இதை சந்தோஷமாகச் செய்வோம்.

செய்து பார்த்தால் இதுவே ஆனந்தமாயிருக்கும். சித்த சுத்தி, அது, இது என்ற லக்ஷ்யங்களைக்கூட அப்போது நாம் நினைக்கமாட்டோம். ஆனந்தமாக பக்தி பண்ணிக்கொண்டு அன்பாகக் காரியங்களைச் செய்துகொண்டு நாம் பாட்டுக்கு நிம்மதியாக இருக்க ஆரம்பித்து விடுவோம். அநுக்கிரகத்தைப் பராசக்தி தானாகப் பண்ணுவாள். அது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நாம் கட்டாயப்படுத்த முடியாது. நமக்கு நிஜமான பக்தி உண்டாகி, ஆனந்தமாக இருக்கத் தெரிந்து கொண்டோமானால், கட்டாயப்படுத்தத் தோன்றவும் தோன்றாது. அதனால் அவளுக்கு எப்படி இஷ்டமோ அப்படி த்வைதமாகவே வைத்து அநுக்கிரகம் செய்தாலும் செய்யலாம், அல்லது அந்த அநுக்கிரகம் விசிஷ்டாத்வைதமாக இருக்கலாம்; அத்வைதமாக இருந்தாலும் இருக்கலாம். எதுவானாலும் சரி என்று அவள் கையில் விட்டு விட்டு, நாம் பக்தி பண்ணிப் பண்ணியே பரமானந்தமாக இருந்து கொண்டிருப்போம். எத்தனை ஜன்மா வந்தாலும் எந்நாளும்

நமக்குத் தாயாராக இருந்து கொண்டிருக்கிற அவளுடைய சரணாரவிந்தத் தியானம் நமக்கு இருந்து விட்டால் போதும்; வேறே மதம், சித்தாந்தம், தத்வம் எதுவும் வேண்டாம். இகத்துக்கும் பரத்துக்கும் சகலத்துக்கும் அவளே நமக்குக் கதி.

அரவிந்த மகரந்தம்

உண்மையாகவே நீங்கள் தற்போதுள்ள சிறிய மனத்தைக் கொண்டு செய்யும் சுய நலக் காரியத்திலிருந்து விடுபட விரும்புகிறீர்களா? தெய்விகமான காரியங்களையே செய்ய விரும்புகிறீர்களா? அவ்வாறெனில் உங்களுடைய முதல் நோக்கம் சகல ஆசைகளையும் அகற்றி, தன்னைச் சுற்றியே நிற்கும் அகங்காரத்திலிருந்து முற்றிலும் விடுபடுவதாக இருக்க வேண்டும். உங்கள் வாழ்வு முழுவதும் மகாசக்திக்குச் சமர்ப்பணமான வேள்வியாகிவிட வேண்டும். உங்களது ஒரே லட்சியம் அந்த திவ்விய சக்திக்குத் தொண்டு புரிவதாகவும் அவள் எதை அருளினாலும் அதை உவந்து ஏற்பதாகவும், இதன் மூலமே நிறைவு பெறுவதாகவும் ஆகவேண்டும் — அதாவது அவள் தனது திருச்செயலைப் புரிவதற்கான ஒரு கருவி மாத்திரமாக ஆவதே லட்சியம். நீங்கள் திவ்விய உணர்வில் மேலும் மேலும் வளர்ந்து, உங்களுடைய சங்கற்பம் என்றும் அவளுடைய சங்கற்பம் என்றும் பேதமேயில்லாத உச்சக் கட்டத்தை அடைய வேண்டும். அவள் எப்படி உள்ளிருந்து உந்துகிறாளோ அது தவிரத் தனக்கென ஒரு நோக்கமும் இல்லாமல் ஆகவேண்டும். உங்களிலிருந்து கொண்டு உங்கள் வழியே அவள் செய்கிற செயலைத் தவிரத் தனக்கென வேறொரு காரியமும் இல்லாமல் ஆகவேண்டும்.

உயிர்வேகம் கொண்ட இத்தகைய பரிபூரண ஐக்கியத்தை அவளோடு அடைகிற நிலைக்கு நீங்கள் தகுதி பெறுகிற வரையில் உங்களை நீங்கள் ஒரு குறிப்பிட்ட தனி உயிர், தனி உடல் என்றுதான் எண்ணுவீர்கள். ஆனால் இந்த நிலையில் இருக்கும் போது கூட நீங்கள் இவ்வுடலும் உயிரும் அவளது பணிக்காகவே ஏற்பட்டவை என்ற பாவத்தைப் பழக்கிக் கொள்ளவேண்டும். நாம் செய்கிற காரியம் யாவும் அவள் பிரீதிக்கே என்ற மனோபாவம் கைவரப் பெற வேண்டும். 'காரியம் செய்கிற நாம் அவளுக்கு வேறான தனி நபர் தான்', 'ஜீவனான நான்தான் இக்காரியத்தைச் செய்கிறேன்' என்ற எண்ணமும் உணர்வும் உங்களுக்கு வலுவாக இருக்கிற

நிலையிலும்கூட, அவளுக்கு எந்தக் காரியம் பிரீதியாக இருக்குமோ அதைத்தான், அவள் பொருட்டாகத்தான், செய்ய வேண்டும். எதைச் செய்வது என்று சுய அகங்கார சிந்தனையால் எடை போடுகிற போக்கை வேரோடு களைந்தாக வேண்டும். சுய லாபத்துக்காகத் தவித்துச் சுற்றுவதையும், தன்னையே மையமாகப் பற்றி எழும் ஆசைகளின் தூண்டுதலையும் உங்களுடைய இயற்கைக் குணத்திலிருந்து அடியோடு கல்லி யெறிந்தேயாக வேண்டும். 'இந்தக் காரியத்துக்கு இந்தப் பலன் கிடைத்தாக வேண்டும்' என்று எதிர்பார்க்கிற சுபாவம் போக வேண்டும். 'இந்த நல்ல காரியத்தைச் செய்தோம்; இதற்கு இப்படிப்பட்ட வெகுமதி கிடைக்க வேண்டும்' என்று பிடிவாதமாக எதிர்பார்ப்பது நிற்க வேண்டும். 'திவ்விய மாதாவின் ப்ரீதி ஒன்றே பலன். அவளுடைய காரியத்தை நம் மூலம் நிறைவேற்றிக் கொள்கிறாளே அதுவே பலன். தெய்விக உணர்விலும் தெய்விக சாந்தியிலும் தெய்விக சக்தியிலும் தெய்விக சௌக்கியத்திலும் இடைவிடாமல் முன்னேறிக் கொண்டிருப்பதே வெகுமதி' என்ற உறுதி பிறக்க வேண்டும். அகங்காரமற்ற தொண்டனுக்கு அத்தொண்டில் உள்ள ஆனந்தமும், அக வளர்ச்சியின் ஆனந்தமுமே பெரிய பலனும் வெகுமதியும் ஆகும்.

இவ்வாறு தன்னைத் தனி ஜீவனாக எண்ணும்போதுகூட கொஞ்சம் கொஞ்சமாக அகங்காரத்தைக் கரைத்துக் கொண்டே போனால் இறுதியில் ஒரு கட்டம் தொடங்கும். அதிலிருந்து நீங்கள், 'நாம் கர்த்தா அல்ல; கருவி மாத்திரமே' என்று மேலும் மேலும் அடர்த்தியாக உணரத் தொடங்குவீர்கள். உங்களுடைய பக்தி வேகத்தினால் திவ்விய மாதாவிடம் உங்கள் தொடர்பு நெருக்கமாகிக் கொண்டே வரும். மிக நெருக்கமாகிய பின் எல்லாச் சமயங்களிலும் உங்கள் சிந்தனை அவளிடமே ஆழ்ந்து நிற்கும். அப்போது நீங்கள் செய்யக் கூடியதெல்லாம் சகலத்தையும் அவள் கையிலேயே போட்டு விட்டுக் கிடப்பதுதான். அவளும் அப்போதைக்கப்போது அருகில் நின்று வழி காட்டுவாள், நேருக்கு நேராக உத்தரவிடுவாள். அல்லது உள்ளிருந்து உந்துவிப்பாள். எப்படியாயினும், 'நாம் செய்ய வேண்டிய காரியம் இதுதான்; அதை நாம் செய்ய வேண்டிய வழி இதுதான்; அக்காரியத்தின் விளைவு இதுதான்' என்று நீங்கள் பரம நிச்சயமாகப் புரிந்து கொள்ளும்படி சமிக்ஞை காட்டி விடுவாள்.

இன்னமும் முன்னேறுகையில் உங்களுக்கு அவள் உந்துவதும், வழிகாட்டுவதும் மட்டுமில்லை; அவளேதான்

நீங்கள் செய்வதாக நினைக்கிற காரியத்தைத் தொடக்கி வைத்துத் தொடர்ந்து செய்விப்பவளுமாவாள் என்று உணர்வீர்கள். ''நம் இயக்கம் ஒவ்வொன்றும் அவளிடமே பிறந்தவை; நம் சக்தி அனைத்தும் அவளுடையதே; நம் மனம், உடம்பு, வாழ்க்கை என்பனவெல்லாம் அவளுடைய காரியத்துக்கான கருவிகளே! 'நாம் அவளது கருவி' என்று உணர்ந்து, ஆனந்திக்கிற கருவிகளே! இவை எல்லாம் அவளது லீலைக்கான உபகரணங்கள்; இவை பௌதிகப் பிரபஞ்சத்தில் அவள் வெளிப்படும் அச்சுக்களே'' என்று உணருவீர்கள். இந் நிலையில் ஒரே சமயத்தில் அவளிடம் ஒன்றாகி விட்ட ஐக்கியமும் இருக்கும்; நாம் அவளைச் சார்ந்தே கிடக்கிறவர் என்ற பராதீனமும் இருக்கும். இதைவிட ஓர் ஆனந்த நிலை கிடையாது. ஏனெனில் நீங்கள் இதிலிருந்து எடுத்து வைக்கிற அடி உங்களை அறியாமையின் சுமையும் சோகமும் அழுத்துகிற வாழ்க்கையின் எல்லைக் கோட்டுக்கு அப்பாலே கொண்டு சேர்த்து விடும்; உங்களது ஆத்ம சத்தியத்துக்கு, அதன் ஆழ்ந்த அமைதிக்கு, அதன் அடர்ந்த ஆனந்தத்துக்கு மீளவும் கொண்டு சேர்க்கும்!

இவ்வாறு முழுமையை நோக்கி முன்னேறிக் கொண்டேயிருந்தால் முடிவில் பரிபூரணத்தின் கடைசி கட்டமாக நீங்கள், 'முழுக்க திவ்ய மாதாவே நாம்' என்கிற ஸர்வ ஸாம்யத்தை அடைவீர்கள். அதன்பின், 'நாம் அவளுக்கு வேறானவர், நாம் ஒரு தனி ஜீவன், நாம் அவள் கருவி, நாம் அவள் பணியாள்' என்ற எண்ணமெல்லாம் போயேபோய் விடும். அவளது உயிர் மனமான உணர்வு, அவளது சக்தி இவற்றில் நாம் ஒரு நிரந்தரமான பகுதி என்ற உணர்வில் அவளது உண்மைக் குழந்தையாக மட்டுமே இருப்பீர்கள். எப்போதும் அவள் உங்களுள் இருப்பாள், நீங்கள் அவளுள் இருப்பீர்கள். நீங்கள் நினைப்பது, பார்ப்பது, செய்வது, நடப்பது, ஏன், நீங்கள் ஒவ்வொரு சுவாசம் விடுவதும்கூட அவளிடமிருந்தே வருகின்றன என்று அனவரதமும் அநுபவ சத்தியமாகக் காண்பீர்கள். நாமும், நம்முடையதாக நினைத்த சகலமும் அவளுடையனவே என்ற உண்மை உங்களது சாசுவதமான, சுலபமான, சர்வ சகஜமான, இயற்கையான அநுபவமாக ஆகிவிடும். நாம் அவள் செய்த ஒரு பண்டம்; அவளைக்கொண்டே அவள் செய்த பண்டம்; அவளுடைய லீலைக்காக அவளிடமிருந்து வெளியே விட்ட மாதிரி வந்திருக்கிறோம்; ஆனால் உண்மையில் அவளை விட்டுப்

போவது என்று கிடையவே கிடையாது; அனவரதமும் அவளுக்குள்ளே தான் பத்திரமாக இருக்கிறோம். ஏனெனில் நம் உயிர் அவளது உயிரினால் ஆனது, நம் உணர்வு அவளது உணர்வினாலானது, நம் சக்தி அவளது சக்தியாலானது, நம் ஆனந்தம் அவளது ஆனந்தத்தாலானது என்று நிச்சயமாக அறிவீர்கள், காண்பீர்கள், அநுபவிப்பீர்கள். இந்நிலை நிறைவுறும்போது அவளது அதிமானஸ* சக்தி உங்களைப் பூரணமாக ஆட்கொண்டு சுதந்திரமாக இயக்குவிக்க, நீங்கள் தெய்வச் செயல்களையே புரிவதற்குரிய அப்பழுக்கற்ற முழுமையை அடைந்திருப்பீர்கள். இப்போது உங்களது ஞானம், இச்சை, கிரியை யாவும் சர்வ நிச்சயமாகவும், சிக்கலில்லாத எளிமைத் தெளிவாகவும், ஜோதிர்மயமாகவும், சுபாவமாகப் பொங்குவதாகவும், மாசே இல்லாததாகவும் அமையும். ஏனெனில் இப்போது 'உங்களுடையது' எனப்படும் ஞானமும் இச்சையும் கிரியையும் உண்மையில் பராசக்தி வெள்ளத்தின் பொழிவாகவே இருக்கும்!

* மனித மனத்தின் சக்திக்கு மேம்பட்ட பரப்பிரம்ம சக்தியின் மகாமனம்; அகிலாண்டப் பிரபஞ்சங்களை இயக்குவிக்கும் மூலப் பெருமனம்.

அநுபந்தம்

தேவி மாஹாத்மியத் துதிகள்

மது-கைடப வதத்துக்கு முன் பிரம்மா செய்த மஹாகாளி ஸ்தோத்திரம்

(இதன் கருத்துரை நூலின் 143-லிருந்து தொடர்ந்து வரும் பக்கங்களில் காண்க.)

த்வம் ஸ்வாஹா த்வம் ஸ்வதா த்வம் ஹி வஷட்கார:
ஸ்வராத்மிகா||

ஸுதா த்வமக்ஷரே நித்யே த்ரிதா-மாத்ராத்மிகா ஸ்திதா |
அர்த்த-மாத்ரா ஸ்திதா நித்யா யானுச்சார்யா விசேஷத:||

த்வமேவ ஸந்த்யா ஸாவித்ரீ த்வம் தேவி ஜனனீ பரா|
த்வயைதத் தார்யதே விச்வம் த்வயைதத் ஸ்ருஜ்யதே ஜகத்||

த்வயைதத் பால்யதே தேவி த்வமத்ஸ்யந்தே ச ஸர்வதா|
விஸ்ருஷ்டௌ ஸ்ருஷ்டிரூபா த்வம் ஸ்திதி ரூபா ச பாலனே||

ததா ஸம்ஹ்ருதி ரூபாந்தே ஜகதோऽஸ்ய ஜகன்மயே |
மஹாவித்யா மஹாமாயா மஹாமேதா மஹாஸ்ம்ருதி:||

மஹாமோஹா ச பவதீ மஹாதேவீ மஹாஸுரீ |
ப்ரக்ருதிஸ்த்வம் ச ஸர்வஸ்ய குணத்ரய-விபாவினீ ||

காலராத்ரிர்-மஹாராத்ரிர்-மோஹராத்ரிச்ச தாருணா|
த்வம் ஸ்ரீ-ஸ்த்வமீச்வரீ த்வம் ஹ்ரீஸ்-த்வம் புத்திர்-போத-
லக்ஷணா||

லஜ்ஜா புஷ்டிஸ் ததா துஷ்டிஸ்-த்வம் சாந்தி: க்ஷாந்தி ரேவ ச|
கட்கினீ சூலினீ கோரா கதினீ சக்ரிணீ ததா||

சங்கினீ சாபினீ பாண-புசுண்டீ-பரிகாயுதா|
ஸௌம்யா ஸௌம்யதராசேஷ-ஸௌம்யேப்யஸ்த்வதி- ஸுந்தரீ ||

பராபராணாம் பரமா த்வமேவ பரமேச்வரீ ।
யச்ச கிஞ்சித் க்வசித்-வஸ்து ஸதஸத்வாகிலாத்மிகே।।

தஸ்ய ஸர்வஸ்ய யா சக்தி: ஸா த்வம் கிம் ஸ்தூயஸே ததா।
யயா த்வயா ஜகத்-ஸ்ரஷ்டா ஜகத்-பாதாத்தி யோ ஜகத்।।

ஸோऽபி நித்ராவசம் நீத: கஸ்த்வாம் ஸ்தோது-மிஹேச்வர:।
விஷ்ணு: சரீரக்ரஹண-மஹ-மீசான ஏவ ச ।।

காரிதாஸ்தே யதோऽதஸ்த்வாம் க:ஸ்தோதும் சக்திமான் பவேத்।
ஸா த்வமித்தம்-ப்ரபாவை: ஸ்வை-ருதாரைர்-தேவி ஸம்ஸ்துதா।।

மோஹயைதௌ துராதர்ஷா-வஸுரௌ மது-கைடபௌ।
ப்ரபோதம் ச ஜகத்ஸ்வாமீ நீயதா-மச்யுதோ லகு।।
போதச்ச க்ரியதாமஸ்ய ஹந்து-மேதௌ மஹாஸுரௌ।।
(—தேவி மாஹாத்மியம், அத். 1)

மஹிஷ வதமான பின் தேவர் செய்த
மஹாலக்ஷ்மி ஸ்தோத்ரம்

(இதன் கருத்துரை 261-275 பக்கங்களில் காண்க.)

தேவ்யா யயா தத-மிதம் ஜகதாத்ம-சக்த்யா
நி:சேஷ-தேவகண-சக்தி-ஸமூஹ-மூர்த்யா।
தாமம்பிகா-மகில-தேவ-மஹர்ஷி-பூஜ்யாம்
பக்த்யா நதா:ஸ்ம விததாது சுபானி ஸா ந:।।

யஸ்யா: ப்ரபாவ-மதுலம் பகவானனந்தோ
ப்ரஹ்மா ஹரச்ச ந ஹி வக்து-மலம் பலம் ச।
ஸா சண்டிகாகில-ஜகத் பரிபாலனாய
நாசாய சாசுப-பயஸ்ய மதிம் கரோது।।

யா ஸ்ரீ:ஸ்வயம் ஸுக்ருதினாம் பவனேஷ்வலக்ஷ்மீ:
பாபாத்மனாம் க்ருத-தியாம் ஹ்ருதயேஷு புத்தி:।
ச்ரத்தா ஸதாம் குலஜன-ப்ரபவஸ்ய லஜ்ஜா
தாம் த்வாம் நதா:ஸ்ம பரிபாலய தேவி விச்வம்।।

கிம் வர்ணயாம தவ ரூப-மசிந்த்ய-மேதத்
கிம்சாதி-வீர்ய-மஸுர-க்ஷயகாரி-பூரி।
கிம் சாஹவேஷு சரிதானி தவாத்புதானி
ஸர்வேஷு தேவ்யஸுர-தேவ-கணாதிகேஷு।।

ஹேது:ஸமஸ்த-ஜகதாம் த்ரிகுணாபி தோஷைர்-
நஜ்ஞாயஸே ஹரிஹராதிபி-ரப்யபாரா|
ஸர்வாச்ரயாகில-மிதம் ஜகதம்சபூதம்
அவ்யாக்ருதா ஹி பரமா ப்ரக்ருதி-ஸ்த்வமாத்யா||

யஸ்யா: ஸமஸ்த-ஸுரதா ஸமுதீரணேன
த்ருப்திம் ப்ரயாதி ஸகலேஷு மகேஷு தேவி|
ஸ்வாஹாஸி வை பித்ருகணஸ்ய ச த்ருப்திஹேது-
ருச்சார்யஸே த்வமத ஏவ ஜனை ஸ்வதா ச||

யா முக்திஹேது-ரவிசிந்த்ய-மஹாவ்ரதா த்வம்
அப்யஸ்யஸே ஸுநியதேந்த்ரிய-தத்வஸாரை:|
மோக்ஷார்த்திபிர்-முனிபிரஸ்த-ஸமஸ்த-தோஷைர்-
வித்யாஸி ஸா பகவதீ பரமா ஹி தேவி||

சப்தாத்மிகா ஸுவிமல-ரிக்-யஜுஷாம் நிதான-
முத்கீத-ரம்ய-பத-பாடவதாம் ச ஸாம்னாம்|
தேவி த்ரயீ பகவதி பவபாவனாய
வார்த்தா ச ஸர்வஜகதாம் பரமார்த்திஹந்த்ரீ ||

மேதாஸி தேவி விதிதாகில-சாஸ்த்ர-ஸாரா
துர்காஸி துர்க பவஸாகர-நௌ-ரஸங்கா|
ஸ்ரீ: கைடபாரி ஹ்ருதயைக-க்ருதாதிவாஸா
கௌரீ த்வமேவ சசிமௌலி-க்ருத-ப்ரதிஷ்டா||

ஈஷத்-ஸஹாஸ-மமலம் பரிபூர்ண-சந்த்ர-
பிம்பானுகாரி கனகோத்தம-காந்தி-காந்தம்|
அத்யத்புதம் ப்ரஹ்ருத-மாத்தருஷா ததாபி
வக்த்ரம் விலோக்ய ஸஹஸா மஹிஷாஸுரேண||

த்ருஷ்ட்வா து தேவி குபிதம் ப்ருகுடீ-கரால-
முத்யச்-சசாங்க-ஸத்ருசச்சவி யந்ந ஸத்ய:
ப்ராணான் முமோச மஹிஷஸ்-தததீவ சித்ரம்
கைர்-ஜீவ்யதே ஹி குபிதாந்தக-தர்சனேன||

தேவி ப்ரஸீத பரமா பவதீ பவாய
ஸத்யோ விநாசயஸி கோபவதீ குலானி|
விஜ்ஞாதமேத-ததுனைவ யதஸ்தமேதந்-
நீதம் பலம் ஸுவிபுலம் மஹிஷாஸுரஸ்ய||

தே ஸம்மதா ஜனபதேஷு தனானி தேஷாம்
தேஷாம் யசாம்ஸி ந ச ஸீததி தர்மவர்க:|
தன்யாஸ்த ஏவ நிப்ருதாத்மஜ-ப்ருத்யதாரா
யேஷாம் ஸதாப்யுதயதா பவதீ ப்ரஸன்னா||

தர்ம்யாணி தேவி ஸகலானி ஸதைவ கர்மாண்-
யத்யாத்ருத: ப்ரதிதினம் ஸுக்ருதீ கரோதி|
ஸ்வர்கம் ப்ரயாதி ச ததோ பவதீ-ப்ரஸாதாத்
லோகத்ரயேSபி பலதா நநு தேவி தேன||

துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதி-மசேஷ-ஜந்தோ:
ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதிமதீவ சுபாம் ததாஸி|
தாரித்ர்ய-து:க-பயஹாரிணி கா த்வதன்யா
ஸர்வோபகார-கரணாய ஸதாSSர்த்ர-சித்தா||

ஏபிர்-ஹதைர் ஜகதுபைதி ஸுகம் ததைதே
குர்வந்து நாம நரகாய சிராய பாபம்|
ஸங்க்ராம ம்ருத்யு-மதிகம்ய திவம் ப்ரயாந்து
மத்வேதி நூனமஹிதான் விநிஹம்ஸி தேவி||

த்ருஷ்ட்வைவ கிம் ந பவதீ ப்ரகரோதி பஸ்ம
ஸர்வஸுரா-னரிஷு யத் ப்ரஹிணோஷி சஸ்த்ரம்|
லோகான் ப்ரயாந்து ரிபவோSபி ஹி சஸ்த்ரபூதா
இத்தம் மதிர்-பவதி தேஷ்வபி தேSதி ஸாத்வீ||

கட்கப்ரபா - நிகர-விஸ்புரணைஸ்-ததோக்ரை:
சூலாக்ர-காந்தி-நிவஹேன த்ருசோSஸுராணாம்|
யந்நாகதா விலய-மம்சுமத்-இந்துகண்ட-
யோக்யானனம் தவ விலோகயதாம் ததேதத்||

துர்வ்ருத்த-வ்ருத்த-சமனம் தவ தேவி சீலம்
ரூபம் ததைத-தவிசிந்த்ய-மதுல்ய-மன்யை:|
வீர்யம்-ச ஹந்த்ரு ஹ்ருத-தேவபராக்ரமாணாம்
வைரிஷ்வபி ப்ரகடிதைவ தயா த்வயேத்தம்||

கேனோபமா பவது தேSஸ்ய பராக்ரமஸ்ய
ரூபம் ச சத்ருபய கார்யதிஹாரி குத்ர|
சித்தே க்ருபா ஸமர-நிஷ்டுரதா ச த்ருஷ்டா
த்வய்யேவ தேவி வரதே புவனத்ரயேSபி||

த்ரைலோக்ய-மேத-தகிலம் ரிபுநாசனேன
த்ராதம் த்வயா ஸமர-மூர்த்தனி தேSபி ஹத்வா|
நீதா திவம் ரிபுகணா பயமப்யபாஸ்தம்
அஸ்மாக-முன்மத-ஸுராரி-பவம் நமஸ்தே||

சூலேன பாஹி நோ தேவி பாஹி கட்கேன சாம்பிகே|
கண்டா ஸ்வனேன ந:பாஹி சாபஜ்யா-நி:ஸ்வனேன ச||
ப்ராச்யாம் ரக்ஷ ப்ரதீச்யாம் ச சண்டிகே ரக்ஷ தக்ஷிணே|
ப்ராமணேனாத்ம-சூலஸ்ய உத்தரஸ்யாம் ததேச்வரி||

ஸௌம்யானி யானி ரூபாணி த்ரைலோக்யே விசரந்தி தே||
யானி சாத்யர்த்த-கோராணி தை ரக்ஷாஸ்மாம்ஸ்-ததா புவம்||

கட்க-சூல-கதாதீனி யானி சஸ்த்ராணி தேடம்பிகே |
கரபல்லவ-ஸங்கீனி தைரஸ்மான் ரக்ஷ ஸர்வத: ||
(—தேவி மாஹாத்மியம், அத்.4)

சும்ப வதத்துக்கு முன் தேவர் செய்த மஹாஸரஸ்வதி ஸ்தோத்ரம்

(இதன் கருத்துரை 286-290 பக்கங்களில் காண்க)

நமோ தேவ்யை மஹாதேவ்யை சிவாயை ஸததம் நம: |
நம: ப்ரக்ருத்யை பத்ராயை நியதா: ப்ரணதாஸ்:ம தாம்||
ரௌத்ராயை நமோ நித்யாயை கௌர்யை தாத்ர்யை
நமோ நம:

ஜ்யோத்ஸ்னாயை சேந்துரூபிதண்யை ஸுகாயை ஸததம் நம:||
கல்யாண்யை ப்ரணதாம் வ்ருத்த்யை ஸித்த்யை குர்மோ
நமோ நம: |
நைர்ருத்யை பூப்ருதாம் லக்ஷ்ம்யை சர்வாண்யை தே
நமோ நம:||

துர்காயை துர்கபாராயை ஸாராயை ஸர்வகாரிண்யை|
க்யாத்யை ததைவ க்ருஷ்ணாயை தூம்ராயை ஸததம் நம:||

அதிஸௌம்யாதி-ரௌத்ராயை நதாஸ்-தஸ்யை நமோ நம:|
நமோ ஜகத் ப்ரதிஷ்டாயை தேவ்யை க்ருத்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு விஷ்ணுமாயேதி சப்திதா|
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம:||

யா தேவீ ஸர்வபூதேஷு சேதனேத்யபிதீயதே |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம:||

யா தேவீ ஸர்வபூதேஷு புத்திரூபேண ஸம்ஸ்திதா|
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம:||

யா தேவீ ஸர்வபூதேஷு நித்ராரூபேண ஸம்ஸ்திதா|
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை|| நமஸ்தஸ்யை நமோ நம: ||

யாதேவீ ஸர்வபூதேஷு க்ஷுதாரூபேண ஸம்ஸ்திதா|
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு ச்சாயா ரூபேண ஸம்ஸ்திதா|
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யாதேவீ ஸர்வபூதேஷு த்ருஷ்ணா ரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு க்ஷாந்திரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு ஜாதிரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு லஜ்ஜா ரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு சாந்திரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு ச்ரத்தாரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு காந்திரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு லக்ஷ்மீரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு வ்ருத்திரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு ஸ்ம்ருதிரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு தயாரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு துஷ்டிரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

யா தேவீ ஸர்வபூதேஷு ப்ராந்திரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

இந்த்ரியாணா-மதிஷ்டாத்ரீ பூதானாம் சாகிலேஷு யா ||
பூதேஷு ஸததம் தஸ்யை வ்யாப்தி-தேவ்யை நமோ நம:||

சிதிரூபேண யா க்ருத்ஸ்ன-மேதத் வ்யாப்ய ஸ்திதா ஜகத் |
நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை || நமஸ்தஸ்யை நமோ நம: ||

ஸ்துதா ஸுரை: பூர்வ-மபீஷ்ட-ஸம்ச்ரயாத்
ததா ஸுரேந்த்ரேண திநேஷு ஸேவிதா |
கரோது ஸா ந: சுபஹேது-ரீச்வரீ
சுபாநி பத்ராண்யபிஹந்து சாபத: ||

யா ஸாம்ப்ரதம் சோத்தத-தைத்ய-தாபிதை-
ரஸ்மாபிரீசா ச ஸுரைர்-நமஸ்யதே |
யா ச ஸ்ம்ருதா தத்க்ஷணமேவ ஹந்தி ந:
ஸர்வாபதோ பக்தி-விநம்ர-மூர்த்திபி: ||
(—தேவி மாஹாத்மியம், அத். 5)

சும்ப வதமான பின் தேவர் செய்த மஹாஸரஸ்வதி ஸ்தோத்ரம்

(இதன் கருத்துரை பக். 382-386ல் காண்க)

தேவி ப்ரபன்னார்த்திஹரே ப்ரஸீத
ப்ரஸீத மாதர்-ஜகதோsகிலஸ்ய |
ப்ரஸீத விச்வேச்வரி பாஹி விச்வம்
த்வமீச்வரீ தேவி சராசரஸ்ய ||

ஆதாரபூதா ஜகதஸ்-த்வமேகா
மஹீ-ஸ்வரூபேண யத: ஸ்திதாஸி |
அபாம் ஸ்வரூப-ஸ்திதயா த்வயைத-
தாப்யாயதே க்ருத்ஸ்ன-மலங்க்யவீர்யே ||

த்வம் வைஷ்ணவீ-சக்தி-ரனந்த-வீர்யா
விச்வஸ்ய பீஜம் பரமாஸி மாயா |
ஸம்மோஹிதம் தேவி ஸமஸ்த-மேதத்
த்வம் வை ப்ரஸன்னா புவி முக்திஹேது: ||

வித்யா: ஸமஸ்தாஸ்-தவ தேவி பேதா:
ஸ்த்ரிய: ஸமஸ்தா: ஸகலா ஜகத்ஸு ।
த்வயைகயா பூரித-மம்பயைதத்
கா தே ஸ்துதி: ஸ்தவ்ய-பராபரோக்தி:।

ஸர்வபூதா யதா தேவீ ஸ்வர்க-முக்தி-ப்ரதாயினீ ।
த்வம் ஸ்துதா ஸ்துதயே கா வா பவந்து பரமோக்தய:॥

ஸர்வஸ்ய புத்திரூபேண ஜனஸ்ய ஹ்ருதி ஸம்ஸ்திதே।
ஸ்வர்காபவர்கதே தேவி நாராயணி நமோऽஸ்துதே॥

கலா-காஷ்டாதிரூபேண பரிணாம-ப்ரதாயினி।
விச்வஸ்யோபரதௌ சக்தே நாராயணி நமோऽஸ்து தே॥

ஸர்வமங்கல-மாங்கல்யே சிவே ஸர்வார்த்த-ஸாதிகே।
சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோऽஸ்து தே॥

ஸ்ருஷ்டி-ஸ்திதி-விநாசானாம் சக்திபூதே ஸநாதனி।
குணாச்ரயே குணமயே நாராயணி நமோऽஸ்துதே ॥

சரணாகத-தீனார்த்த-பரித்ராண-பராயணே।
ஸர்வஸ்யார்த்தி-ஹரே தேவி நாராயணி நமோऽஸ்து தே॥

ஹம்ஸயுக்த-விமானஸ்தே ப்ரஹ்மாணீ-ரூபதாரிணி।
கௌசாம்ப: க்ஷரிகே தேவி நாராயணி நமோऽஸ்து தே॥

த்ரிசூல-சந்த்ராஹிதரே மஹாவ்ருஷப-வாஹினி।
மாஹேச்வரீ ஸ்வரூபேண நாராயணி நமோऽஸ்துதே॥

மயூரா குக்குட-வ்ருதே மஹாசக்தி தரேऽனகே।
கௌமாரீ-ரூப-ஸம்ஸ்தானே நாராயணி நமோऽஸ்துதே ॥

சங்க-சக்ர-கதா சார்ங்க-க்ருஹீத-பரமாயுதே ।
ப்ரஸீத வைஷ்ணவீரூபே நாராயணி நமோஸ்துதே ॥

க்ருஹீதோக்ர-மஹாசக்ரே தம்ஷ்ட்ரோத்த்ருத-வஸுந்தரே ।
வராஹரூபிணி சிவே நாராயணி நமோऽஸ்துதே ॥

ந்ருஸிஹ்ம-ரூபேணாக்ரேண ஹந்தும் தைத்யான் க்ருதோத்யமே ।
த்ரைலோக்ய-த்ராண-ஸஹிதே நாராயணி நமோऽஸ்துதே ॥

கிரீடினி மஹாவஜ்ரே ஸஹஸ்ர-நயனோஜ்ஜ்வலே ।
வ்ருத்ர-ப்ராணஹரே ஸைந்த்ரி நாராயணி நமோऽஸ்துதே ॥

சிவதூதீ-ஸ்வரூபேண ஹததைத்ய-மஹாபலே ।
கோரரூபே மஹாராவே நாராயணி நமோऽஸ்து தே ॥

தம்ஷ்ட்ராகரால-வதனே சிரோமாலா-விபூஷணே ।
சாமுண்டே முண்ட-மதனே நாராயணி நமோऽஸ்து தே॥

லக்ஷ்மி லஜ்ஜே மஹாவித்யே ச்ரத்தே புஷ்டி ஸ்வதே த்ருவே।
மஹாராத்ரி மஹாऽவித்யே நாராயணி நமோऽஸ்து தே॥

மேதே ஸரஸ்வதி வரே பூதி பாப்ரவி தாமஸி ।
நியதே த்வம் ப்ரஸீதேசே நாராயணி நமோऽஸ்து தே ॥

ஸர்வஸ்வரூபே ஸர்வேசே ஸர்வசக்தி-ஸமன்விதே ।
பயேப்யஸ்-த்ராஹி நோ தேவி துர்கே தேவி நமோऽஸ்து தே ॥

ஏதத் தே வதனம் ஸௌம்யம் லோசனத்ரய-பூஷிதம் ।
பாது ந: ஸர்வபீதிப்ய: காத்யாயனி நமோऽஸ்து தே ॥

ஜ்வாலா-கரால-மத்யுக்ர-மசேஷாஸுர-ஸூதனம் ।
த்ரிசூலம் பாது நோ பீதேர்-பத்ரகாளி நமோऽஸ்து தே ॥

ஹிநஸ்தி தைத்ய-தேஜாம்ஸி ஸ்வனேனாபூர்ய யா ஜகத் ।
ஸா கண்டா பாது நோ தேவி பாபேப்யோऽந: ஸுதானிவ ॥

அஸுராஸ்ருக்வஸா-பங்க-சர்சிதஸ்தே கரோஜ்ஜ்வல: ।
சுபாய கட்கோ பவது சண்டிகே த்வாம் நதா வயம் ॥

ரோகா-னசேஷா-னபஹம்ஸி துஷ்டா
ததாஸி காமான் ஸகலானபீஷ்டான் ।
த்வாமாச்ரிதானாம் ந விபந்-நராணாம்
த்வாமாச்ரிதா ஹ்யாச்ரயதாம் ப்ரயாந்தி ॥

ஏதத் க்ருதம் யத்-கதனம் த்வமாத்ய
தர்மத்விஷாம் தேவி மஹாஸுராணாம் ।
ரூபை-ரனேகைர்-பஹுதாऽऽத்ம-மூர்த்திம்
க்ருத்வாம்பிகே தத் ப்ரகரோதி கான்யா॥

வித்யாஸு சாஸ்த்ரேஷு விவேக-தீபேஷ்-
வாத்யேஷு வாக்யேஷு ச கா த்வதன்யா ।
மமத்வகர்த்தேடதி மஹாந்தகாரே
விப்ராமயத்யேத-ததீவ விச்வம் ॥

ரக்ஷாம்ஸி யத்ரோக்ர-விஷாச்ச நாகா
யத்ராரயோ தஸ்யுபலானி யத்ர ।
தாவாநலோ யத்ர ததாப்தி-மத்யே
தத்ர ஸ்திதா த்வம் பரிபாஸி விச்வம் ॥

விச்வேச்வரி த்வம் பரிபாஸி விச்வம்
விச்வாத்மிகா தாரயஸீதி விச்வம் ।
விச்வேச-வந்த்யா பவதீ பவந்தி
விச்வாச்ரயா யே த்வயி பக்தி-நம்ரா: ।

தேவி ப்ரஸீத பரிபாலய நோடரிபீதேர்-
நித்யம் யதாஸுர-வதா-ததுனைவ ஸத்ய: ।
பாபானி ஸர்வஜகதாம் ப்ரசமம் நயாசு
உத்பாத-பாக-ஜனிதாம்ச்ச மஹோபஸர்கான் ॥

ப்ரணதானாம் ப்ரஸீத த்வம் தேவி விச்வார்த்தி-ஹாரிணி ।
த்ரைலோக்ய-வாஸினா-மீட்யே லோகானாம் வரதா பவ ॥
(—தேவீ மாஹாத்மியம், அத். 11)

ஸ்ரீ துர்கா ஸப்த - ச்லோகீ✵

ஜ்ஞானினாமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா ।
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ॥ 1 ॥

துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதி-மசேஷஜந்தோ:
ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதி-மதீவ சுபாம் ததாஸி ।
தாரித்ர்ய-து;க-பயஹாரிணி கா த்வதன்யா
ஸர்வோபகார-கரணாய ஸதார்த்ர-சித்தா ॥ 2 ॥

ஸர்வமங்கல-மாங்கல்யே சிவே ஸர்வார்த்த-ஸாதிகே ।
சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோऽஸ்து தே ॥ 3 ॥

சரணாகத-தீனார்த்த-பரித்ராண-பராயணே ।
ஸர்வஸ்யார்தி-ஹரே தேவி நாராயணி நமோऽஸ்து தே ॥ 4 ॥

ஸர்வஸ்வரூபே ஸர்வேசே ஸர்வசக்தி-ஸமன்விதே ।
பயேப்யஸ்-த்ராஹி நோ தேவி துர்கே தேவி நமோऽஸ்து தே ॥ 5 ॥

ரோகா-னசேஷா-னபஹம்ஸி துஷ்டா
ததாஸி காமான் ஸகலா-னபீஷ்டான் ।
த்வாமாச்ரிதானாம் ந விபந்நராணாம்
த்வாமாச்ரிதா ஹ்யாச்ரயதாம் ப்ரயாந்தி ॥ 6 ॥

ஸர்வா-பாதா-ப்ரசமனம் த்ரைலோக்யஸ்யாகிலேச்வரி ।
ஏவமேவ த்வயா கார்ய-மஸ்மத்-வைரி-விநாசனம் ॥ 7 ॥

✵ இவ்வேழு சுலோகங்கள் 'தேவீ மாஹாத்மிய'த்தில் 1-55; 4-17; 11-10; 11-12; 11-24; 11-29; 11-39 சுலோகங்களாக உள்ளன. இவை மிகவும் அருட்சக்தி பொருந்தியன வாகும். 'தேவீமாஹாத்மிய'த்தில் மொத்தமுள்ள 700 மந்திரங்களின் ஸாரம் இவ்வேழு சுலோகம் என்பர். இத்துதியை ஏழுமுறை ஜபிப்பது ஆன்றோர் வழக்கு.

'ஸ்ரீ துர்கா ஸப்த ச்லோகீ'யின் கருத்துரை

மகாமாயையான பகவதி தேவி ஞானியரின் சித்தங்களையும் பலவந்தமாக இழுத்து மோகத்தில் செலுத்துகிறாள். (1)

கடத்தற்கரிய துன்பத்தில் ஸ்மரிக்கப்பட்டால் (அல்லது துர்கே! உனை ஸ்மரித்த மாத்திரத்தில்) சகலப் பிராணிகளின் அச்சத்தையும் போக்குகிறாய். இன்ப நிலையில் இருந்துகொண்டு ஸ்மரிக்கப்பட்டால் பரம மங்களமான நல்லறிவை நல்குகிறாய். வறுமை, துன்பம், பயம் ஆகியவற்றை நீக்குபவளே! ஸகலருக்கும் ஸர்வ உபகாரங்களையும் செய்வதற்காக ஸதாகாலமும் நனைந்துருகிய நெஞ்சுடையவர் உனையன்றி எவர் உண்டு? (2)

மங்கள வஸ்துக்கள் அனைத்தினும் பரமமங்களமானவளே! மங்களமே வடிவான சிவனின் சக்தியே! சகல புருஷார்த்தங்களையும் சாதித்துத் தருபவளே! சரணாகத நிலயமே! முக்கண் படைத்த (அல்லது மும்மூர்த்தியருக்கும் அன்னையான) திரயம்பகியே! வெண் பொற் ஜோதியாம் கௌரீ! நரருக்கெல்லாம் ஆசிரயமாம் நாராயணீ! நினக்கு நமஸ்காரம்! (3)

'சரண்' என வந்த தீனரையும் துன்புற்றோரையும் அருமையுடன் காப்பதையே தொழிலாகக் கொண்ட தேவீ! அனைவரின் இன்னலும் நீக்கும் நாரணீ! நினக்கு நமஸ்காரம்! (4)

காணும் உருவனைத்தும் நீயே! அனைத்தையும் ஆளும் தேவி நீயே! அனைத்தின் சக்தியும் ஒன்றிய இடம் நீயே! தேவி துர்கே! உனக்கு வந்தனம்! எங்களை அச்சங்களினின்று ரட்சித்தருள்வாய்! (5)

நீ திருப்தியின்பம் கொண்டால் சகல ரோகங்களையும் அறவே அகற்றுகிறாய்; கோரும் ஆசையனைத்தையும் நிறைவித்தருள்கிறாய். உனை அரண்கொண்ட நரருக்கு இடர் என்பதே இல்லை. அவர்களே பிறருக்கு அரணாகின்றனர் அன்றோ? (6)

அகிலாண்டேசுவரீ! உன்னால் எமது பகைவர்கள் அழிக்கப் பெற வேண்டும். இவ்வாறே மூவுலகிலும் உள்ளவர்களின் சகல துன்பங்களையும் நீ அடியோடு சமனம் செய்தருள வேண்டும்.

=மங்களம் =

திவ்ய வித்யா டிரஸ்ட்

(Regd.)

106/1, ஹபிபுல்லா ரோடு, சென்னை - 600 017.

ஆன்மீகத் தலைவர்கள், அவர்கள் அருளிய அறிவுரைகள், மற்ற ஆன்மீக விஷயங்கள் ஆகியவை பற்றி **ஸ்ரீ ரா. கணபதி** அவர்கள் எழுதியுள்ள புத்தகங்களை, திவ்ய வித்யா டிரஸ்ட் வியாபார நோக்கமின்றி மலிவு விலையில் வழங்குகிறது. எங்களுடைய வெளியீடுகள் :

1.	ஸ்வாமி பகுதி - I	-	ரூ. 70/-
2.	ஸ்வாமி பகுதி - II	-	ரூ. 80/-
3.	லீலா நாடக ஸாயீ	-	ரூ. 45/-
4.	தீராத விளையாட்டு ஸாயீ	-	ரூ. 20/-
5.	அன்பு அறுபது	-	ரூ. 30/-
6.	அறிவு அறுபது	-	ரூ. 24/-
7.	அற்புதம் அறுபது	-	ரூ. 20/-
8.	காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம்	-	ரூ. 25/-
9.	மஹா பெரியவாள் விருந்து	-	ரூ. 18/-
10.	ஸ்ரீ மாதா	-	ரூ. 18/-
11.	Baba : Satya Sai - I	-	Rs. 75/-
12.	Baba : Satya Sai - II	-	Rs. 50/-
13.	An Avtar, Verily	-	Rs. 9/-
14.	'மைத்ரீம் பஜத!' .	-	ரூ. 20/-
15.	கருணைக் காஞ்சி கனகதாரை	-	ரூ. 20/-

திவ்ய வித்யா ட்ரஸ்ட்